
# 1971 அவ்யக்த முரளிகள்



**பொருளடக்கம் - 53**

**18.01.1971 அவ்யக்த ஸ்திதி (மனநிலை) மூலமாக சேவை!**

**21.01.1971-1 இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை!**

**21.01.1971-2 அவ்யக்த வதனத்தின் அலௌகீக அழைப்பு!**

**22.01.1971 இதய சிம்மாசனதாரி ஆத்மாவின் அடையாளம்!**

**26.01.1971 பொறுப்பை எடுத்துக் கொள்வதினால் லாபங்கள்!**

**01.02.1971 கிரீடம், திலகம் மற்றும் ஆசனதாரி ஆகுவதற்கான விதி!**

**11.02.1971 அந்த்வாகக் உடல் (கடைசி நிலையின் சூட்சும உடல்) மூலமாக சேவை!**

**01.03.1971 ஸித்தி சொரூபம் ஆவதற்கான சுலபமான விதி!**

# 1971 அவ்யக்த முரளிகள்


05.03.1971 பட்டியின் ஆன்மீக முத்திரை!

11.03.1971 கடந்து செல்வதற்கான சாதனம் சுயநிலை!

13.03.1971 பந்தன்முக்த் ஆத்மாவின் அடையாளங்கள்!

18.03.1971 வெற்றியாளர் ஆவதற்காக கிரகிக்கும் மற்றும் போரிடும் சக்தி அவசியமாகும்!

25.03.1971 விலகியிருப்பவராகவும் மற்றும் உலகத்திற்கு பிரியமானவராகவும் ஆவதற்கான விதி!

09.04.1971 அவ்யக்த ஸ்திதியில் அனைத்து குணங்களின் அனுபவம்!

15.04.1971 திரிமூர்த்தி தந்தையினுடைய குழந்தைகளின் மும்மூர்த்தி கடமை!

18.04.1971 மனதின் உணர்வுகளை அறிந்து கொள்வதற்கான விதி மற்றும் லாபம்!

19.04.1971 தியாகம் தவம் மற்றும் சேவையின் விளக்கம்!

29.04.1971 எல்லைக்கப்பாற்பட்ட பரீட்சையில் தேர்வு பெறுவதற்கான வழி!

**06.05.1971 பாப்தாதாவின் விசேஷமான அலங்காரமாகிய 'கண்ணின் மணி' என்ற நிலையில் நிலைத்திருப்பதினால் எதிர்ப்புகள் முடிவடைந்து விடும்!**

**20.05.1971 பாக்கியத்தை உருவாக்குபவர், வரம் அளிப்பவர் என்ற தன்மையின் நிலை!**

**24.05.1971 'பொஷிஸன்'ல் நிலைத்திருப்பதால் 'ஆப்போசிஷன்' முடிவடைந்து விடுகிறது!**

**30.05.1971 தந்தையின் கட்டளை மற்றும் உறுதிமொழி!**

**03.06.1971 நிரந்தர யோக சொரூபமாக ஆவதற்காக தாமரை மலரின் ஆசனம்!**

**08.06.1971 வாழ்க்கைக்கு மூன்று விஷயங்கள் அவசியமானது -குராக் (சக்தி அளிக்கும் உணவு), குஷி மற்றும் கஜானா (செல்வம்)!**

**10.06.1971 சேவையின் பூமியை தயார் செய்வதற்கான சாதனம் -சர்ச்லைட் (யோக சக்தி நிறைந்த கிரணங்கள்)!**

**11.06.1971 மூன்று உலகங்கள், மூன்று காலங்களில் பாப்தாதாவின் அருகில் இருக்க வேண்டும் என்றால் தீய சேர்க்கையிலிருந்து பாதுகாப்பாக இருங்கள்!**

18.06.1971 புத்திக்கான ஆன்மீக டிரில் (பயிற்சி)!

22.06.1971 தீவிர முயற்சி செய்பவரின் அடையாளங்கள்!

24.06.1971 உள்நோக்கு பார்வையுடையவராக ஆவதால் லாபங்கள்!

25.06.1971 சேவை மற்றும் தபஸ்யாவின் சமநிலை!

29.06.1971 ஞானத்தின் வெளிச்சத்தினால் முயற்சி செய்யும் பாதை தெளிவாகிறது!

04.07.1971 நினைவு செய்வதற்கான சுலபமான விதி!

11.07.1971 விஷ்வ கல்யாணகாரி ஆவதற்கான முக்கிய தாரணைகள்!

18.07.1971 வில்பவர் மேலும் கண்ட்ரோலிங் பவர் (will power & controlling power)!

19.07.1971 சிம்பிள் (simple) ஆகுங்கள், சேம்பிள் (sample) ஆகுங்கள்!

27.07.1971 புத்தி என்ற கண்ணை தெளிவானதாகவும், சக்திசாலியானதாகவும் ஆக்குங்கள்!

28.07.1971 ஆகாரத்தில் (உடலில்) நிராகாரத்தை (ஆத்மாவை) பார்ப்பதற்கான பயிற்சி!

01.08.1971 தன்னுடைய ஸ்திதியை நிலைப்படுத்துவதற்கான விதி!

19.08.1971 அனைத்தையும் விட சூட்சும பந்தனம் -புத்தியின் அபிமானம்!

20.08.1971 மிக உயர்ந்த ஆசனம் மற்றும் கிரீடம்!

25.08.1971 முக்கியமான 7-பலஹீனங்கள் மற்றும் அவற்றை அகற்றுவதற்காக 7-நாள் பாடம்!

11.09.1971 டபுள் ரிபைன்ட் ஸ்டேஜ் (இரட்டை சுத்திகரிக்கப்பட்ட நிலை)!

15.09.1971 மாஸ்டர் ஞான சூரிய ஆத்மாக்களின் கடமை!

20.09.1971 ஆன்மீக அன்பானவர் ஆகுங்கள்!

27.09.1971 அன்பின் சக்தி மூலமாக சத்யதாவின் பிரத்யக்ஷதா!

**03.10.1971 பணிவு என்ற குணத்தினால் உலகைப் படைப்பவர் ஆவது!**

**05.10.1971 சம்பூர்ணத்தின் அடையாளம் 16-கலைகள்!**

**08.10.1971 தீபமாலை (தீபாவளி) -சைதன்ய தீபங்களுடைய மாலையின் நினைவுச்சின்னம்!**

**09.10.1971 சக்திசாலியான உள்உணர்வு மூலமாக சேவையில் வளர்ச்சி!**

**24.10.1971 பார்வையினாலேயே மகிழ்ச்சி அடையச் செய்வதற்கான விதி!**

**26.10.1971 கர்மத்தின் (செய்யும் காரியத்தின்) ஆதாரம் உள்உணர்வு!**

**31.11.1971 அனுபவத்தின் வில் பவர் (மனோபலம்) மூலமாக மாயாவின் பவரை (சக்தியை) எதிர்கொள்வது!**

**01.12.1971 அனைத்து சக்திகளின் செல்வந்தனாக ஆகுங்கள்!**

**1971 தனிப்பட்ட சந்திப்புகள் -பார்ட்டிகள் etc**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

# 18.01.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அவ்யக்த ஸ்திதி (மனநிலை) மூலமாக சேவை!

இன்று சப்தத்திலிருந்து விலகிச் செல்லும் நாளாக வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் பாப்தாதாவும் சப்தத்தில் (பேச்சு) எப்படி வந்தார்? சப்தத்திலிருந்து விலகியிருப்பதற்கான பயிற்சி மிக அவசியம். சப்தத்தில் வந்து ஆத்மாக்களுக்கு என்ன சேவை செய்கிறீர்களோ அதைவிட அதிகமாக சப்தத்திலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருந்து சேவை செய்வதினால் சேவையின் உடனடிப் பலனைப் பார்க்க முடியும். தன்னுடையது அவ்யக்த ஸ்திதியாக இருக்கும் காரணத்தினால் மற்ற ஆத்மாக்களுக்கும் அவ்யக்த ஸ்திதியை ஒரு விநாடி அனுபவம் செய்வித்தால் கூட அதனுடைய உடனடியான வெளிப்படையான பலன் சொரூபம் உங்களுடைய எதிரில் தென்படும். சப்தத்திலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருந்து பின்பு சப்தத்தில் வருவதினால் அந்த சப்தம், சப்தமாக அனுபவம் ஆகாது ஆனால் அந்த சப்தத்திலும் கூட அவ்யக்த வைப்ரேஷனின் (எண்ண அதிர்வலைகள்) பிரபாவம் எவரையும் கூட தந்தையின் பக்கம் கவர்ந்து ஈர்க்கும். அந்த சப்தத்தைக் கேட்டு அவர்களுக்கு உங்களுடைய அவ்யக்த நிலையின் அனுபவம் ஏற்படும். சிறு குழந்தைகளுக்குத் தாலாட்டுப் பாடுகிறார்கள். அது கூட சப்தமாகத்தான் இருக்கிறது ஆனால் அந்த சப்தம், சப்தத்திலிருந்து விலகிய நிலைக்கு (உறக்கம்) எடுத்துச் செல்லும் சாதனமாக இருக்கிறது. அதே போல் அவ்யக்த நிலையில் நிலைத்திருந்து சப்தத்தில் வந்தீர்கள் என்றால் சப்தத்திலிருந்து விலகிய நிலையின் அனுபவத்தைச் செய்விக்க முடியும். ஒரு விநாடியின் அவ்யக்த நிலையின் அனுபவம் இம்மாதிரி, ஆத்மாவை அழியாத சம்பந்தத்தோடு (பாபா) இணைக்க முடியும். மாயா கூட அந்த அனுபவி ஆத்மாவை அசைக்க முடியாத அளவிற்கு அந்த மாதிரி பிரிக்க முடியாத சம்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. சப்தத்தின் மூலமாக மட்டும் பிரபாவமாகின்ற ஆத்மாக்கள், அனேக சப்தங்களைக் கேட்பதினால் வருபவர்கள் செல்பவர்கள் ஆகி

விடுகிறார்கள் ஆனால் அவ்யக்த நிலையில் நிலைத்திருந்த சப்தம் மூலமாக அனுபவமான ஆத்மாக்கள் வருவது போவதிலிருந்து விடுபட்டு விடுகிறார்கள். அந்த மாதிரி ஆத்மாவின் மேல் எந்த விதமான பிரபாவமும் ஏற்பட முடியாது. ஆகவே, எப்பொழுதும் தன்னை இணைந்திருப்பவராக நினைத்து இணைந்த ரூபத்தின் சேவை செய்யுங்கள் அதாவது அவ்யக்த நிலை பிறகு சப்தத்தில் வருதல்.

இந்த இரண்டின் இணைந்த ரூபத்தின் சேவை வாரிசுகளை உருவாக்கும். சப்தம் மூலமாக மட்டும் சேவை செய்வதினால் பிரஜைகள் உருவாகிக் கொண்டே இருக்கிறார்கள். எனவே இப்பொழுது சேவையில் புதுமையைக் கொண்டு வாருங்கள் (இந்த விதமான சேவை செய்வதற்கான சாதனம் என்ன?) எந்த நேரம் சேவை செய்கிறீர்களோ அந்த நேரம் சிந்தனை ஓடுகிறது ஆனால் நினைவில் மூழ்கியிருக்கும் நிலை சிந்தனையின் நிலையை விட குறைவாக இருக்கிறது. மற்றவர்களின் பக்கம் அதிக கவனம் செல்கிறது. தன்னுடைய அவ்யக்த நிலையின் பக்கம் கவனம் குறைவாக இருக்கிறது. இதன் காரணமாக ஞானத்தின் விஸ்தாரத்தின் பிரபாவம் ஏற்படுகிறது ஆனால் முழு ஈடுபாட்டோடு மூழ்கியிருக்கும் நிலையின் பிரபாவம் குறைவாகத் தென்படுகிறது. இதன் காரணமாக ஞானம் மிகவும் உயர்ந்தது என்று கூறுகிறார்கள் ஆனால் அதிலேயே மூழ்கியிருக்கும் நிலைக்குத் தைரியம் வைப்பதில்லை. ஏனென்றால் அவ்யக்த நிலை மூலமாக உறவை ஏற்படுத்திக்கொள்ளும் அனுபவம் செய்யவில்லை. மற்றபடி ஞானத்தை கொஞ்சம் எடுத்துக் கொள்வதினால் பிரஜையாகி விடுகிறார்கள். இப்பொழுது உறவை ஏற்படுத்திக் கொள்வதினால்தான் எதிர்காலத்திலும் உறவில் வருவார்கள். இல்லையென்றால் பிரஜையில் வருவார்கள். எனவே யாரையாவது ஒரு நொடியாவது அவ்யக்த அனுபவம் மூலம் உறவை ஏற்படுத்திக் கொள்ளும் இந்த புதுமையைக் கொண்டு வர வேண்டும். உறவு மற்றும் நெருக்கம் இரண்டிலேயுமே வித்தியாசம் இருக்கிறது. நெருக்கத்தில் வருகிறார்கள் ஆனால் உறவில் வருவதில்லை. புரிந்ததா?

இன்றைய நாள் அப்பக்த நிலையை அனுபவம் செய்தீர்கள். இதே அனுபவம் எப்பொழுதும் நிரந்தரமாக வைத்தீர்கள் என்றால் மற்றவர்களையும் அனுபவம் செய்விக்க முடியும். இன்றைய நாட்களில்

வாய்மொழி மற்றும் மற்ற சாதனங்கள் அனேக விதமாக அனேகர்கள் மூலமாக ஆத்மாக்களை பிரபாவம் செய்து கொண்டிருக்கின்றன ஆனால் அனுபவம் என்பதை உங்களைத் தவிர வேறு யாரும் செய்விக்க முடியாது. எனவே இப்போதைய நேரத்தில் இந்த அனுபவம் செய்விப்பது அவசியமாக இருக்கிறது. அனைவரிடத்திலும் எதிர்பார்ப்பும் இருக்கிறது, கொஞ்ச நேரத்தில் அனுபவம் செய்ய வேண்டும் என்ற ஆசை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். கேட்க விரும்பவில்லை அனுபவத்தில் நிலைத்திருந்து அனுபவம் செய்வியுங்கள். அனைவரின் அன்பும் வதனத்தை வந்து சேர்ந்தது. மூன்று விதமான நினைவும், அன்பும் வதனத்தை வந்தடைந்தது என்று ஏற்கனவே கூறியிருந்தோம். வியோகி (பிரிந்து இருப்பவர்), யோகி மற்றும் சிநேகி. மூன்று ரூபத்திலும் அன்பு நினைவுகள் பாப்தாதாவிற்கு கிடைத்தது. ரிவைஸ் கோர்ஸினுடைய வருடமும் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. வருடம் முடிந்தவுடன் மாணவர்களுக்கு அவர்களுடைய ரிசல்ட்டைக் கொடுக்க வேண்டும். இந்த வருடத்தின் ரிசல்ட்டில் ஒவ்வொருவருக்கும் என்ன ரிசல்ட் கொடுக்க வேண்டும்? இதனுடைய முக்கியமான நான்கு விஷயங்களை கவனத்தில் வைக்க வேண்டும். ஒன்று தன்னில் அனைத்து விதமான உயர்ந்த தன்மை எந்த அளவு இருக்கிறது? இரண்டாவது, சம்பூர்ணத்தன்மை மற்றும் அனைவரின் உறவில் நெருக்கம் எவ்வளவு இருக்கிறது? மூன்றாவது தன்னில் மற்றும் மற்றவர்களின் உறவில் திருப்தி எதுவரை இருக்கிறது? மற்றும் நான்காவது தன்னில் வீரத்தன்மை எவ்வளவு வந்திருக்கிறது? இந்த நான்கு விஷயங்களையும் தன்னில் சோதனை செய்ய வேண்டும். இன்றைய நாள் நினைவு நாளாக மட்டும் கொண்டாடாமல், இன்றைய நாளை சக்தியை அதிகரிப்பதற்கான நாளாகவும் கொண்டாட வேண்டும். இன்றைய நாள் ஸ்திதி மற்றும் ஸ்டேஜை மாற்றம் செய்யும் நாள் என்று புரிந்து கொள்ளுங்கள். எப்படி இன்றைய நாட்களில் உள்ளே இருப்பது தெளிவாகத் தெரியும் பொருள் (டிரான்ஸ்பெரன்ட்) நன்றாக இருக்கிறது இல்லையா? அதேபோல் தன்னையும் அந்த மாதிரி டிரான்ஸ்பெரன்ட் நிலைக்கு டிரான்ஸ்பர் செய்ய வேண்டும். இன்றைய நாளின் மகத்துவத்தைப் புரிந்து கொண்டீர்களா? உங்களுடைய உடலின் உள்ளே அமர்ந்திருக்கும் ஆத்மா மிகவும் தெளிவாக அனைவருக்கும் தென்படும் அளவிற்கு டிரான்ஸ்டெரன்ட் ஆகி விடுங்கள். உங்களுடைய ஆத்மீக சொரூபம் அவர்களுக்கு அவர்களுடைய ஆத்மீக சொரூபத்தின்

சாட்சாத்காரம் செய்விக்கட்டும். இதைத்தான் அவ்யக்த மற்றும் ஆத்மீக ஸ்திதியை அனுபவம் செய்விப்பது என்று கூறப்படுகிறது.

நினைவு யாத்திரையின் ரிசல்ட் இன்று என்னவாக இருந்தது? அன்பு சொரூபமாக இருந்ததா? அல்லது சக்தி சொரூபமாக இருந்ததா? இந்த அன்பு கூட சக்தியின் வரதானத்தைப் பிராப்தி செய்விக்கிறது. அப்படி இன்று அன்பின் வரதானத்தை பிராப்தி செய்வதற்கான நாளாகும். ஒன்று முயற்சி செய்வதினால் பிராப்தி, இன்னொன்று வரதானத்தினால் பிராப்தி. அப்படி இன்றைய நாள் கஷ்டப்பட்டு செய்யும் முயற்சியின் மூலமாக சக்தியை பிராப்தி செய்வதற்கான நாள் இல்லை மாறாக அன்பு மூலமாக சக்தியின் வரதானத்தை பிராப்தி செய்வதற்கான நாளாகும். இன்றைய நாளை விசேஷ வரதானத்தின் நாளாகப் புரிந்து கொள்ளுங்கள். அன்பு மூலமாக வரம் கொடுப்பவரிடமிருந்தும் எந்தவொரு வரத்தையும் பெற முடியும். முயற்சி மூலமாக இல்லை, ஆனால் அன்பு மூலமாக என்று புரிந்து கொண்டீர்களா? யார் எவ்வளவு வரம் பெற்றுக் கொண்டார் என்பது அவரவர்களைப் பொறுத்தது ஆனால் அன்பு மூலமாக அனைவரும் அருகாமையில் வந்து வரதானத்தைப் பிராப்தி செய்ய முடியும். வரதான நாளை யார் எவ்வளவு புரிந்து கொள்ள முடியுமோ அந்தளவே அடைய முடியும். அங்ஙனம் பிடித்துக் கொள்பவர்களின் அற்புதமே அற்புதம் இன்றைய வரதான நாளன்று யார் எவ்வளவு பிடித்துக் கொள்ள முடிந்ததோ அந்தளவே வரதானத்தையும் பிராப்தி செய்தார்கள். எப்படி ஒரு தந்தையைத் தவிர வேறு யாருடைய நினைவும் கவர்ந்திழுக்க வேண்டாம் என்று முயற்சி செய்கிறீர்கள் இல்லையா? அந்த மாதிரியான நாள்தான் இன்று. இன்று சுலபமாக நினைவின் அனுபவம் செய்தீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.01.1971-1 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய நெற்றியிலும் எதைப் பார்க்கின்றார்கள்? பாபா எப்பொழுதெல்லாம் குழந்தைகளைப் பார்க்கின்றாரோ அப்பொழுதெல்லாம் அவருக்கு ஒவ்வொரு குழந்தையும் உயர்ந்ததிலும் உயர்ந்த பாக்கியத்தை உருவாக்கட்டும் என்ற இந்த சுபபாவனை ஏற்படுகிறது. நிகழ்காலத்தில் வரதாதாவின் ரூபத்தில் வரதானம் அளிப்பதற்காக அவர் வந்திருந்தாலும் ஒவ்வொரு ஆத்மாவும் அவரவரின் யோகசக்தியின் ஆதாரத்தில் வரதாதாவிடமிருந்து வரதானத்தை பிராப்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அனைத்து ஆத்மாக்களுக்கும் வரதானத்தை பிராப்தி செய்விப்பதற்கான விசேஷ வரதானம் இந்த சமயத்திற்கு உள்ளது. இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை. இன்று இந்த ஆத்மாக்களுக்கும் கூட (ஆளுநர் மற்றும் அவருடைய துணைவி) வரதானத்தை பிராப்தமாக அடைவதற்கான சுபதினம் என்று சொல்லலாம். முழு கல்பத்திலும் இந்த அலௌகீக சந்திப்பு மிகவும் குறைவான பத்மாபதம் பாக்கியசாலி ஆத்மாக்களுக்குத்தான் ஏற்படுகிறது. தொடர்பில் வந்து பிறகு சம்பந்தத்தில் வரவேண்டும். ஏனென்றால், சம்பந்தத்தின் மூலமாகத்தான் உயர்ந்த பிராப்தி (பலன்) ஏற்படுகிறது. இரண்டு வார்த்தைகளை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும் -ஒன்று சுயத்தை, மற்றொன்று சமயத்தை நினைவு வைக்க வேண்டும். சுயம் மற்றும் சமயம் ஆகிய இவற்றை எப்பொழுதும் நினைவு வைத்தீர்களானால், இந்த வாழ்க்கையில், பல பிறவிகளுக்கான உயர்ந்த பலனை அடைய முடியும்.

**ஆளுநர் மற்றும் அவருடைய மனைவியுடன் சந்திப்பு:** தங்களுடைய உண்மையான வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள் என்ற அனுபவம் செய்கிறீர்களா? தனது வீட்டிற்கு எவ்வளவு விரைவாக வரவேண்டியிருக்கிறது, தெரியுமா? எவ்வாறு பணி முடிந்த பிறகு

தன்னுடைய வீடு ஞாபகத்திற்கு வருகிறதோ, அதுபோன்று இந்த சரீர நிர்வாகத்தினுடைய பணியிலிருந்து விடுபடும்போது உங்களுடைய வீடு நினைவிற்கு வரவேண்டும். சம்பந்தத்தை அதிகப்படுத்த வேண்டும். இந்த ஒரு சம்பந்தத்தை அதிகப்படுத்தினால், அதாவது, இந்த சம்பந்தத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதால், பலவிதமான தேவைகள் பூர்த்தியாகி விடுகின்றன. எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு ஒரு தேவையைப் புரிந்து கொள்ள வேண்டும். எவ்வாறு சரீர நிர்வாகத்திற்காக பலவிதமான சாதனங்கள் தேவைப்படுகின்றன என்று புரிந்து கொள்கிறீர்களோ, அவ்வாறே ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஒரு சாதனம் தேவைப்படுகிறது. ஆகையால், எப்பொழுதும் தன்னை 'அழிவற்ற மூர்த்தி' என்று புரிந்து கொண்டீர்கள் என்றால், அகால மரணத்திலிருந்தும் மற்றும் அனைத்து பிரச்சனைகளிலிருந்தும் காப்பாற்றப்படுவீர்கள். மானசீகக் கவலைகள், மானசீக பரஸ்திதிகளை அழிப்பதற்கு ஒரு சாதனத்தை நினைவில் வைக்க வேண்டும் -தன்னை இந்த பழைய சரீரப் பற்றிலிருந்து துண்டித்தால்போதும். இந்த தேக அபிமானத்தை விடுவதனால் அனைத்து பரஸ்திதிகளும் நீங்கி விடும். இப்பொழுது கேட்பதற்கு எதுவுமில்லை. சம்பந்தத்தில் மட்டும் வந்து கொண்டிருந்தால்போதும். மீண்டும் அனைவரையும் சந்திப்பதற்கு வருவோம். இப்பொழுது அனைவரிடமிருந்தும் விடைபெறுகிறோம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.01.1971-2 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அவ்யக்த வதனத்தின் அலௌகீக அழைப்பு!

இன்று சந்திப்பதற்காக அழைத்தீர்கள். இந்த அவ்யக்த சந்திப்பு அவ்யக்த ஸ்திதியில் நிலைத்திருந்துதான் கொண்டாட முடியும். புரிந்து கொள்ள முடிகிறதா? இன்று பாப்தாதா பார்க்கிறார் யார், யார் எவ்வளவு சக்தி சொரூபமாக ஆகியுள்ளனர்? உங்களது சித்திரங்களில் வரிசைக்கிரமமான சக்திகளின் நினைவுச்சின்னம் காண்பிக்கப்பட்டுள்ளது. சக்திகளின் நினைவுச்சின்னங்களை எந்த சித்திரத்தின் மூலம் கண்டறிய முடியும், தெரியுமா? உங்களுக்கு, தனது சக்திகளைப் பகுத்துணர்வதற்கான சித்திரம் தெரியாதா! விதவிதமாக, வரிசைக்கிரமமாக சக்திகளின் நினைவுச்சின்னம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தனது சித்திரத்தை மறந்து விட்டீர்களா! சக்திகளினுடைய சித்திரங்களில் பலவித மான ரூபத்திலும் மற்றும் புஜங்களின் ரூபத்திலும் வரிசைக் கிரமமாக சக்திகளின் நினைவுச்சின்னம் உள்ளது. அவற்றுள் ஒன்றில் சில புஜங்களும், மற்றொன்றில் பல புஜங்களும் காண்பிக்கின்றனர். சிலர் (8-புஜங்களை) 8-சக்திகளை தாரணை செய்யக் கூடியவர்களாக ஆகிறார்கள், சிலர் அதைவிட அதிக மாகவும், சிலர் அதை விடக் குறைவாகவும் இருக்கிறார்கள். ஒன்றில் 8-புஜங்களும், மற்றொன்றில் நான்கு புஜங்களும், வேறு சிலவற்றில் 16-புஜங்களையும் கூட வரிசைக்கிரமமாக காண்பித் திருக்கிறார்கள். அதனால், ஒவ்வொருவரும் எவ்வளவு சக்திகளை தாரணை செய்து இருக்கிறீர்கள்? என்பதை இன்று பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறப்படு கிறதல்லவா! மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் சர்வ சக்திகளையும் தாரணை செய்யக்கூடியவர்கள். தனது சக்தி சொருபத்தினுடைய சாட்சாத்காரம் ஏற்படுகிறதா? அவ்யக்த வதனத்தில் ஒவ்வொருவருடைய சக்தி ரூபத்தைப் பார்க்கும்பொழுது என்ன புலப்படுகிறது? வதனத்தில் கூட பாப்தாதாவினுடை அலௌகீகக் கண்காட்சி உள்ளது. அவரது

சித்திரங்கள் எத்தனை இருக்கும்? உங்களுடைய சித்திரங்களைக் கணக்கிட முடியும் ஆனால், பாப்தாதாவினுடைய கண்காட்சியினுடைய சித்திரங் களை கணக்கிட முடியுமா? பாப்தாதா அழைப்புவிடுக்கின்றார். அழைப்பு விடுப்பவர் அழைக்கின்றார், வருபவர்களுடைய வேலை வந்தடைவதாகும். பாப்தாதா உங்கள் அனை வரையும் விட கோடி மடங்கு குஷியில் அழைப்பு விடுக்கின்றார். ஒவ்வொருவருக்கும் அனுபவம் ஏற்பட முடியும். அவ்யக்த ஸ்திதியினுடைய அனுபவத்தை சிறிது நேரம் தொடர்ந்து செய்யுங்கள். அப்பொழுது எவ்வாறு விஞ்ஞானத்தின் மூலம் தூரத்தில் இருக்கும் பொருட்கள் கண்முன்னே தெரிகின்றனவோ, அவ்வாறே அவ்யக்த வதனத்தின் நடவடிக்கைகளும் இங்கு தெளிவாகத் தெரியும் அனுபவம் ஏற்படும். புத்தி பலத்தின் மூலம் தனது சர்வ சக்திவான் சொரூபத்தின் சாட்சாத்காரம் செய்ய முடியும். நிகழ்காலத்தில் நினைவு குறைவாக இருக்கின்ற காரணத்தினால் சக்தியும் இல்லை. வீண் எண்ணங்கள், வீண் வார்த்தைகள் மற்றும் வீணான செயல்களால் சக்திசாலி ஆக முடிவதில்லை. வீணானவற்றை முடித்து விட்டால் சக்திசாலி ஆகிவிடுவீர்கள். ஒவ்வொருவருடைய முயற்சியினுடைய வித விதமான சொரூபத்தை வதனத்திலிருந்து பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார். மிக நன்றாக உள்ளது. வதனத்தில் எந்தளவு பாபா ஒவ்வொருவருடைய அனேக ரூபங்களைப் பார்க் கின்றாரோ, அந்தளவு நீங்கள் ஒவ்வொருவரும் தன்னைத்தான் பார்த்திருக்கமாட்டீர்கள். நீங்களும் கூட ஒரு நாள் தனி கவனம் கொடுத்துப் பார்க்க வேண்டும், அதாவது, முழு நாளில் என்னுடைய ரூபம் எத்தனை விதமாக இருந்தது மற்றும் எவ்வாறு இருந்தது என்று, அப்பொழுது விதவிதமான மூகத் தோற்றத்தைப் பார்த்து சிரிப்பு வரும். இன்றைய நாட்களில் ஒருவருக்கே பலவித முகத்தோற்றங்களை உருவாக்குகிறார்கள் எனில், தன்னுடையதையும் பார்க்க வேண்டும். தன்னுடைய பல ரூபங்களின் சாட்சாத்காரத்தைப் (திவ்ய காட்சியை) பார்க்க வேண்டும். வதனத்திற்கு வர வேண்டும் என்ற உள்ளமோ (விருப்பமோ) அனைவருக்கும் இருக்கிறது. ஆனால், பிராமணர்களுடைய கடமை எதுவோ, அவை அனைத்தையும் நாம் செய்திருக்கிறோமா? என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்ளுங்கள். அனைத்து கடமைகளையும் முழுவதுமாக முடித்தபின்தான் சம்பூரணம் ஆவீர்கள். ஒவ்வொரு அடியும் கவனத்துடன் எடுத்து வைத்துச் செல்வதற்கான சமயம் இப்போதைய சமயம் ஆகும். கவனம் இல்லாததால் முயற்சியிலும் பதற்றமாக இருக்கிறார்கள்.

ஒருபுறம் வாயு மண்டலத்தின் டென்ஷன் உள்ளது, மறுபுறம் முயற்சியினுடைய பதற்றம் உள்ளது. ஆகையால், கவனம் என்ற ஒரு வார்த்தையை சேர்த்துக் கொள்ளுங்கள். பின்னர், இந்த பலவித ரூபம் ஒரே ஒரு சம்பூரண ரூபமாக ஆகிவிடும். ஆகையால், இப்பொழுது ஒவ்வொரு அடியிலும் கவனம் தேவை. இன்றைய நாட்களில் அனைத்து ஆத்மாக்களும் சுகம் மற்றும் சாந்தியினுடைய அனுபவம் பெற விரும்புகிறார்கள் என்று ஏற்கனவே சொல்லப் பட்டிருக்கிறது. நிறைய கேட்பதற்கு விரும்புவதில்லை. அனுபவம் செய்விப்பதற்காக சுயம் அனுபவி சொரூபமாகுங்கள். அப்பொழுது அனைத்து ஆத்மாக்களுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்ய முடியும். எவ்வாறு ஏழை பிச்சை எடுக்க வருகிறாரோ, அதுபோன்று சாந்தியினுடைய அனுபவத்தை தானமாகப் பெற தவிக்கும் ஆத்மாக்கள் தானம் பெறுவதற்குத் துடித்துக் கொண்டு இருப்பார்கள் என்பதை நாளுக்கு நாள் பார்ப்பீர்கள். இப்பொழுது துக்கத்தின் ஒரு அலை வந்தாலும் கூட எவ்வாறு கடல் அலைகளில் தத்தளித்துக் கொண்டும் மற்றும் மூழ்கிக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் ஒரு துரும்பாவது உதவி கிடைக்காதா என்று தேடுகிறார்களோ, அவ்வாறே உங்கள் முன்னால் அநேக ஆத்மாக்கள் பிச்சை கேட்க வருவார்கள். அதனால் துடித்துக் கொண்டிருக்கும் மற்றும் யாசிக்கும் தாகமான ஆத்மாக்களுடைய தாகத்தைப் போக்குவதற்காக தன்னை அதீந்திரிய சுகம் மற்றும் சர்வ சக்திகளினால் நிறைந்திருக்கும் அனுபவம் செய்கிறீர்களா? சர்வ சக்திகளின் கஜானா, அதீந்திரிய சுகத்தின் கஜானாவை தன்னுடைய ஸ்திதியை நிலையாக வைப்பதோடு மட்டுமல்லாமல் மற்ற ஆத்மாக்களையும் கூட சம்பன்னம் (நிறைவு) ஆக்க முடியும் அளவிற்கு சேமித்திருக்கிறீர்களா? அனைவருடைய பையை நிரப்பக்கூடிய வள்ளலுடைய குழந்தைகள் அல்லவா? இப்பொழுது இந்த விதமான காட்சிகள் வெகுவிரைவில் முன்னால் வரும்.

மருத்துவர்கள் கூட எவருக்கும் இந்த நோய்க்கான மருந்து தர இயலாது. அப்பொழுது உங்களிடம் இதற்கான மருந்து பெற வருவார்கள். சுகம் சாந்தியினுடைய அனுபவம் பிரம்மா குமாரிகளிடம் கிடைக்கும் என்ற இந்த ஒலி மெதுமெதுவாகப் பரவும். அலைந்து அலைந்து பல ஆத்மாக்கள் தங்களுடைய உண்மையான இடத்தை வந்தடைவார்கள். இவ்வாறு அனைத்து ஆத்மாக்களையும் திருப்திப்படுத்த நீங்கள் உங்களுடைய ஒவ்வொரு கர்மத்திலும் திருப்தியாக இருக்கிறீர்களா?

திருப்தியான ஆத்மாக்கள்தான் மற்றவர்களை திருப்திப்படுத்த முடியும். இப்பொழுது இம்மாதிரியான சேவை செய்வதற்குத் தன்னை தயார்படுத்திக் கொள்ளுங்கள். இம்மாதிரியான துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் ஏழு நாட்கள் பாடமுறை கேட்பதற்கான பொறுமை இல்லாமல் இருப்பார்கள். அதனால் அந்த நேரத்தில், அந்த ஆத்மாக்களுக்கு, ஏதாவது ஒரு அனுபவத்தின் பிராப்தியை செய்விக்க வேண்டியிருக்கும். ஆகையால், இப்பொழுது தன்னுடைய பிராமண வாழ்க்கையின் கடமை களை முழுமையாக்குவதற்குத் தன்னை சம்பூரணமாக்கிக் கொள்ளுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. எந்தவித சேவை செய்ய வேண்டுமென்று இப்பொழுது புரிந்ததா? நீங்கள் சாகாரத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுது (பிஸியாக இருக்கும் பொழுது) பாப்தாதா அவ்யக்தத்தில் உதவியாளராக இருக்கின்றார் அல்லவா. தைரியசாலி குழந்தைகளுக்கு பாபா உதவி செய்கின்றார். இப்பொழுது கூறுங்கள் யார் மிகுந்த சுறுசுறுப்பானவர்கள்? எவ்வாறு ஆரம்பத்தில், வதனத்தின் அனுபவம் செய்வித்தார் அல்லவா. அந்த அனுபவம் டிரான்ஸ்ஸில் செல்பவர்களின் அனுபவத்தைவிட நன்றாக இருந்தது. (பாபா நீங்கள் இப்பொழுது கூட அனுபவம் செய்வியுங்கள்). அனுபவம் செய்யுங்கள். புத்தியினுடைய விமானம் கூட இருக்கிறது. சில குழந்தைகள் சில விஷயங்களில் பிடிவாதமாக இருப்பதனால் பாபா அவர்கள் கூறுவதை ஏற்க வேண்டியதாக உள்ளது. இப்பொழுது அனுபவம் செய்ய வேண்டும் என்ற பிடிவாதத் துடன் இருங்கள். நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** பிரஜைகளோ திரேதாயுகத்தின் இறுதி வரை வேண்டும். துவாபரயுகத்தில் பக்தர்கள் வேண்டும். பக்தர்களையும் உருவாக்குங்கள். மேலும் பிரஜைகளையும் உருவாக்குங்கள். இப்பொழுது அம்மாதிரியான நேரம் வரும் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள், பையை நிரப்பிக் கொண்டே செல்லுங்கள். நிராசையான ஆத்மாக்கள் அவ்வளவு வருவார்கள். அவர்களுக்கு ஒருதுளி கொடுத்தாலும் குஷி அடைந்து விடுவார்கள். அந்த மாதிரியான நேரம் இப்பொழுது வர இருக்கிறது. இப்பொழுது மினிட் மோட்டார் என்று கூறுகிறார்கள் (நாணயம் தயாரிக்கும் எந்திரம்) அதுபோன்ற அமைப்பு ஏற்படும். திருஷ்டி, விருத்தி, ஸ்மிருதி(நினைவு), பேச்சு ஆகிய இவை அனைத்தின் மூலமும் சேவை நடக்கும். உங்களுடைய வீடும் ஆசிரமமாக இருக்கிறது. அதிலிருந்து வருபவர்கள் சுயம் சென்டருக்குச் செல்வதைத் தடுக்க

இயலாது. இவர்கள் (தாதிகள்) சேவை யினுடைய ஆரம்ப கட்டத்தில் அதிகமாக அலைந்திருக்கின்றார் கள். நீங்கள் எல்லாம் தயாரானவுடன் வந்திருக்கிறீர்கள். அவர்கள் உழைத்து வெண்ணையை எடுத்திருக்கின்றார்கள். நீங்கள் ண்ணுவதற்கு வந்திருக்கிறீர்கள் ஆனால் வெண்ணையை உண்பவர்கள் எவ்வளவு சக்திசாலியாக இருக்க வேண்டும். எந்த ஆத்மாக்கள் தொடர்பில் வருகிறார்களோ, அவர்களுக்குத் தேவையானது எதுவோ அது கிடைக்க வேண்டும் என்ற இந்த எண்ணத்தை எப்பொழுதும் கொண்டுவாருங்கள். ரொட்டி யினுடைய தேவை உள்ளவர்களுக்கு நீர் கொடுத்தீர்கள் என்றால்... யாருக்கு மரியாதை கொடுக்க வேண்டி உள்ளதோ அவர்களை கீழே ஜமுக்காளத்தில் அமருங்கள் என்று சொன்னால் எவ்வாறு அமருவார்கள்! சிலரை ஜமுக்காளத்தில் அமர வைத்து பாடமுறை சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது, சிலரை சோபாவின் மீது அமர வைக்க வேண்டியிருக் கிறது. இப்பொழுது ஆளுநர் வந்தார், அப்பொழுது என்ன செய்தீர்கள்? மரியாதை கொடுத்தீர்கள் அல்லவா! ஆனால் வழக்கமான முறையில் அவரை நடத்துவதென்பது முடியாது. சில இடங்களில் மரியாதையைக் கொடுத்து அதைப் பெற வேண்டியிருக்கிறது. அனைவருக்கும் ஒரே அளவான மருந்தைக் கொடுத்தால் அவர்கள் நோய்வாய்ப்பட்டு விடுவார்கள். இன்றைய நாட்களில் நோயாளிகள் மருத்துவரிடம் சென்றால் நீண்ட நாட்களுக்கான மருந்தை விரும்புவதில்லை. வந்தோம், ஊசி போட்டுக் கொண்டோம், முடிந்து விட்டது. இங்கு கூட அவ்வாறு இருக்கிறது, வந்தார்கள் மற்றும் அவர் களைப் பறக்க வைத்தோம். அம்மாதிரியான சேவை செய்கிறீர்களா? சுபாவத்தின் மூலம் கூட சேவை செய்ய முடியும். நாடகப்படி ஒருவருக்கு நல்ல சுபாவம் உள்ளது என்றால், அந்த சுபாவம் கூட மற்றவர்களுக்கு உதவி செய்கிறது. நண்பர்களாக்கி, அனுபவத்தின் மூலம் எவர் மீதும் பிரபாவத்தை ஏற்படுத்த முடியும். இவர்கள் ஞானம் கேட்பதில்லை என்று விட்டு விடாதீர்கள். முதலில் தொடர்பில் கொண்டு வந்து பின்னர் சம்பந்தத்தில் கொண்டு வாருங்கள். சுபாவத்தின் மூலம் கூட எவரையும் அருகில் கொண்டு வர முடியும். இதனைப் பயன்படுத்திப் பாருங்கள்.

நீங்கள் அனைவரும் உலக நன்மைக்கு ஆதாரமூர்த்திகள். தங்களை ஆதாரமூர்த்தி என்று புரிந்து கொண்டால் பலரை முன்னேற்ற முடியும். யார் இவ்வித சேவை செய்கிறார்களோ, அவர்கள் அந்தக் கணக்கில்

சேமிக்கிறார்கள். எவ்வாறு வங்கியில் பல வித கணக்குகள் உள்ளனவோ, அதுபோன்று யார்-யார் எந்தெந்த சேவைக்கு நிமித்தமாக ஆகின்றனரோ, அச்சமயம் அவர்களது கணக்கில் அது சேமிப்பு ஆகின்றது. அஸ்திவாரம் எந்தளவு ஆழமாக போடப்படுமோ, அந்தளவு பலமாக இருக்கும். அதுபோன்று தொடர்பில் கொண்டு வந்தீர்கள், ஆனால் சம்பந்தத்தில் கொண்டு வர வேண்டும். யார் பலரை சம்பந்தத்தில் வர வைக்கின்றனரோ, அவர் பாபாவின் நெருங்கிய சம்பந்தத்தில் வருவார். யார் பலரை தொடர்பில் கொண்டு வருகின்றனரோ, அவர்கள் அங்கும் கூட (சத்யுகத்தில்) நெருங்கிய தொடர்பில் வருவார்கள்.

முழு நாளுடைய கணக்கை சரி வர வைக்க முடிகிறதா? இது விரைவு இரயிலின் வேகம் போல் உள்ளது என்று தெரிகிறதா? பாப்தாதாவின் சம்ஸ்காரங்களுடன் இணைய வேண்டும். யார் ஒவ்வொரு நொடியிலும் சாகார ரூபத்தில் கூடவே இருந்து சங்கல்பம், சம்ஸ்காரத்தின் அனுபவம் பெற்றனரோ, அவர்களுடன் உங்களுடைய சம்ஸ்காரம் இணைய வேண்டும். மற்றவர்களை புத்தியோகம் மூலம் கொண்டு வர வேண்டி இருக்கிறது. ஆனால், உங்களை முன்னால் கொண்டு வந்தால்போதுமானது. ஆகையால், சங்கல்பம், சம்ஸ்காரத்தை இணைத்துச் செல்ல வேண்டும். காலத்தை விரயமாக்கக் கூடாது. எதைச் செய்ய வேண்டும் மற்றும் எதைச் செய்யக் கூடாது என்பதை உடனடியாக முடிவு செய்ய வேண்டும். இதில் சமயத்தினுடைய சேமிப்பும், புத்தியினுடைய சக்தி. எது நஷ்டமாகிறதோ, அது சேமிப்பாகிறது. தன்னுடைய முயற்சியில் திருப்தியாக இருக்கிறீர்களா? சம்பூரணமாவதற்கு என்ன திட்டம் வைத்துள்ளீர்கள்? எப்பொழுது தன்னை மாற்று வீர்களோ, அப்பொழுது மற்றவர்களுக்கு சேவை செய்வீர்கள். திருப்தியினுடைய சான்றிதழ் கிடைத்துள்ளதா? மன விருப்பத்துடன் கூடவே உலகத்திற்குப் பிரியமானவர்களாகவும் ஆக வேண்டும். யார் பொறுப்பானவர்களோ அவர்கள் சான்றிதழ் கொடுத்திருந்தால்தான் உலகத்திற்குப் பிரியமானவர் களாக ஆகியிருக்கிறீர்கள் என்று அர்த்தம். படைப்பையும் திருப்திபடுத்த வேண்டும். அவர்களுடைய நடவடிக்கையிலி ருந்து உங்கள் மீது அவர்கள் திருப்தியாக இருக்கிறார்களா என்பது தெரிய வருகிறதா? எப்பொழுது மதுவனத்திற்கு வருகிறீர்களோ, அப்பொழுது நிமித்தமான சகோதரிகள் மூலம் தனது சான்றிதழைப் பெற்றுச் செல்ல வேண்டும். இந்த அனைத்து

சான்றிதழ்களும் தர்மராஜபுரியில் பயன்படும். எவ்வாறு சாலையில் கார் ஓட்டக் கூடியவர்கள் உரிமத்தைக் காண்பித்து விட்டு காரை ஒட்டிச் செல்கிறார்களோ, அவ்வாறே தர்மராஜ புரியிலும் இந்த சான்றிதழ் பயன்படும். ஆகையால், எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டே செல்லுங்கள். ஏனெனில், இதே மகாரதிகள் தர்மராஜபுரியிலும் அமர்ந்திருப்பார்கள். இவர்களுடைய சான்றிதழ்களும் பயன்படும். இங்கிருந்து சான்றிதழ் பெற்றுச் செல்வதின் மூலம் மற்ற ஆத்மாக்களையும் திருப்திபடுத்துவதற்கான விசேஷத்தன்மை வந்து விடும். அனுபவமுள்ள சகோதரிகள், பலரை திருப்திபடுத்துவதற்கான கல்வியை அளிக்கிறார்கள். பலரை திருப்திபடுத்துவதற்கான யுக்தி இந்த சான்றிதழ் ஆகும்.

அன்பானவராக ஆக முடிகிறதா? அல்லது சக்திசாலியாக ஆக முடிகிறதா? சக்தியை நிரப்பிக் கொண்டு யார் படைக்கிறார் களோ, அவர்களுடைய படைப்பு கூட சக்திசாலியாக இருப்பதன் காரணமாக முயற்சியில் ஏற்ற இறக்கம் ஏற்படாது. ஒருவேளை, மாணவர் ஏற்ற இறக்கமான நிலையில் இருந்தால் அவர்களுக்குள் சக்தியை நிரப்புவதற்கான யுக்தி கையாளப்படவில்லை என்பதைக் கண்டறிய முடியும். சமீபத்தில் கொண்டு வருவதுதான் விசேஷமாகும். மாயையை எதிர்கொள்வதற்கு சக்திசாலி யாக ஆக்க வேண்டும். இதையும் சேர்க்க வேண்டும். விக்னங் கள் (தடை) வரும், ஆனால், நீண்ட நேரம் அது இருக்கக் கூடாது. வந்தது, உடனே சென்று விட்டது -இதுதான் சக்தி ரூபத்தின் அடையாளம்! யார் தனக்குள் திருப்தியாக இருக்கிறார்களோ, அவர்கள் மற்றவர்களிடம் கூட திருப்தியாக இருப்பார்கள். மேலும், யாராவது அதிருப்தியை உண்டாக்கினாலும் சுயம்தான் திருப்தியாக இருப்பார்கள். அதனால், அனைவரும் அவரிடம் திருப்தி அடைவார்கள். மற்றவரின் குறையை தன் குறையாகப் புரிந்து கொண்டு சென்றீர்கள் என்றால் தானும் சம்பூரணமாகி விடுவீர்கள். இன்ன காரணத்தினால் என்னுடைய முயற்சி நன்றாக இல்லை என்று ஒருபொழுதும் சிந்திக்காதீர்கள். என்னுடைய குறை என்பதைப் புரிந்து கொள்வதில் விரைவில் முன்னேற்றம் ஏற்படும். இல்லையெனில், பிறருடைய குறையைத் தீர்ப்பதிலேயே மிகுந்த நேரம் சென்று விடும்.

சாகார சிநேகியாக (சிவபாபவுடன்) இருக்கிறீர்களா? அல்லது நிராகார சிநேகியாக இருக்கிறீர்களா? நிராகார சிநேகியாக இருப்பவர்களுடைய விசேஷமானது, அவர்கள் அந்த ஸ்திதியில் அதிக நேரம் நிலைத்திருப்பார்கள், சாகார சிநேகி (பாபாவுடன்) சரித்திரவானாக (ஒழுக்கமானவர்) இருப்பார்கள். அவர்களுடைய ஒவ்வொரு அறமான செயலும் சேவை செய்யக் கூடியதாக அமையும். இரண்டாவதாக, அவர் கள் மற்றவர்களையும் மிகுந்த சிநேகத்தில் கொண்டு வர முடியும். நிராகாரி, நிர் அகங்காரி இவ்விரண்டிலும் சமநிலை வேண்டும்.

குழந்தையாக இருப்பது நன்றாக இருக்கிறதா? அல்லது அதிகாரியாக ஆவது நன்றாக இருக்கிறதா? எவ்வளவு இயலுமோ அந்த அளவு சேவையின் சம்பந்தத்தில் குழந்தைத் தன்மை யாகவும், தனது முயற்சியின் நிலையில் அதிகாரி தன்மையுடனும் இருக்க வேண்டும். தொடர்பு மற்றும் சேவையில் குழந்தைத் தன்மையும், நினைவு யாத்திரை மற்றும் ஞான சிந்தனையில் அதிகாரத் தன்மையும் இருக்க வேண்டும். கூட இருப்பவர்கள் மற்றும் குழுவில் குழந்தைத் தன்மை மற்றும் தன்னிடம் அதிகாரி நிலை இருக்க வேண்டும். இதுதான் யுக்தியுக்தாக நடப்பதாகும்.

சதா ஊக்கம் உற்சாகத்தில் ஒரே இரசனையில் இருப்பதற் கான என்ன கருத்து (பாயிண்ட்) நினைவு இருக்க வேண்டும்? அதற்காக யார் சதா சம்பந்தத்தில் வருகிறார்களோ -மாணாக்கரோ, கூட இருப்பவரோ இவர்கள் அனைவரையும் திருப்திப்படுத்துவதற்கான தீவிர ஆசை இருக்க வேண்டும். உற்சாகத்துடன் இருப்பதனால் ஈஸ்வரிய ஊக்க உற்சாகமானது எப்பொழுதும் ஒரே இரசனையில் (ஏக்ரஸ்) இருக்கும். யாரைப் பார்த்தாலும் அவரிடமிருந்து ஒவ்வொரு சமயமும் குணத்தை எடுத்துக் கொண்டே இருங்கள். அனைத்து குணங்களுடைய பலம் கிடைப்பதனால் சதா காலத்திற்கும் உற்சாகம் இருக்கும். நீங்கள் மற்றவர்களுடைய பல்வேறு சொரூபத்தையும், பலவிதமான விஷயங்களையும் பார்க்கும் மற்றும் கேட்கும் காரணத்தால் உற்சாகம் குறைகிறது. குணங்களைப் பார்க்கும் ஆசை இருந்தால் உங்களுடைய ஊக்கம் உற்சாகம் ஏக்ரஸ் ஆக இருக்கும். நீங்கள் குணத்திருடர்களாக ஆகும்பொழுது மற்ற திருடர்கள் ஓடி விடுவார்கள். அனைத்தின் மீதும் வெற்றி அடைவதற்கான யுக்தி என்ன? வெற்றியாளர் ஆகுவதற்காக

ஒவ்வொருவரின் உள்ளத் தின் இரகசியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். எப்பொழுது ஒவ்வொருவருடைய வாயிலிருந்தும் எழும் சப்தத்தைப் பார்க்கிறீர்களோ, அப்பொழுது அந்த சப்தத்தைப் பார்ப்பதனால் அவருடைய உள்ளத்தின் இரகசியத்தை அறிந்து கொள்ள முடியாது. உள்ளத்தின் இரகசியத்தைப் புரிந்து கொள்வதன் மூலம் அனைவரது உள்ளத்தின் மீதும் வெற்றி அடைய முடியும். உள்ளத்தின் இரகசியத்தைப் புரிந்து கொள்வதற்கு உள்நோக்கு முகம் வேண்டும், எந்த அளவு இரகசியங்களைப் புரிந்து கொள்வீர்களோ, அந்த அளவு அனைவரையும் திருப்திப்படுத்த முடியும். எந்த அளவு திருப்திப்படுத்துவீர்களோ, அந்த அளவு இரகசியத்தையும் புரிந்து கொள்வீர்கள். அப்பொழுது வெற்றியாளர்களாக ஆகமுடியும்.

சரளத்தன்மையின் அடையாளம் எது? யார் சுயம் சரளத் தன்மையுடன் இருக்கிறார்களோ, அவர்கள் மற்றவர்களைக் கூட சரளத்தன்மை உடையவர்களாக மாற்ற முடியும். சரளத்தன்மை என்றால் எந்த விஷயத்தைக் கேட்டீர்களோ, பார்த்தீர்களோ, செய்தீர்களோ அது சாரயுக்தாக (சாரம் நிறைந்ததாக) இருக்க வேண்டும்.மேலும், சாரத்தைதான் எடுக்க வேண்டும். மேலும்.தான் எந்த விஷயம் அல்லது கர்மம் செய்யும்பொழுதும் அதிலும் கூட சாரம் நிரம்பியதாக இருக்க வேண்டும். அதனால் முயற்சி கூட சரளமாகிவிடும். மேலும், சரளமான முயற்சிகள் மற்றவர்களைக் கூட சரளமான முயற்சியாளர்களாக மாற்றி விடுவார்கள். சரள முயற்சிகள் அனைத்து விஷயங்களிலும் ஆல்ரவுண்டராக இருப்பார்கள். எந்த விஷயத்திலும் குறை தென்படாது. எந்த விஷயத்திலும் தைரியம் குறைந்து விடாது. இதை இப்பொழுது செய்ய இயலாது என்ற வார்த்தை அவர்கள் வாயிலிருந்து வெளிப்படாது. இந்த ஒரு முக்கியமான பயிற்சியை நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வருவதன் மூலம் எல்லா விஷயங்களிலும் முன் உதாரணமானவர்களாக ஆகமுடியும். எல்லா விஷயங்களிலும் முன் உதாரணமானவர்களாக ஆவதனால் மிகுந்த மதிப்புடன் தேர்ச்சி அடைய முடியும். எப்பொழுதாவது ஏதாவது விஷயத்தில் பயிற்சி இல்லை என்று சொல்கிறீர்கள். ஆல்ரவுண்டர் ஆவதென்பது வேறு விஷயம், இதுவோ வருமானம் ஆகி விட்டது. ஆல்ரவுண்டு முன் உதாரணம் ஆவதென்பது வேறு விஷயம். ஒவ்வொரு விஷயத்திலும் அடியை முன்னால் வைப்பது, தன் மூலம்

அனைவருக்குள்ளும் வருமானத்தின் உற்சாகத்தை ஏற்படுத்துவது இதுதான் ஆல்ரவுண்டு முன் உதாரணம் ஆவதுதாகும்.

உணர்ச்சிப்பூர்வமாக அதிகம் இருக்கிறீர்களா? அல்லது சாரத்தில் இருக்கிறீர்களா? உணர்ச்சிப்பூர்வமாக இருப்பவர்கள் இவ்வளவு வெற்றியாளர்களாக ஆக முடியாது. சாரத்தில் இருப்பவர்களுடைய ஆன்மிக நறுமணம் வெகுநேரம் நீடிக்கிறது. அவர்களுடைய பிரபாவமும் சதா காலத்திற்கும் இருக்கிறது. வெறும் உணர்ச்சிப்பூர்வமாக இருப்பவர்களுடைய பிரபாவமும் இருக்கத்தான் செய்கிறது, ஆனால் எல்லா நேரமும் இருப்ப தில்லை. எல்லோருடைய கழுத்திலும் வெற்றிமாலை உள்ளது, ஆனால் வரிசைக்கிரமமாக உள்ளது. சிலருடைய கழுத்தில் பெரியதாகவும், சிலருடைய கழுத்தில் சிறியதாகவும் இருக்கிறது. இதனுடைய காரணம் என்ன? எந்த அளவு ஆரம்பத்திலிருந்து மனதில், பேச்சில், செயலில் வரக்கூடிய பிரச்சனைகள் அல்லது தடைகளின் மீது வெற்றி அடைந்திருக்கிறார்களோ, அதற்கேற்ற வாறு ஒவ்வொருவருக்கும் வெற்றி மாலை அமைகிறது. ஆரம்பத்திலிருந்து பார்த்தால், என்னுடைய வெற்றிமாலை எவ்வளவு பெரியதாக இருக்கிறது என்பது தெரிய வரும். இன்றைய நாட்களில் சிறிய மாலையையும் தயாரிக்கிறார்கள். பெரிய மாலையையும் தயாரிக்கிறார்கள். யார் எவ்வளவுக் கெவ்வளவு வெற்றி அடைகிறார்களோ அந்த அளவுதான் பெரிய வெற்றி மாலையை அணிகிறார்கள். இந்த சதுர்புஜ் (நான்கு கரங்களை உடையவர்) சித்திரத்தில் உள்ள வெற்றி மாலையின் அடையாளமானது ஒருவருக்கானது மட்டுமல்ல, இது வெற்றி இரத்தினங்களுடைய அடையாளம் ஆகும். அதனால். ஒவ்வொருவரும் அவரவர் வெற்றிமாலையினுடைய சாட்சாத் காரத்தை செய்ய முடியும். எந்த அளவு வெற்றிமாலை அணிவதற்கு அதிகாரி ஆகிறீர்களோ, அந்த அளவுதான் கிரீடமும், சிம்மாசனமும் பிராப்தமாகும். ஆகையால், இந்த சமயத்தின் வெற்றிமாலைக்கு ஏற்றவாறு உங்களுடைய எதிர்கால சிம்மாசனத்தையும் புரிந்து கொள்ள முடியும். இங்கேயே இப்பொழுது அனைவருக்கும் சாட்சாத்காரம் ஏற்பட வேண்டும். சாட்சாத்காரம் வெறும் திருஷ்டியினால் அல்ல, பிரத்யட்சமாகவும் ஏற்பட வேண்டும். பிரத்யட்சமான (வெளிப்படையான) சான்று கூட சாட்சாத்காரம் ஆகும். ஆகையால், வெற்றிமாலை எவ்வளவு பெரியதாக உள்ளது என்று கேட்கப்படுகிறது. ஒன்று சேவையினுடைய பலம், இரண்டாவது

சிநேகத்தினுடைய பலம், இந்த கூடுதல் பலம் கிடைப்பதன் காரணமாக விசேஷமான சேவை நடந்து கொண்டு இருக்கிறது. யார் தன்னுடைய சரீரத்தின் கணக்கின்படி சக்தியற்று இருப்பதாகப் நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் இந்த பலத்தின் காரணமாக வேறு யாரோ தன்னை இயக்கிக் கொண்டிருப்பதாக அனுபவம் செய்கிறார்கள். நிமித்தமாக ஆகுவதனால் அதிகமான, கூடுதலான பலம் கிடைக்கிறது. எவ்வாறு சாகார ரூபத்தில் நிமித்த மாவதனால் கூடுதலான பலம் இருந்ததோ, அது போன்றே இதிலும் இருக்கிறது. அதீந்திரிய சுகத்தினுடைய அனுபவத் தினால் என்ன ஏற்படுகிறது? அதீந்திரிய சுகம் கிடைப்பதால் இந்திரிய சுகத்தின் ஈர்ப்பு முடிந்து விடுகிறது. துக்கம் கொடுக்கக் கூடிய பொருள் எது? இந்திரியங்களுடைய கவர்ச்சி, சம்பந்தங் களின் கவர்ச்சி அல்லது ஏதாவது ஒரு கர்மேந்திரியத்தின் வசம் ஆவதால் விதவிதமான கவர்ச்சி ஏற்படுகிறது. அது அதீந்திரிய சுகம் மற்றும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதில் பந்தனத்தை ஏற்படுத்துகிறது. ஒரு இடத்தில் புத்தியை நிலைநிறுத்துவதால் 'ஏக்ரஸ் ஸ்திதி' ஏற்படுகிறது. ஆகையால், எப்பொழுதும் புத்தியை ஒரு இடத்தில் நிலை நிறுத்துவதற்கான என்ன யுக்தி கிடைத்துள்ளதோ, அதை நினைவில் வையுங்கள். அதை அசைய விடாதீர்கள். அசைவது என்றால் குழப்பத்தை உருவாக்குவதாகும். சமயம் கூட மிகவும் வீணாகிவிடுகிறது. போரிடுவதிலேயே நிறைய நேரம் சென்று விடுகிறது. சக்தி களினுடைய சித்திரத்தில் சக்திகளுடைய அடையாளமாக என்ன காண்பிக்கிறார்கள்? ஒன்று அவர்கள் அலங்காரியாக இருக்கிறார் கள், இரண்டாவது சம்ஹாரிகளாகவும் (அழிப்பவர்களாகவும்) இருக்கிறார்கள். அலங்காரங்கள் எதற்காக இருக்கின்றன? சம்ஹாரம் செய்வதற்காக. இவ்வாறாக அலங்காரி, சம்ஹார மூர்த்தியாக தங்களைப் புரிந்து கொண்டு நடந்து கொள்ளுங்கள். நான் சம்ஹாரமூர்த்தி (தீயதை அழிக்கக்கூடியவன்) என்ற நினைவு இருந்ததென்றால் அவர்கள் ஒருபொழுதும் மாயையின் வசமாகமாட்டார்கள். அனைத்து அலங்காரங்களையும் சரியான முறையில் தாரணை செய்திருக்கிறோமா என்று எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். ஏதாவது ஒரு அலங்காரம் ஒருவேளை தாரணை ஆகவில்லை என்றால் வெற்றியாளராக ஆகமுடியாது. சுமங்கலிகள் எப்பொழுதும் சுமங்கலித்தன்மையின் அடையாளத்தை நிலையாக வைத்திருக்கிறார்கள். தன்னுடைய ஸ்தூல அலங்காரம் குறைகிறது. மேலும் கீழுமாக ஆகிறது என்றால் அதை

அடிக்கடி சரி செய்து கொள்கிறார்கள். ஆகையால், ஏதாவது ஒரு அலங்காரம் கலைந்து விட்டால். அதை சரி செய்ய வேண்டும். யார் மிகப் பழமையானவர்களோ. அவர்கள் முழுமையான உரிமை பெற்றுச் செல்ல வேண்டும். உரிமை எடுப்பதற்காகவே தனக்குத்தானே முத்திரை இடுவதற் காக மதுபனுக்கு வருகிறீர்கள். இறுதி அச்சு அல்லது முத்திரை வைப்பதற்கான இடம் மதுபன் ஆகும். அஞ்சலகத்தில் இறுதி முத்திரை வைக்கப்பட்ட பின்னரே கடிதம் வெளியில் செல்கிறது. சொர்க்கத்தின் அதிகாரி ஆவதற்கான முத்திரை இடுவதற்கான இடம் மதுபன் ஆகும். மதுவனத்திற்கு வருவது என்றால் கோடிமடங்கு வருமானம் ஈட்டுவதாகும். யார் விக்ன விநாசகராக (தடைகளை அழிப்பவராக) இருக்கிறாரோ, அவர் விக்னத்தினால் தோல்வியடைய மாட்டார். தன்னை இணைந்திருப்பதாகப் புரிந்து கொள்ளுங்கள். பாப்தாதா ஒவ்வொரு நொடியிலும் துணையாக இருக்கின்றார். பிறவி எடுத்ததிலிருந்து துணையாக இருக்கின்றார். இங்கே பிறப்பும் இந்த சமயத்தில் கிடைக்கின்றது, துணையும் இந்த சமயத்தில் கிடைக்கின்றது. லௌகீகத்தில் பிறவி முதலிலும், துணை பின்னரும் கிடைக்கிறது. இங்கு பிறவி எடுத்தவுடனேயே துணையும் கிடைக்கிறது.

பம்பாய் நகரில் இருந்து கொண்டு பாதுகாப்புடன் இருக்கிறீர்களா? யார் சுயம் பாதுகாப்புடன் இல்லையோ, அவர் மற்றவர்கள் முன்பு சான்றாக (உதாரணம்) ஆக முடியாது. தாரணை செய்பவர்களின் வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்பு சான்றாக ஆகிறது. யார் சான்றாக ஆகிறார்கள்? யார் பாதுகாப்பாக உள்ளனரோ அவர்கள்தான்! மும்பையில் யாருக்கு அதிகமாக பூஜை செய்யப்படுகிறது? கணேசருக்கு. அவரை விக்ன விநாசகர் என்று கூறுகின்றனர். கணேசர் என்றால் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர், வித்யாபதி என்று பொருள். மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் ஒருபோதும் தோல்வியடைய முடியாது. ஏனெனில், ஞானத்தைத்தான் ஒளி சக்தி என்று கூறுகின்றனர். பிறகு இலட்சியத்தை அடைவது எளிதாகிவிடுகிறது. இலட்சியத்தை அடைவதற்கு லைட்-மைட் இரண்டும் தேவை. உங்களது தோற்றம் பாப்தாதாவை வெளிப்படுத்துவதாக ஆக வேண்டும். எந்த கர்மம் செய்தாலும் அந்த ஒவ்வொரு கர்மத்திலும் பாப்தாதாவின் குணம் வெளிப்பட வேண்டும். பாப்தாதாவின் எந்த முக்கிய குணத்தை வர்ணனை செய்கிறீர்கள்? ஞானம். அன்பு, ஆனந்தம், சுகம், சாந்தி ஆகியவற்றின் கடல். எந்த கர்மம் செய்தாலும், அது ஞானம்

நிறைந்ததாக இருக்க வேண்டும். ஒவ்வொரு செயலின் மூலம் அனைத்து ஆத்மாக்களுக்கும் சுகம்-சாந்தி, ஆனந்தத்தின் அனுபவம் ஏற்பட வேண்டும். இதுதான் பாப்-சமான் குணங்கள் நிறைந்தவர் ஆவதாகும். நீங்கள் புரிய வைக்க வேண்டிய அவசியமில்லை. உங்களது கர்மத்தைப் பார்த்து அவர்களது உள்ளத்தில், இவர்கள் யாருடைய குழந்தைகள், யார் மூலம் இவ்வாறு ஆனார்கள் என்ற எண்ணம் எழும். மாணவர் கூட நன்றாகப் படித்து, உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) பெறுபவரானால், அவர்களைப் பார்க்கும்பொழுது ஆசிரியரின் நினைவு வருகிறது. ஆகையால், மாணாக்கன் ஆசிரியரை வெளிப்படுத்துகிறான் என்ற பழமொழி யும் உள்ளது. இது கூட சேவை செய்வதற்கான வழியாகும். அலௌகீக வாழ்க்கையில் ஒவ்வொரு கர்மமும் சேவையின் நிமித்தமாக இருக்க வேண்டும். எந்த அளவு சேவை செய்வீர் களோ, அந்தளவு எதிர்காலம் உயர்ந்ததாக இருக்கும். எவ்வளவு தன்னை சேவையில் ஈடுபடுத்துவீர்களோ, அவ்வளவு மாயையினுடைய போரிலிருந்து தப்பித்து விடுவீர்கள். புத்தியை சுறுசுறுப்பாக வைத்துக் கொண்டால் யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள். ஏக்ரஸ் ஸ்திதி கூட சங்கமயுகத்தின் வரதானம் ஆகும். ஒருவர் மீது கவனம், ஒருவருடைய சேவையில் யார் வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் வரதானத் தைப் பெறலாம். எவ்வாறு ஒருவர் போதையில் இருக்கும் பொழுது வேறு எதையும் நினைக்கமாட்டாரோ, அது போன்றே ஈஸ்வரிய போதையில் இருப்பதால் இந்த உலகினுடைய கவர்ச்சியிலிருந்து விடுபட்டு இருப்பீர்கள்.

(பந்தனத்தில் இருக்கும் ஒருவர் -பாபா நாங்கள் பந்தனத்தில் இருக்கிறோம். நாங்கள் சேவை செய்யவில்லை என்ற சங்கல்பம் எழுகிறது என்று கேட்டார்). பந்தனத்தில் இருப்பவர்கள் சுதந்திரமாக இருப்பவர்களை விட நன்றாக இருக்கிறார்கள். சுதந்திரமாக இருப்பவர்கள் அலட்சியமாக இருக்கிறார்கள். பந்தனமுள்ளவரின் ஈடுபாடு நன்றாக இருக்கிறது. நினைவை சக்திசாலியாக ஆக்குங்கள். நினைவு குறைந்தால் சக்தி கிடைக்காது. நினைவில் இருக்கும்பொழுது நான் சேவை செய்வதில்லை என்று வீணானாக எண்ணாதீர்கள். அந்த நேரத்திலும் நினைவிலிருந்தால் வருமானம் சேமிப்பாகும். இவ்வாறு வீணாக நினைப்பதால் நினைவினுடைய சக்தி குறைகிறது. பந்தனத்திலிருந்து விடுதலை அடைவதற்கு தன்னுடைய நடவடிக்கையை

மாற்றிக் கொள்ளுங்கள், அப்பொழுது இவர்கள் மாறி விட்டார்கள் என்று இல்லறவாசிகள் பார்ப்பார்கள். கடினமான சம்ஸ்காரம் எது உள்ளதோ, அதை மாற்றி விடுங்கள். அது தன்னுடைய காரியத்தைச் செய்யட்டும். நீங்கள் உங்களது காரியத்தைச் செய்யுங்கள். அதனுடைய வேலையைப் பார்த்து பயப்படாதீர்கள். எந்த அளவு அது தமது காரியத்தை தீவிரமாகச் செய்துக் கொண்டிருக்கிறதோ, நீங்கள் உங்களுடைய வேலையைத் தீவிரமாகச் செய்யுங்கள். அது எவ்வாறு தனது காரியத்தை செய்து கொண்டு இருக்கிறதல்லவா, அதனுடைய இந்த குணத்தை எடுத்துக் கொண்டு நீங்களும் செய்யுங்கள். முழு சிருஷ்டியின் ஆத்மாக்களை ஒப்பிடும்பொழுது, எத்தனை ஆத்மாக்களுக்கு இந்த பாக்கியம் பிராப்தி ஆகியிருக்கிறது? ஆகவே, எவ்வளவு குஷி இருக்க வேண்டும்! குஷி கண்களில், நெற்றியில், உதட்டில் பிரகாசித்துக் கொண்டிருக்க வேண்டும். யார் மகிழ்ச்சி எனும் செல்வத்திற்கு அதிகாரியாக இருக்கிறாரோ. அவருடைய குழந்தைகள் நீங்கள்! அதனால் கஜானாவிற்கு அதிகாரிதானே! 5000-வருடங்களுக்கு முன்பும் வந்திருந்தோம் என்பது அனுபவமாகிறதா? நினைவு வருகிறதா? தெளிவான நினைவின் அடையாளம் என்ன? யாரையாவது சந்திக்கும் பொழுது இவர் தன்னுடையவர் என்ற அனுபவம் ஏற்படும் மற்றும் எந்த இடத்தைத் தேடிக் கொண்டிருந்தேனோ அந்த இடம்தான், அந்த இடத்திற்கே வந்து விட்டேன் என்பதே தெளிவான நினைவின் அடையாளம் ஆகும். எவ்வாறு ஏதாவது ஒரு பொருள் தேடிய பிறகு கிடைக்கிறதோ, அதே போன்று உண்மையான பரிவாரத்துடன் சந்தித்துக்கொண்டு இருக் கின்றோம் என்றும், இந்தப் பரிவாரம் தன்னுடையது என்றும் அனுபவம் ஆகும். இதைத்தான் தெளிவான அனுபவம் என்று சொல்லப்படுகிறது. இரண்டாவதாக, எந்த விஷயத்தைக் கேட்கிறோமோ, அது அவர்களுக்கு சகஜமாகவும் தெளிவாகவும் புரியவரும். எவ்வாறு தூய்மையின் விஷயம் உலகத்தாருக்கு கடினமாக இருக்கிறது ஆனால், யார் கல்பத்திற்கு முன் உள்ளவர்களோ, அதிகாரிகளோ அவர்கள் தூய்மை நமது சுயதர்மம் என்பதைப் புரிந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு சகஜமாக இருக்கும். நீங்கள் ஏதாவது தெரிந்த அறிமுகமான மூர்த்திகளைப் பார்க்கும்பொழுது, இவை என்னுடையவை என்ற அனுபவம் ஏற்படுகிறது. எந்த அளவு நெருங்கிய சம்பந்தத்தில் வரக்கூடியவர்களோ, அவர்கள் தெளிவாக அனுபவம் செய்வார்கள். இம்மாதிரியான அனுபவி ஆத்மாக்களுக்கு கர்ம

பந்தனத்தைத் துண்டிப்பதற்குத் தாமதம் ஆகாது மற்றும் பொய்யான பொருளை விடுவது கடினமாக இருக்காது. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 22.01.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இதய சிம்மாசனதாரி ஆத்மாவின் அடையாளம்!

இன்று இந்த சபையை எந்த சபை என்று கூறலாம்? இந்த சபைக்கு என்ன பெயர் கொடுக்கலாம்? இந்த சபை பிரம்மாபாபாவின் புஜங்கள்; எனவே இந்த சபைக்கு பாப்தாதாவின் உதவியாளர்கள், நம்பிக்கைக்குரியவர்கள், பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரிகள், மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறுவோம். இத்தனை அனேக டைட்டில்கள் (பட்டங்கள்) இந்த குரூப்பின் வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் இருக்கிறது என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? யார் இதய சிம்மாசனதாரியாக இருப்பார்களோ அவர்களுடைய அடையாளம் என்னவாக இருக்கும்? டீச்சர்ஸ் இருக்கிறார்கள், எனவே கேள்விப் பதிலை கேட்டுக் கொண்டிருக்கிறோம். சிம்மாசனதாரிகளின் அடையாளம் என்ன? யார் சிம்மாசனதாரிகளாக இருக்கிறார்களோ அவர்களுடைய அடையாளமானது ஒன்று எப்பொழுதும் யாராவது ஆசனத்தில் அமருகிறார்கள் என்றால் திலகம் மற்றும் கிரீடம் இரண்டும் ஆசனதாரியின் அடையாளமாக இருக்கும். இதே போல் இதய சிம்மாசனத்தில் அமரும் ஆத்மாக்களின் அடையாளங்களும் அவர்களுடைய நெற்றியில் எப்பொழுதும் அழியாத ஆத்மாவின் நிலைக்கான திலகம் ஜொலித்துக் கொண்டிருப்பதாக தூரத்திலிருந்தே பார்க்கத் தென்படும். இரண்டாவது விஷயம், அனைத்து ஆத்மாக்களின் நன்மைக்கான சுபபாவனை அவர்களுடைய கண்களில், வாயில், முகத்தில் தென்படும். முகத்தில் இவை அனைத்தும் தெளிவாகத் தென்படுவது இதுதான் அடையாளமாகும். மூன்றாவது விஷயம், அவருடைய எண்ணம், சொல் மற்றும் செயல் தந்தைக்குச் சமமானதாக இருக்கும். நான்காவது விஷயம், எந்த ஆத்மாக்களுக்காக சேவை செய்கிறார்களோ அந்த ஆத்மாக்களில் அன்பு, சகயோகம் மற்றும் சக்தி ஆகிய மூன்று குணங்களையும் தாரணை செய்விப்பதற்கான சக்தி அவரிடம் இருக்கும். இந்த நான்கு விஷயங்கள் அவருடைய

அடையாளங்கள் ஆகும். இப்பொழுது நீங்கள் இந்த நான்கு அடையாளங்களும் எவ்வளவு தூரம் தென்படுகிறது என்று உங்களுடைய ரிசல்ட்டை சோதனை செய்யுங்கள். ஒருவர்தான் எப்படி இருக்கிறாரோ அப்படியே தானக்கு சமமாக ஆக்குவார். இன்று டீச்சர்களின் சபை, எனவே இதைக் கூறிக் கொண்டிருக்கிறோம், யாருக்கு சேவை செய்கிறீர்களோ மற்றும் செய்து கொண்டிருக்கிறீர்களோ அவர்களில் இந்த அனைத்து விஷயங்களையும் நிரப்ப வேண்டும். இதுவரை என்ன ரிசல்ட்? இருக்கிறது? ஒவ்வொருவரும் தன்னுடைய ரிசல்ட்டைப் பார்க்கத்தான் செய்கிறார். அதிகமாக என்ன தென்படுகிறது? சிலரிடம் அன்பாக இருப்பதின் விசேஷம் இருக்கிறது, சிலரிடம் உதவி செய்வதின் விசேஷம் இருக்கிறது ஆனால் சக்தி ரூபத்தின் தாரணை குறைவாக இருக்கிறது. இதனுடைய அடையாளமாக என்ன தென்படுகிறது என்று தெரியுமா? சக்தியின் குறைவின் அடையாளம் என்ன? பகுத்தறியும் சக்தியின் குறைவின் அடையாளம் என்ன? சேவையில் வெற்றி கிடைப்பதில்லை என்று ஒரு விஷயத்தையோ கூறினீர்கள். அவர்களுடைய தெளிவான அடையாளமாக இரண்டு வார்த்தைகளில் இதுதான் தென்படும் - அவர்களுடைய ஒவ்வொரு விஷயத்திலும் ஏன்?, என்ன?, எப்படி? என்ற கேள்விக்குறி அதிகமாக இருக்கும். டிராமாவின் முற்றுப்புள்ளி கொடுப்பது அவரைப் பொறுத்தவரை மிகக் கடினமானதாக இருக்கும். எனவே அவர் தானே ஏன், என்ன, எப்படி என்பதின் குழப்பத்தில் இருப்பார். இரண்டாவது விஷயம் அவர் ஒருபொழுதும் நெருக்கமான ஆத்மாவை உருவாக்க முடியாது. சம்மந்தத்தில் கொண்டு வருவார், ஆனால் நெருக்கமான சம்மந்தத்தில் கொண்டு வரமாட்டார். புரிந்ததா? பிராமண குலத்தின் என்னென்ன மரியாதைகள் இருக்கின்றனவோ அவை அனைத்து மரியாதைகளின் சொரூபமாக ஆக்க முடியாது. ஏனென்றால் தன்னில் சக்தி குறைவாக இருக்கும் காரணத்தினால் மற்றவர்களிலும் அனைத்து மரியாதைகளைக் கடைபிடிக்கும் அளவிற்கு அவ்வளவு சக்தியை கொண்டு வர முடியாது. ஏதாவது மரியாதைக்கு புறம்பாக நடந்து விடுவார்கள். அனைத்தையும் புரிந்து கொள்வார்கள், புரிந்து கொள்வதில் குறை இருக்காது. மரியாதைகளின் ஞானமும் முழுமையாக இருக்கும் ஆனால் மரியாதைப்பூர்வமாக நடந்து கொள்வதில் சக்தி குறைவாக இருக்கும். இந்தக் காரணத்தினால் யாருக்கு அவர்கள் சேவை செய்கிறார்களோ அவர்களிலும் சக்தி குறைவாக இருக்கும் காரணத்தினால் உயரமாய் தாண்டிச் செல்ல முடியாது. சம்ஸ்காரங்களை

அகற்றுவதில் மிகுந்த நேரத்தை வீணாக்குவார்கள். இப்பொழுது இந்த விஷயங்களினால் தன்னுடைய சொரூபத்தை சோதனை செய்யுங்கள். ஒரு மரம் மிக நல்ல மற்றும் இனிய பழம் தர முடியும் என்றால், அந்த மரத்தின் மேல் அனைத்து விஷயங்களின் கவனம் கொடுக்கப்படும்போதுதான். லத்தை உழுவதற்கான கவனம், விதை விதைப்பதற்கான, தண்ணீர் பாய்ச்சுவதற்கான அனைத்திற்குமான கவனம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதே போல் உயர்ந்த பழத்தை உருவாக்குவதற்காக சம்ஸ்காரத்தை அகற்றும் சக்தி நிலத்தை உழும் சக்தியாக இருக்கிறது. அதன் கூடவே விதை விதைப்பவர் அனைத்து விஷயங்களையும் பார்க்கிறார், அதே போல் பிறரை அன்பானவராகவும் உருவாக்கட்டும், உதவி செய்பவராகவும் உருவாக்கட்டும் மற்றும் சக்தி சொரூபத்தையும் உருவாக்கட்டும். ஒருவேளை ஏதாவது ஒன்றின் குறை இருந்து விட்டால் கூட என்னவாகும்? எப்படி ஆரம்பத்தில் கூறினோமோ அதே போல் இதய சிம்மாசனதாரி ஆக முடியாது. எனவே டீச்சர்கள் ஒவ்வொருவரின் மீதும் இந்த கவனம் கொடுக்க வேண்டும்.

அடைய வேண்டிய லட்சியத்தைப் பற்றி நீங்கள் கூறும்பொழுது என்ன கூறுகிறீர்கள்? தேவதையாக வேண்டும் என்ற இந்த இலட்சியத்தையோ கொடுக்கிறீர்கள். தேவதைகளின் மகிமையாகிய சர்வ குண சம்பண்ணம் என்ற இந்த இலட்சியத்தை வைக்க வேண்டும். சர்வ குணத்தையும் ஒவ்வொரு ஆத்மாவில் நிரப்புவதற்கான முயற்சி செய்ய வேண்டும். எந்தவொரு ஆத்மாவும் எங்களுடைய பொறுப்பில் இருக்கும் ஆசிரியர் எங்களுக்கு இந்த விஷயத்தின் மேல் கவனத்தை இழுக்கவில்லை என்று புகார் கொடுக்காத அளவிற்கு ஆசிரியர்கள் நீங்கள் ஒவ்வொருவர் மீதும் கடுமையாக உழைக்க வேண்டும். அவர்கள் செய்கிறார்களோ இல்லையோ, அது அவர்களின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது ஆனால் நீங்கள் அனைவர் மீதும் கடுமையாக உழைக்க வேண்டும். இல்லை என்றால் இன்று வரையின் ரிசல்ட்டின் படி ஏதாவது ஒரு புகார் வந்து கொண்டுதான் இருக்கிறது. இது சேவையின் குறை ஆகும். எனவே அனைத்து விஷயங்களையும் அவர்களில் நிரப்புவதினால் அந்தப் பழமும் அந்த மாதிரி தகுதியானதாக ஆகும் என்று கூறினோம். எவ்வளவு பெரிய மனிதனதாக இருப்பாரோ அவர் எதிரில் எந்தப் பழத்தை வைப்போம்? என்று நீங்களே யோசியுங்கள். பெரியதாகவும் இருக்க வேண்டும், மேலும்

நல்லதாகவும் இருக்க வேண்டும். சாகார பாபாவிடம் கூட ஏதாவது ஒரு பொருளை கொண்டு வந்தீர்கள் என்றால் என்ன பார்த்தார்? இப்பொழுது பாப்தாதாவின் எதிரில் கூட அந்த மாதிரி பழத்தை தயார் செய்யும்போது அதைத்தான் எதிரில் கொண்டு வர முடியும். எனவே இந்த கவனம் வைக்க வேண்டும். எவ்வளவு ஒருவர்தான் எவ்வளவு குணங்களினால் நிரம்பியிருக்கிறாரோ அந்த அளவே மற்றவர்களிலும் நிரப்ப முடியும். படைப்பவரின் முகம் ஒவ்வொரு படைப்பின் மூலம் தென்படுகிறது. சேவை உங்களை பொறுத்தவரை ஒரு கண்ணாடி ஆகும். அந்தக் கண்ணாடி மூலம் உங்களுடைய உள் நிலையைப் பார்க்க முடியும். எப்படி என்றால் கண்ணாடியில் உங்களுடைய முகம் சுலபமாக மற்றும் தெளிவாகத் தென்படுகிறது. அதே போல் தன்னுடைய சேவையின் கண்ணாடி மூலமாக தன்னுடைய நடவடிக்கைகளை (முகத்தை அல்ல) சுலபமாக தெளிவாக காண முடிகிறது. அது முகத்திற்கான கண்ணாடி இது நடத்தைக்கான கண்ணாடி ஒவ்வொருவருக்கும் தன்னுடைய காட்சி (சாட்சாத்காரம்) தெளிவாகத் தென்படுகிறதா? தென்பட வேண்டும். ஒருவேளை இதுவரை தெளிவான காட்சி (நன்கு புரிந்த கொள்தல்) தென்படவில்லை என்றால் தன்னை சம்பூர்ணமாக எப்படி ஆக்க முடியும். எப்பொழுது தன்னுடைய பலஹீனங்கள் தெரிய வருமோ அப்பொழுதுதான் சக்தி நிரப்ப முடியும். எனவே ஒருவேளை தன்னுடைய சாட்சாத்காரத்தில் ஏதாவது தெளிவு இல்லை என்றால் பொறுப்பிலிருக்கும் சகோதரி மூலமாக உதவியை எடுத்து தன்னுடைய தெளிவான சாட்சாத்காரம் செய்வதற்கான முயற்சியை அவசியம் செய்ய வேண்டும். இது பாப்தாதாவின் வேலை இல்லை. பாப்தாதாவின் வேலையோ இஷாரா (சைகை) கொடுப்பது.

டீச்சர்களின் ஃபீச்சர்ஸ் (features லட்சணங்கள்) எப்படி இருக்க வேண்டும்? டீச்சர்களுக்கு தன்னுடைய ஃபரிஷ்தா நிலையின் ஃபீயூச்சர் மூலமாக சேவை செய்ய வேண்டும். இது என்னுடைய இயல்பு என்று இந்த வார்த்தை டீச்சர்கள் மூலமாக வெளிவரக்கூடாது. இப்படி சொல்வது சக்தியற்ற நிலையின் அடையாளமாகும். புருஷார்த்தம் (முயற்சி செய்வது) என்ற வார்த்தை புருஷ் அர்த் அதாவது ஆத்மாவிற்காக என்ற வார்த்தையினால் உபயோகிப்பதில்லை ஆனால் முயற்சி செய்வது என்ற வார்த்தை முயற்சி செய்வதிலிருந்து விடுவிப்பதற்கான சாதனமாக ஆகி விட்டது. எனவே உங்களுடைய வார்த்தை படைப்பு மூலமாகவும் உங்கள்

எதிரில் வருகிறது. எப்படி ஏதாவது ஒரு கோபுரத்தில் சப்தம் செய்தால் அது மீண்டும் உங்களிடமே வந்து விடுகிறது. எனவே தன்னுடைய எண்ணங்கள் மேல் கூட அந்த அளவு கவனம் வைக்க வேண்டும். இன்றைய நாட்களில் சொல்வதை மாணவர்கள் கேட்பது இல்லை என்று ஆங்காங்கிருந்து செய்திகள் வருகின்றன. கடுமையாக உழைக்கிறார்கள் ஆனால் முன்னேற்றம் ஆவதில்லை. அங்கேயே நிற்கிறார்கள், இந்த மாதிரியான ரிசல்ட் ஏன்? இது கூட தன்னுடைய நிலையின் பிரதிபலனாகும். ஏனென்றால் மாணவர்கள் கூட முயற்சி செய்து கொண்டிருக்கும்போது பொறுப்பிலிருக்கும் டீச்சர்களின் பலஹீனங்களைத் தெரிந்து அதன் லாபத்தை தனக்காக எடுத்துக் கொள்கிறார்கள். நல்லது.

**வரதானம்: தூய்மையின் இரகசியத்தைத் தெரிந்து சுகம், சாந்தியில் நிரம்பியவராக ஆகக் கூடிய மஹான் ஆத்மா ஆகுக!**

தூய்மையின் சக்தியின் மஹான் தன்மையை தெரிந்து தூய்மையான அதாவது பூஜைக்குரிய தேவ ஆத்மாக்களாக இப்பொழுதே ஆகுங்கள். கடைசியில் ஆகி விடுவோம் என்று அப்படி வேண்டாம். வெகு காலத்து சேமிக்கப்பட்ட சக்தி கடைசியில் காரியத்திற்கு உதவும். தூய்மையாவது ஒன்றும் சாதாரண விஷயம் இல்லை. பிரம்மச்சாரியாக இருக்கிறார்கள், தூய்மையாகி விட்டார்கள் . ஆனால் தூய்மை தாயாகும். எனவே எண்ணத்தினாலோ, உள் உணர்வினாலோ, வாயுமண்டலத்தினாலோ, வார்த்தைகளினாலோ, நெருக்கத்தில் வருவதினாலோ, சுகம் சாந்தியின் தாய் ஆவது இதைத்தான் மஹான் ஆத்மா என்று கூறுவது.

**சுலோகன்: உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து அனைத்து ஆத்மாக்களுக்கும் இரக்கத்தின் திருஷ்டி கொடுங்கள், எண்ண அதிர்வலைகளை பரப்புங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.01.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பொறுப்பை எடுத்துக் கொள்வதினால் லாபங்கள்!

குழந்தைகள் நீங்கள் உலகை மாற்றக்கூடிய உலகின் ஆதாரமூர்த்தி ஆவீர்கள். நன்மை செய்பவர் களும்தான். மேலும் கூடவே உலகின் எதிரில் உதாரணமாக ஆகக்கூடியவர்களும்தான். யார் ஆதார மூர்த்தியாக இருக்கிறாரோ அவர் மேல்தான் அனைத்து பொறுப்புகளும் இருக்கிறது. இப்பொழுது உங்களுடைய ஒவ்வொரு அடியின் பின்னால் அனேகரின் அடியை எடுத்து வைப்பதற்கான பொறுப்பு இருக்கிறது. முதலில் சாகார பாபா ஃபாலோ ஃபாதரின் ரூபத்தில் எதிரில் இருந்தார். இப்பொழுது நீங்கள் அந்த பொறுப்பிலிருக்கும் மூர்த்திகள் ஆவீர்கள். எனவே எப்படி எந்த ரூபத்தில் எங்கு நாம் அடியெடுத்து வைப்போமோ அதே போல் அனைத்து ஆத்மாக்களும் நம் பின்னால் பின்பற்றுவார்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். இந்தப் பொறுப்பு இருக்கிறது. அனைவரையும் முன்னேற்றம் செய்பவர் ஆன காரணத்தினால் அனைத்து ஆத்மாக்களின் ஆசீர்வாதம் கிடைக்கிறது. அதனால் லேசான நிலையும் வந்து விடுகிறது உதவியும் கிடைக்கிறது. அதன் காரணமாக பொறுப்பு லேசாகி விடுகிறது. பெரிய காரியமாக இருந்தபோதிலும் யாரோ செய்வித்துக் கொண்டிருக்கிறார் என்று அப்படி அனுபவம் செய்வீர்கள். இந்தப் பொறுப்பு களைப்பை இன்னும் விலக்கக் கூடியது. ஓய்வாக இருப்பது மனதிற்கு பிடிப்பதே இல்லை. பொறுப்பான நிலையை உருவாக்குவதற்கு மிகுந்த உதவி செய்கிறது. மகாரதி குழந்தைகளை பாப்தாதா பார்க்கும்பொழுது அனைவரின் தற்சமய சொரூபம் மற்றும் இதே ஜென்மத்தின் சொரூபம் மேலும் அடுத்த ஜென்மத்தின் எதிர்கால சொரூபம் மூன்றும் எதிரில் வருகிறது. இந்த மாதிரி நான் ஆகக்கூடியவர், நாம் கிரீடம் மற்றும் ஆசனதாரியாக ஆவோம் என்ற உணர்வு தெளிவான ரூபத்தில் உங்களுக்கு வருகிறது. வரும் நாட்களில் இதையும் அனுபவம் செய்வீர்கள். எப்படி சாகார பாபாவில் பிரத்யக்ஷமாக அனுபவம் செய்தீர்கள்தான் இல்லையா. கர்மாதீத் நிலையும் தெளிவாக இருந்தது.

மேலும் எதிர்கால சொரூபத்தின் நினைவும் தெளிவாக இருந்தது. எதிர்கால சம்ஸ்காரம் இந்த சொரூபத்தில் பிரத்யக்ஷமாக தென்பட்டது. அப்படி நீங்கள் அனைவரும் கூட இதோ இந்த உடலை விட்டோம் மற்றும் அது தயாராக இருக்கிறது என்று அனுபவம் செய்வீர்கள். புத்தி பலத்தின் மூலமாக இவ்வளவு தெளிவாக அனுபவம் ஆகும். இப்பொழுது நாளாக நாளாக தன்னுடைய சேவையினால், தன்னுடைய சகயோகம் செய்யும் மனநிலையினால் மற்றும் தன்னுடைய சம்ஸ்காரங்களை அகற்றும் சக்தியினால் தன்னுடைய கடைசி சொரூபம் மற்றும் எதிர்காலத்தின் சொரூபத்தையும் தெரிந்து கொள்வீர்கள். நெருக்க மானவர்கள் மற்றும் தூரத்தில் இருப்பவர்கள் தெளிவாகத் தென்படும் மாதிரியான நேரமும் வரும் என்று ஆரம்பத்தில் கூறியிருந்தோம் ஆனால் இப்பொழுது அந்த நேரம் நடந்து கொண்டிருக்கிறது. தெய்வீக குடும்பத்தின் ஆத்மாக்கள் யார் யார் நெருக்கமான இரத்தினங்கள் என்று புரிந்து கொள்ள முடியும். யாருக்கு எவ்வளவு நெருக்கத்தில் வர வேண்டுமோ அவர்கள் சூழ்நிலையின் அனுசாரம் கூட அவ்வளவு நெருக்கத்தில் வருவார்கள். யாருக்கு கொஞ்சம் தூரமாக இருக்க வேண்டும் என்றால் இடையில் சூழ்நிலையும் அதற்கு காரணமாகி விடும், விரும்பினால் கூட வர முடியாது. இந்த அனைத்து எதிர்காலத்து சாட்சாத்காரம் இப்பொழுது நடைமுறை சேவையில் நடந்து கொண்டிருக்கிறது. தன்னுடைய எதிர்காலத்தை தெரிந்து கொள்வது இப்பொழுது கடினம் இல்லை.

ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டு தனக்காக ஏதாவது விசேஷ புரோகிராம் வைக்க வேண்டும். எப்படி சேவையின் தொடக்கத்தில் மற்ற புரோகிராம் உருவாக்குகிறீர்களோ, அதே போல் காலையிலிருந்து இரவு வரை இடையிடையே எவ்வளவு மற்றும் எப்படி தன்னுடைய நினைவு யாத்திரையின் மேல் கவனம் வைப்பதற்காக புரோகிராம் வைக்க முடியும் என்ற இந்த டைரி எழுத வேண்டும். அமிர்தவேளையிலேயே முழு நாளின் நினைவின் திட்டம் போட வேண்டும். உதாரணத்திற்கு நீங்கள் ஏதாவது ஸ்தூலமான காரியம் ஆகியவற்றில் பிஸியாக இருக்கிறீர்கள் ஆனால் அதிலும் கூட கொஞ்ச நேரத்திற்காக நினைவில் இருப்பதற்கான நியமம் இருக்கட்டும். அந்த நேரம் மற்றவர்களுக்கும் இப்பொழுது இரண்டு மூன்று நிமிடங்கள் எங்களுடையது இந்தக் காரியத்திற்காக என்று நினைவூட்டுங்கள். நீங்களும் நினைவிலிருங்கள். எப்படி நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் போக்குவரத்தையும் நிறுத்தி விடுகிறார்கள்.

எவ்வளவுதான் அவசியமான வேலையாக இருந்தாலும், ஏதாவது நோயாளியை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதாக இருந்தாலும் நிறுத்தி விடுவார்கள். இதே போல் எவ்வளவு செய்ய முடியுமோ அந்தளவு தன்னுடைய டைம் டேபிள் (கால அட்டவணை) உருவாக்குங்கள். அப்பொழுது இவர்களுடைய இந்த நேரம் நினைவு செய்வதற்காக நிர்ணயம் செய்யப்பட்டது என்று மற்றவர்களும் பார்ப்பார்கள். மேலும் உங்களைப் பின்பற்றி நடப்பார்கள். எந்தக் காரியம் இருந்தாலும் அதை முன்னுக்குப் பின்னுக்கு வைத்து விட்டும் 2 அல்லது 4 விநாடிகள் நேரத்தை நினைவிலிருப்பதற்காக அவசியம் ஒதுக்குங்கள் அதனால் சூழ்நிலையிலும் முழுமையான பிரபாவம் இருக்கும். அனைவரும் ஒருவர் இன்னொருவரைப் பின்பற்றுவார்கள். புத்திக்கு ஓய்வும் கிடைக்கும் மேலும் சக்தியும் நிரம்பும் மேலும் சூழ்நிலைக்கு சகயோகம் கிடைக்கும். பிறகு ஒரு வித்தியாசமான நிலை தென்படும். எப்படி நீங்களும் கொஞ்ச காலம் சிவ பாபா நினைவிருக்கிறதா? என்று ஒருவர் இன்னொருவருக்கு நினைவூட்டினீர்கள். அதே போல் யாராவது வியக்த பாவத்தில் அதிகமாக இருக்கிறார் என்று பார்த்தீர்கள் என்றால் அவருக்கு எதுவும் சொல்லாமல் தன்னுடைய அவ்யக்த அமைதியான ரூபத்தை அந்த மாதிரி தாரணை செய்யுங்கள் அவரும் இஷாரா மூலமாகவே புரிந்து கொள்ளட்டும். பிறகு சூழ்நிலை கொஞ்சம் அவ்யக்தமாக இருக்கும். சாட்சாத்கார மூர்த்தி உங்களுடைய கடைசி நிலையாகும். எப்படி சாட்சாத் மூர்த்தி ஆவீர்களோ அதே போல்தான் சாட்சாத்கார மூர்த்தி ஆவீர்கள். எப்பொழுது அனைவரும் சாட்சாத் மூர்த்தி ஆகி விடு வார்களோ அனைவரின் சம்ஸ்காரமும் சாட்சாத் மூர்த்திக்குச் சமமாக ஆகி விடும். எவ்வளவிற்கு எவ்வளவு தன்னை சார்ஜ் செய்வீர்களோ அவ்வளவு இன்சார்ஜ் ஆனதின் காரியத்தை வெற்றிப்பூர்வமாக செய்ய முடியும். தன்னை பொறுப்பிலிருப்பவர் என்று உணர்ந்து அடிபெடுத்து வைக்க வேண்டும். ஏனென்றால் முழு உலகத்து ஆத்மாக்களின் பார்வை ஆத்மாக்கள் உங்கள் மேல் இருக்கிறது. எப்படி உங்கள் மூலமாக ஈஸ்வரிய அன்பு, உயர்ந்த ஞானம் மற்றும் உயர்ந்த நடத்தையின் காட்சிகள் கிடைக்கிறது. அதே போல் அவ்யக்த நிலையினுடைய தெளிவான காட்சியும் அந்த அளவே கிடைக்கட்டும். இவரோ நடமாடிக் கொண்டிருக்கும் பரிஷ்தா என்று யாரும் உணரும் அளவிற்கு அந்த மாதிரி திட்டத்தை உருவாக்க வேண்டும். எப்படி சாகார பாபா ரூபத்தில் பரிஷ்தா நிலையை அனுபவம் செய்தீர்கள்தான் இல்லையா. இவ்வளவு பெரிய பொறுப்பு இருந்தபோதிலும் ஆகாரி (ஒளி

வடிவமான உடல்) மற்றும் நிராகார (உடலற்ற) நிலையின் அனுபவத்தை செய்வித்துக் கொண்டே இருந்தார். உங்களுக்கும் கடைசி நிலையின் சொரூபம் தெளிவாக தென்பட வேண்டும். யாராவது எவ்வளவுதான் அமைதியின்றி நிம்மதி யின்றி கதறிக் கொண்டு உங்கள் எதிரில் வந்தாலும் உங்களுடைய ஒரு பார்வை, நினைவு மற்றும் உள்உணர்வின் சக்தி அவரை முற்றிலும் அமைதி படுத்திவிடட்டும், ஒருவர் எவ்வளவுதான் வியக்த பாவத்தில் (தேக உணர்வு) இருந்தாலும் உங்கள் எதிரில் வந்தவுடனேயே அவ்யக்த நிலையை அனுபவம் செய்யட்டும். உங்களுடைய பார்வை கிரணங்கள் மாதிரி காரியம் செய்யட்டும். இதுவரை உள்ள ரிசல்ட்டின் படி மாஸ்டர் சூரியனுக்குச் சமமாக ஞானத்தின் ஒளி கொடுக்கும் காரியத்தில் வெற்றி அடைந்திருக்கிறீர்கள் ஆனால் கிரணங்களின் சக்தியினால் ஒவ்வொரு ஆத்மாவின் சம்ஸ்காரம் என்ற கிருமிகளை அழிக்கும் காரியம் செய்ய வேண்டும். ஞான ஒளி கொடுப்பதில் தேர்ச்சி அடைந்து விட்டீர்கள், சக்தி கொடுக்கும் காரியம் இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது.

பாப்தாதாவிடம் நான்கு பட்டியல் இருக்கிறது 1) சேவைக்கு தகுதியானவர், 2) புத்திசாலிகள், 3) வெற்றியடைந்தவர்கள் மற்றும் 4) மதிப்புள்ளவர்கள். வெற்றி அடைபவர்களாக அனைவரும் இருப்பதில்லை, மதிப்புள்ளவர்களாகவும் அனைவரும் இருப்பதில்லை. சிலர் தன்னுடைய குணங்களினால், நடத்தையினால் மதிப்புள்ளவர்களாக ஆகி விடுகிறார்கள் ஆனால் சேவையின் திட்டுமிடுவதில் வெற்றி அடைவதில்லை. ஒவ்வொருவரும் தன்னுடைய சார்ட்டைத் தெரிந்து கொள்ள முடியும். என்னுடைய பெயர் எந்த பட்டியலில் இருக்கும் என்று பார்க்க வேண்டும். சிலருக்கு நான்கிலும் பெயர் இருக்கிறது. சிலருக்கு இரண்டு, சிலருக்கு மூன்று மற்றும் சிலருக்கு ஒன்றில் இருக்கிறது. திப்புள்ளவரின் முக்கியமான குணமாக அவருக்கு தனக்கே தன்னுடைய நேரத்தின், எண்ணத்தின் மற்றும் சேவையின் மதிப்பு இருக்கிறது. எனவே அவருடைய எண்ணம், வார்த்தை மற்றும் அவர் மூலமாக நடக்கும் செயல் ஆகியவற்றிற்கு இன்னும் மதிப்பு வைக்கிறார்கள் மற்றும் டிராமாபடி அவற்றின் மதிப்பு ஏற்பட்டு விடுகிறது. அனைவரும் அவரை மதிப்பான பார்வையில் பார்க்கிறார்கள். சேவைக்குத் தகுதியானவர் நம்பர்-1'ஆ அல்லது புத்திசாலி நம்பர்-1'ஆ? இருவருக்கும் அவரவர்களின் விசேஷத்தன்மை இருக்கிறது. புத்திசாலியின் திட்டமிடும் புத்தி

அதிகமாக இருக்கும் ஆனால் நடைமுறையில் கொண்டு வருவதற்கான விசேஷத்தன்மை குறைவாக இருக்கும். மேலும் சேவைக்குத் தகுதியானவர் குறைவாகத் திட்டமிடுகிறார் ஆனால் நடைமுறையில் வருவதற்கான விசேஷ குணம் அவரிடம் இருக்கிறது. சிலரிடம் புத்தியும் இருக்கிறது மற்றும் சேவை செய்வதற்கான குணமும் இருக்கிறது. இந்த இடத்தின் காரியத்தில் இருவருமே அவசியமாக இருக்கிறார்கள். அவருடைய எண்ணம், திட்டம் என்ன ஓடுகிறதோ அதனால் எதிர்காலம் உருவாகுகிறது, அவர் செய்யும் காரியத்தினால் உருவாகுகிறது. இவருடைய பிரபாவம் அதிகமாக இருக்கிறது மேலும் வெற்றி மூர்த்திக்கு அவ்யக்த நிலையின் ஆதாரத்தில் முடிவு வெளிவருகிறது. சிலர் திட்டமும் இடுகிறார்கள், நடைமுறையிலும் செய்கிறார்கள் ஆனால் வெற்றி குறைவாக இருக்கிறது. சேவைக்குத் தகுதியானவராக இருக்க முடியும் ஆனால் வெற்றி மூர்த்தியாக அனைவரும் ஆக முடியாது. சிலருக்கு டிராமாட்டி வெற்றியின் வரதானம் கிடைக்கப்பட்டிருப்பதாக இருக்கிறது. அவர்களுக்கு உழைப்பு குறைவாக செய்ய வேண்டியதாக இருக்கிறது. எளிதாக வெற்றி கிடைத்து விடுகிறது. இது டிராமாவில் ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கென்று பங்கு இருக்கிறது. நல்லது டீச்சர்களோ டீச்சர்களேதான். டீச்சர்களுக்கு நான் டீச்சர் ஆவதற்கு முன்பு மாணவியாக இருந்தேன் என்ற நினைவு எப்பொழுதும் இருக்க வேண்டும். மாணவி என்ற நினைவினால் படிப்பு ஞாபகம் இருக்கும். எப்பொழுது தானே படிப்பாரோ அப்பொழுதுதான் மற்றவர்களையும் படிப்பிக்க முடியும். மாணவ வாழ்க்கை இல்லாத காரணத்தினால் மற்றவர்களை மாணவராக ஆக்க முடியாது. சூழ்நிலையை மாற்றுவதற்காக தன்னை எப்பொழுதும் மாஸ்டர் சூரியன் என்று நினைக்க வேண்டும். சூரியனின் வேலை என்னவாக இருக்கிறது? ஒன்றோ வெளிச்சம் தருவது, இன்னொன்று கிருமிகளை அழிப்பது. அப்படி என்னுடைய நடத்தை என்ற கிரணங்களினால் இந்த இரண்டு காரியங்களும் நடந்து கொண்டிருக்கின்றன என்று எப்பொழுதும் நினைக்க வேண்டும். அனைத்து ஆத்மாக்களுக்கும் வெளிச்சமும் கிடைக்கட்டும், கிருமிகளும் அழிந்து விடட்டும். ஒருவேளை வெளிச்சம் கிடைக்கும், ஆனால் கிருமிகள் அழியவில்லை என்றால் என்னுடைய கிரணங்களில் சக்தி இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள். எப்படி வெயில் அதிக சூடாக இல்லை என்றால் கிருமிகள் அழிவதில்லை. என்னில் சக்தி குறைவாக இருக்கிறது என்றால் ஞான ஒளியை கொடுக்க முடியும் ஆனால் பழைய

சம்ஸ்காரங்கள் என்ற கிருமிகள் அழியாது. எவ்வளவு சக்திசாலியோ அவ்வளவு விரைவில் அழிந்து விடும். சக்தி குறைவாக இருக்கிறது என்றால் நேரமும் அதிகம் எடுக்கும். எனவே சக்தி நிறைந்தவராக ஆக வேண்டும். நான் எழுதப் படிக்க தெரியாதவள் என்று அப்படி நினைக்காதீர்கள். படைப்பின் ஞானத்தை படித்தாகி விட்டது என்றால் அதில் அனைத்தும் வந்து விடுகின்றன. நல்லது.

**வரதானம்: அலட்சியம் மற்றும் கவனத்தின் அபிமானத்தை விட்டுவிட்டு தந்தையின் உதவிக்குப் பாத்திரமாகக் கூடிய எளிதாக முயற்சி செய்பவர் ஆகுக!**

அனேக குழந்தைகள் தைரியம் வைப்பதற்குப் பதிலாக அலட்சியத்தின் காரணமாக நாமோ எப்பொழுதும் பாத்திரமானவர்கள்தான் என்ற அபிமானத்தில் வந்து விடுகிறார்கள். தந்தை எனக்கு உதவி செய்யவில்லை என்றால் யாருக்குச் செய்வார். இந்த அபிமானத்தின் காரணமாக தைரியத்தின் விதியை மறந்து விடுகிறார்கள். சிலருக்கு தன் மேல் கவனம் கொடுப்பதின் அபிமானமும் இருப்பதினால் உதவியிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடுகிறார்கள். நானோ அதிகமாக யோகா செய்து விட்டேன், ஞான யோக சொரூபமான ஆத்மாவாகவோ ஆகி விட்டேன், சேவையின் ராஜ்யம் உருவாகி விட்டது இந்த விதமான அபிமானத்தை விட்டு தைரியத்தின் ஆதாரத்தில் உதவிக்குப் பாத்திரமானவர்களாக ஆனீர்கள் என்றால் எளிதாக முயற்சி செய்பவர் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: வீணாக மற்றும் எதிர்மறையாக ஓடும் எண்ணங்களை மாற்றி, உலக நன்மைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.02.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கிரீடம், திலகம் மற்றும் ஆசனதாரி ஆகுவதற்கான விதி!

பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். ஏனென்றால் ஒவ்வொருவரையும் வரிசைக்கிரமமான கிரீடதாரி மற்றும் ஆசனதாரியாக பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் உங்களை கிரீடதாரி மற்றும் ஆசனதாரியாக பார்க்கிறீர்களா? எத்தனை விதமான கிரீடம் இருக்கிறது மற்றும் எத்தனை விதமான ஆசனம் இருக்கிறது? உங்களுக்கு எத்தனை கிரீடங்கள் இருக்கின்றன? (21-ஜென்மங்களின் 21- கிரீடங்கள்). இப்பொழுது ஏதாவது கிரீடம் இருக்கிறதா? அல்லது 21-கிரீடங்கள் மட்டும் தென்படுகின்றனவா? இப்பொழுதைய கிரீடம்தான் அனேக கிரீடங்களை தாரணை செய்விக்கின்றது. அப்படியானால் இப்பொழுது உங்களை கிரீடம் அணிந்தவராக பார்க்கிறீர்களா?, எத்தனை கிரீடம் அணிந்திருக்கிறீர்கள்? (எண்ணற்றவை). பாண்டவ சேனைக்கு எத்தனை கிரீடங்கள் இருக்கின்றன? (இரண்டு). சக்திகளுக்கு அனேக கிரீடங்கள் மற்றும் பாண்டவர்களுக்கு இரண்டு தானா? ஒருவேளை இப்பொழுது கிரீடத்தை அணியவில்லை என்றால் எதிர்காலத்தின் கிரீடமும் எப்படி கிடைக்கும்? இந்த நேரம் அனைத்து குழந்தைகளையும் கிரீடம் அணிந்தவர்கள் மற்றும் ஆசனதாரிகளாக ஆக்குகின்றோம். ஒருவேளை ஆசனதாரியாக இருக்கிறார் என்றால் கிரீடம் அணிந்தவராகவும் இருப்பார். ஆசனங்கள் எத்தனை விதமானவை? இப்பொழுதோ இதய சிம்மாசனதாரியாகவும் மற்றும் அழியாத ஆசனதாரியாகவும் இருக்கவே இருக்கிறீர்கள். எப்படி அழியாத ஆசனதாரி என்றால் தூய்மையின் ஒளி கிரீடத்தையும் இப்பொழுதுதான் தாரணை செய்கிறீர்கள். மேலும் இதய சிம்மாசனதாரி ஆனதினால் சேவாதாரி ஆனதினால் பொறுப்பு என்ற கிரீடத்தை அணிகிறீர்கள். எனவே இப்பொழுது ஒவ்வொருவரும் இரண்டு ஆசனதாரியாகவும் மற்றும் இரண்டு கிரீடங்கள் அணிந்தவராகவும் எவ்வளவு நேரம் இருக்கிறீர்கள் என்று தன்னைத் தானே பாருங்கள்.

கிரீடமும் ஆசனமும் அனைவருக்கும் கிடைத்தோ இருக்கிறது ஆனால் சிலர் எவ்வளவு நேரம் கிரீடம் மற்றும் ஆசனதாரிகளாக ஆகிறார்கள் என்பது ஒவ்வொருவரின் அவரவர்களுடைய முயற்சி ஆகும். அனேகருக்கு ஸ்தூலமான கிரீடம் அணிவதின் அனுபவம் கூட குறைவாக இருக்கிறது. எனவே அடிக்கடி கழற்றி வைத்து விடுகிறார்கள் ஆனால் இந்த கிரீடம் மற்றும் ஆசனமோ ஒவ்வொரு நேரமும் கிரீடம் மற்றும் ஆசனதாரியாக ஆகும் அளவிற்கு சரளமானது மற்றும் சகஜமானது. எப்பொழுது யாராவது ஆசனதாரியாக இருக்கிறார் என்றால் ஆசனத்தில் இருப்பதினால் இராஜ்ய காரிய விவகாரங்கள் அவருடைய கட்டளைப்படி நடக்கிறது. ஒருவேளை ஆசனத்தை விட்டு விட்டார் என்றால் அதே ராஜ்ய காரிய விவகாரங்கள் அவருடைய கட்டளைப்படி நடப்பதில்லை. அப்படி நீங்கள் எப்பொழுது கிரீடம் மற்றும் ஆசனத்தை விட்டு விடுகிறீர்கள் என்றால் இந்த கர்ம இந்திரியங்கள் உங்களுடைய கட்டளைகளையும் கேட்பதில்லை. எப்பொழுது ஆசனத்தில் அமர்ந்திருப்பவராக இருக்கிறீர்கள் என்றால் இந்த கர்ம இந்திரியங்கள் -சொல்லுங்கள் ஐயா செய்கிறேன் என்று சொல்லும். எனவே இந்த கிரீடம் மற்றும் ஆசனத்தை ஒருபோதும் விட்டுவிடக்கூடாது என்ற இதே கவனத்தை எப்பொழுதும் வையுங்கள். தன்னுடைய கிரீடம் மற்றும் ஆசனதாரியின் முழுமையான சித்திரத்தை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். அதை நினைவு செய்வதினால் அனேக சித்திரங்கள் உருவாகிறது இல்லையா, அவை உருவாகாது. ஒரு நாளுக்குள்ளேயே ஒவ்வொருவரின் விதவிதமான ரூபம் மாறுவதன் சித்திரம் தென்படுகிறது. எனவே தன்னுடைய ஒரு சம்பூர்ண சித்திரத்தை எதிரில் வையுங்கள். கிரீடம் மற்றும் ஆசனதாரியாக ஆவதினால் இலட்சியம் மற்றும் போதை இயற்கையாகவே இருக்கும். ஏனென்றால் கிரீடம் மற்றும் ஆசனம், போதை மற்றும் இலட்சியத்தை நினைவூட்டுபவைகளேதான். அப்படி தன்னுடைய கிரீடம் மற்றும் ஆசனத்தை ஒருபோதும் விடாதீர்கள். எவ்வளவிற்கு எவ்வளவு இப்பொழுது கிரீடம் மற்றும் ஆசனம் தாரணை செய்வதின் அனுபவி மற்றும் பயிற்சி உடையவராக ஆவீர்களோ அவ்வளவே அங்கேயும் (சத்யுகத்தில்) இவ்வளவு காலம் கிரீடம் மற்றும் ஆசனத்தை தாரணை செய்வீர்கள். ஒருவேளை இப்பொழுது குறைந்த காலத்து கிரீடம் மற்றும் ஆசனதாரியாக ஆகிறீர்கள் என்றால் அங்கேயும் வெகு குறைந்த காலத்திற்கு கிரீடம் மற்றும் ஆசனத்தை பிராப்தி செய்ய முடியும். இப்பொழுதைய பயிற்சி ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய

எதிர்காலத்தை சாட்சாத்காரம் செய்வித்து கொண்டிருக்கிறது. இப்பொழுது கூட மற்றவர்களை கிரீடம் மற்றும் ஆசனதாரியாக பார்த்துக் கொண்டு மட்டும் குஷி அடைந்து கொண்டே இருந்தீர்கள் என்றால் அங்கேயும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியது வரும். எனவே நிரந்தரமாக கிரீடம் மற்றும் ஆசனதாரியாக ஆகுங்கள். இந்த மாதிரியான கிரீடம் மற்றும் ஆசனம் பின்பு எப்பொழுது கிடைக்கும்? இப்பொழுதுதான் கிடைக்கும். கல்பத்திற்கு பிறகு கூட இப்பொழுதுதான் கிடைக்கும். இப்பொழுது இல்லை என்றால் ஒருபொழுதும் இல்லை.

வீட்டில் அமர்ந்திருக்கும்போதே யாராவது கிரீடம் மற்றும் ஆசனம் கொடுப்பதற்காக வருகிறார்கள் என்றால் என்ன செய்வீர்கள்? தந்தையும் இப்பொழுது ஆத்மாக்களின் வீட்டில் விருந்தினர் ஆகி வந்திருக்கிறார் இல்லையா? வீட்டில் அமர்ந்திருக்கும்போதே கிரீடம் மற்றும் ஆசனத்தின் பரிசை கொடுப்பதற்காக வந்திருக்கிறார், கிரீடம் மற்றும் ஆசனத்தை விட்டு வீட்டு எங்கே சென்று விடுகிறீர்கள் தெரியுமா? மாயாவின் இருப்பிடம் ஏதாவது இருக்கிறதா? நீங்களும் சர்வ வியாபி என்று கூறுகிறீர்கள் மேலும் உங்களைத் தவிர மற்ற அனைத்து இடங்களிலும் இருக்கிறது. தன்னுடைய 63-ஜென்மங்களில் எத்தனை தடவை மாயாவிற்கு இருப்பிடம் கொடுத்திருந்திருப்பீர்கள்? அதனுடைய விளைவுகளையும் எத்தனை முறை பார்த்திருந்திருப்பீர்கள்? யார் வெகு காலத்து அனுபவியாக இருந்தும் அதே விஷயத்தை பேசுகிறார் என்றால் என்னவென்று கூறுவது? கிரீடம் மற்றும் ஆசனத்தை விட்டு விட்டு காட்டிற்குச் சென்று விடுகிறார்கள் என்று காண்பிக்கிறார்கள் இல்லையா? அதே போல் இங்கேயும் முட்களின் காட்டிற்கு சென்று விடுகிறீர்கள். ஆசனம் எங்கே மற்றும் முட்களின் காடு எங்கே? எது விருப்பம்? எப்படி பக்தர்கள் மற்றும் அலங்காரம் செய்பவர்கள் நியமப்படி குளித்து முழுகி தன்னுடைய நெற்றியில் அவசியம் திலகம் இடுவார்கள். அலங்காரத்தின் காரணமாகவும், பக்தியின் காரணமாகவும் மற்றும் சுமங்கல்யத்தின் காரணமாகவும் திலகம் இடுகிறார்கள். அதே போல் நீங்கள் அமிர்தவேளையில் தன்னை ஞான குளியல் செய்விக்கிறீர்கள், தன்னை ஞானத்தினால் அலங்கரிக்கிறீர்கள் அதே போல் அமிர்தவேளை இந்த நினைவு திலகத்தை கொடுக்க வேண்டும் ஆனால் அமிர்தவேளையில் இந்த நினைவு திலகத்தை கொடுக்க மறந்து விடுகிறீர்கள். ஒருவேளை யாராவது திலகம் இட்டுக் கொண்டாலும் பிறகு

அழித்தும் விடுகிறார்கள். அடிக்கடி நெற்றியைத் தொட்டு திலகத்தை அழிக்கும் பழக்கம் அனேகரிடம் இருக்கிறது. இப்பொழுது திலகம் இட்டுக் கொள்பவர்கள் உடனே அழித்தும் விடுவார்கள். இந்த விஷயமும் அதே போல்தான். சிலர் திலகம் இட மறந்து விடுகிறார்கள், சிலர் திலகம் இட்டுக் கொண்ட பிறகு அழித்தும் விடுவார்கள். அப்படி இட்டுக் கொள்வது மற்றும் அழித்து விடுவது என்ற இரண்டு காரியமும் நடந்து கொண்டு இருக்கிறது. அமிர்தவேளையில் இந்த நினைவினால் கொடுக்கப்பட்ட திலகத்தை எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்தீர்கள் என்றால் சுமங்கல்யம், அலங்காரம் மற்றும் யோகி நிலையின் அடையாளம் எப்பொழுதும் உங்களுடைய நெற்றியில் இருந்து தென்பட்டுக் கொண்டே இருக்கும். எப்படி பக்தர்களின் திலகத்தைப் பார்த்து இவர் பக்தர் என்று புரிந்து கொள்கிறார்கள். இதே போல் உங்களுடைய நினைவுத் திலகம் அந்தளவு தெளிவாக அனைவருக்கும் தென்படும் இவர் யோக சொரூபமான ஆத்மா என்று உடனே உணர்ந்து விடுவார்கள். எனவே திலகம், கிரீடம் மற்றும் ஆசனம் ஆகிய அனைத்தையும் நிலைத்திருக்கச் செய்யுங்கள். திலகத்தை அழிக்காதீர்கள். தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறுகிறீர்கள் என்றால் மாஸ்டர் சர்வ சக்திவானுக்கு கிரீடம் மற்றும் ஆசனம் தாரணை செய்வது கூட. தெரியாதா என்ன? காரியம் செய்து கொண்டே இரண்டு விஷயங்களை மட்டும் எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். பிறகு யாருடைய மனதில் வந்திருக்கும் எண்ணத்தையும் வாய் மூலம் சொல்லப்பட்ட விஷயத்தை எப்படி சுலபமாக புரிந்து கொள்கிறீர்களோ அந்தளவு புரிந்து கொள்ளும் அளவிற்கு பயிற்சி ஏற்பட்டு விடும். அதே போல் மனதின் எண்ணத்தை சுலபமாக பிடிக்க முடியும் ஆனால் எப்பொழுது சமநிலையின் அருகில் வருவீர்களோ அப்பொழுதுதான் இது ஏற்படும். ஒருவர் இன்னொருவரின் சுபாவத்தில் கூட ஒருவேளை யாருடைய சமநிலை இருக்கிறது என்றால் அவருடைய உணர்வுகளை சுலபமாக புரிந்து கொள்ள முடியும். அப்படி இதுவும் தந்தையின் சமநிலையில் அருகில் செல்வதினால் மனதின் எண்ணத்தை, வாயிலிருந்து வரும் வார்த்தைகளைப் போல சுலபமாக பிடிக்க முடியும். எனவே தன்னுடைய எண்ணங்களில் கலப்படம் மட்டும் இருக்கக்கூடாது. எண்ணங்களின் மேல் கட்டுப்படுத்தும் சக்தி அவசியம் இருக்க வேண்டும். எப்படி வெளியுலக நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக கட்டுப்படுத்தும் சக்தி சிலரிடம் ஓரளவிற்கும் மற்றும் வேறு சிலரிடம் வேறு மாதிரியும் இருக்கிறது. அதே போல் இந்த மனதின் எண்ணங்கள், காரிய

விவகாரங்களை கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்படுத்தும் சக்தி வரிசைக்கிரமமாக இருக்கிறது. அப்படியானால் அந்த இரண்டு விஷயங்கள் எவை? ஒன்றோ நான் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு காரியம் செய்து கொண்டே மேடையில் இருக்கிறேன் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு காரியத்தின் மேல் கவனம் இருப்பதினால் சம்பூர்ண நிலையின் அருகில் வந்து கொண்டே இருப்பீர்கள்.

இரண்டாவது விஷயம் எப்பொழுதும் தன்னுடைய, தற்சமய மற்றும் எதிர்காலத்து அந்தஸ்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படி ஒன்று மேடை, இன்னொன்று அந்தஸ்து இந்த இரண்டு விஷயங் களையும் எப்பொழுதும் நினைவில் வைப்பதினால் அந்தஸ்த்திற்குப் புறம்பான எந்தவொரு காரியமும் நடக்காது. மேலும் கூடவே,தான் மேடையில் இருக்கிறேன் என்று புரிந்து கொள்வதினால் எப்பொழுதும் உயர்ந்த காரியத்தை செய்வதற்கான தூண்டுதல் கிடைக்கும். இந்த இரண்டு விஷயங்களையும் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொண்டே நடந்து கொள்ளுங்கள். நல்லது. நீங்கள் தூரத்திலிருந்து வந்திருக்கிறீர்களா அல்லது பாப்தாதா தூரத்திலிருந்து வந்திருக்கிறாரா? வேகம் அதிகமாக இருந்தாலும் யாருடையது தொலைதூரம்? நீங்கள் அனைவரும் பயணம் செய்து வந்திருக்கிறீர்கள், பாப்தாதாவும் பயணம் செய்து வந்திருக்கிறார். எனவே இருவரும் பயணம் செய்பவர்கள்தான். உங்களுடைய பயணத்தில் களைப்பு இருக்கிறது மற்றும் தந்தையின் பயணத்தில் களைப்பு இருப்பதில்லை. மதுபன் நிவாசியாக ஆவது கூட டிராமாவில் மிகுந்த சௌபாக்கியத்திற்கானதாகும். ஏனென்றால் மதுபன் வரதான பூமி ஆகும். அப்படி வரதான பூமியில் வந்திருக்கிறீர்கள்? அதுவோ கடும் உழைப்பின் பூமி, இது வரதான பூமி ஆகும். அப்படி வரதான பூமியில் வந்து வரமளிப்பவரிடமிருந்து மற்றும் வரமளிப்பவர் மூலமாக பொறுப்பிலிருப்பவராக இருக்கும் ஆத்மாக்களிடமிருந்து எவ்வளவு வரதானத்தை எடுக்க விரும்புகிறீர்களோ அதை எடுக்க முடியும். பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கும் உயர்ந்த ஆத்மாக்களிடமிருந்து எப்படி வரதானத்தை பெறுவார்கள்? இந்தக் கணக்கை தெரிந்திருக்கிறீர்களா? மதுபன்னில் வரதானம் கிடைக்கிறது, வாயுமண்டலத்தில் தூய்மையான சரித்திர பூமியின் வரதானமும் நிரம்பியிருக்கிறது, ஆனால் பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கும்

உயர்ந்த ஆத்மாக்களிடமிருந்து வரதானத்தை எப்படி பெறுவது? வரதானத்தில் உழைப்பு குறைந்து விடுகிறது. எப்படி கோவில்களில் வழிகாட்டிகள் யாத்திரிகர்களை வரதானத்தை பெற வைப்பதற்காக தேவிகளின் எதிரில் கொண்டு செல்கிறார்கள். அப்படி நீங்களும் வழிகாட்டிகள்தான். யாத்திரிகர்களுக்கு வரதானத்தை எப்படி செய்விப்பீர்கள். வரதானத்தை பெறுவதற்கான சாதனம் எது? உயர்ந்த ஆத்மாக்கள் மூலமாக வரதானம் கிடைப்பதற்கான காரணமே பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கும் காரணத்தினால் அவர்களின் ஒவ்வொரு காரியத்தையும் பார்த்து சுலபமாக தூண்டுதல் கிடைக்கிறது. எந்த ஒரு பொருளையும் ஸ்தூலமாக பார்க்கும்போது விரைவில் கிரகித்துக் கொள்ள முடியும். யோசிக்கும் விஷயம் புத்தியில் காலதாமதமாகி கிரகணம் ஆகிறது. இங்கேயும் சாகார ரூபத்தில் யார் சாகார பாபாவை பார்த்திருக்கிறார்களோ அவர்களுக்கு நினைவு செய்வது சுலபம் மேலும் புள்ளி ரூபத்தை நினைவு செய்வது கொஞ்சம் கடினம். இதே போல் பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கும் உயர்ந்த ஆத்மாக்களின் சேவை, தியாகம், அன்பு மற்றும் அனைவருக்கும் உதவி செய்வதை நடைமுறை காரியத்தில் பார்த்து ஏற்படும் தூண்டுதல் வரதான ரூபத்தில் சுலபமாகக் கிடைத்து விடுகிறது. அப்படி வரம் அளிக்கும் மதுபன் பூமியில் வந்து ஒவ்வொரு உயர்ந்த ஆத்மாக்கள் மூலமாக எளிதாக கர்மயோகி ஆவதற்கான வரதானத்தை பிராப்தி செய்து விட்டுதான் செல்ல வேண்டும் ஏனென்றால் நீங்கள் கூட காரியம் செய்து கொண்டே நினைவில் இருப்பதைத்தான் கடினமான விஷயம் என்று கூறுகிறீர்கள். அப்படி பொறுப்பிலிருப்பவராக ஆகியிருக்கும் ஆத்மாக்களை காரியம் செய்து கொண்டே இந்த குணங்களை தாரணை செய்வதைப் பார்த்து சுலபமாக கர்மயோகி ஆவதற்கான தூண்டுதல் கிடைக்கிறது. அப்படி அந்த ஒரு வரதானத்தைக் கூட விட்டு விட்டுச் செல்ல வேண்டாம். அனைத்து வரதானங்களை பிராப்தி செய்து செய்து தானும் மாஸ்டர் வரம் அளிப்பவர் ஆகி விடுவீர்கள். நல்லது.

**வரதானம்: ஒட்டாத மற்றும் விலகியிருப்பவராகி சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய எல்லைக்கப்பாற்ப்பட்ட வைராக்கியம் உடையவர் ஆகுக!**

எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் என்றால் எதன் மேலும் பற்றுதல் அற்ற நிலை, எப்பொழுதும் தந்தையின் அன்பிற்குரியவர். இந்த

அன்பான நிலைதான் விலகியவராக ஆக்குகிறது. தந்தையின் அன்பிற்குரியவர் இல்லை என்றால் விலகியவராகவும் ஆக முடியாது. பற்றுதலில் வந்து விடுவீர்கள். யார் தந்தையின் அன்பிற்கு உரியவரோ அவர் அனைத்து கவர்ச்சிகளிலிருந்து விடுபட்டு அதாவது விலகியவராக இருப்பார், இதைத்தான் ஒட்டாத நிலை என்று கூறுவது. எந்தவொரு எல்லைக்குட்பட்ட கவர்ச்சியின் ஒட்டுதலில் வராதவர்கள். படைப்பு மற்றும் சாதனங்களை ஒட்டாதவராகி காரியத்தில் கொண்டு வரும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர்தான் இராஜரிஷி ஆவார்.

**சுலோகன்: உள்ளத்தில் உண்மை மற்றும் சுத்தம் இருக்கிறது என்றால் பாபா திருப்தி ஆகி விடுவார்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 11.02.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அந்த்வாகக் உடல் (கடைசி நிலையின் சூட்சும உடல்) மூலமாக சேவை!

ஒரு விநாடியில் எவ்வளவு தூரத்திலிருந்து எவ்வளவு தூரம் போக முடியும் என்ற கணக்கை எடுக்க முடியுமா? எப்படி இறந்ததற்குப் பிறகு ஆத்மா ஒரு நொடியில் எவ்வளவு தொலைதூரம் சென்றடைந்து விடுகிறது. அதே போல் நீங்களும் அந்த்வாகக் உடல் மூலமாக, அந்த்வாகக் உடல் என்று கூறுகிறார்கள் இல்லையா? அதன் உண்மையான அர்த்தம் என்ன? அந்த்வாகக் உடல் மூலமாக மிகவும் சுற்றி வந்தீர்கள் என்ற மஹிமை உங்களுக்கு இருக்கிறது இல்லையா? அதனுடைய அர்த்தம் என்ன? இந்த மஹிமை திவ்விய திருஷ்டி உடையவர்களுக்கு மட்டுமானதல்ல ஆனால் உங்கள் அனைவரினுடையதாகும். மனிதர்களோ அந்த்வாகக் உடலின் தங்களுடைய அர்த்தத்தைக் கூறுகிறார்கள் ஆனால் சரியான அர்த்தம் இதுதான். கடைசி நேரத்தில் உங்களுடைய கர்மாதீத் நிலை இருக்கிறது அது வாகனம் போல் ஆகி விடுகிறது. ஏதாவது வாகனம் மூலமாக சுற்றி வரப்படுகிறது. எங்கிருந்தோ எங்கோ சென்று விடுகிறார்கள். அப்படி எப்பொழுது கர்மாதீத் நிலை உருவாகி விடுகிறது என்றால் இந்த நிலை இருப்பதினால் ஒரு நொடியில் எங்கிருந்தும் எங்கும் சென்றடைய முடியும் எனவே அந்த்வாகக் உடல் என்று கூறுகிறார்கள். உண்மையில் இது கடைசி நிலையின் மஹிமை ஆகும். அந்த நேரம் நீங்கள் இந்த ஸ்தூல சொரூபத்தின் உணர்விலிருந்து விலகி இருக்கிறீர்கள் எனவே இதை சூட்சும உடல் என்றும் கூறிவிட்டார்கள். எப்படி பறக்கும் குதிரை என்ற பழமொழி இருக்கிறது அப்படி இந்த நேரத்து உங்கள் அனைவரின் அனுபவத்தின் இந்த விஷயங்களை கதைகளின் ரூபத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு நொடியில் இங்கே சென்றடை என்று கட்டளையிட்டால் அது அங்கே சென்றடைந்து விடும். அந்த மாதிரி தன்னுடைய அனுபவத்தை செய்து கொண்டேயிருக்கிறீர்களா? எப்படி இன்றைய நாட்களில் அறிவியல் கூட வேகத்தை இன்னும் விரைவாக்குவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். எவ்வளவு முடியுமோ குறைந்த

நேரத்தில் அதிக வெற்றி கிடைப்பதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதே போல் உங்களுடைய முயற்சி கூட ஒவ்வொரு விஷயத்திலும் வேகத்தை அதிகரிப்பதற்காக நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவிற்கு எவ்வளவு ஒருவரின் வேகம் அதிகரிக்குமோ அவ்வளவே தன்னுடைய கடைசி நிலையின் அருகில் வருவார். வேகத்தினால் அந்த நிலை வரை வந்தடைவார். தன்னுடைய வேகத்தினால் நிலையை தெரிந்து கொள்ள முடியும்.

இப்பொழுது அனைவரும் மஹான் பண்டிகையான சிவராத்திரியைக் கொண்டாடுவதற்காகத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். புதுமையாக என்ன யோசித்திருக்கிறீர்கள்? (கொடியேற்றுவோம்). அவரவர்களின் சேவை நிலையங்களில் நன்றாகக் கொடியேற்றுங்கள் ஆனால் ஒவ்வொரு ஆத்மாவின் இதயத்தில் தந்தையின் பிரத்யக்ஷதாவின் கொடியை பறக்க விடுங்கள். அது சக்தி சொரூபத்தின் பிரத்யக்ஷம் எப்பொழுது ஆகுமோ அப்பொழுது ஏற்படும். சக்தி சொரூபத்தினால்தான் சர்வ சக்திவானை பிரத்யக்ஷம் செய்ய முடியும். சக்தி சொரூபம் என்றால் சம்ஹாரி (அழிப்பவள்) மற்றும் அலங்காரி. எந்த நேரம் மேடையில் வருகிறீர்களோ அந்த நேரம் முதலில் தன்னுடைய நிலையின் ஸ்டேஜை மிக நன்றாக சரி செய்து பிறகு மற்றவர்களுக்கு உங்களுடைய உள் நிலையின் சாட்சாத்காரம் ஏற்படும் அளவிற்கு அந்த நிலையில் வாருங்கள். எப்படி மற்ற ஏற்பாடுகள் செய்கிறீர்கள் அதே போல் அலங்காரியாகி மேடையில் வந்து கொண்டிருக்கிறேனா என்ற இந்த தன்னுடைய ஏற்பாட்டையும் பாருங்கள். லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் இரண்டு சொரூபமுமே எமர்ஜ் ரூபத்தில் (வெளிப்படும் ரூபத்தில்) இருக்கட்டும். எப்பொழுது இரண்டு ரூபமும் இருக்குமோ அப்பொழுது சரியான முறையில் வழிகாட்டி ஆக முடியும். உங்களுடைய "தந்தை" என்ற வார்த்தை அவ்வளவு அன்பு மற்றும் சக்தி நிரம்பியதாக இருக்கட்டும். இந்த வார்த்தை ஞான கண் மையின் வேலையை செய்யட்டும். அனாதையை அனைத்தும் நிரம்பியவராக ஆக்கி விடட்டும். இந்த ஒரு வார்த்தையில் அவ்வளவு சக்தியை நிரப்புங்கள். எப்பொழுது மேடையில் வருகிறீர்களோ அந்த நேரத்தின் நிலை ஒன்றோ இரக்கத்திற்கானதாக இருக்கட்டும், இன்னொரு பக்கம் நன்மையின் பாவனை, மூன்றாவது பக்கம் மிக அன்பான வார்த்தை, நான்காவது சொரூபத்தில் சக்தி நிறைந்ததின் பொலிவு இருக்கட்டும். தன்னுடைய நினைவு மற்றும்

நிலையை அவ்வளவு சக்திசாலியாக ஆக்கி தன்னுடைய வெகுகாலமாக கூக்குரல் இட்டுக் கொண்டிருக்கும் பக்தர்களுக்கு தன் மூலமாகத் தந்தையின் சாட்சாத்காரம் செய்விப்பதற்காக வந்திருக்கிறேன் என்று புரிந்து கொள்ளுங்கள். இந்த மாதிரி தன்னுடைய ஆன்மீக ரூபம், ஆன்மீகப் பார்வை, நன்மை செய்யும் உள்உணர்வு மூலமாக தந்தையை பிரத்யக்ஷம் செய்ய முடியும். புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று? சொற்பொழிவு ஆற்றுவதற்கான ஏற்பாடுகள் மட்டும் செய்ய வேண்டாம் ஆனால் சொற்பொழிவு மூலமாக பாஷையிலிருந்தும் விலகிய நிலையில் எடுத்துச் செல்வதற்கான அனுபவத்தை செய்விக்கவும் சொற்பொழிவை அந்த மாதிரி தயார் செய்ய வேண்டும். சொற்பொழிவிற்காக அதிகமாகத் தயார் செய்கிறீர்கள் ஆனால் ஆன்மீகக் கவர்ச்சி சொரூபத்தின் நினைவில் இருப்பதற்கான தயாரிப்பில் கவனம் குறைவாகக் கொடுக்கிறீர்கள் எனவே இந்த தடவை இந்த விஷயத்தில் அதிகமாகத் தயார் செய்ய வேண்டும். ஒவ்வொருவரின் உள்ளத்தில் தந்தையின் உறவின் அன்பின் முத்திரை இட வேண்டும்.

நல்லது. மதுபன்னில் இருப்பவர்கள் என்ன சேவை செய்வீர்கள். மதுபன்னில் இருப்பவர்களை அந்த நாளில் பிரத்யேகமாக அவ்யக்த வதனத்தில் வருவதற்கான அழைப்பை பாப்தாதா கொடுக்கிறார். வதனத்தில் வந்து அனைத்து விதமான சேவையைப் பார்க்க முடியும். மாலை 7-மணியிலிருந்து 9-மணி வரை இரண்டு மணி நேரங்கள் முக்கியமாக சுற்றி வரச் செய்வோம். எப்படி செய்தி கொணருபவர்களை அனைத்து இடங்களையும் சுற்றி வருவதற்காக அழைத்துச் செல்கிறோம் இதே போல் மதுபன்னில் இருப்பவர்களை இங்கு அமர்ந்து கொண்டே அனைத்து இடங்களின் சேவைக்காக சுற்றி வரச்செய்வோம். ஒருவேளை கஷ்டப்படாமல் முழு இடங்களையும் சுற்றி வந்து விட்டீர்கள் என்றால் வேறு என்ன வேண்டும். எனவே மதுபன்னில் இருப்பவர்கள் அந்த நாளில் தன்னை இந்த ஸ்தூல உடலிலிருந்து விலகிய அவ்யக்த வதனவாசி என்று புரிந்து அமர்ந்திருந்தீர்கள் என்றால் முழு நாளிலும் அனேக அனுபவங்கள் செய்வீர்கள். என்ன அனுபவங்கள் செய்தீர்கள் என்று பிறகு சொல்லுங்கள். அந்த நாளில் ஒருவேளை சிறிதளவு தன்னுடைய முயற்சி செய்தாலும் சுலபமாக வித்தியாசமான விதவிதமான அனுபவம் செய்வதற்கான வரதானத்தைப் பெற முடியும். புரிந்ததா -மாலை 7-மணியிலிருந்து 9-மணி வரை முக்கியமாக தந்தையின்

நினைவிலிருப்பதற்கான நிகழ்ச்சியை வைத்துக் கொள்ளுங்கள். பார்க்கப்போனால் முழு நாளிற்குமான அழைப்பைக் கொடுக்கிறோம் ஆனால் முக்கியமாக இது சுற்றி வருவதற்கான நேரம் ஆகும். அந்த நேரத்தில் ஒவ்வொருவரும் தனது சக்திக்கேற்றபடி அனுபவம் செய்ய முடியும். மதுபன்னில் இருப்பவர்கள் விசேஷமான அன்பிற்குரியவர்கள் எனவே விசேஷ அழைப்பு கொடுக்கிறோம். புத்தியின் மூலமாக இந்த தன்னுடைய உடலின் உணர்விலிருந்து விலகியிருந்து மட்டும் அமருங்கள். பிறகு டிராமாவில் என்ன அனுபவம் ஏற்பட வேண்டுமோ அது ஆகிக் கொண்டேயிருக்கும். செய்தி கொண்டுவருபவர்களைப் பொறுத்தவரை சாட்சாத்காரம் பொதுவான விஷயம் ஆனால் புத்தி மூலமாகவும் அந்த மாதிரி அனுபவம் செய்ய முடியும். இந்த கண்களினால் பார்த்த அனுபவம் மாதிரி அவ்வளவு தெளிவாக இருக்கும். நல்லது.

**டீச்சர்களுடன்** இந்த குரூப்பை எந்த குரூப் என்று கூறலாம்? (ஸ்பீக்கர்ஸ் குரூப்) ஸ்பீக்கர்ஸ் என்றால் ஸ்பீச் செய்பவர்கள் (சொற்பொழிவு ஆற்றுபவர்கள்). ஸ்பீச்சின் (சொற்பொழிவின்) கூடவே ஸ்பீடும் (வேகமும்) இருக்கிறதா? ஏனென்றால் ஸ்பீச்சின் கூடவே ஒருவேளை முயற்சி செய்வதின் ஸ்பீடும் இருக்கிறது என்றால் அந்த மாதிரி ஸ்பீச் செய்பவர்களின் பிரபாவத்தினால் உலகத்திற்கு நன்மை ஏற்பட முடியும். ஒருவேளை ஸ்பீட் இல்லாத ஸ்பீச் ஆக இருக்கிறது என்றால் உலகத்திற்கு நன்மை ஏற்படுவது கடினமாகி விடும். எனவே இது ஸ்பீச் மற்றும் ஸ்பீடில் செல்லக் கூடிய குரூப் என்று அப்படி சொல்லலாம். யாருடைய ஸ்பீச்சும் சக்திசாலியானது மற்றும் ஸ்பீடும் சக்திசாலியானது என்றால் அவரை விஷ்வ கல்யாணகாரி (உலகத்திற்கு நன்மை செய்பவர்), மாஸ்டர் துக்கத்தை நீக்கி சுகம் கொடுப்பவர் என்று கூறப்படுகிறது. அப்படியானால் அந்த மாதிரி காரியத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களா? யார் துக்கத்தை நீக்கி சுகம் கொடுப்பவராக இருக்கிறாரோ அவர் சுயம் இந்த உலகின் அலைகளிலிருந்து விலகியிருப்பார். மேலும் அவர்களுடைய ஸ்பீச்சும் துக்கத்தின் அலைகளிலிருந்து விலக்கி அழைத்துச் செல்லக் கூடியதாக இருக்கும். அந்த மாதிரி நிலையில் நிலைத்திருந்து ஸ்பீச் செய்கிறீர்களா? ஸ்பீச்சோ ஸ்டேஜில் (மேடையில்) இருந்து செய்யப்படுகிறது என்றால் நீங்கள் எந்த ஸ்டேஜில் (நிலையில்) இருந்து ஸ்பீச் செய்கிறீர்கள்? இந்த வெளியுலகத்தில் போடப்பட்டிருக்கும் ஸ்டேஜ் இருக்கிறது அல்லவா அதன் மேலா? ஸ்பீக்கர்களுக்கு எப்பொழுது

ஏதாவது ஸ்தூலமான ஸ்டேஜிற்கு போக வேண்டியது இருக்கிறது என்றால் முதலில் தன்னுடைய நிலை என்ற ஸ்டேஜ் தயாராக இருக்கிறதா அல்லது இல்லையா என்று சோதனை செய்கிறார்கள். அந்த மாதிரி ஸ்டேஜில் நிலைத்திருந்து ஸ்பீச் செய்பவரை உயர்ந்த ஸ்பீக்கர் என்று கூறுவார்கள். எப்படி ஸ்தூலமான ஸ்டேஜை தயார் செய்வதற்காகக் கூட எவ்வளவு நேரம் மற்றும் உழைப்பைக் கொடுக்கிறார்கள். அதே போல் தன்னுடைய நிலை என்ற ஸ்டேஜ் எப்பொழுதும் தயாராக இருக்கட்டும் அதற்காகக் கூட இவ்வளவே முயற்சி செய்கிறீர்களா? அந்த மாதிரி சக்திசாலியான ஸ்டேஜில் (நிலையில்) நிலைத்திருந்து ஸ்பீச் செய்பவர்களுக்கு இங்கு அபுமலையில் நினைவுச்சின்னம் இருக்கிறது. அது எது? (தில்வாலா). தில்வாலாவோ நினைவு யாத்திரையின் நினைவுச்சின்னம் ஆகும். கௌமுக் (பசுவின் வாய்) பார்த்ததில்லையா? கௌமுக் எதன் நினைவுச்சின்னம்? இது வாயின் நினைவுச்சின்னம். எப்படி தந்தையின் நினைவுச்சின்னம் கௌமுக் ஆகும். ஏனென்றால் வாய் மூலமாகத்தான் அனைத்தையும் தெளிவுபடுத்துகிறார். எனவே வாயின் நினைவுச்சின்னமாகும். ஸ்பீக்கர்களுடைய காரியமும் வாய் மூலமாகத்தான் இருக்கிறது ஆனால் யார் அந்த மாதிரி உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து ஸ்பீச் செய்கிறார்களோ. எப்பொழுதும் தயாராக இருக்கும் நிலை (ஸ்டேஜ்) இருக்கட்டும். அந்த நேரத்தில் தயார் செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று அப்படி இருக்க வேண்டாம். எவர்ரெடி ஸ்டேஜ் (நிலை) இருப்பதினால் என்ன பிரபாவம் இருக்கிறதோ அது மிக நன்றாகப்படுகிறது. எனவே பிரபாவசாலியா என்று கேட்கப்படுகிறது. இந்த குரூப்பை பிரபாவசாலி குரூப் என்று கூறலாமா? அனைவரும் சான்றிதழ் கொடுப்பீர்களா? (நல்ல குரூப்) ஒருவேளை நீங்கள் சர்டிஃபிகேட் (சான்றிதழ்) கொடுக்கிறீர்கள் என்றால் பின்போ இவர்கள் அனைவரையும் சேடிஸ்ஃபை செய்பவர்களாகவும் (திருப்திபடுத்துபவர்களாகவும்) இருப்பார்கள். நீங்கள் திருப்திமணிகள்தான் இல்லையா? இதில் ஆம் என்று கூறுகிறீர்களா? ஒருவேளை தானே திருப்திமணியாக இருக்கிறார் என்றால் மற்றவர்களையும் திருப்தி படுத்துவார். டீச்சர்களுக்கும் சோதனைத் தாள் இருக்கிறது, எப்படி? (டீச்சர்களின் சோதனைத் தாள் சூட்சும வதனத்திலிருந்து வருகிறது. டீச்சர்களின் சோதனைத் தாள் ஒவ்வொரு அடியிலும் இருக்கும். எந்த அடி எடுத்து வைத்தாலும் பரீட்சை ஹாலில் அமர்ந்து அடியெடுத்து வைக்கிறேன் என்று அப்படியே புரிந்து எடுக்க

வேண்டும். ஏனென்றால் ஸ்பீக்கர் என்றால் மேடையில் அமர்ந்திருப்பவர்கள். எதிரில் மேடையில் இருப்பவர் மேல் அனைவரின் பார்வை செல்கிறது. நீங்கள் அனைவரும் கூட உயர்ந்த ஸ்டேஜில் அமர்ந்திருக்கிறீர்கள். அனேக ஆத்மாக்களின் கவனம் உங்களுடைய அடி மேல் இருக்கிறது. எனவே நீங்கள் ஒவ்வொரு அடியிலும் அந்த மாதிரி கவனத்தோடு அடியெடுத்து வைக்க வேண்டும். ஒருவேளை ஒரு அடி கூட தொய்வானதாக அல்லது கொஞ்சம் மேலே கீழே எழுகிறது என்றால் அனேகர்கள் உங்களைப் பின்பற்றுவார்கள் எனவே டீச்சர்களுக்கு என்ன அடியெடுத்து வைக்க வேண்டும் என்றாலும் அந்த மாதிரி யோசித்து எடுத்து வைக்க வேண்டும், ஏனென்றால் கிரீடம் அணிந்தவராக ஆகியிருக்கிறீர்கள்தான் இல்லையா, எந்த கிரீடம் கிடைத்திருக்கிறது? பொறுப்பின் கிரீடம். எவ்வளவு பெரிய பொறுப்போ அவ்வளவு பெரிய கிரீடம். அப்படி என்ன பெரிய பொறுப்பு கிடைத்திருக்கிறதோ அந்த மாதிரி தன்னை பொறுப்பிலிருப்பவராகப் புரிந்து பின்பு அடியெடுத்து வையுங்கள். இப்பொழுது கவனக்குறைவு வேண்டாம். கிரீடம் மற்றும் ஆசனதாரி ஆனதற்குப் பிறகு கவனக்குறைவு முடிவடைந்து விடுகிறது. கவனக்குறைவு என்றால் முயற்சி செய்வதில் கவனக்குறைவு எந்த அடி எடுத்து வைத்தாலும் மற்றும் எந்த காரியம் நடந்தாலும் அந்த ஒவ்வொரு காரியமும் உலகத்திற்காக ஒரு உதாரணமாகி இருக்கட்டும் என்று இந்த குரூப்பிற்கு எப்பொழுதும் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் உங்களுடைய இந்த காரியங்களின் நினைவுச்சின்னம் கதைகளின் ரூபத்தில் உருவாகும். உங்களுடைய இந்த சரித்திரம் மஹிமைக்குத் தகுதியானதாக ஆகும். அவ்வளவு பொறுப்புள்ளவராக உணர்ந்து நடக்கிறீர்களா? இது இந்த பொறுப்புள்ள குரூப்பின் விசேஷங்கள். யார் எவ்வளவு பொறுப்புள்ளவராக இருக்கிறாரோ அவ்வளவே லேசாகவும் இருப்பார். நல்லது.

**வரதானம்: நல்லதின் மேல் பிரபாவப்படுவதற்குப் பதிலாக அதை தன்னுள் தாரணை செய்யக்கூடிய பரமாத்ம அன்பிற்குரியவர் ஆகுக!**

ஒருவேளை பரமாத்மாவின் அன்பிற்குரியவராக ஆக வேண்டும் என்றால் உடல் உணர்வின் தடைகளை சோதனை செய்யுங்கள். இவர் மிக நல்லவர், எனவே கொஞ்சம் இரக்கம் வருகிறது என்று அனேகர் கூறுகிறார்கள். சிலருக்கு சிலருடைய உடல் மேல் பற்றுதல் ஏற்படுகிறது என்றால்,

சிலருக்கு சிலருடைய குணங்கள் மற்றும் சிறப்புகளின் மேல் ஏற்படுகிறது ஆனால் அந்த விசேஷங்களையும், குணங்களையும் கொடுப்பவர் யார்? யாராவது நல்லவராக இருக்கிறார் என்றால் நல்லதை வேண்டும் என்றால் தாரணை செய்யுங்கள் ஆனால் நல்லதில் பிரபாவம் ஆகி விடாதீர்கள், விலகியவராகவும் மற்றும் தந்தையின் அன்பிற்குரியவராகவும் ஆகுங்கள். அந்த மாதிரி அன்பிற்குரிய அதாவது பரமாத்மாவின் அன்பிற்குரிய குழந்தைகள் எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கிறார்கள்.

**சுலோகன்: அமைதி சக்தியை வெளிப்படுத்தினீர்கள் என்றால் சேவையின் வேகம் அதிகரித்து விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.03.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஸித்தி சொரூபம் ஆவதற்கான சுலபமான விதி!

அனைவரும் மாஸ்டர் திரிகாலதரிசியாக ஆகியிருக்கிறீர்களா? திரிகாலதரிசியாக ஆவதினால் எந்தவொரு காரியமும் தோல்வி அடையாது. எந்தவொரு காரியமும் செய்வதற்கு முன்பு தன்னுடைய மாஸ்டர் திரிகாலதரிசியின் நிலையில் நிலைத்திருந்து செய்யப் போகும் காரியத்தின் முதல், இடை, கடையைத் தெரிந்து காரியம் செய்வதினால் எப்பொழுதும் வெற்றி கிடைக்கும், அதாவது வெற்றிமூர்த்தி ஆகி விடுவீர்கள் மற்றும் சம்பூர்ணமூர்த்தியாகவும் ஆகி விடுவீர்கள். யோகிகளுக்கு ரித்தி ஸித்திபிராப்தியாகிறது என்ற மஹிமை இருக்கிறது. அது எந்த சித்தி? எண்ணத்தின் ஸித்திமற்றும் காரியத்தின் விதி. இந்த இரண்டினால் பிறப்புரிமையை சுலபமாக அடைந்து விடுகிறீர்கள். எண்ணத்தின் ஸித்திஎப்படி வரும், தெரியுமா? எண்ணங்களின் ஸித்திஆகாமல் இருப்பதற்கான காரணம் என்ன? ஏனென்றால் இப்பொழுது எண்ணத்தில் வீணானவை அதிகமாக இருக்கிறது. வீணான எண்ணம் கலந்து விடுவதினால் எண்ணம் சக்திசாலியாக ஆக முடிவதில்லை. எனவே எந்த எண்ணத்தை உருவாக்குகிறீர்களோ அதன் ஸித்திஏற்படுவதில்லை. வீணான எண்ணங்களின் ஸித்தோ ஏற்பட முடியாததுதான் இல்லையா. அப்படி எண்ணங்களின் ஸித்திதைப் பிராப்தி செய்வதற்கான முக்கியமான முயற்சி இதுதான் -வீணான எண்ணத்தை உருவாக்காமல் சக்திசாலியான எண்ணங்களை உருவாக்குங்கள். புரிந்ததா, படைப்பை அதிகமாக படைக்கிறீர்கள். எனவே முழுமையான பாலனை (வளர்ப்பு) செய்து அவற்றை காரியத்தில் ஈடுப்படுத்த முடிவதில்லை. எப்படி குடும்ப படைப்பு கூட (குழந்தைகள்) ஒருவேளை அதிகமாகப் படைக்கப்பட்டு விடுகிறது என்றால் அவர்களை தகுதியானவர்களாக ஆக்க முடிவதில்லை. இதே முறையில் உருவாக்கும் எண்ணங்களையும் மிக அதிகமாக உருவாக்குகிறீர்கள். எண்ணங்கள் உருவாவது எவ்வளவு

குறைவாக இருக்கிறதோ அவ்வளவு சக்திசாலியானதாக இருக்கும். எந்த அளவு உருவாக்கப்பட்ட எண்ணங்கள் அதிகமாக இருக்குமோ அந்த அளவு சக்தியில்லாத எண்ணங்களாக இருக்கும். எனவே எண்ணங்களின் ஸித்திதி பிராப்தி செய்வதற்காக முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கும். வீணான எண்ணங்களுக்கு முடிவு கட்டுங்கள். இல்லையென்றால் தற்சமயம் வீணான படைப்பை படைத்து அதன் பாலனையில் மிகுந்த நேரத்தை வீணாக்குகிறீர்கள் என்றால் எண்ணங்களின் ஸித்திமற்றும் காரியங்களின் வெற்றி குறைவாக இருக்கிறது. காரியங்களின் வெற்றிக்கான வழி மாஸ்டர் திரிகாலதரிசி ஆவதாகும். காரியம் செய்வதற்கு முன்பு முதல், இடை மற்றும் கடையைத் தெரிந்து காரியம் செய்யுங்கள். காரியம் செய்த பிறகு கடைசியில் விளைவுகளைப் பார்த்த பின்பு யோசிப்பது என்பது இருக்க வேண்டாம். எனவே சம்பூர்ணம் ஆவதற்காக இந்த இரண்டு விஷயங்களின் மேல் கவனம் கொடுக்க வேண்டும்.

இது குடும்பத்தில் இருப்பவர்களின் குரூப். எனவே குடும்பத்தில் இருந்து கொண்டே இந்த இரண்டு விஷயங்களின் மேல் கவனம் கொடுப்பதினால் சேவைக்குத் தகுதியானவர்களாக ஆக முடியும். சேவை வாய் மூலமாக மட்டும் நடப்பதில்லை, ஆனால் உயர்ந்த காரியங்கள் மூலமாகவும் சேவை செய்ய முடியும். வந்திருக்கும் இந்த குரூப் தன்னை சேவைக்குத் தகுதியானதாக நினைக்கிறதா? இந்த குரூப்பில் யார் தன்னை சேவைக்குத் தகுதியானவர்கள் என்று நினைக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். இப்பொழுது. யார் சேவைக்குத் தகுதியானவர்களில் கையை உயர்த்தி இருக்கிறார்களோ, அவர்கள் சேவைக்காக நேரத்தை எடுத்து உதவியாளராக ஆக முடியுமா? மாதர்களின் உதவியினால் பெயர் மிக அதிகமாக புகழடைய முடியும். எத்தனை பேர் வந்திருக்கிறீர்களோ அந்த அனைவரும் சேவையில் உதவியாளராக ஆகி விட்டார்கள் என்றால் மிக விரைவில் பெயரை புகழடையச் செய்ய முடியும் ஏனென்றால் தம்பதி மூர்த்தியாகி சென்று கொண்டிருக்கிறீர்கள் எனவே அந்த மாதிரியான தம்பதி சேவையில் தன்னுடைய வெளிப்பாட்டை அதிகமாக செய்ய முடியும். ஒவ்வொரு ஆத்மாவை தந்தையின் பக்கம் கவர்ந்திழுக்கும் மாதிரியான காரியம் செய்து காண்பியுங்கள். மாதர்களின் குரூப், அதுவும் தம்பதி ரூபத்தில் இருப்பவர்கள் அவர்களுக்கு நேரத்தை ஒதுக்குவது சுலபமாக இருக்க

முடியும். இப்பொழுது கூட நேரத்தை ஒதுக்கித்தான் வந்திருக்கிறீர்கள் இல்லையா. இப்பொழுது கூட உங்களுக்குப் பின்னால் குடும்பமும் வந்து கொண்டிருக்கக் கூடும் அல்லவா. எப்படி இந்த விஷயம் அவசியம் என்று புரிந்து பந்தனங்களை இலேசாக்கி வந்து சேர்ந்து விட்டீர்கள். அதேபோல் அவ்வப் பொழுது தன்னுடைய குடும்பத்தின் பந்தனங்களை இலேசாக்கி சேவையில் எவ்வளவு உதவியாளராக ஆகிக் கொண்டே இருப்பீர்களோ அவ்வளவே இந்த கணக்கு வழக்கு விரைவில் முடிந்து விடும். எனவே மாதர்கள் அந்த மாதிரி உதவியாளர் ஆவதுதான் தன்னுடைய முன்னேற்றத்திற்கான வழி என்று புரிந்து கொள்ள வேண்டும். கேட்பது மற்றும் சொல்வது இரண்டையும் அனுபவம் செய்ய வேண்டும். எப்படி தந்தை உதவியாளர் ஆகிறார், அதே போல் குழந்தைகளுக்கும் உதவியாளராக ஆகுவது இதுதான் உதவியை எடுத்துக் கொள்வது. அப்படி இந்த குரூப் தன்னுடைய பந்தனங்களை லேசாக்கி, சேவையில் உதவியாளராக ஆக முடியும் அளவிற்கு தன்னுள் சக்தியை நிரப்பிச் செல்ல வேண்டும். இல்லையென்றால் இந்த பாடத்தில் ஒருவேளை குறை இருந்து விட்டது என்றால் முழுமையான மதிப்பெண்கள் எப்படி பெற முடியும். முழுமையாக தேர்ச்சி பெறுவதற்கான இலட்சியத்தை வைத்திருக்கிறீர்கள்தான் இல்லையா. எனவே முக்கியமாக இந்த குரூப்பிற்கு அந்த மாதிரி வழிகளை உருவாக்கு வதற்கான பயிற்சி எடுத்துச் செல்ல வேண்டும். பட்டியில் என்னவாகிச் செல்ல வேண்டும் என்று புரிந்ததா? சேவைக்குத் தகுதியானவர் மற்றும் உதவியாளர். வீட்டில் இருந்து கொண்டே சக்தி சொரூபத்தின் நினைவு எப்பொழுதும் இருப்பதினால் கர்ம பந்தனம் தடை ஏற்படுத்தாது. வீட்டில் இருக்கிறீர்கள் ஆனால் சக்தி சொரூபத்திற்கு பதிலாக தூய்மையான இல்லறத்தின் உணர்வு அதிகமாக இருக்கிறது. குடும்பத்தில் இருந்து கொண்டே சக்தி நிலையின் உள்உணர்வு குறைவாக இருக்கிறது. எனவே இது நாள் வரை கர்ம பந்தனம் இருக்கிறது, என்ன செய்வது எப்படி செய்வது, எப்படி கர்மபந்தனத்தை விலக்குவது என்ற குரல் வெளியாகிக் கொண்டே இருக்கிறது. சக்தி நிலையின் அலங்காரம் எப்பொழுதும் நிலைத்திருக்க முடியாத காரணத்தினால் இந்த குரல் வெளியாகிறது. எனவே இப்பொழுது இந்த பட்டியில் தன்னுடைய நினைவு மற்றும் சொரூபத்தை மாற்றிக் கொண்டு செல்ல வேண்டும். ஆகவே எப்பொழுதும் இரண்டு விஷயங்களை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். ஒன்றோ மாற வேண்டும். இன்னொன்று சவால் விட வேண்டும். சக்தி ரூபத்தில்

தன்னுடைய உள்உணர்வு மற்றும் சொரூபத்தையும் மாற்ற வேண்டும் மேலும் எவ்வளவிற்கு எவ்வளவு தன்னை மாற்றிக் கொண்டே செல்வீர்களோ அவ்வளவு மற்றவர்களுக்கு சவால் விட முடியும். ஆகவேதான் இந்த இரண்டு விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எப்பொழுது நல்ல காரியம் செய்கிறீர்கள் என்றால் தந்தையின் அன்பு சொரூபம் எதிரில் வருகிறது. மேலும் ஒருவேளை ஏதாவது பாவம் செய்கிறீர்கள் என்றால் பயங்கரமான ரூபத்தை எதிரில் கொண்டு வர வேண்டும். நீங்கள் அன்பிற்குரியவர்கள்தான் இல்லையா. அன்பிற்குரியவர்கள் எப்பொழுதும் நல்ல காரியம் செய்பவர்களாக இருப்பார்கள். அந்த மாதிரியான எந்த ஒரு காரியமும் நடந்து விட வேண்டாம் இதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும், ஏனென்றால் நீங்கள் அனைவரும் உலக நாடக மேடையில் கதாநாயக நடிகர்கள் ஆவீர்கள். கதாநாயக நடிகர்கள் மேல் அனைவரின் பார்வை இருக்கும். எனவே தன்னை குடும்பத்திலிருப்பவராக புரிந்து கொள்ளாமல் மேடையில் இருக்கும் கதாநாயக நடிகர் என்று புரிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் ஒருபொழுதும் அந்த மாதிரியான காரியம் நிகழாது.

எப்படி அறிவியலின் அணு சக்தி இன்று என்னவெல்லாமோ காண்பித்துக் கொண்டிருக்கிறது. அதே போல் அமைதியின் சக்தி தளத்தின் நீங்கள் குடும்பத்திலிருக்கக்கூடிய எடுத்துக் காட்டாவீர்கள். அது அணு சக்தி ஆகும். மேலும் நீங்கள் உலகின் முன்னால் ஒரு எடுத்துக்காட்டு ஆவீர்கள். நீங்களும் எடுத்துகாட்டாகி மிக அதிக சேவை செய்ய முடியும். மாதர்களோ அதிகமாகத் தேவைப்படுவார்கள். மாதர்களின் காரணமாக மூலை முடுக்குகளில் செய்திகள் பரப்புவது நின்று போய் இருக்கிறது. அனேக ஆத்மாக்களுக்கு செய்தி கிடைக்காததின் பொறுப்பு உங்கள் மேல் இருக்கிறது. எனவே இந்த குரூப் அதே போல் தயாராகி விட வேண்டும். இந்த குரூப் அவ்வப்பொழுது சேவையில் உதவியாளராக ஆக முடியும். நம்பிக்கைக்குரியவர்கள். எப்படி அதர்குமாரர்களின் குரூப்பும் மிகுந்த நம்பிக்கைக்குரியதாக இருந்தது. அதே போல் இந்த குரூப்பும் உதவியாளர்கள். உதவியாளராக எப்படி ஆவது. அதற்கான வழியும் இருக்கிறது, ஆனால் சக்தி இல்லை. எனவே உங்களுடைய சொரூப மாற்றத்திற்கான சான்றிதழை தன்னுடைய ஆசிரியையிடமிருந்து பெற்றுச் செல்ல வேண்டும். எப்படி ஒவ்வொரு

குமாரியும் 100-பிராமணர்களை விட உத்தமமானவர்கள் என்று மஹிமை செய்யப்பட்டிருக்கிறது அப்படி ஒவ்வொரு மாதாவும் ஜகத்மாதா ஆவார். 100-பிராமணர்கள் எங்கே முழு உலகமும் எங்கே. அப்படியானால் யாருடைய மஹிமை உயர்ந்தது? ஒவ்வொரு மாதாவும் ஜகத்மாதா ஆகி ஜகத்தின் (உலகிலுள்ள) ஆத்மாக்களின் மேல் இரக்கம், அன்பு மற்றும் நன்மையின் பாவை வையுங்கள். எனவே குரூப் ஒரு உறுதிமொழி கொடுக்க வேண்டும். உறுதிமொழி கொடுப்பதற்கான தைரியம் இருக்கிறதா? எப்படிப்பட்ட உறுதிமொழியானாலும் கேட்ட பிறகு தைரியம் வைப்பீர்களா? கேட்பதற்கு முன்பாகவே தைரியம் உள்ளதா அல்லது கேட்டப் பிறகு தைரியம் வைப்பீர்களா? என்ன புரிகிறதா? என்ன உறுதிமொழியானாலும் அதற்கான தைரியம் உள்ளதா? ஒருவேளை ஏதாவது கடுமையான உறுதிமொழியாக இருந்தால் கொஞ்சம் யோசிப்பீர்கள்தான் இல்லையா. ஒவ்வொருவருக்கும் நான் அவ்வப்பொழுது சேவையில் உதவியாளர் மற்றும் கூடவே சக்தி சொரூபமாகி (விக்ன விநாஷக்) தடைகளை அழிக்கக் கூடியவராகிதான் குடும்பத்தில் இருப்பேன். சுலபமான உறுதிமொழிதான் இல்லையா. தடைகள் வருவதினால் கதற மாட்டோம், பயப்படமாட்டோம் ஆனால் சக்தி ஆகி எதிர்கொள்வோம். இந்த உறுதிமொழியை தனக்குத் தானே நிரந்தரமாக செய்துக் கொண்டு செல்ல வேண்டும்.

எவ்விதமான ஆசை இருந்தாலும் மாயாவும் வரக் கூடும். ஆசை இருக்கக்கூடிய காரணத்தினால் மாயா வர முடியும். ஒருவேளை முற்றிலும் ஆசையற்றவராக இருந்து விட்டீர்கள் என்றால் மாயா வர முடியாது. எப்பொழுது ஆசை முடிவடைந்து விடுகிறதோ அப்பொழுது சக்தி சொரூபமாக ஆக முடியும். தன்னுடைய உடல் மேல், உறவுகளின் மேல், ஏதாவது பொருளின் மேல் எங்கே வேண்டுமானாலும் ஒருவேளை ஆசை இருக்கிறது என்றால் மாயாவும் வர முடியும் மற்றும் சக்தியாக ஆக விடாது. எனவே சக்திரூபம் ஆவதற்காக ஆசையை, ஆசையற்ற நிலையில் மாற்றி விடுங்கள். எப்படி நீங்கள் ஒரு தீபம் அனேக தீபங்களை எரிய வைக்க முடியும் என்று மற்றவர்களுக்கு கூறுகிறீர்கள். அதே போல் நீங்கள் ஒவ்வொருவரும் முழு உலகத்தின் நன்மைக்கு பொறுப்பாளர் ஆக முடியும். எனவே தன்னுடைய காரியத்தின் மற்றும் தன்னுடைய சொரூபத்தின் நினைவை வைத்துக் கொண்டே நடந்து கொள்ளுங்கள். பிரம்மாவின் புஜங்கள் அல்லவா! நீங்கள். தன்னை பிரம்மாவின் புஜங்கள்

என்று நினைக்கிறீர்களா? பிரம்மாவின் புஜங்களுக்கும் என்ன காரியம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. பிரம்மாவின் காரியம் ஸ்தாபனை என்றால் பிரம்மாவின் புஜங்களின் காரியமும் ஸ்தாபனை காரியத்தில் எப்பொழுதும் ஈடுபட்டிருப்பதாகும். எல்லைக்குட்பட்ட சம்மந்தத்தில் வருவதற்கான முறையை மட்டும் இவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். தன்னை பந்தனமற்றவராக ஆக்க முடியும், ஆனால் முறை தெரியாது. ஒன்றோ முறை தெரியாது. இன்னொன்றோ சக்தியும் இல்லை. ஆகவே சக்தியையும் நிரப்ப வேண்டும் மேலும் முறையையும் கற்றுக் கொள்ள வேண்டும். இருந்தாலும் பாப்தாதா நம்பிக்கைக்குரிய குரூப் என்று நினைக்கிறார். ஒவ்வொருவரும் எத்தனை தடவை தானாக முன் வருகிறார் என்று பார்க்கலாம். தானாகவே முன்னுக்கு வர வேண்டும். யார் அவராகவே முன்னுக்கு வருகிறாரோ அவருக்கு பாராட்டுதலும் கிடைக்கிறது. ஒருவேளை சொல்வதினால் செய்கிறார் என்றால் பாராட்டுக்கள் கிடைக்காது. யார் யார் தானாக முன்வருகிறார் என்று இப்பொழுது பார்க்கலாம். அன்பிற்குரியவர்கள்தான், ஆனால் அன்பிற்குரியவரின் கூடவே சகயோகியாகவும் ஆகுங்கள். இந்த குரூப்பின் பெயராக என்ன வைக்கலாம்? பெயர் சூட்டுவிழா இருக்கிறது இல்லையா, ஏனென்றால் மாறுவதற்காக பட்டியில் வந்திருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் கூட பெயர் சூட்டு விழாவிற்கு வந்திருக்கிறீர்கள். இந்த குரூப்பிற்கு என்ன பெயர்? இது எப்பொழுதும் சகயோகி மற்றும் சக்தி சொரூபமான குரூப் ஆகும். இப்பொழுது தன்னுடைய சக்தியை ஒருபொழுதும் குறைக்காதீர்கள். எப்பொழுது தன்னுடைய சக்தியை இழந்து விடுகிறீர்கள் என்றால் இராவணனும் இவர் தன்னுடைய சக்தியை இழந்து விட்டிருக்கிறார் என்று பார்க்கிறான் என்றால் பிறகு அதிகமாக அழ வைக்கிறான். சக்தியை இழப்பது என்றால் இராவணனை அழைப்பது. எனவே ஒருபொழுதும் தன்னுடைய சக்தியை குறைய விடாதீர்கள். சேமிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். எதிர்காலத்து 21-ஜென்மங்களுக்காக சக்தியை சேமிக்க வேண்டும். இப்பொழுதிலிருந்து சேமித்தீர்கள் என்றால் சேமிட்பாகும். எனவே எவ்வளவு சேமித்திருக்கிறேன் என்று எப்பொழுதும் இதையே போசியுங்கள். நல்லது.

**வரதானம்: எப்பொழுதும் திருப்தியாக இருந்து தன்னுடைய பார்வை, உள்உணர்வு, காரியத்தின் மூலமாக திருப்தியை அனுபவம் செய்விக்கக்கூடிய திருப்திமணி ஆகுக!**

பிராமண குலத்தில் யார் எப்பொழுதும் திருப்தியின் விசேஷத்தின் மூலமாக தானும் திருப்தியாக இருந்து மற்றும் தன்னுடைய பார்வை, உள்உணர்வு மற்றும் செயல் மூலமாக மற்றவர்களுக்கும் திருப்தியின் அனுபவத்தை செய்விக்கிறாரோ, அவர்தான் விசேஷ ஆத்மா ஆவார். அவர்தான் சந்துஷ்டமணி ஆவார். அவர் எப்பொழுதும் எண்ணம், சொல், அனேகரின் உறவு நெருக்கம் (தொடர்பு) மற்றும் காரியத்தில் பாப்தாதா மூலமாக தன் மேல் திருப்தியின் தங்கபுஷ்பங்களின் மழையை அனுபவம் செய்கிறார். அந்த மாதிரியான திருப்திமணிகள்தான் பாப்தாதாவின் கழுத்தின் மாலை ஆகிறார்கள், இராஜ்ய அதிகாரி ஆகிறார்கள். மேலும் பக்தர்கள் நினைவு செய்யும் மாலையாகிறார்.

**சுலோகன்: எதிர்மறை மற்றும் வீணானதை முடிவுகட்டி கடின உழைப்பிலிருந்து விடுபடுங்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 05.03.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பட்டியின் ஆன்மீக முத்திரை!

இன்று பாப்தாதா ஒவ்வொருவரின் நெற்றியில் இரண்டு விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவை யாவை? ஒன்று பாக்கியம் மற்றும் இன்னொன்று சுமங்கலயம் என்ற இந்த இரண்டு விஷயங்களையும் பார்த்துக் கொண்டிருந்தோம். பட்டியில் வந்து தன்னுடைய பாக்கியம் மற்றும் சுமங்கல்யத்தை மிகவும் நன்றாகப் பார்க்க மற்றும் தெரிந்து கொள்ள முடியுமா? தன்னுடைய நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பாக்கிய நட்சத்திரத்தைப் பார்க்க முடியுமா? பட்டியில் இந்த கண்ணாடி கிடைத்திருக்கிறது அதன் மூலம் தன்னுடைய பாக்கியம் மற்றும் சுமங்கல்யத்தைப் பார்க்க முடியுமா? பட்டியில் வருவது என்றால் இரண்டு விஷயங்களைப் பிராப்தி செய்வது. அந்த இரண்டு விஷயங்கள் யாவை? இன்று பட்டியில் வந்திருப்பவர்களைச் சந்திக்க வந்திருக்கிறோம் இல்லையா. எனவே அவர்களை சோதனை செய்கிறோம். முக்கியமாக இரண்டு விஷயங்கள் என்ன கிடைக்கின்றன? என்று கூறுங்கள் ஒவ்வொருவரும் வேறு வேறு விஷயங்களைக் கூறினார்கள்). ஒவ்வொருவரும் என்ன கூறினார்களோ அவை மிக நன்றாகக் கூறினார்கள் ஏனென்றால் தாய்மார்கள் இவ்வளவு கூறுவதற்குத் தகுதியாகி விட்டார்கள் என்றால் மிகுந்த சேவை செய்ய முடியும். அப்படி பட்டியில் முக்கியமாக இந்த இரண்டு விஷயங்கள் கிடைக்கின்றன அவற்றை உங்களுடன் எடுத்தேதான் செல்ல வேண்டும் - ஒன்றோ தன்னைத் தானே பார்ப்பதற்கான கண்ணாடி மற்றும் இரண்டாவது விஷயம் யோகா அதாவது நினைவின் கோளம். ஒளியின் கோளத்தை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்பவரின் கையில் எந்த கோளம் வரும்? அது உங்களுடைய நினைவுச்சின்னமான படமாகும். கிருஷ்ணனின் படத்தில் உலகக் கோளம் இருக்கிறது இல்லையா, அப்படி ஒளியின் கோளம் என்றால் ஒளியின் உடலினுள் எப்பொழுதும் இருப்பதாகும். ஒளியின் கோளம் ஆவதினால்தான் உலக ராஜ்யத்தின் கோளத்தை எடுக்க முடியும். அப்படி இப்பொழுது ஒளியின் கோளம்

இருக்கிறது. எதிர்காலத்தில் ராஜ்யத்தின் கோளம் இருக்கும். அப்படி பட்டியில் ஒன்றோ கண்ணாடி கிடைத்திருக்கிறது மற்றும் இன்னொன்று நினைவு யாத்திரையை நிரந்தரமாக உயர்ந்ததாக ஆக்குவதற்காக ஒளியின் கோளத்தின் பரிசு கிடைத்திருக்கிறது. இந்த பரிசுகளையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டும். இங்கேயே விட்டு விட்டுச் சென்று விடாதீர்கள். இரண்டு பரிசுகளையும் உடன் எடுத்துச் செல்வீர்கள் மற்றும் எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்வீர்கள் என்றால் பிறகு என்ன ஆகி விடுவீர்கள். எப்படி தந்தையின் மகிமையாக ஒரு பாடல் உருவாக்கி இருக்கிறீர்கள்தான் இல்லையா -சத்தியம், சிவம், சுந்தரம். அப்படி நீங்கள் அனைவரும் கூட மாஸ்டர் சத்தியம், சிவம், சுந்தரம் ஆகி விடுவீர்கள். அந்த கண்ணாடி மூலமாக சத்தியமான மற்றும் உண்மையான அழகின் சாட்சாத்காரம் கிடைக்கும். அந்த மாதிரி தன்னுடைய முகத்தை ஆக்கிக் கொண்டிருக்கிறீர்களா? பட்டியில் அதற்காகத்தான் வந்திருக்கிறீர்கள் இல்லையா? லௌகீகத் தன்மையை இப்பொழுது பட்டியில் அர்ப்பணம் செய்து விட்டீர்களா? எந்த விதமான லௌகீக உள்உணர்வு, பார்வை, உறவின் நினைவு, லௌகீக மரியாதை, லௌகீக பழக்க வழக்கங்களின் வசமாகி அலௌகீக பழக்கங்கள் மற்றும் அன்பை மறந்து விடவில்லையே அலௌகீக அன்பு மற்றும் அலௌகீக பழக்க வழக்கங்களின் முழுமையான முத்திரையை உறுதியாக இட்டுக் கொண்டு விட்டீர்களா? முழுமையான முத்திரை இட்டுக் கொண்டீர்களா? அதை ஒருவர் எவ்வளவுதான் அழிக்க முயன்றாலும் அழிக்க முடியாதபடி இட்டுக் கொண்டீர்களா? அந்த மாதிரி முத்திரையை யார் தனக்குத் தானே இட்டுக் கொண்டார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். பார்த்துக் கொள்ளுங்கள் லௌகீக பழக்க வழக்கத்தின் சோதனை மிகவும் கடுமையானதாக வரும். சிலர் கையை உயர்த்தவில்லை, இவர்கள் தன்னுடைய பாதுகாப்பை வைத்துக் கொள்வோம் என்று நினைக்கிறார்கள் ஆனால் பாதுகாப்பு இதில் இருக்கிறது. யார் எவ்வளவு தைரியம் வைப்பார்களோ அவ்வளவு உதவி கிடைக்கும். முதலிலேயே தன் மேல் சந்தேக புத்தி இருப்பதினால் தோல்வி ஏற்பட்டு விடுகிறது. தெரியவில்லை, நாம் தோல்வி அடைந்து விடுவோமோ என்று. இதுவும் தன் மேல் ஏன் சந்தேகம் வைக்கிறார்கள். நாம் வெற்றியை அடைந்தே காட்டுவோம் என்று இதை ஏன் யோசிப்பதில்லை. வெற்றி இரத்தினங்கள்தான் இல்லையா. எனவே ஒருபொழுதும் முயற்சி செய்வதில் தன் மேல் சந்தேகபுத்தி உடையவராக ஆகக் கூடாது. சந்தேக

புத்தி இருப்பதினால்தான் தோல்வி ஏற்பட்டு விடுகிறது. தன்னுடைய சந்தேக எண்ணமே, மாயாவை வெல்பவராக ஆக்க விடுவதில்லை.

பெரும்பான்மையோர் வெற்றி ரத்தினங்களாக இருக்கிறார்கள். வெற்றித் திலகத்தையும் இட்டுக் கொண்டுதான் செல்கிறீர்கள் இல்லையா. வெற்றியோ நமது பிறப்புரிமை என்று எப்பொழுதும் இதை நினைவில் வைத்து அடியெடுத்து வைத்தீர்களா? அதிகாரியாகி காரியம் செய்வதினால் வெற்றியின் அதிகாரம் அவசியமாக பிராப்தியாகிறது. இதில் எண்ணத்தை உருவாக்குவதற்கான அவசியமே இல்லை. கனவில் கூட வெற்றி ஏற்படுமா அல்லது இல்லையா என்று தெரியவில்லை என்ற எண்ணம் வரவேண்டாம். மாஸ்டர் ஞானம் நிறைந்தவரின் வாயிலிருந்து தெரியவில்லை என்ற வார்த்தை வரக்கூடாது. எப்பொழுது படைப்பின் முதல், இடை, கடையை, மூன்று காலங்களையும் தெரிந்து கொண்டீர்களோ, மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக ஆகி விட்டீர்கள் என்றால் அந்த மாதிரி மாஸ்டர் ஞானம் நிறைந்தவரின் வாயிலிருந்து தெரியவில்லை என்ற வார்த்தை வெளி வர முடியாது. அவருக்கோ அனைத்தும் தெரியும் இது அஞ்ஞானிகளின் பாஷை ஞானியின் பாஷை இல்லை. ஒருவேளை ஏதாவது தவறு செய்தால் கூட இந்த தவறான காரியத்தை செய்து கொண்டிருக்கிறேன் என்று ஞானத்தின் ஆதாரத்தில் தெரிய வரும். தெரிய வருகிறதுதான் இல்லையா. தெரியவில்லை இது நடக்குமா அல்லது நடக்காதா என்று கூறுவது பிராமணர்களின் பாஷை இல்லை. எனவே பட்டியில் 21 ஜென்மம் முத்திரை உறுதியாக அழியாததாக இருக்கும் மாதிரி முத்திரையை உறுதியாக இட்டுச் செல்லுங்கள். அப்படி பட்டியின் இரண்டு பரிசுகளையும் அனைவரும் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? இப்பொழுது பட்டியிலிருந்து சென்ற பிறகு என்ன செய்வீர்கள். தன்னை மாற்றுவதற்காக பட்டியில் வந்திருக்கிறீர்கள். யார் தன்னை எவ்வளவு மாற்றத்தில் கொண்டு வர முடியுமோ அவ்வளவே அவர் மற்றவர்களிலும் மாற்றத்தை கொண்டு வர முடியும். ஒருவேளை மாற்றத்தில் குறைவாக வருகிறார்கள் என்று சேவையில் பார்த்தீர்கள் என்றால் கண்ணாடி என்ன எடுத்துச் செல்கிறீர்களோ அதில் எனக்குள் தன்னைத் தானே மாற்றத்தில் கொண்டு வருவதற்கான அத்தனை சக்தி வந்திருக்கிறதா என்று அதில் பாருங்கள். ஒருவேளை தன்னை மாற்றுவதற்கான சக்தி குறைவாக இருக்கிறது என்றால் மற்றவர்களையும் இவ்வளவேதான் மாற்றத்தில்

கொண்டு வர முடியும். அப்படி இரண்டு விஷயங்களை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். ஒன்றோ ஒவ்வொரு விஷயத்தில் மாற்றம் செய்ய வேண்டும். வெளகீகத்திலிருந்து அலௌகீகத்தில் வர வேண்டும் மற்றும் இன்னொன்று பரிபக்குவத்தன்மை வர வேண்டும். ஒருவேளை பரிபக்குவத்தன்மை இல்லை என்றால் வெற்றி ஏற்படுவதில்லை. அப்படி மாற்றுதலிலும் கொண்டு வர வேண்டும் மேலும் தன்னுள் பரிபக்குவத்துவம் அதாவது உறுதித்தன்மையையும் கொண்டு வர வேண்டும். இந்த முக்கியமான இரண்டு விஷயங்களையும் குடும்பத்தில் இருந்து கொண்டு காரியம் செய்யும் நேரத்தில் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். ஒருவேளை இரண்டு விஷயங்களையும் நினைவு வைத்தீர்கள் என்றால் அவசியம் வெற்றி ஏற்படும். சுலபமான விஷயத்தைக் கூறினோம் இல்லையா, மாதர்களுக்கு சுலபமான விஷயங்கள் தேவையாக இருக்கிறது இல்லையா. அப்படியே மாதர்கள் அலங்காரத்தை கண்ணாடியில் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். பாப்தாதாவும் அதே வேலையைக் கொடுக்கிறார். நல்லது,

இந்த பட்டி மதுபன்னின் எல்லைக்கப்பாற்பட்ட பட்டி ஆகும். எனவே தன்னுடைய குடும்பத்தையும் இந்த எல்லைக்கப்பாற்பட்ட பட்டியின் மாடல் ரூபம் என்று புரிந்து நடந்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு பொருளின் மாடல் சின்னதாகத்தான் தயாரிப்பார்கள். எப்படி பட்டி செய்து கொண்டிருக்கிறீர்கள். அதே போல தன்னுடைய குடும்பத்தையும் மாடல் ரூபமாக ஆக்க வேண்டும். பிறகு என்ன ஆகும்? அதே பட்டியின் விஷயங்கள், பட்டியின் தாரணை, பட்டியின் தினசரி நடவடிக்கைகள் அங்கு நடக்க முடியும். எனவே குடும்பத்தில் வந்து தன்னுடைய உள்ளுணர்வை பட்டி மாதிரியே வைத்துக் கொள்ள வேண்டும். உள்ளுணர்வை மாற்ற வேண்டாம். எப்படி இங்கு பட்டியில் உயர்ந்த உள்ளுணர்வு இருக்கிறது அதே போல் குடும்பத்திலும் உயர்ந்த உள்ளுணர்வை வைத்துக் கொள்ள வேண்டும். உள்ளுணர்வை மாற்றினீர்கள் என்றால் பிறகு குடும்பத்தின் சூழ்நிலைகள் நிலையை ஆட வைத்து விடும் ஆனால் ஒருவேளை உள்ளுணர்வை இப்படியே உயர்ந்த நிலையில் வைத்தீர்கள் என்றால் குடும்பத்தில் வரக்கூடிய அனேக் சூழ்நிலைகள் உங்களுடைய நிலையை ஆடச் செய்ய முடியாது. புரிந்ததா? அப்படி உயர்ந்த உள்ளுணர்வை உடன் எடுத்துச் செல்லுங்கள், பிறகு வெற்றி ஏற்கனவே நிச்சயக்கப்பட்டது என்று பார்ப்பீர்கள். தாய்மார்கள்

மேல் அனேகரையும் விட அதிக அன்பு இருக்கிறது ஏனென்றால் தாய்மார்கள் அதிகமான துக்கத்தை சகித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதிகமாக அழைத்ததும் தாய்மார்கள்தான். அதிக துக்கம் சகித்துக் கொண்ட காரணத்தினால், அடிகளை சகித்துக் கொண்ட காரணத்தினால், களைப்படைந்து போன காரணத்தினால் தந்தை அன்போடு காலைப் பிடித்து விடுகிறார். இவர்களுக்கு அன்பு மற்றும் துணிச்சலை கொடுக்க வேண்டும். அன்பை மட்டும் நினைவு வைத்துக் கொள்ளாதீர்கள் ஆனால் கொடுக்கப்பட்ட துணிச்சலையும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள்.

நல்லது. பட்டியின் முழு பாடம் மற்றும் அறிவுரை என்ன எடுத்திருக்கிறீர்களோ அதன் சாரத்தை மூன்று வார்த்தைகளில் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். மேலும் ஓடிக் கொண்டிருக்கிறேனா என்று தன்னைப் பார்த்துக் கொண்டே இருங்கள். வளைந்து கொண்டும் இருக்கிறேனா மற்றும் இணைத்துக் கொண்டும் இருக்கிறேனா? மூன்றில் ஏதாவது குறை இல்லையே. பிறகு விரைவில் சம்பூர்ணம் ஆகி விடுவீர்கள். இந்த குரூப்பிற்கு முக்கியமாக இந்த நினைவுத்திலகம் இட்டுக் கொண்டிருக்கிறோம். திலகம் நினைவின் அடையாளம் இல்லையா. எனவே இந்த கண்கள் மூலமாக பார்த்தும் அழியக்கூடிய அனைத்து பொருட்களையும் பார்த்துக் கொண்டும் தன்னுடைய புது உறவு புது உலகத்தை மட்டும் பார்த்துக் கொண்டே இருக்கவும். இந்த கண்களால் பார்க்கப்படும் அழியும் பொருட்களில் அழியும் நினைவு இருக்கட்டும். இந்த நினைவுத் திலகத்தை இந்த குரூப்பிற்கு இடுகிறோம். பிறகு எந்தவொரு விஷயத்திலும் தோல்வி அடையமாட்டார்கள். ஏனென்றால் பார்ப்பதே அழியும் பொருளைத்தான், எனவே தன்னை வெற்றி அடைபவராக ஆக்குவதற்கான தினந்தோறும் அமிர்தவேளையில் இந்த நினைவுத் திலகத்தை தனக்கு இட்டுக் கொள்ள வேண்டும். வெகுளியான மாதர்கள். இதே மாதர்கள் ஒருவேளை மைதானத்தில் வந்து விட்டார்கள் என்றால் உலகில் யார் தன்னை சிங்கம் என்று நினைக்கிறார்களோ அவர்கள் வெள்ளாடு ஆகி உங்களுடைய சரணங்களில் வந்து விடுவார்கள். ஏனென்றால் எந்த விஷயத்தில் அவர்கள் பலஹீனமானவர்களோ மற்றும் கோழைகளோ அந்த விஷயத்தின் பிரத்யக்ஷபிரமானம் நீங்கள். உங்களுடைய பிரத்யக்ஷபிரமானத்தைப் பார்த்து வெட்கி தலைகுனிவார்கள். அதாவது வெள்ளாடு ஆகி

விடுவார்கள் இல்லையா. தாய்மார்கள் இவ்வளவு உயர்ந்த சேவை செய்ய முடியும். ஒரு நொடியில் சிங்கத்தை வெள்ளாடு ஆக்க முடியும். அந்த மாதிரி மந்திரவாதி ஆவீர்கள். மந்திரத்தினால் சிங்கத்தை வெள்ளாடு ஆகவும், வெள்ளாட்டை சிங்கமாகவும் ஆக்குகிறார்கள்தான் இல்லையா, தாய்மார்கள் நீங்களும் அந்த மாதிரி மந்திர வேலையை காண்பிக்க முடியும். நீங்கள் சிங்கமாக மட்டும் ஆகி விடுங்கள் பிறகு சிங்கங்கள் அவர்கள் வெள்ளாடு ஆகி விடுவார்கள். அப்படி கடைசியில் நடந்த தர்ம யுத்தத்தை காண்பித்திருக்கிறார்கள் இல்லையா. அது வெளிப்பட வேண்டும். உங்களுடைய இந்த சேவையினால் எப்பொழுது சிங்கம் வெள்ளாடு ஆகி விடுமோ பிறகு அவர்களை பின்பற்றி நடப்பவர்களோ பின்னால் இருக்கவே இருக்கிறார்கள். ஒரு சிங்கத்தை மட்டும் வெள்ளாடு ஆக்கினீர்கள் என்றால் அனேக சிங்கங்கள் வலைக்குள் வந்து விடுவார்கள். எனவே தாய்மார்கள் இந்த சேவைக்காகத் தயாராக இருக்க வேண்டும். ஒருவேளை இவ்வளவு பெரிய சக்திதளத்தின் கூட்டம் முற்றுகையிட்டால் அவர்கள் தாங்க முடியுமா? சவால் விடுவதற்கு தைரியம் வேண்டும். இப்பொழுது நடைமுறையில் சோதனைகளை கடக்க வேண்டும். ஒன்று தியரியின் (பாடம்) பரீட்சை இன்னொன்று பிராக்டிகலின் ப்ரீட்சை. தியரியிலோ தேர்ச்சி பெற்று விட்டீர்கள் இப்பொழுது பிராக்டகலில் தேர்ச்சி பெற வேண்டும். சக்திகளிடம் தைரியம் இருந்தால் சர்வ சக்திவானும் உதவி கொடுப்பார். இதுவோ எப்பொழுதும் நினைவு இருக்கிறதுதான் இல்லையா. இப்பொழுது திருப்பிக் கொடுக்க மட்டும் வேண்டும். இவ்வளவு கடின உழைப்பு செய்தீர்கள்தான் இல்லையா அதை திருப்பிக் கொடுக்க வேண்டும். இவர்கள் அனைவரும் சிங்கங்கள். சிங்கங்கள் யாரையும் கண்டு ஒருபொழுதும் பயப்படுவதில்லை. பயமற்றதாக இருக்கும். என்னவாகும் என்று தெரியவில்லை என்ற பயமும் இருப்பதில்லை. இதில் கூட பயமற்றவராக ஆக வேண்டும். அந்த மாதிரி சிங்கங்களாக ஆகி விட்டீர்களா? (ஆகி விடுவோம்). எப்பொழுது? முதல் நாளே எப்பொழுது பட்டியில் வந்தீர்களோ, பட்டியில் வருவது என்றால் மாறுவது. புரிந்ததா. மாற்றத்தின் விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்கள் இல்லையா. பாப்தாதாவும் மாற்றத்தின் விழாவில் வந்திருக்கிறார். இன்று இறுதி முத்திரை இட வேண்டும், பிறகு இந்த மாற்றத்தை மறக்கக் கூடாது. ஒவ்வொருவருக்கும் தன்னுள் ஏதாவது விசேஷத்தை நிரப்ப வேண்டும். ஏதாவது ஒரு பாடத்தில் நம்பர்-1 ஆக அவசியம் ஆக வேண்டும்.

அனைத்திலுமே ஆக வேண்டும். ஒருவேளை ஆக முடியாது என்றால் ஏதாவது ஒரு பாடத்தில் விசேஷமாக நம்பர்-1 அவசியம் ஆக வேண்டும். இங்கிருந்து சென்று பிறகு சேவையில் உதவியாளராக ஆவதற்காக சொல்லியிருந்தோம் அதற்கான திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? என்ன திட்டம் உருவாக்கியிருக்கிறீர்களோ அதன் படி அவசியம் தயாராகவும் இருக்க வேண்டும். தடைகளோ வரும் ஆனால் எப்பொழுது அவசியமான விஷயம் புரிய வைக்கப்படுகிறது என்றால் அதற்கான ஏற்பாடும் செய்யப்படுகிறது. எப்படி உங்களுடைய குடும்பத்தில் அனேக அவசியமான விஷயங்கள் எதிரில் வருகின்றன என்றால் ஏற்பாடுகள் செய்கிறீர்கள்தான் இல்லையா. இதே முறையில் தன்னை சுதந்திரமாக ஆக்குவதற்காகவும் ஏதாவது ஒரு ஏற்பாடை செய்யுங்கள். யாரையாவது உங்களுடன் இருப்பவராக ஆக்கிக்கொள்ளுங்கள். உங்களுக்குள்ளும் ஒன்றிரண்டு தெய்வீகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சகயோகி ஆக முடியும் ஆனால் எப்பொழுது ஆவர்களோ அப்பொழுது இவ்வளவு ஒருவர் இன்னொரு வருக்கு அன்பு கொடுத்து சகயோகி ஆக்குவார்கள். எப்படி தன்னுடைய பந்தனத்தை லேசாக்க முடியும் என்ற திட்டம் போட வேண்டும். சிலர் புத்திசாலிகளாக இருந்தால் தன்னுடைய பந்தனங்களை விடுவிப்பதற்காக வழிகளைக் கண்டுபிடிக்கிறார்கள். ஏற்பாடு கிடைத்தால் வெளிவர முடியும் என்று அப்படி இருக்க வேண்டாம். அவரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். தன்னைத் தானே சுதந்திரமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் செய்ய மாட்டார்கள். யோகயுக்தாகி அந்த மாதிரி திட்டத்தை யோசிப்பதினால் ஆசை நிறைவேறுவதற்காக ஏற்பாடும் கிடைத்து விடும். நிச்சயபுத்தியுடையவராக மட்டும் ஆகி தன்னுடைய உற்சாகத்தை அதிகப்படுத்துங்கள். உற்சாகம் சோர்வடைந்தால் ஏற்பாடுகளும் கிடைப்பதில்லை. உதவியாளர் யாரும் கிடைப்பதில்லை எனவே தைரியமுள்ளவராக ஆனீர்கள் என்றால் உதவியாளராகவும் யாராவது ஆகி விடுவார்கள். இப்பொழுது தன்னை சுதந்திரமாக ஆக்குவதற்காக ஒவ்வொருவரும் தன்னுள் எவ்வளவு சக்தியை நிரப்புகிறார்கள் என்று பார்க்கலாம். மாயையை வென்றவர்கள்தான் நீங்கள் ஆனால் தன்னை சுதந்திரமானவராக ஆக்குவதற்கும் சக்தி மிக அவசியம். சக்தி எவ்வளவு நிரப்பியிருக்கிறீர்கள் என்ற பரீட்சையும் இருக்கும். யார் குடும்பத்திலிருந்து சுதந்திரமாகி உதவியாளர் ஆவார்களோ அவர்களுக்கு வெகுமதியையும் அனுப்புவோம். நல்லது.

சிறு குழந்தைகள் தந்தைக்குச் சமமானவர்களாக இருக்கிறார்கள். அனைவருமே ஒன்றுதான். இருந்தாலும் அறிமுகத்திற்காக குஜராத்தி, பஞ்சாபி என்று கூறுகிறோம். குஜராத் நம்பர்-1 ஆகி காண்பிப்பீர்கள்தான் இல்லையா. வெகுமதிக்குத் தகுதியானவராக யார் ஆகிறார் என்று பார்க்கலாம். ஒவ்வொரு இரத்தினத்திற்கும் அவரவர்களின் விசேஷம் இருக்கிறது. சிலரிடம் அன்பின், சிலரிடம் உதவி செய்வதின், சிலரிடம் சக்தியின், சிலரிடம் தெய்வீக குணங்களின் மூர்த்தியாவதின், சிலரிடம் ஞானத்தின் விசேஷம் இருக்கிறது. இப்பொழுது அனைத்து சக்திகளையும் தன்னுள் நிரப்ப வேண்டும். சர்வ குண சம்பன்னமாக 16-கலைகள் நிரம்பியவராக ஆக வேண்டும். சர்வ குண சம்பன்னமாக ஆகவில்லை என்றால் 16-கலைகளிலிருந்து 14-கலைகள் ஆகி விடும். முழு நிலவில் கொஞ்சம் கலை குறைந்தாலும் பார்ப்பதற்கு நன்றாக இருக்காது. சம்பூர்ண நிலவைப் பார்க்க அழகாக இருக்கும். தீவிரமாக முயற்சி செய்பவரின் அம்பு சரியான இலக்கைச் சென்று பாயும். ஒருபொழுதும் மாயாவிடம் தோல்வி அடையக்கூடாது. ஒளியின் உருண்டையாகி செல்ல வேண்டும். ஒளியை ஞானத்திற்கும் சொல்வார்கள் மற்றும் ஒளியில் சக்தியும் இருக்கிறது. முயலுவோம் என்ற வார்த்தை பலஹீனத்திற்கானது. எங்கு பலஹீனம் இருக்கிறதோ அங்கு மாயா முதலிலேயே தயாராக இருக்கிறது. எப்படி பலஹீனமான உடலில் நோய் முதலில் வந்து விடுகிறது. அதே போல் முயலுவோம் என்ற வார்த்தை கூறுவது கூட ஆத்மாவின் பலஹீனம் ஆகும். மாயா இவர் நம்முடைய வாடிக்கையாளர் என்று புரிந்து கொள்கிறது, பிறகு வந்து விடுகிறது. நிச்சயமுடையவருக்கு வெற்றி இருக்கிறது. எப்படி முழு நாளின் நினைவு இருக்கிறதோ அதே போல்தான் கனவு வருகிறது. ஒருவேளை முழு நாளிலும் சக்தி ரூபத்தின் நினைவு இருக்கிறது என்றால் பலஹீனமான கனவும் வராது. நல்லது.

**வரதானம்: உடல் மற்றும் உடல் சம்மந்தப்பட்ட உலகின் நினைவிலிருந்து இருக்கக் கூடிய அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்ட பரிஷ்தா ஆகுக!**

விலகி உயரே யாருக்கு எந்தவொரு தேகம் மற்றும் தேகதாரிகளின் ரிஷ்தா (உறவு) அதாவது மனதின் ஈடுபாடு இல்லையோ அவர்தான்

ஃபரிஷ்தா. ஃபரிஷ்தாக்களின் கால் எப்பொழுதும் பூமியிலிருந்து உயரே இருக்கின்றன. பூமியிலிருந்து உயரே என்றால் உடல் உணர்வின் நினைவிலிருந்து உயரே என்பதாகும். யார் உடல் மற்றும் உடல் சம்மந்தப்பட்ட உலகின் நினைவிலிருந்து உயரே இருக்கிறாரோ அவர்தான் அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்ட ஃபரிஷ்தா ஆகிறார். அந்த மாதிரி ஃபரிஷ்தாக்கள்தான் டபுள் லைட் நிலையின் அனுபவம் செய்கிறார்கள்.

**சுலோகன்: வார்த்தைகளின் கூடவே நடத்தை மற்றும் முகத்தினால் தந்தைக்குச் சமமான குணம் தென்படுகிறது என்றால் அப்பொழுதுதான் பிரத்யட்சதா (வெளிப்பாடு) ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.03.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கடந்து செல்வதற்கான சாதனம் சுயநிலை!

வியக்தத்தில் இருந்து கொண்டே அவ்யக்த நிலையில் இருப்பதற்கான பயிற்சி இப்பொழுது எளிதாகி விட்டது. எப்பொழுது, எங்கு தன்னுடைய புத்தியை ஈடுபடுத்த விரும்புகிறீர்களோ அப்படி ஈடுபடுத்த முடியும். இந்த பயிற்சியை அதிகரிப்பதற்காக தன்னுடைய வீட்டிற்கு அதாவது பட்டியில் வருகிறீர்கள். எனவே இங்கே குறைந்த காலத்தில் ஏற்படும் அனுபவத்தை நிரந்தரமாக ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். எப்படி இங்கு பட்டியில் மற்றும் மதுபன்னில் போகும் பொழுதும், வரும் பொழுதும் தன்னை அவ்யக்த பரிஷ்தா என்று நினைக்கிறீர்கள், அதே போல் கர்மஷேத்திரத்தில் மற்றும் சேவை பூமியிலும் இந்தப் பயிற்சியை தன்னுடனேயே வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு தடவை செய்த அனுபவத்தை எங்கேயும் நினைவு செய்ய முடியும். அப்படி இங்கே ஏற்பட்ட அனுபவத்தை அங்கேயும் நினைவு செய்வதினால் மற்றும் இங்கேயுள்ள நிலையில் அங்கேயும் நிலைத்திருப்பதினால் புத்திக்கு பழக்கம் ஏற்பட்டுவிடும். எப்படி லௌகீக வாழ்க்கையில் விரும்பாவிட்டாலும் ஒரு பழக்கம் தன் பக்கம் இழுத்து விடுகிறது. அதே போல் அவ்யக்த நிலையில் நிலைத்திருப்பதற்கான பழக்கம் ஏற்பட்ட பிறகு இந்த பழக்கம் தானாகவே அதன் பக்கம் இழுக்கும். இவ்வளவு முயற்சி செய்து கொண்டும் சில ஆத்மாக்கள் அப்படியும் இருக்கிறார்கள், இது என்னுடைய பழக்கம் என்று இப்பொழுது கூட கூறுகிறார்கள். ஏன் பலஹீனம் இருக்கிறது? ஏன் கோபப்பட்டீர்கள்? மென்மையானவர்களாக ஏன் ஆனீர்கள்? என்று கேட்டால், இது என்னுடைய பழக்கம் என்று கூறுவார்கள். இந்த மாதிரி பதிலை இப்பொழுது கூட சொல்கிறார்கள். அதே போல் இந்த நிலை மற்றும் இந்தப் பயிற்சியின் பழக்கம் ஏற்பட்டுவிட்டது என்றால் பிறகு விரும்பாவிட்டாலும் கூட இந்த அவ்யக்த நிலையின் பழக்கம் தன் பக்கம் கவர்ந்திழுக்கும். இந்தப் பழக்கம் உங்களை நீதிமன்றத்திற்கு செல்வதிலிருந்து காப்பாற்றும். புரிந்ததா எப்பொழுது தீயபழக்கத்தை

தன்னிடம் வைத்துக் கொள்ள முடியும் என்றால் இந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாதா என்ன? இரண்டு, மூன்று தடவை கூட ஏதாவது ஒரு விஷயத்தை நடைமுறையில் கொண்டு வரப்படுகிறது என்றால், நடைமுறையில் கொண்டு வருவதினால் பழக்கம் ஆகி விடுகிறது. இங்கு இந்த பட்டியில் மற்றும் மதுபன்னில் இந்தப் பயிற்சியை நடைமுறையில் கொண்டு வருகிறீர்கள்தான் இல்லையா? எப்பொழுது இங்கு நடைமுறையில் கொண்டு வருகிறீர்களோ மற்றும் பயிற்சி ஆகி விடுகிறது என்றால் அந்த பயிற்சியாக்கப்பட்டது என்னவாகி விட வேண்டும்? இயற்கையானதாகவும், இயல்பானதாகவும் ஆகி விட வேண்டும். புரிந்ததா. எப்படி இது என்னுடைய இயல்பு என்று கூறுகிறார்கள்தான் இல்லையா. அப்படி இந்தப் பயிற்சி மூலமாக இயற்கை மற்றும் இயல்பானதாக ஆகி விட வேண்டும். இந்த நிலை எப்பொழுது இயல்பானதாக ஆகி விடுகிறது என்றால் பிறகு என்னவாகும்? இயற்கையின் வினாசம் ஏற்பட்டு விடும். உங்களுடைய இயல்பு உருவாகாத காரணத்தினால் இந்த இயற்கையின் வினாசம் நின்று கொண்டிருக்கிறது. ஏனென்றால் ஒருவேளை எதிர்நோக்குபவர் தன்னுடைய சுயநிலை மூலமாக அந்த சூழ்நிலைகளை கடக்க முடியவில்லை என்றால் அந்த சூழ்நிலைகள் எப்படி வரும். எதிர்நோக்குபவர் இப்பொழுது தயாராகவில்லை, எனவே இந்த திரையை அகற்றுவதற்கு காலதாமதம் ஆகிறது. இதுவரை இந்தப் பழைய பழக்கங்களிலிருந்து, பழைய சம்ஸ்காரங்களிலிருந்து, பழைய விஷயங்களிலிருந்து, பழைய உலகிலிருந்து, பழைய உடலின் உறவினர்களிலிருந்து வைராக்கியம் ஏற்படவில்லை. எங்காவது செல்லும்பொழுது ஏதாவது பொருட்களை விட்டுவிட்டுச் செல்ல வேண்டும் என்றால் அவைகளிலிருந்து முகத்தை மறு பக்கம் திருப்ப வேண்டியதாக இருக்கிறது. அப்படி இப்பொழுது முகத்தை மறுபக்கம் திருப்பத் தெரியவில்லை. ஒன்றோ மறுபக்கம் திரும்புவதில்லை, இன்னொன்று என்ன சாதனங்கள் கிடைத்திருக்கிறதோ அதிலிருந்து முகத்தை மறுபக்கம் திருப்புவதில்லை. சீதை மற்றும் இராவணனின் பொம்மையை பார்த்திருக்கிறீர்கள்தான் இல்லையா. இராவணனின் பக்கம் சீதை என்ன செய்கிறாள். மறுபக்கம் முகத்தை திருப்பி கொள்கிறாள் இல்லையா. ஒருவேளை திருப்பிவிட்டால் சுலபமாக அதன் கவர்ச்சியிலிருந்து பாதுகாப்பாகி விடுவீர்கள் ஆனால் முகத்தை திருப்புவதில்லை. எப்படி சுடுகாட்டை நெருங்கியவுடன் காலை இந்தப் பக்கமும் முகத்தை அந்தப்

பக்கமுமாக செய்கிறார்கள் இல்லையா. அப்படி முகத்தைத் திருப்பிக் கொள்ளத் தெரியவில்லை. பிறகு முகத்தை இந்தப் பக்கம் வைத்துக் கொள்வதினால் ஏதாவது கவர்ச்சியில் மாட்டிக் கொள்கிறார்கள். அப்படி இரண்டு விதமான முகத்தைத் திருப்புதலும் தெரியவில்லை. மாயா மிகுந்த கவர்ச்சி செய்வதற்கான ரூபத்தை உருவாக்குகிறது எனவே விரும்பாவிட்டாலும் மறுபக்கம் திரும்புவதற்கு பதிலாக கவர்ச்சியில் வந்து விடுகிறார்கள். அதே கவர்ச்சியில் முயற்சி செய்வதை மறந்து, முன்னேறிச் செல்வதை மறந்து நின்று விடுகிறார்கள் என்றால் என்னவாகும்? இலக்கைச் சென்றடைவதில் காலதாமதமாகி விடுகிறது. குமாரர்களின் பட்டி நடக்கிறது இல்லையா. குமாரர்களுக்கு இந்த பொம்மையை எதிரில் வைத்துக் கொள்ள வேண்டும். மாயாவின் பக்கம் முகத்தை வைத்துக் கொள்கிறார்கள். மாயாவின் பக்கம் முகத்தை வைத்துக் கொள்வதினால் மாயாவின் பக்கத்திலிருந்து வரும் சோதனைகளை எதிர்கொள்ள முடிவதில்லை. ஒருவேளை அந்தப் பக்கம் முகத்தை வைக்கவில்லை என்றால் மாயாவின் சோதனைகளை எதிர்கொள்ள முடியும். நல்லது.

எப்பொழுதும் தூய்மையாக மற்றும் உயர்நிலையில் இருப்பதற்கான குமாரர்களின் நினைவுச்சின்னம் எது என்று தெரியுமா? சனந்த் குமார். அவரின் விசேஷமாக என்ன காண்பிக்கிறார்கள்? அவரை எப்பொழுதும் சிறிய குமார் ரூபத்தில்தான் காண்பிக்கிறார்கள். அவருக்கு எப்பொழுதும் ஐந்து வயது இருக்கிறது என்று கூறுகிறார். இது தூய்மையின் மகிமை ஆகும். எப்படி ஐந்து வயது சிறிய பையன் எப்பொழுதும் தூய்மையாக இருக்கிறார் இல்லையா. சம்மந்தங்களின் கவர்ச்சியிலிருந்து தூரமாக இருக்கிறார். அப்படி லௌகீக குடும்பம் எத்தனைதான் இருந்தாலும் சிறிய குழந்தை தூய்மையாக இருப்பது போல் உங்களுடைய நிலை இருக்க வேண்டும். இது தூய்மையின் நினைவுச்சின்னம்தான். குமார் என்றால் தூய்மையான நிலை. அதிலேயும் ஒருவரை மட்டும் காண்பிக்கவில்லை, குழுவைக் காண்பித்திருக்கிறார்கள். உதாரணமாக கொஞ்சம்தான் காண்பிக்கப்படுகிறது. அப்படி இது உங்கள் அனைவரின் குழுவின் நினைவுச்சின்னம் ஆகும். அந்த மாதிரி எண்ணம் அளவிலும் அனுபவத்திலும் தூய்மையின்மை இல்லாததுதான் தூய்மை என்று கூறப்படுவது. அந்த மாதிரி நினைவுச்சின்னத்திற்கு சமமாக நிலையை உருவாக்கிச் செல்ல வேண்டும். பட்டியில் அதற்காகத்தான்

வந்திருக்கிறீர்கள் இல்லையா. எப்பொழுது முற்றிலும் இந்த உலகத்து விஷயங்களிலிருந்து, சம்மந்தத்திலிருந்து விலகியவராக ஆவீர்களோ அப்பொழுதுதான் தெய்வீகக் குடும்பத்தின், பாப்தாதாவின் மற்றும் முழு உலகத்தின் அன்பிற்குரியவராக ஆவீர்கள். உலகியல் வழக்கப்படி கூட எப்பொழுது ஒருவர் உறவினர்களிடமிருந்து விலகியிருக்கிறார், குடும்பத்தில் இருந்து விலகியிருக்கிறார் என்றால் விலகியிருந்த பிறகு மிகவும் அன்பிற்குரியவராக ஆகிறார். மேலும் ஒருவேளை அவர்களுடன் இருந்து அவர்களின் உறவின் பற்றுதலில் இருக்கிறார் என்றால் இவ்வளவு அன்பிற்குரியவராக ஆவதில்லை. இது லௌகீக விஷயம் ஆகும் ஆனால் இங்கு ஞானம் நிறைந்து விலகியவர் ஆக வேண்டும். வெளியில் இருந்து மட்டும் விலகியவராக ஆக வேண்டாம், மனதின் ஈடுபாடு இருக்க வேண்டாம். எவ்வளவிற்கு எவ்வளவு விலகியவராக ஆவீர்களோ அவ்வளவு அன்பிற்குரியவராக அவசியம் ஆவீர்கள். இப்பொழுது தன்னுடைய உடலிலிருந்தும் விலகியவராக ஆகி விடுகிறீர்கள் என்றால் அந்த விலகியிருப்பதின் நிலை தனக்கே பிடித்தமானதாக இருக்கிறது என்ற அந்த அனுபவத்தை எப்பொழுதாவது செய்திருக்கிறீர்களா? எப்பொழுது தன்னுடைய விலகியிருப்பதின் நிலை தனக்கே பிரியமானதாகப்படுகிறது என்றால் பற்றுதலிலிருந்து விலகிய நிலை பிரியமாக இருக்காதா என்ன? எந்த நாள் உடல் மேல் பற்றுதல் ஏற்படுகிறது விலகிய நிலை இருப்பதில்லை என்றால் தனக்குத் தானே பிரியமானவராக இருப்பதில்லை. துயரம் அடைந்து விடுகிறீர்கள் அதே போல் வெளியில் உள்ள பற்றுதலிலிருந்து ஒருவேளை விலகியவராக ஆகவில்லை என்றால் அன்பிற்குரியவராக ஆவதற்கு பதிலாக துயரம் அடைந்து விடுகிறீர்கள். இந்த அனுபவம் அனைவருக்கும் இருக்கும். அந்த மாதிரி அனுபவத்தை நிரந்தரமாக ஏற்படுத்த முடிவதில்லை. உங்களில் யாராவது இந்த விலகிய நிலை மற்றும் அன்பிற்குரிய நிலையை அனுபவம் செய்யாதவர்கள் இருக்கிறீர்களா? தன்னை யோகி என்று கூறிக் கொள்கிறீர்கள் எப்பொழுது தன்னை சகஜ இராஜயோகி என்று கூறுகிறீர்கள் என்றால் இந்த அனுபவம் செய்யவில்லை என்பது இருக்க முடியாது. இல்லையென்றால் இந்த பட்டத்தை தனக்கு கொடுக்க முடியாது. யோகி என்றால் இந்த தகுதி இருக்கிறது அப்பொழுதுதான் யோகி என்பதாகும். இல்லையென்றால் தன்னுடைய அறிமுகத்தில் நாங்கள் சகஜ இராஜயோக படிப்பின் மாணவர்கள் என்ற வார்த்தையை கூற முடியாது. மாணவர்கள்தான் இல்லையா. மாணவர்களுக்கு படிப்பின்

அனுபவம் இல்லை என்பது இருக்க முடியாது ஆனால் இந்த அனுபவத்தை எவ்வளவு நிரந்தரமாக ஆக்க முடியும் மற்றும் எவ்வளவு குறைந்த காலத்திற்கு அனுபவம் செய்கிறீர்கள் என்பது வேறு விஷயம். இந்த வித்தியாசம் இருக்க முடியும் ஆனால் யார் பழைய மாணவர்களோ அவர்களுக்கு அனுபவம் குறைந்த காலத்திற்கு இருக்க முடியாது. ஒருவேளை இதுவரை குறைந்த காலத்திற்குத்தான் இருக்கிறது என்றால் பின்பு என்னவாகும்? சங்கமயுகத்தின் ஆஸ்தி மற்றும் எதிர்காலத்து ஆஸ்தி இரண்டும் குறைந்த காலத்திற்காக கிடைக்கும். புரிந்ததா. முழுக் காலத்திற்கும் என்ன ஆஸ்தி அடைய வேண்டுமோ அதை அடைய முடியாது. குறைந்த காலத்திற்கு அடைவார்கள். இதிலேயே திருப்தியாக இருக்கிறீர்களா என்ன?

இன்று குமாரர்களின் பட்டியின் ஆரம்பம் இல்லையா? பட்டியின் ஆரம்பம் என்றால் உறுதி ஆவதின் ஆரம்பம் ஆகும். சிலர் அர்ப்பணம் ஆவார்கள். சிலர் பட்டியில் உறுதி ஆவார்கள். சிலர் தூய்மையின் எண்ணத்தை உறுதி செய்வார்கள். இங்கோ செய்வதற்காகத்தான் வந்திருக்கிறீர்கள் இல்லையா. என்ன சொன்னீர்களோ அதைச் செய்தீர்களா? என்பதை இப்பொழுது பார்க்க வேண்டும். இந்த குரூப் மாயாவை முழுமையாக (Innocent) அறியாதவர்களாகி ஞானத்தில் முழுமையாகிச் (Scent) செல்ல வேண்டும். எப்பொழுது சத்யுக ஆத்மாக்கள் இவ்வுலகிற்கு வருகிறார்கள் என்றால் விகாரங்களின் விஷயத்தில் முற்றிலும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். பார்த்திருக்கிறீர்கள்தான் இல்லையா. நாம் ஆத்மாக்கள் சத்யுகத்தில் இருந்தோம் என்றால் என்னவாக இருந்தோம் என்ற நினைவு வருகிறதா? மாயாவின் ஞானத்திலிருந்து ஒன்றும் அறியாதவர்களாக இருந்தீர்கள். நினைவு வருகிறதா? தன்னுடைய அந்த சம்ஸ்காரம் நினைவில் வருகிறதா? அல்லது கேள்விப்பட்டோம் அதனால் புரிந்து கொண்டீர்களா? எப்படி தன்னுடைய இந்த ஜென்மத்தில் குழந்தை பருவத்தின் விஷயங்கள் தெளிவாக நினைவு வருகிறது அதே போல் நேற்றைய தன்னுடைய சம்ஸ்காரம் என்னவாக இருந்ததோ அந்த நேற்றைய சம்ஸ்காரம் இன்றைய வாழ்க்கையின் சம்ஸ்காரங்களுக்குச் சமமாக தெளிவாக நினைவில் வருகிறதா? அல்லது நினைவில் கொண்டு வர வேண்டியதாக இருக்கிறதா? தன்னுடைய சத்யுக சம்ஸ்காரம் அப்படியே தனக்கு தெளிவாக நினைவு வருகிறது என்பவர்கள் கையை உயர்த்துங்கள். இது தெளிவாக நினைவில் வர வேண்டும். சாகார

பாபாவிடம் தெளிவான நினைவு இருந்தது இல்லையா? எப்பொழுது தன்னுடைய ஆத்மீக சொரூபத்தின் நினைவு தெளிவாகவும், நிரந்தரமாகவும் இருக்குமோ அப்பொழுதுதான் இந்த நினைவும் இருக்கும். பிறகு இந்த நினைவும் தெளிவாகவும் நிரந்தரமாகவும் இருக்கும். இப்பொழுது ஆத்மீக நிலையின் நினைவு சில நேரம் உடலின் திரைச்சீலைக்குள் மறைந்து விடுகிறது. எனவே இந்த நினைவும் திரைச்சீலைக்குள் தென்படுகிறது. தெளிவாகத் தென்படுவதில்லை. ஆத்மீக நினைவு தெளிவாகவும் வெகுகாலம் இருப்பதினால் தன்னுடைய எதிர்கால ஆஸ்தி மற்றும் தன்னுடைய எதிர்கால சம்ஸ்கார சொரூபம் எதிரில் வரும். நீங்கள் படத்தில் என்ன காண்பித்திருக்கிறீர்கள்? ஒரு பக்கம் விகாரங்கள் ஓடுகின்றன, இன்னொரு பக்கம் புத்தியின் நினைவு தந்தை மற்றும் எதிர்கால பிராப்தியின் பக்கம் இருக்கிறது. இந்த லட்சுமி நாராயணன் படத்தினை காண்பித்திருக்கிறீர்கள் இல்லையா. இந்த படம் எதற்காக உருவாக்கியிருக்கிறீர்கள்? மற்றவர்களுக்காகவா? அல்லது தன்னுடைய நிலைக்காகவா? அப்படி எதிர்கால சம்ஸ்காரங்களை தெளிவாக நினைவில் கொண்டுவருவதற்காக ஆத்மீக சொரூபத்தின் நினைவு நிரந்தரமாக மற்றும் தெளிவாக இருக்கட்டும். எப்படி இந்த உடல் தெளிவாகத் தென்படுகிறது அதே போல் தன்னுடைய ஆத்மாவின் சொரூபம் தெளிவாகத் தென்படட்டும் அதாவது அனுபவத்தில் வரட்டும். அப்படியானால் இப்பொழுது குமாரர்கள் என்ன செய்ய வேண்டும்? முழுமையாகவும் ஆக வேண்டும். ஒன்றும் அறியாதவர்களாகவும் ஆக வேண்டும். சுலபமான படிப்புத்தான் இல்லையா. இரண்டு வார்த்தையில் உங்களுடைய முழு பாடத்திட்டமும் முடிவடைந்து விடும். பலஹீனம், பிரச்சனை ஆகிய இந்த விஷயங்களிலிருந்து முற்றிலும் ஒன்றும் அறியாதவர் என்ற இந்த முத்திரை இட்டுக் கொண்டு செல்ல வேண்டும். பலஹீனம் என்ற வார்த்தையும் முடிவடைந்து விட வேண்டும். இந்த குரூப்பின் பெயர் என்ன? சிம்பிலிசிட்டி மற்றும் ப்யூரிட்டியில் இருக்கக்கூடிய குரூப். யார் சிம்பிள் ஆக இருப்பாரோ அவர் ப்யூட்டிஃபுல் ஆக (அழகாக) இருப்பார். சிம்பிலிசிட்டி என்றால் உடையில் மட்டும் அல்ல? ஆனால் அனைத்து விஷயங்களிலும், நிர் அகங்காரி ஆவது என்றால் சிம்பிள் ஆவது ஆகும். கோபமற்றவர் என்றால் சிம்பிள் ஆகும். பேராசையற்றவர் என்றால் சிம்பிள் ஆகும். இந்த சிம்பிலிசிட்டி ப்யூரிட்டியின் சாதனம் ஆகும். நல்லது. சுலோகன் என்ன நினைவு வைத்துக் கொள்வீர்கள்? குமார் என்ன விரும்புகிறாரோ அதைச் செய்ய

முடியும். என்ன விஷயம் கூறினாலும் அவர்கள் முதலில் செய்வார்கள், காண்பிப்பார்கள், பிறகு கூறுவார்கள்" முதலில் கூறமாட்டார்கள். முதலில் செய்வார்கள், காண்பிட்டார்கள். பிறகு கூறுவார்கள். இந்த சுலோகனை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். நல்லது.

**வரதானம்: ஞான சூரியன், ஞான சந்திரனுடன் உடன் இருப்பவராகி இரவை பகலாக ஆக்கக்கூடிய ஆன்மீக ஞான நட்சத்திரங்கள் ஆகுக!**

எப்படி அந்த நட்சத்திரங்கள் இரவில் வெளிப்படுகின்றன அதே போல் ஆன்மீக ஞான நட்சத்திரங்கள் பிரகாசமாக இருக்கும் நட்சத்திரங்கள் நீங்களும் பிரம்மாவின் இரவில் வெளிப்படுகிறீர்கள். அந்த நட்சத்திரங்கள். இரவைப் பகலாக்குவதில்லை ஆனால் நீங்கள் ஞான சூரியன், ஞான சந்திரனுடன் உடன் இருப்பவராகி இரவை பகலாக்குகிறீர்கள். அவை ஆகாயத்தின் நட்சத்திரங்கள், நீங்கள் பூமியின் நட்சத்திரங்கள். அவை இயற்கையின் சக்தி ஆகும், நீங்கள் பரமாத்மா நட்சத்திரங்கள் ஆவீர்கள். எப்படி இயற்கையின் நட்சத்திர மண்டலத்தில் அனேக விதமான நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருப்பதாக தென்படுகிறது அதே போல் நீங்கள் பரமாத்ம நட்சத்திர மண்டலத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆன்மீக நட்சத்திரங்கள் ஆவீர்கள்.

**சுலோகன்: சேவையின் வாய்ப்பு கிடைப்பது என்றால் ஆசீர்வாதங்களினால் பையை நிரப்பவது ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 13.03.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பந்தன்முக்த் ஆத்மாவின் அடையாளங்கள்!

இங்கு அமர்ந்திருக்கும் அனைவரும் தன்னை பந்தன் முக்த் (பந்தனத்திலிருந்து விடுபட்ட) ஆத்மா என்று புரிந்திருக்கிறீர்களா? அதாவது அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டவர் ஆகி விட்டீர்களா? அல்லது இன்னும் ஏதாவது பந்தனம் உள்ளதா? சக்தி சேனை பந்தன்மூக்த் (விடுதலை) ஆகி விட்டீர்களா? சர்வ பந்தன்முக்க் ஆகி விட்டோம் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். சேவையின் காரணத்தினால் நிமித்தமாத்திரத்தில் இருப்பது என்பது வேறு விசயம் ஆனால் தனது பந்தனத்தை அழித்து முடித்து விட்டீர்களா? தன்னுடைய ரூபத்திலிருந்து பந்தன்முக்த் ஆகி, நிமித்த மாத்திரமாக மட்டும் சேவையின் காரணத்தினால் கடமைக்காக இந்த சரீரத்தில் இருக்கின்றேன் என்று நினைகிறீர்களா? (பெரும்பான்மையானோர் கை உயர்த்தினார்கள்) யாரெல்லாம் கை உயர்த்தி இருக்கிறீர்களோ, அவர்கள் ஒருபொழுதும் எண்ணத்தளவில் கூட சங்கல்பம் மற்றும் சரீரத்தினுடைய, சூழ்நிலைகளினுடைய அடிமைத்தனம் அல்லது சங்கல்பத்தில் சிறிது நேரத்திற்காக குழப்பம் கொண்டிருப்பது ஆகிய இவற்றின் சிறிதளவு அனுபவம் செய்கிறீர்களா அல்லது இவற்றைக் கடந்து விட்டீர்களா? பந்தன் மூக்த் ஆக இருக்கிறீர்கள் எனில், மனதிற்கு வசமாக அதாவது வீணான எண்ணங்களுக்கு வசம் ஆக மாட்டீர்கள். வீண் எண்ணங்கள் மீது முழுமையான கட்டுப்பாடு இருக்கும். சூழ்நிலைகளுக்கும் வசம் ஆகமாட்டீர்கள். சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கான முழுமையான சக்தி இருக்கும். யாரெல்லாம் கை உயர்த்தினீர்களோ, அவர்கள் இவ்வாறு இருக்கிறீர்களா? எனவே, இந்த பந்தனங்களிலும் கூட இப்பொழுது கட்டுண்டிருக்கிறீர்கள் அல்லவா! யார் பந்தன்மூக்த் ஆக இருப்பார்களோ, அவர்களுடைய அடையாளம் என்னவாக இருக்கும்? யார் பந்தன்மூக்த் ஆக இருப்பார்களோ, அவர்கள் எப்பொழுதும் யோகயுக்த் (நினைவு சொருபம்) ஆக இருப்பார்கள்.

பந்தன் முக்தாக இருப்பவர்களின் அடையாளம் யோகயுக்த் நிலை ஆகும். மேலும் யோகியாக இருப்பவர்களிடம் முக்கியமான குணம் என்ன தென்படும்? அனைத்தையும் அறிந்தே புத்தியின் விளையாட்டை செய்விக்கிறார்கள். யோகியினுடைய முக்கியமான குணம் மற்றும் இலட்சணம் என்னவாக இருக்கும்? எந்தளவு யோகியாக இருப்பார்களோ, அந்தளவு அனைவருடைய சகயோகியாக இருப்பார்கள். மேலும் அனைவருடைய சகயோகத்தின் அதிகாரியாக தானாகவே ஆகி விடுவார்கள். யோகி என்றால் சகயோகி என்று பொருள். ஒருவர் எந்தளவிற்கு யோகி ஆகிறாரோ, அந்தளவு அவருக்கு சகயோகம் அவசியம் கிடைக்கிறது. ஒருவேளை, அனைவரிடமிருந்தும் சகயோகத்தைப் பெற விரும்புகிறீர்கள் எனில் யோகி ஆகுங்கள். யோகிக்கு ஏன் சகயோகம் கிடைக்கிறது? ஏனெனில், விதையிடம் புத்தி யோகத்தை ஈடுபடுத்துகிறார்கள். விதையுடன் தொடர்பு அதாவது அன்பிருக்கும் காரணத்தினால், அன்பிற்குக் கைமாறாக சகயோகம் கிடைக்கிறது. எனவே, விதையுடன் யோகத்தை ஈடுபடுத்தக்கூடியவர், விதைக்கு அன்பு என்ற தண்ணீர் ஊற்றக்கூடியவர் அனைத்து ஆத்மாக்களின் மூலம் சகயோகம் என்ற பலனை பிராப்தமாகப் பெறுகிறார். எவ்வாறு சாதாரண மரத்திலிருந்து பழங்களைப் பெறுவதற்காக என்ன செய்யப்படுகிறது? அவ்வாறே யோகியாக இருப்பவர், ஒவ்வொருவருடனும் யோகத்தை ஈடுபடுத்துவதற்கான அவசியம் இல்லை, ஒவ்வொருவரிடமிருந்தும் சகயோகத்தைப் பெறுவதற்கான ஆசையும் இருக்காது; ஆனால் ஒரு விதையுடன் தொடர்பு இருக்கும் காரணத்தினால் அனைத்து ஆத்மாக்களோடும் அதாவது முழு மரத்துடன் தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது. எனவே, தொடர்பின் மீது கவனம் வைத்திடுங்கள். எனவே சகயோகி ஆவதற்காக, எந்தளவு மற்றும் எத்தகைய யோகி ஆகியிருக்கின்றேன் என்பதை முதலில் தனக்குத் தானே கேளுங்கள். ஒருவேளை, சம்பூரண யோகி ஆகவில்லை எனில், சம்பூரண சகயோகியாகவும் ஆக முடியாது. சகயோகத்தைப் பெறவும் முடியாது. ஒருவர் எவ்வளவுதான் முயற்சித்தாலும் விதையுடன் யோகத்தை ஈடுபடுத்தாமல் ஒரு இலை அதாவது ஒரு ஆத்மாவிடமிருந்து கூட சகயோகத்தைப் பெறுவது என்பது முடியாது. ஆகையினால், அனைவருடைய சகயோகி ஆவதற்கான மற்றும் அனைவருடைய சகயோகத்தைப் பெறுவதற்கான எளிய முயற்சி எது? விதை ரூபத்துடன்

தொடர்பு அதாவது யோகத்தை ஈடுபடுத்துவது. பிறகு, அதிக முயற்சி செய்து ஒவ்வொருவரிடமிருந்தும் பிராப்தி அடைவதற்கான ஆசை முடிந்து போய்விடும். உழைப்பிலிருந்து விடுபட்டுவிடுவீர்கள். சார்ட்கட் வழி (குறுக்கு வழி) இதுவாகும். ஒருவேளை, அனைவருடைய சகயோகி, சதா 'யோகயுக்த்' ஆக இருந்தீர்கள் என்றால் அவசியம் 'பந்தன் முக்த் ஆகவும் இருப்பீர்கள். ஏனெனில், எப்பொழுது சர்வ சக்திகளின் சகயோகம், சர்வ ஆத்மாக்களின் சகயோகம் பிராப்தியாக கிடைக்கிறதோ, அப்பொழுது அத்தகைய சக்தி ரூப ஆத்மாவிற்கு பந்தனத்தைத் துண்டிப்பது கடினமாக இருக்குமா என்ன? பந்தன் முக்த் ஆவதற்காக யோகயுக்த் ஆக வேண்டும். மேலும் யோகயுக்த் ஆவதால் அன்பு மற்றும் சகயோகயுக்த் ஆகி விடுகிறீர்கள். எனவே, அத்தகைய 'பந்தன்முக்த்' ஆகுங்கள். சகஜம் சகஜம் என்று சொல்லியே எவ்வளவு சமயம் ஆகி விட்டது!

அத்தகைய ஸ்திதியை இப்பொழுது அவசியம் கொண்டு வரவேண்டும். சரீரத்திலிருந்தாலும் நிமித்தமாக மட்டும் ஈஸ்வரிய காரியத்திற்காக ஆதாரமாக எடுத்திருக்கும் நிலைதான் பந்தன் முக்த் ஸ்திதியாகும். அடிமைத்தனம் இருக்காது. நிமித்த மாத்திரத்திற்கு (காரண காரியமாக) ஆதாரமாக எடுக்கப்பட்டுள்ளது. யார் சரீரத்தை நிமித்தமாத்திரத்திற்கு ஆதாரம் எனப் புரிந்திருப்பார்களோ, அவர்கள் ஒருபொழுதும் அடிமை ஆக மாட்டார்கள். நிமித்த ஆதாரமூர்த்திகள்தான் அனைத்து ஆத்மாக்களின் ஆதாரமூர்த்தி ஆக முடியும். யார் சுயம் தானே அடிமை ஆகியிருக்கிறாரோ, அவர் பிறரை எவ்வாறு காப்பாற்றுவார்? ஆகையினால், ஒவ்வொருவரும் எந்தளவு அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு இருப்பிர்களோ, அந்தளவு சேவையில் வெற்றியும் கிடைக்கும். எனவே, அனைத்திலும் வெற்றி பெறுவதற்காக அனைத்து அடிமைத்தனத்திலிருந்தும் விடுபட்டிருப்பது அவசியமானதாகும். இந்த ஸ்திதியை உருவாக்குவதற்காக இரண்டு வார்த்தைகளை நினைவில் வைத்திடுங்கள். அந்த இரண்டு வார்த்தைகள் மூலம் சுலபமாகவே அத்தகைய ஸ்திதியை உருவாக்க முடியும். அவை எந்த இரண்டு வார்த்தைகள்? எப்பொழுது பந்தன்முக்த் ஆகி விடுவீர்களோ, அப்பொழுது தொலைபேசியில் ஒருவருக்கொருவர் பேசுவதை கிரஹிக்க முடிவதுபோல் ஒருவருடைய சங்கல்பத்தில் என்ன உள்ளது என்பதையும் கிரஹிக்க முடியும். இப்பொழுது அவ்வாறு ஆகிக் கொண்டிருக்கிறீர்கள், ஆகையினால், யோசிக்க வேண்டியதாக உள்ளது.

இரண்டு வார்த்தைகள் உள்ளன 1. சாட்சி பார்வை மற்றும் 2. சாத்தி (துணைவன்). ஒன்று துணைவனை எப்பொழுதும் துணையாக வைத்துக் கொள்ளுங்கள். இரண்டாவது சாட்சியாகி ஒவ்வொரு கர்மமும் செய்யுங்கள். எனவே, துணைவன் மற்றும் சாட்சி பார்வை ஆகிய இந்த இரண்டு வார்த்தைகளை பயிற்சியில் கொண்டுவந்தீர்கள் என்றால், வெகு விரைவாக இந்த பந்தன்முக்த் நிலையை உருவாக்க முடியும். சர்வ சக்திவானின் துணை இருப்பதால் சக்திகளின் கூடவே அனைத்துமே பிராப்தமாகி விடுகின்றன. மேலும், கூடவே, சாட்சியாகி நடப்பதால் எந்த ஒரு பந்தனத்திலும் மாட்டிக்கொள்ளமாட்டீர்கள். எனில், பந்தன்முக்த் ஆகி விட்டீர்கள் அல்லவா? இதற்காக இந்த இரண்டு வார்த்தைகளை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும். அது யோகம், இது சகயோகம். இரண்டு விசயங்களும் வந்து விட்டன. இப்பொழுது எவ்வளவு சமயத்தில் அத்தகைய முயற்சி செய்வீர்கள்? முற்றிலும் பந்தன்முக்த் ஆகி, சாட்சி நிலையில் நிமித்த மாத்திரம் இந்த சரீரத்தில் இருந்துகொண்டு கடமையைச் செய்யவேண்டும். இப்பொழுது இந்த முறை தனக்குத் தானே இந்த சங்கல்பம் செய்துகொண்டு செல்ல வேண்டும். ஏனெனில், உங்களுக்கு (டீச்சர்களுக்கு) இது சுலபமானதாகும். விசேஷமாக டீச்சர்களுக்கு மட்டும் ஏன் சுலபமானதாக ஆகிறது? ஏனெனில், அவர்களுடைய முழுமையான வாழ்க்கையே நிமித்தமாத்திரத்திற்கு உள்ளது.

புரிந்ததா? டீச்சர்களே நிமித்தமானவர்கள் ஆவார்கள். இந்த சரீரத்தில் கூட நான் நிமித்த மாத்திரத்திற்கு இருக்கிறேன் என்ற எண்ணம் உங்களுக்கு இருக்க வேண்டும். இது சுலபமாக இருக்கும் அல்லவா? இவர்களுக்கு (கோபர்கள் - சகோதரர்கள்) இரட்டைப் பொறுப்பு உள்ளது. ஆகையினால், இவர்களுக்கு இதை விலக்குவதற்கான யுத்தம் செய்ய வேண்டியதாக உள்ளது. மற்றபடி யார் நிமித்தம் ஆகியிருக்கிறார்களோ, அவர்களுக்கு இது சுலபம் ஆகும். தாய்மார்களுக்கு பிறகு சுலபமானது எது? எவ்வாறு அவர்களுக்கு இந்த விசேஷ விசயத்தின் காரணத்தினால் சுலபமாக உள்ளதோ, அவ்வாறே உங்களுக்கும் கூட ஒரு விசயத்தின் காரணத்தினால் சுலபமானதாக இருக்கிறது. இல்லறத்தில் இருப்பவர்களுக்கும் இது சுலபமான விசயமே ஆகும். ஏனென்றால், உங்கள் முன்னால் எப்பொழுதும் கான்ட்ராஸ்ட் (வேறுபாடு, வித்தியாசம்) இருக்கிறது. கான்ட்ராஸ்ட் இருக்கும் காரணத்தினால் நிர்ணயம் செய்வது

சுலபமாகி விடுகிறது. நிர்ணயம் செய்யும் சக்தி குறைவாக இருக்கும் காரணத்தினால் சுலபமாகத் தோன்றுவது இல்லை. இதன் மூலம் என்ன கிடைக்கிறது என்பதை ஒரு முறை அனுபவம் செய்து விட்டீர்கள் என்றால், பிறகு நிர்ணயம் செய்து விடுவீர்கள். ஒரு முறை அடிபட்ட அனுபவம் கிடைத்து விட்டால், பிறகு அடிக்கடி அடிபடமாட்டார்கள். நிர்ணய சக்தி குறைவாக உள்ளதால் கடினமாகவும் ஆகி விடுகிறது. எனவே, இவர்கள் இல்லறத்தில் அதாவது குடும்பத்தில் இருக்கிறார்கள், அதன் அனுபவியாக இருக்கும் காரணத்தினால், எதிரில் கான்ட்ராஸ்ட் இருக்கும் காரணத்தினால் ஏமாற்றத்திலிருந்து தப்பித்து விடுகிறார்கள். யார் வரதானத்தின் அதிகாரி (உரிமையுடையோர்) ஆகிறார்களோ, அவர்கள் எதற்கும் அடிமை ஆகமாட்டார்கள். புரிந்ததா? எனவே, இப்பொழுது அடிமைத்தனம் சமாப்தியாகி அதிகாரம் ஆரம்பமாக வேண்டும். அடிமைத்தனத்தின் ஒரு எண்ணம் வரக்கூடாது. அத்தகைய உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும். நம்பிக்கையில் ஒருபோதும் சதவிகிதம் இருப்பதில்லை. சக்திசேனை தங்களுக்குள் என்ன தாரணை செய்திருக்கிறீர்கள்? எப்பொழுது அன்பு மற்றும் சக்தி சமமாக இருக்குமோ, அப்பொழுது சம்பூரணம் ஆகி விட்டீர்கள் என்று பொருள். தனது வீரமான ரூபத்தை சாட்சாத்காரம் செய்திருக்கிறீர்களா? வீரன் ஒருபொழுதும் எதைக் கண்டும் அஞ்சமாட்டார் ஆனால் வீரனுக்கு முன்னால் வருபவர்கள் அஞ்சுவார்கள். எனவே, இப்பொழுது வீரமான ரூபத்தின் சாட்சாத்காரம் என்ன செய்தீர்களெனில், அதையே எப்பொழுதும் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் இன்று இரண்டு வார்த்தைகள் (துணைவன், சாட்சி) என்ன கூறப்பட்டதோ, அவற்றை எப்பொழுதும் நினைவு வைக்க வேண்டும். நல்லது.

✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹✹

## 18.03.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெற்றியாளர் ஆவதற்காக கிரகிக்கும் மற்றும் போரிடும் சக்தி அவசியமாகும்!

இன்று முக்கியமாக பட்டியில் இருப்பவர்களுக்காக அழைத்திருக்கிறீர்கள். பட்டியில் இருப்பவர்கள் என்னென்ன தாரணைகள் செய்திருக்கிறார்கள்? என்று பார்த்துக் கொண்டிருந்தோம். இன்று முக்கியமாக ஒவ்வொருவரின் இரண்டு விஷயங்களின் தாரணைகளை இந்த சாகார உடல் மூலமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எது வரை ஒவ்வொருவரும் தனது சக்திகேற்றபடி இரண்டு சக்திகளையும் தாரணை செய்திருக்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தோம். என்ன அந்த இரண்டு சக்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம்? ஒன்றோ கிரகிக்கும் சக்தி மற்றும் மற்றொன்று போரிடுவதற்கான சக்தி. கிரகிக்கும் சக்தி கூட மிக அவசியமானது. எனவே பட்டியில் எந்த ஞான இரத்தினங்களின் தாரணை கிடைத்திருக்கிறதோ அதை பத்தியில் கிரகிக்க வேண்டும். மேலும் இந்த கிரகிப்பு செய்வதினால்தான் ஒருவர் போரிட முடியும். எனவே கிரகிப்பதற்கான மற்றும் போரிடுவதற்கான சக்தி இரண்டுமே மிக அவசியம். இரண்டு சக்திகளையும் தாரணை செய்திருக்கிறீர்களா? இரண்டில் ஏதாவது ஒன்றின் குறை இருக்கிறது என்றால் குறை இருப்பவர் ஒருபொழுதும் எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆக முடியாது. யாரிடம் எவ்வளவு கிரகிப்பதற்கான சக்தியிருக்கிறதோ அவ்வளவே போரிடுவதற்கான சக்தியும் இருக்கிறது. இரண்டு சக்திகளையும் தாரணை செய்வதற்காகத்தான் பட்டியில் வந்திருக்கிறீர்கள். அப்படியானால் சக்தி சொரூபமாக ஆகியிருக்கிறீர்களா?. பட்டியில் எந்த வரதானத்தைப் பெற்றிருக்கிறீர்கள்? பக்தி மார்க்கத்தில் புத்திரவான் ஆகுக, தனவான் ஆகுக! என்று வரதானம் கொடுக்கிறார்கள் இல்லையா? ஆனால் இந்த பட்டியில் இருந்து முக்கியமாக என்ன வரதானம் கிடைத்திருக்கிறது? ஆசிரியர் ஆகியிருக்கிறீர்கள் மற்றும் மாஸ்டர் வரம் அளிப்பவராகவும் ஆகியிருக்கிறீர்களா? சக்திவான் ஆகுக என்ற ஒரு

வரதானம் கிடைத்திருக்கிறது, எப்பொழுதும் ஒரே சீரான அவ்யக்த நிலைக்கான இன்னொரு வரதானமும் கிடைத்திருக்கிறது. இந்த இரண்டு வரதானங்களில் இரண்டு விஷயங்களுமே அடங்கியிருக்கிறது. இந்த இரண்டு வரதானங்களையும் பெற்று செல்வந்தன் ஆகி தன்னுடைய நடைமுறை எடுத்துக்காட்டை காண்பிப்பதற்காகச் செல்ல வேண்டும். வீட்டிற்குப் போகிறோம் மற்றும் தன்னுடைய இடத்திற்குப் போகிறோம் என்று அந்த மாதிரி நினைக்க வேண்டாம் ஆனால் என்ன சக்திகள் மற்றும் வரதானத்தை அடைந்திருக்கிறீர்களோ அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக உலக மேடைக்கு சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று அந்த மாதிரி புரிந்து கொள்ள வேண்டும். மேடையில் நடிகருக்கு எந்த முக்கியமான விஷயங்களின் மேல் கவனம் இருக்கிறது? அட்டென்ஷன் (கவனம்) மற்றும் அக்யூரஸி (துல்லியமாக செய்வது) இந்த இரண்டு விஷயங்களுமே நினைவு இருக்கிறது. அதே போல் நீங்களும் எப்பொழுது மேடையில் நடித்து பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்வதற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள் என்றால் இந்த இரண்டு விஷயங்களையும் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வினாடி ஒவ்வொரு எண்ணத்தில் அட்டென்ஷன் (கவனம்) மற்றும் அக்யூரேட் (சரியாக இருப்பது. இல்லையென்றால் பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்வதற்கான உயர்ந்த பங்கை செய்ய முடியாது. அப்படி இப்பொழுது என்ன செய்வதற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று புரிந்ததா?. பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்வதற்கான பங்கைச் செய்வதற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள். இந்த இலட்சியத்தை வைத்துச் செல்ல வேண்டும். என்ன காரியம் செய்தாலும் அந்தக் காரியம் மூலமாக பாப்தாதாவின் பிரத்யக்ஷதா ஆகுமா என்று முதலில் இதைப் பாருங்கள். வாய்மொழி மூலமாக மட்டும்தான் பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் என்று அப்படியும் இல்லை ஆனால் ஒவ்வொரு நேரத்தின் ஒவ்வொரு காரியம் மூலமாக பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். அனைத்து ஆத்மாக்களும் இவர்களோ ஒவ்வொருவரும் அப்படியே சாட்சாத் தந்தைக்குச் சமமானவர்கள் என்று வாய்மூலம் சொல்லும் மாதிரி பிரத்யக்ஷம் செய்யுங்கள். உங்களுடைய ஒவ்வொரு காரியமும் கண்ணாடி ஆகி விடட்டும். அந்தக் கண்ணாடி மூலமாக பாப்தாதாவின் குணங்கள் மற்றும் காரியத்தின் தெய்வீக ரூபம் மற்றும் ஆன்மீகத்தின் சாட்சாத்காரம் ஏற்படட்டும் ஆனால் கண்ணாடியாக யார் ஆக முடியும்?. யார் இந்த எண்ணங்களை மட்டும் அல்லாது இந்த தேக

அபிமானத்தையும் அர்ப்பணம் செய்கிறாரோ அவரால்தான் முடியும். யார் தேக அபிமானத்தை அர்ப்பணம் செய்கிறாரோ அவருடைய ஒவ்வொரு காரியமும் கண்ணாடி ஆகி விடுகிறது. ஏதாவது ஒரு பொருள் அர்ப்பணம் செய்யப்பட்டு விடுகிறது என்றால் பிறகு அந்த அர்ப்பணம் செய்யப்பட்ட பொருள் தன்னுடையது என்று நினைக்கப்படுவதில்லை. அப்படி இந்த தேக உணர்வையும் அர்ப்பணம் செய்யும்போது தன்னுடையது என்பது அகன்று விடுகிறது என்றால் பற்றுதலும் அகன்று விடுகிறது. அந்த மாதிரி சமர்ப்பணம் ஆகியிருக்கிறீர்களா? அந்த மாதிரி சமர்ப்பணம் ஆகுபவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்?

ஒன்றோ எப்பொழுதும் யோகயுக்த்தாக இருப்பார்கள் மற்றும் இன்னொன்று எப்பொழுதும் பந்தனமுக்த்தா. இருப்பார்கள். யார் யோகயுக்த்தாக இருப்பாரோ அவர் அவசியம் பந்தனமுக்த்தாக இருப்பார். யோகயுக்தத்தின் அர்த்தமே உடலின் கவர்ச்சியின் பந்தனத்திலிருந்து விடுபட்ட நிலை. எப்பொழுது உடலின் பந்தனத்திலிருந்து விடுபட்டு விட்டார் என்றால் அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்டே விடுகிறார். அப்படி சமர்ப்பணம் என்றால் எப்பொழுதும் யோகயுக்த் மற்றும் அனைத்து பந்தனங்களிலிருந்து விடுபட்ட நிலை. இந்த தன்னுடைய அடையாளத்தை எப்பொழுதும் நிலைத்திருக்க வைக்க வேண்டும். ஒருவேளை யாராவது பந்தனம் நிறைந்தவராக இருக்கிறார் என்றால் யோகயுக்த் என்று சொல்ல முடியாது. ஒருவர் யோகயுக்த்தாக இருக்கிறார் என்றால், அவருடைய ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு செயலும் யோகயுக்த்தாக இருக்கும். ஏனென்றால் என்னென்ன அனைத்து விதமான யுக்திகள் கிடைத்திருக்கின்றனவோ அவைகளின் தாரணையின் காரணமாக யுக்தியுக்த்தாகவும் யோகயுக்தாகவும் இருப்பார். இதுதான் அவரைத் தெரிந்து கொள்வதற்கான அடையாளம். புரிந்ததா? இதன் மூலம் நான் எதுவரை வந்திருக்கிறேன் என்று தன்னைத் தானே புரிந்து கொள்ளலாம். எனவேதான் கிரகிக்கும் மற்றும் போரிடும் சக்தி இரண்டையும் நிரப்பிச் செல்ல வேண்டும் என்று கூறினோம். ரிசல்ட்டாக என்ன பார்த்தீர்கள்? சான்றிதழ் கிடைத்ததா? ஒன்று. சான்றிதழ் வாங்குவதற்காக தன்னைத் தானே திருப்தி செய்வதற்கான சான்றிதழ் பெற வேண்டும் இன்னொன்று, அனைவரையும் திருப்தி செய்வதற்கான சான்றிதழ் பெற வேண்டும். மூன்றாவது, சம்பூர்ண சமர்ப்பணம் ஆக வேண்டும். சமர்ப்பணம் ஆவது என்றால் அபுவில் வந்து அமர்ந்து விடுவது

என்பதல்ல. எனவே சமர்ப்பணம் ஆவதற்காகவும் சான்றிதழ் பெற வேண்டும். நான்காவதாக என்னென்ன ஞானத்தின் வழிமுறைகள் கிடைத்திருக்கின்றனவோ அவற்றை கிரகிப்பதற்கான சக்தியின் சான்றிதழையும் பெற வேண்டும். இந்த நான்கு சான்றிதழ்களை தன்னுடைய ஆசிரியையிடமிருந்து பெற்றுச் செல்ல வேண்டும். சில விஷயத்தில் இந்த குரூப்பிற்கு நூறு மதிப்பெண்களும் கிடைத்திருக்கின்றது. அது எந்த விஷயம்? முயற்சி செய்வதின் வெகுளித்தனத்தில் நூறு சதவிகிதம். முயற்சி செய்வதில் வெகுளித்தனம்தான் அலட்சியமாகும். மேலும் ஒரு விசேஷ குணமும் இருக்கிறது. அது அனைவருக்கும் தன்னுள் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்ற தீவிரமான ஆசை அவசியம் இருக்கிறது. எனவே பாப்தாதா இந்த குரூப்பை நம்பிக்கைக்குரிய குரூப்ணி என்று நினைக்கிறார் ஆனால் எப்பொழுது பணிவாக இருந்து நடந்து கொள்வீர்களோ அப்பொழுதுதான் நம்பிக்கைகளை நிறைவேற்ற முடியும். நம்பிக்கைக்குரிய தரமானவர்கள்தான் ஆனால் என்ன குணாதிசயங்கள் கிடைத்திருக்கிறதோ அவற்றை தாரணை செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் நடைமுறை எடுத்துக் காட்டைக் கொடுக்க முடியும். புரிந்ததா?.

ஞானத்தின் இசையைக் கேட்பதும் மற்றும் ரகசியத்தைக் கேட்பதும் நல்லதுதான் ஆனால் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?. ரகசியத்தை அறிந்து நடந்து கொள்பவர் ஆக வேண்டும். யோகா நல்லதுதான் ஆனால் யோகயுக்த் ஆக வேண்டும். பந்தனமுக்த் ஆவதற்கான ஆசை இருக்கிறது ஆனால் முதலில் தேக அபிமானத்தின் பந்தனத்தை விலக்க வேண்டும். பிறகு அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்டவராக அவரே ஆகி விடுவார். புரிந்ததா?. இப்பொழுது இந்த முயற்சி செய்ய வேண்டும். எடுத்துக்காட்டைக் கொடுப்பவராகவும் உண்மையானவராகவும் ஆக வேண்டும். சக்தி நிறைந்தவராகவும் செல்வங்கள் நிறைந்தவராகவும் ஆகியிருக்கிறீர்களா? ஒவ்வொருவரும் தனக்குத் தானே உறுதிமொழியும் எடுத்து இருக்கிறார்கள். என்ன உறுதிமொழி எடுக்கப்பட்டிருக்கிறதோ அதை நிறைவேற்றுவதற்காக அவசியம் சக்தியையும் ஒன்றாக சேர்ப்பீர்கள். எவ்வளவுதான் சகித்துக் கொள்ள வேண்டியதாக இருந்தாலும், எதிர்நோக்க வேண்டியதாக இருந்தாலும் உறுதிமொழியை நிறைவேற்றியே ஆக வேண்டும். அந்த மாதிரி உறுதிமொழி எடுத்திருக்கிறீர்களா? முழு உலகத்திலுள்ள ஆத்மாக்கள் அனைவரும்

ஒன்றாக கூடி உறுதிமொழியிலிருந்து விலகிச் செல்ல வைக்கும் முயற்சியை செய்தாலும் கூட உறுதிமொழியிலிருந்து பின் வாங்க மாட்டோம் ஆனால் எதிர்கொண்டு சம்பூர்ணமாக ஆகியேதான் காண்பிப்போம், அந்த மாதிரி உறுதி செய்பவர்களின் நினைவுச்சின்னமாக "அச்சல் கர்' உருவாகியிருக்கிறது. எனவே எப்படி எனது நினைவுச்சின்னம் இருக்கிறதோ அதே போல் இப்பொழுது ஆகியே தீர வேண்டும் என்ற நினைவை எப்பொழுதும் வைத்துக் கொள்ள வேண்டும். இது சுலடம்தான் இல்லையா.ஸ்தூல அடையாளத்தை நினைவு வைப்பதினால் போதை மற்றும் இலக்கு நினைவிலிருக்கும். முழு உலகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விசேஷ ஆத்மாக்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். எவ்வளவு விசேஷ ஆத்மாக்களோ அவ்வளவு அவருடைய ஒவ்வொரு காரியத்திலும் விசேஷம் நிரம்பியிருக்கும் விசேஷ ஆத்மாக்கள்தான் இல்லையா, குறைந்தவர்கள் அல்ல. தன்னை நடைமுறையில் விசேஷ ஆத்மா என்று அனைத்து மதுபன் நிவாசிகளுக்கும் காண்பித்து தன்னுடைய இந்த குரூப்பின் பெயரை புகழடையச் செய்ய வேண்டும். குறைவாக சொல்வோம் ஆனால் செய்து காண்பிப்போம் என்று அந்த மாதிரியான லட்சியம் வைக்க வேண்டும். உங்களுடைய இந்த குரூப்பின் இந்த விசேஷத்தைப் பார்ப்போம். மேடையில் சென்று அனைவரும் மீண்டும் ஒரு முறை என்று கூறும் அளவிற்கு தன்னுடைய பங்கைச் செய்ய வேண்டும். புரிந்ததா?. உங்களுடைய பொறுப்பிலிருக்கும் ஆசிரியை உங்களுடைய குரூப்பிற்கு அடிக்கடி அழைப்பிதழ் கொடுக்க வேண்டும். மற்ற குரூப்களுக்கு உதாரணமாகிக் காண்பிக்க வேண்டும். யாராவது நல்ல காரியம் செய்து விட்டு சென்றார் என்றால் அது அடிக்கடி ஞாபகம் வரும். எனவே இந்த குரூப்பும் அந்த மாதிரி அதிசயம் செய்து காண்பிக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: நடத்தை மற்றும் முகம் மூலமாக தூய்மையின் அலங்காரத்தின் பொலிவைக் காண்பிக்கக் கூடிய அலங்கரிக்கப்பட்ட மூர்த்தி ஆகுக!**

தூய்மை பிராமண வாழ்க்கையின் அலங்காரம் ஆகும். ஒவ்வொரு நேரமும் தூய்மையின் அலங்காரத்தின் அனுபவம் முகம் மற்றும் நடத்தை மூலமாக மற்றவர்களுக்கு ஏற்படட்டும். பார்வையில், வார்த்தையில், கைகளில், கால்களில் எப்பொழுதும் தூய்மையின் அலங்காரம் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கட்டும். இவருடைய

இலட்சணங்களிலிருந்து தூய்மை தென்படுகிறது என்று ஒவ்வொருவரும் வர்ணனை செய்யட்டும். கண்களில் தூய்மையின் பொலிவு இருக்கிறது, வாயில் தூய்மையின் புன்முறுவல் இருக்கிறது மற்ற எந்த விஷயமும் அவர்களுக்குத் தென்பட வேண்டாம். இதைத்தான் தூய்மையின் அலங்காரத்தினால் அலங்கரிக்கப்பட்டவர் என்று கூறுவது.

**சுலோகன்: வீணான உறவு, நெருக்கம் கூட சேமிப்புக் கணக்கை காலி செய்து விடுகிறது எனவே வீணானதை முடிவு கட்டுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 25.03.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விலகியிருப்பவராகவும் மற்றும் உலகத்திற்கு பிரியமானவராகவும் ஆவதற்கான விதி!

அனைவரும் தன்னுடைய அலௌகீக (ஆன்மீக) மற்றும் பரலௌகீக போதை மற்றும் அடைய வேண்டிய லட்சியத்தில் எப்பொழுதும் இருக்கிறீர்களா? அலௌகீக போதை மற்றும் அடைய வேண்டிய லட்சியம் மேலும் பரலௌகீக போதை மற்றும் அடைய வேண்டிய லட்சியம் இரண்டையும் தெரிந்திருக்கிறீர்களா? இரண்டிலும் வித்தியாசம் இருக்கிறதா அல்லது ஒன்றே தானா? அலௌகீக போதை மற்றும் அடைய வேண்டிய லட்சியம் இந்த ஈஸ்வரிய ஜென்மத்தினுடையது மற்றும் பரலௌகீக போதை மற்றும் அடைய வேண்டிய லட்சியம் எதிர்காலத்து ஜென்மத்தினுடையது. அப்படியானால் ஈஸ்வரிய ஜென்மத்தின் போதை மற்றும் அடைய வேண்டிய லட்சியம் நினைவு இருக்கிறதா? கூடவே பரலௌகீக அதாவது எதிர்காலத்து போதை மற்றும் அடைய வேண்டிய லட்சியம் நினைவு இருக்கிறதா? ஒருவேளை இரண்டுமே எப்பொழுதும் இருக்கிறது என்றால் என்ன நினைவாக ஆகி விடும்? அலௌகீக போதை மற்றும் அடைய வேண்டிய லட்சியத்தினால் விலகியிருப்பவராக ஆவீர்கள் மற்றும் பரலௌகீக போதை மற்றும் அடைய வேண்டிய லட்சியத்தினால் உலகத்திற்குப் பிரியமானவர் ஆவீர்கள். அப்படி இரண்டு போதை மற்றும் அடைய வேண்டிய லட்சியத்தினால் விலகியிருப்பவராகவும், பிரியமானவராகவும் ஆகி விடுவீர்கள். புரிந்ததா?

இப்பொழுது அனைத்திலிருந்தும் விலகியிருப்பவராக ஆக வேண்டும். எப்பொழுது தன்னுடைய உடலிலிருந்தே விலகியிருப்பவராக ஆவீர்களோ அப்பொழுது அனைத்து விஷயங்களிலும் கூட விலகியிருப்பவராக ஆகி விடுவீர்கள். இப்பொழுது விலகியிருப்பவராக ஆவதற்காக முயற்சி

செய்து கொண்டிருக்கிறீர்கள். விலகியிருப்பவராக ஆவதினால் இயல்பாகவே அனைவரின் பிரியமானவராக ஆகி விடுவீர்கள். பிரியமானவராக ஆவதற்காக முயற்சி செய்வது என்பது கிடையாது விலகியிருப்பவராக ஆவதற்குத்தான் முயற்சி என்பது இருக்கிறது. ஒருவேளை அனைவரின் பிரியமானவராக ஆக வேண்டும் என்றால் என்ன முயற்சி செய்ய வேண்டும்? அனைவரிடமிருந்தும் விலகியிருப்பவராக ஆவதற்கான முயற்சி செய்ய வேண்டும். தன்னுடைய உடலிலிருந்து விலகியிருப்பவராக ஆகத்தான் செய்கிறீர்கள் ஆனால் ஆத்மாவில் என்னென்ன பழைய சம்ஸ்காரங்கள் இருக்கின்றனவோ அவற்றி லிருந்தும் விலகியவராக ஆகுங்கள். பிரியமானவராக ஆவதின் முயற்சியினால் பிரியமானவராக ஆனீர்கள் என்றால் முடிவு என்னவாக இருக்கும்? இன்னும் பிரியமானவராக ஆவதற்குப் பதிலாக, பாப்தாதாவின் இதயம் என்ற சிம்மாசனத்திலிருந்து தூரமாகி விடுவீர்கள். எனவே இந்த முயற்சி செய்யக் கூடாது. எந்தவொரு விலகியிருக்கும் அதாவது வித்தியாசமான பொருள் அனைவருக்கும் அவசியம் பிரியமானதாக இருக்கும். இந்த சபையில் கூட ஒருவேளை ஏதாவது ஒரு வித்தியாசமான பொருள் தென்படுகிறது. என்றால் அனைவரின் கவனம் மற்றும் அனைவரின் அன்பு அதன் பக்கம் சென்று விடும். எனவே நீங்களும் விலகியிருப்பவராக (பற்றற்று ஆகுங்கள். சுலபமான முயற்சிதான் இல்லையா. விலகியிருப்பவராக ஆக முடிவதில்லை, இதற்கு காரணம் என்ன? தற்சமயம் முழு உலகத்திலும் பற்றுதல் எதன் காரணத்தினால் ஏற்படுகிறது? (கவர்ச்சியினால்). கவர்ச்சி கூட சுயநலத்தினால்தான் ஏற்படுகிறது. தற்சமயம் அன்பின் காரணமாக பற்றுதல் ஏற்படுவதில்லை ஆனால் சுயநலத்தின் காரணமாகத்தான் ஏற்படுகிறது. அப்படி சுயநலத்தின் காரணமாக பற்றுதல் மற்றும் பற்றுதலின் காரணமாக விலகியவராக (பற்றற்றவராக) ஆக முடிவதில்லை. அப்படியானால் அதற்காக என்ன செய்ய வேண்டும்? சுயநலத்தின் அர்த்தம் என்ன? சுவார்த் (சுயநலம்) என்றால் சுயத்தின் (சுவ) ரதத்தை ஸ்வாஹா செய்யுங்கள். இந்த ரதம் அதாவது தேக அபிமானம், தேகத்தின் நினைவு, இந்த தேகத்தின் மேல் பற்றுதல் ஏற்பட்டிருக்கிறது, இந்த சுவார்த்தை (சுயநலத்தை எப்படி அழிப்பது? அதற்கான சுலபமான முயற்சி என்னவென்றால் சுவார்த் என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள். சுவார்த் இல்லை என்றால் விலகியவராக ஆகியே விடுவீர்கள். ஒரே ஒரு அர்த்தத்தை

மட்டும் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து அர்த்த சொரூபம் ஆக வேண்டும். அப்படி ஒரு வார்த்தையின் அர்த்தத்தைத் தெரிந்து கொள்வதினாலேயே எப்பொழுதும் ஒருவரின் மற்றும் ஒரே சீரான நிலையில் இருப்பவராக ஆகி விடுவீர்கள். நல்லது.

இன்று டீச்சர்ஸ் பட்டியின் துவக்கத்தின் நாள். சம்பூர்ணமாக அர்ப்பணம் ஆவதற்கான சக்தி இருக்கிறதா? இந்த குரூப் பொறுப்பு (இன்சார்ஜ்) டீச்சர்களினுடையது இல்லையா? இப்பொழுது இன்சார்ஜ் ஆக இருக்கிறீர்களா? அல்லது ஆகக்கூடியவர்களா? எப்பொழுதும் தன்னுடைய சம்பூர்ண நிலையை மற்றும் தன்னுடைய சம்பூர்ண சொரூபத்தை (வரவேற்பு) செய்து கொண்டே இருங்கள். இதுதான் முக்கியமான தாரணை ஆகும். எப்படி யாரையாவது செய்கிறோம் என்றால் புத்தியில் அதே நினைவு இருக்கும் இல்லையா?. இதே போல் எப்பொழுதும் தன்னுடைய சம்பூர்ண சொரூபத்தை செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் அதுதான் எப்பொழுதும் நினைவில் இருக்கும். மேலும் இதே நினைவில் இருக்கும் காரணத்தினால் ரிசல்ட் என்னவாக இருக்கும்? இந்த வருவதும் போவதுமான (ஆவாக்மன்) சக்கரம் சுற்றிக் கொண்டிருக்கிறது இல்லையா, சரி வருவதும் போவதுமான சக்கரம் எது? சில நேரம் உயர்ந்த நிலையில் இருக்கிறீர்கள். சில நேரம் கீழே வந்து விடுகிறீர்கள். அப்படி இந்த மேலே கீழே போவதற்கான வருவதும் போவதுமான (ஆவாஹனம்) சக்கரத்திலிருந்து விடுபட்டு விடுவீர்கள். மனிதர்கள் பிறப்பு, இறப்பு சக்கரத்திலிருந்து விடுபட விரும்புகிறார்கள். மேலும் நீங்கள் இந்த நினைவு மற்றும் நினைவு மறந்ததின் ஆவாக்மன்னிலிருந்து விடுபடுவதற்கான முயற்சி செய்கிறீர்கள். எனவே எப்பொழுதும் தன்னுடைய சம்பூர்ண சொரூபத்தை அழைப்பதின் மூலம் ஆவாக்மன்னிலிருந்து விடுபட்டு விடுவீர்கள் அதாவது இந்த வீணான விஷயங்களிலிருந்து ஒதுங்கி விடுவதினால் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அதிர்ஷ்ட நட்சத்திரங்கள் ஆகி விடுவீர்கள். இன்சார்ஜ் டீச்சராக ஆவதற்காக முதலில் தன்னுடைய ஆத்மா என்ற பேட்டரியை சார்ஜ் செய்யுங்கள். ஒருவருடைய பேட்டரி எவ்வளவு சார்ஜ ஆகியிருக்குமோ அவ்வளவே நல்ல இன்சார்ஜ் டீச்சர் ஆக முடியும். புரிந்ததா?. எப்பொழுது நான் இன்சார்ஜ் ஆக இருக்கிறேன் என்று நினைவு வருகிறது என்றால் முதலில் என்னுடைய பேட்டரி சார்ஜ் ஆகியிருக்கிறதா என்று தன்னிடம் கேளுங்கள். ஒருவேளை பேட்டரி குறைவாக சார்ஜ் ஆகியிருக்கிறது என்றால் இன்சார்ஜ் டீச்சரிடமும் அந்த

அளவே குறை தென்படும். அப்படியானால் இப்பொழுது என்ன செய்ய வேண்டும். நல்ல முறையில் பேட்டரியை சார்ஜ் செய்து பிறகு இன்சார்ஜ் ஆகிச் செல்ல வேண்டும். அப்படியே இன்சார்ஜ் ஆகி மட்டும் செல்ல வேண்டாம். ஒருவேளை பேட்டரியை சார்ஜ் செய்யாமல் இன்சார்ஜ ஆனீர்கள் என்றால் என்னவாகும்? சார்ஜ் என்ற வார்த்தைக்கு இரண்டு, மூன்று அர்த்தங்கள் இருக்கின்றன. ஒன்று பேட்டரியை சார்ஜ் செய்வது, இன்னொன்று சார்ஜ் என்றால் ட்யூட்டி அதாவது கொடுக்கட்பட்ட பொறுப்பு என்பதும் ஆகிறது மற்றும் மூன்றாவது சார்ஜ் என்றால் குற்றத்தையும் குறிக்கிறது. சிலர் மேல் குற்றம் சுமத்துகிறார்கள் இல்லையா. அப்படி இன்சார்ஜ் ஆவதினால் ஒருவேளை பேட்டரி சார்ஜ் ஆகி இருக்கிறது என்றால் பின்பு இன்சார்ஜ் சரியான முறையில் ஆகுகிறார்கள். ஒருவேளை பேட்டரி சார்ஜ் ஆக இல்லை என்றால், யதார்த்த ரூபம் இல்லை என்றால் பிறகு விதவிதமான சார்ஜஸ் (குற்றங்கள்) சுமத்தப்பட்டு விடுகின்றன. எனவே எப்படி இன்சார்ஜ் ஆக வேண்டும் என்று இப்பொழுது புரிந்ததா. தர்மராஜ புரியில் முதலில் குற்றம் சுமத்தி பிறகு தண்டனை கொடுக்கப்படும். அப்படி ஒருவேளை பேட்டரி சார்ஜ் ஆகவில்லை என்றால் சார்ஜஸ் (குற்றங்கள்) சுமத்தப்படும். அனைவரின் பார்வையில் இந்த குரூப் வந்து விடும் அளவிற்கு இப்பொழுது அந்த மாதிரி ஆகிச் செல்ல வேண்டும். பெரியவர்கள் பெரியவர்கள்தான் ஆனால் சிறியவர்கள் இறைவனுக்குச் சமமானவர்கள் என்று அனைவரும் அனுபவம் செய்யட்டும். அந்த மாதிரி இலட்சியம் வைத்து பட்டியில் அதே மாதிரியான இலட்சணம் தாரணை செய்து செல்ல வேண்டும். தன்னை எங்கு வளைத்துக் கொள்ள விரும்பினாலும் அங்கு வளைத்துக் கொள்ள முடியும் அளவிற்கு அந்த மாதிரி மென்மையானவராக ஆக வேண்டும். மென்மையான பொருளை எப்படி வளைக்க வேண்டுமோ அப்படி வளைக்க முடியும் ஆனால் கடுமையானதை யாரும் வளைக்க முடியாது. மென்மை ஆக வேண்டும், ஆனால் எதில்? சம்ஸ்காரத்தை வளைப்பதில் மென்மை யானவராக ஆகுங்கள் ஆனால் மென்மையான இதயத்திலிருந்து பாதுகாப்பாக இருங்கள். இந்த இலட்சியத் தையும் இலட்சணத்தையும் தாரணை செய்து செல்ல வேண்டும். இந்த அன்பானவராக மற்றும் சகயோகி ஆகக் கூடிய குரூப்பிற்காக இதுதான் சுலோகன். 'அதிகாரி ஆவோம் மற்றும் அடிமைத்தனத்தை அகற்றுவோம். ஒருபொழுதும் அடிமை ஆகக்கூடாது. எண்ணங்களுக்கும் சரி, மாயாவாக இருந்தாலும் சரி அல்லது வேறு ஏதாவது ரூபங்களானாலும்

அடிமையாகக்கூடாது. இந்த உடலுக்குக் கூட அதிகாரியாகி நடந்து கொள்ள வேண்டும் மற்றும் மாயாவுடன் கூட அதிகாரி ஆகி அதைத் தன் அடிமையாக்க வேண்டும். சம்மந்தத்தின் அடிமையிலும் வர வேண்டாம். அது குடும்ப சம்மந்தமாக இருந்தாலும் சரி அல்லது ஈஸ்வரிய சம்மந்தமாக இருந்தாலும் சரி அதன் அடிமைத்தனத்தில் வர வேண்டாம். எப்பொழுதும் அதிகாரியாக ஆக வேண்டும். இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். அந்த மாதிரி ஆகியேதான் செல்ல வேண்டும். எப்படி மானசரோவரில் குளிப்பதினால் பரிகள் (ஏஞ்சல்கள்) ஆகி விடுகிறார்கள் என்ற பழமொழி இருக்கிறது இல்லையா. இந்த குரூப்பிற்கும் கூட பட்டி என்ற ஞான மானசரோவரில் குளித்து பரிஷ்தா ஆகி வெளிப்பட வேண்டும்.

இப்பொழுது ஃபரிஷ்தா ஆகி விட்டீர்கள் என்றால் ஃபரிஷ்தா என்றாலே ஒளி மயமான உடல் உள்ளவர். இந்த உடலின் நினைவிலிருந்து விடுபட்டவர். அவர்களின் கால்கள் அதாவது புத்தி இந்த ஐந்து தத்துவங்களின் கவர்ச்சியிலிருந்து உயரே அதாவது விடுபட்டு இருக்கின்றது. அந்த மாதிரி ஃபரிஷ்தாக்களை மாயா மற்றும் எந்தவொரு மாயா வசமானவர் தொடக்கூட முடியாது. எனவே எந்தவொரு மாயாவின் வசமான மனிதனும் மற்றும் மாயாவும் தொட முடியாத அளவிற்கு அந்த மாதிரி ஆகிச் செல்ல வேண்டும். குமாரிகளுக்கு அதிகமாக மஹிமை பாடப்பட்டிருக்கிறது ஆனால் எந்த குமாரிக்கு? பிரம்மா குமாரிகளின் மஹிமை பாடப்பட்டிருக்கிறது. பிரம்மா குமாரி என்றால் பிரம்மாபாபாவை பிரத்யக்ஷம் (வெளிப்படுத்தும்) செய்யக்கூடிய குமாரி. யார் டீச்சர் ஆகுகிறார்களோ அவர்களுக்கு பாய்ன்ட்டை (ஞானத்துளி) மட்டும் புத்தியில் வைக்கக்கூடாது மற்றும் வர்ணனை செய்யக்கூடாது ஆனால் பாய்ன்ட் ரூபமாகி (ஆத்மரூபமாகி) பாய்ன்ட்டை (ஞானத்தை) வர்ணனை செய்ய வேண்டும். ஒருவேளை, தானே பாய்ன்ட் நிலையில் நிலைத்திருக்கவில்லை என்றால் பாய்ன்ட்டின் எந்த பிரபாவமும் ஏற்படாது. எனவே பாய்ன்ட்டை ஒன்றாக சேர்ப்பதின் கூடவே தன்னுடைய பாய்ன்ட் ரூபத்தையும் நினைவு செய்து கொண்டே இருக்க வேண்டும். எப்பொழுது நோட்டு புத்தகத்தை நிரப்புகிறீர்கள் என்றால் நோட்டுப் புத்தகத்தைப் பார்த்து சாகார பிரம்மாபாபாவின் சரித்திரங்களின் நோட்டுப் புத்தகமாக ஆகியிருக்கிறேனா என்று இவை அனைத்தையும் சோதனை செய்ய வேண்டும். என்னென்ன எழுதியிருக்கிறீர்களோ

அவையோ மீண்டும் மீண்டும் அதே போல் நடக்கும்தான் இல்லையா? அந்த மாதிரி தந்தைக்குச் சமமானவர்களாக தென்படுங்கள். எவ்வளவு சமநிலை இருக்குமோ அவ்வளவு எதிர்கொள்ளும் சக்தி இருக்குமென்று கூறியிருந்தோம் இல்லையா?. சமநிலை கொண்டு வருவதினால் எதிர்கொள்ளும் சக்தி தானாக வந்து விடும். நல்லது.

இந்த குரூப் ஒன்றும் குறைந்தது அல்ல. இவ்வளவு பெரிய சக்தி தளம் மூலை மூலைகளில் சேவையில் பரவி விட்டார்கள் என்றால் என்னவாகும்? பிரம்மாகுமாரிகளுக்கு வெற்றி என்ற ஓசை நாலா புறமும் வெளியாகும். இப்பொழுதோ திட்டிக் கொண்டிருக்கிறார்கள் இல்லையா. இங்கேயே உங்கள் எதிரிலேயே மஹிமையின் மலர்களைத் தூவுவார்கள், எனவே அந்த மாதிரி ஆகிச் செல்ல வேண்டும். உங்களைப் பார்த்தவுடனேயே அனைவரின் வாயிலிருந்து இந்த ஓசை வெளியாக வேண்டும் என்று கூறினோம். இந்த குரூப்பிற்கு இந்த நடைமுறை பரீட்சையை எழுத வேண்டும். நாலா புறத்திலும் பாப்தாதா மற்றும் உதவியாளர் குழந்தைகளின் வெற்றி முழக்கம் ஏற்பட்டு விடட்டும். அந்த மாதிரி சக்தி இருக்கிறதா? ஒருவரின் சங்கத்தில் (தொடர்பில்) இருப்பதினால் சங்கதோஷத்திலிருந்து (தீய தொடர்பு) விடுபட்டு விடுவீர்கள். புத்தியின் தொடர்பு யாருடன் இருக்கிறது என்று எப்பொழுதும் சோதனை செய்யுங்கள். ஒருவருடன் இருக்கிறதா? ஒருவேளை ஒருவரின் தொடர்பு இருக்கிறது என்றால் அனேக தீய தொடர் பிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். சங்கதோஷம் அனேக விதமான தோஷத்தை (குறைகளை) உருவாக்கி விடுகின்றன எனவே இதன் மிகுந்த கவனம் வைக்க வேண்டும். ஒரு தந்தை இரண்டாவது நான், மூன்றாவது வேறு யாரும் இல்லை. எப்பொழுது அந்த மாதிரி நிலை இருக்கும் என்றால் பின்பு உங்களின் நெற்றியிலிருந்து மூன்றாவது கண்ணின் சாட்சாத்காரம் எப்பொழுதும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இங்கே உங்களின் நினைவுச்சின்னம் இருக்கிறது அதில் யோகாவின் அடையாளமாக என்ன காண்பிக்கப்பட்டிருக்கிறது? மூன்றாவது கண். ஒருவேளை புத்தியில் மூன்றாவது யாராவது வந்து விட்டார் என்றால் பிறகு மூன்றாவது கண் மூடி விடும். எனவே எப்பொழுதும் மூன்றாவது கண் திறந்திருக்கட்டும், இதற்காக மூன்றாவது யாரும் இல்லை என்பதை நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். நல்லது.

**வரதானம்: ஒரு தந்தையை துணைவனாக ஆக்கி மற்றும் அவரின் துணையிலேயே இருக்கக் கூடிய சம்பூர்ண பவித்திர ஆத்மா ஆகுக!**

சம்பூர்ண பவித்ர ஆத்மா என்றால் அவருடைய எண்ணத்தில் மற்றும் கனவில் கூட பிரம்மச்சர்யத்தின் தாரணை இருக்கும், மேலும் அவர் ஒவ்வொரு அடியிலும் பிரம்மாபாபாவின் ஆச்சரணங் களின் படி நடப்பவராக இருக்க வேண்டும். தூய்மையின் அர்த்தமே எப்பொழுதும் தந்தையை துணைவனாக ஆக்குவது மற்றும் தந்தையின் துணையிலேயே இருப்பது. குழுவில் சேர்ந்திருப்பது, குடும்பத்தின் அன்பின் மரியாதை வேறாகும் ஆனால் தந்தையின் காரணமாகத்தான் இந்த குழுவின் அன்பின் துணை இருக்கிறது. தந்தை இல்லை என்றால் குடும்பம் எங்கிருந்து வந்தது. தந்தை விதையாக இருக்கிறார், விதையை ஒருபொழுதும் மறக்காதீர்கள்.

**சுலோகன்: யாருடைய பிரபாவத்திலும் பிரபாவம் அடைபவராக ஆகாமல் ஞானத்தின் பிரபாவத்தை ஏற்படுத்துபவராக ஆகுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 09.04.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அவ்யக்த ஸ்திதியில் அனைத்து குணங்களின் அனுபவம்!

சப்தங்களைக் கடந்து இருக்கும் ஸ்திதி பிடிக்கிறதா அல்லது சப்தத்தில் இருக்கும் ஸ்திதி பிடிக்கிறதா? எந்த ஸ்திதி அதிகமாகப் பிடிக்கிறது. இரண்டு ஸ்திதிகளும் இணைந்து இருக்க முடியுமா? இதன் அனுபவம் உள்ளதா? இந்த அனுபவம் செய்யும்பொழுது எந்த குணம் பிரத்யட்ச (வெளிபடையான) ரூபத்தில் தென்படுகிறது? (பற்றற்ற மற்றும் அன்பான நிலை) எவ்வாறு விதையில் முழு மரமும் அடங்கி உள்ளதோ அவ்வாறே இந்த அவ்யக்த ஸ்திதியில், சங்கமயுகத்தின் விசேஷ குணங்களின் மகிமை என்ன பாடுகிறீர்களோ, அந்த அனைத்து விசேஷ குணங்களும் அந்த சமயத்தில் அனுபவம் ஆகின்றன. ஏனெனில், மாஸ்டர் விதை ரூபமாகவும் இருக்கிறீர்கள், ஞானம் நிறைந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். எனவே, சாந்தி மட்டுமல்ல ஆனால் சாந்தியின் கூடவே ஞானம், அதீந்திரிய சுகம், அன்பு, ஆனந்தம், சக்தி போன்ற அனைத்து முக்கியமான குணங்களின் அனுபவம் ஏற்படுகிறது. தனக்கு மட்டுமல்ல, ஆனால், அத்தகைய ஸ்திதி .யில் நிலைத்திருக்கும் ஆத்மாவினுடைய முகத்தின் மூலம் மற்ற ஆத்மாக்களுக்கும் இந்த அனைத்து குணங்களின் அனுபவம் கிடைக்கின்றது. எவ்வாறு சாகார சொருபத்தில் (பிரம்மாபாபாவிடம்) என்ன அனுபவம் செய்தீர்கள்? ஒரே நேரத்தில் அனைத்து குணங்களின் அனுபவத்தில் வருகிறீர்கள். ஏனெனில், ஒரு குணத்தில் அனைத்து குணங்களும் அடங்கி யுள்ளன. எவ்வாறு அஞ்ஞானத்தில் ஒரு விகாரத்துடன் அனைத்து விகாரங்களின் ஆழமான சம்பந்தம் உள்ளதோ, அவ்வாறு ஒரு குணத்துடன் முக்கியமான குணங்களின் ஆழமான சம்பந்தம் உள்ளது. ஒருவேளை, ஒருவர், என்னுடைய ஸ்திதி ஞான சொரூபமாக உள்ளது என்று கூறினால், ஞான சொருபத்தின் கூடவே மற்ற குணங்களும் அவசியம் அதில் அடங்கி இருக்கும். இந்த நிலையை ஒரு வார்த்தையில் என்ன வென்று கூறலாம்? மாஸ்டர் சர்வ சக்திவான். இந்த ஸ்திதியில் அனைத்து சக்திகளின்

தாரணை உள்ளது. எனவே, அத்தகைய ஸ்திதியை உருவாக்க வேண்டும் -இதுவே சமானமான நிலை, சம்பூரண ஸ்திதி ஆகும். அத்தகைய நிலையில் நிலைத்திருந்து சேவை செய்கிறீர்களா? சேவை செய்யும் நேரத்தில் எப்பொழுது மேடைக்கு வருகிறீர்களோ. அப்பொழுது முதலில் இந்த ஸ்திதியில் (மனநிலையில்) நிலைத்திருந்து, பிறகு, ஸ்தூல மேடைக்கு வாருங்கள். இதனால் என்ன அனுபவம் ஏற்படும்? குழுவிற்கு நடுவில் இருந்தாலும் அலௌகீக ஆத்மாக்கள் தென்படுவார்கள். இப்பொழுது சாதாரண சொரூபத்தின் கூடவே ஸ்திதியும் சாதாரணமாகத் தென்படுகிறது ஆனால், சாதாரண ரூபத்தில் இருந்தாலும் அசாதாரண ஸ்திதி மற்றும் அலௌகீக ஸ்திதி இருப்பதனால் குழுவிற்கு நடுவில் அல்லாவின் குழந்தைகளாகத் தென்படுவீர்கள். ஆரம்பத்தில் அத்தகைய ஸ்திதியின் போதை இருந்தது அல்லவா! எவ்வாறு நட்சத்திரங்களின் கூட்டத்தில் விசேஷ நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றின் ஜொலிப்பு, பிரகாசம் தனிப்பட்டதாக மற்றும் அன்பானதாகத் தொலைவிலிருந்தே தெரிகிறது. எப்பொழுது ஏதாவது ஒரு அசாதாரணமான பொருள் முன்னால் வருகிறதோ, அப்பொழுது அனைவருடைய கவனத்தையும் அவர்கள் விரும்பாமலேயே தன் பக்கம் ஈர்த்து விடுகிறது. எனவே, அத்தகைய ஸ்திதியில் நிலைத்திருந்து, மேடைக்கு வாருங்கள், அப்பொழுது உலகத்தினரின் பார்வை உங்கள் மீது தானாகவே விழும். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் உங்களுடைய அறிமுகத்தைக் கொடுக்கக் கூடாது ஆனால் உங்களுடைய ஸ்திதி உங்களுடைய அறிமுகத்தைத் தானே கொடுக்க வேண்டும். வைரம் தூசியில் மறைந்திருந்தாலும் தன்னுடைய அறிமுகத்தைத் தானே கொடுப்பதில்லையா என்ன! எனவே, சங்கமயுகத்தில் வைரத்திற்கு சமமான மதிப்பான வாழ்க்கை தன்னுடைய அறிமுகத்தைத் தானே கொடுக்க முடியும். இப்பொழுது வரை உள்ள முடிவு (ரிசல்ட்) என்ன? தெரியுமா? இப்பொழுது எத்தகைய மதிப்பானவர் ஆகியிருக்கிறீர்கள்? சொற்பொழிவு ஆற்றுவதன் ரிசல்ட் என்ன வெளிப்படுகிறது? நிகழ்கால நேரத்தில் முதல் நம்பர் பிரஜைகளும் கூட குறைவாகவே வெளிப்படுகின்றனர். சாதாரண பிரஜை அதிகமாக உருவாகின்றனர். ஏனெனில், சாதாரண ரூபத்தின் கூடவே ஸ்திதியும் அதிக சமயம். சாதாரணம் ஆகி விடுகிறது. இப்பொழுது சாதாரண ரூபத்தில் அசாதாரண ஸ்திதியின் அனுபவத்தை தானும் செய்யுங்கள், பிறருக்கும் செய்வியுங்கள். வெளிநோக்குமுகத்தில் வரும் சமயத்தில் உள்நோக்குமுகம் என்ற ஸ்திதியையும் உடன் வைத்துக் கொள்ள

வேண்டும்; ஆனால் இது இருப்பதில்லை. ஒன்று உள்நோக்குமுகம் உடையவர் ஆகிறீர்கள் அல்லது வெளிநோக்குமுகம் உடையவர் ஆகி விடுகிறீர்கள்; ஆனால் உள்நோக்குமுகம் உடையவர் ஆகி, பிறகு வெளிநோக்குமுகத்தில் வர வேண்டும். இந்தப் பயிற்சிக்காக தன் மீது தனிப்பட்ட கவனம் வைப்பதற்கான அவசியம் உள்ளது. வெளிநோக்குமுகத்தின் கவர்ச்சி உள்நோக்குமுகத்தின் ஸ்திதியை விட அதிகமாக உள்ளது. இதற்கான காரணம் என்னவென்றால், எப்பொழுதும் தனது சிரேஷ்ட சொருபம் மற்றும் சிரேஷ்ட போதையில் நிலைத்திராததே ஆகும். ஆகவே, ஸ்திதி சக்திசாலியாக இருப்பதில்லை.

ஞானம் நிறைந்த நிலையின் கூடவே சக்தி நிறைந்தவர்களாகவும் ஆகி, ஞானத்தைக் கொடுத்தீர்கள் என்றால், அநேக ஆத்மாக்களை அனுபவி ஆக்கமுடியும். இப்பொழுது சொல்லக்கூடியவர்கள் நிறைய பேர் உள்ளனர், ஆனால், அனுபவம் செய்விக்கக்கூடியவர்கள் குறைவாக உள்ளனர். சொல்லக்கூடியவர்களோ அநேகர் உள்ளனர், ஆனால் அனுபவம் செய்விக்கக் கூடியவர்கள் நீங்கள் மட்டுமே உள்ளீர்கள். எனவே, எந்த சமயம் சேவை செய்கிறீர்களோ, அந்த சமயத்தில், ஞான தானத்தின் கூடவே தன்னுடைய மற்றும் பாபாவினுடைய குணங்களின் தானத்தையும் செய்ய வேண்டும் என்ற லட்சியம் வைத்திடுங்கள். உங்களைத் தவிர வேறு எவரும் குணங்களின் தானம் செய்ய முடியாது. ஆகையினால், சுயம் அனைத்து குணங்களின் அனுபவ சொருபமாக ஆனீர்கள் என்றால் பிறரையும் கூட அனுபவி ஆக்க முடியும். தாமரை மலருக்குச் சமமாக ஆகியிருக்கிறீர்களா? தனது வாழ்க்கையின் சித்திரம்தான் காண்பிக்கப்பட்டுள்ளது அல்லவா? அல்லது வேறு யாராவது மகாரதிகளுடைய வாழ்க்கையின் சித்திரமா? நம்முடைய சித்திரம் என்றுதான் கூறுகிறீர்கள் அல்லவா! சித்திரம் ஏன் உருவாக்கப்படுகிறது? சரித்திரத்தின் (நடத்தையின்) சித்திரம்தான் உருவாகிறது. எனவே, அத்தகைய சரித்திரவான் ஆகியிருக்கிறீர்கள், ஆகையினால், சித்திரம் உருவாக்கப்பட்டுள்ளது அல்லவா. இந்த ஒரு சித்திரத்தை மட்டும் நினைவில் வைத்து ஒவ்வொரு கர்மமும் செய்தீர்கள் என்றால், எப்பொழுதும், அனைத்து விசயங்களிலும் பற்றற்றவராக இருப்பீர்கள். இந்த நிலையில் அல்ப காலத்திற்கு மட்டும் இருக்கிறீர்கள். எத்தகைய சூழ்நிலையாக இருந்தாலும், எத்தகைய வாயுமண்டலமாக இருந்தாலும், இந்தச் சித்திரத்தை மட்டும் நினைவில் வைத்தீர்கள்

என்றால் வாயுமண்டலத் திலிருந்து விடுபட்டவராக இருப்பீர்கள். இப்பொழுது வாயுமண்டலத்தின் பிரபாவம் அவ்வப்போது ஏற்படுகிறது. நாம் பஞ்ச தத்துவங்களையும் கூட தூய்மை ஆக்கக்கூடியவர்கள், மாற்றக்கூடியவர்கள் என்ற மிக உயர்ந்த லட்சியம் உள்ளது. இத்தகையவர்கள் எப்பொழுதாவது வாயுமண்டலத்திற்கு வசமாக முடியுமா? நீங்கள் மாற்றம் செய்யக்கூடியவர்கள், இயற்கையின் கவர்ச்சியில் வந்து மாற்றம் அடைபவர்கள் அல்ல. பிறகு, தாமரை மலருக்குச் சமமாக சதா காலத்திற்கும் இருக்க முடியும்.

இன்று இந்தக் குழுவிற்கு என்ன தினம்? இப்பொழுது புத்தகப் படிப்பு (தியரி) முடிவடைந்து விட்டது. நடைமுறை தேர்வு எழுதுவதற்காகச் சென்று கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது இந்தக் குழு மற்ற அனைத்து குழுக்களையும் விட விசேஷமாக என்ன காரியம் செய்து காண்பிக்கப் போகிறீர்கள்? எவ்வளவு சமயத்தில் மற்றும் எத்தனை வாரிசுகளை உருவாக்கிக் கொண்டு வருவீர்கள்? குறைவான சமயத்தில் அநேகரை உருவாக்குவீர்களா? இவர்கள் அதிக வாக்குறுதிகள் கொடுத்திருக்கின்றனர். உறுதிமொழி செய்வதற்கான விழா கூட நடத்துகிறார்கள். எத்தனை உறுதிமொழிகள் செய்கிறீர்களோ, அந்த அனைத்து உறுதிமொழிகளையும் நிறைவேற்றுவதற்காக ஒரே ஒரு நியமத்தை மட்டும் நினைவில் வைக்க வேண்டும். அது என்ன? (உயிருடன் இருந்துகொண்டே இறந்து போவது) அடிக்கடி உயிருடன் இருந்துகொண்டே இறந்து போவார்களா என்ன! பாப்தாதா எப்பொழுதும் ஒவ்வொருவர் மீதும் அனைத்து விதமான நம்பிக்கைகளும் வைக்கின்றார்கள் ஆனால் நம்பிக்கைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவர்கள் வரிசைக்கிரமமாக தன்னுடைய ஷோ காண்பிக்கின்றார்கள். ஆகையினால், இந்தக் குழு முக்கியமாக ஒரு உறுதிமொழியை நினைவில் வைக்க வேண்டும். முழு படிப்பினுடைய சாரம் என்னவாக இருந்தது? சித்திரங்களில் கூட முக்கியமான சித்திரமாக நடைமுறையில் எதைக் காண்பிப்பீர்கள்? அந்தச் சித்திரத்தின் மூலம் பாப்தாதாவை பிரத்யட்சம் செய்ய முடியும், அது என்ன சித்திரம்? அனைத்து படிப்பினைகளின் சாரத்தை சொல்லுங்கள். எந்த ஒரு கர்மத்தைச் செய்யும் பொழுதும் அதாவது பார்ப்பது, எழுவது, அமர்வது, நடப்பது மற்றும் தூங்குவது ஆகிய அனைத்து செயல்களைச் செய்யும் பொழுதும் ஃபரிஷ்தா நிலை தென்பட வேண்டும். அனைத்து

கர்மங்களிலும் அலௌகீகத்தன்மை இருக்க வேண்டும். கர்மங்களிலும் மற்றும் சம்ஸ்காரங்களிலும் எந்த ஒரு லௌகீகத் தன்மையும் இருக்கக் கூடாது. இத்தகைய மாற்றம் செய்து விட்டீர்களா? சர்வோத்தம முயற்சியாளர்களின் லட்சணம் கூட விசேஷமாக இருக்கும். அவர்களுடைய சிந்தனை, செயல், பேச்சு ஆகிய மூன்றுமே சமமாக இருக்கும். இதை செய்யக் கூடாது என்று நினைத்திருந்தேன் ஆனால் செய்து விட்டேன் என்று அவர்கள் கூறமாட்டார்கள். சிந்தனை, செயல், பேச்சு ஆகிய மூன்றுமே ஒன்றாக, சமமாக இருக்கும் மற்றும் தந்தைக்குச் சமமானதாக இருக்கும். அத்தகைய சிரேஷ்டமான முயற்சியாளர் ஆகியிருக்கிறீர்களா? நல்லது.

இந்தக் குழு எவ்வளவு பெரியதோ, அவ்வளவே சக்திசாலி சொரூபமாகி நாலா புறங்களுக்கும் சென்றீர்கள் என்றால் பிறகு, சக்திகளுடைய வெற்றியின் முழக்கத்தை உரக்க ஒலிக்கச் செய்ய முடியும். சம்ஸ்காரங்களுக்கு அடிமையாகவும் ஆகக்கூடாது, ஒருவருடைய அன்பிற்கும் அடிமையாகக் கூடாது. வாயுமண்டலத்திற்கும் அடிமையாகக் கூடாது. புரிந்ததா? என்ன செய்வது, வேறு வழியற்று இருக்கிறேன் என்ற இத்தகைய வார்த்தைகள் வாயிலிருந்து என்ன, மனதில் எண்ணத்தளவில் கூட வரக்கூடாது. ஒரு மனிதர் அல்லது வாயுமண்டலம் நிர்பந்தம் ஆக்கி விட்டது ஆனால் இவ்வாறு கூறக்கூடாது. வேறு வழியற்றவர் ஆகக்கூடாது ஆனால் உறுதியானவர் ஆக வேண்டும். புரிந்ததா? பிறகு, இந்தப் புகார் வரக்கூடாது. பட்டிக்கு முன்னர் தன்னுடைய முயற்சியைப் பற்றிய புகார் என்ன கூறினீர்கள்? பலமற்ற நிலையின் காரணத்தினால் தீய சகவாசத்தில் வருவது. இந்தப் புகாரை முடித்து விட்டு சென்று கொண்டு இருக்கிறீர்களா? வேறு எந்தத் தொடர்பிலும் வர முடியாது. ஈஸ்வரிய ரூபத்தில் மாயை உங்களைத் தன்னுடைய துணை ஆக்க முயற்சித்தால் என்ன செய்வீர்கள்? தன்னுடைய உறுதிமொழிகளை நினைவில் வைக்க வேண்டும். நாங்கள் ஒன்றுதான், ஒருவருடையவராக இருப்போம், ஒருவருடைய வழிப்படி மட்டும் நடப்போம் என்று கோஷம் என்ன போடுகிறீர்களோ, அது உறுதியாக எப்பொழுதும் இருக்க வேண்டும். ஈஸ்வரிய ரூபத்தில் மாயை உங்கள் முன் வரும்பொழுது அதைக் கண்டறிய வேண்டியது மிகவும் அவசியமானதாக இருக்கும். கண்டறியும் சக்தியை தாரணை செய்துகொண்டு செல்கிறீர்களா? இதை எப்பொழுதும் அழிவற்றதாக

வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது ரிசல்ட்டைப் பார்ப்போம். அல்ப காலத்திற்கான ரிசல்ட்டைக் காட்டக்கூடாது. சதா காலத்திற்கான மற்றும் சம்பூரணமான ரிசல்ட்டைக் காட்ட வேண்டும். இந்தக் குழு என்ன உறுதிமொழி செய்திருக்கிறீர்களோ, தைரியம் வைத்திருக்கிறீர்களோ, அந்த உறுதிமொழியிலிருந்து விலக்குவதற்காக மாயை நிர்பந்தப்படுத்தினால் என்ன செய்வீர்கள்? உறுதிமொழி மிக நன்றாக செய்திருக்கிறீர்கள் ஆனால், யாராவது நிர்பந்தப்படுத்தினால் பிறகு என்ன செய்வீர்கள்? யார் சுயம் தானே வழியற்றவர் ஆகி விடுகிறாரோ, அவர் பிறகு, யுத்தம் என்ன செய்வார்!

சத்தியம் என்று எதை சொல்லப்படுகிறது, இது தெரியுமா? எந்த விசயம் எண்ணத்தில் வருகிறதோ, அந்த எண்ணத்தைக் கூட மறைக்கக்கூடாது, இதையே சத்தியம் என்று கூறப்படுகிறது. ஒருவேளை, முயற்சி செய்து வெற்றியும் பெற்றுவிட்டீர்கள் என்றாலும் கூட தன்னுடைய வெற்றி மற்றும் தோல்வி ஆகிய இரண்டின் சமாச்சாரத்தையும் தெளிவாகச் சொல்ல வேண்டும். இதுவே சத்தியம் ஆகும். சத்தியமானவர்கள் தன்னுடைய உறுதிமொழியை நிறைவேற்ற முடியும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 15.04.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திரிமூர்த்தி தந்தையினுடைய குழந்தைகளின் மும்மூர்த்தி கடமை!

மும்மூர்த்தி தந்தையினுடைய குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் மும்மூர்த்திகளா? மும்மூர்த்தி ஆகி, மூன்று காரியங்களைச் செய்கின்றீர்களா? இந்த சமயத்தில் இரண்டு காரியங்கள் செய்கின்றீர்களா அல்லது மூன்று காரியங்கள் செய்கின்றீர்களா? என்ன காரியம் செய்கிறீர்கள்? மூன்று காரியங்களையும் சேர்த்து செய்கின்றீர்களா? மும்மூர்த்தி ஆகியிருக்கிறீர்கள் அல்லவா? எவ்வாறு மும்மூர்த்தி ஆகியிருக்கிறீர்களோ, அவ்வாறே திரிகாலதரிசியாகவும் (மூன்று காலம் உணர்ந்தவர்கள்) ஆகியிருக்கிறீர்களா? ஒவ்வொரு கர்மம் மற்றும் ஒவ்வொரு எண்ணம் என்ன எழுகிறதோ, அதை திரிகால தரிசியாகிப் பிறகு எண்ணத்தை கர்மத்தில் கொண்டுவருகிறீர்களா? எப்பொழுதும் மூன்று காரியங்களும் இணைந்தே நடக்கிறது. ஏனெனில், ஒருவேளை பழைய சம்ஸ்காரம் அல்லது சுபாவம் அல்லது வீணான எண்ணங்களை அழிக்கவே இல்லையெனில், புதிய படைப்பு எவ்வாறு செய்ய முடியும்? மேலும். ஒருவேளை புதிய படைப்பு செய்கிறீர்கள், அதை பாலனை செய்யவில்லை எனில், நடைமுறையில் எவ்வாறு தோன்றும்? எனவே, மும்மூர்த்தி தந்தையினுடைய மும்மூர்த்தி குழந்தைகள் மூன்று காரியங்களையும் இணைத்து செய்துகொண்டு இருக்கிறீர்களா? விகர்மங்கள் மற்றும் வீண் எண்ணங்களை விநாசம் செய்கிறீர்கள். இதை இன்னும் வேகமாக இப்பொழுது செய்ய வேண்டியதாக உள்ளது. தனது வீண் எண்ணங்கள் மற்றும் விகர்மங்களை எரித்தால் மட்டும் போதாது, ஆனால், நீங்களோ 'விஷ்வகல்யாணகாரி' ஆவீர்கள். ஆகவே, முழு உலகத்தினுடைய விகர்மங்களின் சுமையை இலகுவாக்க வேண்டும் மற்றும் அநேக ஆத்மாக்களின் வீண் எண்ணங்களை அழிக்க வேண்டும், இதுவே சக்திகளின் கடமை ஆகும். எனவே, தற்போது இந்த விநாச காரியம் மற்றும் கூடவே புதிய சுத்த எண்ணங்களின் படைப்பு காரியம் ஆகிய இரண்டுமே முழு வேகத்தில் நடைபெற வேண்டும். எவ்வாறு ஒரு

அதி வேகமான இயந்திரம் இருக்கிறது எனில் ஒரு வினாடியில் அதில் போடப்படும் பொருளின் உருவம், நிறம், குணம், காரியம் ஆகிய அனைத்தும் மாறி விடுகின்றன. இயந்திரத்தில் போடப்பட்டது மற்றும் மாறிவிட்டது. அவ்வாறே இப்பொழுது இந்த விநாசம் மற்றும் ஸ்தாபனையின் இயந்திரமும் அதி வேகமாக நடைபெற வேண்டும். எவ்வாறு இயந்திரத்தில் வந்தவுடன் பொருளினுடைய உருவம், நிறம் மாறி விடுகிறதோ, அவ்வாறே, இந்த ஆன்மிக இயந்திரத்தில் உங்கள் முன்னால் ஆத்மாக்கள் எவரெல்லாம் வருவார்களோ, அவர்கள் வந்தவுடனேயே அவர்களுடைய எண்ணம், சொருபம், குணம் மற்றும் காரியம் மாறி விடும். ஆத்மாக்களுடையது மட்டுமல்ல ஆனால் 5-தத்துவங்களினுடைய குணம் மற்றும் காரியமும் கூட மாறி விடும். அத்தகைய ஒரு காரியம் இப்பொழுது நடைமுறையில் நடக்கப்போகிறது. ஆகையினால், விநாசம் மற்றும் ஸ்தாபனை ஆகிய இரண்டு காரியங்களும் சேர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டது. இப்பொழுது இன்னும் வேகமாக நடைபெறப் போகிறது. எவ்வாறு மகாதானிகளிடம் எப்பொழுதும் யாசிப்பவர்களின் கூட்டம் கூடியிருக்குமோ, அவ்வாறே உங்கள் அனைவரிடமும் கூட யாசிப்பவர்களின் கூட்டம் கூடப்போகிறது. கண்காட்சியின்போது உங்களிடம் எப்பொழுது கூட்டம் கூடுகிறதோ, அப்பொழுது என்ன செய்கிறீர்கள்? வரிசை முறையில் சுருக்கமாக செய்தியை மட்டும் கொடுக்கிறீர்கள். படைப்பினுடைய ஞானத்தைக் கொடுப்பதில்லை, படைப்பாளர் தந்தையினுடைய அறிமுகம் மற்றும் செய்தியை மட்டும் கொடுக்கமுடிகிறது. அவ்வாறே, எப்பொழுது யாசிப்பவர்களின் கூட்டம் கூடுமோ, அப்பொழுது இந்த செய்தியை மட்டுமே கொடுப்பீர்கள் ஆனால் அந்த ஒரு விநாடியின் செய்தி சக்தி வாய்ந்ததாக இருக்கும், அந்த செய்தி கேட்கும் ஆத்மாக்களில் சம்ஸ்காரமாக ஆகி விடும். அனைத்து தர்மங்களின் ஆத்மாக்களும் இந்த யாசகம் கேட்பதற்காக வருவார்கள். கிறிஸ்து கூட யாசகர் உருவில் உள்ளார் என்று கூறுகின்றார் அல்லவா? எனவே, தர்ம பிதாக்களும் கூட உங்கள் முன்னால் யாசகர் உருவில் வருவார்கள். அவர்களுக்கு என்ன யாசகம் கொடுப்பீர்கள்? இதே செய்தியைக் கொடுப்பீர்கள். அது அத்தகைய சக்திசாலியான செய்தியாக இருக்கும், அந்த செய்தி யினுடைய சக்திசாலியான சம்ஸ்காரங்களினால் தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்கு நிமித்தம் ஆவார்கள். அந்த சம்ஸ்காரம் அழிவற்றதாகி விடும். ஏனெனில், உங்களுடைய இறுதியான

சம்பூரண நிலையின் சமயத்தில், உங்களது சம்ஸ்காரங்களும் அழிவற்றதாக இருக்கும். இப்பொழுது சம்ஸ்காரங்களை அழிவற்றதாக ஆக்கிக் கொண்டு இருக்கிறீர்கள். ஆகையினால், இப்பொழுது யாருக்கு செய்தி கொடுக்கிறீர்களோ மற்றும் யாருக்காக அதிகமாக உழைக்கிறீர்களோ, இப்பொழுது அவர்கள் சதா காலத்திற்கும் இருப்பதில்லை. கொஞ்சம் சமயம் தங்குகின்றார்கள், பிறகு, தளர்ந்து விடுகிறார்கள் ஆனால், இறுதி சமயத்தில் உங்களுடைய சம்ஸ்காரமே அழிவற்றதாகி விடுகிறது. எனவே, அழிவற்ற சம்ஸ்காரங்களின் சக்தி இருக்கும் காரணத்தினால் கேட்பவர்களுக்கும் கூட நீங்கள் அத்தகைய போதனை அல்லது செய்தியைக் கொடுக்கிறீர்கள். அது அவர்களது அழிவற்ற சம்ஸ்காரமாகி விடுகிறது. எனவே, இப்பொழுது என்ன முயற்சி செய்ய வேண்டியதாக உள்ளது? சம்ஸ்காரங்களை மாற்றத்தான் வேண்டும், ஆனால் அழிவற்றதாக முத்திரை குத்துங்கள். எவ்வாறு அரசாங்கத்தின் முத்திரை பதிக்கப்படுகிறல்லவா? சீல் வைக்கிறார்கள் எனில், அதை எவரும் திறக்க முடியாது. மாயை அடுத்த அரைக் கல்பத்திற்கு திறக்கவே முடியாத அளவு நீங்களும் சீல் வைத்திடுங்கள். எனவே, அழிவற்ற சம்ஸ்காரங்களை உருவாக்குவதற்கான தீவிர முயற்சி செய்ய வேண்டும். இது எப்பொழுது நடக்கும்? எப்பொழுது மாஸ்டர் திரிகாலதரிசி ஆகி எண்ணத்தை செயலில் கொண்டு வருவீர்களோ, அப்பொழுதே இது நடக்கும். என்ன எண்ணம் எழுகிறதோ, அந்த எண்ணத்தையே சோதனை செய்யுங்கள். மாஸ்டர் திரிகாலதரிசி நிலையில் இருக்கின்றேனா? ஒருவேளை அந்த நிலையில் நிலைத்திருந்து கர்மம் செய்தீர்கள் எனில் எந்த ஒரு கர்மமும் வீணாகாது. விகர்மத்தின் விசயமே இருக்காது. இப்பொழுது விகர்மத்தின் (பாவ கர்மம்) கணக்கிலிருந்து மேலே வந்து விட்டீர்கள். விகல்பமும் (விகாரமான எண்ணமும்) அழிந்து விட்டது, விகர்மமும் அழிந்து விட்டது. இப்பொழுது வீண் கர்மம் மற்றும் வீணான எண்ணத்தின் விசயமே உள்ளது. இந்த வீணானவற்றை மாற்றி, சக்திசாலியான எண்ணம் மற்றும் சக்திசாலியான காரியம் செய்ய வேண்டும். இதையே சம்பூரண நிலை என்று சொல்லப்படுகிறது. எனவே, இப்பொழுது மகாதானி ஆகி விட்டீர்களா?

எத்தனை விதமான தானம் செய்கிறீர்கள்? இரட்டை தானம் செய்கிறீர்களா அல்லது மூன்றா அல்லது மூன்றையும் விட அதிகமாகச்

செய்கிறீர்களா? (ஒவ்வொருவரும் அவரவர் பதில்களைக் கூறினார்கள்) முக்கியமான மூன்று தானத்தைச் சொல்லவா? ஞானத்தின் தானமும் செய்கிறீர்கள், யோகத்தின் மூலம் சக்திகளின் தானமும் செய்துகொண்டு இருக்கிறீர்கள் மற்றும் மூன்றாவது தானம் கர்மத்தின் மூலம் குணங்களின் தானமும் செய்கிறீர்கள். எனவே, ஒன்று மனதின் மூலம் தானம் செய்வதாகும். இரண்டாவது வார்த்தைகள் மூலம் தானம் செய்வதாகும் மற்றும் மூன்றாவது கர்மத்தின் மூலம் தானம் செய்வதாகும். வார்த்தைகள் மூலம் ஞானத்தின் தானம், கர்மத்தின் மூலம் அனைத்து குணங்களின் தானம். எனவே, எப்பொழுதும், ஒரு நாளைத் துவங்கும்பொழுது முதலில், இன்றைய தினத்தில் இந்த மூன்று தானங்களை எந்தெந்த விதத்தில் செய்வது என்ற திட்டம் தீட்டுங்கள் மற்றும் பிறகு அந்த நாள் முடிந்த பிறகு நான் மகாதானியாக இருந்தேனா? மூன்று தானமும் செய்தேனா? என்று சோதனை செய்யுங்கள். ஏனெனில், மூன்று விதமான தானத்திற்கும் தனித்தனியான பிராப்தி உள்ளது. எவ்வாறு பக்திமார்க்கத்தில் ஒருவர் எந்த விதமான தானம் செய்கிறாரோ, அவருக்கு அதற்கேற்றாற்போல் பலன் கிடைக்கிறது. அவ்வாறே யார் இந்த மகான் வாழ்க்கையில் எந்தளவு மற்றும் எத்தகைய தானம் செய்கிறார்களோ, அவர்களுக்கு அந்தளவு மற்றும் அதற்கேற்ற எதிர்காலம் உருவாகிறது. எதிர்காலம் மட்டுமல்ல ஆனால், பிரத்யட்ச பலனும் கிடைக்கிறது. ஒருவேளை, ஒருவர் வார்த்தைகள் மூலம் அல்லது கர்மத்தின் மூலம் தானம் செய்யவில்லை, மனதால் மட்டும் தானம் செய்கிறார் என்றால் அவருக்கு வேறு பிரத்யட்ச பலன் கிடைக்கிறது. இப்பொழுது நீங்கள் அனைவரும் கர்ம தத்துவத்தை நல்ல முறையில் அறிந்துகொண்டீர்கள் அல்லவா? மூன்று தானங்களின் பிராப்தி வெவ்வேறானதாகும். யார் மூன்று தானமும் செய்கிறார்களோ, அவர்களுக்கு மூன்று விதமான பிரத்யட்ச பலன்களும் கிடைக்கின்றன. நீங்கள் கர்மங்களின் நிலையைப் பற்றி அறிவீர்கள் அல்லவா? மனதின் மூலம் செய்யும் தானத்தினுடைய பிரத்யட்ச பலன் என்ன? மனதால் மகாதானி ஆகக்கூடியவர்களுக்கு ஒன்று அவர்கள் தனது மனம் அதாவது எண்ணங்கள் மீது ஒரு வினாடியில் வெற்றியாளர் ஆகின்றார்கள் அதாவது எண்ணங்கள் மீது வெற்றியாளர் ஆவதற்கான சக்தி பிராப்தியாகக் கிடைக்கிறது, இதுவே அவர்களுக்கு பிரத்யட்ச பலனாகக் கிடைக்கிறது. மேலும், குழப்பமான எண்ணமுடைய ஒருவர் அதாவது ஒரு நொடி கூட ஒரு எண்ணத்தில் நிலைக்கச் செய்யமுடியாத ஒருவருக்கும்

கூட அவரது வெற்றியின் சக்தியால் குறுகிய காலத்திற்காக சஞ்சலமான மனம் சாந்தியாகிறது மற்றும் சஞ்சலத்திலிருந்து மாறுபட்டு உறுதியானவர்களாக்கி விடுகிறது. எவ்வாறு துக்கத்தில் துடித்துக் கொண்டிருக்கும் ஒருவரை ஊசி மூலம் மயக்கமடையச் செய்கிறார்கள், அவரது துக்கம் முடிவடைந்து விடுகிறது. அவ்வாறே மனதின் மூலம் மகாதானி ஆகக்கூடியவர்கள் தனது திருஷ்டி (பார்வை), விருத்தி (உள் உணர்வு) மற்றும் ஸ்மிருதி (நினைவு சக்தி மூலம் ஒருவரை சாந்தியின் அனுபவி ஆக்க முடியும், ஆனால் குறுகிய காலத்திற்காக மட்டும் ஆக்க முடியும். ஏனெனில், அவர்கள் சுயம்தான் முயற்சி செய்யவில்லை ஆனால் மகாதானியின் சக்தியினுடைய பிரபாவத்தினால் குறைந்த நேரத்திற்காக மட்டும் அந்த அனுபவம் செய்ய முடியும். எனவே யார் மனதால் மகாதானியாக இருப்பார்களோ, அவர்கள் என்ன எண்ணம் செய்தார்களோ அதில் வெற்றி கிடைத்து விடும் அளவிற்கு அவர்களுடைய எண்ணத்தில் சக்தி இருக்கும். எனவே, மனதால் மகாதானி எண்ணங்களின் வெற்றியைப் பிராப்தியாக அடையக்கூடியவராகி விடுகின்றார். எண்ணத்தை எங்கு நிலை நிறுத்த விரும்புகிறார்களோ, அங்கு அவர்களால் நிலைக்கச் செய்ய முடியும். எண்ணங்களுக்கு வசமாகமாட்டார்கள், ஆனால் எண்ணங்கள் அவர்களுடைய வசத்தில் இருக்கும். என்ன எண்ணங்களைப் படைக்க வேண்டுமோ, அதைப் படைக்க முடியும். எப்பொழுது எண்ணங்களை அழிக்க விரும்புகிறார்களோ, அப்பொழுது அழிக்க முடியும். எனவே, அத்தகைய மகாதானியிடம் எண்ணங்களைப் படைப்பது, எண்ணங்களை விநாசம் செய்வது மற்றும் எண்ணங்களைப் பாலனை செய்வது ஆகிய மூன்று சக்திகளும் இருக்கின்றன. எனவே, இதுவே மனதால் மகாதானி ஆவதாகும். இது மாஸ்டர் சர்வ சக்திவானின் பிரத்யட்ச சொரூபம் வெளிப்படுவது போல் ஆகும். புரிந்ததா?

அவர்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவார்கள் மற்றும் யார் வார்த்தைகள் மூலம் மகாதானி ஆகிறார்களோ, அவர்களுக்கு என்ன கிடைக்கிறது? அவர்கள் மாஸ்டர் நாலெட்ஜ்ஃபுல் (மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்கள்) ஆகிறார்கள். அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் மிகுந்த மதிப்பு இருக்கும். ஒரு ரத்தினத்தின் மதிப்பு அநேக ரத்தினங்களின் மதிப்பை விட அதிகமாக இருக்கும். வார்த்தைகள் மூலமாக ரத்தினங்களை தானம் செய்கிறீர்கள் அல்லவா? எனவே, யார் ஞான ரத்தினங்களை தானம்

செய்கிறார்களோ, அவர்களுடைய ஒவ்வொரு ரத்தினமும் அவ்வளவு மதிப்பானதாகி விடுகிறது. அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தையையும் கேட்பதற்காக அநேக ஆத்மாக்கள் தாகத்துடன் இருப்பார்கள். ஒரு சொல் அநேக தாகமான ஆத்மாக்களுடைய தாகத்தைத் தணிக்கக்கூடியதாக ஆகி விடுகிறது. மாஸ்டர் நாலெட்ஜ்ஃபுல், வேல்யுபில் (மதிப்பானவர்கள்) மற்றும் மூன்றாவது சென்சிபில் (புத்திசாலி) ஆகி விடுகிறார்கள். அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் சென்ஸ் (அர்த்தம்) நிறைந்திருக்கும். சென்ஸ் என்றால் சாரம் இல்லாமல் ஒரு வார்த்தை கூட இருக்காது. ஒருவர் அர்த்தம் நிறைந்த பேச்சு பேசினால், இவர்கள் மிகவும் புத்திசாலி என்று கூறுகின்றார்கள் அல்லவா? பேச்சின் மூலம் புத்திசாலித்தனம் தெரிந்து விடும். எனவே, இரட்டை சென்சிபிலாகவும் (சாரம் நிறைந்த வார்த்தை பேசுபவர், புத்திசாலி) ஆகி விடுகின்றனர். இது இவர்களது லட்சணம். பிராப்தி என்ன கிடைக்கிறது? வார்த்தைகள் மூலம் தானம் செய்யக்கூடியவர்களுக்கு விசேஷப் பிராப்தியாக ஒன்று குஷி கிடைக்கிறது, ஏனெனில், செல்வத்தைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது அல்லவா? மேலும். இரண்டாவது அவர்கள் ஒருபோதும் அதிருப்தியாகமாட்டார்கள். ஏனெனில், பொக்கிஷம் நிறைந்திருக்கும் காரணத்தினால், எந்தப் பொருளும் அப்ராப்தியாக இல்லாத காரணத்தினால் எப்பொழுதும் திருப்தியாக மற்றும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தையும் அம்பு போல் தைக்கும். யாருக்கு என்ன கூறுவார்களோ, அவருக்குள் அது தைத்து விடும். அவர்களுடைய பேச்சு பிரபாவத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். வார்த்தைகள் மூலம் தானம் செய்வதனால் பேச்சில் மிகுந்த குணம் வந்து விடுகிறது. மனோநிலையில் சுலபமாகவே குஷியின் பிராப்தி கிடைத்து விடும். குஷியைப் பிராப்தியாக அடைவதற்கான முயற்சி செய்யமாட்டார்கள் ஆனால் தானாகவே பிராப்தியாகக் கிடைக்கும். எவ்வாறு ஒரு சுரங்கத்திலிருந்து அளவிட முடியாத பொருள் கிடைக்கிறது, அவ்வாறே உள்ளுக்குள் இருந்து குஷி தானாகவே வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இது வரதான ரூபத்தில் பிராப்தியாகக் கிடைக்கிறது. குஷிக்காக முயற்சி செய்யமாட்டார்கள். வார்த்தைகள் மூலம் தானம் செய்வதற்கான முயற்சியை மட்டுமே செய்வார்கள். பிராப்தியாகக் குஷி கிடைத்து விடுகிறது.

கர்மத்தின் மூலம் குணங்களை தானம் செய்யும் காரணத்தினால் என்ன மூர்த்தியாக ஆவீர்கள்? ஃபரிஷ்தா! கர்மம் அதாவது குணங்களின் தானம் செய்பவர்களுடைய நடத்தை மற்றும் முகம் ஆகிய இரண்டுமே ஃபரிஷ்தா போன்று மாறி விடும். இரண்டு விதமான லைட் (டபுள் லைட்) இருக்கும், அதாவது பிரகாசமயமாகவும் இருப்பார்கள் மற்றும் இலகுவாகவும் இருப்பார்கள். என்ன அடி எடுத்து வைத்தாலும் அது இலகுவானதாக இருக்கும், சுமையாக உணரமாட்டார்கள். ஏதோ ஒரு சக்தி இயக்கிக் கொண்டிருப்பதாக உணர்வார்கள். ஒவ்வொரு அடியிலும் உதவி கிடைப்பதாக உணர்வார்கள். ஒவ்வொரு கர்மத்திலும் அனைவரின் மூலமாகவும் வரதானம் பிராப்தியாகக் கிடைத்ததாக அனுபவம் செய்வார்கள். இரண்டாவது, ஒவ்வொரு கர்மத்தின் மூலமும் மகாதானி ஆகக்கூடியவர்கள் அனைவருடைய ஆசீர்வாதங்களுக்கும் பாத்திரமானவராக ஆகியிருக்கும் காரணத்தினால் அனைத்து வரதானங்களும் தன் வாழ்வில் கிடைத்ததாக அனுபவம் செய்வார்கள். உழைப்பினால் அல்ல, ஆனால், வரதானமாகக் கிடைத்ததாக அனுபவம் செய்வார்கள். எனவே, கர்மத்தின் மூலம் தானம் செய்பவர்கள் ஒன்று ஃபரிஷ்தாவாகத் தோன்றுவார்கள், இரண்டாவது சர்வ வரதான மூர்த்தியாகத் தன்னை அனுபவம் செய்வார்கள். எனவே, எந்த ஒரு தானமும் செய்யாமல் குறை வைக்கவில்லைதானே? மூன்று தானங்களும் செய்கின்றேனா? என்று தன்னை சோதனை செய்யுங்கள். மூன்று கணக்கையும் ஏதாவது விதத்தில் நிறைவேற்ற வேண்டும். அதற்கான வழியையும் வாய்ப்பையும் தேடுங்கள். வாய்ப்பு கிடைத்தால் செய்வோம் என்று இருக்கக்கூடாது. வாய்ப்பைப் பெற வேண்டுமே தவிர வாய்ப்பு தானாக வராது. அத்தகைய மகாதானி ஆவதனால் ஒளி மற்றும் சக்தியின் வட்டம் தெரியவரும். உங்களுடைய நெற்றியிலிருந்து ஒளி வட்டம் தெரியும் மற்றும் நடத்தை மூலம், பேச்சு மூலம் ஞானத்தின் சக்தியின் வட்டம் தெரியும். அதாவது விதை பார்வைக்குத் தெரியும். நீங்கள் மாஸ்டர் விதை ரூபம் ஆனவர்கள் அல்லவா? அத்தகைய ஒளி மற்றும் சக்தியின் வட்டம் தெரிபவர்களே சாட்சாத் மற்றும் சாட்சாத்கார மூர்த்தி ஆகி விடுவார்கள். புரிந்ததா?

இங்கே இந்த ஹாலில் ஒளி மற்றும் சக்தி ஆகிய இரண்டு வட்டங்களும் கொண்ட ஏதேனும் சித்திரம் உள்ளதா? (ஒருவர்) ஸ்ரீ லட்சுமி, நாராயணருடைய சித்திரம் உள்ளதென்று கூறினார், மற்றொருவர்

பிரம்மாவின் சித்திரம் உள்ளது என்று கூறினார்) சித்திரத்தைப் பார்க்கும்பொழுது முகமே எவ்வாறு மாறி விடுகிறது பாருங்கள்! எனவே, நீங்களும் கூட அத்தகைய சைத்தன்யமான சித்திரமாகுங்கள். உங்களைப் பார்க்கும்பொழுதே அனைவருடைய சரித்திரம், பார்வை மற்றும் மனோநிலை மாறிவிட வேண்டும். அவ்வாறு ஆக வேண்டும். மேலும் ஆகிக் கொண்டும் இருக்கிறீர்கள். வரதான பூமிக்கு வருவது என்றால் வரதானங்களின் அதிகாரி ஆவது ஆகும். யாத்திரைக்கு ஏன் செல்கின்றார்கள்? (பாவத்தை அழிப்பதற்காக) அந்த பூமியில் அந்த விசேஷத்தன்மை உள்ளதால் செல்கின்றார்கள். இந்த பூமியில் என்ன விசேஷத்தன்மை உள்ளது? இந்த பூமியே வரதான பூமியாகும். இங்கே வரதானம் பிராப்தியாகக் கிடைக்கின்றது. தானாகவே வரதானம் கிடைக்கும் அல்லவா? கேட்பதற்கான அவசியம் இல்லை. ஆகையினால், இன்றிலிருந்து கேட்பதை நிறுத்தி விட வேண்டும். தன்னை அதிகாரி என்று புரிந்து கொள்ளுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.04.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மனதின் உணர்வுகளை அறிந்து கொள்வதற்கான விதி மற்றும் லாபம்!

இங்கு யாரெல்லாம் அமர்ந்திருக்கிறீர்களோ, நீங்கள் அனைவரும் மன்மனாபவ ஸ்திதியில் நிலைத்திருக்கிறீர்களா? யார் சுயம் மன்மனாபவ ஸ்திதியில் நிலைத்திருக்கிறீர்களோ, அவர்கள் பிறருடைய மனதின் கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும். எந்த மனிதர் உங்களுக்கு முன் வந்தாலும் மன்மனாபவ ஸ்திதியில் நிலைத்திருந்து அவர்களுடைய மனதின் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில், எப்பொழுது மன்மனாபவ ஸ்திதி சூட்சும ஸ்திதி ஆகி விடுகிறதோ, அப்பொழுது சூட்சும ஸ்திதி மற்றும் உணர்வைப் புரிந்து கொள்ள முடியும். எனவே, இந்தப் பயிற்சியை அனுபவம் செய்கிறீர்களா? பேச்சு என்னவாக இருந்தாலும் அவருடைய உணர்வு என்னவாக உள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கான பயிற்சி செய்துகொண்டே செல்லுங்கள் எப்பொழுது ஒருவரின் மனதின் உணர்வுகளைப் புரிந்து கொண்டுவிடுவீர்களோ, அப்பொழுது அதன் முடிவு என்னவாக இருக்கும்? ஒவ்வொருவருடைய மனதின் உணர்வைப் புரிந்து கொள்வதனால் அவர்களுடைய விருப்பம் என்ன உள்ளதோ மற்றும் என்ன பிராப்தியை அடைய விரும்புகிறார்களோ, அவர்களுக்கு அது கிடைக்கும்பொழுது என்னவாகும்? நீங்கள் அவர்களை என்னவாக ஆக்க விரும்புகிறீர்களோ அதுவாக ஆகி விடுவார்கள் அதாவது சேவையில் வெற்றி வெகு விரைவாகக் கிடைத்து விடும். ஏனெனில், அவர்களது விருப்பத்தின்படி அவர்களுக்குப் பிராப்தி கிடைக்கும். ஒருவேளை, ஒருவருக்கு சாந்தியின் தாகம் உள்ளது. அவர்களுக்கு சாந்தி கிடைக்கிறது என்றால் என்ன வாகும்? பிராப்தியினால் அழிவற்ற முயற்சியாளர் ஆகி விடுவார்கள். எனவே, மனதின் உணர்வைக் கண்டறிவது மற்றும் புரிந்து கொள்வதன் விளைவு என்னவாகும்? சேவையில் குறுகிய சமயத்தில் அதிக வெற்றி கிடைக்கும். ஏனெனில், வெற்றி சொரூபம் ஆகி விடுவீர்கள். இப்பொழுது

முயற்சியின் சொரூபமாக இருக்கிறீர்கள். இந்த லட்சணம் வருவதனால் வெற்றி சொருபம் ஆகி விடுவீர்கள். புரிந்ததா?

இப்பொழுது வெற்றியைப் பெறுவதற்காக நீங்கள் சமயம், சங்கல்பம், செல்வம் மற்றும் சக்தியை மிகுதியாக ஈடுபடுத்த வேண்டியதாக உள்ளது. பிறகு என்ன ஆகும்? சுயம் வெற்றியே உங்கள் முன்னால் வரும். செல்வத்தை ஈடுபடுத்த வேண்டியது இருக்காது, செல்வம் உங்கள் முன் தானே ஸ்வாஹா ஆவதற்காக வரும். புரிந்ததா? ஒரு விசயத்தின் தாரணையினால் இவ்வளவு வித்தியாசம் ஏற்படுகிறது. அது என்ன விசயம்? மன்மனாபவ நிலையில் நிலைத்திருந்து ஒவ்வொருவருடைய மனதின் உணர்வுகளை அறிந்துகொள்வது.

இயற்கை சேவகன் ஆகிறது என்ற மகிமை உள்ளது. அது சத்யுகத்திலா நடக்கும்? இயற்கையின் மீது வெற்றியைப் பிராப்தியாக அடைந்ததனால் பலன் கிடைத்திருக்கிறது என்பது சத்யுகத்தில் தெரியவே தெரியாது; ஆனால் இப்பொழுது இயற்கையின் மீது வெற்றி அடைவதற்காக என்ன முயற்சி செய்கிறீர்களோ, அதனுடைய பலன் அல்லது பிராப்தியை இந்த சிரேஷ்டமான பிறவியிலேயே பார்ப்பீர்கள். இயற்கை உங்களை அடிமை ஆக்காது ஆனால் அதிகாரியாகி இயற்கையின் காரியத்தைப் பார்ப்பீர்கள். புரிந்ததா? அத்தகைய சம்பூரண நிலையை அடைவீர்கள், அந்த நிலையில் எவ்விதமான அடிமைத்தனமும் இருக்காது, அனைத்தின் மீதும் அதிகாரம் இருப்பதாக அனுபவம் செய்வீர்கள். இந்நிலையை அடைவதற்காக என்ன செய்ய வேண்டும்? ஒன்று -ஆன்மிகத்தன்மை, இரண்டாவது -முகத்தின் மூலம் எப்பொழுதும் ஈஸ்வரிய போதை தென்பட வேண்டும் மற்றும் மூன்றாவது -சேவையில் எப்பொழுதும் கருணை உள்ளத்தின் சம்ஸ்காரம் மற்றும் குணம் வெளிப்படையாக ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அனுபவம் ஆக வேண்டும். ஆன்மிகத்தன்மை, ஈஸ்வரிய போதை மற்றும் கருணை உள்ளம் என்ற குணம் ஆகிய மூன்று விசயங்களுமே இருக்க வேண்டும். இந்த மூன்று விசயங்களும் வெளிப்படையான ரூபத்தில், ஸ்திதியில், முகத்தில் மற்றும் சேவை அதாவது கர்மத்தில் தென்பட வேண்டும். அப்பொழுதே வெற்றி நமது அருகாமையில் வந்து கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். மூன்றுமே ஒன்றாக இணைந்து இருக்க வேண்டும். இப்பொழுது என்ன நடக்கிறது? ஒருவேளை, கருணை உள்ளம் உடையவர் ஆகிறீர்கள் எனில்,

கருணை உள்ளத்தின் கூடவே ஈஸ்வரிய போதையும் தென்பட வேண்டும், ஆனால், இவை இரண்டும் ஒன்றாக இணைந்து தென்படுவதில்லை. கருணை உள்ளமோ அல்லது ஈஸ்வரிய போதையோ தென்படுகிறது. ஈஸ்வரிய போதையின் கூடவே ஆன்மிகத்தன்மையும் தென்பட வேண்டும். மூன்றுமே பிரத்யட்ச ரூபத்தில் தெரிய வேண்டும் ஆனால் இப்பொழுது இந்நிலை குறைவாகத் தென்படுகிறது. பயிற்சியாளர்களாக இருக்கிறீர்கள். இப்பொழுது தன்னை அனைத்து ஆத்மாக்களையும் விட மகான் ஆத்மா என்று மட்டும் புரிந்திருக்கிறீர்கள். மகான் ஆத்மா ஆகி ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு கர்மம் செய்கிறீர்களா? புரிந்து கொள்வது என்பது லட்சியம் ஆகும் மற்றும் செய்வது என்பது நடைமுறை ஆகும். அனைத்து ஆத்மாக்களையும் விட சிரேஷ்டத்திலும், சிரேஷ்ட மான மகான் ஆத்மா ஆவேன் என்ற இந்த நினைவோடு யாருக்கு முன்னால் சென்றாலும், அவர்கள் என்ன அனுபவம் செய்வார்கள்? உங்களது மகான் தன்மைக்கு முன்னால் அனைவரும் தலை வணங்குவார்கள். எவ்வாறு உங்களுடைய ஜட சித்திரங்களுக்கு முன்னால் இன்றைய கலியுகத்தின் பெரிய ஒரு மகான் பதவியில் இருப்பவர் சென்றாலும் என்ன செய்வார்? தலை வணங்குவார். சித்திரத்திற்கு முன்னால் தலை வணங்குகிறார்கள் எனில் சைத்தன்யமான சரித்திரவான் (ஒழுக்கமான), அனைத்து குணங்களிலும் தந்தைக்குச் சமமான சைத்தன்ய மூர்த்திக்கு முன்னால் தலை வணங்கமாட்டார்களா என்ன? அல்லது இந்த முடிவு (ரிசல்ட்) எதிர்காலத்தினுடையது என்று நினைக்கிறீர்களா? இப்பொழுது ஏற்பட வேண்டுமா? அல்லது எப்பொழுது ஏற்பட வேண்டும்? இறுதி நேரத்திற்குக் கூட எவ்வளவு நேரம் உள்ளது?

ஒருவேளை, தலை வணங்கி தலை வணங்கச் செய்வது என்பது என்ன பெரிய விசயம்! சேவையின் காரணத்தினால் சில நேரம் தலை வணங்க வேண்டும் என்ற லட்சியம் வைக்கிறீர்கள். இந்த லட்சியம் தவறானதாகும். இந்த லட்சியத்திலேயே பலஹீனம் நிறைந்துள்ளது. எப்பொழுது விதையே பலஹீனமாக உள்ளதோ, அப்பொழுது பலன் என்ன வெளிப்படும்? எந்த ஒரு புதிய ஸ்தாபனை செய்யக் கூடிய வரும், சிறிது தலை வணங்கி செய்ய வேண்டும் என்று யோசிக்க மாட்டார். எப்பொழுது ஆத்மாக்கள் கூட (உலகத்தினர்) தலை வணங்க வைப்பதற்கான லட்சியம் வைத்து சிலரை தனக்கு முன்னால் தலை வணங்க வைத்துக் காண்பிக்கின்றனர். இதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் -இந்த ஸ்தாபனை

காரியம் எவ்வளவு உயர்ந்தது மற்றும் யாருடைய வழிப்படி நடக்கிறது! அதற்கு முன்னால் அனைத்து ஆத்மாக்களும் தலை வணங்க வேண்டும் என்ற இந்த லட்சியம் வைத்து, இந்த ஈஸ்வரிய போதையை தாரணை செய்து ஒருவருக்கு முன்னால் சென்று என்ன ரிசல்ட் கிடைக்கிறது என்று பாருங்கள்!

மகான் தன்மையைக் கொண்டு வருவதற்காக ஞானத்தின் ஆழத்தில் செல்ல வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு ஞானத்தின் ஆழத்தில் செல்வீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு தன்னை மகான் ஆக்கமுடியும். மகான் தன்மை குறைவாக இருக்கிறது என்றால், ஞானத்தின் ஆழத்தில் செல்லும் அனுபவத்தில் குறை உள்ளது என்று அர்த்தம். எனவே, தன்னை சோதனை செய்யுங்கள். மகான் ஆத்மாவினுடைய காரியம் என்ன என்பதை நினைவில் வைத்திடுங்கள். யார் மகான் காரியம் செய்து காண்பிக்கிறார்களோ, அவர்களையே மகான் ஆத்மாக்கள் என்று கூறுகின்றனர். ஒருவேளை, யாராவது சாதாரண காரியம் செய்தால் அவர்களை மகான் ஆத்மா என்று கூறமுடியாது. எனவே, மகான் ஆத்மாவின் காரியமும் மகானாக இருக்க வேண்டும். மகான் ஆத்மாவாக இருப்பதனால் இன்று முழு நாளில் என்ன மகான் காரியம் செய்தேன்? மகாதானி ஆகியிருந்தேனா? என்பதை முழு நாளின் தினச்சரியத்தில் சோதனை செய்யுங்கள். மகான் ஆத்மாக்களின் காரியமே தானம், புண்ணியம் செய்வதாகும். ஆகையினாலேயே, அவர் அனைவராலும் மகான் ஆத்மா என்று அழைக்கப்படுகிறார். எனவே இன்று முழு நாளில் எத்தனை பேருக்கு தானம் செய்தேன் மற்றும் என்ன தானம் செய்தேன்? எவ்வாறு மகான் ஆத்மாக்களின் உணவு பழக்க வழக்கம் முதலியவை கூட மகானாக இருக்கும், அவ்வாறு இன்று என்னுடைய புத்தியின் உணவு மகானாக இருந்ததா? சுத்த உணவை உட்கொண்டேனா? என்று பார்க்க வேண்டும். எவ்வாறு பாருங்கள், மகான் ஆத்மாக்கள் என்று அழைக்கப்படுபவர்கள் அசுத்த உணவை உட்கொண்டால் அவர்களைப் பார்த்து அனைவரும் என்ன கூறுவார்கள்? இவர்கள் மகான் ஆத்மாக்களா? என்று கூறுவார்கள். இன்று நான் புத்தி மூலம் ஏதாவது அசுத்த எண்ணம் என்ற உணவை உட்கொள்ளவில்லை தானே? என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். மகான் ஆத்மாக்களுடைய உணவு பழக்கவழக்கங்கள் கவனிக்கபடுகிறது. எனவே, இன்று முழு நாளில் புத்தியின் ஆகாரம் என்னவாக இருந்தது? ஒருவேளை, ஏதாவது

அசுத்த எண்ணம் அல்லது விகல்பம் அல்லது வீணான எண்ணத்தைக் கூட புத்தி கிரஹித்திருந்தால். இன்று என்னுடைய ஆகாரத்தில் அசுத்தம் கலந்து விட்டது என்று புரிந்துகொள்ள வேண்டும். யார் மகான் ஆத்மாக்களாக இருக்கிறார்களோ, அவர்களுடைய ஒவ்வொரு விவகாரம் அதாவது நடத்தை மூலம் அனைத்து ஆத்மாக்களுக்கும் சுகத்தின் தானம் கொடுப்பதற்கான லட்சியம் இருக்கும். அவர் சுகம் கொடுப்பார் மற்றும் சுகத்தைப் பெறுவார். எனவே, மகான் ஆத்மாவின் கணக்குப்படி இன்றைய தினம் எவருக்கும் துக்கம் கொடுக்கவும் இல்லை மற்றும் பெறவும் இல்லை தானே? புண்ணியத்தின் காரியம் என்ன செய்தேன் என்பதை தனக்குத் தானே சோதனை செய்யுங்கள். புண்ணியம் என்றால் ஒரு ஆத்மாவிடமிருந்து ஆசீர்வாதம் கிடைக்கும்படியான ஒரு பொருளைக் கொடுப்பதாகும். இதையே புண்ணிய காரியம் என்று கூறுகிறார்கள். யாருக்கு சுகம் கொடுப்பீர்களோ, அவர்களுடைய உள்ளத்தில் இருந்து உங்களுக்காக ஆசீர்வாதம் வெளிப்படும். எனவே, இது புண்ணிய காரியம் ஆகும். மேலும், அஹிம்சையே அவர்களது முக்கிய லட்சணம் ஆகும். நான் முழு நாளும் எந்த ஹிம்சையும் செய்யவில்லைதானே? என்ன ஹிம்சை செய்தேன்? என்பதையும் நீங்கள் முழு நாளில் சோதனை செய்ய வேண்டும். நீங்கள் தன்னை இரட்டை அஹிம்சாவாதி என்று கூறிக் கொள்கின்றீர்கள் அல்லவா. மனதில் தன்னுடைய சம்ஸ்காரங்களுடன் கூடிய யுத்தமும் அதிகமாக நடக்கின்றது. எனவே, மாயையை வீழ்த்தும் ஹிம்சை செய்கின்றீர்கள் அல்லவா? யுத்தம் செய்துகொண்டே இதை அஹிம்சை என்று ஏன் கூறுகிறீர்கள்? ஏனெனில், இந்த யுத்தத்தின் பின்விளைவாக சுகம் மற்றும் சாந்தி கிடைக்கிறது. ஹிம்சை என்றால் அதன் மூலம் துக்கம், அசாந்தி கிடைக்கும் ஆனால் இதன் மூலம் சாந்தி மற்றும் சுகத்தினுடைய நன்மை கிடைக்கிறது, ஆகையினால், இதை ஹிம்சை என்று கூறுவதில்லை. எனவே, இரட்டை அஹிம்சாவாதிகள் ஆவார்கள். மகான் ஆத்மாக்களுடைய லட்சணம் என்ன புகழப்படுகிறதோ, அதையும் பார்க்க வேண்டும். இன்றைய முழு நாளில் எவ்விதமான ஹிம்சையும் செய்யவில்லைதானே? ஒருவேளை, ஏதாவது வார்த்தை மூலம் ஒருவருடைய மனோநிலையை தடுமாறச் செய்திருந்தால் இது கூட ஹிம்சை ஆகும். எவ்வாறு அம்பு மூலம் ஒருவரை காயப்படுத்துவது என்பது ஹிம்சை தானே! இவ்விதமாக ஒருவேளை, ஏதோ ஒரு வார்த்தை மூலம் ஒருவருடைய ஈஸ்வரிய மனோநிலையை தடுமாறச் செய்வது அதாவது காயப்படுத்துவது என்பது கூட ஹிம்சை ஆகுமல்லவா.

ஆத்மாவினுடைய உண்மையான சதோபிரதானமான சம்ஸ்காரத்தை அல்லது தன்னுடைய உண்மையான ஈஸ்வரிய சம்ஸ்காரத்தை அமிழ்த்திவிட்டு பிற சம்ஸ்காரங்களை நடைமுறையில் கொண்டு வருகின்றனர். எவ்வாறு ஒருவருடைய கழுத்தை நெறிப்பது என்பது ஹிம்சை என்று கருதப்படுகின்றதோ. அவ்வாறு தன்னுடைய உண்மையான அதாவது சதோபிரதானமான ஸ்திதியின் சம்ஸ்காரங்களை அமிழ்த்துவது என்பது கூட ஹிம்சை ஆகும். புரிந்ததா?

இந்த அனைத்து இலட்சணங்களும் எந்தளவு நடைமுறையில் உள்ளன என்பதை சோதனை செய்ய வேண்டும். மகான் ஆத்மாவின் லட்சணம் என்ன? என்பது இப்பொழுது புரிந்ததா? முழு நாளில் தானமும் செய்துகொண்டே இருங்கள், புண்ணிய காரியமும் செய்யுங்கள் மற்றும் அஹிம்சாவாதியாகவும் ஆகுங்கள். அப்பொழுது மனோநிலை என்ன ஆகி விடும்? என்று சொல்லுங்கள். பிறகு, அத்தகைய (ஞானத்தின்) ஆழத்தில் செல்லக்கூடிய, சம்பூரண நிலையில் நிலைத்திருக்கக்கூடிய மகான் ஆத்மாக்களுக்கு முன்னர் அனைவரும் அவசியம் தலை வணங்குவார்கள். ஸ்தூல தலை வணங்குவார்களா என்ன? தலை அனைத்தையும் விட உயர்வாக இருக்கிறது. எனவே, தலை வணங்கச் செய்வது என்றால் அனைவரையும் வணங்கச் செய்வதாகும். எனவே, தற்காலத்தில் யார் தன்னை உயர்ந்த மகான் என்று புரிந்திருக்கிறார்களோ மற்றும் தன்னுடைய காரியத்தை உயர்ந்த மகான் காரியம் என்று புரிந்திருக்கிறார்களோ, அவர்கள் தலை வணங்கச் செய்வார்கள்: அதாவது இந்த சிரேஷ்டமான காரியத்திற்கு முன்னால் நம் அனைவருடைய காரியமும் ஒன்றுமே இல்லை என்பதை பிறர் உணர்வார்கள். தன்னுடைய சிரேஷ்ட தன்மையை சிரேஷ்டமானது என்று புரிந்து கொள்ளாமல் சாதாரணமானது என்று புரிந்துகொள்வார்கள். இதையே அனைத்து ஆத்மாக்களையும் தங்களுக்கு முன்னால் தலை வணங்கச் செய்வதாகும். என்ன சோதனை செய்ய வேண்டும் என்பது இப்பொழுது புரிந்ததா? முழு நாளில் மகான் ஆத்மாவின் மகான் காரியம் மற்றும் லட்சணம் எதுவோ, அதை எந்தளவு நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறீர்கள்? பின்னர் இந்த முடிவைக் கேட்போம்.

நீங்கள் மும்மூர்த்தி தந்தையின் குழந்தைகள் ஆவீர்கள் என்று முன்னரே சொல்லப்பட்டது அல்லவா? எனவே, உங்களிடமிருந்து மும்மூர்த்தி ஒளி

தென்பட வேண்டும். அதாவது உங்கள் ஒவ்வொருவரின் மூலம் மூன்று ஒளியின் காட்சி கிடைக்க வேண்டும். யார் உங்கள் முன்னால் வந்தாலும் ஒன்று -நெற்றியில் மணி தென்பட வேண்டும், இரண்டாவது, இரண்டு கண்களிலிருந்தும் இரண்டு ஒளி விளக்குகள் (பல்புகள்) எரிந்து கொண்டிருக்கின்றன என்பது போன்று அனுபவம் ஆக வேண்டும் மற்றும் நெற்றிக்கு மேலே ஒளிக் கிரீடம் தென்பட வேண்டும். இந்த மூன்று ஒளிகளின் காட்சி கிடைக்க வேண்டும். சிலரிடம் தென்படவும் செய்கிறது. எப்பொழுது நினைவு யாத்திரையில் அமரச் செய்கிறீர்களோ, அப்பொழுது இந்த இரண்டு கண்கள் பிரகாசமான ஒளியாகத் தென்படுகின்றன மற்றும் சிலருடைய நெற்றியிலிருந்து ஒளிக் கிரீடத்தின் காட்சியும் கிடைக்கின்றது. எனவே, உங்களின் மூலம் இந்த மூன்று ஒளிகளின் காட்சி கிடைத்தது என்றால் என்ன ஆகும்? தானும் ஒளி ஆகி விடுவீர்கள். நீங்கள் அனுபவி ஆவீர்கள் அல்லவா? சாகார ரூபத்தில் (பிரம்மாபாபா) பார்த்திருக்கிறீர்கள் -நெற்றியிலிருந்து மற்றும் கண்களிலிருந்து தூய்மையின் கிரீடத்தினுடைய காட்சியானது அநேகருக்குக் கிடைத்தது. எனவே, தந்தையைப் பின்பற்ற வேண்டும். ஒருவேளை அத்தகைய சொரூபத்தின் காட்சியை ஆத்மாக்களுக்கு செய்வித்தீர்கள் என்றால், உங்களுடைய காலடிகளில் சேவையின் வெற்றி வந்து தலை வணங்கும். யாருக்கு எதிரில் நீங்கள் சென்றாலும், அவர்களுக்குக் காட்சி கிடைக்கும் அளவிற்கு மகான் ஆத்மா ஆகுங்கள். அவர் சாட்சாத்கார மூர்த்தியாகிய உங்கள் முன் தன்னுடைய தலையைத் தூக்கிக் காண்பிக்க முடியுமா? என்று சொல்லுங்கள். தலை வணங்கி விடுவார்கள். இப்பொழுது இவ்விதமாகத் தலை வணங்கினார்கள் என்றால் பிறகு உங்களுடைய ஜட சித்திரங்களுக்கு முன்னால் ஸ்தூலத்தில் தலை வணங்குவார்கள். பிரஜைகளின் கூடவே பக்தர்களையும் உருவாக்க வேண்டும். முழு கல்பத்திற்கான பிராப்தியை இப்பொழுதே உருவாக்க வேண்டும். வாரிசுகளையும் உருவாக்க வேண்டும் மற்றும் பிரஜைகளையும் உருவாக்க வேண்டும். துவாபரயுகத்தின் பக்தர்களும் இப்பொழுதே உருவாகுவார்கள். புரிந்ததா? உங்களுடைய பக்தர்களிடத்திலும் கூட உங்கள் மூலம் பக்தியினுடைய அதாவது பாவனையின் சம்ஸ்காரம் இப்பொழுது நிரம்ப வேண்டும். இவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள் ஆவார்கள் என்ற இந்த பாவனையின் சம்ஸ்காரம் மட்டும் நிரம்புவதனால் பக்தன் ஆகி விடுவார்கள். எனவே, பக்தர்களையும் இப்பொழுது உருவாக்க வேண்டும். இப்பொழுது வரை பிரஜைகளை

உருவாக்குவதிலேயே அதிகமாக உழைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். உங்களுடைய ஸ்திதி பிரத்யட்சம் ஆகிக் கொண்டே செல்லும்பொழுது உங்களுடைய வாரிசுகள் அதாவது ராஜ குடும்பம், பிரஜைகள் மற்றும் பக்தர்கள் ஆகிய மூவருமே பிரத்யட்சம் (வெளிப்படுவர்) ஆவார்கள். இப்பொழுதோ கலப்படம் (மிக்ஸ்) உள்ளது. ஏனெனில், உங்களுடைய மனோநிலையே (ஸ்திதி) உறுதியாக (ஃபிக்ஸ்) இல்லை. எனவே, அவர்களும் மிக்ஸ் ஆகின்றனர். பிறகு பிரத்யட்சமாக வெளிப்படுவார்கள். இவர்கள் பக்தர்கள் என்பதை நீங்களும் உணர்வீர்கள். ஏனெனில், திரிகாலதரிசி என்ற குணம் பிரத்யட்சம் ஆகி விடும். எனவே, தனது மூன்று காலங்களின் பிராப்தியையும் தெளிவாகக் காண முடியும். தெய்வீகப் பார்வையினால் (திவ்ய திருஷ்டி) அல்ல, பிரத்யட்சமாக பார்ப்பீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.04.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தியாகம் தவம் மற்றும் சேவையின் விளக்கம்!

இன்று பட்டியை துவக்கி வைப்பதற்காக அழைத்திருக்கிறீர்கள். இந்த பட்டியில் அனைத்து குணங்களின் தாரணை மூர்த்தி ஆவதற்காக மற்றும் சம்பூரண ஞானமூர்த்தி ஆவதற்காக வந்திருக்கிறீர்கள். இதற்காக முக்கியமாக மூன்று விசயங்களைக் கவனத்தில் வைக்க வேண்டும். அவை எவை? அந்த மூன்று விசயங்களின் மூலம் சம்பூரண ஞானமூர்த்தி மற்றும் அனைத்து குணமூர்த்தி ஆகித்தான் செல்வீர்கள். முழு ஞானத்தின் சாரம் அந்த மூன்று வார்த்தைகளில் அடங்கி உள்ளது. அந்த வார்த்தைகள் எவை? ஒன்று -தியாகம், இரண்டாவது -தவம் மற்றும் மூன்றாவது -சேவை ஆகும். இந்த மூன்று வார்த்தைகளின் தாரணைமூர்த்தி ஆவது என்றால், சம்பூரண ஞானமூர்த்தி மற்றும் அனைத்து குணங்களின் மூர்த்தி ஆவதாகும். தியாகம் என்று எது கூறப்படுகிறது? நிரந்தரமான தியாக விருத்தி மற்றும் தபஸ்யா மூர்த்தி ஆகி ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு எண்ணத்தின் மூலம் ஒவ்வொரு ஆத்மாவின் சேவை செய்ய வேண்டும். இதைக் கற்றுக்கொள்வதற்காக பட்டிக்கு வந்திருக்கிறீர்கள். தியாகம் மற்றும் தவம் ஆகிய இரண்டைப் பற்றியும் அறிவீர்கள், பிறகு இப்பொழுது என்ன செய்வதற்காக வந்திருக்கிறீர்கள்? (கர்மங்களில் கொண்டு வருவதற்காக) அறிந்திருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது என்ன அறிந்திருக்கிறீர்களோ அதன்படி நடக்க வேண்டும். இரண்டையும் சமமாக்குவதற்காக வந்திருக்கிறீர்கள். இப்பொழுது அறிந்திருப்பது மற்றும் நடப்பதில் வித்தியாசம் உள்ளது. அந்த வேறுபாட்டை முடிப்பதற்காக பட்டிக்கு வந்திருக்கிறீர்கள். உங்களுடைய தியாகம் மற்றும் தவத்தின் சக்தியினுடைய கவர்ச்சி தூரத்திலேயே பிரத்யட்சமாகத் தென்படும் அளவிற்கு தபஸ்யா மூர்த்தியாக மற்றும் தியாக மூர்த்தியாக ஆக வேண்டும். எவ்வாறு ஸ்தூல நெருப்பு அல்லது வெளிச்சம் அல்லது வெப்பம் தூரத்திலிருந்தே தென்படுகிறது அல்லது அனுபவம் ஆகிறது.

அவ்வாறே உங்களுடைய தவம் மற்றும் தியாகத்தின் ஜொலிப்பு தூரத்திலிருந்தே கவர்ச்சி செய்ய வேண்டும். ஒவ்வொரு கர்மத்திலும் தியாகம் மற்றும் தவம் வெளிப்படையாகத் தெரிய வேண்டும். அப்பொழுதே சேவையில் வெற்றியை அடைய முடியும். சேவாதாரி ஆகி மட்டும் சேவை செய்வதனால், என்ன வெற்றியை அடைய விரும்புகிறீர்களோ, அதை அடைய முடியாது ஆனால், சேவாதாரி ஆவதன் கூடவே தியாகம் மற்றும் தபஸ்யா மூர்த்தியாகவும் இருந்தீர்கள் என்றாலே சேவையின் பிரத்யட்ச பலன் தென்படும். எனவே, மிகம் நல்ல சேவாதாரியாக இருக்கிறீர்கள், ஆனால் சேவை செய்யும் சமயத்தில் தியாகம் மற்றும் தவத்தை மறந்து விடக் கூடாது. மூன்றும் இணைந்திருப்பதனால் குறைந்த உழைப்பில் அதிக பலனும் கிடைக்கும். குறைவான சமயத்தில் அதிக வெற்றி கிடைக்கும். எனவே, இந்த மூன்றையும் இணைக்க வேண்டும். இதை நல்ல முறையில் பயிற்சி செய்து விட்டுச் செல்ல வேண்டும்.

எந்தளவு ஞானம் உள்ளதோ, அந்தளவு சக்திசாலியாகவும் மற்றும் வெற்றியாளராகவும் ஆக வேண்டும். ஞானம் நிறைந்தவர்களின் ஒவ்வொரு வார்த்தையும் சக்தி வாய்ந்ததாக இருக்கும் மற்றும் ஒவ்வொரு கர்மமும் வெற்றிகரமானதாக இருக்கும். இதுவே ஞானம் நிறைந்தவர்களின் அடையாளமாகத் தென்படும். ஒருவேளை, இந்த இரண்டும் குறைவாகத் தென்படுகிறது என்றால், ஞானம் நிறைந்தவராக ஆக வேண்டும் என்று புரிந்து கொள்ளுங்கள். தற்காலத்தில் ஆத்மாக்கள் மூலம் கிடைக்கும் அரைகுறை ஞானத்தை யார் பெறுகிறார்களோ, அவர்களுக்கும் கூட அல்ப காலத்திற்காக வெற்றியின் பிராப்தி கிடைக்கிறது. சம்பூரண சிரேஷ்ட ஞானத்தின் பிராப்தியானது பிரத்யட்ச பிராப்தியாகக் கிடைக்கும் அனுபவத்தைக் கூட இப்பொழுது செய்ய வேண்டும். இந்த ஞானத்தின் பிராப்தி எதிர்காலத்தில் கிடைக்கும் என்று நினைக்க வேண்டாம், அவ்வாறு அல்ல. நிகழ்கால சமயத்தில் ஞானத்தின் பிராப்தியாகத் தன்னுடைய முயற்சியில் வெற்றி மற்றும் சேவையில் வெற்றி கிடைக்கும் அனுபவம் ஏற்படுகிறது. வெற்றியின் ஆதாரத்தில் தன்னுடைய ஞானத்தை அறிந்து கொள்ள முடியும். எந்தளவு ஞானம் நிறைந்தவர் ஆகியிருக்கின்றேன் என்று சோதனை செய்வதற்கு மற்றும் செய்விப்பதற்காக பட்டிக்கு வந்திருக்கிறீர்கள். எந்த ஒரு பழைய எண்ணாமோ அல்லது சம்ஸ்காரமோ தென்படக் கூடாது, அந்தளவு

தியாகம் செய்ய கற்றுக் கொள்ள வேண்டும். நெற்றி அதாவது புத்தியின் நினைவு மற்றும் பார்வை மூலம் ஆன்மிக சொரூபத்தைத் தவிர வேறு எதுவும் தென்படவும் கூடாது மற்றும் நினைவிலும் வரக் கூடாது அத்தகைய நிரந்தர தபஸ்வி ஆக வேண்டும். எத்தகைய சம்ஸ்காரம் அல்லது சுபாவம் உடையவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் ரஜோ குண ஆத்மாவாக இருக்கலாம் அல்லது தமோ குண ஆத்மாவாக இருக்கலாம். அவர்கள் சம்ஸ்காரம் அல்லது சுபாவத்திற்கு வசப்பட்டு உங்களுடைய முயற்சியில் பரீட்சை வைப்பதற்கு நிமித்தம் ஆகியிருக்கலாம் ஆனால் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் சேவை அதாவது நன்மையின் சங்கல்பம் மற்றும் பாவனை உருவாக வேண்டும். அத்தகைய அனைத்து ஆத்மாக்களின் சேவாதாரி அதாவது கல்யாணகாரி ஆக வேண்டும். எனவே, என்ன தியாகம் செய்ய கற்றுக் கொள்ள வேண்டும். தவம் என்ன கற்றுக் கொள்ள வேண்டும் மற்றும் சேவை கூட எந்தளவு செய்ய வேண்டும் என்பது இப்பொழுது புரிந்ததா? இதனுடைய ஆழத்தை அனுபவம் செய்ய வேண்டும். யாரிடம் ஞானம் மற்றும் தாரணையினுடைய பலன் உள்ளதோ, அவர்களுடைய ஒவ்வொரு முயற்சியிலும் வெற்றியைப் பலனாகப் பெற முடியும். எவ்வாறு அனைவர் முன்னரும் பிரம்மா குமாரர் பிரசித்தமாகத் தெரிகின்றார். தூரத்தில் இருந்தே இவர் பிரம்மா குமாரர் என்பதை அறிந்து கொள்கின்றனர். இப்பொழுது பிரம்மா குமாரர் என்பதன் கூடவே தபஸ்வி குமாரர் என்பதும் தூரத்தில் இருந்தே தெரிய வேண்டும். இத்தகைய வராக ஆகிச் செல்ல வேண்டும். எப்பொழுது மனனம் (ஞானச் சிந்தனை) மற்றும் மக்ன நிலை (அன்பில் மூழ்கிய நிலை) ஆகிய இரண்டின் அனுபவம் செய்வீர்களோ, அப்பொழுதே இந்நிலை உருவாகும். எவ்வாறு ஸ்தூல போதையில் இருக்கக் கூடியவர்கள் கண்கள், நடத்தை மூலம் இவர்கள் போதையில் உள்ளார்கள் என்பது தெரிந்து விடுகிறதோ, அவ்வாறே உங்களுடைய நடத்தை மற்றும் முகத்தின் மூலம் ஈஸ்வரிய போதை மற்றும் நாராயணி போதை தென்பட வேண்டும். உங்களுடைய முகமே உங்களுடைய அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். எவ்வாறு ஒருவரை சந்திக்கச் செல்கிறார்கள் எனில், அறிமுகத்திற்காக தன்னுடைய அட்டையைக் (விசிட்டிங் கார்டு) கொடுக்கிறார்கள் அல்லவா. இவ்விதமாக உங்களுடைய முகம் விசிட்டிங் கார்டினுடைய வேலையைச் செய்ய வேண்டும். புரிந்ததா?

இப்பொழுது தாரணையின் ரூபத்தை குப்தமாக (மறைமுகமாக) வைக்கக் கூடாது. ஞானம் குப்தமானது, தந்தை குப்தமானவர் எனவே தாரணையும் குப்தமாகவே இருக்க வேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர். ஞானம் குப்தமானது, தந்தையும் குப்தமானவர்தான் ஆனால், அவர் மூலம் தாரணைகளின் பிராப்தி என்ன கிடைக்கிறதோ, அது குப்தமாக இருக்க முடியாது. எனவே, தாரணைகளை மற்றும் பிராப்தியை வெளிப்படையான ரூபத்தில் காண்பியுங்கள், அப்பொழுதே பிரத்யட்சதா ஏற்படும். விசேஷமாக குமாரர்களுக்குள் ஒரு சம்ஸ்காரம் உள்ளது. அது முயற்சியில் தடையாக (பாபாவை வெளிபடுத்துதல்) ஆகிறது, அது என்ன? விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக சம்ஸ்காரங்களை ஒதுக்கி வைத்துக் கொள்ளக்கூடிய சம்ஸ்காரம் உள்ளது. எவ்வாறு கைச்செலவிற்காக ஒதுக்கப்படுகிறது அல்லவா?. ராஜாக்களின் ராஜ்யம் முடிந்து விட்டது ஆனால் ராயலான மாளிகையை விடுவதில்லை. இவ்விதமாக சம்ஸ்காரங்களை எவ்வளவுதான் அழித்தாலும், கைச்செலவிற்கு ஒதுக்கி வைப்பது போல் கொஞ்சம் ஒதுக்கி வைத்துக் கொள்கிறார்கள். இது முக்கிய சம்ஸ்காரமாக உள்ளது. இங்கு பட்டியில் அறிந்து கொள்ளவும் செய்கிறீர்கள் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான தைரியத்தையும் தாரணை செய்கிறீர்கள், ஆனால் பிறகும் கூட மாயை ராயலான மாளிகையைப் போன்று எங்கேயாவது ஓரத்தில் ஒதுங்கித் தங்கி விடுகிறது. புரிந்ததா? எனவே, இந்த பட்டியில் அனைவரும் தியாகம் செய்து விட்டுச் செல்ல வேண்டும். சம்பூரணமாக இறுதியில் ஆக வேண்டும். இப்பொழுது கொஞ்சம் இருக்கத் தானே செய்யும் என்று நினைக்க வேண்டாம் ஆனால் அவ்வாறு இல்லை. தியாகம் என்றால் தியாகம்தான்! கைச்செலவு போன்று தனக்குள் சிறிதளவு கூட சம்ஸ்காரத்தை தங்க விடக்கூடாது. புரிந்ததா? ஒருவேளை சிறிதளவு சம்ஸ்காரம் தங்கி விட்டது என்றால் அந்த கொஞ்ச சம்ஸ்காரம் கூட ஏமாற்றத்தைக் கொடுத்து விடும். ஆகையினால், பழைய சொத்து என்ன உள்ளதோ, அதை முற்றிலும் சாம்பலாக்கி விட்டுச் செல்ல வேண்டும். மறைத்து வைக்கக் கூடாது. புரிந்ததா? நல்லது.

இது குமாரர்களின் குழு ஆகும். இப்பொழுது தபஸ்வி குமாரர்களின் குழு ஆக வேண்டும். இந்த தபஸ்வி குமாரர்கள் தவ பூமியிலிருந்து வந்திருக்கின்றனர் என்ற இந்த விசேஷத்தன்மை அனைவருக்கும் தெரிய வேண்டும். புரிந்ததா? ஒவ்வொருவரும் ஒளிக்கிரீடம் தரித்தவராகக் காட்சி

அளிக்க வேண்டும். எதிர்காலத்தில் கிரீடம் தரித்தவர்களாக ஆகப்போகிறீர்கள் ஆனால் இந்த பட்டியில் ஒளிக்கிரீடம் தரித்தவராகிச் செல்ல வேண்டும். சேவையினுடைய பொறுப்பு கிரீடமானது இந்த கிரீடத்துடன் தானாகவே கிடைத்து விடுகிறது. ஆகையினால், இந்த ஒளி கிரீடத்தை தாரணை செய்வதில் முக்கிய கவனம் இருக்க வேண்டும். புரிந்ததா? எவ்வாறு தபஸ்வியானவர் எப்பொழுதும் ஆசனத்தில் அமர்ந்திருப்பாரோ, அவ்வாறே தனது ஏக்ரஸ் ஆத்ம ஸ்திதி என்ற ஆசனத்தில் அமர்ந்திருங்கள். இந்த ஆசனத்தை விட்டுவிடாதீர்கள், அப்பொழுதே சிம்மாசனம் கிடைக்கும். இந்த குமாரர், தபஸ்வி குமாரராகி வந்திருக்கின்றார் என்ற இந்த ஒரு விசயம் உங்களைப் பார்க்கும் அனைவருடைய வாயிலிருந்தும் வெளிப்படும்படியாக முயற்சி செய்யுங்கள். ஒவ்வொரு கர்மேந்திரியத்தின் மூலமும் தேக அபிமானத்தின் தியாகம் மற்றும் ஆத்ம அபிமானத்தின் தவம் வெளிப்படையாகத் தென்பட வேண்டும். ஏனெனில் பிரம்மாவினுடைய படைப்பு காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஈஸ்வரிய பாலனை காரியமும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இப்பொழுது தவத்தின் ஒளி மூலம் தன்னுடைய விகர்மங்கள் மற்றும் ஒவ்வொரு ஆத்மாவினுடைய தமோகுணம் மற்றும் இயற்கையினுடைய தமோகுண சம்ஸ்காரங்களை எரித்து சாம்பலாக்கும் காரியம் நடைபெற வேண்டும். எத்தகைய காரியத்திற்கான சமயம் இது என்பது இப்பொழுது புரிந்ததா? தவத்தின் மூலம் தமோ குணத்தை எரித்து சாம்பலாக்குவதற்கான சமயம் இது. எவ்வாறு நமது சித்திரங்களில் சங்கரரின் ரூபமானது விநாசம் செய்பவராகவும் மற்றும் தவக்கோலத்திலும் காண்பிக்கின்றார்கள். அவ்வாறு ஏக்ரஸ் ஸ்திதி (மனோநிலை) என்ற ஆசனத்தில் நிலைத்திருந்து தனது தபஸ்வி ரூபத்தை வெளிப்படையாகக் காண்பியுங்கள். என்ன கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் என்ன ஆக வேண்டும் மற்றும் எவ்வாறு ஆக வேண்டும் என்பது புரிந்ததா? இதற்காக இந்தக் குமாரர்களின் குழு முக்கியமாக வெற்றியை கிடைக்கச் செய்யக்கூடிய எந்த ஒரு முக்கியமான சுலோகனை முன்னால் வைப்பீர்கள்? சத்தியம் மற்றும் தூய்மை மூலம் சிருஷ்டியினுடைய விகாரங்களை தூய்மைப்படுத்துவோம். முதலில் தன்னை தூய்மைப்படுத்தி இருந்தாலே சிருஷ்டியை தூய்மைப்படுத்துவீர்கள் அல்லவா? எனவே இந்த சுலோகனை நினைவில் வைப்பதன் மூலம்

மற்றும் தபஸ்வி மூர்த்தி ஆகுவதன் மூலம் வெற்றிமூர்த்தி ஆகுவீர்கள். புரிந்ததா? நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 29.04.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எல்லைக்கப்பாற்பட்ட பரீட்சையில் தேர்வு பெறுவதற்கான வழி!

இன்று பட்டியின் நிறைவா அல்லது பட்டியின் நடைமுறை பரீட்சையின் ஆரம்பமா? நீங்கள் இப்பொழுது எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள்? பரீட்சை ஹாலுக்கு சென்று கொண்டிருக்கிறீர்களா அல்லது அவரவர்களுடைய ஊர்களுக்கு சென்று கொண்டிருக்கிறீர்களா? எப்பொழுது பரீட்சை ஹால் என்று புரிந்து கொள்வீர்கள் என்றால் நடைமுறையில் தேர்ச்சி பெற்று காண்பிப்பீர்கள். நம்முடைய வீட்டிற்கு சென்று கொண்டிருக்கிறோம் என்று அப்படி நினைக்காதீர்கள். மிகப் பெரிய பாடம் படித்து மிகப் பெரிய பரீட்சை எழுதுவதற்காக பரீட்சை ஹாலுக்கு சென்று கொண்டிருக்கிறோம். சென்டரில் எதுவரை படித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் அது பள்ளியின் படிப்பாகி விட்டது ஆனால் எப்பொழுது மதுபன் வரதான பூமியில் நேரடியாக பாப்தாதா மற்றும் பொறுப்பாளராகியிருக்கும் அனைத்து பெரிய மஹாரதிகளின் மூலமாக பயிற்சி எடுக்கிறீர்கள் மற்றும் படிக்கிறீர்கள் என்றால் கல்லூரி மற்றும் பல்கலைகழகத்தின் மாணவர்களாக ஆகி விட்டீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். பள்ளியின் பரீட்சை மற்றும் பல்கலைகழகத்தின் பரீட்சையில் வித்தியாசம் இருக்கிறது இல்லையா. படிப்பிலேயும் வித்தியாசம் இருக்கிறது என்றால் இந்த பட்டியில் பயிற்சி பெற்றுக் கொள்வது என்றால் பல்கலைகழகத்தின் மாணவர்களாக ஆவது. அப்படி இப்பொழுது பல்கலைகழகத்தின் பரீட்சை எழுதுவதற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள். பல்கலைகழகத்தின் பரீட்சைக்கு பிறகுதான் தகுதியும் பிராப்தி ஆகிறது. அதே போல் பட்டியில் வந்த பிறகு யார் நடைமுறை பரீட்சையில் தேர்ச்சி பெற்று வெளியாகுகிறார்களோ அவர்களுக்கு நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் பதவி மற்றும் நிலை பிராப்தி ஆகிறது. எனவே இதை சாதாரண விஷயம் என்று நினைக்காதீர்கள். இதற்கு முன்பு சென்டரில் படித்துக் கொண்டுதான் இருந்தீர்கள் பரீட்சையும் எழுதிக் கொண்டுதான் இருக்கிறீர்கள் ஆனால்

இது பல்கலைக்கழகத்தின் பரீட்சை பாப்தாதா மூலமாக திலகம் மற்றும் முத்திரை இட்டதின் பிறகு ஒருவேளை யாராவது நடைமுறை பரீட்சையில் தோல்வி அடைந்து விடுகிறார் என்றால் என்னவாகும்? பல ஜென்மங்களுக்காக தோல்வியின் கறை இருந்து விடும். எனவே ஒருவேளை ஏதாவது தோல்வி அடைவதற்கான சம்ஸ்காரம் மற்றும் தன்னுடைய நடத்தையின் உணர்வு ஏற்படுகிறது என்றால் இன்றைய தினத்தில் அந்த இருந்து விட்ட கறை மற்றும் பலஹீனமான நடத்தை மற்றும் சம்ஸ்காரத்தை அகற்றி விட்டுச் செல்ல வேண்டும். பரீட்சை ஹால் சென்று, பரீட்சையில் தோல்வி அடையக் கூடாது. புரிந்ததா? அவர்கள் பரீட்சை வைக்கிறார்கள். அதுவும் எளிதாக உள்ளது ஆனால் இறுதி எண் மற்றும் மதிப்பெண்கள் பரீட்சைக்குப் பின்னர் கிடைக்கிறது. ஆகையால் நினைவு மற்றும் திருஷ்டியில் மாற்றம் கொண்டு வந்து செல்ல வேண்டும். ஒவ்வொரு வினாடியும் எனது பரீட்சை நடந்து கொண்டிருக்கிறது என்ற நினைவு இருக்க வேண்டும். பார்வையில் படிப்பிப்பவர் தந்தை மற்றும் படிப்பவர் நான் மாணவன் ஆத்மா ஆவேன் என்பது இருக்கட்டும். இந்த நினைவு, உள்உணர்வு மற்றும் பார்வையை மாற்றிவிட்டு செல்வதினால் தோல்வி அடைய மாட்டீர்கள் ஆனால் முழுமையாக தேர்ச்சி பெறுவீர்கள். எனவே பட்டியை ஏதோ சாதாரண விடயம் என்று நினைக்காதீர்கள். இந்த பட்டியின் முத்திரை மற்றும் திலகத்தை எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். எப்படி பல்கலைகழகத்தின் சான்றிதழ் வேலை பெற்றுத் தரச் செய்கிறது மற்றும் பதவியின் பிராப்தியை செய்விக்கிறது. அதே போல் இந்த பட்டியின் திலகம் மற்றும் முத்திரையை எப்பொழுதும் தன்னிடம் இது மிகப் பெரிய சான்றிதழ் என்று நடைமுறையில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். யாரிடம் சான்றிதழ் இல்லையோ அவர் ஒருபொழுதும் பதவியைப் பெற முடியாது. இந்த முறையில் இதுவும் ஒரு சான்றிதழ் ஆகும். எதிர்காலம் மற்றும் தற்சமயத்தின் பதவியின் பிராப்தி மற்றும் வெற்றியின் சான்றிதழ் ஆகும். சான்றிதழை எப்பொழுதும் கவனமாக வைக்கப்படுகிறது. அலட்சியம் இருந்தால் தொலைந்து விடும். ஒருபொழுதும் மாயாவின் அடிமை அதாவது வசமாகி முயற்சியில் அலட்சியத்தைக் கொண்டு வராதீர்கள். இல்லையென்றால் நமக்கு சான்றிதழ் இருக்கிறது ஆனால் மாயா இராவணன் சான்றிதழ்களை திருடி விட்டான் என்று புரிந்து கொள்ளுங்கள். எப்படி இன்றைய நாட்களின் கொள்ளைக்காரர்கள் மற்றும் பையை அறுத்து பணம் திருடுபவர்கள் வெளியில் இருந்து எதுவுமே தெரியாத மாதிரி

தன்னுடைய வேலையை செய்வார்கள், உள்ளே காலியாகி விடும். இதேபோல் ஒருவேளை முயற்சி செய்வதில் அலட்சியத்தை கொண்டு வந்தீர்கள் என்றால் இராவணன் உள்ளுக்குள்ளேயே சான்றிதழை திருடி விடுவான் மேலும் நீங்கள் பதவியை அடைய முடியாது. எனவே கவனம் வேண்டும். புரிந்ததா.

இந்த குரூப் சேவைக்குத்தகுதியானதாக இருக்கிறது, இப்பொழுது என்னவாக ஆக வேண்டும்? எப்படி சேவைக்குத் தகுதியானவர்களாக இருக்கிறீர்களோ அதே போல் இப்பொழுது சேவையில் ஒன்று திரிகாலதரிசி நிலையின் சென்ஸ் (ஞானம்) நிரப்ப வேண்டும் மற்றும் இரண்டாவது ஆன்மீகத்தின் எசென்ஸ் (சாரம்) நிரப்ப வேண்டும். எப்பொழுது மூன்று விஷயங்களும் அதாவது சேவை, சென்ஸ் மற்றும் எசென்ஸ் சேர்ந்து விடுகிறது என்றால், எசென்ஸ் சூட்சுமமாக இருக்கும் இல்லையா, இந்த ஆன்மிகத்தின் எசென்ஸ் மற்றும் திரிகாலதரிசி நிலையின் சென்ஸ் நிரப்புவதினால் சேவைக்குத் தகுதியானவரின் கூடவே வெற்றி அடைபவராக ஆகி விடுவார். எனவே சென்ஸ் மற்றும் எசென்ஸை ஒவ்வொருவரும் தனக்குள் எவ்வளவு நிரப்பியிருக்கிறார்கள் என்று சோதனை செய்ய வேண்டும். இப்பொழுது நேரம் இருக்கிறது. எப்படி பரீட்சை ஹாலுக்கு போவதற்கு முன்பு இரண்டு மணி நேரம் கூட தயார் செய்து விட்டு செல்வார்கள். உங்களுக்கும் பரீட்சை ஹாலுக்கு செல்வதற்கு முன்பு உங்களை தயார் செய்வதற்காக இப்பொழுது நேரம் இருக்கிறது. எப்படி ஏற்கனவே கூறியது போல் பிரம்மா குமாரின் கூடவே தபஸ்வி குமாராகவும் தென்பட வேண்டும். அவர் தன்னுடைய கண்களில், முகத்தில் ஆன்மீகத்தை தாரணை செய்திருக்கிறார், அவர் வந்தவுடனேயே அலௌகீகமாக விலகியிருந்து மேலும் அனைவரின் அன்பிற்குரியவராக பார்க்கத் தென்பட வேண்டும். பட்டியில் வந்திருப்பவர்கள் மற்றுமின்றி மதுபன்னிற்கு யாரெல்லாம் வருகிறார்களோ அவர்கள் அனைவருக்கும் இந்த தாரணைகளை விசேஷ ரூபமாக செய்ய வேண்டும். பட்டி வெற்றி நிறைந்ததாக இருந்ததா? (ஆசிரியைகளைப் பார்த்து) இவர்களின் படிப்பின் வேகத்தில் நீங்கள் திருப்தியாக இருக்கிறீர்களா? நீங்கள் (மாணவர்களைப் பார்த்து) பட்டியின் படிப்பினால் உங்களுடைய முயற்சி செய்வதில் திருப்தியாகி விட்டீர்களா? ஏதாவது செய்ய வேண்டியது இருந்து விடவில்லையே

இப்பொழுது இருந்து விடவில்லை என்றால், பின்பு எப்பொழுதாவது இருக்குமா என்ன?

இந்த தன்னுடைய பாதுகாப்பிற்கான சாதனத்தை தேடுகிறார்கள். ஏதாவது ஆகி விட்டது என்றால் இதைக்கூற முடியும் இல்லையா என்று நினைக்கிறார்கள் ஆனால் இதன் மூலமாகக் கூட பலஹீனம் வந்து விடுகிறது. எனவே பின்பு இதையும் ஒருபொழுதும் யோசிக்காதீர்கள். ஒருபொழுதும் தோல்வி அடைய மாட்டேன் என்று அப்படி யோசியுங்கள். ஒருபொழுதும் தோல்வி அடைய மாட்டோம் என்று இப்பொழுதும் இருக்கிறது மேலும் பல ஜென்மங்களுக்கும் உத்திரவாதம் இருக்கிறது. இதைத்தான் முழுமையாகத் தேர்ச்சி அடைவது என்று கூறுவோம். குமாரர்களின் விசேஷமே அவர்கள் என்ன விரும்புகிறார்களோ அதை செய்ய முடியும் என்பதுதான். இந்த மனோபலம் அவசியம் இருக்கிறது ஆனால் ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு விநாடியையும் அர்ப்பணம் செய்வதற்கான மனோபலம் தேவையாக இருக்கிறது. குழந்தைகளுக்கு அனைத்தையும் அர்ப்பிக்கப்படுகிறதுதான் இல்லையா, என்னென்ன இருக்கிறதோ அவை அனைத்தையும் குழந்தைகளுக்கு கொடுத்து விடுவார்கள். அப்படி நீங்கள் அனைவரும் வாரிசாக ஆக்குகிறீர்கள் (தந்தையை) மற்றும் ஆகவும் செய்கிறீர்கள். எனவே எப்படி மற்ற மனோபலம் இருக்கிறதோ அதே போல் அனைத்தையும் அர்ப்பணம் செய்வதற்கான மனோபலமும் தேவையாக இருக்கிறது. அதை இங்கிருந்து நிரப்பிக் கொண்டு செல்ல வேண்டும். எப்பொழுது அனைத்தையும் அர்ப்பணம் செய்து விட்டீர்கள் என்றால் என்னவாகி விடுவீர்கள்? பற்றுதலை வென்ற நிலை. எப்பொழுது பற்றுதல் அழிந்து விடுகிறது என்றால் பந்தனத்திலிருந்து விடுபட்டவர் ஆகி விடுகிறீர்கள். மேலும் பந்தனமுக்த்தானவர்தான் யோகயுக்த் மற்றும் ஜீவன்முக்த்தாக ஆக முடியும். புரிந்ததா. இப்பொழுது உங்களிடம் சங்கமயுகத்தின் எந்த பொக்கிஷம் இருக்கிறது. ஞான பொக்கிஷத்தையோ தந்தை கொடுத்திருக்கிறார் ஆனால் அவரவர்களுடைய பொக்கிஷமாக என்ன இருக்கிறது. இந்த நேரம் மற்றும் எண்ணம். எப்படி தந்தையோ (பிரம்மாபாபா) முழுமையாக தன்னை அர்ப்பணம் செய்தார் அதே போல் உங்கள் அனைவரின் எண்ணமாக என்ன இருக்கிறதோ அதையும் அர்ப்பணம் செய்ய வேண்டும். எப்படி ஸ்தூலமான பொக்கிஷத்தினால் என்ன விரும்புகிறீர்களோ அதை அடைய முடியும். அதே போல்தான் இந்த

நேரத்து பொக்கிஷமான நேரம் மற்றும் எண்ணம், இதன் மூலமாகக் கூட நீங்கள் என்ன பிராப்தி செய்ய விரும்புகிறீர்களோ அதை இவைகள் மூலமாக பிராப்தி செய்ய முடியும். முழு பிராப்தியின் ஆதாரம் சங்கமயுகத்தின் நேரம் மற்றும் உயர்ந்த நினைவு அதாவது தந்ன பின் நினைவு. இதுதான் பெ ஆகும். இதைத் அர்ப்பணம் செய்ய வேண்டும். முழுமையாக அர்ப்பணம் செய்து விட்டு சென்று கொண்டிருக்கிறீர்களா அல்லது கைச் செலவிற்காக ஏதாவது தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? கடைசி நேரத்திற்காக கொஞ்சம் ஏதோவொரு மூலையில் ஒளித்து வைத்திருக்கவில்லையே பை முற்றிலும் காலியாக ஆகி விட்டதா?

(குமாரர்கள் பாப்தாதாவிற்காக ஒரு பாடல் பாடினார்கள்) இன்றைய நாட்களிலோ மதுபன்னின் ஒவ்வொரு மூலையும் காலியாக இருப்பதில்லை ஆனால் ஒவ்வொரு இடத்திலும் நட்சத்திரங்களின் மின்மினுப்பு பார்க்கத் தென்படுகிறது என்றால் காலி என்று ஏன் கூறுகிறீர்கள்? எப்பொழுது சூரியன் வியக்கத்திலிருந்து அவ்யக்தமாகிறதோ, அப்பொழுது நட்சத்திரங்கள் தெளிவாக தென்படுகின்றன. அப்படி தந்தை வியக்கத்திலிருந்து அவ்யக்தம் ஆனதே உலகத்திற்கு நட்சத்திரங்களின் மின்மினுப்பை காண்பிப்பதற்காகத்தான். அதனால் காலி என்று ஏன் கூறுகிறீர்கள்? ஸ்தூலமான சூரியனை அஸ்தம் ஆகி விட்டது என்று கூறுகிறார்கள் ஆனால் இந்த ஞான சூரியன் வியக்தத்திலிருந்து அவ்யக்த ரூபத்தில் இருக்கிறார் ஆனால் நட்சத்திரங்களின் உடன் இருக்கிறார். சாகார ரூபத்தில் எப்பொழுதும் துணைவனாக ஆக முடியாது. சாகாரத்தில் இருந்தபோதிலும் எப்பொழுதும் உடன் இருப்பதற்காக அவ்யக்த நிலை மற்றும் அவ்யக்த துணைவன் என்று நினைத்தீர்கள். அப்படி இப்பொழுது கூட எப்பொழுதும் துணையாக அவ்யக்த ரூபத்தில்தான் இருக்க முடியும். ஏனென்றால் அவ்யக்த ரூபம் வியக்த உடலின் பந்தனத் திலிருந்து விடுபட்டிருக்கிறது என்றால் உங்கள் அனைவருக்கும் கூட எப்பொழுதும் துணை கொடுப்பதற்காக இந்த உடலின் நினைவிலிருந்து விலக்குவதற்காக இந்த அவ்யக்த பங்கு நடந்து கொண்டிருக்கிறது. பாப்தாதாவோ ஒவ்வொரு நேரமும் அனைத்து குழந்தைகளின் கூடவேதான் இருக்கிறார். முதன் முதலில் ஒரு பாடல் உருவாக்கப்பட்டிருந்தது, அதாவது மாதாக்களே ஏன் மனம்

கலங்குகிறீர்கள் இந்தப் பாடலை சகோதரிகள் கூறினார்கள். இப்பொழுது கூட ஒவ்வொருவரின் நிரந்தர துணைவனாக இருக்கிறார் ஆனால் யார் விரும்புகிறார்களோ அவர்கள் அனுபவம் செய்ய முடியும். இப்பொழுது அனுபவம் செய்வதற்காக எப்படி தந்தை அவ்யக்தமாக இருக்கிறார் அதே போல் அவ்யக்தமாகிதான் அனுபவம் செய்ய முடியும். இந்த அலௌகீக அனுபவம் செய்வதற்காக எப்பொழுதும் வியக்த உணர்விலிருந்து விலகி, அவ்யக்த தேசத்தின் நினைவினால் விலகிய அதாவது சாட்சியாக ஆவதினால்தான் ஒவ்வொரு நேரமும் துணையை அனுபவம் செய்ய முடியும். புரிந்ததா, நல்லது.

**வரதானம்: ஈஸ்வரிய சேவையின் பந்தனம் மூலமாக நெருங்கிய சம்மந்தத்தில் வரக்கூடிய ராஜ குடும்பத்தின் அதிகாரி ஆகுக!**

ஈஸ்வரிய சேவையின் பந்தனம் நெருங்கிய சம்மந்தத்தில் கொண்டு வரக்கூடியது. எவ்வளவு ஒருவர் சேவை செய்கிறாரோ அவ்வளவு சேவையின் பலனாக நெருங்கிய சம்மந்தத்தில் வருகிறார். இங்கே (சங்கமயுகம்) சேவாதாரியாக இருப்பவர் அங்கே (சத்யுகம்) இராஜ குடும்பத்தின் அதிகாரி ஆவார். எவ்வளவு இங்கு கடுமையான சேவை செய்கிறாரோ அவ்வளவு அங்கு ஓய்வாக சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பார். மேலும் இங்கு யார் ஓய்வாக இருக்கிறாரோ அவர் அங்கு வேலை செய்வார். ஒவ்வொரு விநாடியின், ஒவ்வொரு வேலையின் கணக்கு தந்தையிடம் இருக்கிறது.

**சுலோகன்: சுயமாற்றம் மூலமாக உலக மாற்றத்தின் எண்ண அதிர்வலைகளை மிக வேகமாக பரப்புங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 06.05.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பாப்தாதாவின் விசேஷமான அலங்காரமாகிய 'கண்ணின் மணி' என்ற நிலையில் நிலைத்திருப்பதினால் எதிர்ப்புகள் முடிவடைந்து விடும்!

இன்று ரத்தினங்களை அளிக்கும் தந்தை தன்னுடைய ரத்தினங்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொரு ரத்தினமும் தனது சக்திக்கேற்ப முயற்சி செய்து முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஒவ்வொருவரும் நான் எந்தவிதமான ரத்தினம் என்று தெரிந்திருக்கிறீர்களா? எத்தனை விதமான ரத்தினங்கள் இருக்கின்றன? (அஷ்ட ரத்தினங்கள்) நீங்கள் எத்தனையாவது நம்பரின் இரத்தினமாக இருக்கிறீர்கள்? வைரத்தின் கூடவே இருந்து வைரத்திற்கு சமமாக ஆகவில்லையா? அனைவரும் ரத்தினங்கள்தான் ஆனால் ஒரு இரத்தினம் இருக்கிறது அதை நூரே ரத்தன் (கண்ணின் மணி) என்று கூறுவார்கள். அப்படியானால் நீங்கள் அனைவரும் கண்ணின் மணியாக இல்லையா? ஒன்றோ கண்ணின் மணி (நூரே இரத்தன்), இரண்டாவது கழுத்தின் மாலையின் இரத்தினம். மூன்றாவது நிலை என்னவென்று தெரிந்திருக்கிறீர்களா? மூன்றாவது கைகளின் கங்கனங்களில் (காப்புகள்) உள்ள ரத்தினம். அனைத்தையும் விட முதல் நம்பரில் கண்ணின் மணி இருக்கிறது. அந்த மாதிரி யார் ஆகிறார்கள்? யாருடைய கண்களில் தந்தையைத் தவிர வேறு எதையும் பார்க்கத் தென்படாமல் இருக்கிறதோ அவர்தான் கண்ணின் மணி ஆவார். மேலும் யார் தன்னுடைய வாய் மூலமாக ஞானத்தை வர்ணனை செய்கிறார் ஆனால் முதலில் கூறியது போல் எப்பொழுதும் கண்களில் தந்தையின் நினைவு தந்தையின் முகம்தான் அனைவருக்கும் தென்பட வேண்டும் அதில் கொஞ்சம் குறைவு இருக்கிறது. அவர் கழுத்து அதாவது

தொண்டை மூலமாக சேவை செய்கிறார் அதனால் கழுத்தின் மாலையின் ரத்தினமாக ஆகுகிறார். மூன்றாவது நம்பரில் இருக்கும் கைகளின் கங்கனத்தின் ரத்தினமாக ஆகிறார் அவருடைய விசேஷத்தன்மை என்ன? ஏதாவது ரூபத்தில் உதவி செய்பவராக ஆகிறார். அப்படி உதவியாளர் ஆவதின் அடையாளமாக இந்த கைகளின் கங்கனத்தின் இரத்தினம் ஆகிறார். இப்பொழுது நான் எந்தவிதமான ரத்தினமாக இருக்கிறேன்? என்று ஒவ்வொருவரும் அவரவர்களை கேளுங்கள். முதல் நம்பரா, இரண்டாம் நம்பரா அல்லது மூன்றாவது நம்பரா? அனைவரும் ரத்தினங்கள்தான் மேலும் பாப்தாதாவின் அலங்காரமாக கூட மூன்றுமே இருக்கவே இருக்கிறது. இப்பொழுது கூறுங்கள் நீங்கள் எந்த இரத்தினமாக இருக்கிறீர்கள்? கண்ணின் மணியின் விளக்கமாக என்ன கூறினோமோ அதில் கௌரவமாக தேர்ச்சி பெறுபவராக இருக்கிறீர்களா? நம்பிக்கைக்குரியவர்களில் கூட வரிசை எண் இருக்கிறது. எனவே நாம் பாப்தாதாவின் கண்ணின் மணியாக இருக்கிறோம் என்றால் நம்முடைய கண்களில் மற்றும் பார்வையில் வேறு எதுவுமே வந்து நிரம்ப முடியாது என்பதை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். போகும் பொழுதும் வரும் பொழுதும், உண்ணும் பொழுதும் குடிக்கும் பொழுதும்அதாவது அனைத்துக் காரியங்களையும் செய்து கொண்டே கண்களில் என்ன தென்பட வேண்டும்? தந்தையின் உருவம் மற்றும் முகம். அந்த மாதிரி நிலையில் இருப்பதினால் யாரும் ஒருபொழுதும் புகார் செய்ய மாட்டார்கள். மேலும் வித விதமான பிரச்சனைகள் தொந்தரவு செய்கின்றனவோ மற்றும் அவ்வாறு தொந்தரவு ஆவதின் காரணமாக தன்னுடைய மரியாதையிலிருந்து விலகி விடுகிறீர்கள். எனவே தொந்தரவு என்பதின் விளைவாக என்னவானது? தன்னுடைய மரியாதை இருக்கிறது அல்லவா அதிலிருந்து விலகிச் செல்லும் காரணத்தினால் தொந்தரவுக்குள் ஆக வேண்டியதாக இருக்கிறது. ஒருவேளை இப்பொழுது தன்னுடைய மரியாதையில் நிலைத்திருந்து விட்டீர்கள் என்றால் தொந்தரவிற்கு ஆளாக மாட்டீர்கள். எனவே அனைத்து தொந்தரவுகளை அகற்றுவதற்காக சுயமரியாதை என்ற வார்த்தையின் சொரூபத்தில் நிலைத்து விடுங்கள் அதாவது மரியாதையில் நிலைத்து விட்டீர்கள் என்றால் மரியாதையினால் எப்பொழுதும் மதிப்பு கிடைத்துக் கொண்டே இருக்கும். எனவேதான் மதிப்பு, மரியாதை என்று கூறப்படுகிறது. அப்படி தன்னுடைய மரியாதையைத் தெரிந்து கொள்ளுங்கள். யார் எவ்வளவு தன்னுடைய மரியாதையில்

நிலைத்திருக்கிறார்களோ அவ்வளவே அவருக்கு மதிப்பு (புகழ்) கிடைக்கிறது. தன்னுடைய மதிப்பைத் தெரிந்திருக்கிறீர்களா? எவ்வளவு உயர்ந்த மதிப்பு இருக்கிறது. லளகீகமாக பார்த்தால் கூட மதிப்புள்ளவர் தன்னுடைய மதிப்பு கெடும் அளவிற்கு எந்தவொரு காரியமும் செய்ய மாட்டார். தன்னுடைய மதிப்பை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொண்டீர்கள் என்றால் தன்னுடைய காரியமும் மதிப்புள்ளதாக இருக்கும். மேலும் நீங்கள் தொந்தரவிற்கும் ஆளாக மாட்டீர்கள். அப்படியானால் இது தொந்தரவை விலக்குவதற்காக சகஜமான வழி இல்லையா? எந்தவொரு தீயதையும் அகற்றுவதற்காக தந்தையை மஹிமை செய்யுங்கள். அப்படி ஒரு எழுத்தின் மாற்றத்தினால் எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. தீயது மற்றும் மஹிமை (புராயி மற்றும் படாயி). ஒரே ஒரு எழுத்தை மாற்றி போட வேண்டும். இதையோ 5 வயது சிறு குழந்தை கூட செய்ய முடியும். எப்பொழுதும் பெரியதிலும் பெரிய தந்தையின் படாயி அதாவது மஹிமையை செய்து கொண்டே இருங்கள். இதில் முழு படிப்பும் வந்து விடுகிறது. அப்படி இந்த தந்தையின் மஹிமை (படாயி) செய்வதினால் என்னவாகும்? லடாயி (சண்டை) முடிந்து விடும். மாயாவோடு சண்டை இட்டு இட்டு களைப்படைந்து விட்டீர்கள்தான் இல்லையா. எப்பொழுது தந்தையின் மஹிமை செய்வீர்கள் என்றால் சண்டையினால் களைப்படைய மாட்டீர்கள் ஆனால் தந்தையின் குணத்தை பாடி குஷியில் இருப்பதினால் சண்டை கூட ஒரு விளையாட்டு போல் தென்படும். விளையாட்டில் மகிழ்ச்சி ஏற்படுகிறது இல்லையா. அப்படி யார் சண்டையை விளையாட்டு என்று நினைக்கிறார்கள், அந்த மாதிரி நிலையில் இருப்பவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்? மகிழ்ச்சி. எப்பொழுதும் மகிழ்ச்சியில் இருப்பவரை மாயா ஒருபொழுதும் எந்த ரூபத்திலும் கவர்ச்சி செய்ய முடியாது. அப்படி மாயாவின் கவர்ச்சியிலிருந்து பாதுகாட்டாக இருப்பதற்காக ஒன்று எப்பொழுதும் தன்னுடைய மதிப்பில் இருங்கள், இரண்டாவது மாயாவை விளையாட்டு என்று புரிந்து எப்பொழுதும் விளையாட்டில் மகிழ்ச்சியோடு இருங்கள். இரண்டு விஷயங்களின் நினைவு மட்டும் இருக்கிறது என்றால் ஒவ்வொரு காரியமும் நினைவுச்சின்னமாகி விடும். எப்படி சாகார பாபாவின் அனுபவம் செய்திருந்தீர்கள். எப்படி அவருடைய ஒவ்வொரு காரியமும் நினைவுச்சின்னமாக ஆனது. அதே போல் உங்கள் அனைவரின் ஒவ்வொரு காரியமும் நினைவு சின்னம் ஆக வேண்டும் அதற்காக இரண்டு விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஆதாரமூர்த்தி மற்றும் உத்தார் மூர்த்தி (நன்மை செய்பவர்). இந்த இரண்டு விஷயங்களும் நினைவு இருக்கிறது என்றால் ஒவ்வொரு காரியமும் நினைவுச்சின்னம் ஆகி விடும். ஒருவேளை எப்பொழுதும் தன்னை உலக மாற்றத்திற்கு ஆதாரமூர்த்தி என்று நினைத்தீர்கள் என்றால் ஒவ்வொரு காரியமும் உயர்ந்ததாக இருக்கும். எனவே தன்னுடைய ஒவ்வொரு காரியமும் நினைவுச்சின்னம் ஆவதற்கு தகுதியாகும் மாதிரி செய்யுங்கள். இதைப் பின்பற்றுவது கடினமா என்ன? (மியூசியம் சேவையில் பார்ட்டி (குழு) சென்று கொண்டிருக்கிறது). தியாகத்திற்கு எப்பொழுதும் பாக்கியம் உருவாகுகிறது. யார் தியாகம் செய்கிறாரோ அவருக்கு பாக்கியம் தானாகவே பிராப்தி ஆகி விடுகிறது. எனவே யார் யார் பெரிய பெரிய தியாகம் செய்கிறார்களோ அவர்களுக்கு மிகப் பெரிய பாக்கியம் சேமிப்பாகி விடுகிறது. எனவே சேவைக்காக குஷியாக செல்ல வேண்டும். நல்லது.

**வரதானம்: ஆத்மீக சக்தியின் ஆதாரத்தில் உடலின் சக்தியை அனுபவம் செய்யக்கூடிய எப்பொழுதும் ஆரோக்கியமாக இருப்பவர் ஆகுக!**

இந்த ஆன்மீக வாழ்க்கையில் ஆத்மா மற்றும் இயற்கை (உடல்) இவ்விரண்டின் ஆரோக்கியம் அவசியமாக இருக்கிறது. எப்பொழுது ஆத்மா ஆரோக்கியமாக இருக்கிறது என்றால் உடலின் கணக்கு வழக்கு மற்றும் உடலின் நோய் ஈட்டியிலிருந்து முள்ளாகும் காரணத்தினால், சுய நிலையின் காரணத்தினால் ஆரோக்கியத்தை அனுபவம் செய்கிறார்கள். அவருடைய முகத்தில் நோயின் கஷ்டத்தின் அடையாளம் இருப்பதில்லை. கர்மத்தின் விளைவை அனுபவிப்பதின் வர்ணனைக்குப் பதிலாக கர்மயோகத்தின் நிலையின் வர்ணனை செய்கிறார்கள். அவர்கள் மாற்றும் சக்தியினால் கஷ்டத்தை திருப்தியில் மாற்றம் செய்து திருப்தியாக இருக்கிறார்கள். திருப்தியாக இருப்பதின் அலையைப் பரப்புகிறார்கள்.

**சுலோகன்: மனமுவந்து உடலால் ஒருவர் இன்னொருவர் மேல் அன்பு வைத்து சேவை செய்தீர்கள் என்றால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.05.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாக்கியத்தை உருவாக்குபவர், வரம் அளிப்பவர் என்ற தன்மையின் நிலை!

பாக்கியத்தை உருவாக்குபவர் மற்றும் வரம் அளிப்பவர் இந்த இரண்டு குணங்களை தன்னுள் அனுபவம் செய்கிறீர்களா? எப்படி தந்தை பாக்கியத்தை உருவாக்குபராகவும் இருக்கிறார் மேலும் வரம் அளிப்பவராகவும் இருக்கிறார், அதே போல் தன்னையும் இந்த இரண்டின் பிராப்தி சொரூபமாகவே நினைக்கிறீர்களா? எவ்வளவிற்கு எவ்வளவு வரம் அளிப்பவராகிக் கொண்டே இருப்பீர்களோ அந்த அளவே வரம் அளிப்பவராகி வரம் அளிப்பதற்கான சக்தி அதிகரித்துக் கொண்டே இருக்கும். அப்படியானால் இரண்டின் அனுபவம் ஆகுகிறதா அல்லது இப்பொழுது பாக்கியத்தை உருவாக்கும் பங்கு மட்டும்தான் இருக்கிறது, கடைசியில் வரம் அளிப்பவரின் பங்கு இருக்குமா? என்ன நினைக்கிறீர்கள்? (இரண்டு பங்கும் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது என்று யாரோ கூறினார், இப்பொழுது ஒரு பங்குதான் நடந்து கொண்டிருக்கிறது என்று யாரோ கூறினார்) எந்த ஆத்மாக்களுக்கு வரதானம் கொடுக்கிறீர்கள் மேலும் வரம் அளிப்பவராக யாருக்காக ஆகுகிறீர்கள்? ஒன்று ஞானத்தைக் கொடுப்பது, இரண்டாவது வரதான ரூபத்தில் கொடுப்பது. அப்படியானால் பாக்கியத்தை உருவாக்குபவரா அல்லது வரம் அளிப்பவரா? யாருக்கு வரதானம் கொடுக்கிறீர்கள்? பாக்கியத்தை உருவாக்குபவர் என்றால் ஞானம் கொடுப்பவராகவோ ஆகவேதான் செய்கிறீர்கள், ஆனால் சில நேரங்களில் பாக்கியத்தை உருவாக்குபவரின் கூடவே வரம் அளிப்பவராகவும் ஆக வேண்டியதாக இருக்கிறது. அது எப்பொழுது? எப்பொழுது ஏதாவது ஒரு ஆத்மா தைரியம் இன்றி பலமின்றி இருக்கிறது ஆனால்தான் ஏதாவது கொஞ்சம் பிராப்தி செய்ய வேண்டும் என்ற ஆசை மற்றும் விருப்பம் இருக்கிறது என்றால் அந்த மாதிரி ஆத்மாக் களுக்காக ஞானம் அளிப்பவராக ஆவதின் கூடவே நீங்கள் விசேஷ ரூபத்தில் அந்த ஆத்மாவிற்கு பலம் கொடுப்பதற்காக சுப பாவனை வைக்கிறீர்கள் மற்றும்

நற்சிந்தனையாளராக ஆகுகிறீர்கள். அப்படி பாக்கியத்தை உருவாக்குபவரின் கூடவே வரம் அளிப்பவராகவும் ஆகுகிறீர்கள். அதிகப்படியான பலம் உங்களிடமிருந்து அவருக்கு வரதானத்தின் ரூபத்தில் கொடுக்கிறீர்கள். அப்படி வரதானமும் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது மேலும் வள்ளலாகவும் ஆக வேண்டியதாக இருக்கிறது. எனவே இரண்டுமாகவும் இருக்கிறீர்கள். இந்த அனுபவத்தை எப்பொழுதாவது செய்திருக்கிறீர்களா? பக்தி மார்க்கத்தில் சாட்சாத்காரம் மூலமாக வரதானம் பிராப்தி ஆகுகிறது ஏனென்றால் அந்த ஆத்மாக்கள் ஞானம் தாரணை செய்ய முடியாத அளவிற்கு, சுயம் முயற்சி செய்ய முடியாத அளவிற்கு பலமற்றவராக இருக்கிறார்கள். எனவே வரதானத்தின் ஆசை வைக்கிறார்கள் மேலும் வரதான ரூபத்தில் அவர்களுக்கு ஏதாவது பிராப்தி ஏற்படுகிறது. இந்த மாதிரி உங்கள் எதிரில் வரும் பலஹீனமான ஆத்மாக்களின் ஆசையைப் பார்த்து இரக்கம், கருணையின் பாவனை வருகிறது. இரக்கமனமுடையவராகி தன்னுடைய அனைத்து சக்திகளின் உதவி கொடுத்து அவரை உயர்வாக தூக்கி விட வேண்டும், இதுதான் வரதானத்தின் ரூபம் ஆகும். இப்பொழுது கூறுங்கள் இரண்டுமாகவே இருக்கிறீர்களா அல்லது ஒன்று தானா? சில ஆத்மாக்களுக்காக நீங்கள் விசேஷ நிகழ்ச்சிகளும் வைக்க வேண்டியதாக இருக்கிறது, ஏனென்றால் தன்னுடைய சக்தியினால் அவர்கள் தாரணை செய்ய முடிவதில்லை. அப்படி சக்தியின் வரதானம் கொடுக்கக் கூடிய சிவசக்திகள் ஆவீர்கள் நீங்கள். எனவே இப்பொழுது ஞானத்தின் பாக்கியத்தை உருவாக்குபவரின் சேவை அதிகமாக நடக்க வேண்டியது இருக்கிறது என்று ஏற்கனவே கூறினோம். கடைசியில் ஞானம் கொடுக்கும் சேவை குறைந்து விடும், வரதானம் கொடுக்கும் சேவை அதிகமாக இருக்கும். எனவே கடைசி நேரத்தில் வரதானம் பெறக்கூடிய ஆத்மாக்களில் அதே சம்ஸ்காரம் உள்ளடங்கி விடும் மேலும் அதே உள்ளடங்கிய சம்ஸ்காரம் துவாபரயுகத்தில் பக்தரின் ரூபத்தில் வெளியாகும். எனவே இப்பொழுது ஞானத்தை அளிப்பவரின் சேவை நடந்து கொண்டிருக்கிறது பிறகு வரம் அளிப்பவரின் சேவை இருக்கும். புரிந்ததா? பின்பு இவ்வளவு நேரமே இருக்காது, ஆத்மாவிலும் சக்தி இருக்காது எனவே வரம் அளிப்பவராகி வரதானம் கொடுக்கும் சேவை இருக்கும். இப்பொழுது இந்த சேவையை குறைவாக செய்கிறீர்கள். பின்பு அதிகமாக செய்ய வேண்டியது இருக்கும். இப்பொழுது வாரிசு உருவாக்கும் சேவை நடக்கிறது. பின்பு பிரஜை உருவாக்கும் சேவை

நடக்கும் ஆனால் குறைந்த நேரத்தில் இவ்வளவு பிரஜை உருவாக்குவதற்காக வரம் அளிப்பவராக ஆவதற்காக முக்கியமாக என்ன கவனம் வைக்க வேண்டியதாக இருக்கும்? வரம் அளிப்பவராகி கொஞ்ச நேரத்தில் அனேக ஆத்மாக்களுக்கு வரதானம் கொடுக்க முடிய வேண்டும். அதற்காக என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்? வரம் அளிப்பவராக ஆவதற்காக பக்தி மார்க்கத்தில் 'பலியாகி விடுவேன் என்று அடிக்கடி மஹிமை பாடினீர்கள் இல்லையா. அந்த முக்கியமான முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கும். இந்த மஹிமையை ஒருவேளை நடைமுறையில் செய்து விட்டீர்கள் என்றால் யார் மேல் பலியாகி விடுகிறீர்களோ அவர் உங்களுக்கும் அனைத்து வரதானமும் கொடுத்து வரம் அளிக்கும் மூர்த்தியாக ஆக்கி விடுகிறார். எனவே பலியாகி விடுவேன் என்ற உறுதிமொழி அளித்திருந்தேனே அதை ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு காரியத்தில் ஒவ்வொரு எண்ணத்தில் பாலனை செய்து கொண்டிருக்கிறேனா என்று யோசியுங்கள். தந்தை வரம் அளிக்கும் மூர்த்திதான் இல்லையா. நீங்கள் அனைவரும் கூட தந்தைக்குச் சமமாக வரம் அளிக்கும் மூர்த்தியாக ஆகி விடுகிறீர்கள். அப்படியானால் அவ்வளவு சோதனை செய்கிறீர்களா? ஒரு எண்ணம் கூட வேறு யாருக்காகவும் இருக்க வேண்டாம். எந்த எண்ணம் உருவானாலும் அதில் தந்தைக்காக தியாகத்தின், பலியாவதின் இரகசியம் நிரம்பி இருக்கட்டும். அப்படி சோதனை செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் பிறகு மாயா முற்றுகை செய்வதற்கு தைரியம் வைக்க முடியுமா? முற்றுகை செய்வதற்கு தைரியம் வைக்காது, ஆனால் அடிக்கடி நமஸ்காரம் செய்து விடைபெற்றுக் கொள்ளும். புரிந்ததா?

அப்படி அந்த மாதிரி ஆவதற்காக இவ்வளவு சோதனை தேவையாக இருக்கிறது. இன்னும் ஒரு விஷயம், வரதானிமூர்த்தி ஆவதற்காக அனைத்து சக்திகளையும் மற்றவர்களுக்கு கொடுக்க முடியும் அளவிற்கு தன்னுள் சேமிப்பு செய்திருக்கிறேனா? என்று பார்க்க வேண்டும். ஒருவேளை சேமிப்பே செய்யவில்லை என்றால் மற்றவர்களுக்கு என்ன கொடுப்பீர்கள். எனவே வரதானி மூர்த்தி ஆவதற்காக மற்றவர்களுக்கு கொடுக்க முடியும் அளவிற்கு அனைத்து சக்திகளையும் தன்னுள் அந்த அளவிற்கு சேமிப்பு செய்ய வேண்டியதாக இருக்கும். அந்த அளவு சேமிப்பு கணக்கு இருக்கிறதா? அல்லது சம்பாதித்தோம் மற்றும் சாப்பிட்டோம் என்று அப்படிப்பட்ட ரிசல்டா? ஒன்று சம்பாதித்தோம் மற்றும் சாப்பிட்டோம்,

இரண்டாவது சேமிப்பு செய்வது மற்றும் மூன்றாவது சம்பாதிக்கவும் முடியாது மற்றும் தன்னையும் நடத்திக் கொள்ள முடியாது மற்றவர்களின் உதவியினால் தன்னை நடத்திக் கொள்ள வேண்டியதாக இருக்கும். அப்படியானால் மூன்றாவது நிலை மற்றும் இரண்டாவது நிலையிலிருந்து கடந்து வந்து விட்டீர்களா? அது சம்பாதித்தோம் மற்றும் சாப்பிட்டோம் மற்றும் முதலாவது நிலை சேமிப்பு செய்வது. அப்படி தினந்தோறும் தன்னுடைய வங்கி இருப்பை பார்க்கிறீர்களா? மிகுந்த பிச்சைக்காரர்கள் பிச்சை கேட்பதற்காக வருவார்கள். அனைவருக்கும் கொடுக்க முடியும் அளவிற்கு அந்த அளவு சேமிப்பு செய்ய வேண்டியது இருக்கும். சேமிப்பு செய்ய கற்றுக் கொண்டிருக்கிறீர்களா? எவ்வளவு சேமிப்பு செய்திருக்கிறீர்கள் என்று கணக்கில் இருந்து தெரியும் இல்லையா? தன்னுடைய கணக்கை பார்த்திருக்கிறீர்களா? சிலர் அப்படியும் இருக்கிறார்கள் எடுத்து சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள், தெரிவதே இல்லை. பிறகு எப்பொழுது திடீரென்று கணக்கை பார்க்கிறார்கள் என்றால் இது என்ன ஆகி விட்டது என்று யோசிக்கிறார்கள். அந்த மாதிரியோ இங்கு இருக்கவே இருக்காது. நல்லது.

சேமிப்பு செய்யப்பட்ட கணக்கு உடையவர்களிடம் விசேஷ குணம் மற்றும் காரியம் என்னவாக தென்படும்? யாரிடம் பொக்கிஷம் சேமிப்பாகி இருக்குமோ அவருடைய முகத்தில் இருந்து ஒன்றோ தற்சமயம் மற்றும் எதிர்காலம் அதாவது ஈஸ்வரிய போதை மற்றும் நாராயணி நஷா தென்படும் மற்றும் அவர்களுடைய கண்கள் மற்றும் நெற்றியின் மூலம் அனைத்து ஆத்மாக்களுக்கும் தன்னுடைய போதை தெளிவாக தென்படும். சேமிப்பு செய்யக்கூடியவர்களின் அடையாளமாக இது தென்படும். அப்படி சேமிப்பு செய்தவரின் முகம் மற்றும் நடத்தையிலிருந்தே தெரிய வந்து விடுகிறது. எப்படி ஜடச்சிலைகள் உருவாக்குகிறார்கள் என்றால் அதில் கூட சில அந்த மாதிரி சின்னம் காண்பிக்கிறார்கள் அது அந்த ஜடச்சிலைகள் மூலமாகவும் அனுபவம் ஆகிறது. அவை பேசுவதில்லை ஆனால் முகம் மற்றும் உருவத்திலிருந்து அனுபவம் ஏற்படும். அதே போல் உங்களுடைய இந்த முகம் ஒவ்வொரு எண்ணம் ஒவ்வொரு காரியத்தையும் தெளிவாக காண்பிக்கும். எனவே என்னுடைய முகத்திலிருந்து எந்தவொரு ஆத்மாவிற்கும் போதை மற்றும் லட்சியம் தென்படுகிறதா? என்று தன்னைத் தானே அந்த மாதிரி

சோதனை செய்யுங்கள். எப்படி ஏதாவது உயர்ந்த குலத்தின் குழந்தை இருக்கிறது என்றால் அது ஒருவேளை ஏழையாகி விட்டாலும் கூட அதனுடைய ஜொலிப்பு மற்றும் பொலிவு இது ஏதோ உயர்ந்த குலத்தைச் சேர்ந்த குழந்தை என்பது தென்படும். அதே போல் யார் எப்பொழுதும் பொக்கிஷத்தினால் நிரம்பி இருப்பாரோ அவருடைய முகத்தில் இருந்து அதை ஒருபொழுதும் மறைக்க முடியாது. உங்களிடம் கண்ணாடி இருக்கிறதா? எப்பொழுதும் உடன் வைத்திருக்கிறீர்களா? ஒவ்வொரு நேரமும் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? சிலர் அந்த மாதிரியும் இருக்கிறார்கள் அவர்களுக்கு அடிக்கடி கண்ணாடியை பார்க்க வேண்டிய அவசியமும் இருப்பதில்லை. அப்படி நீங்கள் ஒவ்வொரு விநாடியும் பார்க்கிறீர்களா அல்லது பார்ப்பதற்கான அவசியமே இருப்பதில்லையா? எதுவரை தன்னுடைய சோதனைக்கான இயற்கையான பயிற்சி ஏற்படவில்லையோ அதுவரை அடிக்கடி சோதனை செய்ய வேண்டியதாக இருக்கிறது, மெதுமெதுவாக பிறகு அந்த மாதிரி ஆகி விடுவீர்கள் இதனால் அடிக்கடி பார்ப்பதற்கும் அவசியம் இருக்காது, எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டவர்களாகவே இருப்பீர்கள். எதுவரை இந்த எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டதின் பழக்கம் ஏற்படவில்லையோ அதுவரை அடிக்கடி தன்னை பார்க்க மற்றும் உருவாக்க வேண்டியதாக இருக்கிறது. மாயா எந்த விதத்திலும், எந்த முறையிலும் என்னுடைய அலங்காரத்தை குலைக்க முடியாது என்று எப்பொழுது இரண்டு, மூன்று முறை பார்த்தாகி விட்டது என்றால் பிறகு அடிக்கடி பார்ப்பதற்கான அவசியமே இருப்பதில்லை. பின்போ தன்னுடைய சாட்சாத்காரம் மற்றவர்களின் மூலமாகவும் உங்களுக்கு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். மற்றவர்கள் அவர்களை வர்ணனை செய்வார்கள், குணத்தின் மஹிமை பாடுவார்கள். நல்லது.

அனைவரும் வெற்றி ரத்தினங்கள்தான் இல்லையா. வெற்றி ரத்தினங்களாகவோ இருக்கிறீர்கள் ஆனால் வெற்றி மாலையை எவ்வளவு தனது கழுத்தில் போட்டிருக்கிறீர்கள் என்று அதையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. இந்த வெற்றி மாலை நாளாக நாளாக பெரிதாகிக் கொண்டே இருக்கிறது. அப்படி பெரிதாகிக் கொண்டிருக்கிறது மற்றும் எவ்வளவு பெரிதாகி இருக்கிறது என்று இதையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. எப்பொழுது மாலை பெரிதாகி விட்டது என்றால் பின்பு என்ன செய்கிறார்கள், இரண்டாக

ஆக்கி போடுகிறார்கள் அதன் மூலம் முழு அலங்காரமும் அழகாக ஆகி விடுகிறது. அப்படியானால் இவ்வளவு பெரிய மாலையை தன்னுடைய கழுத்தில் போட்டிருக்கிறீர்களா? இன்றைய நாளில் என்னுடைய வெற்றி மாலையில் எத்தனை வெற்றி ரத்தினங்கள் அதிகரித்திருக்கிறது என்று இதையும் சோதனை செய்யுங்கள்.

திருஷ்டி மூலம் சிருஷ்டி மாறுகிறது என்ற இதுவும் இப்போதைக்கே உகந்த பழமொழி ஆகும். எப்பேற்பட்ட தமோகுண, ரஜோகுண ஆத்மாக்கள் வந்தாலும் ஆனால் உங்களுடைய சதோகுண திருஷ்டி மூலம் அவருடைய சிருஷ்டி (எண்ணங்கள்), அவருடைய நிலை, அவருடைய உள்உணர்வு மாறிவிடட்டும். வரும் நாட்களில் இந்த அனுபவத்தை மிக அதிகம் செய்வார்கள். மூன்று உலகத்தின் காட்சியை காண்பித்தார் என்று நினைவு சின்னத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் இப்பொழுதைய மஹிமைதான். உங்கள் எதிரில் வருவதினால் பார்வை மூலமாக அவர்களுக்கு மூன்று உலகம் என்ன. தன்னுடைய முழு வாழ்க்கை கதை தெரிய வந்து விடும். எப்படி துவக்கத்தில் ஸ்தாபனையின் நேரத்தில் ஞானத்தின் சேவை இவ்வளவு இருந்ததில்லை, பார்வையினால் நன்மை செய்து கொண்டிருந் தீர்கள் அப்படி கடைசியிலும் ஞானத்தின் சேவை செய்வதற்கான வாய்ப்பே கிடைக்காது. எது துவக்கத்தில் நடந்ததோ அதே கடைசியிலும் உங்கள் மூலமாக நடக்கும். எப்படி மரத்திற்கு முன்பு விதை பிரத்யக்ஷ ரூபத்தில் இருக்கும், இடையில் அந்த விதை உள்ளடங்கிப் போய் விடுகிறது பிறகு கடைசியில் அதே விதை பிரத்யக்ஷ ரூபத்தில் தென்படுகிறது. அப்படி ஆதி ஆத்மாக்கள் உங்களிலும் எது முதல் அஸ்திவாரமாக போடப்பட்டதோ அதே சேவை கடைசியிலும் இருக்கும். நல்லது.

**வரதானம்: தேக பானத்தை ஆத்மா அபிமானி நிலையில் மாற்றம் செய்யக் கூடிய எல்லையற்ற வைராக்கியம் உடையவர்கள் ஆகுக!**

போகப்போக வைராக்கியம் துண்டித்து போகிறது என்றால் அதற்கு முக்கிய காரணமே -தேக அபிமானம்தான். எதுவரை தேக பானத்தின் மீது வைராக்கியம் வரவில்லையோ அதுவரை எந்த விசயத்தின் மீது வைராக்கியம் சதா காலம் இருக்காது. சம்பந்தத்தின் மீது வைராக்கியம் ஒன்றும் பெரிது இல்லை. இது உலகத்தில் பலருக்கு சம்பந்தத்தில் வைராக்கியம் வந்து விடுகிறது ஆனால் இங்கு தேக பானத்தின் வித

விதமான ரூபம் உள்ளது. அதை தெரிந்து கொண்டு தேக பானத்தை ஆத்ம அபிமானி நிலையில் மாற்றி விடுவதுதான் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர்கள் ஆவதற்கான விதி ஆகும்

**சுலோகன்: எண்ணம் என்ற கால்கள் உறுதியாக இருந்தால் கருமேகம் போன்ற விசயங்கள் கூட மாறி விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.05.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# 'பொஷிஸன்'ல் நிலைத்திருப்பதால் 'ஆப்போசிஷன்' முடிவடைந்து விடுகிறது!

அனைத்து ஆத்மாக்களுக்கும் சுகம் மற்றும் சாந்தியைக் கொடுப்பவர்கள் ஆகி விட்டீர்களா? ஏனெனில், சுகத்தைக் கொடுப்பவரின் தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகள் நீங்கள் எனவே, தந்தையினுடைய கடமை எதுவோ அதுவே குழந்தைகளுடைய கடமை ஆகும். யார் உலகத்திற்கு நன்மை செய்பவரோ மற்றும் சுகத்தை அளிப்பவரோ அவரிடம் ஒருபொழுதும் துக்கத்தின் அலை கனவிலும் கூட மேலும் எண்ணத்திலும் கூட வர முடியாது. எனவே, அத்தகைய ஸ்திதியை உருவாக்கிக் கொண்டு இருக்கிறீர்களா அல்லது இந்த ஸ்திதியில் நிலைத்திருக்கிறீர்களா? எப்பொழுது புதிய பிறவி எடுத்து விட்டீர்களோ, பாப்தாதாவினுடைய தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகள் ஆகி விட்டீர்களோ, பிறகு, சர்வ சக்திவானின் குழந்தைகளிடம் எவ்விதமான துக்கமும் வரவே முடியாது. துக்கத்தின் அலை எதுவரை உள்ளதோ, அதுவரை சர்வ சக்திவான் தந்தையினுடைய நினைவு இருக்காது அதாவது நடைமுறையில் அவரது குழந்தையாக ஆகவில்லை என்று பொருள். சுகத்தின் கடல் தந்தையின் குழந்தைகளாக இருக்கிறீர்கள் என்றால், துக்கத்தின் அலை என்பது என்ன என்பதைக் கூட அறியாதவர்களாக இருப்பிர்கள். சுகத்தின் அலையில் விளையாட வைத்துக் கொண்டே இருக்கின்றார். மாயையின் எதிர்ப்பு ஏன் ஏற்படுகிறது? எதிர்ப்பிற்கான நிவாரணம் மிகவும் சுலபமான தாகும். அப்பொசிஷன் (எதிர்ப்பு) என்ற வார்த்தையிலிருந்து 'அ' என்ற எழுத்தை மட்டும் நீக்கி விடுங்கள். நீக்கி விட்டால் என்ன ஆகும்? பொசிஷனில் நிலைத்திருந்தால் ஆப்பொசிஷன் இருக்குமா? ஒருவேளை, தன்னுடைய நிலையில் நிலைத்திருந்தீர்கள் என்றால் மாயையின் எதிர்ப்பு இருக்காது. ஒரு எழுத்தை மட்டும் நீக்கி விடவேண்டும். தன்னுடைய நிலையில்

நிலைத்திருப்பதே நினைவு யாத்திரை ஆகும். நான் யார்? யாருடையவர்? என்பதில் நிலைத்திருப்பதே நினைவு யாத்திரையாகும். இது கடினமா என்ன? ஒருவர் எத்தகையவரோ, அவ்வாறே தன்னை ஏற்றுக் கொள்வதில் கடினம் இருக்குமா என்ன? நீங்கள் தன்னுடைய உண்மை நிலையை மறந்து விட்டீர்கள், அதில் தன்னை நிலைக்கச் செய்வதற்கான படிப்பினையே கிடைத்திருக்கிறது. எனவே, தன்னுடைய உண்மையான ரூபத்தில் நிலைத்திருப்பது கடினமானதா அல்லது பொய்யான ரூபத்தில் நிலைத்திருப்பது கடினமானதா? ஹோலி மற்றும் தசரா பண்டிகை தினங்களில் சின்னக் குழந்தைகள் செயற்கையான முகமூடி அணிந்து கொள்கிறார்கள். அவர்களிடம் இந்தப் பொய்யான முகமூடியைக் கழற்றி விட்டு உண்மையான தோற்றத்திற்கு வாருங்கள் என்று கூறினால் அவர்களுக்கு அது கடினமானதாக இருக்குமா? எவ்வளவு நேரமாகும்? நீங்களும் கூட இந்த விளையாட்டு விளையாடி இருக்கிறீர்கள் அல்லவா? என்னென்ன முகமூடியை அணிந்திருக்கிறீர்கள்? சில நேரம் குரங்கினுடைய முகமூடி, சில நேரம் அசுரனின் முகமூடி, சில நேரம் ராவணனின் முகமூடி. இவ்வாறு எத்தனை பொய்யான முகமூடிகளை அணிந்திருக்கிறீர்கள்? இப்பொழுது தந்தை என்ன கூறுகின்றார்? இந்தப் பொய்யான முகமூடியைக் கழற்றி விடுங்கள். இதில் என்ன கடினம் உள்ளது? எனவே, தனது உண்மையான சொரூபம், உண்மையான தர்மம், உண்மையான கர்மம் என்ன? என்ற போதையில் எப்பொழுதும் இருங்கள். உண்மையான ஞானத்தின் மாஸ்டர் நாலெட்ஜ்ஃபுல் (ஞானம் நிறைந்தவர்) ஆவேன் என்ற போதை குறைவாக உள்ளதா? இந்த போதை எப்பொழுதும் இருந்தது என்றால் என்ன ஆகி விடுவீர்கள்? என்னவாக ஆவீர்களோ, அதனுடைய நினைவுச்சின்னத்தைப் பார்த்திருக்கிறீர்களா? தில்வாலா கோவில் தபஸ்வி குமாரர் மற்றும் தபஸ்வி குமாரிகளின் நினைவுச்சின்னமாகும். மேலும், எப்பொழுதும் போதையில் நிலைத்திருப்பதற்கான நினைவுச்சின்னம் எது? அச்சல்கர். எப்பொழுதும் அந்த போதையில் இருப்பதனால் ஆடாத அசையாதவர்களாகி விடுவீர்கள். பிறகு, மாயை எண்ணத்தளவில் கூட அசைக்க முடியாது. அந்தளவு உறுதியானவர்களாகி விடுவீர்கள். ராவண சம்பிரதாயத்தினர் காலை அசைப்பதற்கான முயற்சி செய்தனர் ஆனால் கொஞ்சம் அசைக்க முடியவில்லை என்ற நினைவுச்சின்னம் உள்ளதல்லவா? இது நம்முடைய நினைவுச்சின்னம் என்ற போதை உள்ளதா? அல்லது இது பெரிய பெரிய மகாரதிகளின் நினைவுச்சின்னம் என்று நினைக்கிறீர்களா? இது

என்னுடைய நினைவுச்சின்னம் என்ற நிச்சயபுத்தி உடையவராக இருந்தால் அவசியம் வெற்றி பிராப்தியாகக் கிடைக்கும். இது மகாரதிகளுடையது, நான் முயற்சியாளர் என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள். ஒருவேளை, நம்பிக்கையில், சொருபத்தின் நினைவிலேயே பலவீனம் இருந்தது என்றால் கர்மத்திலும் கூட பலவீனம் வந்து விடும். எனவே, எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணமும் நிச்சயபுத்தி உடைய எண்ணமாக இருக்க வேண்டும். வெற்றி எனக்கு தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது என்று செயல் புரிவதற்கு முன்பே நம்பிக்கை கொள்ளுங்கள். அனேக கல்பங்கள் வெற்றியாளர் ஆகியிருக்கிறீர்கள். அனேக கல்பங்கள், அனேக முறை வெற்றியாளர் ஆகி வெற்றி மாலையில் மணியாகக் கோர்க்கப்பட்டவர்களாக, பூஜைக்குரியவர்களாக ஆகியிருக்கிறீர்கள் எனில், அதை இப்பொழுது மீண்டும் செய்யமாட்டீர்களா? ஏற்கனவே செய்யப்பட்ட அதே கர்மத்தை மீண்டும் ஒருமுறை திரும்பச் செய்ய வேண்டும். ஆகையினாலேயே, உருவான உருவாக்கப்பட்ட உருவாகிக் கொண்டிருக்கும் நாடகம் என்று கூறப்படுகிறது. உருவாக்கப்பட்டிருக்கிறது ஆனால், இப்பொழுது மீண்டும் செய்து 'உருவான உருவாக்கப்பட்ட...' என்ற பழமொழி என்ன உள்ளதோ, அதை நிறைவு செய்ய வேண்டும். நான் இது ஆவேன், இதை நான் செய்தே ஆக வேண்டும். நான் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எப்பொழுது ஏற்படுகிறதோ. அப்பொழுதே போதை அதிகரிக்கிறது. நம்பிக்கை இல்லையெனில் போதையும் ஏறாது மற்றும் நம்பிக்கை இருக்கிறது எனில் மகிழ்ச்சியான ஸ்திதி என்ற கடலில் ஆடிக் கொண்டே இருப்பீர்கள். அத்தகைய ஸ்திதியின் அனுபவி மூர்த்தி ஆக எப்பொழுது ஆவீர்களோ, அப்பொழுது உங்களுடைய தோற்றத்தின் மூலம் கற்பிக்கக்கூடியவரின் தோற்றம் தென்படும். தந்தை மற்றும் ஆசிரியரின் தோற்றத்தை உங்களுடைய தோற்றத்தின் மூலம் வெளிப்படுத்தக்கூடிய அனுபவி மூர்த்திகளா நீங்கள்? அத்தகையவர்களாக ஆகி விட்டீர்களா அல்லது ஆகிக் கொண்டு இருக்கிறீர்களா? நீங்கள் வெற்றி நட்சத்திரங்களா அல்லது நம்பிக்கை நட்சத்திரங்களா? வெற்றி உங்களது பிறப்புரிமை ஆகும். சர்வ சக்திவான் என்று கூறுகிறீர்கள். தோல்வியின் காரணம் சக்தியற்ற நிலை ஆகும். சக்தியின் குறைபாட்டின் காரணத்தினாலேயே மாயையிடம் தோல்வி அடைகிறீர்கள். எப்பொழுது சர்வ சக்திவான் தந்தையின் நினைவில் இருக்கிறீர்களோ, அப்பொழுது சர்வ சக்திவானின் குழந்தைகளாக இருக்கும் காரணத்தினால் வெற்றி

உங்களது பிறப்புரிமை ஆகி விட்டது. வெற்றியானது ஒவ்வொரு வினாடியிலும் அடங்கியிருக்க வேண்டும், அப்போது தோல்வியின் நாட்கள் முடிவடைந்து விடுகிறது. இப்பொழுது வெற்றி நம்முடைய முழக்கம் ஆகும் என்பதை நினைவில் வைத்திடுங்கள்.

ஒரு வினாடியில் தன்னை நகலில் இருந்து அசலாக (உண்மையான நிலையில்) ஆக்க முடியும்படியான மிகவும் சகஜமான சரளமான வழி உள்ளதா? இவ்வளவு சரளமான வழி எப்பொழுது கிடைக்கும்? ஒருபோதும் கிடைக்காது. மாயைக்கு ஏன் அடிமை ஆகிறீர்கள்? ஏனெனில், சர்வ சக்திவானின் குழந்தைகள் நாம் என்பதை மறந்து விடுகிறீர்கள். தற்காலத்தில் சின்னச் சின்ன அதிகாரம் கொண்டிருப்பவர்கள் எவ்வளவு போதையில் இருக்கிறார்கள்! எனவே சர்வ சக்திவானின் சக்தியுடைய குழந்தைகளாகிய நீங்கள் எவ்வளவு பெருமையில் இருக்க வேண்டும்! சாஸ்திரவாதிகள் யார் தன்னை சாஸ்திரங்களின் அதிகாரி என்று நினைக்கின்றார்களோ, அவர்களும் கூட எவ்வளவு பெருமையில், எவ்வளவு தலைகீழான ஞானத்தின் நம்பிக்கையில் இருக்கிறார்கள். யார் கூறியது, யார் பார்த்தது என்பது எதுவுமே தெரியாது ஆனாலும் சாஸ்திரங்களின் அதிகாரி என்று தன்னை நினைத்துக் கொண்டிருக்கும் காரணத்தினால் தன்னுடைய தோல்வியை ஒருபொழுதும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். உங்களுடையதோ அனைத்தையும் விட சிரேஷ்டமான அதிகாரம் ஆகும். அத்தகைய அதிகாரத்தோடு பிறர் முன்னால் சென்றீர்கள் என்றால் அனைவரும் தலை வணங்குவார்கள். நீங்கள் தலைவணங்க முடியாது. எனவே, தன்னுடைய அதிகாரத்தை நிலையாக வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உலகத்தையே தலை வணங்கச் செய்பவர்கள் ஆவீர்கள். யார் உலகத்தை தலை வணங்கச் செய்பவர்களோ, அவர்கள் யார் முன்னாலும் தலை வணங்க முடியாது. அந்த அதிகாரத்தின் பெருமையோடு எந்த ஒரு ஆத்மாவிற்கும் நன்மை செய்ய முடியும். இத்தகைய பெருமையை ஒருபொழுதும் மறக்கக் கூடாது. நீண்ட காலத்திற்கு மறக்காதவர் ஆவதனால் எதிர் காலத்தில் நீண்ட காலத்திற்கு ராஜ்ய பாக்கியத்தை பிராப்தம் செய்வீர்கள். ஒருவேளை, அல்ப காலத்திற்கு இந்த பெருமையில் இருந்தால் ராஜ்ய பாக்கியமும் அல்ப காலத்திற்கே பிராப்தியாகக் கிடைக்கும். அல்ப காலத்திற்கு அல்லாமல், சதா காலத்திற்கான ஆஸ்தியைப் பெறுவதற்காகவே இப்பொழுது நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். இரண்டு விசயங்களை

மட்டும் சேர்த்து நினைவில் வைத்திடுங்கள். விசயம் ஒன்று, வார்த்தைகள் வெவ்வேறு ஆகும். முற்றிலும் சுலபத்திலும் சுலபமான இரண்டு விசயங்கள் சரளமான வார்த்தைகளில் என்ன கற்பிக்கப்பட்டுள்ளன? அத்தகைய இரு இரு வார்த்தைகளாக இணைத்து நினைவு இருந்தது என்றால் ஸ்திதி ஒருபோதும் ஏற்ற இறக்கம் உடையதாக ஆக முடியாது. தந்தை மற்றும் ராஜ்யம் நினைவு இருந்தது என்றால் ஒருபொழுதும் ஸ்திதி ஏறி இறங்காது. இரண்டு வார்த்தைகளுக்கான விசயம்தான். ஒரு விபரம் அறியாத குழந்தையைக் கூட தந்தை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்யக் கூறினால் அது மறக்குமா? மாஸ்டர் சர்வ சக்திவான்களாகிய நீங்கள் மறக்க முடியுமா? எந்த சமயம் மறதி வருகிறதோ, மாஸ்டர் சர்வ சக்திவானாகிய நான் தந்தை மற்றும் ஆஸ்தியை மறந்து விட்டேனா என்று தனக்குத்தானே பேசுங்கள். இவ்வாறு பேசுவதனால் எந்த சக்தியை இழந்து விடுகிறீர்களோ அது மீண்டும் நினைவுக்கு வந்து விடும். மனனம் (சிந்தனை) மற்றும் வர்ணனை செய்ய வேண்டும் அவ்வளவுதான்! முதலில் மனனம் செய்யுங்கள் பிறகு வர்ணனை செய்யுங்கள். எந்த விசயங்கள் மனனம் செய்யப்படுகிறதோ, அதை வர்ணனை செய்வது சுலபமாகி விடுகிறது. எனவே, மனனம் மற்றும் வர்ணனை செய்துகொண்டே செல்லுங்கள். இவையும் இரண்டு விசயங்கள் ஆகி விட்டன. மனனம் செய்யச்செய்ய அன்பில் மூழ்கிய நிலை தானாக வந்து விடும். யார் மனனம் செய்ய அறியவில்லையோ, அவர்கள் அன்பில் மூழ்கிய நிலையையும் அனுபவம் செய்ய முடியாது. கிரீடதாரி மற்றும் சிம்மாசனதாரியாக இப்பொழுது ஆகியிருக்கிறீர்களா அல்லது எதிர்காலத்தில் ஆவீர்களா? இப்பொழுதோ கிரீடம் மற்றும் சிம்மாசனம் யாசிக்கக்கூடியவர்களா? சங்கமயுகத்தின் சிம்மாசனத்தை அறிந்திருக்கவில்லையா? முழு கல்பத்தில் அனைத்தையும் விட உயர்ந்த சிம்மாசனத்தைப் பற்றித் தெரியாதா? பாப்தாதாவின் உள்ளம் என்ற சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர்களாக ஆகவில்லையா? எப்பொழுது நினைவு இருக்குமோ அப்பொழுதே அமர்வீர்கள். சிம்மாசனம் உள்ளது எனில் கிரீடமும் இருக்கும். கிரீடம் இல்லாமல் சிம்மாசனம் இருக்கவே இருக்காது. எந்தக் கிரீடத்தை அணிந்து கொள்வதால் சிம்மாசனதாரி ஆவீர்கள்? பாப்தாதா சங்கமயுகத்தில்தான் கிரீடம் மற்றும் சிம்மாசனதாரியாக ஆக்குகின்றார். இந்தக் கிரீடம் மற்றும் சிம்மாசனத்தின் ஆதாரத்தினால் எதிர்கால கிரீடம், சிம்மாசனம் கிடைக்கிறது. இப்பொழுது தாரணை செய்யவில்லை எனில்,

எதிர்காலத்தில் எவ்வாறு தாரணை செய்வீர்கள். ஆதாரம் சங்கமயுகம் அல்லவா! கிரீடத்தையும் அணிய வேண்டும். திலகமும் வைத்துக் கொள்ள வேண்டும் மற்றும் சிம்மாசனதாரியாகவும் ஆக வேண்டும். திலகம் சதா நிலையாக உள்ளதா அல்லது அவ்வப்போது அழிந்து விடுகிறதா? கிரீடம், திலகம் மற்றும் சிம்மாசனம் ஆகிய இந்த மூன்றுமே சங்கமயுகத்தில் பெரியதிலும் பெரிய பிராப்தி ஆகும். இந்தப் பிராப்திக்கு முன்னால் எதிர்கால ராஜ்யம் ஒன்றுமே கிடையாது. யார் சங்கமயுகத்தின் கிரீடம், சிம்மாசனத்தைப் பெறவில்லையோ, அவர்கள் எதையுமே பெறவில்லை. விஷ்வத்தின் நன்மைக்கான பொறுப்பே கிரீடம் ஆகும். எது வரை இந்தக் கிரீடத்தை அணியவில்லையோ, அது வரை தந்தையின் உள்ளம் என்ற சிம்மாசனத்தில் வீற்றிருக்க முடியாது. தன்னுடைய உரிமையை அடைந்து விட்டுச் செல்ல வேண்டும். இல்லையெனில் மிகவும் கடினமாகி விடும். மதுவனத்திலிருந்து கிரீடம் மற்றும் சிம்மாசனதாரி ஆகிச் செல்ல வேண்டும். எப்பொழுது தைரியசாலியாக, நிச்சயபுத்தி உடையவர்களாக ஆவீர்களோ, அப்பொழுதே தன்னுடைய மகுடாபிஷேகம் செய்வதற்காக மதுவனத்திற்கு வருகிறீர்கள். கிரீடம் அணியாமல் செல்லக்கூடாது. எத்தனை பேர் விரும்பினாலும் அமர முடியும் அளவிற்கு பாப்தாதாவின் சிம்மாசனம் மிகப் பெரியதாகும். அந்த ஸ்தூல சிம்மாசனத்திலோ அனைவரும் அமர முடியாது ஆனால் இந்த சிம்மாசனம் மிகப் பெரியதாகும். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தைகள், பெரியதிலும் பெரிய சிம்மாசனதாரிகளாக இருப்பார்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 30.05.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## தந்தையின் கட்டளை மற்றும் உறுதிமொழி!

பாப்தாதா கட்டளையும் இடுகிறார் மேலும் உறுதிமொழியும் கொடுக்கிறார். அது எந்த மகாவாக்கியம் அதில் கட்டளையும் வந்து விடுகிறது மற்றும் உறுதிமொழியும் வந்து விடுகிறது. அந்த மாதிரி கட்டளை மற்றும் உறுதிமொழியும் இருக்கும் மகாவாக்கியம் நினைவு வருகிறதா? அந்த மாதிரி நிறைய மகாவாக்கியங்கள் இருக்கின்றன. அவற்றின் மிக நீளமான பட்டியல் இருக்கிறது ஆனால் தூண்டுதல் தரும் மகாவாக்கியம் என்னவென்றால் நீங்கள் ஒரு அடி எடுத்து வைத்தீர்கள் என்றால் ஆயிரம் அடிகள் பாப்தாதா (உதவிட) முன் வருவார். பத்து அடி அல்ல. இந்த மகாவாக்கியத்தில் ஒரு அடி எடுத்து வையுங்கள் என்ற கட்டளையும் இருக்கிறது. ஆயிரம் அடிகள் பாப்தாதாவும் முன்னுக்கு வருவார் என்ற உறுதிமொழியும் இருக்கிறது. அது போன்று ஊக்கம் உற்சாகம் கொடுக்கக்கூடிய மகாவாக்கியம் எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். கட்டளையைப் பின்பற்றி நடப்பதினால் தந்தையின் உறுதிமொழி மூலமாக சுலபமான முறையில் தன்னை முன்னேற்ற முடியும் ஏனென்றால் உறுதிமொழி பின்பு உதவியின் ரூடமாகி விடுகிறது. ஒன்று தன்னுடைய தைரியம், இன்னொன்று உதவி. எப்பொழுது இரண்டும் சேர்ந்து விடுகிறதோ அப்போது சுலபமாகி விடுகிறது. எனவே அந்த மாதிரியான மகாவாக்கிங்கள் எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். நினைவுதான் சக்தியை கொண்டு வருகிறது. எப்படி இராஜ்புத் குலத்தைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் யுத்த மைதானத்திற்கு செல்கிறார்கள் என்றால் செல்பவர் எப்படிப்பட்ட பலஹீனமானவராக இருந்தாலும் அவருக்கு தன்னுடைய குலத்தைப் பற்றி 'இராஜ்புத் என்பவர் அப்படி அப்படி இருப்பார், இந்த மாதிரி இருந்து சென்றிருக்கிறார்கள் என்று நினைவூட்டுவார்கள். 'இந்த இந்த மாதிரியெல்லாம் செய்து சென்றிருக்கிறார்கள். நீ அந்த மாதிரியான குலத்தைச் சேர்ந்தவன் இந்த நினைவை ஊட்டுவதினால் அவருக்கு சக்தி வந்து விடுகிறது. பிறகு

குலத்தின் மஹிமையைக் கேட்டுக் கேட்டு தானும் அந்த மாதிரி மஹான் ஆகி விடுகிறார். இதே முறை யில் நீங்கள் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர், அந்த சூரிய வம்ச இராஜ்யம் செய்பவர்கள், என்னவாக இருந்தார்கள்? எப்படி இராஜ்யம் செய்தார்கள், மேலும் எந்த சக்தியின் ஆதாரத்தில் அந்த மாதிரி இராஜ்யம் செய்தார்கள்? அந்த நினைவு மற்றும் கூடவே இப்பொழுது சங்கமயுகத்தின் ஈஸ்வரிய குலத்தின் நினைவு ஒருவேளை இந்த இரண்டின் நினைவு புத்தியில் வந்து விட்டது என்றால் பின்பு சக்தி வந்து விடுகிறது. நினைவின் ஆதாரத்தின் சக்தியினால் மட்டும் மாயாவை எதிர்கொள்வது சுலபமாகி விடுகிறது. அப்படியானால் ஒவ்வொரு காரியத்தில் வெற்றியை அடைவதற்கான சாதனமாக என்னவாக ஆனது? நினைவின் மூலமாக முதலில் தன்னுள் சக்தியை கொண்டு வாருங்கள். பிறகு காரியம் செய்தீர்கள் எனறால் எப்படிப்பட்ட பலஹீனமானவராக இருந்தாலும் நினைவின் ஆதாரத்தினால் அந்த நேரத்தில் சக்தி வந்து விடும். முதலில் அவர் தன்னை அந்த காரியத்திற்கு தகுதியானவராக நினைக்காமல் இருந்திருக்கலாம் ஆனால் நினைவின் மூலமாக அவர் தன்னை தகுதியானவராக பார்த்து எதிர்காலத்திற்காக ஊக்கம் உற்சாகத்தில் வருவார். எனவே அனைத்து காரியம் செய்வதற்கு முன்பு ஈஸ்வரிய குலம் மற்றும் எதிர்கால குலத்தின் நினைவை வையுங்கள், இரண்டின் நினைவு வருவதினால் ஒருபொழுதும் பலமின்மை வர முடியாது. பலமின்மை இல்லையென்றால் வெற்றியின்மையும் இல்லை. வெற்றியின்மையின் காரணமே பலமின்மைதான். எப்பொழுது நினைவின் மூலமாக சக்தியைக் கொண்டு வருவீர்கள் என்றால் பலமின்மை அதாவது பலஹீனம் முடிவடைந்து விடுகிறது. வெற்றியின்மை ஏற்படவே முடியாது. எனவே எப்பொழுதும் வெற்றிமூர்த்தி ஆவதற்காக தன்னுடைய நினைவை சக்திசாலியானதாக ஆக்குங்கள். பின்பு தானே அந்த சொரூபமாக ஆகி விடுவீர்கள். எப்படி எப்படி நினைவு இருக்குமோ அந்த மாதிரியான சொரூபத்தில் தன்னை உணர்வீர்கள். நான் சக்தி ஆவேன் என்ற நினைவு இருக்கிறது என்றால் சக்தி சொரூபமாகி எதிர்கொள்ள முடியும். ஒருவேளை நினைவிலேயே 'நானோ முயற்சி செய்பவன், முயற்சி செய்து பார்ப்பேன்' என்பதை வைத்தீர்கள் என்றால் அந்த சொரூபமே பலஹீனமானதாக ஆகி விடுகிறது. அப்படி நினைவை சக்திசாலி யானதாக ஆக்குவதினால் சொரூபமும் சக்தியுடையதாக ஆகி விடுகிறது. இதுதான் வெற்றியடைவதற்கான முறை ஆகும். பின்பு விரும்பியபோதிலும் ஏன்

ஏற்படவில்லை என்ற இந்த வார்த்தையை கூற முடியாது. விருப்பத்தின் கூடவே சக்தியும் தேவையாக இருக்கிறது. மேலும் சக்தி நினைவின் மூலமாக வருகிறது. ஒருவேளை நினைவு பலஹீனமானதாக இருக்கிறது என்றால் பின்பு என்ன எண்ணத்தை உருவாக்குகிறீர்களோ அது நிறைவேறுவது இல்லை. என்ன காரியம் செய்கிறீர்களோ அதுவும் வெற்றியை அடைய முடிவதில்லை. அப்படியானால் நினைவு வைப்பது கடினமா அல்லது சுலபமா? எது சுலபமான விஷயமோ அது நிரந்தரமாகவும் இருக்க முடியும். நினைவு நிரந்தரமாக இருந்தபோதிலும் நினைவில் ஒன்று சாதாரண நினைவாக இருக்கிறது மற்றும் இன்னொன்று சக்திசாலியான நினைவாக இருக்கிறது. சாதாரண ரூபத்தில் நினைவு இருக்கிறதுதான் ஆனால் சக்திசாலியான நினைவு இருக்க வேண்டும். யாராவது நீதிபதி இருக்கிறார் என்றால் அவருக்கு முழு நாளும்தான் நீதிபதி என்ற நினைவோ இருக்கிறது ஆனால் எந்த நேரம் முக்கியமாக நாற்காலியில் அமர்கிறார் என்றால் அந்த நேரம் முழு நாளின் நினைவை விட சக்திசாலியான நினைவு இருக்கும். அப்படி ட்யூட்டி அதாவது கடமையில் இருப்பதினால் சக்திசாலியான நினைவிருக்கிறது. மற்றபடி பொதுவாக சாதாரண நினைவு இருக்கிறது. அப்படி நீங்களும் சாதாரண நினைவிலோ இருக்கிறீர்கள்தான் ! ஆனால் சில சமயம் சக்திசாலியான நினைவு அதன் மூலம் முற்றிலும் அந்த சொரூபம் ஆகி விட வேண்டும் மற்றும் சொரூபத்தின் ஸித்திாக வெற்றி கிடைத்து விடட்டும், அந்த மாதிரியான நினைவு எவ்வளவு நேரம் இருக்கிறது? இதனுடைய பயிற்சி செய்கிறீர்கள்தான் இல்லையா? நான் ஈஸ்வரிய சேவையில் நிரந்தரமாக இருக்கிறேன் என்று புரிந்து கொள்ளுங்கள். உடல் மூலமாக சேவை செய்தாலும் ஈஸ்வரிய சேவையில் இருக்கிறேன் என்று புரிந்து கொள்ளுங்கள். உணவு தயாரிக்கிறீர்கள், அதுவோ ஸ்தூலமான காரியம், ஆனால் உணவில் ஈஸ்வரிய சம்ஸ்காரத்தை நிரப்பி உணவை சக்திசாலியாக ஆக்குவது, இதுவோ ஈஸ்வரிய சேவையாக ஆனது இல்லையா? எப்படி அன்னமோ (உணவு) அப்படி மனம் என்று கூறப்படுகிறது. உணவு தயாரிக்கும் நேரம் ஈஸ்வரிய சொரூபம் எப்பொழுது இருக்குமோ அப்பொழுது அன்னத்தின் பாதிப்பு மனதின் மேல் ஏற்படும். அப்படி உணவு சமைப்பதின் ஸ்தூல காரியம் செய்தாலும் ஈஸ்வரிய சேவையில் இருக்கிறீர்கள் இல்லையா? இறை சேவைக்காக மட்டும் என்று நீங்கள் எழுதுகிறீர்கள், அதனுடைய உள் அர்த்தம் என்னவானது? நாம் ஈஸ்வரிய குழந்தை எப்பொழுதும் இந்த

ஈஸ்வரிய சேவைக்காக மட்டும் இருக்கிறோம் என்பதாகும். அதனுடைய சொரூபம் ஸ்தூல சேவைக்கானதாக இருந்தாலும் அதில் கூட எப்பொழுதும் ஈஸ்வரிய சேவையில் இருக்கிறேன் என்பதாகும். எதுவரை இந்த ஈஸ்வரிய ஜென்மம் இருக்கிறதோ அதுவரை ஒவ்வொரு வினாடி ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு காரியத்தில் ஈஸ்வரிய சேவை இருக்கிறது. அவர்கள் கொஞ்ச நேரத்திற்காக நாற்காலியில் அமர்ந்து தன்னுடைய சேவை செய்கிறார்கள். உங்களைப் பொருத்தவரை இது இல்லை. எப்பொழுதும் தன்னுடைய சேவை ஸ்தானத்தில் இருக்கிறீர்கள். எங்கிருந்தாலும் இந்த நினைவு இருக்க வேண்டும். பிறகு பலஹீனம் வர முடியாது. எப்பொழுது தன்னுடைய சேவையின் ஆசனத்தை விட்டு விடுகிறீர்களோ அவ்வாறு ஆசனத்தை விடுவதினால் நிலையும் ஒருநிலை அடைவதில்லை. ஆசனத்தை விடக்கூடாது. நாற்காலியில் அமர்வதினால் போதை ஏற்படுகிறதுதான் இல்லையா. ஒருவேளை எப்பொழுதும் தன்னுடைய பதவியின் நாற்காலியில் அமர்கிறீர்கள் என்றால் போதை இருக்காதா? நாற்காலி மற்றும் பதவியை ஏன் விடுகிறீர்கள்? களைப்படைந்து விடுகிறீர்களா? எப்படி நீங்கள் இராஜாவின் படத்தை காண்பிக்கிறீர்கள். முதலில் இரண்டு கிரீடம் அணிந்தவராக இருந்தார் பின்பு இராவணன் பின்னால் இருந்து அவருடைய கிரீடத்தைக் கழற்றி கொண்டிருக்கிறான். அப்படி இப்பொழுதும் நடக்கிறதா என்ன? மாயா பின்னாலிருந்தே பதவியிலிருந்து இறக்கி விடுகிறதா என்ன? இப்பொழுதோ மாயா விடைபெறுவதற்காக மரியாதை செய்வதற்காக வரும். அந்த பழைய ரூபத்தில் இப்பொழுது வரக்கூடாது. இப்பொழுதோ விடைபெறும். எப்படி கலியுகம் விடைபெற்று சென்று கொண்டிருக்கிறது என்று நாடகத்தில் காண்பித்தீர்கள். அப்படியே நடைமுறையில் மாயா உங்கள் அனைவரிடமும் விடைபெறுவதற்காக வருகிறதே அன்றி போரிடுவதற்காக வருவதில்லை. இப்பொழுது அனைவரும் மாயாவின் போரிலிருந்து வெளிவந்து விட்டீர்கள் இல்லையா? ஒருவேளை இப்பொழுதும் மாயாவின் போர் நடந்து கொண்டே இருக்கிறது என்றால் தன்னுடைய அதீந்திரிய சுகத்தின் அனுபவத்தை எப்பொழுது செய்வீர்கள்? அதையோ இப்பொழுதுதான் செய்ய வேண்டும் இல்லையா? ராஜ்ய பாக்கியத்தையோ எதிர்காலத்தில் அனுபவம் செய்வீர்கள் ஆனால் அதீந்திரிய சுகத்தின் அனுபவத்தையோ இப்பொழுது செய்ய வேண்டும் இல்லையா? மாயாவின் போர் இருப்பதினால் இந்த அனுபவம் செய்ய

முடிவதில்லை. தந்தையின் குழந்தையாகி தற்சமயம் அதீந்திரிய சுகத்தின் முழு அனுபவத்தை பிராப்தி செய்யவில்லை என்றால், இதுவரை என்ன செய்தீர்கள்?

குழந்தை என்றால் ஆஸ்தியின் அதிகாரி ஆவார். எனவே சங்கமயுகத்தின் உயர்ந்த ஆஸ்தியாகிய அதீந்திரிய சுகம் எப்பொழுதும் கிடைத்துக் கொண்டிருக்கிறதா என்று இதை யோசியுங்கள். ஒருவேளை அற்பகாலத்திற்காக பிராப்தி செய்திருந்தீர்கள் என்றால் வித்தியாசம் என்ன இருந்தது? நிரந்தரமான பிராப்திக்காகத்தான் தந்தையின் குழந்தையாக ஆனீர்கள். இருந்தும் அற்பகாலத்தின் அனுபவம் ஏன்? இடைவிடாத நிரந்தர அனுபவம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இடைவிடாத துண்டுபடாத சுயராஜ்யத்தை அடைய முடியும். அப்படியானால் துண்டுபடாமல் இருக்கிறதா, இல்லை இடையிடையே முறிந்து விடுகிறதா. முறிந்து விட்ட பொருள் பிறகு இணைக்கப்பட்டது மற்றும் ஏதாவது முற்றிலும் உடையாத பொருள் இருக்கிறது என்றால் இரண்டையும் பார்த்தால் என்ன உணர்வு ஏற்படும்? உடையாத பொருள் நன்றாக இருக்கும் இல்லையா? அப்படி இந்த அதீந்திரிய சுகம் கூட துண்டுபடாததாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தந்தையின் ஆஸ்திக்கு அதிகாரி என்று புரிந்து கொள்ளுங்கள். ஒருவேளை துண்டுபடாத நிரந்தரமானதாக இல்லையென்றால் என்ன புரிந்து கொள்ள வேண்டும். ஆஸ்தியின் அதிகாரி ஆகவில்லை ஆனால் கொஞ்சம் தானம் புண்ணியம் மாதிரி பிராப்தி செய்திருக்கிறீர்கள். தானம், புண்ணியம் எப்பொழுதாவது பிராப்தி ஆகிறது. ஆஸ்தி எப்பொழுதும் தன்னுடைய பிராப்தியாக ஆகுகிறது. வாரிசு என்றால் வாரிசின் அடையாளமாவது அதீந்திரிய சுகத்தின் ஆஸ்தியின் அதிகாரி ஆகும். வாரிசிற்கு தந்தை அனைத்தையும் கொடுத்து விடுகிறார். யார் வாரிசு இல்லையோ அவருக்கு ஏதோ கொஞ்சம் கொடுத்து குஷி அடையச் செய்வார். தந்தையோ முழுமையாக கொடுத்துக் கொண்டிருக்கிறார். யாருக்கு தந்தையின் வில் (உயில்) மேல் முழுமையான அதிகாரம் இருக்குமோ அவருடைய அடையாளமாக என்ன தென்படும்? அவர் 'வில் பவர்' (மனோபலம்) உள்ளவராக இருப்பார். அவருடைய ஒவ்வொரு சங்கல்பமும் 'வில் பவர்' உடையதாக இருக்கும். ஒருவேளை 'வில் பவர்' இருக்கிறது என்றால் தோல்வி ஒருபொழுதும் ஏற்படாது. முழுமையான வில்லின் (உயிலின்) அதிகாரி ஆகவில்லை

அதனால் 'வில் பவர்' வருவது இல்லை. தந்தையின் பிராபர்ட்டி (சொத்து) மற்றும் பிராஸ்பர்ட்டியை (செல்வச்செழிப்பை) தன்னுடைய பிராபர்ட்டி (சொத்து) ஆக்குவதற்காக விசால புத்தி தேவையாக இருக்கிறது. தந்தையின் பிராபர்ட்டியை தன்னுடைய பிராபர்ட்டியாக எப்படி ஆக்குவீர்கள்? எவ்வளவு தன்னுடையதாக ஆக்கிக் கொண்டே இருப்பீர்களோ அவ்வளவே போதை மற்றும் குஷி இருக்கும். அப்படியானால் தந்தையின் பிராபர்ட்டியை தன்னுடைய சொத்தாக ஆக்குவதற்கான சாதனம் எது? அல்லது தந்தையின் பிராபர்ட்டியை தந்தையினுடையதாகவே இருக்கவிட்டு விடலாமா? (சிலர் தன்னுடைய கருத்தை கூறினார்கள்) யாருடைய உள்ளம் உண்மையாக இருந்ததோ அவர் மேல் தந்தை திருப்தியானார் அதனால்தான் பிராபர்ட்டி கொடுத்திருக்கிறார். பிராபர்ட்டியையோ கொடுத்தாகி விட்டது இப்பொழுது அதை தன்னுடையதாக ஆக்குவதின் விஷயமாகும். சேவை மற்றும் தானம் கூட எப்பொழுது செய்ய முடியும் என்றால் எப்பொழுதும் பிராபர்ட்டியை தன்னுடையதாக ஆக்கி இருந்து இருப்பீர்களோ அப்பொழுதுதான். எவ்வளவு பிராபர்ட்டி இருக்குமோ அவ்வளவு போதையில் தானம் செய்ய முடியும் மற்றும் மற்றவர்களின் சேவை செய்ய முடியும் ஆனால் முதலில் தன்னுடையதாக எப்படி ஆக்குவது என்பதுதான் விஷயம். தன்னுடையதாக ஆகி விட்டது என்றால் பின்பு மற்றவர்களுக்கு தானம் செய்வதினால் அதிகரித்துக் கொண்டே இருக்கும். இது பின்னால் வரும் விஷயம் ஆகும் ஆனால் முதலில் தன்னுடையதாக எப்படி ஆக்குவது? எவ்வளவிற்கு எவ்வளவு பொக்கிஷம் என்ன கிடைக்கிறதோ அதன் மேல் சிந்தனை செய்வதினால் உள்ளே பதிந்து விடுகிறது. யார் சிந்தனை செய்பவராக இருப்பாரோ அவருடைய பேச்சில் கூட 'வில் பவர்' இருக்கும். சிலருடைய பேச்சில் சக்தியின் அனுபவம் ஆகிறது. ஏன்? அனைவரும் சேர்ந்தே கேட்கிறீர்கள். சொத்தோ அனைவருக்கும் ஒரே மாதிரி ஒரே நேரத்தில் சேர்ந்தே கிடைத்திருக்கிறது. யார் சிந்தனை செய்து கொடுக்கப்பட்ட அந்த பிராபர்ட்டியை தன்னுடையதாக ஆக்குகிறார்களோ அவர்களுக்கு என்ன ஏற்படுகிறது? 'அசை போட்டால் போதை ஏறும்' என்ற பழமொழி இருக்கிறது இல்லையா. இப்பொழுது அதை மீண்டும் அப்படியே செய்வதற்கான பயிற்சி ஆகும். சிந்தனை செய்வதற்கான பயிற்சி குறைவாக இருக்கிறது. எவ்வளவிற்கு எவ்வளவு சிந்தனை செய்வீர்களோ அதாவது பிராபர்ட்டியை தன்னுடையதாக ஆக்கினீர்கள் என்றால் போதை இருக்கும். அந்த போதையில்

யாருக்காவது கூறினீர்கள் என்றால் அவருக்கும் போதை ஏறும். இல்லையென்றால் போதை ஏறாது. பக்தனாகி மஹிமை மட்டும் செய்து விடுகிறார்கள். போதை ஏறுவதில்லை. அப்படி சிந்தனை செய்வதற்கான பயிற்சி தன்னில் கொண்டு வந்து கொண்டே இருங்கள். பின்பு தன்னுடைய போதையிலேயே இருப்பவராக எப்பொழுதும் பார்க்கத் தென்படுவார். பிறகு இந்த உலகத்தின் எந்தவொரு பொருளோ அல்லது குழப்பமோ உங்களை தன் பக்கம் இழுக்காது. ஏனென்றால் நீங்கள் சிந்தனையின் போதையிலேயே இருக்கிறீர்கள். எந்த நாளில் சிந்தனையின் போதையில் இருப்பீர்களோஅந்த நாள் மாயாவும் எதிர்கொள்ளாது ஏனென்றால் நீங்கள் பிஸியாக இருக்கிறீர்கள் இல்லையா? ஒருவேளை யாராவது பிஸியாக இருக்கிறார் என்றால் இன்னொருவர் ஒருவேளை வந்து விட்டார் என்றாலும் திரும்பிப் போய் விடுவார். எப்படி அவர்கள் அன்பர்கிரவுண்டில் (தலைமறைவாக / பூமிக்கு அடியில்) சென்று விடுகிறார்களோ, அதே போல் நீங்களும் சிந்தனை செய்வதினால் உள்ளே அதாவது அன்டர்கிரவுண்ட் சென்று விடுகிறீர்கள். அன்டர்கிரவுண்டில் இருப்பதினால் வெளியில் வீசப்படும் குண்டுகளின் பாதிப்பு ஏற்படாது, இதே போல் சிந்தனையில் இருப்பதினால் உள்நோக்குமுகமுடையவராக இருப்பதினால் வெளிமுகத்தின் விஷயங்கள் தொந்தரவு செய்யாது. தேக அபிமானத்திலிருந்து விடுபட்டு இருப்பார். ஒருவேளை யாராவது இருக்கையில் இல்லையென்றால் வந்தவர்கள் திரும்பிச் சென்று விடுவார்கள் இல்லையா? நீங்களும் சிந்தனையில் மற்றும் உள்நோக்கு முகம் உடையவராக இருப்பதினால் தேக அபிமானத்தின் ஆசனத்தை விட்டு விடுகிறீர்கள். பின்பு மாயா திரும்பிச் சென்று விடும் ஏனென்றால் நீங்கள் உள்நோக்குமுகமாக அதாவது அன்டர்கிரவுண்டாக இருக்கிறீர்கள். இன்றைய நாட்களில் பாதுகாப்பிற்காக அதிகமாக அன்டர்கிரவுண்டை உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்கள். அப்படி உங்களுக்கு கூட பாதுகாப்பின் சாதனம் இதே உள்நோக்குமுகம் ஆகும். அதாவது தேக அபிமானத்திலிருந்து அன்டர்கிரவுண்டில் இருப்பது பிடித்திருக்கிறதா? யாருக்கு பயிற்சி இருப்பதில்லையோ அவர் கொஞ்ச நேரம் இருந்து விட்டு பின்பு வெளிமுகத்தில் வந்து விடுகிறார். ஏனென்றால், மிக அதிகமான பிறவிகளின் சம்ஸ்காரம் வெளிமுகத் தினுடையதாக இருக்கிறது எனவே உள்நோக்குமுகத்தில் குறைவாக இருக்க முடிகிறது ஆனால் உள்நோக்குமுகமுடையவராக நிரந்தரமாக இருக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: நேரத்திற்குத் தகுந்தாற்போல் தன்னுடைய பாக்கியத்தை சிந்தித்து குஷி மற்றும் பிராப்திகளினால் நிரம்பி இருக்கக்கூடிய நினைவு சொரூபமானவர் ஆகுக!**

நினைவு சொரூப ஆத்மாக்கள் உங்களுடைய நினைவு ரூபத்தை பக்தியில் பக்தர்கள் இன்று வரை உங்களுடைய ஒவ்வொரு காரியத்தின் சிறப்பை வர்ணனை செய்கிறார்கள். ஆன்மீக அனுபவங்களில் தன்னையே மறந்து விடுகிறார்கள் என்றால் தன்னுடைய நடைமுறை வாழ்க்கையில் எவ்வளவு அனுபவம் பிராப்தி செய்திருப்பார்கள். எப்படி நேரமோ, எப்படி காரியமோ அப்படி சொரூபத்தின் நினைவை வெளிப்படும் ரூபத்தில் அனுபவம் மட்டும் செய்தீர்கள் என்றால் மிகுந்த விசித்திரமான குஷி மற்றும் விசித்திர பிராப்திகளின் பொக்கிஷமாக ஆகி விடுவீர்கள் மேலும் உள்ளத்திலிருந்து என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது என்ற இடைவிடாத பாடல் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்.

**சுலோகன்: முதல் நம்பரில் வர வேண்டும் என்றால் பிரம்மாபாபாவின் அடி மேல் அடியெடுத்து வைத்துக் கொண்டு மட்டும் சென்று கொண்டே இருங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.06.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிரந்தர யோக சொரூபமாக ஆவதற்காக தாமரை மலரின் ஆசனம்!

இன்று எந்த நாள்? பட்டியின் தொடக்க நாளாகும். பட்டியின் நாளை எந்த தினமாக கூறுகிறார்கள்? பட்டியின் தொடக்க நாள் என்றால் வாழ்க்கையின் முடிவு எடுப்பதற்கான நாளாகும். பட்டியில் எதற்காக வருகிறார்கள்? நிரந்தரமாக வாழ்க்கையை முடிவு செய்வதற்காக வருகிறார்கள். நீங்கள் அனைவரும் இந்த லட்சியத்தோடு வந்திருக்கிறீர்கள் இல்லையா, ஏனென்றால் பட்டியில் வருவதினால் பாப்தாதா மூலமாக மற்றும் நெருக்கமான குழந்தைகள் மூலமாக ஒரு பரிசு கிடைக்கிறது. அது என்ன? என்ன கிடைக்கிறதோ அதைக் கூறுவதும் சுலபமானது (சிலர் அவரவர்களின் கருத்தைக் கூறினார்கள்). என்னென்ன விஷயங்கள் கூறுனீர்களோ அந்த விஷயங்களின் பிராப்தியின் ஆதாரம் எந்த பரிசு? அது புத்தியின் மாற்றமாகும். ரஜோகுண மற்றும் வியக்த பாவத்தின் புத்தியிலிருந்து மாறி சதோகுண அவ்யக்த பாவத்தின் தெய்வீக புத்தி ஆவது. இந்த தெய்வீக புத்தியின் பிராப்தியினால் அவ்யக்த நிலை மற்றும் யோகயுக்த் (யோக சொரூபம்) நிலையை பிராப்தி செய்ய முடியும். அப்படியானால் பரிசாக என்னவானது? "தெய்வீக சதோகுண புத்தி". புத்தியின் மாற்றத்தினால்தான் வாழ்க்கையின் மாற்றம் ஏற்படுகிறது. அப்படி தெய்வீக புத்தியின் பரிசு விசேஷமாக பட்டியில் பிராப்தி ஆகிறது. இந்த பரிசை உபயோகிப்பது மற்றும் நிரந்தரமாக தன்னிடம் நிலைத்திருக்க வைப்பது என்பது அவரவர்களின் கையில் உள்ளது ஆனால் பரிசு அனைவருக்கும் கிடைக்கிறது. யார் யார் பட்டியில் வந்திருக்கிறார்களோ அவர்கள் தெய்வீக சதோகுண புத்தியின் பரிசின் மூலமாக தன்னை மிக சுலபமாக மற்றும் விரைவாக மாற்றத்தில் கொண்டு வர முடியும். அப்படி இன்றைய நாள் வாழ்க்கையை மாற்றம் செய்வதற்கான நாளாகும். எனவே இன்றைய நாளில் பரிசாக என்ன கிடைக்கிறதோ அதை தாரணை செய்து கொண்டே இருக்க வேண்டும். ஞானத்தையோ கேட்டுக்

கொண்டேதான் இருக்கிறீர்கள், ஆனால் பட்டியில் என்ன செய்வதற்காக வருகிறீர்கள். ஞான சொரூபமாக ஆவதற்காக வருகிறீர்கள் இல்லையா? யோகாவின் ஞானம் மற்றும் யோகாவின் பயிற்சியையும் செய்தே வந்திருக்கிறீர்கள், ஆனால் பட்டியில் எப்பொழுதும் யோக சொரூபமானவராக இருப்பதற்கான பயிற்சியை உறுதி செய்வதற்காக வருகிறீர்கள். நிரந்தரமாக யோக சொரூபமானவர் ஆவதற்காக எந்தவொரு சுலபமான வழியை பட்டி மூலமாக பிராப்தி செய்ய வேண்டும்? ஹடயோகிகள் எப்பொழுது தபஸ்யா செய்கிறார்களோ அந்த நேரம் ஆசனத்தில் அமருகிறார்கள். விதவிதமான ஆசனங்கள் இருக்கின்றன. அப்படி நீங்கள் எப்பொழுதும் யோக சொரூபமானவராக ஆவதற்காக எந்த ஆசனம் இருக்கிறது? நிரந்தரமாக யோக சொரூப நிலை சகஜமாக இருப்பதற்காக பாப்தாதா எளிதான ஆசனத்தைக் கூறுகிறார். அது தாமரை மலரின் ஆசனம். கமல ஆசனம் (தாமரை ஆசனம்) என்று கூறுகிறீர்கள் இல்லையா? தேவதைகளின் படங்களை உருவாக்கும் பொழுது அவர்களை எந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்களாக அல்லது நின்றிருப்பவர்களாக காண்பிக்கிறார்கள்? தாமரையின் மேல். எனவே காரியம் செய்து கொண்டிருந்தாலும் நிரந்தரமாக சகஜமாக யோக சொரூபமானவர் ஆவதற்காக எப்பொழுதும் கமல ஆசனம் அதாவது தன்னுடைய மனநிலையை தாமரை மலருக்கு சமமாக வைத்தீர்கள் என்றால் நிரந்தர யோக சொரூபமானவர் ஆகி விடுவீர்கள் ஆனால் தாமரை மலராகி இந்த ஆசனத்தில் இந்த நிலையில் இருப்பதற்காக என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்? தன்னை லேசாக ஆக்க வேண்டியதாக இருக்கும். லேசாகவும் மற்றும் பிரகாச சொரூபமாகவும் இருக்க வேண்டும். தாமரை மலர் எவ்வளவு ஞானம் நிறைந்தது. தாமரை மலரைப் பார்த்து ஞானத்தின் நினைவு வருகிறது இல்லையா. அப்படி கமல ஆசனத்தில் அமர்ந்திருப்பதினால் எப்பொழுதும் யோக சொரூபமானவராக ஆக முடியும். ஆசனத்தை ஒருபொழுதும் விடாதீர்கள். இந்த தாமரை மலருக்குச் சமமான நிலையின் ஆசனத்தை எப்பொழுதும் நிலைத்திருக்க வைப்பது என்றால் இதன் மேல் எப்பொழுதும் நிலைத்திருப்பது ஆகும். அப்பொழுது எதிர்காலத்திலும் இராஜ சிம்மாசனம் அதே அளவு காலம் நிலைத்திருக்கும். ஒருவேளை இந்த ஆசனத்தில் அமர முடியவில்லை அதாவது இந்த நிலையில் நிலைத்திருக்க முடிய வில்லை என்றால் சிம்மாசனத்தையும் அடைய

முடியாது. எனவே இராஜ சிம்மாசனத்தை அடைவதற்காக தாமரை மலரில் நிலைத்திருப்பதற்கான பயிற்சியை செய்ய வேண்டியதாக இருக்கும். பட்டியில் நீங்கள் தன்னை அனைத்து விதமான பந்தனத்திலிருந்து விடுவித்து லேசாக ஆவதற்காக மற்றும் தாமரை மலரின் நிலையில் நிலைத்திருப்பதற்கான ஆசனத்தில் அமருவதற்கான பயிற்சியைக் கற்றுக்கொள்வதற்காக வந்திருக்கிறீர்கள். எனவே என்னென்ன சுமை இருக்கிறதோ அந்த அனைத்து விதமான சுமையை பட்டியில் அழித்து விட்டு செல்லுங்கள். மனதின் எண்ணங்களின் சுமையாக இருந்தாலும், சம்ஸ்காரங்களின் சுமையாக இருந்தாலும், உலகின் ஏதாவது அழியக்கூடிய பொருட்களின் கவர்ச்சி இருப்பதற்கான சுமையாக இருந்தாலும், குடும்ப உறவினர்களின் பாசத்தின் சுமையாக இருந்தாலும் ஆனால் அனைத்து விதமான சுமை என்று சொல்லுங்கள் அல்லது பந்தனம் என்று சொல்லுங்கள். அவற்றை அழிப்பதற்காக பட்டியில் வந்திருக்கிறீர்கள். இப்பொழுது தன்னுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக இந்த பட்டி பொன்னான வாய்ப்பாகும். இந்த வாய்ப்பில் யார் எவ்வளவு வாய்ப்பை எடுத்துக் கொள்கிறார்களோ அவ்வளவே நிரந்தரமாக தன்னுடைய வாழ்க்கையை முன்னேறச் செய்ய முடியும். எந்த லட்சியத்தை வைத்துக் கொண்டு பட்டியில் வந்திருக்கிறீர்கள்? சம்ஸ்காரங்களை மாற்றத்தில் கொண்டு வந்து பின்பு என்ன ஆவதற்கான லட்சியத்தை வைத்திருக்கிறீர்கள்? இந்த குரூப் விசேஷமாக எந்த விஷயத்தில் அனைத்து குரூப்களையும் விட நல்லது என்று தெரியுமா? இந்த குரூப்பில் ஒரு மிக நல்ல விசேஷம் இருக்கிறது. தங்கத்தில் எப்பொழுது கலப்படம் சேர்க்கப்படுகிறது என்றால் அதன் பிறகு தங்கத்தை மோல்ட் செய்ய (வளைக்க) முடியாது. சுத்தமான தங்கமாக இருந்தால் அதை வளைக்க முடியும். இது உண்மையான தங்கம் இதில் எந்த கலப்படமும் இல்லை என்று அந்த மாதிரி புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய விசேஷங்களை தெரிந்திருக்கிறீர்களா? இந்த குரூப்பைப் பார்த்து என்ன உணர்வு ஏற்படுகிறது என்றால் எப்பொழுது புது மரம் நடப்படுகிறது என்றால் முதலில் மிக மென்மையான அழகிய சிறு சிறு இலைகள் வெளிவரும் அது அனைவருக்கும் பிடித்தமானதாக இருக்கும். அப்படி இந்த குரூப்பும் புது இலைதான் ஆனால் மென்மையானது. மென்மை மற்றும் கடினமான பொருட்கள் இருக்கின்றன இல்லையா. மென்மை என்றால் சம்ஸ்காரங்கள் என்ற எலும்புகள் அந்த அளவு மாற்ற முடியாத மாதிரி

கடினமானவை அல்ல. சிறு குழந்தைகளின் எலும்புகள் முதலில் மென்மையாக இருக்கும் பின்பு பெரியவர்களாக வளர வளர உறுதியானவைகளாக ஆகிக் கொண்டே இருக்கும். இந்த குரூப் கூட மென்மையான சம்ஸ்காரங்கள் உடையவர்கள். இந்த சம்ஸ்காரங்களை மாற்றுவது சுலபமாகி விடும். கடினமான சம்ஸ்காரம் உடையவர்களோ இல்லை இல்லையா.

தாதி அவர்கள் இரண்டு நாட்கள் சென்னைக்கு சேவைக்காக செல்வதற்கு பாப்தாதாவிடம் விடைபெற்றுக் கொண்டிருக்கிறார். யார் உலகின் ராஜாவாக ஆகுபவரோ அவர்களுடைய விசேஷமே அனைத்து ஆத்மாக்களையும் திருப்தியாக வைத்திருப்பது. மகாரதிகளின் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானம் இருக்கிறது (சீதா மாதாவும் விடை பெற்றுக் கொண்டிருக்கிறார்). தன்னை சக்திசாலியான ஆத்மா என்று புரிந்து இந்த உடலை பார்க்கிறீர்களா? சாட்சி நிலையில் நிலைத்திருப்பதினால் சக்தி கிடைக்கிறது. எப்படி யாராவது பலகீனமாக இருக்கிறார் என்றால் அவரில் சக்தி நிரப்புவதற்காக குளுக்கோஸ் ஏற்றுவார்கள். அதே போல் தன்னை உடலிலிருந்து விலகிய அசரீரி ஆத்மா என்று புரிந்து கொள்கிறீர்கள் என்றால் இந்த சாட்சியாக இருக்கும் நிலை சக்தி நிரப்பும் காரியம் செய்கிறது. மேலும் எவ்வளவு நேரம் சாட்சி நிலை இருக்கிறதோ அவ்வளவே துணைவன் தந்தையின் நினைவும் இருக்கும் அதாவது உடன் துணையாக இருக்கிறார். அப்படி துணையும் இருக்கிறது மற்றும் சாட்சியும் இருக்கிறது. ஒன்று சாட்சி நிலையின் சக்தி இன்னொன்று தந்தையை துணைவனாக ஆக்கியதின் குஷி என்ற டானிக். அப்படியானால் என்ன ஆகி விடுவீர்கள் என்று சொல்லுங்கள். நோயற்றவராக. சக்தி ரூபம் விலகியிருப்பது மற்றும் பிரியமானது. இந்த நேரம் அந்த மாதிரி விலகிய மற்றும் பிரியமான நிலையில் நிலைத்திருக்கிறீர்களா? இந்த நிலை எப்படி இருக்கிறது என்றால் கிருமிகளை அழிப்பதற்காக டாக்டர்கள் மின்சாரத்தின் கதிர்களை உடலில் பாய்ச்சுவார்கள் அந்த மாதிரி இந்த நிலை மிகவும் சக்திசாலியானது. இந்த நிலையும் ஒரு நொடியில் பாவங்கள் என்ற அனேக கிருமிகளை அழிக்கும் அளவிற்கு சக்திசாலியானது. பாவங்கள் அழிந்து விட்டது என்றால் தன்னை லேசாகவும் மற்றும் சக்திசாலியாகவும் அனுபவம் செய்வார்கள். எப்பொழுதும் லௌகீக குடும்ப வீட்டையும் சேவையின் இடம் என்று நினைக்க வேண்டும். தன்னை பாப்தாதாவின்

மிகப்பிரியமானவர் என்று நினைக்கிறீர்கள். ஏன்? மிகப்பிரியமானவராக ஆவதற்காக அப்படி என்ன விசேஷம் இருக்கிறது? ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை, அப்படி ஒருவரின் நினைவிலேயே மூழ்கியிருப்பவர் தந்தைக்கு மிகப் பிரியமானவர். புரிந்ததா. நல்லது.

**வரதானம்: உள்நோக்குமுகமாக இருப்பதின் பயிற்சி மூலமாக ஆன்மீக பாஷையைப் புரிந்து கொள்ளக்கூடிய எப்பொழுதும் வெற்றி நிரம்பியவர் ஆகுக!**

எவ்வளவிற்கு எவ்வளவு குழந்தைகள் நீங்கள் உள்நோக்குமுகமான இனிமையான அமைதி சொரூபத்தில் நிலைத்துக் கொண்டே இருப்பீர்களோ அவ்வளவு கண்களின் பாஷை, பாவனையின் பாஷை மற்றும் எண்ணத்தின் பாஷையை சுலபமாக புரிந்து கொண்டே இருப்பீர்கள். இந்த மூன்று விதமான பாஷை ஆன்மீக யோகி வாழ்க்கையின் பாஷை ஆகும். இந்த ஆன்மீக பாஷைகள் மிகவும் சக்திசாலியானவை. நேரத்திற்கு தகுந்தாற்போல் இந்த மூன்று பாஷைகள் மூலமாகத்தான் சுலபமாக வெற்றி கிடைக்கும் எனவே இப்பொழுது ஆன்மீக பாஷையின் பயிற்சி உடையவராக ஆகுங்கள்.

**சுலோகன்: தந்தை உங்களை தன்னுடைய கண் இமைகளில் அமர வைத்து உடன் அழைத்துச் செல்லும் அளவிற்கு நீங்கள் அவ்வளவு லேசாகி விடுங்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 08.06.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வாழ்க்கைக்கு மூன்று விஷயங்கள் அவசியமானது -குராக் (சக்தி அளிக்கும் உணவு), குஷி மற்றும் கஜானா (செல்வம்)!

வாழ்க்கையில் முக்கியமாக மூன்று விஷயங்களின் அவசியம் இருக்கிறது. அவை யாவை? லௌகீக வாழ்க்கையிலும் அலௌகீக வாழ்க்கையிலும் மூன்று விஷயங்களின் அவசியம் இருக்கிறது, அவை யாவை? ஒன்று குராக், (சத்தான உணவு) இரண்டாவது குஷி மற்றும் மூன்றாவது கஜானா (செல்வம்). இந்த மூன்று விஷயங்களும் அவசியமானவை. கஜானா இல்லாமல் எதுவும் நடப்பதில்லை. குஷி இல்லாவிட்டாலும் வாழ்க்கை இல்லை. மேலும் குராக்கும் (சத்தான உணவு) அவசியமானது. அப்படி இந்த மூன்றுமே இங்கேயும் அவசியமாக இருக்கின்றன. குராக் (சத்தான உணவு) என்று எதைக் கூறுவது? குஷியோ பிராப்தியினுடையது ஆனது, மற்றபடி குராக் (சத்தான உணவு) எது? கஜானா எது? ஞானத்தின் கஜானா, குராக் என்பது நினைவின் மூலமாக சக்தி நிரம்புகிறது அதுதான் வாழ்க்கைக்குத் தேவையான சக்தி குராக் ஆகும். மூன்று பிராப்திகளுமே ஆகி விட்டனவா அல்லது ஆகிக் கொண்டிருக் கின்றனவா? கஜானாவும் முழுமையாக கிடைத்து விட்டது. குராக்கும் கிடைத்து விட்டது. குஷியோ இருக்கவே இருக்கிறது. அளவில்லா கஜானா கிடைத்திருக்கிறது இல்லையா? நல்லது. அந்த அளவில்லா கஜானாவை மிக சுலபமாக ஒருவேளை என்னென்ன கிடைத்திருக்கிறது என்று எண்ணி யாருக்காவது கூறினீர்கள் என்றால் எந்த முறையில் சொல்ல முடியும். யாருக்காவது வர்ணனை செய்து கூறினீர்கள் என்றால் முழு கஜானாவும் வந்து விடும் அளவிற்கு சுலபமான முறையில் சொல்லுங்கள். கடலை சிறிய பாத்திரத்தில் அடக்கிக் காண்பியுங்கள். கஜானாவின் வர்ணனையை இவ்வளவு

கஜானா என்னிடம் இருக்கிறது என்று அவசியம் ஒன்று. இரண்டு, மூன்று என்று எண்ணி இவ்வளவு பொக்கிஷம் என்னிடம் இருக்கிறது என்று கூறுவீர்கள் இல்லையா? இங்கேயும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்திற்குள்ளேயே அனைத்து கஜானாவையும் எண்ணி கூற முடியும். ஒன்றில் மொத்தமாக விஷயங்கள் வந்து விடுகின்றன. ஒரு தந்தை, ஒரே ஞானம். அப்படி ஒன்றின் மட்டும் வர்ணனை செய்கிறீர்கள் என்றால் எத்தனை பாய்ன்ட்ஸ் (விஷயங்கள்) வந்து விடும். இரண்டின் வர்ணனை செய்தீர்கள் என்றால் இரண்டிலு கூட எத்தனை கரு க்கள் இருக்கின்றன. மூன்றின் வர்ணனை செய்தீர்கள் என்றால் கூட எத்தனை பாய்ன்ட்ஸ் இருக்கின்றன. அப்படி ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து இதிலேயே அனைத்து ஞானத்தையும் வர்ணனை செய்ய முடியும். எப்படி கஜானாவை விரல்களினால் எண்ணுகிறார்கள் இல்லையா அதே போல் நீங்களும் ஞான கஜானாவை இந்த ஐந்து எண்ணிக்கையில் வர்ணனை செய்து சொல்ல முடியும். இதில் வகுப்பு நடத்த வேண்டும். பின்பு ஐந்திற்குள்ளேயே அனைத்து பாய்ன்ட்டுகளும் வந்து விடுகின்றன என்று பார்ப்பீர்கள். அந்த மாதிரி சிந்தனை செய்ய வேண்டும் அதனால் சுலபமாகவும் ஆகி விட வேண்டும், மேலும் அதே ஞானம் ரமணீகரமாகவும் ஆகி விட வேண்டும். ஐந்தில் அனைத்து ஞானத்தை வர்ணனை செய்து சொல்லுங்கள். கஜானாக்களையும் வர்ணனை செய்து கூறுவதற்காக சுலபமான வழி இதுதான். சிறு குழந்தைகளுக்குக் கூட ஒன்று, இரண்டு, மூன்று என்றுதான் கற்றுக் கொடுக்கிறார்கள் இல்லையா? அப்படி இந்த ஐந்திலுமேயே அனைத்து கஜானாக்களின் வர்ணனை இருக்கட்டும். மேலும் எத்தனை தடவை கஜானாக்களை வர்ணனை செய்கிறீர்கள் மற்றும் சிந்தனையில் கொண்டு வருகிறீர்கள் என்றால் அவ்வளவு குஷி அவசியம் இருக்கும். மேலும் கஜானாக்களை சிந்தனை செய்வதினால் மூழ்கிய நிலை தானாகவே ஏற்பட்டு விடும். குஷியும் கிடைத்து விடுகிறது, குராக்கும் கிடைத்து விடுகிறது மற்றும் கஜானாக்களின் நினைவும் வந்து விடுகிறது. மூன்று விஷயங்களும் நினைவில் இருக்கின்றன. இந்த வாழ்க்கையை உயர்ந்த வாழ்க்கை. என்று கூறப்படுகிறது. நினைவு யாத்திரையில் இருப்பதினால் ஏதாவது அதிசயம் ஏற்படுகிறதா? (சக்திகளின் பிராப்தி ஏற்படுகிறது). சக்திகளின் பிராப்தியை அதிசயம் என்று கூறலாமா? எப்படி வெளியுலக மனிதர்கள் சில பயிற்சிகள் செய்கிறார்கள் என்றால் அதில் ரித்தி ஸித்தீன் அதிசயம் வருகிறது. இந்த பிராப்தியை அதிசயம் என்று கூறலாமா? எந்த சக்தியின்

ஆதாரத்தினால் நீங்கள் காரியம் செய்கிறீர்கள் அதை அதிசயம் என்று கூறலாமா? (அதிசயம் என்று கூற முடியாது). அதிசயம் என்று புரிந்து உபயோகத்தில் கொண்டு வருவதில்லை ஆனால் காரியம் என்று புரிந்து சக்தியை உபயோகத்தில் கொண்டு வருகிறீர்கள். காரியம் செய்வது என்பதோ கடமை ஆகும். இந்த காரணத்தினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இங்கு அதிசயத்திற்கான விஷயம் இல்லை. இதை ஸ்ரீமத்தினுடைய நடைமுறை காரியம் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்கள். அந்த மனிதர்களிடம் அதிசயம் இருக்கிறது. உங்களுடைய புத்தியில் ஸ்ரீமத் வரும். அப்படி ஸ்ரீமத் மற்றும் அதிசயத்தில் வித்தியாசம் இருக்கிறது. உங்களுக்கு சக்திகளின் பிராப்தி ஏற்பட்டால் நினைவில் வரும். ஸ்ரீமத் மூலமாக மற்றும் இந்த வழிப்படி நடந்து கொண்டதால் இந்த நிலை பிராப்தி ஆகி இருக்கிறது. அதிசயம் என்றில்லை ஆனால் ஸ்ரீமத் என்று புரிந்து கொள்வீர்கள். அதிசயம் என்று புரிந்து சக்திகளை உபயோகித்தில் கொண்டு வரமாட்டார்கள். காரியம் என்று புரிந்து சக்திகளை உபயோகத்தில் கொண்டு வருவார்கள். சக்திகள் அவசியம் வரும். வாய் மூலம் பேசுதவதற்கும் அவசியம் இருக்காது எண்ணத்தினால் காரியத்தை நிரூபித்து விடுவார்கள். எப்படி வாய் மூலமாக காரியத்தை நிறைவேற்றுவதற்கான பயிற்சியில் கூட முதலில் நீங்கள் அதிகமாக பேச வேண்டியது இருந்தது. அப்பொழுதுதான் ஸித்திபிராப்தி ஆகியது. இப்பொழுது குறைவாக பேசுவதினால் கூட காரியம் நடக்கிறது. எப்படி இந்த வித்தியாசம் இருக்கிறது. பிறகு இந்த பயிற்சி ஏற்பட்டு விடும். உங்களுடைய எண்ணம் காரியத்தை நிறைவேற்றும். எண்ணத்தினால் யாரையும் அழைக்க முடியும். யாருக்காவது எண்ணத்தினால் காரியத்திற்கான பிரேரணைகளைக் கொடுப்பீர்கள். இதுவும் சக்திகள்தான் ஆனால் அவற்றை காரியம் என்று புரிந்து உபயோகப்படுத்த வேண்டும். இந்த பிராப்தி ஸ்ரீமத்தினால் ஏற்பட்டது. இது எப்படி பொத்தானை அழுத்துவதினால் முழு காட்சிகளும் டெலிவிஷனில் வருகிறது. அதே போல் நீங்கள் எண்ணத்தை இங்கு உருவாக்குவீர்கள். அங்கு அவருடைய புத்தியில் தெளிவான படம் வரையப்பட்டு விடும். அந்த மாதிரி இணைப்பு இருக்கும். இந்த அனைத்து சக்திகளின் பிராப்தி ஏற்படும். இந்த பிராப்திக்காக புத்தியில் மற்ற அனைத்து விஷயங்களும் முடிந்து விடட்டும் மேலும் ஸ்ரீமத்தின் கட்டளை என்ன கிடைத்திருக்கிறதோ அது மட்டும் நடக்கட்டும் மற்ற எதுவும் கலந்து விட வேண்டாம். வீணான எண்ணம் ஸ்ரீமத் கிடையாது. இது தன்னுடைய

மனம் சொல்லும் வழி ஆகும். அப்படி எப்பொழுது புத்தியில் ஸ்ரீமத்தை தவிர வேறு எதுவும் கலக்கவில்லையோ அப்பொழுதுதான் சக்தி வரும். அருகில் வந்து கொண்டிருக்கிறீர்கள். சக்திகளுக்குத்தான் மஹிமை அதிகம். காரியத்தின் சம்மந்தத்தில் சக்திகளின் மஹிமை அதிகம். ஏனென்றால் சாகாரத்தில் கடைசி காரியத்தின் முடிவு சக்திகள் மூலமாக இருக்கும். எனவே காரியத்தின் நினைவு மற்றும் நினைவுச்சின்னம் கூட சக்திகளுக்கு அதிகமாக இருக்கிறது. நாளாக நாளாக எதிர்காலத்தில் தேவதைகள் சொரூபத்தின் பூஜை மற்றும் நினைவுச்சின்னம் குறைந்து கொண்டே இருக்கும். சக்திகளின் பூஜை, மஹிமை அதிகரித்துக் கொண்டே இருக்கும். மஹிமை ஏற்பட்டுக் கொண்டே பிரத்யக்ஷம் ஆகி விடுவீர்கள். நல்லது.

(நிர்மல் சாந்தா தாதி பாப்தாதாவின் எதிரில் அமர்ந்திருக்கிறார்). கல்கத்தாவில் சேவையின் சாதனத்தையோ ஸ்தாபனை செய்தாகி விட்டது ஆனால் எப்படி சேவையின் சாதனத்தின் ஸ்தாபனை செய்தீர்களோ அப்படியே பாலனையின் ரூபம் இப்பொழுது விஸ்தாரத்தை அடைய வேண்டும். கல்கத்தாவின் மியூசியம் மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் எப்படி சாந்தியின் வரதானம் பிராப்தி ஆக முடியும் என்று பார்க்க வேண்டும் ஏனென்றால் கல்கத்தாவில் அசாந்தி அதிகமாக இருக்கிறது. எனவே அந்த மாதிரி அனைத்து பக்கமும் செய்தி பரவ வேண்டும் இந்த இடம் மூலமாக அமைதி சகஜமாக கிடைக்க முடியும் என்று அரசாங்கம் வரை செய்தி செல்ல வேண்டும். அரசாங்கம் மூலமாக சாந்தி தளத்தின் ரூபத்தில் வாய்ப்பு கிடைக்க முடியும். எப்படி சிறைச்சாலை ஆகியவற்றில் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக அவர்களே முன் வந்து கேட்கிறார்கள். ஏனென்றால் இது பாவ ஆத்மாக்களை புண்ணிய ஆத்மாவாக ஆக்குவதற்கான சாதனம் ஆகும். எனவேதான் அழைப்பு கொடுக்கிறார்கள். அதே போல் எங்காவது அமைதியின்மை இருக்கிறது என்றால் இந்த சக்தி தளத்தை சாந்தி தளம் என்று புரிந்து கொள்வார்கள். அதே போல் அரசாங்கம் மூலமாக வாய்ப்பு கொடுப்பார்கள் அப்பொழுதுதான் மஹிமை ஏற்படும். அந்த மாதிரி நாலா புறமும் செய்தி பரவுகின்ற மாதிரி ஏதாவது திட்டத்தை உருவாக்குங்கள். அமைதியின்மையின் நடுவில் இந்த அமைதி பாதுகாப்பிற்கான சாதனம் ஆகும். அப்படி நீங்கள் பிரஸித்திபெற்று விடுவீர்கள். எப்படி பட்டியின் நிகழ்ச்சியின் மஹிமை இருக்கிறது. நெருப்பு எரிந்து

கொண்டிருந்தபோதும் அந்த இடம் பாதுகாப்பிற்கான சாதனமாக இருந்தது. நாலா புறமும் நெருப்பு இருக்கும் ஆனால் இந்த ஒரே ஒரு இடம்தான் அமைதிக்கானது. அந்த மாதிரி அனுபவம் செய்வார்கள். இந்த இடத்திலிருந்துதான் நமக்கு பாதுகாப்பு மற்றும் அமைதி கிடைக்க முடியும். இந்த பாலனையின் காரியத்தை அதிகரியுங்கள். ஏதாவது ஒரு இடத்தை விசேஷமாக யோக அப்பியாசம் செய்வதற்காக உருவாக்குங்கள். அப்பொழுதுதான் இதைச் செய்ய முடியும். அந்த இடத்தில் சென்ற உடனேயே நாம் எங்கு வந்து விட்டோம் என்று தெரியவில்லையே என்று அனுபவம் செய்யட்டும். இடம் கூட மனநிலையை நன்றாக ஆக்குகிறது. மதுபன்னின் இடம்தான் மனநிலையை நன்றாக ஆக்குகிறது இல்லையா! எனவே அந்த மாதிரி ஏதாவது ஒரு இடத்தை உருவாக்குங்கள். அந்த இடத்திற்கு யாராவது பிரச்சனைகளினால் துக்கமான ஆத்மாவாக இருந்தாலும், கவலையில் மூழ்கியிருக்கும் ஆத்மாவாக இருந்தாலும் அவர் அந்த இடத்திற்கு வந்தவுடனேயே நான் எங்கு வந்து விட்டேன் என்ற உணர்வு ஏற்படட்டும். அந்த மாதிரி திட்டத்தை உருவாக்குங்கள். தன்னை வெற்றிமூர்த்தி என்று நினைக்கிறீர்களா? வெற்றிமூர்த்தி ஆவதற்காக முக்கியமாக எந்த குணத்தை தாரணை செய்வதினால் வெற்றிமூர்த்தியாக ஆகி விடுவீர்கள்? வெற்றிமூர்த்தி ஆவதற்காக முக்கியமாக சகிப்புத்தன்மை தேவையாக இருக்கிறது. சகிப்புத்தன்மை மற்றும் சரளத்தன்மை எந்தவொரு காரியத்தையும் வெற்றியானதாக ஆக்கி விடும். எப்படி யாராவது பொறுமையான மனிதன் யோசித்துப் புரிந்து காரியம் செய்கிறார் என்றால் வெற்றி கிடைக்கிறது. அதே போல் சகித்துக் கொள்பவராக இருப்பவர் தன்னுடைய சகித்துக் கொள்ளும் சக்தியினாலேயே எப்படிப்பட்ட கடுமையான சம்ஸ்காரம் உள்ளவராக இருந்தாலும் மற்றும் எப்படிப்பட்ட கடினமான காரியமாக இருந்தாலும் அவரை சீதளமாக்கி விடுகிறார் மற்றும் சகஜமாக்கி விடுகிறார். சகித்துக் கொள்ளும் குணம் யாரிடம் இருக்கிறதோ அவர் அவசியம் முதிர்ச்சி அடைந்தவராகவும் இருப்பார். யார் முதிர்ச்சியானவராக இருக்கிறாரோ அவர் ஆழத்தில் செல்பவராகவும் இருப்பார். மேலும் யார் ஆழத்தில் செல்பவராக இருப்பாரோ அவர் எந்தவொரு காரியத்திலும் ஒருபொழுதும் பயப்படமாட்டார். ஆழத்தில் சென்று வெற்றியைப் பிராப்தி செய்வார். சகிப்புத்தன்மை உள்ளவர்வெளிமுகமான வைப்ரேஷன்களை (எண்ண அதிர்வலைகளை) மட்டுமின்றி, மனதில் உற்பத்தியாகும்

எண்ணங்களை பார்த்துக் கூட பயப்படமாட்டார். தன்னுடைய சகிப்புத்தன்மையினால் எதிர்கொள்வார் மற்றும் சகித்துக் கொள்ளும் குணம் உடையவரின் முகத்தில் என்ன தென்படும்? யாரிடம் சகித்துக் கொள்ளும் குணம் இருக்கிறதோ அவருடைய முகத்தில் இருந்து எப்பொழுதும்திருப்தி தென்படும். அவருடைய நடவடிக்கைகளில் ஒருபொழுதும் திருப்தியின்மை தென்படாது. அப்படி யார் தானே திருப்தியானவராக இருக்கிறாரோ அவர் மற்றவர்களையும் திருப்தியானவராக ஆக்கி விடுவார். மேலும் காரியங்கள் செய்து கொண்டே அவர் தன்னை பரிஷ்தாவாக அனுபவம் செய்வார். சகிப்புத் தன்மை மிக முக்கிய தாரணை ஆகும். எவ்வளவு சகிப்புத் தன்மை தன்னில் பார்ப்பீர்களோ அவ்வளவு தன் மேலும் திருப்தியாக இருக்கிறேன் மற்றும் மற்றவர்களும் என் மேல் திருப்தியாக இருக்கிறார்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். திருப்தி ஆவது என்றால் வெற்றியை அடைவது. யார் ஏதாவது ஒரு விஷயத்தை சகித்துக் கொள்கிறார் என்றால் சகித்துக் கொள்வது என்பது அதன் ஆழத்தில் செல்வதாகும். எப்படி கடலின் ஆழத்தில் செல்கிறார்கள் என்றால் இரத்தினங்களை எடுத்து வருகிறார்கள். அதே போல் யார் சகித்துக் கொள்பவராக இருப்பார் அவர் ஆழத்தில் செல்வார், அந்த ஆழத்திலிருந்து மிகுந்த சக்திகளின் பிராப்தி ஆகிறது. சகித்துக் கொள்பவர்தான் சிந்தனை சக்தியை அடைய முடியும். சகித்துக் கொள்பவராக இருப்பவர் தனது உள்ளுக்குள்ளேயே தன்னுடைய சிந்தனையிலேயே முழுமையாக நிலையாக ஈடுபட்டிருப்பார் மற்றும் யார் சிந்தனையில் முழுமையாக நிலைத்து இருக்கிறாரோ அவர்தான் மூழ்கியிருப்பார். அப்படி சகிப்புத்தன்மை மிக அவசியமாகும். அவருடைய முகமே குணமூர்த்தி ஆகி விடும். சகிப்புத்தன்மையின் தாரணையில் இவ்வளவு கவனம் வைக்க வேண்டும். சகித்துக் கொள்பவர்தான் நாடகத்தின் கிளையில் அமர முடியும். சகிப்புதன்மையில்லை என்றால் நாடகத்தின் கிளையை பிடிப்பதே கடினமாகி விடும். சகிப்புதன்மை உள்ளவர்தான் சாட்சியாக (பார்வையாளராக) ஆக முடியும். மேலும் டிராமாவின் கிளையைப் பிடிக்க முடியும். இவ்வளவு கவனம் இதன் மேல் இருக்கிறதா? எப்பொழுதும் ஏதாவது குணத்தை எதிரில் பார்த்து அதன் ஆழத்தில் செல்ல வேண்டும். எவ்வளவிற்கு எவ்வளவு ஆழத்தில் செல்வீர்களோ அவ்வளவே குணத்தின் மதிப்பு தெரிய வரும். மேலும் எவ்வளவு எந்த பொருளின் மதிப்பு தெரிய வருகிறதோ அந்த அளவே

ஒவ்வொரு குணத்தையும் கிரகிப்பது, வர்ணனை செய்வது சுலபமாகும் ஆனால் ஒவ்வொரு குணத்தின் ஆழம் எவ்வளவு என்று யார் தெரிந்திருக்கிறார்களோ அவர்தான் இவ்வளவு மதிப்புள்ளவராக ஆகிறார், அவருக்குத்தான் சர்வ குண சம்பன்னம் என்ற மஹிமையும் ஏற்படுகிறது அதாவது குணங்களின் ஆதாரத்தினால்தான் இவ்வளவு மதிப்பு இருக்கிறது. எனவே எந்த குணங்களின் ஆதாரத்தினால் இவ்வளவு மதிப்புள்ளவர்களாக ஆகியிருக்கிறார்கள் என்றால் அந்த ஒவ்வொரு குணத்திற்கும் எவ்வளவு மதிப்பு இருக்கும். அந்த மாதிரி ஆழத்தில் செல்ல வேண்டும் மேலும் எவ்வளவு தனக்கு மதிப்பைப் பற்றி தெரிய வருமோ அவ்வளவே மற்றவருக்கும் அந்த மதிப்போடு கூறுவார். நல்லது. தன்னை மதிப்புள்ளவரின் பட்டியலில் இருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? மதிப்புள்ளவரின் முக்கியமான லட்சணமாக என்ன இருக்கிறது?

எப்படி பாப்தாதாவை திரிமூர்த்தி என்று கூறுகிறார்கள் அதே போல் உங்கள் ஒவ்வொருவரின் ஒரு உருவத்திலிருந்து மூன்று மூர்த்திகளின் சாட்சாத்காரம் ஏற்படுகிறதா? தந்தையோ மூன்று தேவதைகளைப் படைப்பவராக ஆனதின் காரணத்தினால் திரிமூர்த்தி என்று அழைக்கப்படுகிறார் ஆனால் உங்கள் ஒவ்வொருவரின் மூர்த்தியிலிருந்து மூன்று மூர்த்தியின் சாட்சாத்காரம் ஏற்படுகிறதா? அந்த மூன்று மூர்த்திகள் எவை? சக்திகளின் மூலமாக எந்த மூன்று மூர்த்திகளின் சாட்சாத்காரம் ஏற்படுகிறது? உங்கள் மூலமாக இப்பொழுது மூன்று காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அனேக ஆத்மாக்களின் உள்ளே தெய்வீக சம்ஸ்காரங்களின் படைப்பு மற்றும் ஸ்தாபனை செய்வித்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி இந்த ஸ்தாபனை காரியத்தையும் செய்கிறீர்கள் மேலும் அனேக ஆத்மாக் களின் சம்ஸ்காரம் அந்த மாதிரியாக இருக்கிறது அவர்கள் பலமற்றவர்களாக இருக்கிறார்கள். தன்னுடைய சம்ஸ்காரங்களை மாற்ற முடியவில்லை. மற்றும் தன்னுடைய சம்ஸ்காரங்களை சேவையில் ஈடுபடுத்த முடியவில்லை, அவர்களுக்கு உதவி செய்து முன்னேற்றுவதுதான் பாலனை ஆகும். பாலனையில் சிறியவர்களிலிருந்து பெரியவராக ஆக்க வேண்டும். மேலும் அனேக ஆத்மாக்கள் யார் தன்னுடைய சக்தி மூலமாக பழைய சம்ஸ்காரங்களை அழிக்க முடியாதோ அவர்களுடைய உதவியாளராகவும் ஆகி அவர்களுடைய பாவங்களை அழிய

செய்விப்பதில் உதவியாளராக ஆகுகிறீர்கள். மூன்று காரியங்களும் நடந்து கொண்டிருக்கிறது. இந்த மூன்று காரியங்களுக்காக மூன்று மூர்த்திகள் யாவை? எந்த நேரம் ஏதாவது ஆத்மாவில் புதிய தெய்வீக சம்ஸ்காரத்தின் படைப்பை செய்விக்கிறீர்களோ அந்த நேரம் ஞான மூர்த்தியாக ஆகிறீர்கள் மற்றும் எந்த நேரம் பாலனை செய்கிறீர்களோ அந்த நேரம் இரக்கம் மற்றும் அன்பு இந்த இரண்டு மூர்த்தியின் அவசியம் இருக்கிறது. ஒருவேளை இரக்கம் வரவில்லை என்றால் அன்பும் இருக்கவில்லை. அப்படி பாலனையின் நேரத்தில் ஒன்று இரக்க மனம் மற்றும் அன்பு மூர்த்தி, மேலும் எந்த நேரம் யாருடையவாவது பழைய சம்ஸ்காரங்களை அழிக்க வைக்கிறீர்கள் என்றால் அந்த நேரம் சக்தி சொரூபம் மற்றும் அதிகாரம் செலுத்துவதற்குப் பதிலாக அன்பில் இருக்க வேண்டும். எதுவரை அன்பான நிலையில் இருக்கவில்லையோ அதுவரை அவர்களுடைய பாவங்களை அழியச்செய்விக்க முடியாது. எப்படி அஞ்ஞான காலத்தில் ஒருவருடைய தீயவைகளை விடுவிப்பதற்காக அதிகாரத்தன்மையை வைக்கப்படுகிறது. இங்கு அதிகாரத்தன்மை இல்லை ஆனால் அன்பில் நிலைத்திருக்க வேண்டியதாக இருக்கிறது. ஒருவேளை அன்பில் நிலைத்திருக்கவில்லை என்றால் அவர்களுடைய பழைய சம்ஸ்காரங்களை அழியச் செய்விக்க முடியாது. சக்தி ரூபத்தில் விசேஷமாக இந்த அன்பின் தாரணை செய்கிறீர்களா? இந்த குணங்கள் மூலமாக இந்த மூன்று காரியங்களை செய்கிறீர்களா? சிலரிடம் ஒருவேளை அன்பின் குறை இருக்கிறது என்றால் பாலனை செய்ய முடியும் ஆனால் அவருடைய சம்ஸ்காரங்களை அழிக்க முடியாது. அன்பு மற்றும் இரக்கம் மட்டும் இருக்கிறது, விநாசம் செய்விப்பதற்கான காரியம் இல்லை. அன்பு, இரக்கம் இல்லை என்றால் பாலனையின் காரியம் இல்லை. அன்பு அதிகமாக இருக்கிறது, இரக்கம் குறைவாக இருக்கிறது என்றால் பாலனையில் அவ்வளவு உதவியாளராக இல்லை ஆனால் சிலரின் பாவங்களை அழியச் செய்விப்பதில் உதவியாளராக இருக்கிறார்கள் மற்றும் பிறகு ஞானம் நிறைந்தவராக இல்லை என்றால் புதிய சம்ஸ்காரங்களின் படைப்பை செய்விக்க முடியாது. சிலரிடம் சில விசேஷ குணம் இருக்கிறது மற்றும் வேறு சிலரிடம் வேறு சில விசேஷ குணம் இருக்கிறது ஆனால் மூன்றுமே தேவையாக இருக்கிறது. ஒருவேளை மூன்றிலுமேயே நடைமுறையில் சமநிலை இருக்கிறது என்றால் அப்போது வெற்றி வெகு விரைவில் கிடைக்கிறது. இல்லையென்றால் ஏதாவது விஷயத்தின் குறை இருக்கும்

காரணத்தினால் சம்பூர்ண வெற்றி கிடைக்க வேண்டியதில் மற்றும் விரைவாக ஏற்பட வேண்டியதில் கொஞ்சம் கால தாமதம் ஆகும். எனவே மூன்று காரியங் களையும் செய்வதற்காக இந்த முக்கிய குணமூர்த்தி ஆக வேண்டும் அதில் குறை இருக்க வேண்டாம் என்ற இந்த லட்சியத்தை இப்பொழுது வைக்க வேண்டும். பின்பு நேரத்தை அருகில் கொண்டு வருவீர்கள். இந்த சமநிலையை கொண்டு வர வேண்டும். தந்தையிடம் அனைத்து குணங்களின் சமநிலை இருக்கிறது, குழந்தைகளில் இப்பொழுது சிலரில் சில குணம் இருக்கிறது, சிலரில் வேறு சில விசேஷம் இருக்கிறது. வித்தியாசம் இருக்கிறது இல்லையா? நல்லது.

**வரதானம்: உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய நல்ல மற்றும் உயர்ந்த காரியம் செய்பவர் ஆகுக!**

எப்படி வலது கரம் மூலம் எப்பொழுதும் நல்ல மற்ற உயர்ந்த காரியம் செய்கிறார்கள். அப்படி தந்தையின் வலது கரமான குழந்தைகள் நீங்கள் எப்பொழுதும் நல்ல மற்றும் உயர்ந்த காரியம் செய்பவராக ஆகுங்கள், உங்களுடைய ஒவ்வொரு காரியமும் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையை பிரத்யக்ஷம் செய்யக்கூடியதாக இருக்கட்டும். ஏனென்றால் காரியம்தான் எண்ணம் மற்றும் சொல்லை வெளிப்படையான ரூபத்தில் தெளிவாகக் காண்பிக்கக்கூடியது. காரியத்தை அனைவரும் பார்க்க முடியும். காரியம் மூலமாக அனுபவமும் செய்ய முடியும். எனவே ஆன்மீக திருஷ்டி மூலமாகவோ, தன்னுடைய குஷியின் மூலமாகவோ, ஆன்மீகம் நிறைந்த முகம் மூலமாகவோ தந்தையை பிரத்யக்ஷம் செய்யுங்கள். இதுவும் காரியம் செய்வதேதான்.

**சுலோகன்: ஆன்மீகத்தின் அர்த்தம் கண்களில் தூய்மையின் ஜொலிப்பு மற்றும் வாயில் தூய்மையின் புன்சிரிப்பு இருக்கட்டும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.06.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சேவையின் பூமியை தயார் செய்வதற்கான சாதனம் -சர்ச்லைட் (யோக சக்தி நிறைந்த கிரணங்கள்)!

ஒவ்வொருவரின் நெற்றியில் எந்த மூன்று ரேகைகளை (கோடுகளை) பார்த்துக் கொண்டு இருக்கிறோம்? உங்களுக்கு உங்களுடைய ரேகைகள் தென்படுகின்றனவா? எப்படி தந்தையின் நினைவுச்சின்னமான லிங்கத்தில் எப்பொழுதும் மூன்று கோடுகள் அவசியம் காண்பிக்கிறார்கள். அதே போல் ஒவ்வொரு சாலிகிராமத்தின் நெற்றியில் எந்த மூன்று ரேகைகள் தென்படுகின்றன? நெற்றியை எப்பொழுதாவது கண்ணாடியில் பார்த்திருக்கிறீர்களா? எந்த கண்ணாடியில் பார்த்திருக்கிறீர்கள்? ஒவ்வொருவரின் நெற்றியில் ஒன்று ரேகை மற்றும் அடையாளமாக வெற்றியின் அடையாளம் இருக்கிறது. வெற்றியின் அடையாளமாக திரிசூலம் இருக்கிறது. திரிசூலம் மனம், சொல், செயல் மூன்றின் வெற்றியின் அடையாளமாகும். சக்திகளின சிலைகளில் கூட திரிசூலம் காண்பிக்கிறார்கள். அப்படியானால் ஒவ்வொருவரின் நெற்றியில் இந்த வெற்றியின் அடையாளமான திரிசூலம் இருக்கிறதா? திரிசூலத்தின் மேலே இன்னொரு கோடு இருக்கிறது மற்றும் அடையாளம் புள்ளியாகும். மூன்றாவது கோடு திரிசூலத்தின் கீழே மிக நீளமானதாக இருக்கிறது. இது லைன் கிளியர் மற்றும் கேர்ஃபுல் அதாவது பாதை தெளிவாக இருக்கிறது மற்றும் கவனமாக இருப்பதின் அடையாளம் ஆகும். பாதையின் இடையில் எந்தவொரு தடையும் வர வேண்டாம். அப்படி மூன்றாவது அடையாளம் நேர் பாதையில் ஒரே சீராக செல்பவர். மூன்று ரேகைகளையும் ஒவ்வொருவரின் நெற்றியில் மற்றும் அடையாளங்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அனைவருக்கும் ரேகைகள் இருக்கின்றன ஆனால் சிலருடையது தெளிவாக இருக்கிறது மேலும் சிலருடையது, தெளிவாக இருப்பதில்லை. அப்படியானால் நீங்கள் உங்களுடைய ரேகைகளை

பார்த்திருக்கிறீர்களா? திரிசூலம் இருக்கிறது. லைன் கிளியராகவும் இருக்கிறது மற்றும் ஆத்மீக நிலையின் புள்ளியும் இருக்கிறது. பக்தர்கள் கூட நெற்றியில் திலகத்தின் அடையாளம் வைக்கிறார்கள். உங்களுடைய நெற்றியில் திலகம் வைப்பதற்கான அவசியம் இல்லை.

எப்பொழுதும் தன்னுடைய நெற்றியின் இந்த ரேகைகளினால் தன்னுடைய நிலையை தெரிந்து கொள்ள முடியும். மூன்று ரேகைகளுமே பிரகாசமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் சாட்சாத்கார மூர்த்தியாக நீங்கள் ஆக முடியும் மற்றும் தன்னுடைய காரியத்தைவெற்றிபெறச் செய்ய முடியும். நீங்கள் இப்பொழுது சேவைக்காக சென்று கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுதிலிருந்தே அந்த ஆத்மாக்கள் மேல் தன்னுடைய சர்ச்லைட்டை (யோக சக்தி நிறைந்த கிரணங்களை) போட ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பித்து விட்டீர்களா அல்லது அங்கு சென்ற பிறகு ஆரம்பம் செய்வீர்களா? சர்ச்லைட்டின் (கலங்கரை விளக்கத்தின்) வெளிச்சம் வெகு தொலை தூரம் செல்கிறது. அப்படி இங்கிருந்தே சர்ச்லைட் கொடுக்க வேண்டும். இதற்காக ஆத்மாக்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இங்கிருந்தே காரியத்தை தொடங்குவதினால் அங்கு சென்றவுடனேயே வெளிப்படையாக நிரூபணம் தென்படும். சர்ச்லைட் ஆகியே அங்கிங்கு என்று போய் வந்து கொண்டிருக்கிறீர்களா அல்லது எப்பொழுது அமருகிறீர்களோ அப்பொழுதுதான் சர்ச்லைட் கொடுக்கிறீர்களா? தன்னை சர்ச்லைட் என்று புரிந்து நாலா புறத்திலும் வாயுமண்டலத்தை உருவாக்கும் நிரந்தரமான காரியத்தை இப்பொழுதிலிருந்தே செய்ய வேண்டும். அதனால் அங்கு சென்றவுடனேயே வாயுமண்டலத்தின் கவர்ச்சியினால் அருகில் வரக்கூடிய ஆத்மாக்கள் சுலபமாகவே தன்னுடைய பாக்கியத்தை பெற முடிய வேண்டும். ஏனென்றால் இப்பொழுது நேரம் குறைவு மற்றும் வெற்றி ஆயிரம் மடங்கு காண்பிக்க வேண்டும். முந்தைய காலம் வேறாக இருந்தது. நேரம் அதிகமாகவும் வெற்றி குறைவாகவும் இருந்தது ஆனால் இப்பொழுது குறைந்த நேரத்தில் வெற்றி ஆயிரம் மடங்கு இருக்க வேண்டும், அந்த மாதிரி திட்டத்தை உருவாக்க வேண்டும். பிளானுக்கு (திட்டத்திற்கு) முன்பு பிளைன் (தெளிவாக) ஆக வேண்டும். ஒருவேளை தெளிவாக (பிளைன்) ஆகி விட்டீர்கள் என்றால் திட்டம் (பிளான்) நடைமுறையில் சரியாக வந்து விடும். தெளிவாக ஆவதினால்தான் திட்டம் சரியாக நடக்க முடியும். தெளிவாக ஆன பிறகு என்ன திட்டம்

வைக்க வேண்டும் அதனால் எப்பொழுதும் வெற்றி கிடைக்க முடியும்? கேட்டதை மறக்காத அளவிற்கு கொஞ்சமாக சொல்ல வேண்டும். நாம் அனைவரும் ஒரே வழியில் நடப்பவர்கள் என்பதை நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது ஒருவர் சொல்லும் வழியில் நடப்பவர்கள் மற்றும் ஒருங்கிணைந்த எண்ணத்தில் இருப்பவர்கள். இரண்டாவது விஷயம் -வார்த்தைகளில் கூட எப்பொழுதும் ஒருவரின் பெயரையே அடிக்கடி தனக்கும் மேலும் மற்றவர்களுக்கும் நினைவூட்ட வேண்டும். மூன்றாவது விஷயம் நடத்தையில் மற்றும் காரியத்தில் சிக்கனம் இருக்கட்டும். சிக்கனம் பணத்தில் மட்டும் செய்யாதீர்கள், ஆனால் வார்த்தைகளிலும் சிக்கனம் இருக்கட்டும். எண்ணத்திலும் சிக்கனம், நேரத்திலும் சிக்கனம். அப்படி நடந்து கொள்வதிலும் அனைத்து விதமான சிக்கனம் இருக்கட்டும். அப்படி இந்த மூன்றே விஷயங்கள் -ஒரு வழியில் நடப்பது, ஒருவரின் பெயர் உச்சரிப்பவர்கள் மற்றும் சிக்கனமாக இருப்பவர்கள். இந்த மூன்று விஷயங்களையுமே எப்பொழுதும் நினைவில் வைத்து பிறகு அடியெடுத்து வைக்க வேண்டும் மற்றும் எண்ணத்தை வார்த்தைகளில் கொண்டு வர வேண்டும்.

எந்தவொரு கருத்து பரிமாறுதல் செய்தீர்களானாலும் அந்த நேரமே குழந்தையிலிருந்து எஜமானன் என்ற சுலோகனை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். எந்த நேரம் கருத்துக்களை கொடுக்கிறீர்கள் என்றால் எஜமானனாகி கொடுக்க வேண்டும் ஆனால் எந்த நேரம் முடிவு செய்யப்பட்டு விடுகிறதோ அந்த நேரம் குழந்தையாகி விட வேண்டும். எஜமானத்தன்மை மட்டும் வேண்டாம், குழந்தைத்தனம் மட்டும் வேண்டாம். எந்த நேரம் எந்த காரியம் செய்ய வேண்டுமோ அந்த நேரம் அதே நிலை இருக்க வேண்டும். மேலும் எப்பொழுது மற்ற ஆத்மாக்களுக்கு சேவை செய்கிறீர்கள் என்றால் மற்றவர்களின் சேவையின் கூடவே தன்னுடைய சேவையையும் செய்ய வேண்டும் என்ற கவனம் வையுங்கள். ஆத்ம நிலையில் தன்னை நிலைத்திருக்க வைப்பது, இதுவும் தன்னுடைய சேவை ஆகும். தன்னுடைய சேவையும் நடந்து கொண்டிருக்கிறதா? என்று முதலில் சோதனை செய்யுங்கள். தன்னுடைய சேவை நடப்பதில்லை என்றால் மற்றவர்களின் சேவையில் வெற்றி ஏற்படாது. எனவே எப்படி தந்தையின் நினைவு என்றால் தன்னுடைய நினைவு மற்றும் தன்னுடைய நினைவு என்றால் தந்தையின் நினைவு என்று மற்றவர்களுக்குக் கூறுகிறீர்கள்; அதே போல் மற்றவர்களின் சேவை என்றால் தன்னுடைய

சேவை, இதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எப்பொழுது யாராவது சேவைக்காக செல்கிறார் என்றால் சேவையின் கூடவே தன்னுடைய பழைய சம்ஸ்காரங்களின் இறுதிச் சடங்கு செய்கிறார் என்று புரிந்து கொள்ளுங்கள். எவ்வளவு சம்ஸ்காரங்களின் இறுதிச் சடங்கை செய்வீர்களோ அவ்வளவே மரியாதை கிடைக்கும். அனைத்து ஆத்மாக்களும் உங்கள் எதிரில் மனதால் நமஸ்காரம் செய்வார்கள். ஒன்று கைகளால் நமஸ்காரம் செய்வது, இன்னொன்று மனதால் செய்வது. மனதிலேயே குணத்தின் மஹிமை பாடிக்கொண்டே இருக்கட்டும். எப்படி பக்தியும் கூட ஒன்று வெளிப்படையாக இருப்பது, இன்னொன்று மனதளவில் இருப்பது. அப்படி வெளிப்படையாக நமஸ்காரம் செய்வது என்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் மனதால் நமஸ்காரம் செய்வார்கள், இவர்களை உருவாக்குபவர் யார் என்று தந்தையின் குணங்களை மஹிமை பாடுவார்கள். இன்னொன்று யாருக்கு தன்னுடைய உறுதியான சிந்தனைகள் இருக்கின்றதோ அவர்களையும் நீங்கள் கூறிய உயர்ந்த சிந்தனைகளின் எதிரில் தலைகுனிய வைப்பார்கள். அப்படியானால் இதுவும் நமஸ்காரம் செய்வதாக ஆகிறது இல்லையா? மனதால் நமஸ்காரம் செய்ய வேண்டும் என்ற இந்த முயற்சி செய்ய வேண்டும். வெளியளவில் செய்யும் பக்தனாக ஆக்க வேண்டாம். ஆனால் மனதால் நமஸ்காரம் செய்யக்கூடியவராக ஆக்க வேண்டும். அதே பக்தன் மாறி ஞானியாகி விட வேண்டும். எவ்வளவிற்கு எவ்வளவு புத்தியை எப்பொழுதும் சுத்தமாக அதாவது ஒருவரின் நினைவில் அர்ப்பணம் செய்வீர்களோ அவ்வளவே தானே கண்ணாடி ஆகி விடுவீர்கள். கண்ணாடியின் எதிரில் வருவதினால் விரும்பாவிட்டாலும் தன்னுடைய சொரூபம் தென்படுகிறது. இந்த முறையில் எப்பொழுதும் ஒருவரின் நினைவில் புத்தியை அர்ப்பணமாக வைத்தீர்கள் என்றால் நீங்கள் சைத்தன்ய கண்ணாடி ஆகி விடுவீர்கள். இயல்பாகவே சாட்சாத்காரம் ஏற்படும் மாதிரி கண்ணாடி ஆக வேண்டும். ஏதோ ஒரு சர்ச்லைட் (கலங்கரை விளக்கம்) என்று தூரத்திலிருந்தே தெரிய வருகிறது இல்லையா. எங்கிருந்தாலும் எவ்வளவு பெரிய கூட்டத்தில் இருந்தாலும் கூட்டத்தின் நடுவே தூரத்திலிருந்தே தெரிய வந்து விடட்டும். இது சர்ச்லைட் அதாவது பாதை காண்பித்துக் கொண்டே இருக்கட்டும்.

நீங்கள் ஞானம் மற்றும் நினைவில் சக்திசாலியான ஒளிக்கிரணங்கள் மூலமாக பாதை காண்பிக்கக்கூடிய கலங்கரை விளக்கம் ஆவீர்கள்.

மேலும் எப்பொழுது உறுதியான எண்ணத்தை வைத்து செல்கிறார்கள் என்றால் எண்ணத்தின் மூலம் சொரூபமாக ஆகியே விடுவார்கள். நாம் வெற்றி ரத்தினங்கள் என்ற எண்ணம் இருக்கிறது என்றால் சொரூபம் கூட வெற்றியினுடையதாகவே ஆகி விடுகிறார்கள். வார்த்தையும் மற்றும் செயலும் அதே போலவே நடக்கிறது. எண்ணத்தின் ஆதாரத்தினால் காரியத்தில் வெற்றி நிரம்பி இருக்கிறது. வெற்றித் திலகம் சேவைக்குத் தகுதியான ஆத்மாக்களுக்கு இடப்பட்டு இருக்கிறது. சேவை என்றால் வெற்றித் திலகம் இடப்பட்டிருக்கிறது. இந்த சேவைக்கான குரூப் சென்று கொண்டிருக்கிறது இல்லையா. யாருடைய ஒரு விநாடி மற்றும் ஒரு எண்ணம் கூட சேவைக்காக அன்றி வேறு எதற்காகவும் இல்லையோ அவர்தான் சேவைக்குத் தகுதியானவர். அந்த மாதிரி குரூப்தான் இது இல்லையா எப்பொழுது பிரத்யேகமாக சேவைக்காக சென்று கொண்டிருக்கிறீர்கள் என்றால் தன் மேலேயும் பிரத்யேகமாக கவனம் கொடுக்க வேண்டியதாகஇருக்கிறது. இது சாதாரண சேவை இல்லை ஆனால் விசேஷ சேவை ஆகும். சாதாரண சேவை செய்கிறீர்கள் என்றால் சாதாரண நினைவு இருக்கிறது. ஏதாவது விசேஷமான காரியம் செய்ய வேண்டியது இருக்கிறது என்றால் விசேஷமாக நினைவு இருக்கிறது. அப்படி சாதாரண நினைவில் இன்றி சக்திசாலியான நினைவில் இருக்க வேண்டும். எப்பொழுதும் சக்திசாலியான நினைவில் இருப்பதினால் வாயுமண்டலம் சக்திசாலியானதாக ஆகி விடும். சக்திசாலியான வாயுமண்டலம் இருக்கும் காரணத்தினால் எந்தவொரு ஆத்மாவும் இந்த வாயுமண்டலத்திலிருந்து வெளியேற முடியாது. அப்பொழுதுதான் சேவையின் வெற்றி இருக்கும். எப்பொழுதும் ஒருவர் இன்னொருவரின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுத்து ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் சுலபமாக மனதால் நமஸ்காரம் செய்வார்கள். எப்பொழுதும் சரி, சரி என்று சொல்லும் பாடத்தை உறுதிப்படுத்த வேண்டும். எவ்வளவு சரிங்க, சரிங்க என்றுசொல்வீர்களோ அவ்வளவே அனைவரும் ஆஹா, ஆஹா என்று சொல்வார்கள். நீங்கள் உங்களுடைய சக்தி சொரூபத்தின் மற்றும் பாண்டவ சொரூபத்தின் பிரத்யக்ஷதாவை செய்வதற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள். உலகை சுற்றி வந்து ஆத்மாக்களை யக்ஞத்தில் ஸ்வாஹா செய்விப்பதற்காக சென்று கொண்டிருக்கிறீர்கள். நீங்களோ ஸ்வாஹா (அர்ப்பணம்) ஆகியே விட்டீர்கள். முற்றிலும் பிளைன் ஆக வேண்டும். தன்னுடன் சுமையை எடுக்க வேண்டாம். பாண்டவர்கள் ஐந்து பேர், ஆனால் "வழி ஒரே வழி", நாங்கள் அனைவரும் ஒன்று என்று

கூறுகிறார்கள் இல்லையா. ஒரு உதாரணத்தை நிலைத்திருக்க வைப்பதற்காக இது முதல் குரூப் ஆகும். நினைவு சொரூபத்தை ஒருவர் இன்னொருவருக்கு ஒவ்வொரு நேரமும் நினைவூட்டுவதினால் ஒற்றுமை ஏற்பட்டு விடும். ஐந்து பாண்டவர்களின் ஒற்றுமையின் விசேஷமும் இருக்கிறது மற்றும் ஒவ்வொருவரின் அவரவர்களின் விசேஷமும் இருக்கிறது. ஒவ்வொருவரின் அவரவர்களின் விசேஷம் என்ன? எப்படி கதை சொல்கிறார்கள் இல்லையா (வெளிநாட்டில் படம் ஓடியது அதில் நான்கு பேர்கள் ஒரே மாதிரி இருந்தார்கள் மேலும் சொல்லாமலேயே ஒரே காரியத்தை ஒரே மாதிரி செய்து விடுவார்கள்). அப்படி ஒருவர் இன்னொருவரோடு இணைந்து ஒவ்வொரு காரியத்தையும் வெற்றியானதாக ஆக்க வேண்டும். ஒவ்வொருவரும் தன் மேல் ஒரு விசேஷ ட்யூட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தன்னுடைய விசேஷ காரியத்தின் பொறுப்பை மற்றவர்களுக்கு கூறுங்கள். அனைவருடன் குழுவில் இருந்து கொண்டே தன்னுடைய விசேஷத்தின் சகயோகத்தை கொடுப்பதினால் சுலபமாகி விடுகிறது.

ஒவ்வொரு பாண்டவர்களும் என்ன விசேஷத்தை காண்பிப்பீர்கள்? ஆத்மா என்று பார்த்தால் அனைவரும் பாண்டவர்கள் மற்றும் சக்திகளும் கூடத்தான். தன்னுடைய விசேஷத்தைப் பற்றி தெரியுமா? தன்னுடைய ஊக்கம் உற்சாகம் மற்றும் ஒரே சீரான நிலை எப்பொழுதும் இருக்கட்டும். எவ்வளவுதான் யாராவது ஏதாவது விஷயங்கள் மூலமாக உங்களை தோற்கடிக்க முயற்சி செய்தாலும் நீங்கள் எப்பொழுது நடைமுறை அனுபவி மூர்த்திகளாகி அவர்களுக்கு ஆத்மீக திருஷ்டி மற்றும் சக்திசாலியான நிலையில் நிலைத்திருந்து இரண்டு வார்த்தைகள் கூட சக்திசாலியாக சொன்னீர்கள் என்றால் அவர்கள் தன்னை காகிதப்புலி என்று புரிந்து கொள்வார்கள். எப்படி தேவிகளின் எதிரில் அசுரன் பயங்கரமான ரூபத்தில் எதிர்ப்பதற்காக வருகிறான். ஆனால் அவர்களின் (தேவிகளின்) எதிரில் முற்றிலும் மிருகமாகி அதாவது முட்டாள் ஆகி விடுகிறான். எவ்வளவுதான் பெரிய புத்திசாலியாக இருந்தாலும் உங்களுடைய அனுபவிமூர்த்தி மற்றும் ஆத்மீக திருஷ்டியின் எதிரில் முற்றிலுமே தன்னை ஒன்றும் தெரியாதவர் என்று புரிந்து கொள்வார்கள். உங்களுடைய எதிரில் எவ்வளவுதான் ரூபத்தை தாரணை செய்வதற்கு முயற்சி செய்வார்கள், சக்திகளின் கால்களின் கீழே எப்பொழுதும் எருமை மாட்டை காண்பிக்கிறார்கள். ஏன்? எவ்வளவுதான் ஒருவர் தன்னை

புத்திசாலி, அனைத்தும் தெரிந்தவர் என்று புரிந்து கொண்டாலும் எருமை போல் முற்றிலுமே முட்டாள் பிராணி போல் ஆகி விடுகிறார். மந்திர தந்திரம் தெரியும் இல்லையா. அவை அனைத்தும் இங்கிருந்துதான் வெளியானவை. மந்திரம் போடுவது, ரித்தி ஸித்தீம் கூட இங்கிருந்துதான் உருவானது. தன்னுடைய ஆத்மீக திருஷ்டியினால் தன்னுடைய எண்ணங்களையும் நிறைவேறச் செய்ய முடியும். அதுவோ ரித்தி ஸித்திமற்றும் இது விதியினால் சித்தி. வார்த்தைகளின் வித்தியாசம் இருக்கிறது. ரித்தி ஸித்தோ அற்ப காலத்திற்கானது ஆனால் நினைவின் விதியினால் எண்ணங்கள் மற்றும் காரியத்தின் வெற்றி அழியாததாகும். அவர்கள் ரித்தி ஸித்தை உபயோகிக்கிறார்கள் மற்றும் நீங்கள் நினைவின் விதியினால் எண்ணங்கள் மற்றும் காரியங்களின் வெற்றியை பிராப்தி செய்கிறீர்கள். நல்லது.

**வரதானம்: சாட்சியாகி உயர்ந்த நிலை மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கு சக்தி கொடுக்கக் கூடிய தந்தைக்குச் சமமான அவ்யக்த ஃபரிஷ்தா ஆகுக!**

அனைத்து காரியங்களையும் செய்து கொண்டேபோகும்போதும் வரும்போதும் தன்னை நிராகார ஆத்மா மற்றும் அவ்யக்த பரிஷ்தா என்று புரிந்து கொண்டீர்கள் என்றால் எப்பொழுதும் குஷியில் மேலே பறந்து கொண்டே இருப்பீர்கள். ஃபரிஷ்தா என்றால் உயர்ந்த நிலையில் இருப்பவர். இந்த உடல் சம்மந்தப்பட்ட உலகத்தில் என்னதான் நடந்து கொண்டிருந்தாலும் பார்வையாளராகி அனைத்து காட்சிகளையும் பார்த்துக் கொண்டே இருங்கள் மற்றும் சக்தி கொடுத்துக் கொண்டே இருங்கள். ஆசனத்திலிருந்து இறங்கி சக்தி கொடுப்பதில்லை கலப்படமாக இல்லாமல் உயர்ந்த நிலையில் நிலைத்திருந்து உள்உணர்வு மற்றும் திருஷ்டியினால் சகயோகத்தின். நன்மை ஏற்படுவதின் சக்தியை கொடுங்கள். அப்பொழுதுதான் எந்த விதமான சூழ்நிலையில் இருந்தும் பாதுகாப்பாக இருந்து தந்தைக்குச் சமமான அவ்யக்த ஃபரிஷ்தா ஆகுக என்ற வரம் பெறுபவராக ஆவீர்கள்.

**சுலோகன்: நினைவு பலம் மூலமாக துக்கங்களை சுகத்திலும் மற்றும் அசாந்தியை அமைதியிலும் மாற்றம் செய்யுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 11.06.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## மூன்று உலகங்கள், மூன்று காலங்களில் பாப்தாதாவின் அருகில் இருக்க வேண்டும் என்றால் தீய சேர்க்கையிலிருந்து பாதுகாப்பாக இருங்கள்!

இது எந்த மாதிரியான குரூப்? இந்த குரூப்பை அலங்கரித்து என்னவாக ஆக்கியிருக்கிறீர்கள்? நீங்கள் மாறி மேலும் அப்படி ஆகிச் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? அப்படியானால் இவர்களை மாற்றி என்னவாக ஆக்கியிருக்கிறீர்கள்? நாம் என்னவாக ஆகியிருக்கிறோம் என்று எப்பொழுது தன்னுடைய சாட்சாத்காரத்தை செய்வீர்களோ அப்பொழுதுதான் மற்றவர்களையும் ஆக்குவீர்கள். நாம் ஆன்மீக சேவாதாரி ஆகிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று இந்த குரூப் நினைக்கிறதா? அனைவரும் தன்னை சேவாதாரி என்று புரிந்து சேவை ஸ்தானத்திற்கு சென்று கொண்டிருக்கிறீர்களா அல்லது அவரவர்களின் வீட்டிற்கு திரும்பிச் சென்று கொண்டிருக்கிறீர்களா? என்ன நினைத்துக் கொண்டு சென்று கொண்டிருக்கிறீர்கள்? ஒருவேளை தன்னுடைய லௌகீக குடும்பத்திற்கு சென்றீர்கள் என்றால் அதை என்னவென்று புரிந்து கொள்வீர்கள்? அதுவும் சேவை ஸ்தானமா அல்லது சென்டர் மட்டும்தான் சேவை ஸ்தானமா? ஒருவேளை வீட்டையும் சேவை ஸ்தானமாக நினைத்தீர்கள் என்றால் இயல்பாகவே சேவை நடந்து கொண்டே இருக்கும். யார் சேவாதாரியாக இருக்கிறாரோ அவருக்கு ஒவ்வொரு இடத்திலும் சேவை இருக்கிறது. எங்கிருந்தாலும், எங்கே சென்றாலும் சேவாதாரிக்கு ஒவ்வொரு நேரம் மற்றும் ஒவ்வொரு இடத்தில் சேவைதான் தென்படும் மற்றும் சேவையிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பார். வீட்டையும் சேவை ஸ்தானம் என்று புரிந்து நடந்து கொள்வார். புத்தியில் சேவை நினைவு இருப்பதினால் இந்த நினைவின்

சக்தியினால் கர்ம பந்தனம் கூட சுலபமாக மற்றும் விரைவாக முடிவடைந்து விடும். எனவே எப்பொழுது சேவாதாரியாகி சென்று கொண்டிருக்கிறீர்களோ ஒவ்வொரு எண்ணத்தினால் சேவை செய்ய வேண்டும். ஒரு விநாடி மற்றும் ஒரு எண்ணம் கூட சேவையில்லாமல் கடந்து செல்ல முடியாது. இதைத்தான் உண்மையான ஆன்மீக சேவாதாரி என்று கூறுவது. ஆன்மீக சேவாதாரியோ ஆத்மா மூலமாகவும் சேவை செய்ய முடியும். எப்படி கலங்கரை விளக்கம் ஒரு இடத்தில் இருந்து கொண்டே நாலா புறத்திலும் தன்னுடைய ஒளி மூலமாக சேவை செய்கிறது. இதே போல் சேவாதாரியாக யார் இருக்கிறாரோ அவரும் ஒரு இடத்தில் இருந்தபோதிலும் எல்லைக்கப்பாற்பட்ட உலகின் எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் எப்பொழுதுமே இருக்கிறார். அப்படியானால் லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் ஆக ஆகியிருக்கிறீர்களா? இரண்டுமாக ஆகியிருக்கிறீர்களா அல்லது லைட் ஹவுஸாக ஆகியிருக்கிறீர்கள் மற்றும் மைட் ஹவுஸாக (சக்தி கொடுக்கும்) இப்பொழுது ஆக வேண்டுமா? ஞான சொரூபம்தான் லைட் ஹவுஸ் மற்றும் யோக சொரூப நிலை மைட் ஹவுஸ் ஆகும். அப்படி அனைவரும் ஞான சொரூப ஆத்மா, யோக சொரூப ஆத்மாவாகி சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா அல்லது இன்னும் ஏதாவது பாக்கி இருக்கிறதா? முழுமையான அலங்காரம் செய்தீர்களா? பார்க்கப்போனால் குமாரி பருவத்தில் சுத்தமாகவும் மற்றும் தன்னை சரியாக அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்பதும் இருக்கவே இருக்கும். அப்படியானால் இங்கு பட்டியில் கூட முழுமையாக ஞானம், குணங்களின் அலங்காரத்தினால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறீர்களா? அலங்கரிக்கப்பட்டு சென்று கொண்டிருக்கிறீர்களா அல்லது அங்கே சென்ற பிறகு இன்னும் கொஞ்சம் செய்ய வேண்டியதாக இருக்கிறதா? முழுமையான அஸ்திர சஸ்திரங்களினால் (ஆயுதங்கள்) தயாராகி யுத்தத்தின் மைதானத்தில் சென்று கொண்டிருக்கிறீர்களா? யார் அஸ்திர சஸ்திரங்கள் உடையவர்களாக இருக்கிறார்களோ அவர் எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருப்பார். ஆயுதங்கள் எதிரியை எதிரில் வர விடாது. அப்படியானால் எதிரிகள் தூரத்திலிருந்தே பார்த்து ஓடி விடும் மாதிரி ஆயுதம் ஏந்தியவராக ஆகியிருக்கிறீர்களா? அனைவரும் அப்படி ஆகியிருக்கிறீர்களா? மதுபன் வரதானபூமியின் பாதிப்பில் வந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்களா அல்லது அழியாத ஆயுதம் ஏந்தியவராகவும் மற்றும் அலங்கரிக்கப்பட்டவராகவும் தன்னை

ஆக்கியிருக்கிறீர்களா? நாளை கீழே இறங்கி சென்றீர்கள் என்றால் (மதுபன்னிலிருந்து) மனநிலை அதே உயர்ந்ததாக இருக்குமா? எதை தனக்குத் தானே மற்றும் மதுபன்னின் சபையின் நடுவில், ஈஸ்வரிய சபையின் நடுவே என்ன உறுதிமொழி எடுத்திருந்தேனோ அதை எங்கு சென்றாலும் நிலைத்திருக்கச் செய்வேன் என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அந்த மாதிரி அழியாத முத்திரையை ஒவ்வொருவரும் தனக்குத்தானே இட்டுக் கொண்டீர்களா? நிச்சயம் உடையவருக்கு வெற்றி அவசியம் இருக்கிறது. மேலும் தைரியம் வைப்பவர்களுக்கு பாப்தாதா மற்றும் அனைத்து ஈஸ்வரிய பரிவாரத்தின் ஆத்மாக்கள் உதவி செய்பவர்களாக இருக்கிறார்கள். எவ்வளவுதான் யாராவது உங்களுடைய தைரியத்தை அசைப்பதற்கு முயற்சி செய்தாலும் ஆனால் நீங்கள் என்ன உறுதிமொழி எடுத்திருக்கிறீர்களோ அந்த உறுதிமொழியின் சக்தியில் இருந்து கொஞ்சம் கூட கால்கள் அசையக்கூடாது. கால் என்பது எது? எதன் மூலமாக நினைவு யாத்திரை செய்கிறீர்களோ அதுதான். உலகமே உங்களை அசைத்தாலும் ஆனால் நீங்கள் முழு உலகின் ஆத்மாக்களை விட சக்திசாலியானவர்கள். ஒரு பக்கம் முழு உலகமும் இருந்து மற்றொரு பக்கம் நீங்கள் ஒருவர் இருந்தால் கூட உங்களுடைய சக்தி உயர்ந்தது ஏனென்றால் சர்வ சக்திவான் தந்தை உங்களுடைய துணையாக இருக்கிறார். எனவே சிவ சக்திகள் என்ற இந்த மஹிமை இருக்கிறது. எப்பொழுது சிவன் மற்றும் சக்திகள் இருவருமே துணைவர்களாக இருக்கிறார்கள் என்றால் உலகிலுள்ள ஆத்மாக்கள் அவர்களின் எதிரில் என்ன, ஒன்றுமே இல்லை. அனேகர்கள் இருந்தபோதிலும் இருபக்கமும் ஒரே சமமாக இல்லை. அந்த அளவு நிச்சயபுத்தியுடையவராக மற்றும் உறுதிமொழியை பாலனை செய்வதற்கான தைரியம் உடையவராக ஆகிச் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? நடைமுறையில் சோதனை வரும். தேரியின் (பாடத்தின்) பரீட்சையோ சுலபமாக இருக்கும் ஆனால் ஏழு நாள் பாடம் எடுப்பது மற்றும் மியூசியம், கண்காட்சிகளில் புரிய வைப்பது இவைகள் தேரியின் பரீட்சை ஆகும் ஆனால் நடைமுறை பரீட்சையில் யார் பாஸ் ஆகிறாரோ அவர்தான் கௌரவமாகத் தேர்ச்சி பெறுபவராக ஆகிறார். யார் இந்த மாதிரி பாஸ் ஆகிறாரோ அவர்தான் பாப்தாதாவின் அருகில் இருக்கக்கூடிய இரத்தினம் ஆகிறார். அப்படியானால் அருகில் இருப்பதை விரும்பிகிறீர்களா அல்லது தூரத்திலிருந்தே பார்க்க விரும்புகிறீர்களா? கௌரவமாக தேர்ச்சி பெறுவோம் என்று இந்த தைரியத்தையும் வைக்க வேண்டும். இந்த

தைரியத்தை அழியாததாக ஆக்குவதற்காக ஒரு விஷயத்தை எப்பொழுதும் கவனத்தில் வைக்க வேண்டும்.

ஏதாவது தீய சேர்க்கையில் தன்னை கொண்டு வருவதற்கு பதிலாக பாதுகாப்பாகவே இருக்க வேண்டும். அனேக விதமான கவர்ச்சி சோதனை ரூபத்தில் வரும் ஆனால் கவரப்பட்டு விடக்கூடாது. சிரித்த முகத்தோடு சோதனைத்தாள் என்று புரிந்து தேர்ச்சி பெற வேண்டும். தீய சேர்க்கை அனேக விதமாக இருக்கிறது. மாயா எண்ணங்களின் ரூபத்தில் கூட தன்னுடைய பாதிப்பை ஏற்படுத்த முயற்சி செய்கிறது. அப்படி இந்த வீணான எண்ணங்களில் மற்றும் மாயாவின் கவர்ச்சியின் எண்ணங்களில் ஒருபொழுதும் தோல்வி அடையக்கூடாது. மேலும் பிறகு ஸ்தூலமாக உறவினர்களின் சேர்க்கை, அதில் குடும்பத்தின் சம்மந்தம் மட்டும் இருப்பதில்லை ஆனால் கூடவே இன்னும் சில சம்மந்தத்தின் சேர்க்கை இருக்கிறது. நண்பனின் சேர்க்கை கூட சம்மந்தத்தின் சேர்க்கைதான். அப்படி எந்தவொரு உறவினரின் சேர்க்கையில் வர வேண்டாம். சிலருடைய வார்த்தைகளின் தீய சேர்க்கையில் கூட வர வேண்டாம். வார்த்தைகள் மூலமாகவும் தீய சேர்க்கையின் பாதிப்பு ஏற்பட்டு விடுகிறது. இதிலிருந்தும் தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் மற்றும் உணவின் தீய சேர்க்கையும் இருக்கிறது. ஒருவேளை எப்பொழுதாவது ஏதாவது பிரச்சனையின் காரணமாக மற்றும் ஏதாவது உறவினர்களின் அன்பின் வசமாகி அன்னதோஷத்தில் வந்து விட்டீர்கள் என்றால் இந்த அன்னமும் (உணவு) தன்னுடைய மனதில் தீய பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. எனவே இதிலிருந்தும் தன்னை பாதுகாப்பாக வைக்க வேண்டும். காரியங்களின் சேர்க்கையும் இருக்கிறது எனவே இதிலிருந்தும் தன்னை பாதுகாப்பாக வைக்க வேண்டும். அப்பொழுதுதான் கௌரவமாக தேர்ச்சி பெறுவீர்கள். தீய சேர்க்கையின் சோதனையில் தேர்ச்சி பெற்று விட்டீர்கள் என்றால் நெருக்கத்தில் வர முடியும் புரிந்து கொள்ளுங்கள். ஒருவேளை தீய சேர்க்கையில் வந்து விட்டீர்கள் என்றால் தூரமாகி விடுவீர்கள். பிறகு நிராகார வதனத்தில், இப்பொழுது சங்கமயுகத்தில் மற்றும் எதிர்காலத்திலும் அருகில் இருக்க முடியாது.

ஒரு தீய சேர்க்கை மூன்று உலகங்களிலிருந்தும் தூரமாக்கி விடுகிறது. ஒரு தீய சேர்க்கையிலிருந்து பாதுகாப்பாக ஆவதினால் மூன்று

உலகத்தில், மூன்று காலங்களில் தந்தையின் அருகில் இருப்பதற்கான பாக்கியத்தை அடைய முடியும். இந்த குரூப்பை பாப்தாதா அன்னப்பறவைகளின் குழு என்று கூறுகிறார். அன்னப்பறவைகளின் காரியம் மற்றும் சொரூபம் என்னவாக இருக்கிறது. அன்னப்பறவைகளின் சொரூபம் தூய்மை ஆகும் மற்றும் காரியமாவது எப்பொழுதும் குணங்கள் என்ற முத்துக்களைத்தான் தாரணை செய்வார்கள். அவகுணம் என்ற கூழாங்கல்லை ஒருபொழுதும் புத்தியில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதுதான் அன்னப்பறவைகளின் காரியம் ஆகும் ஆனால் இந்தக் காரியத்தை நடை முறையில் பாலனை செய்வதற்காக எப்பொழுதும் பாப்தாதாவிடமிருந்து கட்டளை கிடைத்துக் கொண்டே இருக்கிறது. அது என்ன கட்டளை? அந்த கட்டளையின் படங்கள், சிலைகளையும் உருவாக்கியிருக்கிறீர்கள். தீயதை பார்க்காதீர்கள், தீயதை கேட்காதீர்கள், தீயதை பேசாதீர்கள், தீயதை நினைக்காதீர்கள். ஒருவேளை இந்த கட்டளையை எப்பொழுதும் நினைவில் வைத்தீர்கள் என்றால் பின்பு உண்மையான அன்னப்பறவை ஆகி தந்தை யார் அனைத்து குணங்களின் கடலாக இருக்கிறாரோ அந்த கடலின் கரையில் எப்பொழுதும் அமர்ந்து கொண்டேயிருப்பீர்கள். எனவே தனது புத்தியை ஞானக்கடல் தந்தையைத் தவிர வேறு எங்கும் நிலைத்திருக்கச் செய்யாதீர்கள் ஏனென்றால் அன்னப்பறவைகளின் இருப்பிடமே கடல்தான். அப்படி தன்னை அன்னப்பறவை என்று புரிந்து தன்னுடைய உறுதிமொழிகளை கடைபிடித்துக் கொண்டே இருக்க வேண்டும். புரிந்ததா. முத்து மற்றும் கூழாங்கல் இரண்டையும் பிரிப்பதைக் கற்றுக் கொண்டிருக்கிறீர்களா? கூழாங்கல் என்னவாக இருக்கிறது, இரத்தினம் என்னவாக இருக்கிறது. ஞானம் நிறைந்தவராகவோ ஆகியிருக்கிறீர்கள் அப்படி தீய சேர்க்கையிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் மற்றும் ஈஸ்வரிய சேர்க்கையில் இருக்க வேண்டும். புத்தி எப்பொழுதும் ஈஸ்வரிய சேர்க்கையில் இருக்கட்டும் மேலும் ஸ்தூல சம்மந்தத்தில் கூட ஈஸ்வரிய சேர்க்கை இருக்கட்டும். இந்த சேர்க்கையின் ஆதாரத்தில் அனேக தீய சேர்க்கையிலிருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள். மாற்றம் மட்டும் செய்ய வேண்டும். மென்மைத் தன்மையை அதிசபத்தில் மாற்ற வேண்டும். மென்மைத்தன்மையை காண்பிக்க கூடாது. சம்ஸ்காரங்களை மாற்றுவதில் மட்டும் மென்மையாக ஆக வேண்டும். காரியத்தில் மென்மையாக ஆக வேண்டாம். இதில் சக்தி ரூபம் ஆக வேண்டும். ஒருவேளை சக்தி சொரூபத்தின் கவசம்

எப்பொழுதும் அணிந்து கொள்ளவில்லை என்றால் மென்மையானவருக்கு விரைவில் அம்பு பாய்ந்து விடும். அம்பைக் கூட மென்மையான ஸ்தானத்தில்தான் எய்வார்கள், எனவே ஒருவேளை சக்தி சொரூபத்தின் கவசத்தை அணிந்திருந்தீர்கள் என்றால் சக்தி ரூபம் ஆகி விடுவீர்கள். பிறகு மாயாவின் எந்த அம்பும் பாய முடியாது. காரியத்தில் மென்மையானவராக ஆக வேண்டாம். வளைந்து கொடுப்பதற்காக மட்டும் உண்மையான தங்கம் ஆக வேண்டும். முகத்தில் பார்வையில், நடத்தையில் மென்மையை கொண்டு வர வேண்டாம். இந்த அனைத்து விஷயங்களையும் நினைவில் வைத்து கௌரவமாக தேர்ச்சி பெறுபவராக ஆக வேண்டும். இந்த குரூப்பில் நடைமுறை நிரூபணம் கொடுத்து உண்மையானவராக ஆகக்கூடிய நம்பிக்கைக்குரிய இரத்தினங்கள் தென்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் ஒருவர் இன்னொருவரை விட முன்னுக்குச் செல்ல வேண்டும். மற்றவர்கள் முன்னுக்குச் செல்வதை பார்த்து மட்டும் மகிழ்ச்சி அடைய வேண்டாம். ஒருவேளை மற்றவர்களைப் பார்த்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் பக்தனாக ஆகி விடுவீர்கள். பக்தர்கள் பார்த்துப் பார்த்து மட்டும் அவர்களின் குணங்களை பாடி குஷி அடைகிறார்கள். உங்களுக்கு பக்தனாக ஆக வேண்டாம். ஞான சொரூபம் மற்றும் யோக சொரூபம், ஞானம் நிறைந்த ஆத்மா மற்றும் யோகம் நிறைந்த ஆத்மாவாக ஆக வேண்டும். இப்பொழுது பரீட்சையின் முடிவைப் பார்ப்போம், யார் நடைமுறை நிரூபணம் கொடுக்கிறாரோ அவர் முதல் நம்பரில் வருவார். யார் யோசித்துக் கொண்டே இருக்கிறார் என்றால் தந்தையும் இராஜ்ய பாக்கியம் கொடுப்பதற்கும் யோசிப்பார். யார் அவராகவே தயாராக ஆகிறாரோ அவருக்கு பாப்தாதாவும் உலக இராஜ்ய பாக்கியத்தை முதலில் தருகிறார். ஒருவேளை தன்னை ஆஃபர் செய்யவில்லை என்றால் பாப்தாதாவும் உலக சிம்மாசனத்தை ஏன் ஆஃபர் செய்வார். அவராகவே ஆஃபர் செய்பவர் பாராட்டுக்குரியவராக ஆகிறார். கேஸ் (காற்று) நிரப்பிய பலூனாக ஆக வேண்டாம். அவை மிக வேகமாக மேலே பறந்து செல்லும் ஆனால் அற்ப காலத்திற்காகத்தான். இங்கு தன்னுள் அழியாத சக்தியை நிரப்ப வேண்டும். தற்காலிகமாக ஆக்ஸிஜனின் ஆதாரம் எடுக்க வேண்டாம். நல்லது.

**வரதானம்: அமைதியின் சக்தி மூலமாக நொடியில் முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் அனுபவம் செய்விக்கக்கூடிய விசேஷ ஆத்மா ஆகுக!**

விசேஷ ஆத்மாக்களின் கடைசி விசேஷத்தன்மை என்னவென்றால் நொடியில் எந்தவொரு ஆத்மாவையும் முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் அனுபவி ஆக்கி விடுவார்கள். வழி மட்டும் சொல்ல மாட்டார்கள் ஆனால் ஒருநொடியில் அமைதியின் மற்றும் அதீந்திரிய சுகத்தின் அனுபவம் செய்விப்பார்கள். ஜீவன்முக்தியின் அனுபவம் சுகமாகும் மற்றும் முக்தியின் அனுபவம் அமைதியாகும். அப்படி யார் எதிரில் வந்தாலும் அவர் நொடியில் இதன் அனுபவம் செய்யட்டும். எப்பொழுது அந்த மாதிரி வேகம் இருக்குமோ அப்பொழுது சயின்ஸின் (அறிவியலின்) மேல் சைலன்ஸின் (அமைதியின்) வெற்றியைப் பார்த்து அனைவரின் வாயிலிருந்து ஆஹா, ஆஹா என்ற சப்தம் வெளிவரும் மற்றும் பிரத்யக்ஷத்தாவின் காட்சி எதிரில் வரும்.

**சுலோகன்: தந்தையின் ஒவ்வொரு ஆணையின் மேல் தன்னை பலியாக்கக்கூடிய உண்மையான விட்டில்பூச்சி ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.06.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புத்திக்கான ஆன்மீக டிரில் (பயிற்சி)!

சப்தத்திலிருந்து விலகியிருப்பது பிடித்திருக்கிறதா அல்லது சப்தத்திலிருப்பது பிடித்திருக்கிறதா? உண்மையான தேசம் மற்றும் உண்மையான சொரூபத்தில் சப்தம் இருக்கிறதா? எப்பொழுது தன்னுடைய உண்மையான நிலையில் நிலைத்திருந்து விடுகிறீர்கள் என்றால் சப்தத்திலிருந்து விலகி இருக்கும் நிலை பிடித்தமாக இருக்கிறது இல்லையா? அந்த மாதிரியான பயிற்சியை ஒவ்வொருவரும் செய்து கொண்டிருக்கிறீர்களா? எப்பொழுது விரும்புகிறீர்களோ எப்படி விரும்புகிறீர்களோ அப்படியே சொரூபத்தில் நிலைத்திருந்து விட வேண்டும். எப்படி போர்க்களத்தில் இருக்கும் போர் வீரர்களுக்கு எப்பொழுது மற்றும் எப்படி கட்டளை கிடைக்கிறதோ அதே போல் செய்து கொண்டே இருப்பார்கள். அதே போல் ஆன்மீக போர்வீரர்களுக்கும் எப்பொழுது மற்றும் எப்படி வழிகாட்டுதல் கிடைக்கிறதோ அப்படியே தன்னுடைய நிலையை நிலைத்திருக்கச் செய்ய முடியும். ஏனென்றால் நீங்கள் ஞானம் நிறைந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். மேலும் மாஸ்டர் சர்வ சக்திவானாகவும் இருக்கிறீர்கள். அப்படி இரண்டுமே இருக்கும் காரணத்தினால் ஒரு விநாடியை விட குறைந்த நேரத்தில் எப்படிப்பட்ட நிலையில் நிலைத்திருக்க விரும்பினாலும் அந்த நிலையில் நிலைத்திட வேண்டும். அப்படிப்பட்ட ஆன்மீகப் போர் வீரர்களாக நீங்கள் இருக்கிறீர்களா? இப்பொழுதே பரந்தாமவாசி ஆகி விடுங்கள் என்று சொல்லப்பட்டால் சொன்ன வுடனேயே இந்த உடல் மற்றும் உடலின் தேசத்தை மறந்து அசரீரி பரந்தாம வாசி ஆகி விடும் அளவிற்கு அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? இப்பொழுதே பரந்தாம வாசியிலிருந்து அவ்யக்த நிலையில் (சூட்சுமவதன நிலை) நிலைத்து விடுங்கள், இப்பொழுதே சேவைக்காக சப்தத்தில் வாருங்கள், சேவை செய்து கொண்டே தன்னுடைய சொரூபத்தின் நினைவும் இருக்கட்டும். அந்த மாதிரி பயிற்சி உடையவராக ஆகியிருக்கிறீர்களா? அந்த மாதிரி பயிற்சி இருக்கிறதா? தன்னை மாஸ்டர் ஆல்மைட்டி அத்தாரிட்டி (சர்வ சக்திவான்)

என்று நினைக்கிறீர்களா? எப்பொழுது ஆல்மைட்டி அத்தாரிட்டியாகவும் இருக்கிறீர்கள் என்றால் தன்னுடைய புத்தியின் தொடர்பை அதிகாரத்தினால் எங்கு விரும்புகிறீர்களோ அங்கு நிலைத்திருக்கச் செய்ய முடியாதா என்ன? அதிகாரியின் எதிரில் இந்த பயிற்சி கடினமானதா அல்லது சுலபமானதா? எப்படி ஸ்தூலமான கர்ம இந்திரியங்களை எப்பொழுது விரும்புகிறீர்களோ மேலும் எங்கு விரும்புகிறீர்களோ அங்கு ஈடுபடுத்துகிறீர்கள்தான் இல்லையா? இப்பொழுது கையை மேலே கீழே உயர்த்தி மற்றும் தாழ்த்த விரும்பினீர்கள் என்றால் செய்ய முடியும்தான் இல்லையா? அப்படி எப்பொழுது நீங்கள் ஸ்தூல கர்ம இந்திரியங்களின் அதிபதி ஆகி காரியத்தில் ஈடுபடுத்த முடியுமோ அதே போல் எண்ணத்தை மற்றும் புத்தியை எங்கு நிலைத்திருக்கச் செய்ய விரும்புகிறீர்களோ அங்கு நிலைத்திருக்கச் செய்ய முடியும். இதைத்தான் ஈஸ்வரிய அத்தாரிட்டி என்று கூறப்படும். அப்படியானால் புத்தியின் தொடர்பை சுலபமாக எங்கு விரும்புகிறீர்களோ அங்கு இயக்கு முடியுமா? எப்படி ஸ்தூலமான கை கால்களை முற்றிலும் சுலபமான முறையில் எங்கு விரும்புகிறீர்களோ அங்கு இயக்குகிறீர்கள் மற்றும் காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்கள். அந்த மாதிரி பயிற்சி உள்ளவரைத்தான் மாஸ்டர் சர்வ சக்திவான் மற்றும் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் என்று கூறப்படுகிறது. ஒருவேளை இந்த பயிற்சி இல்லையென்றால் மாஸ்டர் சர்வ சக்திவான் மற்றும் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் என்று சொல்ல முடியாது. ஞானம் நிறைந்தவர் என்பதின் அர்த்தமே இந்த நேரம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்ற முழு ஞானம் இருப்பதாகும். இதனால் என்ன லாபம் இருக்கிறது, மேலும் செய்யாததினால் என்ன நஷ்டம் இருக்கிறது என்ற இந்த ஞானத்தை வைத்திருப்பவர்தான் ஞானம் நிறைந்தவராவார். மேலும் கூடவே மாஸ்டர் சர்வ சக்திவான் ஆன காரணத்தினால் அனைத்து சக்திகளின் ஆதாரத்தினால் இந்தப் பயிற்சி சுலபமாக மற்றும் நிரந்தரமானதாக ஆகியே விடுகிறது. கடைசி படிப்பிற்கான பாடம் எது மற்றும் முதல் பாடம் எது? முதல் பாடமும் கடைசி பாடமும் இந்தப் பயிற்சிதான். எப்படி குழந்தையினுடைய லௌகீக பிறவியின் ஏற்படுகிறது என்றால் முதன் முதலில் அவருக்கு ஒரு வார்த்தை நினைவுபடுத்தப்படுகிறது மற்றும் கற்றுக்கொடுக்கப்படுகிறது இல்லையா. இங்கேயும் ஆன்மீகப் பிறவி எடுத்தவுடன் முதல் வார்த்தை என்ன கற்றுக் கொண்டீர்கள்? தந்தையை நினைவு செய்யுங்கள்

என்பதுதான். அப்படி பிறவின் முதல் வார்த்தை லௌகீகத்திற்கும் அலௌகீகத்திற்கும் அதே நினைவு வைப்பதுதான். இது கடினமாக இருக்க முடியுமா என்ன? தனக்குத் தானே பயிற்சி செய்வதற்கான நியமத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. இதுதான் புத்திக்கான பயிற்சி. உடற்பயிற்சி செய்யும் பயிற்சி உள்ளவர்களுக்கு முதன் முதலில் மிகுந்த வலியும் ஏற்படும். மேலும் கடினமாகவும் இருக்கும் ஆனால் யார் பயிற்சி உடையவராக ஆகி விடுகிறாரோ அவரால் உடற்பயிற்சி செய்யாமல் இருக்க முடியாது. அதே போல் இந்த புத்திக்கான உடற்பயிற்சி செய்வதின் அப்பியாசம் குறைவான காரணத்தினால் முதலில் கடினமாகப்படுகிறது. பின்பு தலை பாரமாக ஆவதற்கும் மேலும் ஏதாவதொரு தடை எதிரில் வருவதற்கான அனுபவமும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. எனவே அந்த மாதிரி பயிற்சி உடையவராக ஆகியேதான் தீரவேண்டும். இது இல்லாமல் இராஜ்ய பாக்கியம் பிராப்தி ஆவது கடினமாகி விடும். எவருக்கேனும் இந்தப் பயிற்சி கடினமாக இருக்கிறது என்றால், பிராப்தியும் கடினமாகி விடும். எனவே இந்த முக்கியமான பயிற்சியை சுலபமானதாகவும் நிரந்தரமானதாகவும் ஆக்கிக் கொள்ளுகள். அந்த மாதிரி பயிற்சி உள்ளவர்கள் அனேக ஆத்மாக்களுக்கு சாட்சாத்காரம் செய்விக்கக்கூடிய சாட்சாத் (அப்படியே) பாப்தாதாவாகவே தென்பட வேண்டும். எப்படி வார்த்தைகளில் வருவது எவ்வளவு சுலபமாக இருக்கிறதோ, அப்படியே இந்த வார்த்தைகளிலிருந்து விலகிச் செல்வதும் அந்த அளவிற்கு சுலபமானதாக இருக்க வேண்டும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 22.06.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## தீவிர முயற்சி செய்பவரின் அடையாளங்கள்!

சுத்தமான எண்ணத்தின் சொரூப நிலையை அனுபவம் செய்கிறீர்களா? அனேக எண்ணங்கள் முடிவடைந்து ஒரு சுத்தமான எண்ணம் இருந்து விடுகிறதா? இந்த நிலையை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்களா? இந்த நிலையைத்தான் சக்திசாலியான, அனைத்து கர்ம பந்தனங்களிலிருந்து விடுபட்ட மற்றும் பிரியமான நிலை என்று கூறப்படுவது. அந்த மாதிரி விலகிய மற்றும் பிரியமான நிலையில் நிலைத்திருந்து பிறகு காரியம் செய்வதற்காக கீழே வருகிறீர்கள். எப்படி யாருடைய இருப்பிடம் மிக உயர்ந்த இடத்தில் இருக்கிறது, ஆனால் ஏதாவது காரியத்திற்காக கீழே இறங்குகிறார்கள் என்றால் கீழே இறங்கியபோதும் தன்னுடைய உண்மையான இடத்தை மறப்பதில்லை. அதே போல் தன்னுடைய உயர்ந்த நிலை அதாவது உண்மையான இடத்தை ஏன் மறந்து விடுகிறீர்கள்? இப்பொழுது அற்ப காலத்திற்காக காரியம் செய்வதற்காக கீழே இறங்கி இருக்கிறோம் ஆனால் நிரந்தரமான உண்மையான நிலை அதுதான் என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். பிறகு எவ்வளவுதான் காரியம் செய்தாலும் கர்ம யோகிக்குச் சமமாக காரியம் செய்து கொண்டிருந்தாலும் தன்னுடைய உண்மையான நிலை மற்றும் இடத்தை மறக்க மாட்டார்கள். இந்த நினைவுதான் சக்தியை கொடுக்கிறது. நினைவு குறைவு என்றால் சக்தியும் குறைவாக இருக்கிறது. மாஸ்டர் சர்வ சக்திவானின் பிறப்புரிமை எது? அனைத்து சக்திகளும்தான் மாஸ்டர் சர்வ சக்திவானின் பிறப்புரிமை ஆகும். எனவே இந்த நினைவின் நிலை பிறப்புரிமை என்ற ரூபத்தில் எப்பொழுதுமே இருக்க வேண்டும். நீங்கள் உங்களை எப்பொழுதுமே நம்முடைய பிறப்புரிமை அதிகாரம் கூடவே இருக்கிறது என்று அனுபவம் செய்கிறீர்களா? தன்னை உண்மையானவர் என்று நினைக்கிறீர்களா? இங்கே யாரெல்லாம் அமர்ந்திருக்கிறீர்களோ அவர்கள் தன்னை உண்மையானவர் என்று நினைக்கிறீர்களா? (சிலர்

உண்மையானவர்கள் என்று சொன்னார்கள், சிலர் அப்படி ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள்) உண்மையானவராக ஆகிக் கொண்டிருக்கிறீர்களா அல்லது நிரூபணமாக ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? (இரண்டுமாக) ஒருவேளை உண்மையானவராக இல்லை என்றால் நினைவு யாத்திரையும் நிலைத்திருக்க முடியாது. ஒருவேளை கடைசி வரை உண்மையானவராக ஆவதற்கான முயற்சியே செய்து கொண்டிருந்தீர்கள் என்றால் நிரூபணத்தை எப்பொழுது காண்பிப்பீர்கள்?. இரண்டு, மூன்று வருடங்களில் உண்மையானவர்களாக ஆவீர்களா, அதற்கு பிறகு இரண்டு, மூன்று வருடங்களில் நிரூபணம் கொடுப்பீர்களா? உண்மையானவர்களேதான். ஒருவேளை உண்மையானர்வகளாக இல்லை என்றால் தன்னை சமர்ப்பணம் ஆனவர்கள் என்று நினைப்பீர்களா? சமர்ப்பணம் ஆகி விட்டீர்களா அல்லது சமர்ப்பணமும் கூட இப்பொழுதுதான் ஆக வேண்டுமா? ஆகவே சமர்ப்பணம் ஆவது உண்மையான நிலை இல்லையா? புரிந்ததா.

யார் ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் கிடைத்த டைரக்ஷன் (வழிகாட்டுதல்) படி நடந்து கொண்டிருக்கிறார்கள், தன்னை டிரஸ்டி என்று நினைத்து நடந்து கொண்டிருக்கிறார்கள் அவர்களையோ உண்மையானவர்கள் என்று கூறுவோம் இல்லையா. சில இடங்களில் அதிகமாக யோசிப்பது கூட முடிவை மாற்றி விடுகிறது. எப்படி பரீட்சை நேரத்தில் பரீட்சை எழுதுவதற்கு பதிலாக கேள்வியின் யோசனையிலேயே சென்று விடுகிறார்கள் என்றால் பரீட்சை எழுதாமலே போய் விடுகிறது. எனவே அதிகமாக யோசனையில் செல்ல வேண்டாம் ஸ்ரீமத்படி நடந்து கொள்கிறபோதுதான் உண்மையான குழந்தைகள் என்று தந்தை நினைக்கிறார். மற்றபடி நிரூபணம் காண்பிக்கும் விஷயம் இருக்கிறது. அதுவும் ஒவ்வொருவரும் தனது சக்திக்கேற்ப காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள் மேலும் காண்பித்துக் கொண்டே இருப்பார்கள். எவ்வளவு தந்தைக்கு குழந்தைகள் மேல் நிச்சயபுத்தி இருக்கிறதோ அந்த அளவுக்கு குழந்தைகளுக்கு தன் மேல் நிச்சயபுத்தி குறைவாக இருக்கும் காரணத்தினால் ஒவ்வொரு காரியமும் வெற்றியாக வேண்டும் என்ற இந்த ரிசல்ட் சில நேரம்தான் தென்படுகிறது. எப்படி தந்தை மேல் நிச்சயம், படிப்பின் மேல் நிச்சயம் அதே போல் தன் மீதும் கூட ஒவ்வொரு நேரத்திலும் மற்றும் ஒவ்வொரு எண்ணமும் நிச்சயடத்தி உடையவராகி செய்ய வேண்டும் அதில்தான் குறைவு இருக்கிறது. இந்தக் குறையைக்

கூட எப்பொழுது நிரப்புவீர்கள்? இரண்டு, மூன்று வருடங்களில்? இரண்டு, மூன்று வருடங்கள் என்பதை கனவில் கூட ஒருபொழுதும் யோசனையில் கொண்டு வராதீர்கள். என்ன சொல்ல வேண்டும், இப்பொழுது என்று சொல்ல வேண்டும். யார் தீவிரமாக முயற்சி செய்பவராக இருக்கிறாரோ அவருடைய வாயிலிருந்து எப்பொழுதாவது என்ற வார்த்தை வெளியாகாது. அவர்கள் எப்பொழுதும் இப்பொழுது என்று கூட சொல்ல மாட்டார்கள் ஆனால் அப்பொழுதே செய்து காண்பிப்பார்கள். இதுதான் தீவிர முயற்சி. மேலே சென்று கொண்டிருக்கிறீர்கள் என்றால் அருகில் இருக்க வேண்டும் இல்லையா. ஒருவேளை இரண்டு, மூன்று வருடங்களின் நேரத்தை ஒத்தி வைத்திருக்கிறீர்கள் என்றால் தீவிர முயற்சி செய்பவரின் வரிசையில் எண்ணப்படுவீர்களா? தீவிர முயற்சியாளரின் அர்த்தமே எந்தவொரு பலவீனம் மற்றும் குறையின் விஷயம் தென்படுகிறதோ அதை அவ்வப்பொழுதே அழித்து விட வேண்டும். எப்பொழுது நினைவு இருக்கிறது என்றால் நினைவின் கூடவே சக்தியும் இருக்கும் காரணத்தினால் எந்தவொரு குறையையும் நிறைவேற்றுவது என்பது, எப்படி ஏதாவது சாதாரண காரியம் யோசிக்காமலேயே தானாக நடந்து விடுகிறது, அந்த மாதிரி அனுபவம் ஆகும். இது இயற்கையானதாக ஆகி விடுகிறது. அந்த மாதிரி முயற்சி செய்வதற்காக ஒவ்வொரு நாளும் என்ன அறிவுரை கிடைக்கிறதோ அதன் சொரூபத்தை உருவாக்கிக் கொண்டே செல்லுங்கள். அறிவுரைகளை அறிவுரையின் ரூபத்தில் புத்தியில் வைக்காதீர்கள் ஆனால் ஒவ்வொரு அறிவுரையையும் சொரூபமாக ஆக்கினீர்கள் என்றால் என்னவாகி விடுவீர்கள்? ஒரிஜினல் (உண்மையான) நிலையின் மஹிமையாக ஞான சொரூபம், அன்பு சொரூபம், ஆனந்த சொரூபம் கூறப்படுகிறது அல்லவா அந்த நிலை உருவாகி விடும். பாய்ன்ட்டின் (ஞானத்துளிகள்) ரூபத்தில் புத்தியில் வைக்காதீர்கள் ஆனால் பாய்ன்ட்டை நடைமுறை சொரூபமாக ஆக்குங்கள் பிறகு எப்பொழுதும் பாய்ன்ட் (புள்ளி) சொரூபத்தில் நிலைத்திருக்க முடியும். இப்பொழுது பெரும்பான்மையோர் கருத்தை கருத்து என்ற ரூபத்தில் தாரணை செய்கிறார்கள், வர்ணனை செய்கிறார்கள் ஆனால் யார் கருத்தை நடைமுறை சொரூபத்தில் கொண்டு வந்தார்கள் என்றால் வர்ணனை செய்வதற்கு பதிலாக சாட்சாத்கார மூர்த்தி ஆகி விடுவார்கள் அப்படி இந்த முயற்சியையே செய்து கொண்டிருங்கள். வர்ணனை செய்வதோ மிகவும் சுலபம். சிந்தனை செய்வதும் சுலபம்தான். என்ன சிந்திக்கிறீர்களோ,

என்ன வர்ணனை செய்கிறீர்களோ அந்த சொரூபமாகி மற்ற ஆத்மாக்களுக்கும் சொரூபத்தின் அனுபவம் செய்வியுங்கள். அந்த மாதிரியானவர்களை உண்மையானவர்கள் மற்றும் நிரூபணம் கொடுக்கக்கூடியவர்கள் என்று கூறப்படுகிறது. உண்மையான குழந்தைகளே நம்பிக்கைக்குரியவர் மற்றும் கட்டளைப்படி நடப்பவர் என்றும் கூறப்படுகிறது. அனைவரும் தன்னை கட்டளைப்படி நடப்பவர் என்று நினைக்கிறீர்களா? எப்பொழுது வெற்றி அடைவதற்கான வரதானம் இருக்கிறது என்றால் வெற்றி எதனால் ஏற்படுகிறது? எப்பொழுது கட்டளைப்படி நடக்கிறீர்கள் என்றால் கட்டளைப்படி நடப்பவர்களாக ஆகவில்லையா? ஸ்தூலமாக கட்டளைப்படி நடப்பதற்கான சக்தியும் கூட சூட்சுமத்தின் ஆதாரத்தில் இருக்கிறது. நிரந்தரமாக கட்டளை கடைப்பிடிக்கப்படுகிறதா? அப்படியானால் முக்கியமான கட்டளை எது? நிரந்தரமாக நினைவில் இருங்கள் மற்றும் மனம், சொல், செயலில் தூய்மை இருக்கட்டும். தூய்மை ஆகுங்கள், யோகி ஆகுங்கள் என்று மற்றவர்களுக்கும் கூறுகிறீர்கள். அப்படி எதை மற்றவர்களுக்கு சொல்கிறீர்களோ அதுதான் முக்கியமான கட்டளை ஆனது இல்லையா? எண்ணத்தில் கூட தூய்மையின்மை மற்றும் அசுத்தம் இருக்க வேண்டாம் - இதைத்தான் சம்பூர்ண தூய்மை என்று கூறுவது. அந்த மாதிரி கட்டளைப்படி நடப்பவர்களாக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா. முழு சக்தி சேனையும் தூய்மையான மற்றும் யோகிகளாக இருக்கிறார்களா அல்லது இனிதான் ஆக வேண்டுமா? நிரந்தர யோகியாகவும் இருக்கிறீர்கள், நிரந்தரம் என்றால் எண்ணத்தில் கூட அசுத்தம் இல்லாத நிலை. எண்ணத்தில் கூட ஒருவேளை பழைய அசுத்த சம்ஸ்காரங்கள் சாயல் ஏற்படுகிறது என்றால் சம்பூர்ண தூய்மை என்று சொல்ல மாட்டோம் இல்லையா. எப்படி ஸ்தூலமான உணவை யாராவது உண்ணவில்லை என்றாலும் அதில் கையை வைத்தால் கூட தன்னை உண்மையான வைஷ்ணவர் இல்லை என்று நினைக்கிறார்கள். ஒருவேளை புத்தி மூலமாகவும் அசுத்த எண்ணம் மற்றும் பழைய சம்ஸ்காரம் எண்ண ரூபத்தில் ஏற்படுகிறது என்றாலும் கூட சம்பூர்ண வைஷ்ணவன் என்று கூறலாமா? ஒருவேளை செய்யக்கூடாத காரியத்தை யாராவது பார்க்கிறார் என்றாலும் பார்ப்பதின் பாதிப்பும் ஏற்பட்டு விடுகிறது என்று கூறுவார்கள். அதற்கும் கணக்கு உருவாகி விடுகிறது. இந்த கணக்கு படியும் யோசித்தீர்கள் என்றால் பழைய சம்ஸ்காரம் மற்றும் அசுத்த எண்ணம் புத்தியை தொட்டால் கூட சம்பூர்ண வைஷ்ணவர்

மற்றும் சம்பூர்ண தூய்மையானவர் என்று சொல்ல முடியாது. முயற்சி செய்வதின் இலட்சியத்தை எந்த அளவு வரை வைத்திருக்கிறீர்கள்?. இப்பொழுது யோசித்து பாருங்கள் இந்த நிலை வரை செல்ல வேண்டும் என்றால் இந்த சின்ன சின்ன விஷயங்கள் இப்பொழுது இந்த நேரம் வரை இருப்பது அழகாக இருக்கிறதா? இதுவரை குழந்தைப் பருவத்து விளையாட்டை விளையாடிக் கொண்டே இருக்கிறீர்கள் மேலும் குழந்தைப் பருவத்து விளையாட்டை விளையாடுவதற்கு எப்பொழுதாவது மனம் விரும்புகிறதா? அங்கேயே உருவாக்கப்பட்டது, அங்கேயே பாலனை செய்யப்பட்டது மற்றும் அங்கேயே அழிக்கப்ட்டது -இதை எந்த விளையாட்டு என்று கூறலாம்? அதுவோ பக்தி மார்க்கத்தின் மூட நம்பிக்கைக்கான விளையாட்டாக ஆனது. மாயா அவசியம் வரும் ஆனால் இப்போதைய நிலையின் அனுசாரம், நேரத்தின் அனுசாரம் விடை பெறுவதற்காக வர வேண்டுமேயன்றி அந்த ரூபத்தில் வரக்கூடாது? நமஸ்காரம் செய்வதற்காக வரட்டும். இப்பொழுது செல்வதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா? கொஞ்ச காலம் நமஸ்காரத்தை பார்ப்பீர்களா, பிறகு செல்வீர்களா? அனைத்து சக்திகளையும் அனுபவம் செய்ய வேண்டும். பாப்தாதா இதையும் தியாகம் செய்து இந்த பாக்கியத்தை பாண்டவர்கள் மற்றும் சக்திகளுக்கு வரதானத்தை கொடுக்கிறார் எனவே சக்திகளுக்கு பூஜை அதிகமாக நடக்கிறது. இப்பொழுதிலிருந்தே சக்திகளின் பக்தர்கள் அழைக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களின் சப்தத்தைக் கேட்க முடிகிறதா? எவ்வளவு முன்னேறிச் செல்வீர்களோ அவ்வளவு ஏதாவது சிலையின் எதிரில் பக்தர்கள் வாசனை பொருட்களை எரிக்கிறார்கள் மற்றும் குணங்களை மஹிமை செய்கிறார்கள் அந்த வாசனையை நடைமுறையில் அனுபவம் செய்வீர்கள் மேலும் அவர்களுடைய கூக்குரலை எதிரிலிருந்து அழைப்பது போல் அனுபவம் செய்வீர்கள். எப்படி டெலஸ்கோப் (தொலைநோக்கு கருவி) மூலமாக தூரத்து காட்சிகள் எவ்வளவு அருகில் வந்து விடுகிறது அதே போல் தெய்வீக நிலை டெலஸ்கோப்பின் காரியம் செய்யும். இதுதான் சக்திகளுக்கு நினைவின் ஸித்திஏற்படும் மேலும் இந்த கடைசி ஸித்தை பிராப்தி அடையும் காரணத்தினால் சக்திகளின் பக்தர்கள் சக்திகளின் மூலமாக ரித்தி ஸித்திஅடைய வேண்டும் என்ற ஆசையை வைக்கிறார்கள். எப்பொழுது வெற்றியை பார்ப்பார்களோ. அப்பொழுதுதான் சம்ஸ்காரத்தை நிரப்புவார்கள் இல்லையா. அப்படியானால் அந்த மாதிரி தன்னுடைய நினைவின் ஸித்தீன்

சொரூபம் எதிரில் வருகிறதா? எப்படி தந்தை குழந்தைகளை வெளிப்படுத்துகிறார் அதே போல் பதிலுக்கு தந்தையை வெளிப்படுத்துகிறார்கள். பாப்தாதா பிரத்யட்ஷ ரூபமாக இந்த பங்கை பார்க்கவில்லை ஆனால் இந்த பங்கு சக்திகள் மற்றும் பாண்டவர்களுடையது. எனவே அந்த அளவு நம்பிக்கைக்குரியவர், கட்டளைப்படி நடப்பவராக ஆக வேண்டும். ஒரு விநாடி கூட ஒரு எண்ணம் கூட கட்டளைக்குப் புறம்பானதாக இருக்க வேண்டாம். இதைத்தான் கட்டளைப்படி நடப்பவர், நம்பிக்கைக்குரியவர் என்று கூறுவது. யாரை அப்படிக் கூறுவது? சம்பூர்ண நம்பிக்கைக்குரியவர் என்று யாரைக் கூறலாம் என்றால் யாருடைய எண்ணத்திலும் மற்றும் கனவிலும் கூட தந்தையைத் தவிர மற்றும் தந்தையின் காரியங்கள், தந்தையின் மஹிமை, தந்தையின் ஞானத்தைத் தவிர வேறு எதுவுமே தென்படாமல் இருப்பது அந்த மாதிரியானவரை சம்பூர்ண நம்பிக்கைக்குரியவர் என்று கூறப்படுகிறது. ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. வேறு எந்த விஷயமும் கனவிலும், நினைவிலும் தென்படாமல் இருப்பது, அவரைத்தான் சம்பூர்ண நம்பிக்கைக்குரியவர் என்று கூறுவது. அந்த மாதிரி நம்பிக்கைக்குரியவர் மற்றும் கட்டளைப்படி நடப்பவரின் நடைமுறை நடத்தையில் எதை வைத்து தெரிந்து கொள்ளலாம்? உண்மை மற்றும் தூய்மை. வார்த்தைகளில் மட்டுமின்றி எண்ணம் வரை உண்மை மற்றும் தூய்மை தேவையாக இருக்கிறது. எதுவரை நான் நம்பிக்கைக்குரியவராக கட்டளைப்படி நடப்பவராக ஆகியிருக்கிறேன் என்று தன்னைத் தானே பார்க்க வேண்டும். ஒருவேளை ஒருவரின் துணை எப்பொழுதும் புத்தியின் ஈடுபாட்டில் இருக்கிறது என்றால் அனைவரின் தொடர்பின் பாதிப்பு ஏற்பட முடியாது. புத்தியின் ஈடுபாடு குறைவாகும் காரணத்தினால் அனேக விதமான தொடர்பின் கவர்ச்சி தன் பக்கம் இழுக்கிறது. எனவே மற்ற அனைத்து தொடர்புகளையும் விட்டு ஒருவரின் தொடர்போடு இணைத்துக் கொள்ளுங்கள். இதுதான் முதன் முதல் செய்த உறுதிமொழி. அந்த உறுதிமொழியைக் கடைபிடித்து நடக்க வேண்டும். அவரைத்தான் சம்பூர்ண நம்பிக்கைக்குரியவர் என்று கூறுவது, புரிந்ததா, நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 24.06.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உள்நோக்கு பார்வையுடையவராக ஆவதால் லாபங்கள்!

ஏதாவதொரு புது கண்டுபிடிப்பை செய்கிறார்கள் என்றால் எவ்வளவு சக்திசாலியான கண்டுபிடிப்பாக இருக்குமோ அவ்வளவே அன்டர்கிரவுண்டில் (பூமிக்கடியில்) கண்டுபிடிப்பை செய்கிறார்கள். உங்களுடைய கண்டுபிடிப்பும் ஒவ்வொரு நாளும் சக்திசாலியாக ஆகிக் கொண்டே இருக்கும். எப்படி அவர்கள் அன்டர்கிரவுண்டில் கண்டுபிடிப்பை செய்கிறார்கள் அதே போல் நீங்களும் எவ்வளவு அன்டர்கிரவுண்ட் அதாவது உள்நோக்குப் பார்வை உடையவராக இருப்பீர்களோ அவ்வளவே புதுப்புது கண்டுபிடிப்பு மற்றும் திட்டங்களை வெளிக்கொணர முடியும். அன்டர்கிரவுண்டில் இருப்பதினால் ஒன்று வாயுமண்டலத்திலிருந்து பாதுகாப்பு ஏற்பட்டு விடும், இரண்டாவது ஏகாந்தம் கிடைக்கும் காரணத்தினால் சிந்தனை சக்தி அதிகரிக்கிறது. மூன்றாவது ஏதாவது மாயாவின் தடைகளிலிருந்து பாதுகாப்பின் சாதனமாக ஆகி விடுகிறது. தன்னை எப்பொழுதும் அன்டர்கிரவுண்ட் அதாவது உள்நோக்குப்பார்வை உடையவராக ஆக்குவதற்கான முயற்சி செய்ய வேண்டும். அன்டர்கிரவுண்டில் கூட அனைத்து நடவடிக்கைகளும் நடக்கின்றன அதே போல் உள்நோக்குப் பார்வை உடையவராக ஆகியும் காரியங்கள் செய்ய முடியும். எந்தக் காரியமும் செய்ய முடியாது என்பதில்லை. அனைத்து காரியங்களும் நடக்க முடியும் ஆனால் உள்நோக்குப் பார்வையுடையவராகி காரியம் செய்வதினால் ஒன்று தடைகளிலிருந்து பாதுகாப்பு இரண்டாவது நேரத்தின் சேமிப்பு, மூன்றாவது எண்ணங்களின் பாதுகாப்பு மற்றும் சேமிப்பு ஆகி விடுகிறது. பயிற்சி இருக்கிறது இல்லையா. சில நேரம் அனுபவமும் செய்கிறீர்கள். உள்நோக்குப் பார்வையுடையவராகி பேசவும் செய்கிறீர்கள், ஆனால் வெளிமுகத்தில் வந்தும் உள்நோக்குப் பார்வை, சிரித்த முகம், கவர்ச்சிக்கக் கூடியவராகவும் இருப்பீர்கள். காரியம் செய்து கொண்டே இந்தப் பயிற்சியை செய்ய வேண்டும். எப்படி ஸ்தூலமான

காரியங்களுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கிறீர்கள் அதே போல் தன்னுடைய புத்தியில் என்னென்ன காரியம் மற்றும் எப்பொழுது செய்ய வேண்டும் என்ற அந்த நிகழ்ச்சி நிரலையும் உருவாக்குங்கள். யார் நிகழ்ச்சி நிரலை உருவாக்கும் பயிற்சி உள்ளவராக இருப்பாரோ அவருடைய ஒவ்வொரு காரியமும் தேவையான நேரத்தில் வெற்றி அடையும். இதே போல் தன்னுடைய சூட்சும காரிய, நடவடிக்கைகளும் இருக்கிறது. புத்தி ஒரு நொடியில் எங்கிருந்தும் எங்கும் சென்று வரவும் முடியும். காரியமும் மிகவும் விஸ்தாரமானது என்றால் எப்பொழுது நிகழ்ச்சி நிரலை உருவாக்குவீர்களோ அப்பொழுதுதான் நேரத்தின் சேமிப்பு மற்றும் வெற்றி அதிகமாக இருக்க முடியும். இந்த நிகழ்ச்சி நிரலை இடையிடையே உருவாக்கிக் கொண்டே இருங்கள் ஆனால் நிரந்தரமானதாக உருவாக்க வேண்டும். எப்படி ஸ்தூலமான காரிய நடவடிக்கைகளை செட் செய்து செய்து பயிற்சி உடையவராக ஆகி விட்டீர்கள் அதே போல் இந்தப் பயிற்சி செய்து செய்து பயிற்சி உடையவராக ஆகி விடுவீர்கள். இதற்காக பிரத்யேகமாக நேரத்தை ஒதுக்குவதற்கான அவசியமும் கிடையாது. எந்தவொரு ஸ்தூலமான காரியமோ அது அதிகமாக புத்தியால் செய்யக்கூடியதாக இருந்தாலும் அதைச் செய்து கொண்டும் இந்த உங்களுடைய நிகழ்ச்சி நிரலை செட் (நிர்ணயம்) செய்ய முடியும். நிகழ்ச்சி நிரலை செட் (நிர்ணயம்) செய்வதற்கு எவ்வளவு நேரம் ஆகுகிறது? ஒன்றிரண்டு நிமிடம் கூட அதிகம்தான். இந்த பயிற்சியும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அமிர்தவேளையில் தன்னுடைய புத்தியின் நடவடிக்கையின் நிகழ்ச்சியை முதலிலேயே செட் (நிர்ணயம்) செய்து விடுங்கள். எப்படி நிகழ்ச்சி உருவாக்கப்படுகிறது பின்பு அதில் இந்த இந்த காரியம் செய்தாகி விட்டது மேலும் எதுவரை நடந்திருக்கிறது மற்றும் எதுவரை நடக்கவில்லை என்று சோதிக்கப்படுகிறது. இந்த முறையில் இந்த நிகழ்ச்சி நிரலையும் உருவாக்கி பிறகு இதனிடையே சோதனை செய்யுங்கள். எவ்வளவு பெரிய மனிதராக இருப்பாரோ அவர்கள் நிகழ்ச்சி நிரல் இன்றி வர மாட்டார்கள். வந்தார், அப்படி செய்தார், அந்த மாதிரி நடந்து கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு விநாடியின் புரோகிராம் முன்பே தீர்மானம் செய்யப்படுகிறது. நீங்களும் உயர்ந்த ஆத்மாக்கள் எனவே உங்களுடைய புரோகிராமும் அதேபோல தீர்மானம் ஆக வேண்டும். சிலருக்கு புரோகிராமை உருவாக்கக்கூடிய முறை தெரியும். சிலருக்கு தெரியாது ஸ்தூலமான காரிய நடவடிக்கைகளிலும் அப்படி இருக்கிறது. எவ்வளவு

யாருக்கு தன்னுடைய நிகழ்ச்சியை உருவாக்கத் தெரியுமோ அந்த அளவே தன்னுடைய நிலையிலும் நிலைத்திருக்கத் தெரியும். இல்லை என்றால் நிகழ்ச்சி உருவாக்கட்படவில்லை என்றால் எப்படி விஷயங்கள் மேலே கிழே போகும் அதே போல் மனநிலையும் மேலே கீழே போகும். நிலையாக இருப்பதில்லை. நல்லது.

**வரதானம்: முயற்சி மற்றும் பிராப்தியின் கணக்கைத் தெரிந்து அதிவேகமாக முன்னேறிச் செல்லக்கூடிய ஞானம் நிறைந்தவர் ஆகுக!**

முயற்சி மூலமாக வெகுகாலத்தின் பிராப்தியை உருவாக்குவதற்கான நேரம் இதுதான். எனவே ஞானம் நிறைந்தவராகி அதிவேகமாக முன்னேறிச் செல்லுங்கள். இதில் இன்று இல்லை என்றால் நாளை மாறி விடுவோம் என்று யோசிக்காதீர்கள். இதைத்தான் அலட்சியம் என்று கூறப்படுவது. இதுவரை பாப்தாதா அன்புக் கடலாகி அனைத்து உறவுகளின் அன்பில் குழந்தைகளின் அலட்சியம், சாதாரண முயற்சியைப் பார்த்தும் கேட்டும் கூட அதிகப்படியான உதவி மற்றும் மதிப்பெண் கொடுத்து முன்னேற்றம் அடையச் செய்கிறார். எனவே ஞானம் நிறைந்தவராகி தைரியம் மற்றும் உதவியின் விசே வரதானத்தின் இலாபத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

**சுலோகன்: இயற்கைக்கு அடிமை ஆகுபவர்தான் சோர்வானவராக ஆகுகிறார் எனவே இயற்கையை வென்றவர் ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 25.06.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சேவை மற்றும் தபஸ்யாவின் சமநிலை!

தன்னை விருட்சபதியின் குழந்தை என்று நினைக்கிறீர்களா? மரத்தின் அடையாளம் பக்தி மார்க்கத்தில் கூட தொடர்ந்து வந்திருக்கிறது. தபஸ்விகள் எப்பொழுது தபஸ்யா செய்கிறார்கள் என்றால் மரத்தின் கீழே அமர்ந்து தபஸ்யா செய்கிறார்கள். இதன் இரகசியம் என்ன? மரத்தின் கீழே ஏன் தபஸ்யா செய்கிறார்கள்? அதற்கான காரணம் என்ன, இது ஏன் தொடங்கியது? இதன் எல்லைக்கட்டாறப்ட் இரகசியம் என்ன, இந்த படைப்பு ரூப மரத்தில் கூட உங்களுடைய இருப்பிடம் எங்கிருக்கிறது? மரத்தின் கீழே வேரில் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? எந்த படங்கள் இப்பொழுது ஞானம் நிறைந்ததாக உருவாக்கப்படுகின்றனவோ அவைகள் பின்பு நினைவுச்சின்னங்களாக பக்தி மார்க்கத்தில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. மரத்தின் படத்தில் தூரத்திலிருந்து என்ன தென்படுகிறது? தபஸ்விகள் தபஸ்யா செய்து கொண்டிருக்கிறார்கள், எப்படி தபஸ்விகள் (பக்தியின்) மரத்தின் கீழே அமர்ந்திருக்கிறார்களோ அது போல் மரத்தின் கீழே அமருவதினால் தானாகவே மரத்தின் ஞானம் முழுமையும் புத்தியில் வந்து விடுகிறது. மரத்தின் கீழே அமர்ந்தீர்கள் என்றால் விரும்பாவிட்டாலும் கூட பழம், பூக்கள், இலைகள் ஆகியவை கவனத்தில் வரவேதான் செய்யும். அப்படி எப்பொழுது கல்ப விருட்சத்தின் கீழே அஸ்திவாரத்தில் அமருகிறீர்கள் என்றால் முழு மரத்தின் ஞானம் தானாகவே புத்தியில் இருக்கிறது. எப்படி விதையில் மரத்தின் முழு ஞானம் இருக்கிறதோ அதே போல் தன்னை இந்த கல்ப விருட்சத்தின் அஸ்திவாரம் மற்றும் மரத்தின் கீழே வேரில் இருப்பதாக நினைப்பீர்கள் என்றால் முழு மரத்தின் ஞானம் தானாகவே புத்தியில் வந்து விடுகின்றது. இந்த உங்களின் நிலை பக்தி மார்க்கத்தில் நினைவுச்சின்னமாக தொடாந்து வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் தபஸ்யா செய்து கொண்டிருக்கிறீர்கள், இதுதான் நடைமுறை விஷயம் ஆகும். பின்பு பக்தி மார்க்கத்தில் ஸ்தூலமான மரத்தின் கீழே அமர்ந்து தபஸ்யா செய்கிறார்கள். பாருங்கள் நாம் மரத்தில் மேலே அமர்ந்திருக்கிறோம்

என்று ஆரம்பத்தில் உங்களுக்கு போதை இருந்தது. முழு மரமும் கீழே இருக்கிறது. நாம் மேலே இருக்கிறோம். மேலேயும் இருக்கிறீர்கள் இல்லையா. ஒருவேளை மரத்தை தலைகீழாக ஆக்கி விட்டீர்கள் என்றால் மேலே வந்து விடுவீர்கள். எப்படி முதலில் நாம் இந்த மரத்தின் மேலே அமர்ந்து முழு மரத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற போதை இருந்தது. அதே போல் இப்பொழுதும் இந்த விதவிதமான தபஸ்யாவின் போதை இருக்கிறதா? ஆரம்பத்தின் போதை இந்த போதையை விட அதிகமாக இருந்ததா அல்லது இப்பொழுது அதிகமாக இருக்கிறதா? அது தபஸ்யாவின் ரூபம் மட்டுமாக இருந்தது இப்பொழுது தபஸ்யா மற்றும் சேவை சேர்ந்தே இருப்பதாக ஆகி விட்டது. அந்த போதை தபஸ்யாவினுடையது மட்டுமாகத்தான் இருந்தது. கீழே இறங்குவதற்கான எந்த காரணமும் இருந்ததில்லை. மேலும் இப்பொழுது தபஸ்யா மற்றும் சேவை இரண்டுமே சேர்ந்தே நடக்கிறது. இரண்டு காரியமும் நடந்து கொண்டிருக்கிறது என்றால் இடையிடையே தனக்குத் தானே போதை ஏற்றுவதற்காக பிரத்யேக கவனம் வைக்க வேண்டும், இதைத்தான் பேட்டரியை சார்ஜ் செய்வது என்று கூறப்படுவது. உண்மையிலேயே முழு மரமும் வெளிப்படையான ரூபத்தில் இருக்கிறது, மேலும் நாம் சாட்சியாகி இந்த மரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று அப்படி அனுபவம் செய்வீர்கள். இந்த போதை கூட மிகுந்த குஷியைக் கொடுக்கிறது. சக்தி கொடுக்கிறது. எனவேதான் விருட்சபதி மற்றும் விருட்சத்தின் (மரத்தின்) மஹிமை அதிகமாக இருக்கிறது. அப்படி விதவிதமான சேவை செய்து கொண்டும் தபஸ்யாவின் பலத்தை தனக்குள் தானாகவே நிரப்பிக் கொண்டிருக்க வேண்டும், அதன் மூலம் தபஸ்யா மற்றும் சேவை இரண்டும் இணைந்து மற்றும் ஒன்றாக சேர்ந்தே இருக்கும். சேவையில் வந்து விட்டோம் என்றால் தபஸ்யாவை மறந்து விட்டோம் என்று அப்படி இருக்க வேண்டாம். இரண்டும் சேர்ந்தே இருக்கட்டும். இணைந்த ரூபம் இல்லையா? இடையிடையே இதற்கான சோதனை செய்ய வேண்டியதாக இருக்கும். எதுவரை செக்கர் (சோதனையாளர்) ஆகவில்லையோ அதுவரை மேக்கர் (உருவாக்குபவர்) ஆக முடியாது. உலகத்தை உருவாக்குபவர் மற்றும் அமைதி உருவாக்குபவர் என்ற மஹிமை இருக்கிறது இல்லையா, அதுவாக எதுவரை சோதனையாளராக ஆகவில்லையோ அதுவரை உருவாக்குபவராக ஆக முடியாது. தன் மேல் மிகுந்த சோதனை தேவையாக இருக்கிறது. மற்றவர்கள் எவ்வளவுதான் சோதனை செய்தாலும் இவ்வளவு செய்ய முடியாது ஆனால் தன்னைத்

தானே சோதனை செய்வதினால்தான் உங்களுடைய முன்னேற்றத்தை நீங்கள் செய்ய முடியும். தன்னைத் தானே சோதனை செய்ய வேண்டும். சோதனை செய்வதற்காக நேரம் அவசியம் இல்லை. எப்பொழுது இயற்கையான பயிற்சி ஏற்பட்டிருக்கிறது என்றால் நேரத்திற்கும் அவசியம் இல்லை, இயல்பாகவே நடந்து கொண்டே இருக்கும். பிறகு சோதனை செய்வதில் ஒரு விநாடி கூட எடுப்பதில்லை. ஒருவேளை தன்னைத் தானே சோதனை செய்தீர்கள் என்றால் அது எவ்வளவு நேரம் எடுக்கும். எவ்வளவுதான் பிஸியானவராக இருந்தாலும் ஒரு விநாடியையோ எடுக்கவே முடியும். பயிற்சிக்கான அவசியம் மட்டும் தேவையாக இருக்கிறது. செக்கிங் மாஸ்டர் ஆக வேண்டும். அனைத்திலும் மாஸ்டர் ஆக வேண்டும். எப்படி மாஸ்டர் சர்வ சக்திவான், மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக இருக்கிறீர்கள், அதே போல் செக்கிங் மாஸ்டராகவும் ஆக வேண்டும். நல்லது.

டிராமாபடி அனைத்துமே நன்றாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது ஆனால் நன்றாக நடந்து கொண்டிருந்தாலும் சோதனையும் செய்ய வேண்டும். நன்மையே பயக்கும் யுகம் இது என்று தெரிந்தும் இருக்கிறீர்கள். இருந்தாலும் ஒவ்வொருவருக்கும் தன்னுடைய மற்றும் மற்றவர்களின் நன்மைக்கான திட்டத்தையும் யோசிக்கவும் வேண்டும். அந்த மாதிரி ஏதாவது புதிய திட்டங்களை உருவாக்குங்கள், அதன் மூலம் (மன) நிலைகளில் கொஞ்சம் உயரே தாண்டுதல் ஏற்பட்டு விடட்டும். அனைவரும் சென்று கொண்டுதான் இருக்கிறீர்கள். மேலும் சென்று கொண்டே இருப்பீர்கள் ஆனால் இடையிடையே திட்டமிடுதல் மற்றும் சகயோகத்தின் அதிகப்படியான சக்தி கிடைப்பதினால் உயரே தாண்டுதல் வர முடியும். எப்படி ராக்கெட்டிற்குக் கூட அக்னியின் சக்தி கொடுக்கப்படுகிறது. அப்பொழுதுதான் மேலே பறக்கிறது. அதே போல் லைட் மற்றும் மைட்டின் சக்தி கிடைக்கட்டும். அதன் மூலம் உயரே தாண்ட முடிய வேண்டும். இதற்காக அதிகப்படியான சக்தியின் சகயோகத்தினால் நமக்கு சக்தியின் பிராப்தியின் அனுபவம் ஏற்படுகிறது. இதுவும் அவசியமாக இருக்கிறது. ஒன்றோ சிந்தனை சக்தியின் மிகுந்த பலவீனம் இருக்கிறது. எனவே வீணான எண்ணங்களை எப்படிக் கட்டுப்படுத்துவது என்ற ரிப்போர்ட் (அறிக்கை) அதிகமானவர்களிடமிருந்து இருக்கிறது. இந்த முக்கியமான பலவீனத்தை சோதனை செய்து எப்படி இதை அழிப்பது இதற்கான திட்டத்தை யோசியுங்கள். பலவீனங்களைப்

பற்றியோ தெரிந்தே விடுகிறது, அதைப் பற்றி புரிய வைக்கப்படுவதினால் உள்ளே அமிழ்ந்து போய் விடுகிறது ஆனால் சம்ஸ்காரங்களை அழிக்க முடியாது. எனவே கொஞ்ச காலத்திற்கு பிறகு அதிகமானவர் களிடமிருந்து மீண்டும் இந்த மாதிரியான ரிப்போர்ட் கிடைக்கிறது. பட்டி ஆகியவைகளினால் கூட அதிகப்படியான சக்தி கிடைக்கிறது. கொஞ்சம் கொஞ்சம் மாற்றம் ஏற்படுகிறது ஆனால் இங்கிருந்து என்ன சக்தியை எடுத்துச் செல்கிறீர்களோ அது நிரந்தரமாக இருப்பதற்காக திட்டத்தை யோசனை செய்யுங்கள். சக்தியில்லை என்று அதிகமானவர்களின் புகார் இருக்கிறது. ஞானம் இருக்கிறது ஆனால் லைட் மற்றும் மைட் என்று கூறப்படும் ஞானத்தின் மூலமாக தன்னுள் எப்படி சக்தியை நிரப்புவது இதற்கான வழி தெரிவதில்லை. தன்னிடம் தீட்பெட்டி இருக்கிறது ஆனால் தீப்பெட்டியிலிருந்து நெருப்பை உருவாக்கும் வழி தெரியாத காரணத்தினால் காரியம் நிறைவேற முடிவதில்லை. அப்படி ஞானம் அனைவருக்கும் இருக்கிறது, ஆனால் ஞானத்தினால் சிலரோ லைட் மற்றும் மைட்டின் அனுபவம் செய்கிறார்கள். மேலும் சிலர் ஞானத்தை புரிந்து மட்டும் வர்ணனை செய்கிறார்கள். ஞானத்தின் மூலமாக தன்னுள் எப்படி சக்தியைக் கொண்டு வருவது? அந்த சக்திகள் பல்வேறு வழிகள் மூலமாக மேலே உயரச் செல்லும் அளவிற்கு பலத்தை நிரப்ப வேண்டும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 29.06.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஞானத்தின் வெளிச்சத்தினால் முயற்சி செய்யும் பாதை தெளிவாகிறது!

அனைவரும் என்ன முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்களோ அந்த முயற்சியின் மூலமாக தற்சமயத்தின் பிராப்திக்காக என்ன லட்சியம் வைத்திருக்கிறீர்கள்? தேவ பதவியின் பிராப்தியோ எதிர்காலத்தினுடையது, ஆனால் தற்சமயம் முயற்சி செய்வதின் பிராப்திக்கான லட்சியம் எது? (பரிஷ்தா ஆவது). பரிஷ்தாவின் முக்கியமான தகுதிகள் எவை? பரிஷ்தா ஆவதற்கான இரண்டு தகுதிகள் எவை? ஒன்று லைட் (ஒளி மற்றும் லேசான தன்மை), மற்றொன்று மைட் (சக்தி) தேவையாக இருக்கிறது. இரண்டுமே அவசியமாக இருக்கிறது. லைட் மற்றும் மைட் இரண்டுமே பரிஷ்தா நிலை வாழ்க்கையில் தெளிவாகத் தென்படுகிறது. லைட்டை அடைவதற்காக விசேஷமாக எந்த சக்தி தேவையாக இருக்கிறது. சக்திகளோ அதிகம் இருக்கின்றன இல்லையா? ஆனால் மைட் ரூபம் மற்றும் லைட் ரூபம் ஆவதற்காக ஒவ்வொரு தனித்தனி குணங்களைக் கூறுங்கள். ஒன்று சிந்தனை சக்தி (மனன சக்தி), இன்னொன்று, சகித்துக் கொள்ளும் சக்தி எவ்வளவு சகித்துக் கொள்ளும் சக்தி இருக்கிறதோ அவ்வளவு சர்வ சக்திவானின் அனைத்து சக்திகளும் தானாக பிராப்தி ஆகிறது. ஞானத்தையும் லைட் என்று கூறுகிறார்கள் இல்லையா. அப்படி முயற்சி செய்யும் மார்க்கத்தை சுலபமானதாக மற்றும் தெளிவானதாக ஆக்குவதற்காகவும் ஞானத்தின் லைட் தேவையாக இருக்கிறது. இந்த லைட்டிற்காக அடுத்து சிந்தனை சக்தியும் தேவையாக இருக்கிறது. அப்படி ஒன்று, சிந்தனை சக்தி மற்றும் இன்னொன்று, சகித்துக் கொள்ளும் சக்தி தேவையாக இருக்கிறது. ஒருவேளை இந்த இரண்டு சக்திகளும் இருக்கின்றன என்றால் காரியங்களைச் செய்து கொண்டு அங்கு இங்கு போகும்போதும், வரும்போதும் பரிஷ்தா சொரூபம் யாருக்கும் காட்சியாகக் கிடைக்கும். சகித்துக் கொள்ளும் சக்தியினால் அனைத்து குணங்களின் பிராப்தி ஏற்பட்டே விடுகிறது. யார் சகித்துக் கொள்ளும் சக்தி உடையவராக இருப்பாரோ அவரிடம்

முடிவெடுக்கும் சக்தி, பகுத்தறியும் சக்தி, உள்ளடக்கும் சக்தி தானாகவே ஒன்றுடன் சேர்ந்து அனேகம் வந்து விடுகிறது. சகித்துக் கொள்ளும் சக்தியும் அவசியமாக இருக்கிறது மற்றும் சிந்தனை செய்யும் சக்தியும் அவசியமாக இருக்கிறது. மனதிற்காக சிந்தனை சக்தியும், வார்த்தைகள் மற்றும் காரியங்களுக்காக சகித்துக் கொள்ளும் சக்தியும் தேவையாக இருக்கிறது. சகித்துக் கொள்ளும் சக்தி இருக்கிறது என்றால் பின்பு அவர் என்ன வார்த்தை கூறினாலும் அவை சாதாரணமானவையாக இருக்காது. மற்ற காரியங்கள் என்ன செய்தாலும் அவைகளும் அதன் பிரகாரமாகவே செய்வார். அப்படி இரண்டு சக்திகளின் அவசியம் இருக்கிறது. சகித்துக் கொள்ளும். சக்தி உடையவர் காரியங்களிலும் வெற்றி அடைந்து விடுகிறார். சகித்துக் கொள்ளும் சக்தியின் குறையின் காரணமாக காரியத்தின் வெற்றியிலும் குறை ஏற்பட்டு விடுகிறது. சகித்துக் கொள்ளும் சக்தி உள்ளவர் களுக்குத்தான் அவ்யக்த நிலை மற்றும் சுத்தமான எண்ணங்களின் சொரூப நிலை இருக்கும். சகித்துக் கொள்பவரின் முகத்தில் பிரகாசம் இருக்கும். எப்படிப்பட்ட சம்ஸ்காரம் உள்ளவர்களானாலும் தன்னுடைய சகித்துக் கொள்ளும் சக்தியினால் குறைந்த காலத்திற்காக உள்ளடக்கி வைத்து விடுவார்கள். அப்படி இரண்டு சக்திகளும் தேவையாக இருக்கிறது. தன்னுடைய மனதின் எண்ணங்களை முயற்சி செய்வதில் செலுத்துவதற்கும் கூட சகித்துக் கொள்ளும் சக்தி தேவையாக இருக்கிறது. அதைத்தான் கட்டுப்படுத்தும் சக்தி என்று கூறுகிறார்கள். சகித்துக் கொள்ளும் சக்தி இருக்கிறது என்றால் வீணான எண்ணங்களையும் கட்டுப்படுத்த முடியும். அப்படி இந்த இரண்டு சக்திகளின் மேல் கவனம் வையுங்கள். நம்பர்-1 வியாபாரி ஆவதற்கான சுலபமான வழி என்ன? தன்னை பிஸியாக வைத்துக் கொள் வதினால்தான் நம்பர்-1 பிஸினஸ்மேன் ஆகி விடுவீர்கள். யாருக்கு தன்னை பிஸியாக வைக்கத் தெரியாதோ அவர் பிஸினஸ்மேனுக்கு தகுதியற்றவர் என்று கூறப்படும். இங்கு பிஸினஸ்மேன் ஆவது என்றால் தனக்கும் வருமானம், மற்றவர்களுக்கும் வருமானம். இதற்காகத் தன்னைத் தானே ஒரு விநாடி கூட ஃப்ரீ (முற்றிலும் காரியம் செய்யாத நிலை) ஆக வைத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் எந்த நம்பரின் பிஸினஸ்மேனாக இருக்கிறீர்கள்? இங்கு எவ்வளவு வேகமாக முன்னேறுவீர்களோ அவ்வளவு எதிர்காலத்தின் ஆசனத்தை அடைவதற்கும் முன்னேறிச் செல்வீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். நல்ல வாய்ப்பு இருக்கிறது. என்ன செய்ய விரும்பினாலும் அதைச் செய்ய

முடியும். அனைவருக்கும் சுதந்திரம் இருக்கிறது. யார் எவ்வளவு வாய்ப்பை எடுக்கிறார்களோ அவ்வளவு தன்னுடைய ஆசனத்தை அடைவதை உறுதியாக்குகிறார்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். பிஸினஸ்மேனின் அர்த்தமே யார் ஒரு எண்ணத்தைக் கூட வீணாக்காதவர். ஒவ்வொரு எண்ணத்திலும் வருமானம் இருக்கட்டும். எப்படி வெளியுலக பிஸினஸ்மேன் வருமானம் செய்து ஒவ்வொரு பைசாவையும் எவ்வளவு தொகையாக ஆக்கி விடுகிறார். இங்கேயும் ஒவ்வொரு விநாடி மற்றும் எண்ணத்தில் வருமானம் செய்து காண்பிக்கட்டும், அவரைத்தான் நம்பர்-1 பிஸினஸ்மேன் என்று கூறுவோம். புத்திக்கு வேறு வேலையே என்ன இருக்கிறது. புத்தி இதிலேயே பிஸியாக இருக்க வேண்டும். மற்ற அனைத்து பக்கங்களிலிருந்தும் முடிந்து விட்டது இல்லையா அல்லது இன்னும் ஏதாவது அங்கு புத்தி செல்லும் அளவிற்கு இருந்து விட்டதா? அனைத்து பக்கங்களும் முடிந்து விட்டது தானே? தன்னுடைய பழைய சம்ஸ்காரம் பக்கம் கூட முடிந்து விட்டது இல்லையா? புத்தி செல்வதற்கான பக்கம் மற்றும் பாதை அதுதான். புத்தி ஒன்று பழைய சம்ஸ்காரத்தின் பக்கம் செல்லும் அல்லது தன்னுடைய உடலின் கணக்கு வழக்கு பக்கம் செல்லும் மற்றும் மனதின் வீணான எண்ணங்களின் பக்கம் இழுக்கப்படும்.இந்த அனைத்துமே முடிந்து விட்டது இல்லையா? உடலுக்கு நோய் ஏற்படுகிறது. இது இந்த வலி, இதற்கான நிவாரணம் இது என்ற ஞானம் இருக்கிறது. ஏனென்றால் உடல் எவ்வளவு நன்றாக இருக்கிறதோ அவ்வளவு சேவை செய்ய முடியும். மற்றபடி தனக்கு என்ற எந்த சுயநலமும் இல்லை. சேவைக்காக செய்கிறீர்கள், அப்படி சாட்சியாக இருக்கும் நிலை ஆகி விட்டது இல்லையா? இப்பொழுது ஒரே ஒரு மார்க்கம் மட்டும் இருக்கிறது. அனேக மார்க்கங்கள் இருந்த காரணத்தினால் புத்தி இங்கு அங்கு என்று அலைந்தது. இந்த அனைத்து மார்க்கங்களும் மூடப்பட்டு விட்டன இல்லையா? சர்வ சக்திவானின் அரசாங்கத்தின் சீல் போடப்பட்டு விட்டது என்றாகி விட்டது. சீல் போடப்பட்டது, எதுவரை வழக்கு முடியவில்லையோ அதுவரை ஒருபொழுதும் திறக்கப்படாது. எனவே தன்னுடைய சோதனையைச் செய்ய வேண்டும். சிலருடைய அதிர்ஷ்டத்தில் இருக்கிறது என்றால் சூழ்நிலைகள் கூட அந்த மாதிரி ஆகி விடுகிறது. அது அவருக்கு மின் தூக்கி போன்றது (லிப்ட்) ஆகி விடுகிறது. இங்கேயும் யாருக்கு கல்பத்திற்கு முந்தைய அதிர்ஷ்டம் டிராமாவில் அடங்கியிருக்கிறது என்றால், தன்னுடைய முயற்சியும் இருக்கிறது

ஆனால் கூடவே லிட்ட்டும் தெய்வீக குடும்பம் மூலமாகக் கிடைக்கிறது. மேலும் பாப்தாதா மூலமாகவும் பரிசு (கிஃப்ட்) கிடைக்கிறது. இப்பொழுது பாப்தாதா மூலமாக மற்றும் தெய்வீக குடும்பம் மூலமாக எந்தெந்த விதமான கிப்ட் பிராப்தி ஆகியிருக்கிறது என்று இதையும் சோதிக்க வேண்டும். பெரிய மனிதர்களுக்கு கிட்ட் (பரிசு) கிடைக்கிறது என்றால் அவற்றை ஷோ கேஸில் பத்திரமாக வைட்டார்கள். அதன் மூலமாக தன்னுடைய தேசத்தின் பெயரை புகழடையச் செய்கிறார்கள். மேலும் இங்கு அவ்வப்பொழுது என்ன கிட்ட் கிடைக்கிறதோ அதன் மூலமாக பாப்தாதாவின் மற்றும் குலத்தின் பெயரை புகழடையச் செய்ய வேண்டும். நல்லது.

எப்படி ஆரம்ப காலத்தில் நீங்கள் சேவைக்காக வெளியிடங்களுக்குச் செல்கிறீர்கள் என்றால் அந்த நேரத்தில் ஞானத்தின் சக்தியோ குறைவாக இருந்தது ஆனால் வெற்றி எந்த சக்தியின் ஆதாரத்தில் கிடைத்தது? தியாகம் மற்றும் அன்பு. புத்தியின் நினைவின் ஈடுபாடு இரவு பகலாக பாபா மற்றும் யக்ஞத்தின் பக்கம் இருந்தது. மிகவும் உள்ளப்பூர்வமான அன்போடு பாபா மற்றும் யக்ஞம் இவை இரண்டுதான் வெளிப்பட்டது. இந்த அன்புதான் அனைவரையும் உதவி செய்வதில் கொண்டு வந்தது. இந்த அன்பின் சக்திதான் மையமானது என்றால் ஆரம்பகால ஸ்தாபனையில் எந்த சக்தி உதவியாக இருந்ததோ கடைசியிலும் அதுவேதான் நடக்கும். ஆரம்பத்தின் சாகார (பாபாவின்) அன்பினால்தான் மன்மனாபவ ஆனீர்கள். சாகார அன்புதான் சக்யோகி ஆக்கியது மற்றும் தியாகம் செய்வித்தது. குழுவின் (கூட்டு ஒற்றுமை) மற்றும் அன்பின் சக்தியினால் முற்றுகை இட வேண்டும். இப்பொழுது வெளிநாட்டில் கூட சேவையின் வெற்றிக்கான மூல காரணம் அன்பானவர் மற்றும் சகயோகி ஆவதற்கான முற்றுகைதான். ஞானத்தின் நடைமுறை எடுத்துக்காட்டு இந்த அன்பு மற்றும் குழுவின் சக்தியே ஆகும். சேவையின் வெற்றிக்கான மூல ஆதாரம் இதுதான். எங்கிருந்தாலும் செய்தி கொடுக்கும் காரியம் விரைவில் முடிந்து விடும் அளவிற்கு எந்த மாதிரி திட்டமிட வேண்டும் என்று இதை யோசிக்க வேண்டும். இப்பொழுதோ மிகுந்த காரியம் இன்னும் செய்ய வேண்டியது பாக்கி இருக்கிறது. அன்பின் மூலமாக தியாகத்திலும் உயரே தாண்டுவது போல் செய்வதற்கான ஊக்கம் வருகிறது. நீங்கள் அனைவரும் எப்படி தியாகம் செய்தீர்கள்? ஒவ்வொரு

நரம்பிலும் அன்பு நிரம்பி விட்டது. அப்பொழுதுதான் அனைத்தையும் தாண்டி வர முடிந்தது.

எப்படி இப்பொழுது ஈஸ்வரிய போதை மற்றும் குஷியிலிருந்து முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்களோ அதே போல் எப்பொழுதும் போதை மற்றும் குஷியில் இருந்து சேவையில் வெற்றி பெற்றுக் கொண்டே இருப்பீர்கள் என்று வெளிநாட்டினருக்கும் கடிதம் எழுதி அனுப்புங்கள். வெற்றித் திலகமோ இடப்பட்டிருக்கிறது தன்னுடைய வெற்றித் திலகத்தை எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருங்கள். மற்றபடி இதுவரை என்ன செய்திருக்கிறீர்களோ அதற்காக பாப்தாதாவும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார், ஆனால் இன்னும் முன்னேறிச் செல்லத்தான் வேண்டும். ஏதாவது வாரிசை உருவாக்குங்கள் அப்பொழுதுதான் சபாஷ் என்று பாராட்டுக்கள் தருவோம். இதுவரை என்ன செய்திருக்கிறீர்களோ அதில் மகிழ்ச்சி அடைய வேண்டும். ஆஹா! ஆஹா! என்று பாராட்டும் காரியத்தை இப்பொழுது செய்ய வேண்டும். மகிழ்ச்சி இதற்காகத்தான் அடைகிறீர்கள். ஏனென்றால் போதை மற்றும் குஷி நல்லபடியாக நிலைத்திருக்கிறது. இதுவரையிலான ரிசல்ட் மிக நல்லதாக இருக்கிறது. இவர்களுடைய கமான்டர் (தளபதி) மிகவும் தைரியம் நிறைந்தவர். ஏதாவது ஒரு காரியத்தில் ஒருவராவது தைரியம் வைத்து சவாலை ஏற்றுக் கொண்டார்கள் என்றால் மற்றவர்களும் அவருடன் சேர்ந்து விடுகிறார்கள். விதவிதமான குரூப்பாக இருந்தபோதிலும் பூச்செண்டு நன்றாக இருக்கிறது; அதற்காக வாழ்த்துக்க. நல்லது.

**வரதானம்: பிரம்மாபாபாவிற்குச் சமமாக உயர்ந்ததிலும் உயர்ந்த ஓவியத்தை உருவாக்கக்கூடிய பரோபகாரி ஆகுக!**

உயர்ந்த நினைவு மற்றும் உயர்ந்த காரியம் மூலமாக அதிர்ஷ்டத்தின் ஓவியத்தை அனைத்துக் குழந்தைகளும் வரைந்திருக்கிறீர்கள். இப்பொழுது அதற்கான கடைசி டச்சிங் என்பது சம்பூர்ண நிலையை அடைவது மற்றும் பிரம்மாபாபாவிற்குச் சமமாக உயர்ந்ததிலும் உயர்ந்தவராக ஆவது. இதற்காக பரோபகாரி ஆகுங்கள்; அதாவது சுயநல உணர்விலிருந்து எப்பொழுதும் விடுபட்டிருங்கள். ஒவ்வொரு சூழ்நிலையில், ஒவ்வொரு காரியத்தில், ஒவ்வொரு குழுவில் சகயோகியாய் இருக்கும்போதும் எவ்வளவு சுயநலமற்ற நிலை

இருக்குமோ அவ்வளவே பரோபகாரி ஆக முடியும். எப்பொழுதும் தன்னை நிரம்பியவராக அனுபவம் செய்வார்கள். எப்பொழுதும் பிராப்தி சொரூபத்தின் நிலையில் நிலைத்திருப்பார்கள். தனக்காக எதையும் சுவீகாரம் (ஏற்றுக் கொள்ள) செய்ய மாட்டார்கள்.

**சுலோகன்: அனைத்தையும் தியாகம் செய்தவராக ஆவதால்தான் சரளத்தன்மை மற்றும் சகித்துக் (பொறுத்துக்) கொள்ளும் தன்மையின் குணம் வரும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 04.07.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நினைவு செய்வதற்கான சுலபமான விதி!

இங்கு அனைவரும் அமர்ந்திருக்கும்பொழுது எந்த மன நிலையில் நிலைத்திருக்கிறீர்கள்? இந்த நேரம் உங்களுடைய நினைவின் ஸ்டேஜ் (நிலை) என்னவாக இருக்கிறது என்று கூறலாம்? இந்த நிலையில் இரட்டை நினைவு இருக்கிறதா? அல்லது ஒன்று தானா, என்ன நிலை? இந்த நேரத்தின் நிலையை கர்மாதீத் மற்றும் பரிஷ்தா நிலைக்கான நினைவின் நிலை என்று கூறலாமா? யார் அவ்யக்த நிலையைத் தவிர வேறு நிலையைத் தெரிந்திருக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். முழு நாளில் அந்த மாதிரி அவ்யக்த நிலையில் இருந்து காரியம் செய்ய முடியுமா? (இல்லை). இப்பொழுது நீங்கள் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள், இதுவும் கர்மம் (காரியம் செய்வது)தான் இல்லையா? அப்படியானால் இப்பொழுது கர்மம் செய்து கொண்டே அந்த மாதிரி நிலையில் நிலைத்திருக்க முடியாதா? (இப்பொழுது பாபாவின் எதிரில் அமர்ந்திருக்கிறோம்) ஒருவேளை பாபா நம்முடனேதான் இருக்கிறார், எதிரில் இருக்கிறார் என்று நினைத்தீர்கள் என்றால் அந்த நிலை எப்பொழுதுமே இருக்க வேண்டும் இல்லையா? வெளியுலக மனிதர்கள் எப்பொழுது அந்த மாதிரியான சூழ்நிலையில் பிரத்யேக கவனம் வைத்து செல்கிறார்கள் என்றால் இந்த கவனமே அவர்களுக்கு பாதுகாப்பிற்கான சாதனம் ஆகி விடுகிறது. அதே போல் ஏதாவது சாதாரண காரியமும் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் கூட இடையிடையே அவ்யக்த நிலையை வைத்திருப்பதற்கான கவனம் இருக்கட்டும். மேலும் எந்தவொரு காரியம் செய்தாலும் எப்பொழுதும் பாப்தாதாவை தன்னுடைய துணைவன் என்று புரிந்து இரட்டை பலத்தோடு காரியம் செய்தீர்கள் என்றால் என்ன நிலை இருக்கும் என்று கூறுங்கள். நினைவு மிக சுலபமாக இருக்கும். எப்படி இப்பொழுது (நான் பாபாவின்) எதிரில் இருக்கிறேன் என்று புரிந்து கொள்வதினால் சுலபமான நினைவு இருக்கிறது இல்லையா? இதே போல் ஒருவேளை

எப்பொழுதும் ஒவ்வொரு காரியத்தில் தந்தையை தன்னுடைய துணைவனாக புரிந்து நடந்து கொண்டீர்கள் என்றால் இது சுலபமான நினைவு இல்லையா யாராவது ஒருவர் எப்பொழுதுமே உடன் இரு அந்த துணையின் காரணத்தினால் நினைவு தானாக இயல்பாகவே இருக்கிறது இல்லையா? அந்த மாதிரி துணைவன் இருப்பதினால் மற்றும் புத்தியை நிரந்தரமாக சத்தியமானவரின் தொடர்பில் இருக்க வைப்பதினால் நிரந்தரமாக சத்சங் (சத்தியமானவரின் தொடர்பு) இருக்க வேண்டும் இல்லையா? நீங்களோ சத்தியமானவரின் தொடர்பிலேயே இருப்பவர்கள்தான். ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு அடியில் சத்தியமானவரின் தொடர்பு இருக்கிறதுதான் இல்லையா? ஒருவேளை நிரந்தரமாக தன்னை சத்தியமானவரின் தொடர்பில் இருப்பவராக ஆக்கினீர்கள் என்றால் நினைவு சுலடமாக இருக்கு. மேலும் சக்திசாலியான தொடர்பு இருக்கும் காரணத்தினால் ஒவ்வொரு காரியத்திலும் உங்களுக்கு இரட்டை பலம் இருக்கும். இரட்டை பலம் இருக்கும் காரணத்தினால் எந்தக் காரியம் நிலைமையின் கணக்குபடி கடினம் என்று நினைக்கிறீர்களோ அது சுலபமாகி விடும். ஏனென்றால் இரட்டை பலம் ஆகி விட்டது. மேலும் அதே நேரம் ஒரு காரியத்திற்குப் பதிலாக இரண்டு காரியத்தை முடித்து விட முடியும். ஒன்று சுலபமான நினைவு, இரண்டாவது வெற்றி, மூன்றாவது அனைத்து காரியத்திலும் ஊக்கம், உற்சாகம் மற்றும் உதவி கிடைக்கிறது. எனவே நிரந்தரமாக சத்தியமானவரின் தொடர்பில் இருப்பவராக ஆகுங்கள். உங்களிடம் யாராவது வருகிறார் என்றால் நீங்கள் அவரிடம் எப்பொழுதும் சத்தியமானவரின் தொடர்பை வைத்துக் கொள்ளுங்கள் என்று நியமத்தை கூறுகிறீர்கள் இல்லையா? அப்படி தானும் இந்த பயிற்சியை நிரந்தரமாக செய்ய வேண்டியதாக இருக்கும். பின்பு கடினமாக அனுபவம் ஆகும் நினைவு, நினைவில் எப்படி இருப்பது மற்றும் எங்கே நிலைத்திருப்பது போன்ற இந்த எண்ணங்களெல்லாம் முடிவடைந்து விடும். செய்யும் காரியத்தில் வெற்றி சுலபமாக கிடைத்து விடும். இதில் நிராகார ரூபத்தில் தொடர்பில் இருங்கள் அல்லது சாகார ரூபத்தில் தொடர்பை வைத்துக் கொள்ளுங்கள் ஆனால் சத்தியமானவரின் தொடர்பில் இருங்கள். சாகார பாபாவின் சம்மந்தம் கூட முழுக் கல்பத்திற்கும் அழியாததாக இருக்கும் இல்லையா, அப்படி சாகாரத்தின் நினைவோ அல்லது நிராகாரமானவரின் நினைவோ எதுவானாலும் நினைவு அவசியம் இருக்க வேண்டும். பாப்தாதாவின் தொடர்பைத் தவிர

வேறு எந்த தொடர்பும் புத்தியில் இருக்க வேண்டாம். பரிஷ்தா ஆவதற்காக தந்தையுடன் இருக்கும் ரிஷ்தா (உறவு) உறுதியாக இருக்க வேண்டும். ஒருவேளை உங்களுடைய உறவு உறுதியாக இருக்கிறது என்றால் பரிஷ்தாவாக ஆகியே விடுவீர்கள். இப்பொழுது உங்களுடைய உறவை மட்டும் சரி செய்யுங்கள். ஒருவேளை ஒருவருடன் அனைத்து உறவுகளும் இருக்கிறது என்றால் சுலபமாக மற்றும் நிரந்தரமாக ஃபரிஷ்தா ஆகி விடுவீர்கள். மேலும் எங்காவது புத்தி செல்லும் அளவிற்கு வேறு என்னதான் இருக்கிறது. இப்பொழுது ஏதாவது இருக்கிறதா என்ன? அனைத்து உறவு அல்லது அனைத்து சம்மந்தம், அனைத்து பாதைகளும் அடைக்கப்பட்டிருக்கிறதா? பாதை திறந்திருந்தால் புத்தி ஓடும். எப்பொழுது அனைத்து உறவுகளும் அழிந்து, வழியும் அடைக்கப்பட்டிருக்கிறது என்றால் புத்தி எங்கே செல்லும்? ஒரே ஒரு வழி, ஒரே ஒரு ரிஷ்தா என்றால் பின்பு பரிஷ்தா ஆகி விடுவீர்கள். எந்த ராஸ்தா (வழி) மற்றும் ரிஷ்தா (உறவு) இதுவரை முழுமையாக அடைக்கப்படவில்லை என்று சோதனை செய்யுங்கள். கொஞ்சம் திறந்திருந்தாலும் அவ்வழியாக போவதற்கு மனிதர்கள் முயற்சி செய்வார்கள். முற்றிலும் அடைக்கப்பட்டிருந்தால் செல்ல மாட்டார்கள்.

துவாரம் இருந்தால் கூட அதை தொட்டுவிட்டு சென்று விடுவார்கள். இங்கேயும் ஒருவேளை கொஞ்சமாவது பாதை திறந்திருக்கிறது என்றால் புத்தி செல்லும். இப்பொழுது எப்படி மூடுவீர்கள்? அனைத்து பாதைகளையும் மூடுவதற்காக அடிக்கடி சுலபமான யுக்தி கூறிக் கொண்டேயிருக்கிறார். தினசரி முரளியிலும் கேட்கிறீர்கள். நினைவு இருக்கிறதா? நினைவு மறந்த நிலைக்கு நினைவு கொடுக்கக் கூடியது எந்த யுக்தி? ஒரே ஒரு படம் இருக்கிறது, அதில் பாப்தாதா மற்றும் ஆஸ்தி வந்து விடுகிறது. ஒருவேளை இந்தப் படத்தை எப்பொழுதும் எதிரில் வைத்தீர்கள் என்றால் மற்ற அனைத்து பாதைகளும் அடைபட்டுவிடுமா? நீங்கள் என்னென்ன படம் மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றை அச்சிடுகிறீர்கள் என்றால் இந்த பிளாக்கை (அச்சு)தான் போடுகிறீர்கள் இல்லையா. ஒருவேளை இந்த ஒரு பிளாக் புத்தியில் அச்சிடப்பட்டு இருக்கிறது என்றால் அனைத்து பாதைகளும் மூடப்பட்டு விடாதா? இதுதான் சுலபமான யுக்தி. மேலும் அடையாளமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையோ தினந்தோறும் முரளியில் கேட்கிறீர்கள். இந்த யுக்தி இல்லாமல் ஒரு முரளி கூட இருப்பதில்லை,

இது மிகவும் சுலபமானது. சிறு குழந்தைகளுக்குக் கூட இந்தப் படத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள் என்றால் அவர்களும் செய்ய முடியும். பேட்ஜை அணிந்திருக்கிறீர்கள்தான், ஆனால் இப்பொழுது புத்தியில் நினைவு சொரூபமாக ஆகுங்கள். இந்த ஒரு படத்தின் நினைவினால் அனைத்து நினைவுகளும் வந்து விடுகிறது. முழு ஞானத்தின் சாரமும் இந்த ஒரு படத்தில் அடங்கியிருக்கிறது. படைப்பவர் மற்றும் படைப்பின் ஞானத்தினால் இந்த பிராப்தி ஏற்பட்டது இல்லையா? எவ்வளவு இந்த சுலபமான வழிமுறைகளைக் கடைபிடித்துக் கொண்டே இருப்பீர்களோ பின்பு கடின உழைப்பு சரளமானதாக ஆகி விடும். நினைவு என்று எதைக்கூறுவது என்ன நினைவு செய்வது, இது நினைவு தானா? அல்லது இல்லையா? என்று தெரியவில்லை என்று குழப்பம் அடையாதீர்கள். வேண்டுமென்றே உங்களைக் குழப்பம் அடையச் செய்து கொள்கிறீர்கள். நினைவு என்றால் என்ன? தந்தையின் நினைவு அதாவது தந்தையின் காரியம் மூலமாக தந்தையின் நினைவு மற்றும் தந்தையின் குணங்கள் மூலமாக தந்தையின் நினைவு அப்படி அது நினைவாக ஆகி விட்டது இல்லையா? ரூபத்தின் நினைவாக இருந்தாலும் மற்றும் பெயரின், மற்றும் குணத்தின் மற்றும் காரியத்தின் குணமாக இருந்தாலும் ஒரு தந்தையின் நினைவு என்றாகி விட்டது. நீங்கள் அதை மிகக் கூடினமானதாக ஆக்கி விட்டீர்கள். நினைவின் பாடத்தை கடினம், கடினம் என்று சொல்லி பலம் வருவதில்லை. அந்தப் பாடத்திலேயே இருந்து விடுகிறீர்கள். அதை சுலபமானதாக ஆக்குங்கள். பாபாவைத் தவிர வேறு என்ன இருக்கிறது. எப்பொழுது நடைமுறையில் அனைத்து அன்பிற்குரியவராக தந்தையைப் புரிந்து கொண்டீர்கள் என்றால் பிறகு அவரை நினைவு செய்வதற்காக ஏதாவது திட்டம் பற்றி யோசிக்கப்படுமா என்ன? சுலபமான விஷயத்தை யாராவது கடினமாக்கி விடுகிறார்கள் என்றாலும், இன்னும் வேறு பாதை திறந்திருக்கிறது என்றாலும் அடிக்கடி புத்தியை கஷ்டப்பட்டு (பாபாவின் பக்கம்) திருப்ப வேண்டியதாக இருக்கிறது. இதில் களைப்படைந்து விடுகிறீர்கள். தலை பாரமாகி விடுகிறது. கடினம் என்று புரிந்து கடினத்தில் விழுந்து விடுகிறீர்கள். எனவே சுலபமான முறை முதலில் இந்த அனைத்து பாதைகளையும் மூடுங்கள். எப்படி அரசாங்கம் கூட இதை மூடுங்கள் என்று அறிவிக்கிறார்கள் இல்லையா? அது போல் உங்களுக்காக கூட பாப்தாதாவின் கட்டளை இதுதான் முதலில் அனைத்து (பிற, வீணான) பாதைகளையும் மூடுங்கள், பிறகு கடினத்திலிருந்து விடுபட்டு

விடுவீர்கள். சுலபமானதாக ஆகி விடும். பின்பு இயற்கையானதாகி விடும். இந்த கவனம் வைப்பது கடினமா அல்லது சுலபமா? கடினம் இல்லை ஆனால் கடினமாக ஆக்கி விடுகிறீர்கள். ஒருவேளை இந்த கவனத்தை அவ்வப்பொழுது வைத்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்றால் கடினம் இருக்காது. கொஞ்சம் அலட்சியமாக இருந்தே வந்திருக்கிறீர்கள். எனவேதான் இப்பொழுது கடினமாக அனுபவம் ஆகிறது. சிறு வயது பருவத்தில் என்னென்ன விஷயங்கள் கற்றுக் கொடுக்கப்படுகிறதோ அவை சுலபமாக நினைவில் இருக்கும். எவ்வளவு பெரியவராக ஆகிறாரோ பெரிய வயது பருவத்தில் எந்த ஒரு விஷயத்தையும் நினைவில் கொண்டு வருவது கடினமாகி விடுகிறது. இதில் கூட யார் சிறு வயது பருவத்திலிருந்தே இந்த கவனம் வைப்பதற்கான பயிற்சி செய்திருக்கிறார்களோ அவர்களுக்கு இன்று கூட இயற்கையான நினைவின் சார்ட் இருக்கிறது. மேலும் யாரெல்லாம் இந்த (சார்ட்) கவனம் வைட்பதில் ஆரம்பத்திலிருந்து கவனக்குறைவானவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு இப்பொழுதும் கடினமாக அனுபவம் ஆகிறது. இப்பொழுதோ கடந்ததை கடந்ததாக்கி நான் குழந்தையாக இருக்கிறேன், தந்தையின் துணையில் இருக்கிறேன் என்று அப்படி புரிந்து கொள்ளுங்கள். இப்படி நினைப்பதினால் அந்த குழந்தைப் பருவத்தின் வாழ்க்கை நினைவிலிருக்கும். எவ்வளவு இது நினைவில் இருக்குமோ அவ்வளவு உதவி கிடைக்கும். பின்பு கடினமான காரியம் சுலபமாகி விடும். இப்பொழுதிலிருந்தே தன்னை ஒரு நொடி கூட தந்தையிடமிருந்து தனியாக இருக்கிறேன் என்று நினைக்காதீர்கள். தந்தையின் துணையும் இருக்கிறது மேலும் தந்தையின் கை மேல் என்னுடைய கையும் இருக்கிறது என்று எப்பொழுதுமே புரிந்து கொள்ளுங்கள்.

ஒருவேளை யாராவது பெரியவரின் கையில் தமது கை இருக்கிறது என்றால் சிறியவர்களின் நிலை கவலையற்றதாக இருக்கிறது. அப்படி ஒவ்வொரு காரியத்திலும் பாப்தாதா என்னுடனும் இருக்கிறார் மேலும் என்னுடைய இந்த ஆன்மீக வாழ்க்கையின் கை அவருடைய கையில் இருக்கிறது. அதாவது வாழ்க்கை அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். பொறுப்பு அவருடையதாகி விடுகிறது. அனைத்து சுமைகளையும் தந்தை மேல் வைத்து தன்னை லேசாக்கி விட வேண்டும். சுமையே இல்லை என்றால் ஏதாவது கடினம் அனுபவம்

ஆகுமா? சுமையை இறக்குவதற்கு மற்றும் கடினத்தை சகஜமாக ஆக்குவதின் சாதனம் தந்தையின் கை மற்றும் துணை. இது சுலபம்தான் இல்லையா? பின்பு தந்தையின் நினைவு வந்தாலும் சரி அல்லது தாதாவின் (பிரம்மாபாபா) நினைவு வந்தாலும் சரி. தந்தையின் நினைவு வந்தால் கூடவே தாதாவின் நினைவும் இருக்கவே இருக்கும். தாதாவின் நினைவினால் தந்தையின் நினைவும் இருக்கும். பிரிந்திருக்க முடியாது. ஒருவேளை சாகாரத்தின் அன்புடையவராக ஆகி விட்டால் கூட மற்ற அனைத்திலிருந்தும் புத்தி விலகி விடுகிறது இல்லையா? சாகாரத்தின் அன்பானவராக ஆவது கூட குறைந்த விஷயம் இல்லை. சாகாரத்தின் அன்பு கூட அனைத்து அன்பிலிருந்தும் சம்மந்தங்களிலிருந்தும் புத்தியின் நினைவை அகற்றி விடுகிறது. அப்படி அனேக பக்கங்களிலிருந்து அகற்றி ஒரு பக்கத்தில் நிலைத்திருக்கச் செய்வதற்கான சாதனமோ இருக்கிறது இல்லையா? சாகாரத்தின் மூலமாக நிராகாரத்தின் நினைவு வரும். சாகாரத்தின் மேல் அன்பு கூட எப்பொழுது பாப்தாதா இருவரும் சேர்ந்தே இருக்க ஆரம்பித்தார்களோ அப்பொழுதுதான் உருவானது இல்லையா. ஒருவேளை பாப்தாதா சேர்ந்து இல்லாமல் இருந்திருந்தால் சாகார பாபா இவ்வளவு பிரியமானவராக ஆகியிருக்க முடியாது எப்படி பாப்தாதா இருவரும் இணைந்தே இருக்கிறார்கள் அப்படி உங்களுடைய நினைவு கூட இணைந்ததாகவே ஆகி விடும். கடினம் என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள். சகஜயோகியாக ஆகுங்கள். கடின யோகிகளாக (கஷ்டப்பட்டு முயலும்) துவாபரயுகத்தில் இருந்து ஆகியே வந்திருக்கிறீர்கள். ஹடயோகிகளையோ நீங்கள் தவிர்கிறீர்கள் (அந்த வார்த்தையே) தானே? நீங்களும் சகஜயோகி ஆகாது மற்றும் கடினம் என்று கூறினால் பின்போ விஷயம் ஒன்றாகி விட்டது. சகஜயோகி ஆக வேண்டும். சரியான நினைவு இருக்கட்டும், நிரந்தர சகஜயோகி ஆகுங்கள். இடையிடையே தன்னுடைய நிலையை சக்தி நிறைந்ததாக ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். மேடையில் இருக்கிறீர்கள் அவ்வப்பொழுது இந்த நினைவின் நிலையை சக்திசாலியாக ஆக்குவதற்காக பலத்தை நிரப்பிக் கொண்டே இருங்கள். இறங்கும் கலை இப்பொழுது முடிந்து விட்டது இல்லையா? அல்லது இப்பொழுதும் இருக்கிறதா? அப்படியானால் ஏறும் கலையில் வந்து விட்டீர்கள் இல்லையா. ஒரு நாளின் நடவடிக்கைகளை யோசித்துப் பாருங்கள் சாகார பாபாவின் நினைவு இருக்கும் அல்லது நிராகார தந்தையின் நினைவு இருக்கும். காரியங்கள் கூட யக்ஞத்தின்

காரியங்கள்தான் இல்லையா? யக்ஞ தந்தை மூலமாகத்தான் யக்ஞத்தின் படைப்பு ஏற்பட்டது. அப்படி யக்ஞ காரியங்கள் என்ற வார்த்தை சொல்வதினால் தந்தையின் நினைவு வந்து விட்டது இல்லையா? எப்பொழுதும் காரியங்கள் செய்கிறீர்கள் என்றால் ஈஸ்வரிய சேவையில் இருக்கிறேன் அல்லது யக்ஞ காரியத்தில் இருக்கிறேன் என்று புரிந்து கொள்ளுங்கள். ஒன்று நேரடியாக பாவத்தை அழிக்கும் நிலையில் நிலைத்திருந்து முழு சக்தியோடு பாவங்களை அழிப்பது, இரண்டாவது முறை எவ்வளவிற்கு எவ்வளவு சுத்த எண்ணம் மற்றும் சிந்தனை சக்தியினால் தன்னுடைய புத்தியை பிஸியாக வைப்பீர்களோ, என்னென்ன சக்திகள் சேமிப்பாகிறதோ, அதனால் பாவங்கள் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து இல்லாமல் ஆகி விடும்.

புத்தியில் இதை நிரப்புவதினால் முதலிலிருந்த அது தானாகவே வெளியாகும். ஒன்று முதலில் அனைத்தையும் வெளியில் எடுத்து பிறகு நிரப்புவது இன்னொன்று இதை நிரப்புவதினால் எடுப்பது. ஒருவேளை காலி செய்வதற்கு தைரியம் இல்லை என்றால் இரண்டாவதை நிரப்பிக் கொண்டே இருப்பதினால் முதலில் உள்ளது தானாகவே அழிந்து விடும். அந்த நிலை அதுவாகவே உருவாகிக் கொண்டே இருக்கும். ஒரு பக்கம் நிரம்பிக் கொண்டே இருக்கும், இன்னொரு பக்கம் காலியாகிக் கொண்டே இருக்கும். பிறகு எந்த நிலையை விரும்புகிறீர்களோ அது இயற்கையானதாக ஆகி விடும். எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது ஆகி விடும். முழு பலத்தோடு காலி செய்வதற்கான நிலை இல்லை என்றால் இன்னொரு வழியும் இருக்கிறது இல்லையா? நிரப்பிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் அது தானாக காலியாகிக் கொண்டே இருக்கும். இப்பொழுது ஏறும் கலை என்ற இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அனைத்து பாதைகளும் மூடப்பட்டு இருக்கின்றன என்றால் புத்தி எங்கேயும் போக முடியாது. யக்ஞ காரியங்கள் மற்றும் கர்மனா (உடல் மூலம் செய்யும்) சேவைக்கும் மதிப்பெண்கள் இருக்கிறது இல்லையா. இருந்தாலும் கௌரவமாகத் தேர்ச்சி பெறுவதில் அந்த நூறு மதிப்பெண்கள் கூட உதவியாக இருக்கும் இல்லையா ஆனால் எந்த நேரம் காரியங்கள் மற்றும் வாய்மொழிச் சேவை செய்கிறோம் என்றால் இது ஈஸ்வரிய சேவை என்ற இந்த லட்சியம் வைக்க வேண்டும், இது அவசியம் ஆகும். இது (யக்ஞ) காரிய நடவடிக்கைகள் அப்படியானால் யக்ஞத்தை படைப்பவரின் நினைவு தானாக வரும் இதுபோக வேறு

ஏதேனும் காரியம் செய்தீர்கள் என்றாலும் அந்தக் காரியத்திற்கு தன்னை நிமித்தமாக (பொறுப்பாக) ஆக்கக்கூடிய பேக் போன் (முதுகெலும்பு) யார் என்று நினையுங்கள். நான் நிமித்தமாகத்தான் இருக்கிறேன் ஆனால் பேக் போன் யார்? பேக் போன் இல்லாமல் நீங்கள் இந்த உடலில் இருக்க முடியுமா? பேக் போன் இல்லாமல் நீங்கள் எந்தவொரு காரியத்திலும் வெற்றியும் அடைய முடியாது. எந்த காரியம் செய்தாலும் நான் ஒரு கருவி செய்விப்பவர் யார் என்று இதை யோசியுங்கள். ப்படி பக்தி மார்க்கத்தில் செய்பவர்-செய்விப்பவர் என்ற வார்த்தையை உச்சரித்துக் கொண்டே இருந்தோம் ஆனால் அதை வேறு அர்த்தத்தில் சொல்லிக் கொண்டிருந்தார்கள் ஆனால் இந்த நேரம் என்ன காரியம் செய்தாலும் அதில் செய்பவர்-செய்விட்பவரோ இருக்கிறார் இல்லையா, செய்விப்பவர் தந்தை, செய்பவர் பொறுப்பிலிருக்கும் கருவி ஆவார். ஒருவேளை இதை நினைவில் வைத்து காரியம் செய்தீர்கள் என்றால் இது சுலபமான நினைவாக ஆகவில்லையா? நிரந்தர யோகியாகவில்லையா? இருந்தாலும் சிரிப்பில் கீழே வந்தாலும் கூட எப்படி மேடையில் ஏதாவது நடிகர் இருக்கிறார் என்றால் பார்வையாளர் நன்மைக்காக நகைச்சுவை பாத்திரத்தைச் செய்தேன் என்று புரிந்து கொள்வார்கள். பின்பு தன்னுடைய நிலையில் முற்றிலும் இப்பொழுது இந்த பங்கைச் செய்தேன் மற்றும் இப்பொழுது இந்த பங்கை செய்கிறேன் என்று அனுபவம் ஆகும். விளையாட்டாக அனுபவம் ஆகும். பார்வையாளராக பங்கை செய்து கொண்டிருக்கிறேன் என்பது போல் அனுபவம் ஆகும். அப்படியானால் சகஜயோகியாக ஆகி விட்டீர்கள் இல்லையா. நினைவையும் எளிதானதாக ஆக்குங்கள். எப்பொழுது நினைவிற்கான கோர்ஸ் (பாடம்) சுலபமாகி விடுமோ அப்பொழுது யாருக்காவது கோர்ஸ் கொடுப்பதில் நினைவின் ஃபோர்சும் (சக்தி) நிரப்ப முடியும். கோர்ஸ் மட்டும் கொடுப்பதினால் பிரஜை உருவாகிறார்கள் ஆனால் ஃபோர்சுடன் சேர்ந்த கோர்ஸ் கொடுப்பதினால் நெருக்கமான சம்மந்தத்தில் வருகிறார்கள். முற்றிலும் நியாரா மற்றும் பியாராவாக (விலகிய மற்றும் அன்பானவராக) அனுபவம் செய்வார்கள். அப்படியானால் அனைவரும் சகஜயோகிகள். கஷ்டப்படாதீர்கள். 63-பிறவிகள் கடினத்தைப் பார்த்து பார்த்து இந்த ஒரு பிறவியின் சுலபமான முயற்சியில் கூட ஒருவேளை கஷ்டங்களிலேயே இருக்கிறீர்கள் என்றால் சுலபமான மற்றும் இயல்பானதை எப்பொழுது அனுபவம் செய்வீர்கள். இதை சகஜயோகம் என்றும் கூறுகிறீர்கள் இல்லையா? கடின யோகாவோ இல்லை. இந்த சகஜயோகா அங்கு சகஜ

இராஜ்யம் செய்விக்கும். அங்கேயும் எந்தவொரு கடினமும் இருக்காது. இங்கே உள்ள சம்ஸ்காரத்தைத்தான் அங்கே எடுத்துச் செல்வீர்கள். ஒருவேளை கடைசி வரையிலும் கடினத்தின் சம்ஸ்காரம் இருக்கும் என்றால் அங்கே சகஜமாக இராஜ்யம் எப்படி செய்வீர்கள். தேவதைகளின் படங்களை வரைபவர்கள் அவர்களுடைய முகத்தில் சரளத்தன்மையை அவசியம் காண்பிப்பார்கள். இந்த விசே குணத்தைக் காண்பிக்கிறார்கள். லட்சணங்களில் சரளத்தன்மை இதைத்தான் நீங்கள் வெகுளியான நிலை என்று கூறுகிறீர்கள். எவ்வளவிற்கு யார் எளிதான முயற்சியாளராக இருப்பாரோ அவர் மனதளவிலும் சரளம், வார்த்தைகளிலும் சரளம், காரியத்திலும் சரளமாக இருப்பார், இவரைத்தான் பரிஷ்தா என்று கூறுவார்கள். நல்லது

**வரதானம்: பரமாத்மா நினைவு என்ற மடியில் எப்பொழுதும் அமர்ந்திருக்கக்கூடிய சங்கமயுக உயர்ந்த பாக்கியவான் ஆத்மா ஆகுக!**

சங்கமயுகம் சத்யுகத்து சொர்க்கத்தை விட உயர்ந்ததாகும். ஏனென்றால் இல்லை என்ற ஒரு பொருள் கூட பிராமணர்களின் உலகத்தில் இல்லை என்பது இப்பொழுதிற்கான மஹிமை ஆகும். ஒரு தந்தை கிடைத்தார் என்றால் அனைத்தும் கிடைத்தது. இப்பொழுது நீங்கள் குழந்தைகள் சில நேரம் அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடுகிறீர்கள், சில நேரம் குஷி, சில நேரம் அமைதி, சில நேரம் ஞானம், சில நேரம் ஆனந்தம் மற்றும் சில நேரம் பரமாத்மாவின் மடி என்ற ஊஞ்சலில் ஆடுகிறீர்கள். நினைவின் அன்பில் ஐக்கியமான நிலைதான் பரமாத்மாவின் மடி ஆகும். இந்த மடி ஒரு நொடியில் அனேக ஜென்மங்களின் துக்கம் வேதனைகளை மறக்கச் செய்து விடுகிறது. எனவே இந்த உயர்ந்த சம்ஸ்காரத்தை எப்பொழுதும் நினைவில் வைத்து பாக்கியவான் ஆத்மா ஆகுங்கள்.

**சுலோகன்: பாபா உங்களுடைய பாடலை பாடட்டும், மேலும் நீங்கள் பாபாவின் பாடலைப் பாடுங்கள், அந்த மாதிரி தகுதியுடைய குழந்தை ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.07.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விஷ்வ கல்யாணகாரி ஆவதற்கான முக்கிய தாரணைகள்!

இன்று இந்த குழுவை எப்படிப்பட்டக் குழு என்று கூறலாம்? குஜராத்தின் குழுவா? தன்னைத்தான் குஜராத்தைச் சார்ந்தவன் என்று நினைக்கவில்லை தானே? தந்தை எவ்வாறு எல்லையற்ற மாலிக் (எஜமானர்) ஆக இருக்கின்றாரோ அதுபோன்று எங்கு வேண்டுமென்றாலும் நிமித்தமாக இருக்கலாம் ஆனால் விஷ்வ கல்யாணகாரியாக இருக்க வேண்டும். திருஷ்டி மற்றும் விருத்தி அதாவது நினைவில் விஷ்வ கல்யாணகாரி என்ற பாவனை சதா இருக்கின்றதா? அல்லது குஜராத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற பாவனை இருக்கின்றதா? குஜராத்தில் இருந்தாலும் லட்சியம் உலகத்திற்கு என்று இருக்கின்றது அல்லவா? எல்லையற்ற சேவையில் இருக்கின்றீர்கள் அல்லவா? இது நிமித்தமாக கொடுக்கப்பட்ட கடமையாகும், அதனை நிமித்தமாக ஆகி செய்து கொண்டிருக்கின்றீர்கள் ஆனால் எந்த போதை இருக்கின்றது? நாம் விஷ்வ கல்யாணகாரி என்று தானே வர்ணனை செய்கின்றீர்கள். உலகை மாற்ற வேண்டும். எந்த சேவை செய்தாலும் அல்லது சேவைக்கான சாதனங்களை உருவாக்கினாலும் அதில் உலகம் என்ற சப்தத்தை எழுதுகின்றீர்கள் அல்லவா! உலகை புதிதாக ஆக்கக் கூடியவர்களாக இருக்கின்றீர்கள். உலக மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. ஒரு இடத்தில் ஒலி எழுப்பினால் அது நாலா புறமும் பரவி விடும் அல்லவா! நிமித்தமாக ஒரு ஸ்தானத்தில் ஒலி எழுப்பச் செய்கின்றீர்கள், ஆனால் அது நாலா புறமும் பரவி விடுகின்றது அல்லவா! ஆக விஷ்வ கல்யாணகாரி ஆவதற்காக முக்கியமாக இரண்டு தாரணைகள் அவசியமானது. அதன் மூலம் எல்லைக்குட்பட்டதில் இருந்தாலும் கூட எல்லையற்ற கல்யாணகாரியாக ஆக முடியும். அந்த தாரணை இல்லையெனில் அவர்களது சப்தங்கள், (சொற்கள்) அவர்களது திருஷ்டி எல்லையற்ற உலகின் பக்கம் சென்றடைய முடியாது. விஷ்வ கல்யாணகாரி ஆவதற்கு எந்த இரண்டு தாரணைகள் தேவை? நீங்கள்

எந்த இரண்டு தாரணைகளின் ஆதாரத்தில் விஷ்வ கல்யாண காரியத்தை செய்து கொண்டிருக்கின்றீர்கள்? விஷ்வ கல்யாணத்திற்கான சுப பாவனையின் பிரத்யட்க்ஷ பலன் கண்டிப்பாக கிடைக்கின்றது. பாவனைக்கான பலன் பக்தி மார்க்கத்திலும் கிடைக்கின்றது ஆனால் அது அல்பகாலத்திற்கானது, இங்கு சதா காலத்திற்கானது. அந்த பிரத்யட்க்ஷ பலன் அடைவதற்கான முக்கிய இரண்டு தாரணைகள் எது? தாரணை இல்லாமல் தனது அல்லது சேவையில் முன்னேற்றம் ஏற்பட முடியாது. அதனை செய்து கொண்டிருக்கின்றீர்கள், மேலும் செய்தே ஆக வேண்டும். செய்வோம் என்ற சப்தமும் கூடாது. செய்தே ஆக வேண்டும். இரண்டு முக்கிய தாரணைகள் ஈஸ்வரிய ஜொலிப்பு மற்றும் கூடவே கருணை. ஜொலிப்பு மற்றும் கருணை இரண்டும் கூடவே இருந்தால் மற்றும் சமமாக இருந்தால், இரண்டு குணங்களின் சமான நிலையின் மூலம் ஆன்மீக நிலை உருவாகி விடும். இதனையே ஆன்மீகம் அல்லது ஆன்மீக நிலை என்று கூறப்படுகின்றது. ஜொலிப்பும் முழுமையாக இருக்க வேண்டும் மற்றும் கருணையும் முழுமையாக இருக்க வேண்டும். இப்பொழுது ஜொலிப்பை விட்டு விட்டு கருணை மட்டுமே காண்பிக்கின்றீர்கள் அல்லது கருணையை விட்டு விட்டு ஜொலிப்பில் மட்டும் வருகின்றீர்கள். ஆகையால் இரண்டின் சமநிலையின் மூலம் உருவாகும் ஆன்மீக ஸ்திதியில் குறை ஏற்பட்டு விடுகின்றது. ஆகையால் எந்த காரியங்கள் செய்தாலும் அல்லது வாயின் மூலம் உரையாடல் செய்து கொண்டிருந்தாலும் கருணை மற்றும் ஜொலிப்பு இரண்டும் சதா சமமாக இருக்கின்றதா? என்று முதலில் சோதனை செய்யுங்கள். இரண்டையும் சமம் ஆக்குவதன் மூலம் ஒன்று தனது சுவ மானத்தை தானே வைத்துக் கொள்ள முடியும் மற்றொன்று அனைத்து ஆத்மாக்களிடமிருந்தும் சுவமானம் பிராப்தியாக கிடைக்கும். சுவமானத்தை விட்டு விட்டு மானத்திற்கான (மரியாதை) இச்சை வைப்பதன் மூலம் வெற்றி கிடைப்பது கிடையாது. மானத்திற்கான இச்சையை விட்டு சுவமானத்தில் நிலைத்து விட்டால் மானம் (மரியாதை) நிழல் போன்று உங்கள் பின்னால் வரும். எவ்வாறு பக்தர்கள் தங்களது தேவதை அல்லது தேவிகளின் பின்னால் குருட்டு நம்பிக்கையுடன் ஓடுகின்றனர்! அது போன்று சைத்தன்ய சொரூபத்தில் சுவமானில் நிலைத்திருக்கும் ஆத்மாக்களின் பின்னால் அனைத்து ஆத்மாக்களும் மானம் கொடுப்பதற்கு ஓடி வருவார்கள். பக்தர்களின் ஓட்டத்தைப் பார்த்திருக்கின்றீர்களா? உங்களது

நினைவுச்சின்னமாக ஜடச்சித்திரம் இருக்கின்றது. அதிலும் சிற்பிகள் முக்கியமாக ஒருபுறம் சக்திகளின் ஜொலிப்பை மிக ஆக்ரோஷமாக காண்பிக்கின்றனர். மேலும் கூடவே கருணையையும் காண்பிக்கின்றனர். ஒரே சித்திரத்தில் இரண்டு உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றனர் அல்லவா! இவ்வாறு ஏன் செய்கின்றனர்? ஏனெனில் நடைமுறையில் நீங்கள் ஜொலிப்பானவர்களாக மற்றும் கருணையுள்ளம் உடைய மூர்த்திகளாக ஆகியிருக்கின்றீர்கள். ஆக ஜடச் சித்திரத்திலும் கூட முக்கிய இந்த தாரணைகளைக் காண்பிக்கின்றனர். ஆக நீங்கள் இப்பொழுது சேவையில் இருக்கின்றீர்கள். சேவையின் பிரத்யக்ஷ பலனிற்கு ஆதாரம் இந்த இரண்டு முக்கிய தாரணைகளில் மீது இருக்கின்றது. கருணையுள்ளம் உடையவர்களாக கண்டிப்பாக ஆக வேண்டும் ஆனால் எதன் ஆதாரத்தில்? மற்றும் எப்பொழுது? இதையும் பார்க்க வேண்டும். ஜொலிப்பு கண்டிப்பாக கொண்டு வர வேண்டும், ஆனால் எப்படி மற்றும் எந்த முறையில் பிரத்யக்ஷம் செய்ய வேண்டும்? என்பதையும் பார்க்க வேண்டும். ஜொலிப்பு என்பது வர்ணனை செய்வதன் மூலம் அல்லது காண்பிப்பதன் மூலம் தென்பட்டு விடாது. ஜொலிப்பானது கண், முகம் மூலமாக தானாகவே தனது சாட்ஷாத்காரத்தை செய்வித்து விடும். ஒருவேளை இதைப் பற்றி வர்ணனை செய்கின்றீர்கள் எனில் ஜொலிப்புக்குப் பதிலாக பெருமை தென்பட்டு விடும். பெருமையை காண்பிக்காதீர்கள், ஜொலிப்பில் இருங்கள்.

அச்சமூட்டுதலை அகங்காரம் அல்லது கோபத்தின் வம்சாவளி என்று கூறுவர். ஆகையால் அச்சமூட்டுதலை (மிரட்டல்) காண்பிக்காதீர்கள் ஆனால் கண்டிப்பாக ஜொலிப்பில் இருக்க வேண்டும். எந்த அளவிற்கு கருணையுள்ளத்தின் கூடவே ஜொலிப்பில் இருக்கின்றீர்களோ பிறகு மிரட்டுதல் அழிந்து விடும். யார், எப்படிப்பட்ட ஆத்மாவாக வேண்டுமென்றாலும் இருக்கட்டும், அச்சமூட்டக் கூடிய ஆத்மாவாகவும் இருக்கட்டும், ஜொலிப்பு மற்றும் கருணையுள்ளம் உடையவர்களாக ஆவதன் மூலம் ஒருபொழுதும் தற்பெருமையின் உச்சத்தில் வரமாட்டார்கள். சூழ்நிலை இவ்வாறு இருந்ததால் அல்லது இப்படிப்பட்ட வார்த்தைகள் கூறியதால்தான் இதைச் செய்ய வேண்டியிருந்தது என்று இருக்கக் கூடாது. செய்தே ஆக வேண்டியிருக்கும், இவ்வாறு நடக்கவே செய்யும், இப்பொழுது சம்பூர்ணம் ஆகவில்லை. இந்த சப்தங்கள்

அதாவது மொழி இந்த குழுவில் இருக்கக் கூடாது. ஏனெனில் நீங்கள் சேவைக்கு நிமித்தமானவர்களாக இருக்கின்றீர்கள். ஆகையால் இந்த குழுவை மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்கள் மற்றும் சேவாதாரிகள் வெற்றியான குழு என்று கூறலாம். யார் வெற்றியாளர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் எதையும் காரணமாக ஆக்கமாட்டார்கள். அவர்கள் காரணங்களை நிவாரணமாக மாற்றி விடுவர். காரணங்களை எதிரில் வைக்க மாட்டார்கள். மாஸ்டர் ஞானம் நிறைந்தவர், வெற்றி நிறைந்த ஆத்மாக்கள் எந்த காரணங்களின் மீதும் வெற்றி அடைய முடியாதா? யார் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்களாக, வெற்றியாளர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் தனது ஞான சக்தியினால் காரணத்தை நிவாரணமாக மாற்றி விடுவார்கள். பிறகு காரணம் அழிந்து விடும். நிமித்தமாக ஆகக் கூடியவர்கள் விசேஷமாக தனது ஒவ்வொரு எண்ணத்தின் மீதும் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். ஏனெனில் நிமித்தமாக இருக்கும் ஆத்மாக்களின் மீதுதான் அனைவரின் பார்வையும் இருக்கும். ஒருவேளை நிமித்தமாக இருக்கின்றவர்களே இவ்வாறு காரணங்களைக் கூறி நடந்தால் உங்களைப் பார்த்து முன்னேறக் கூடிய மற்றவர்கள் உங்களுக்கு என்ன பதில் கூறுவார்கள்? இந்த காரணத்தினால் நாம் வர முடியாது, நடக்க முடியாது. தானே காரணத்தைக் கூறக் கூடியவர்கள் எனில் மற்றவர்களின் காரணத்தை நிவாரணம் எப்படி செய்வீர்கள்? ஏனெனில் மனிதர்கள் அனைத்தையும் அறிந்தவர்களாக ஆகி விட்டனர். எவ்வாறு இங்கு நாளுக்கு நாள் ஞானம் நிறைந்தவர்களாக ஆகிக் கொண்டிருக்கின்றீர்களோ அது போன்றே மனிதர்களும் விஞ்ஞான சக்தியின் மூலம், விஞ்ஞான முறைப்படி ஞானம் நிறைந்தவர்களாக ஆகிக் கொண்டே இருக்கின்றனர். அவர்கள் உங்களது சங்கல்பங்களையும் நெற்றியின் மூலம், கண்களின் மூலம், மூகத்தின் மூலம் சோதித்து விடுகின்றனர். எவ்வாறு இங்கு ஞான சக்தி நிறைக்கப்படுகின்றதோ, அங்கும் விஞ்ஞான சக்தி குறைந்தது கிடையாது. இரண்டிற்கும் வேகம் (சர்ழ்ஶ்ரீங்) இருக்கின்றது. நிமித்தமானவர்களிடத்தில் ஏதாவது குறையிருந்தால் அதனை மறைக்க முடியாது. ஆகையால் நிமித்தமாக ஆகியிருக்கும் ஆத்மாக்கள் நீங்கள் விசேஷமாக தனது எண்ணம், சொல் மற்றும் செயலின் மீது கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது. ஒருவேளை கவனம் செலுத்தவில்லை எனில் உங்களது முகத்தில் டென்சனுக்கான ரேகைகள் தென்படும். இவர்கள் என்னென்ன பாக்கியத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்

என்பதை ரேகைகளின் மூலம் மனிதர்கள் அறிந்து கொள்கின்றனர். ஆக கவனம் (ஹற்ற்ங்ய்ற்ண்ர்ய்) குறைவாக இருந்தால் முகத்தில் டென்சனுக்கான ரேகைகள் தென்படும். மாயையின் ஞானம் நிறைந்த அவர்கள் இதனை அறிந்து கொள்கின்றனர். அவர்களும் குறைந்தவர்கள் அல்ல. சில நேரங்களில் சோம்பலின் காரணத்தினால் நீங்கள் உங்களை கண்டறிய முடியாமல் போகலாம் ஆனால் இந்த விசயத்தில் அவர்கள் உங்களை விட வேகமானவர்களாக இருக்கின்றனர். ஏனெனில் அவர்களது தொழிலே இதுதான். ஆகையால் நிமித்தமாக இருக்கக் கூடியவர்கள் அந்த அளவிற்கு பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். ஏதாவது விசயம் கடினமாக தோன்றுகின்றது எனில் கண்டிப்பாக ஏதாவது குறை இருக்கின்றது. தன் மீது தானே நிச்சயபுத்தியுடையவர்களாக ஆவதில் சில நேரங்களில் சில தவறுகள் செய்து விடுகின்றீர்கள். தந்தையின் மீது 100 சதவிகிதம் நிச்சயம் இருக்கின்றது. அதாவது நிச்சயபுத்தியுடைய நீங்கள் மட்டும் ஒருபுறம். மறுபுறம் முழு உலக ஆத்மாக்கள் இருந்தாலும் ஏற்றத்தாழ்வு ஏற்பட முடியாது. அதே போன்று தெய்வீக அல்லது ஈஸ்வரிய ஆத்மாக்களின் மூலம் அல்லது உலக ஆத்மாக்களின் மூலம் ஏற்றத் தாழ்வு ஏற்படுத்துவதற்கு ஏதாவது காரணம் உருவானாலும் உங்களுக்கு தன் மீது நிச்சய புத்தியில் குறைவு ஏற்படக் கூடாது. ஆகையால் ஜொலிப்பின் கூடவே கருணையும் வைக்க வேண்டும். வெறும் ஜொலிப்பு மட்டும் கூடாது கருணையும் வேண்டும்.

நிச்சயபுத்தியுடன் நன்மைக்கான பாவனை வைப்பதன் மூலம் திருஷ்டி மற்றும் விருத்தி இரண்டும் மாறி விடுகின்றது. எப்படிப்பட்ட கோபமான மனிதன், எதிர்க்கக் கூடியவர் அல்லது நிந்தனை செய்யக் கூடியவர், திட்டக் கூடியவராக இருக்கலாம், ஆனால் நன்மைக்கான பாவனை ஒவ்வொரு ஆத்மாவின் மீதும் இருக்கின்றது எனில் பெருமை என்பது மாறி கருணை ஆகி விடும். பிறகு ரிசல்ட் எப்படியிருக்கும்? அவரை அசைக்க முடியுமா? அந்த சுப சங்கல்பத்திற்கான பாவனை அவர்களது சம்ஸ்காரங்களை மாற்றம் செய்வதற்கான பலன் காண்பிக்கும். சில விதைகளின் மூலம் உடனடியாக பழம் கிடைக்கின்றன. சில உடனயாகப் பழம் கொடுக்காது, சிறிது காலம் தேவைப்படுகின்றது. இவ்வாறு கண்டிப்பாக ஏற்படுகின்றது. பழம் வெளிப்படுவதே கிடையாது என்று இதில் தைரியத்தை இழந்து விடக்கூடாது. அனைத்து பழங்களும் உடனடியாக வெளிப்படுவது கிடையாது. சில விதைகள் இயற்கையான

மழை பொழிகின்ற பொழுதுதான் காய் கனிகளைக் கொடுக்கின்றது. தண்ணீர் கொடுப்பதன் மூலம் வெளிப்படுவது கிடையாது. இதுவும் நாடகத்தில் பதிவாக்கப்பட்டதாகும். இப்பொழுது அழிவற்ற விதையை தெளித்துக் கொண்டிருக்கின்றீர்கள். சில உடனடிப் பலன்களை வெளிப்படுத்தும். சில எப்பொழுது இயற்கை சீற்றங்கள் ஏற்படுகின்றதோ, நாடகத்தின் காட்சிகளில் மாற்றம் ஏற்படப் போகின்றதோ, அந்த இயற்கையான வாயுமண்டலம், சூழ்நிலையானது அந்த விதையிலிருந்து பலனை வெளிப்படுத்தும். விநாசம் ஏற்படும் இது உத்திரவாதம் ஆகும். விதையே அழிவற்றது என்கிற பொழுது பலன் ஏற்படவில்லை என்பது இருக்கவே முடியாது ஆனால் சிலர் நெருக்கத்தில் வருகின்றனர், சிலர் பின்னால் வரக் கூடியவர்கள் எனில் அவர்கள் இப்பொழுது எப்படி வருவார்கள்? அந்த பலன் பின்னால் கிடைக்கும். ஆகையால் சேவை செய்தும் அது வீண் ஆகி விட்டதே என்று பார்க்கவோ அல்லது சிந்திக்கவோ கூடாது. வரிசைக்கிரமமான நேரத்தின்படி பலன்கள் தென்பட்டுக் கொண்டே இருக்கும்.

ஆக இது வெற்றியாளர்களின் குழு, ஞானம் நிறைந்த குழு, சேவாதாரிகளின் குழுவாகும். இது முத்திரையாகும். தனது இந்த டிரேட் மார்க்கை சதா பார்த்துக் கொண்டே இருங்கள். திரிமூர்த்தி முத்திரை குத்தப்பட்டு விட்டது அல்லவா! மேலும் இதே நினைவில் இருந்து சேவையின் ஒவ்வொரு அடியையும் பல மடங்கு வருமானமாக மாற்றிக் கொண்டே செல்லுங்கள். ஒவ்வொரு சங்கல்பத்தின் மூலம் பல மடங்கு வருமானம் சேமிப்பாகின்றதா? என்று சோதனை செய்யுங்கள். ஒவ்வொரு பேச்சின் மூலம், ஒவ்வொரு காரியத்தின் மூலம், ஒவ்வொரு அடியின் மூலம் பல மடங்கு வருமானத்தை சேமிப்பு செய்தேனா? இல்லையெனில் ஒவ்வொரு அடியிலும் பதம் என்று ஏன் கூறப்பட்டிருக்கின்றது? பதம் என்று தாமரை மலரையும் கூறப்படுகின்றது அல்லவா! ஆக பதம் போன்று ஆகி நடப்பதன் மூலம் ஒவ்வொரு சங்கல்பம் மற்றும் ஒவ்வொரு அடியிலும் பலமடங்கு (பதம்) வருமானம் செய்ய முடியும். ஒரு சங்கல்பமும் கூட வருமானமின்றி இருக்காது, இப்பொழுது இவ்வாறு கவனம் செலுத்தக் கூடிய நேரமாகும். ஒரு அடியும் கூட பல மடங்கு வருமானமின்றி இருந்து விடக் கூடாது. நிமித்தமாக இருக்கக் கூடிய குழு அல்லவா! கிரீடதாரிகளாக ஆகியே தீர வேண்டும். எந்த அளவிற்கு தனது பொறுப்பு என்ற கிரீடத்தை தாரணை செய்கின்றீர்களோ அந்த அளவிற்கு

மற்றவர்களது பொறுப்பு என்ற கிரீடத்தையும் தாரணை செய்ய முடியும். நிமித்த ஆசிரியர்களின் மீது அனைவரின் பார்வையும் அதிகமாக இருக்கின்றது. எதிரில் உதாரணமானவர்களாக நீங்கள் இருக்கின்றீர்கள். ஆகையால் அதிகமான பொறுப்பு உங்கள் மீது இருக்கின்றது. நீங்கள் ஒரு கண்ணாடியைப் போன்று அவர்கள் முன் இருக்கின்றீர்கள். உங்களது ஞானம் ஸ்திதி என்ற கண்ணாடி மூலம் உங்களது சொரூபத்தின் சாட்சாத்காரம் செய்விக்கக் கூடிய கண்ணாடியாக நீங்கள் இருக்கின்றீர்கள். ஆக எந்த அளவிற்கு கண்ணாடி சக்திசாலியாக இருக்கின்றதோ அந்த அளவிற்கு சாட்ஷாத்காரம் தெளிவாக இருக்கும். ஆக அவர்களது நினைவு சக்திசாலியாக இருக்கும். யாராவது எதிரில் வந்தால் அவர்கள் தங்களது சாட்ஷாத்காரத்தை அந்த அளவிற்குத் தெளிவாகப் பார்க்க வேண்டும் அதாவது அந்த நினைவை அவர்கள் ஒருபொழுதும் மறந்து விடக் கூடாது அப்படிப்பட்ட கண்ணாடிகளாக ஒவ்வொருவரும் இருக்க வேண்டும். தனது தேகத்தின் சாட்ஷாத்கார் பார்த்த பின்பு மறக்கின்றீர்களா? தேகத்தின் நினைவு அழிவற்றதாக இருக்கின்ற பொழுது இதனையும் அந்த அளவிற்கு சாட்ஷாத்காரம் ஏற்படுத்துங்கள், அதாவது அந்த நினைவு ஒருபொழுதும் மறந்து விடக் கூடாது. சக்திசாலியான கண்ணாடி ஆவதற்கு முக்கிய தாரணை எது? எந்த அளவிற்கு சுயம் சமர்ப்பணத்துடன் இருக்கின்றீர்களோ அந்த அளவிற்குத்தான் கண்ணாடி சக்திசாலியாக இருக்கும். சமர்ப்பணமாக ஆகியிருக்கின்றீர்கள், ஆனால் என்ன சங்கல்பம் செய்கின்றீர்களோ, எந்த அடி எடுத்து வைக்கின்றீர்களோ அதனை முதலில் தந்தையின் முன் அர்ப்பணம் செய்யுங்கள். எவ்வாறு போக் வைக்கின்ற பொழுது தந்தையின் முன் அர்ப்பணம் செய்கின்றீர்கள் அல்லவா! அதில் சக்தி நிறைந்து விடுகின்றது. ஆக இதனையும் அவ்வாறு ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு அடியும் தந்தைக்கு அர்ப்பணம் செய்யுங்கள். என்ன செய்தீர்களோ, என்ன சிந்தித்தீர்களோ தந்தையின் நினைவில் அதாவது தந்தையின் காரிய கடமையின் நினைவு இருக்க வேண்டும். எந்த சமர்ப்பண சம்ஸ்காரம் இருக்கின்றதோ அந்த அளவிற்கு சக்திசாலியான கண்ணாடி ஒவ்வொரு சங்கல்பமும் நிமித்தமாகி செய்வீர்கள், ஆக நிமித்தம் ஆவது என்றால் அர்ப்பணம். பணிவுடன் இருப்பவர்கள் தலை வணங்குவார்கள். எந்த அளவிற்கு சம்ஸ்காரங்களில், சங்கல்பங்களில் தலை வணங்குகின்றோமோ அந்த அளவிற்கு உலகம் உங்கள் முன் தலை வணங்கும். வணங்குதல் என்றால் வணங்க வைப்பதாகும்.

சம்ஸ்காரங்களிலும் வளைய வேண்டும். மற்றவர்களும் என் முன்னால் சிறிதாவது வணங்க வேண்டும் என்ற சங்கல்பமும் இருக்கக் கூடாது. நாம் வணங்கினால் அனைவரும் வணங்குவர்கள். சேவாதாரிகளாக இருக்கக் கூடியவர்கள் அனைவரின் முன்பு வணங்கும் பொழுதுதான் சேவை செய்ய முடியும். சிறியவர்கள் அன்பானவர்களாக இருப்பர், ஆகையால் தன்னை செல்லமானவர் என்று நினையுங்கள். அனைவருக்கும் அன்பானவர்களாக இருக்கின்றீர்கள். பெரியவர்களுக்கோ கூற வேண்டியிருக்கின்றது, சிறியவர்கள் விடுபட்டு விடுகின்றனர் ஆனால் தனக்குள் எந்த குறையும் வைத்துக் கொள்ளக் கூடாது. அனைவரையும் விட முன்னால் செல்ல வேண்டும் என்ற லட்சியம் கண்டிப்பாக வைக்க வேண்டும். முன்னேறிக் கொண்டிருந்தாலும் முன்னேற்றுபவர்களுக்கு மரியாதை செலுத்துவதை விட்டு விடக் கூடாது. முன்னேற்றுபவர்களுக்கு மரியாதை செலுத்தும் பொழுதுதான் அவர்கள் உங்களுக்கு மரியாதை செல்லுத்துவார்கள். நீங்கள் என்ன செய்கின்றீர்களோ உங்களைப் பார்த்து மற்றவர்களும் செய்வார்கள்.

கைகள் (Hands) என்றால் விசால புத்தி நஷ்டம் எதில் ஏற்படுகின்றது? லாடம் எதில் இருக்கின்றது? என்று அவர்கள் அனைத்திலும் பார்ப்பார்கள். அனைவரும் விசாலபுத்தி, திரிநேத்திரி, திரிகாலதரிசிகளாக ஆகியிருக்கின்றீர்களா? எந்த காரியமாக இருந்தாலும் பார்த்து (சிந்தித்து), பிறகு செய்யுங்கள். எப்படி நடந்தது என்று தெரியவில்லையே என்று பிறகு ஒருபொழுதும் கூறமாட்டீர்கள். சோதனை செய்வது குறைகின்ற பொழுதுதான் ஏற்பட்டு விடுகின்றது. திரிகாலதரிசியின் சப்தம் இது கிடையாது விரும்பவில்லை, ஆனால் நடந்து விட்டது. மாஸ்டர் சர்வ சக்திவான் விரும்பியது செய்ய முடியவில்லை, இவ்வாறு இருக்க முடியுமா? இப்பொழுது இந்த பேச்சை அழித்து விடுங்கள். சக்திகள் அல்லவா! சக்திகளின் செயல்கள் மற்றும் எண்ணங்கள் சமமாக இருக்கும். நினைத்தது ஒன்று நடந்தது வேறு இது சக்திகளின் குறை ஆகும். நல்லது.

**வரதானம்: தந்தையின் நினைவின் மூலம் மகிழ்ச்சியற்ற சூழ்நிலையிலும் சதா சுகம் மற்றும் மகிழ்ச்சியின் அனுபவம் செய்யக் கூடிய மகாவீர் ஆகுக!**

சதா தந்தையின் நினைவில் இருக்கக் கூடியவர்கள் ஒவ்வொரு குழப்பமான சூழ்நிலையிலும் சதா திருப்தியாக இருப்பார்கள். ஏனெனில் ஞான சக்தியின் ஆதாரத்தில் மலை போன்ற சூழ்நிலைகளும் கூட கடுகு போன்று அனுபவம் ஆகும். கடுகு என்றால் ஒன்றும் இல்லை. சூழ்நிலைகள் மகிழ்ச்சியற்றதாக இருக்கட்டும், துக்கமானதாக இருக்கட்டும், ஆனால் துக்கமான சூழ்நிலையிலும் சுகமான ஸ்திதியில் இருக்கும் பொழுதுதான் மகாவீர் என்று கூற முடியும். எது நடந்தாலும் எதுவும் புதிதல்ல (சர்ற்ட்ண்யஞ் ய்ங்ஜ்), எதுவும் புதிதல்ல என்பதன் கூடவே தந்தையின் நினைவின் மூலம் சதா ஏக்ரஸ் ஸ்திதியில் இருக்க முடியும். பிறகு துக்கம், அசாந்தியின் அலைகள் வராது.

**சுலோகன்: தனது தெய்வீக சொரூபம் சதா நினைவில் இருந்தால் எந்த வீணானவைகளிலும் பார்வை செல்ல முடியாது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 18.07.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## வில்பவர் மேலும் கண்ட்ரோலிங் பவர் (will power & controlling power)!

தனக்குள் மனவிருப்பத்தின் சக்தி மேலும் கட்டுப்படுத்தும் சக்தி என்ற இரண்டு சக்திகளையும் அனுபவம் செய்கிறீர்களா? ஏனெனில் தன்னுடைய முயற்சிக்காகவும் மற்றும் பிற ஆத்மாக்களின் முன்னேற்றத்திற்காகவும் இந்த இரண்டு சக்திகள் மிகவும் அவசியமாகும். மேலும் தனக்குள் கட்டுப்படுத்தும் சக்தி மற்றும் மன விருப்பத்தின் சக்தி இல்லையேல் பிறருக்கும் கூட சக்தி (உயில்) தருவதற்கான (சக்தியை தருவதற்கான) சக்தி நம்முள் வர முடியாது. பிறரைப் பற்றிய வீணான எண்ணங்கள் மேலும் வீணான நடத்தை இப்பொழுது வரை இருந்து கொண்டிருக்கின்றது. அதனைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. மன விருப்பத்தின் சக்தி இருப்பதில்லை. வில்பவர் என்றால் என்ன? எண்ணம், வார்த்தை மூலமாக, கர்மத்தின் மூலமாக அனைத்தையும் பாபாவிற்கு முன்பு உயில் (சாசனம்) செய்து விடுதல் அதாவது அர்ப்பணம் செய்து விடுங்கள். எப்படி பக்தி மார்க்கத்தில் கூட என்னவெல்லாம் செய்கிறார்கள், சாப்பிடு கிறார்கள், நடக்கிறார்கள் எனில் வெறும் வார்த்தைக்காக மட்டுமே கூறுகிறார்கள். ஈஸ்வர் அர்ப்பணம் ஆனால் இங்கு இப்பொழுது புரிந்து கொள்கிறீர்கள் என்னவெல்லாம் செய்கிறோம், அவை கல்யாணகாரி பாபாவின் நன்மைக்கான காரியத்திற்காக உயில் செய்திருக்கிறோம். ஆகவே என்னவெல்லாம் உள்ளன அதனை அர்ப்பணம் செய்துக் கொண்டே சென்றால் அது அர்ப்பண மயமாய் ஆகி விடும். அதனை அர்ப்பணம் செய்கிறீர்கள், யாருக்காக அர்ப்பணம் செய்திருக்கிறீர்கள் அதன் சாட்சாத்காரம் இப்படிப்பட்ட அர்ப்பணத்தினால் தானாகவே அனைவருக்கும் ஏற்படுகின்றது. ஆகவே செய்து கண்ணாடி ஆவதற்கான புருஷார்த்தம் செய்ய வில்பவர் (மன சக்தி) இருக்க வேண்டும் மேலும் இரண்டாவதாக கட்டுப்படுத்தும் சக்தி இருக்க வேண்டும். எங்கு விரும்புகிறீர்கள் அங்கு தன்னைத்தான் அதாவது தனது நிலையை (ஸ்திதியை) நிலைப்படுத்த

முடியும். இவ்வாறு அல்ல, தனது ஸ்தியை நிலைப்படுத்த செய்ய பாபாவின் நினைவில் மேலும் இருப்பதற்கு பதிலாக வீணான எண்ணம் (அ) தடுமாற்றத்தின் ஸ்திதியாக ஆகி விடுவதால், இது கட்டுப்படுத்தும் சக்தி என்பது இல்லை. ஒரு வினாடியிலும் குறைந்த நேரத்தில் தனது எண்ணத்தை எங்கு விரும்புகிறீர்களோ அங்கு நிலைப்படுத்த முடியும். ஒருவேளை தனது ஸ்தியை நிலைப்படுத்த முடியவில்லை எனில் பிறரை ஆத்மீக ஸ்திதியில் எப்படி நிலைக்கச் செய்ய முடியும். ஆகவே தனது நிலையை மேலும் அந்தஸ்து இரண்டையும் நினைவில் சதா வைத்திருங்கள். அப்பொழுதுதான் லட்சியத்தின் பலனைப் பெற முடியும். ஆகவே வில்பவர் மற்றும் கட்டுப்படுத்தும் சக்தி இரண்டிற் காகவும் முக்கியமாக என்ன நினைவு வைக்க வேண்டும். எதன் வாயிலாக இரண்டு சக்திகளும் வர முடியும்? இந்த இரு சக்திகளுக்கான முயற்சியில் ஒரு வார்த்தைக்கான சாதனம் மட்டுமே உள்ளது.

கட்டுப்படுத்தும் சக்திக்காக எப்பொழுதும் பெரும்பாலான வேறுபாட்டினை எதிரில் வைத்திருந்தால் தானாகவே எது உயர்வானதோ அதன் பக்கம் புத்தி செல்லும் மேலும் எந்த வீணானவற்றை உணர்கிறீர்களோ அதன் பக்கம் புத்தி தானாகவே செல்லாமல் இருந்து விடும். என்னவெல்லாம் கர்மம் செய்கிறீர்கள் அதில் அதிகமான வேறுபாடாக சுத்தம் மற்றும் அசுத்தம், சத்தியம் மற்றும் அசத்தியம், நினைவு மற்றும் மறதியில் என்ன வேறுபாடு உள்ளது, வீணானைவை மற்றும் சக்தி வாய்ந்த எண்ணத்தில் உள்ள வேறுபாடு, இவ்வாறு அனைத்து விசயத்தில் ஒருவேளை அதிகமான வேறுபாட்டை கண்டறிந்து கொண்டே சென்றால், மற்றொரு பக்கம் புத்தி தானாகவே கட்டுப்பட்டுப் போய் விடும் மேலும் மன சக்திக்காக மகா மந்திரம் உள்ளது.

ஒருவேளை உயர்வான மந்திரம் மற்றும் பெரிய வித்தியாசம் இவ்விரண்டின் நினைவு இருக்கும் எனில் ஒருபொழுதும் புத்தியை கட்டுப்படுத்துவதற்காக முயற்சி செய்ய வேண்டி இருக்காது. இது சகஜமாக இருக்குமா? முதலில் சோதனை செய்யுங்கள் அதாவது வித்தியாசத்தை யோசியுங்கள் பிறகு கர்மம் செய்யுங்கள். வித்தியாசத்தைப் பார்ப்பதில்லை, அலட்சியமாக இருந்து விடுகிறீர்கள். ஆகவே தன்னைக் கட்டுப்படுத்தும் சக்தி வருவதில்லை. மேலும் மகா மந்திரத்தினால் மனதில் சக்தி (வில்பவர்) தானாகவே விடும் ஏனெனில்

மகா மந்திரம் என்பது பாபாவின் நினைவு அதாவது பாபாவின் துணை, பாபாவின் காரியத்துடன் சேர்ந்து, பாபாவினுடைய குணத்துடன் சேர்ந்து தன்னுடைய புத்தியை நிலைப்படுத்த வேண்டும். ஆகவே மகா மந்திரத்தை புத்தியில் வைத்திருப்பதால் அதாவது புத்தியின் தொடர்பு சக்தியின் பிறப்பிடத்தில் (பவர் ஹவுஸ்) இணைந்து இருக்கும் காரணத்தால் மன சக்தி வந்து விடுகிறது. ஆகவே மகாமந்திரம் மற்றும் வித்தியாசம் இந்த இரண்டின் நினைவு இருக்குமெனில் இரு சக்திகளும் எளிதாக வந்து விட முடியும். மகாமந்திரம், மேலும் மகான் வேறுபாடு இரண்டின் நினைவு மற்றும் ஞானத்தின் கண்களை செலுத்துவதால் வெற்றி அதிகமாக கிடைத்து விடும். கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? அன்னப் பறவையின் காரியம் என்னவென்று அது எப்பொழுதும் கற்கள் மேலும் ரத்தினங்களை வேறுபடுத்துகின்றது. அப்படி பத்தியில் எப்பொழுதும் மகான் வித்தியாசத்தை (வேறுபாடுகளை) நினைவில் வைத்திருப்பவர்கள் எனில் மகான் மந்திரம் கூட சகஜமாக நினைவில் வந்து விடும். எப்பொழுது உயர்ந்த ஒன்றை கண்டறிந்து விடுகிறோமோ அப்பொழுது மதிப்பற்ற பொருளிடமிருந்து தானாகவே ஒதுங்கி போய் விடுகிறோம் ஆனால் வேறுபாடு (நன்மை-தீமை) நினைவில் இல்லாத காரணத்தினால் மந்திரமும் கூட மறந்து போய் விடுகிறது. மேலும் ஞானத்தின் எந்திரம் என்ன கிடைத்துள்ளதோ அதன் முழுமையான பலனை அடைய முடிவதும் இல்லை. ஆகவே இப்பொழுது என்ன செய்ய போகிறீர்கள்? இரு வார்த்தைகள் மட்டுமே நினைவில் வைத்திருங்கள். அன்னம் போலாகி இருங்கள். புரிந்ததா?

எவ்வாறு பாப்தாதாவின் மூன்று ரூபம் முக்கியமானதாகும். அனைத்து சம்பந்தம் இருப்பினும் மூன்று சம்பந்தம் முக்கியமானதாய் உள்ளது அல்லவா? அவ்வாறுதான் முழு நாளும் உங்களுடைய மூன்று ரூபம் உங்களுக்கு நினைவில் இருக்க வேண்டும். எவ்வாறு குழந்தைப் பருவம், இளமைப் பருவம் மற்றும் முதுமைப் பருவம் வருகிறது பின்பு மரணம் ஏற்படுகின்றது. இந்தச் சக்கரம் சுற்றிக் கொண்டே உள்ளது. அப்படி முழு நாளில் மூன்று ரூபம் எது நினைவில் இருக்க வேண்டும் அந்த நினைவானது சகஜமாகவும் இருக்க வேண்டும் மற்றும் வெற்றியும் கூட அதிகமாக இருக்க வேண்டும். எப்படி பாபாவின் இந்த மூன்று ரூபத்தை வர்ணனை செய்கிறீர்கள் அப்படித்தான் உங்களுடைய மூன்று ரூபம் எதுவாக உள்ளது? அதிகாலையில் -அமிர்தவேளையில் எப்பொழுது

எழுந்திருக்கிறீர்கள் மேலும் நினைவு யாத்திரையில் இருக்கிறீர்கள் அல்லது ஆன்மீக உரையாடல் செய்கிறீர்கள் அந்த நேரத்தின் ரூபம் என்னவாக இருக்கும்? குழந்தை மேலும் எஜமானன் எப்பொழுது ஆன்மீக உரையாடல் செய்கிறீர்கள் அப்பொழுது குழந்தையின் ரூபம் நினைவில் இருக்கிறது அல்லவா? மேலும் எப்பொழுது நினைவு யாத்திரையின் அனுபவ ரூபமாய் ஆகி விடுகிறீர்கள் எனில் எஜமானன் ரூபம் ஏற்படுகின்றது. ஆகையால் அமிர்தவேளையில் குழந்தையாக இருப்பதுடன் எஜமானன் ரூபம் பின்பு வேறு என்ன ரூபம் ஏற்படுகிறது? ஆன்மீக இறை மாணவ வாழ்க்கை பின்பு மூன்றாவது ரூபம் சேவாதாரி. இந்த மூன்று ரூபம் முழு நாளில் தாரணை செய்துக் கொண்டே காரியம் செய்துக் கொண்டே செய்கிறீர்களா? மூன்று ரூபம் உள்ளது மேலும் இரவில் என்ன ரூபம் உள்ளது? இறுதியாக இரவில் தூங்கும் நேரத்தில் தன்னை சோதனை செய்யும் ஸ்திதி உள்ளது. மேலும் தன்னை சப்தத்திலிருந்து கடந்து செல்வதற்கான ஸ்திதியும் உள்ளது. அந்த ஸ்திதியில் நிலைத்திருந்து ஒரு நாளை முடிக்கிறீர்கள் பின்பு இரண்டாவது நாள் ஆரம்பம் ஆகின்றது. எவ்வாறு தூக்கத்தில் இந்த உலகத்தின் எந்த ஒரு விசயமும் எந்த ஒரு சப்தமும், எந்த ஒரு கவர்ச்சியும் ஈர்க்கப்படுவதில்லையோ அப்படி அந்த ஸ்திதி இருக்க வேண்டும். எப்பொழுது நன்றாக தூங்கி போய் விடுகிறீர்கள். அப்பொழுது கனவு கூட இரண்டாம் பட்சமாகி விடுகிறது. இதுபோன்று தூங்க செல்வதற்கு முன்பு இப்படிப்பட்ட ஸ்திதியை உருவாக்கி பின்பு தூங்க செல்ல வேண்டும். எப்படிப்பட்ட சம்ஸ்காரத்தை இறுதியில் ஆத்மா எடுத்து செல்கிறதோ அதுவே ஆத்மாவில் பதிந்து பின்பு சம்ஸ்காரம் வெளிப்படும். அந்த முறையிலேயே அந்த நாளை எப்பொழுது முடித்து விடுகிறீர்கள் எனில் சம்ஸ்காரம் தனித்தன்மையுடையதாய் மேலும் அன்பிற்குரியதாய் ஆகி விடும். இப்படிப்பட்ட சம்ஸ்காரத்துடன் தூங்க செல்வதினால் அடுத்த நாளிலும் கூட அந்த சம்ஸ்காரத்தின் உதவி கிடைக்கின்றது ஆகவே இரவு நேரத்தில் நாளை முடிக்கிறீர்கள் எனில் நினைவு அக்கினியினால் அல்லது நினைவு சக்தியினால் பழைய கணக்கை முடித்து விடுதல் அல்லது அழித்து விட வேண்டும். கணக்கை முடித்து விடவேண்டும். எவ்வாறு வியாபாரி கூட கணக்கு - வழக்கை முடிக்கவில்லை எனில் கணக்கு அதிகமாகி விடுகிறது மேலும் கடன்காரர்களாகி விடுகிறார்கள் இந்த முறையில் ஒருவேளை முழு நாளும் செய்யப்பட்ட கர்மத்தின் கணக்கு முடித்து விடுங்கள். அடுத்த நாளிற்காக எந்த கடன் ரீதியாகவும்

மீதம் வைக்காதீர்கள். ஏனெனில் அது மறைந்த (சூட்சும) ரூபத்தில் புத்தியை பலவீனப்படுத்தி விடுகின்றது. தினமும் தனது கணக்கு முடித்து விட்டு புதிய நாளாக, புதிய நினைவு இருக்க வேண்டும். தன்னுடைய கர்மம் மற்றும் சங்கல்பத்தின் கணக்கை தெளிவாக வைத்திருக்கிறீர்கள் எனில் சம்பூரணம் மற்றும் வெற்றி மூர்த்தி ஆகி விடுவீர்கள். ஒருவேளை தன்னுடைய கணக்கை முடிக்க முடியவில்லையெனில் பிறருடைய கர்ம பந்தனம் மற்றும் பிறருடைய கணக்கு - வழக்கை எப்படி முடிக்க வைக்க முடியும்? ஆகையால் தினமும் இரவில் தனது பதிவேட்டை தெளிவாக வைக்க வேண்டும், என்ன நடந்ததோ அதனை யோக அக்னியில் பஸ்மமாக்கி விடுங்கள். எவ்வாறு முட்களை எரித்து பெயர், உருவம் இல்லாபததாக்கி விடுகிறீர்கள் அல்லவா? அதுபோல. இது போன்ற ஞானத்தின் சக்தி, நினைவின் சக்தி, மன சக்தி மற்றும் கட்டுப்படுத்தும் சக்தி இவைகளால் பதிவேட்டை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். சேர்த்து வைக்காதீர்கள். ஒரு நாளில் செய்யப்பட்ட வீண் எண்ணம் மேலும் வீணான கர்மம், அடுத்த நாளுக்கு கொண்டு போய் விடக்கூடாது. அதாவது கடன் வைத்து விடக்கூடாது. கடந்தவற்றிற்கு முற்று புள்ளி வைத்து விடுங்கள். இப்படியாக தனது பதிவேட்டை சுத்தமாக வைத்திருப்பவர்கள் அல்லது கணக்கை முடித்து விடக் கூடியவர்கள் எளிதாக வெற்றி மூர்த்தி ஆகி விட முடியும். புரிந்ததா.

முழு நாளுக்காக சோதனையாளர் (செக்கர்) ஆகுங்கள். சுயதரிசன சக்கரத்திற்குள் இது ஒரு நாளிற்கான சக்கரமாகும். ஆரம்பத்தில் டிரில் செய்தீர்கள் எனில் சக்கரத்திற்குள் நுழைந்து சுற்றி வெளியே வந்தீர்கள் அல்லவா? அப்படி இது எல்லையற்ற 5000-வருடத்திற்கான சக்கரமாகும். அதில் பின்பு சிறிய -சிறிய சக்கரம் உள்ளது. ஆகவே தன்னுடைய முழு நாளின் சக்கரத்தில் எப்பொழுதும் தெளிவாக இருங்கள், குழப்பம் அடையவில்லை எனில் சக்கரவர்த்தி ராஜா ஆகி விடுவீர்கள். தனது பதிவேட்டை நன்றாக வைத்துக் கொள்ள வருகிறது அல்லவா? இன்றைய காலத்தில் விஞ்ஞானம் கூட அப்படிப்பட்ட கண்டுபிடிப்பை செய்துள்ளது. என்ன எழுதப்பட்டுள்ளது அது அனைத்தையும் சுவடு தெரியாமல் அழித்து விடுகிறது. அப்படியெனில் அமைதி சக்தியினால் தனது பதிவேட்டை தினமும் சுத்தம் செய்ய முடியாதா என்ன? ஆகவேதான் சொல்லப்பட்டுள்ளது தந்தைக்கு பிரியமானவர் மேலும் பிரபுவிற்கு பிரியமானவர் மற்றும் தெய்வீக உலகிற்கு இரண்டிற்கும்

பிரியமானவர்களாய் யாரால் ஆகி விட முடியும்? உண்மையானவர்களாய் மேலும் தூய்மையானவர்களாய் பிரபுவிற்கு பிரியமானவராய் இருப்பதுடன் மற்றும் உலகிற்கு பிரியமானவர் மற்றும் தனக்குத் தானே கூட பிரியமானவராய் இருக்கிறார்கள். உண்மை மற்றும் சத்தியத்தை அனைவரும் விரும்புகிறார்கள். பதிவேட்டை தெளிவாக வைத்திருத்தல், இது கூட தூய்மை அல்லவா, மேலும் சத்தியமான உள்ளத்திற்கு முன்பாக எஜமானன் கூட தன் வசம் ஆகி விடுவார் அதாவது தைரியம் மற்றும் நினைவினால் உதவி கிடைத்து விடுகிறது. நல்லது.

**வரதானம்: விசேஷத்தன்மை என்ற சஞ்சீவினி மூலிகை மூலமாக மூர்ச்சை அடைந்தவர்களை விழிப்படையச் செய்யும் விசேஷமான ஆத்மா ஆகுக!**

ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சிரேஷ்டமான நினைவின் விசேஷத் தன்மையின் நினைவு என்ற சஞ்சீவினி மூலிகையை கொடுங்கள் அப்படி செய்வதினால் மூர்ச்சை அடைந்திருப்பவர் கூட விழிப்படைந்து விடுவார்கள், விசேஷத்தன்மையின் சொரூபத்தின் கண்ணாடியை அதன் எதிரில் வைத்திருங்கள். பிறருக்கு நினைவு ஏற்படுத்துவதினால் நீங்கள் விசேஷமான ஆத்மாவாக ஆகி விடுவீர்கள். ஒருவேளை நீங்கள் யாருக்கேனும் அவரது பலவீனத்தை எடுத்துக் கூறுவீர்கள் எனில் அவர் மறைப்பார் அல்லது சாக்கு போக்கு கொடுப்பார் ஆனால் நீங்கள் விசேஷத் தன்மையை கூறுவீர்கள் என்றால் தன்னுடைய பலவீனத்தை தெளிவாகத் தானே அனுபவம் செய்வார். இந்த சஞ்சீவினி மூலிகையினால் மயக்கமடைந்திருப்பவர்களை விழிப்படையச் செய்து பறந்து செல்லுங்கள் மேலும் பிறரையும் பறக்க வைத்து விடுங்கள்.

**சுலோகன்: பெயர் புகழ் பதவி, சாதனங்களின் சங்கல்பத்தைத் கூட தியாகம் செய்வதுதான் மகான் (உயர்ந்த) தியாகமாக உள்ளது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.07.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிம்பிள் (simple) ஆகுங்கள், சேம்பிள் (sample) ஆகுங்கள்!

இன்று இங்கே கூடியிருக்கும் சபையை எந்த விதமான சபை என்று கூறலாம்? செய்யும் காரியத்தின் அனுசாரம் இந்த சபையின் பெயர் என்னவென்று கூறலாம்? காரியத்தின் ஆதாரத்தில் பெயரைக் கூறுங்கள்? (ஒவ்வொருவரும் பெயர் கூறினார்கள்). என்னென்ன பெயர் கூறினீர்களோ அதை நடைமுறையில் தன்னுடைய கடமை (செய்ய வேண்டிய காரியம்) என்று புரிந்து கூறினீர்களா? நடைமுறையில் நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் பின்பு என்னவாகி விட்டீர்கள்? உண்மையான மற்றும் நிரூபணம் கொடுக்கும் மூர்த்தி ஆகி விட்டீர்கள். ஒருவேளை பயிற்சியில் இருக்கிறீர்கள் என்றால் நிரூபணம் கொடுக்கும் மூர்த்தி என்று கூற முடியாது. நடைமுறையில் இருக்கிறது என்றால் உண்மையான மற்றும் நிரூபணம் கொடுக்கும் மூர்த்தி இரண்டுமே இருக்கிறது. இந்த குரூப் சிம்பிள் (சாதாரணம்) மற்றும் சேம்பிள் (உதாரணம் ஆனது. சிம்பிள் ஆகி சேம்பிளை காண்பிப்பவர்கள். சிம்பிள் என்றால் ஏதோ அணியும் ஆடை ஆகியவற்றில் இல்லை ஆனால் அனைத்து விஷயங்களில் எளிமையாக முன்னு தாரணமாகக்கூடியவர்கள். எப்படி ஏதாவது சிம்பிளான பொருள் ஒருவேளை சுத்தமாக இருக்கிறது என்றால் தன் பக்கம் கவர்ச்சி செய்யும். இதே போல் மனதிலும் எழும் எண்ணம், சம்மந்தத்தில், விவகாரத்திலும் மற்றும் வாழும் முறையிலும் அப்படி அனைத்திலும் எளிமையாக மற்றும் சுத்தமாக இருப்பவர் முன்னுதாரணமாகி தன் பக்கம் கவர்ச்சி செய்கிறார்கள். ஒருவேளை எண்ணத்தில் மற்றும் சம்மந்தத்தில் சிம்பிளாக இல்லை என்றால் மாறாக என்ன ஆகும்? சிம்பிள் என்றால் சாதாரணமான நிலை சாதாரண நிலையில் மஹான் தன்மை இருக்கட்டும். எப்படி தந்தை சாகார உலகத்தில் சிம்பிளாக இருந்தும் உங்கள் அனைவரின் எதிரில் முன்னுதாரணமாக ஆனார் இல்லையா? மிக சாதாரண நிலைதான் அதிக மஹான் நிலையை வெளிப்படுத்தும்.

எனவே சாதாரண நிலை அதாவது சிம்பிள் இல்லை என்றால் பிராப்ளம் (பிரச்சனை) ஆகி விடுகிறது. எண்ணங்களிலும் பிராப்ளத்தில் இருக்கிறார்கள். வாழும் முறையிலும் சிம்பிள் இல்லாத காரணத்தினால் மற்றவர்களுக்கும் மற்றும் தனக்காகவும் ஏதாவது பிராப்ளம் ஆகி விடுகிறார்கள். அப்படியானால் பிராப்ளம் ஆக வேண்டுமா அல்லது சிம்பிள் ஆக வேண்டுமா? பிராப்ளம் உள்ளவர்கள் சிம்பிளாக முடியாது. எனவே மனதிலும் கூட சிம்பிளாக இருங்கள். ஒருவேளை மனதில் கூட ஏதாவது குழப்பம் இருக்கிறது, அதாவது பிராப்ளம் இருக்கிறது என்றால் அவரை சிம்பிள் என்று கூறுவோமா என்ன? எப்படி காந்தியையும் சிம்பிளானவர் என்று கூறினார்கள் ஆனால் சிம்பிள் ஆகி ஒரு உதாரணமாகிக் காண்பித்தார் இல்லையா? அவருடைய சிம்பிளான நடவடிக்கைகளே மஹான் நிலையின் அடையாளமாக இருந்தன. அது எல்லைக்குட்பட்ட செயலாக ஆகி விட்டது ஆனால் இங்கு எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் குழந்தைகள் ஆகி எல்லைக்கப்பாற்பட்ட செயல் செய்ய வேண்டும். நீங்களோ உலகிற்கே பொறுப்பாளராக இருக்கிறீர்கள் இல்லையா? எப்படி உலகம் எல்லைக்கப்பாற்பட்டதோ, தந்தை எல்லைக்கப்பாற்பட்டவரோ அதே போல் என்ன காரியம் செய்தாலும் அதை எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருந்து செய்ய வேண்டும். அந்த செயல்தான் தன் பக்கம் கவர்ந்திழுக்கும். அப்படி கவரும் மூர்த்தியாக ஆவதற்காக என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்? சிம்பிளாக வேண்டியதாக இருக்கும். இங்கு தெய்வீக உறவில் கூட யாராவது சிம்பிளாகவில்லை, பிராப்ளமாக ஆகி விடுகிறார் என்றால் விளைவு என்ன ஆகும். அன்பு மற்றும் சகயோகத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டவர்களாக ஆகி விடுகிறார்கள். யார் சாதாரணமாக மற்றும் சிம்பிள் ஆக இருக்கிறார்களோ அவர் பக்கம் விரும்பாவிட்டாலும் அனைவருக்கும் அன்பு மற்றும் சகயோகம் கொடுக்கும் சுப பாவனை இருக்கும். அப்படி அனைவரின் அன்பிற்குரியவர் மற்றும் அனைவரிடமிருந்து சகயோகம் பெறுவதற்காக மற்றும் அனைவரின் சகயோகியாக ஆவதற்காக சிம்பிளாக ஆவது மிக அவசியமாகும். ஏதாவது பிரச்னை இல்லையே? சுயம் பிரச்னை ஆனவர்களாக ஆகவில்லையே? லௌகீக குடும்பத்திலும் மற்றும் விவகாரத்திலும் மற்றும் தெய்வீக குடும்பத்திலும் ஒருபொழுதும் தன்னுள் பிரச்னையை வெளிக் கொணராதீர்கள் மற்றும் யாருக்காகவும் பிராப்ளமாக ஆகாதீர்கள். ஒருவேளை பிரச்னையாக ஆகிறீர்கள் என்றால்

சேவையை வாங்குபவர்கள் ஆகி விடுகிறீர்கள். நீங்களோ ஈஸ்வரிய சேவாதாரிகள் அப்படி சேவாதாரி என்றால் சேவை செய்பவரேயன்றி சேவை வாங்குபவர் அல்ல. ஒருவேளை சேவை வாங்குபவராக ஆகுகிறீர்கள் என்றால் பெயருக்கு ஏற்றபடி காரியம் நடக்கவில்லை அல்லவா?. இறைவனின் உதவியாளர்கள் சேவை வாங்குவதில்லை, கொடுப்பவர்கள், ஏனென்றால், வள்ளலின் குழந்தைகள் இல்லையா?. எப்படி தந்தை ஏதாவது ஏற்றுக் கொள்வாரா என்ன? அவரோ வள்ளல் இல்லையா. ஒருவேளை பிராப்ளம் ஆவதின் காரணமாக சேவையை மற்றவர்களிடம் இருந்து எடுக்கிறீர்கள் என்றால் வள்ளலின் குழந்தைகளாக ஆனீர்களா? ஒருவேளை எந்தவிதமான அதிகப்படியான சேவையை வாங்குகிறீர்கள் என்றால் நான் வள்ளல் மற்றும் வரமளிக்கும் வள்ளலின் குழந்தை என்ற இந்த போதை ஒருபொழுதும் இருக்காது.

அப்படியானால் இது இல்லற மார்க்கத்து குரூப்பா அல்லது துறவற மார்க்கத்தைச் சேர்ந்தவர்களா? லௌகீக இல்லறமோ முடிந்து விட்டது இல்லையா?. லௌகீக இல்லறத்தையும் ஈஸ்வரிய இல்லறத்தில் மாற்றம் செய்தீர்களா? எதுவரை மாற்றம் செய்யவில்லையோ அதுவரை அலௌகீக நிலையில் ஒரே சீராக இருக்க முடியாது. எனவேதான் தன்னுடைய பெயர், உருவம், குணம் மற்றும் காரியத்தை எப்பொழுதும் நினைவு வைத்து குடும்பத்தில் இருங்கள் என்று கூறியிருந்தோம். அதன் மூலம் லௌகீக இல்லறமும் மாறி விடட்டும். எப்பொழுதும் தன்னை சேவாதாரி என்று புரிந்து கொள்வதினால் கௌரவம் இருக்காது. சேவாதரி எப்பொழுதும் பணிவானவராக இருப்பார். தன்னுடைய வீட்டையும் வீடு என்று நினைக்காமல் சேவை நிலையம் என்று புரிந்து கொள்வார் மற்றும் சேவாதாரியின் முக்கிய குணம் தியாகம் ஆகும். ஒருவேளை தியாகம் இல்லையென்றால் சேவையும் ஏற்பட முடியாது. தியாகத்தின் மூலம் தபஸ்விமூர்த்தி ஆகுகிறீர்கள். எப்பொழுதும் சேவையில் இருப்பதுதான் சேவாதரியின் கடமை ஆகும். மனதால் செய்யும் சேவையானாலும், வாய்மொழி சேவையானாலும் உடல் மூலம் செய்யும் சேவையானாலும் சேவாதாரி என்றால் நிரந்தரமாக சேவையில் ஈடுபட்டிருப்பவர். அவர் ஒரு பொழுதும் சேவையில் இருந்து தன்னை விலகியவராக நினைக்க மாட்டார். நிரந்தரமாக சேவையின் கவனம்தான் இருக்கும். இதைத்தான் சேவாதாரி என்று கூறுவது. எனவே தன்னை சேவாதாரி என்று புரிந்து கொள்ளுங்கள் மற்றும் சேவை நிலையம் என்று

புரிந்து இருங்கள், தியாக உள்ளுணர்வுடை யவராகி தபஸ்வி மூர்த்தியாகி இருங்கள். நிரந்தரமாக புத்தியின் ஈடுபாடு சேவைக்காகவே இருக்கிறது என்றால் பின்பு லௌகீக இல்லறம் மாறி ஈஸ்வரிய இல்லறமாக ஆகி விடாதா? அப்படி இந்த குரூப் புதுமையாக என்ன காண்பிக்கும்? வேறு எந்த குரூப்பும் காண்பிக்காததாக இருக்கட்டும். ஏதாவது புதுமையை அவசியம் கொண்டு வர வேண்டும். பிரத்யேகமாக பட்டிக்காக வருகிறீர்கள் என்றால் தன்னுள் மாற்றம் அவசியம் ஏற்பட வேண்டும். பார்க்கப் போனால் பிராமணனாக இருந்து கொண்டுதான் இருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது முக்கியமாக தனக்குள் விசேஷத்தைக் கொண்டு வந்து தன்னுடைய பெயரை விசேஷ ஆத்மாக்களில் சேர்த்து விட்டுச் செல்ல வேண்டும். பாப்தாதாவிடம் எத்தனை விதமான பட்டியல் இருக்கிறது என்று தெரியுமா? உங்களுடைய பெயர் எந்த பட்டியலில் இருக்கிறது என்று தெரியுமா? தன்னுடைய பெயரை விசேஷ ஆத்மாக்களின் பட்டியலில் இருக்க வைக்க வேண்டும். இதற்காக முயற்சி செய்யுங்கள். எப்பொழுது ஏதாவது விசேஷ காரியம் செய்கிறீர்கள் மற்றும் விசேஷத்தைக் காண்பிக்கிறீர்கள் என்றால் அப்பொழுது விசேஷ ஆத்மாக்கள் ஆகுகிறீர்கள். அப்படி விசேஷ ஆத்மாவாக ஆகியேதான் செல்ல வேண்டும். உடலில் இருந்து கொண்டே இறந்தவராக ஆகி விட்டீர்களா அல்லது ஆவதற்காக வந்திருக்கிறீர்களா? உடலிலிருந்து இறந்தவர் ஆகி, பிரம்மா குமாராக ஆகியிருக்கிறீர்களா அல்லது இப்பொழுது ஆவீர்களா? எப்பொழுது இறந்து ஜென்மம் எடுத்திருக்கிறீர்களோ அப்பொழுதுதான் பிரம்மா குமார் என்று அழைக்கப்படுகிறீர்கள். இறந்து புது ஜென்மம் எடுப்பது இதைத்தான் உடலிலிருந்து கொண்டே இறப்பது (மர்ஜீவா) என்று கூறுவது. இல்லை என்றால் ஜென்மம் எடுப்பதற்கு முன்பு பிரம்மா குமாராக எப்படி ஆவீர்கள்?. குழந்தைகளாகவோ இருக்கிறீர்கள், அதிகாரியாகவும் இருக்கிறீர்கள் மற்றபடி இன்னும் செய்ய வேண்டியது உண்மையானவராகி நிரூபணம் கொடுப்பது. மற்றபடி பிரம்மா குமாராக இருக்கிறீர்கள் என்றால் உடலிலிருந்து கொண்டு இறந்தவராக ஆகியே விட்டீர்கள். உடலிலிருந்து கொண்டு இறந்தவராக ஆகியிருக்கிறீர்கள். இந்த நினைவு இருப்பதினால் பின்பு இந்த உடல் கூட உங்களுடையதாக இருக்கவில்லை. இந்த உடலை தந்தை ஈஸ்வரிய சேவைக்காக கொடுத்திருக்கிறார். நீங்களோ இறந்து விட்டீர்கள்தான் இல்லையா? ஆனால் இந்த பழைய உடல் ஈஸ்வரிய சேவைக்காக மட்டும்

கிடைத்திருக்கிறது என்று அந்த மாதிரி புரிந்து நடந்து கொள்வதினால் இந்த உடலையும் கூட அடமானம் வைக்கப்பட்டது என்று புரிந்து கொள்வீர்கள். எப்படி ஏதாவது ஒன்றின் அடமானம் வைக்கப்படுகிறது என்றால் அடமானம் வைக்கப் பட்டதில் தன்னுடையது என்ற ணர்வு இருப்பதில்லை, பற்றுதலும் இருப்பதில்லை. அப்படி இந்த உடலையும் ஒரு அடமானப் பொருள் என்று புரிந்து கொள்ளுங்கள். அப்பொழுது இந்த உடலின் பற்றுதலும் நீங்கி விடும். டிரஸ்டியாகி இருப்பதினால், அடமானம் என்று புரிந்து கொள்வதினால் பற்றுதல் குறைந்து விடுகிறது இல்லையா?. இந்த முறையில் இந்த உடல் கூட ஈஸ்வரிய சேவைக்காக மட்டும் அடமானத்தின் ரூபத்தில் கிடைத்திருக்கிறது. யாருக்கு அடமானம் வைக்கப்பட்டதோ அவருடைய நினைவு அடமானப்பொருளைப் பார்த்தால் வரும் இல்லையா? இந்த அடமானப் பொருளையோ ஆத்மாக்களின் தந்தை கொடுத்திருக்கிறார், ஆத்மாக்களின் தந்தையின் நினைவு இருக்கும், அடமானம் என்று புரிந்து கொள்வதினால் ஆன்மீகத் தன்மை இருக்கும். மேலும் ஆன்மீகத் தன்மையினால் புத்தியில் நிவாரணம் இருக்கும், களைப்பு இருக்காது. அடமானத்தில் துஷ்பிரயோகம் செய்வதினால் ஆன்மீகத்திற்குப் பதிலாக குழப்பம் வந்து விடுகிறது. நிவாரணத்திற்குப் பதிலாக பயம் வந்து விடுகிறது. எனவே இந்த உடல் ஈஸ்வரிய சேவைக்காக மட்டும்தான் இருக்கிறது. அடமானம் என்று புரிந்து கொள்வதினால் தானாகவே ஆன்மீகத் தன்மையின் நிலை இருக்கும். இதுதான் சுலபமான உபாயமாகும். இப்பொழுது நிரந்தர சகஜயோகியாக ஆக முடியும் இல்லையா? நிரந்தரமாக ஆன்மீகத்தன்மையின் நிலையில் நிலைத்திருங்கள். உங்களைப் பார்த்து இவரோ ஒரு உதாரணமாகி வந்திருக்கிறார் என்று. அனைவரும் அனுபவம் செய்யட்டும், இந்த புதுமையைக் காண்பிக்க வேண்டும். மற்றவர்களும் நினைவின் யாத்திரையை சுலபமானதாக ஆக்குவதற்காக நீங்கள் உதாரணமாகிச் செல்ல வேண்டும். இந்த குரூப் உதாரணமாகி செல்வீர்கள்.

ஒருவேளை ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் ஒரு உதாரணமானவர் செல்கிறார் என்றால் பின்பு சுலபமான விஷயம் ஆகி விடும். தன்னுடைய பெயராக என்ன நினைவு வைத்துக் கொள்வீர்கள்? சேவாதாரி. சேவாதாரியாகவோ ஏற்கனவே இருக்கவே இருக்கிறீர்கள், ஆனால் உடனடிப் பலனின் பிராப்தியை செய்விக்கும் அளவிற்கு சேவையை அந்த மாதிரி செய்யுங்கள். அப்படியானால் சுலோகனாக என்ன நினைவு

வைத்துக் கொள்வீர்கள். தன்னுடைய ஆன்மீகத் தன்மையின் நிலையை வெளிப்படுத்தி ஒவ்வொரு ஆத்மாவிற்கும் உடனடி பலனைக் கொடுக்கக்கூடியவர். இதுதான் இந்த குரூப்பினுடைய கடமை ஆகும். எவ்வளவு தன்னுடைய ஆன்மீகத் தன்மையின் நிலையை உறுதியாக்குவீர்களோ அவ்வளவு உடனடிப் பலனைக் கொடுக்க முடியும். ஒருவேளை ஆன்மீகத் தன்மையின் நிலையை வெளிப்படையாக காண்பிக்கவில்லை என்றால் பலனும் உடனடியாகத் தென்படாது. உடனடிப் பலனை காண்பிப்பதற்காக தன்னுடைய ஆன்மீக நிலையை வெளிப்படுத்துங்கள். சுலோகனைப் புரிந்து கொண்டீர்களா? நல்லது. தன் மேல் எந்த முத்திரையை இட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? சேவாதாரி என்ற முத்திரை. மனம் மூலமாகக் கூட சேவை என்று புரிந்து கொண்டீர்கள் இல்லையா?. மேலும் இந்த குரூப் தியாகம் மூலமாக தபஸ்வியாக ஆகும் அளவிற்கு முக்கியமாக என்ன தியாகம் செய்யும். உங்களுடைய நடைமுறை முழு நாள் நடவடிக்கையில் அதிகமான நேரத்தில் தடை ரூடமாக எது ஆகிறது? ஒரு வார்த்தையில் அதை வரட்டு கௌரவம் என்று கூறுவோம். எனவே ஆன்மீக கௌரவம் மட்டும் வருவதில்லை. குடும்பத்தில் தந்தை என்ற கௌரவம் வைக்கிறீர்கள் மற்றும் விவகாரத்தில் வரும்பொழுதும் என்ன கௌரவம் வைத்துக் கொள்கிறீர்களோ, சம்மந்தத்திலும் முக்கியமான தடையாக கௌரவம்தான் வருகிறது. இதை தியாகம் செய்ய வேண்டும். சேவாதாரி கௌரவம் காண்பிப்பதில்லை, எனவே கௌரவத்தை தியாகம் செய்ய வேண்டும். இதுதான் முக்கியமான தியாகம் ஆகும். தியாகம் செய்வதற்கு தைரியமோ இருக்கிறது இல்லையாஎன்னென்ன உறுதிமொழி எடுக்கிறீர்களோ அந்த ஒவ்வொரு உறுதிமொழி மேல் அழியாத முத்திரை இடுங்கள். அழியாத முத்திரை இடாத காரணத்தினால் உறுதிமொழி அற்ப காலத்திற்கானதாக ஆகி விடுகிறது. அனேகரின் ரிசல்ட்டில் இங்கு உறுதிமொழி செய்து செல்கிறார்கள், பின்பு உறுதிமொழியை மாற்றி பட்சாதாடப்பட ஆரம்பித்து விடுகிறார்கள். என்ன செய்வது, என்ன ஆகி விட்டது, இப்பொழுது உதவி செய்யுங்கள். விரும்பவோ இல்லை ஆனால் இது காரணமாகி விட்டது. யோகிக்குப் பதிலாக வியோகி (அன்பிற்குரியவரிடமிருந்து பிரிக்கப்பட்டவர்) ஆகி துக்கத்தைக் கடைபிடிக்கிறார். எனவே இப்பொழுது நிரந்தர யோகி ஆக வேண்டும். துக்கம் நிறைந்த பிரிக்கப்பட்டவர் ஆக வேண்டாம். இந்த குரூப் இதைத்தான் நடைமுறையில் செய்து காண்பிக்க வேண்டும். என்ன

கூறினோமோ அதற்காக எவ்வளவு விஷயங்களை சகித்துக் கொள்ள வேண்டியது இருந்தாலும் அவற்றை எதிர்நோக்கி அதை செய்து காண்பிப்போம். வெற்றியாளராக ஆகியே காண்பிப்போம். ஒருவர் இன்னொருவருக்கு உதவியாளர், நற்சிந்தனையாளர் ஆகியே இருந்தீர்கள் என்றால், சகயோகி ஆகி என்னதான் செய்ய முடியாது. எப்பொழுது அவர்கள் ஒருவர் இன்னொருவருக்கு சகயோகி ஆகி முற்றுகை இட முடியும் என்றால் நீங்கள் மாயாவின் மேல் முற்றுகை இட முடியாதா என்ன? பாண்டவ சேனை முற்றுகை இட முடியாதா? ஒருவர் இன்னொருவருக்காக நற்சிந்தனையாளர், சகயோகி ஆகியே இருந்தீர்கள் என்றால் மாயா உங்களுடைய முற்றுகையின் உள்ளே வருவதற்கு தைரியமே வைக்காது. இதுதான் சகயோகத்தின் சக்தி. சகயோகத்தின் சக்திக்கான குழு இது. இந்த குழுவிற்கு சகயோகத்தின் சக்தியின் பிரத்யக்ஷ ரூபத்தைக் காண்பிக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: குழந்தை மற்றும் அதிகாரத்தன்மையின் சமநிலை மூலமாக அனைத்து பொக்கிஷங்களில் நிரம்பியவர் ஆகுக!**

எப்படி குழந்தை நிலையின் போதை அனைவரிடமும் இருக்கிறதோ. அதே போல் குழந்தையிலிருந்து அதிகாரி அதாவது தந்தைக்குச் சமமான நிரம்பிய நிலையை அனுபவம் செய்யுங்கள். அதிகாரத்தன்மையின் விசேஷமே எவ்வளவு அதிகாரியோ அவ்வளவு உலக சேவாதாரிக்கான சம்ஸ்காரம் எப்பொழுதுமே வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் ரூபத்தில் இருக்கட்டும். அதிகார நிலையின் போதை மற்றும் உலக சேவாதாரியின் போதை சமமான ரூபத்தில் இருக்கிறது என்றால் தந்தைக்குச் சமமானவர் என்று கூறலாம். குழந்தை மற்றும் அதிகாரி இரண்டு சொரூபமும் எப்பொழுதுமே பிரத்யக்ஷமாக காரியத்தில் வந்து விட்டது என்றால் அப்பொழுது தந்தைக்குச் சமமாக அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய நிலையின் அனுபவம் செய்ய முடியும்.

**சுலோகன்: ஞானத்தின் குறைவில்லா பொக்கிஷங்களின் அதிகாரி ஆனீர்கள் என்றால் அடிமைத்தனம் முடிவடைந்து விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 27.07.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## புத்தி என்ற கண்ணை தெளிவானதாகவும், சக்திசாலியானதாகவும் ஆக்குங்கள்!

இன்று பட்டியின் படிப்பிற்கான பரீட்சையை எழுதிக் கொடுத்தீர்களா? நாளை என்ன பரீட்சை (நடைமுறை) பரீட்சையில் என்ன கேள்விகள் வரக்கூடியவை என்று தெரிந்திருக்கிறீர்களா? கல்பத்திற்கு முன்பு ஆத்மாக்கள் நம் மூலமாக என்ன என்ன நடந்தன என்று அந்த நினைவு வருகிறதா? (ஆம்) எப்பொழுது இந்த நினைவு வருகிறதோ, கேள்விகள் என்ன வரும் என்ற அந்த நினைவு வரவில்லையா? மாயாவோ எதிர்க்கத்தான் செய்யும், ஆனால் எந்தெந்த ரூபத்தில் எதிர்க்கும் என்பதைத் தெரிந்திருக்கிறீர்களா அல்லது இல்லையா? மாஸ்டர் ஞானம் நிறைந்தவராகி இங்கிருந்து சென்று கொண்டிருக்கிறீர்கள்தான் இல்லையா? மாஸ்டர் ஞானம் நிறைந்தவருக்கு அனைத்தும் முன்பே தெரிய வந்து விடும். எப்படி அறிவியல் துறையைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய இயந்திரங்கள் மூலமாக புயல், மழை நில நடுக்கம் ஆகிய விபத்துக்களை முன்பே தெரிந்து கொள்கிறார்கள் என்றால் நீங்கள் அனைவரும் கூட மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்களான காரணத்தினால் புத்தி பலத்தின் மூலமாக அவை வரும் முன்பே தெரிந்து கொள்ள முடியாதா என்ன? நாளுக்கு நாள் எவ்வளவிற்கு எவ்வளவு தன்னுடைய நினைவின் சக்தியில் வந்து கொண்டே இருப்பீர்களோ அதாவது தன்னுடைய ஆத்மா என்ற கண்ணை சக்திசாலியானதாக ஆக்கிக் கொண்டே இருப்பீர்களோ, தெளிவானதாக ஆக்கிக் கொண்டே இருப்பீர்களோ அவ்வளவிற்கு ஒருவேளை ஏதாவது தடை வருவதாக இருந்தால் இன்று ஏதோ சோதனை பரீட்சை வரப்போகிறது என்ற உணர்வு ஏற்படும். மேலும் எவ்வளவிற்கு எவ்வளவு முன்பே தெரிய வந்து விடுமோ அதனால் புத்திசாலியாகி தடைகள் மேல் வெற்றி அடைந்து விடுவார். எப்படி இன்றைய அரசாங்கத்திற்கும் கூட எதிரி

வரப்போகிறான் என்று முன்பே தெரிய வந்து விடுவதினால், முன்பே தயாராக இருக்கும் காரணத்தினால் வெற்றி அடைபவர் ஆகி விடுகிறார்கள். மேலும் திடீரென்று செய்யப்படும் முற்றுகையில் வெற்றி அடைபவராக ஆக முடியாது. இங்கு ஒன்றோ திரிகாலதரிசி ஆன காரணத்தினால் கல்பத்திற்கு முன்பு நடந்த விஷயத்தை நேற்றைய விஷயம் மாதிரி அனுபவம் செய்கிறார்கள் மற்றும் இன்னொன்று ஞானம் நிறைந்தவர் ஆன காரணத்தினால், புத்தி என்ற கண் சக்திசாலியானதாக மற்றும் தெளிவாக இருக்கும் காரணத்தினால் அனைத்து விஷயங்களையும் வரும் முன்பே தெரிந்து கொள்கிறீர்கள். அப்படி ஒருவேளை மூன்று விதமாக கவனம் இருக்கிறது மற்றும் சக்திசாலியான நிலை இருக்கிறது என்றால் வரக்கூடிய தடைகளை முன்பே தெரிந்து கொள்ள முடியாதா என்ன? மேலும் எப்படி முன்பே தெரிந்தும், அறிந்தும் கொண்டே இருப்பீர்கள் என்றால் ஒருபொழுதும் தோல்வி அடைய மாட்டீர்கள். எப்பொழுதும் வெற்றி ஏற்படும். எப்படி கண் சரியாக இல்லாத காரணத்தினால் மற்றும் உளவுத் துறையின் சோதனை சரியில்லாத காரணத்தினால் சில நேரம் அரசாங்கமும் ஏமாந்து விடுகிறது. இதே போல் தன்னுடைய புத்தி என்ற கண் சரியான முறையில் காரியம் செய்து கொண்டிருக்கிறதா என்ற கவனம் வேண்டும்.

உளவு பார்ப்பது என்றால் வேறு என்ன அர்த்தம் ? சோதிப்பதுதான் உளவு பார்ப்பது ஆகும். சோதிப்பது என்ற உளவு பார்ப்பவர் திறமை நிறைந்தவராக இருந்தால் ஒருபோதும் எதிரியிடம் தோல்வி அடைய முடியாது. எனவே முதலிலேயே தெரிந்திருக்க வேண்டும் என்று இப்பொழுது கூட முயற்சி செய்யுங்கள். எப்படி மழை பெய்யப் போவதாக இருந்தால் இயற்கை முன்கூட்டியே அவசியம் எச்சரிக்கை கொடுக்கும். ஒருவேளை இதைப் பற்றி நன்றாகத் தெரிந்தவராக இருந்தால், இயற்கை மூலம் வரும் தடையிலிருந்து அவர் பாதுகாட்டாக இருக்க முடியும். ஒருவேளை அறியாதவராக இருந்தால் இயற்கையின் வித விதமான துக்கம் மற்றும் நோயை உருவாக்க காரணமாகும். சிறு சிறு விஷயங்களுக்கு அடிமையாகி விடுகிறார். காரணம் என்னவாக இருக்கும்? அறிவு மற்றும் தெரிந்து கொள்வதில் குறை இருக்கிறது. எனவே எவ்வளவுக்கு எவ்வளவு நினைவின் சக்தி அதாவது அமைதி சக்தி தன்னுள் நிரம்பிக் கொண்டிருக்குமோ அவ்வளவிற்கு இன்று ஏதோ நடக்கப் போகிறது என்று முதலிலேயே தெரிய வந்து விடும். மேலும்

ஒவ்வொரு நாளும் யார் நெருக்கமான மஹாரதிகள் கவனம் மற்றும் சோதனையில் இருக்கிறார்களோ அவர்கள் இதை அனுபவம் செய்து கொண்டே இருப்பார்கள். காய்ச்சலும் வரப்போவதாக இருந்தால் முன் கூட்டியே அதன் அடையாளங்கள் தென்படும். அப்படி இதில் கூட ஒருவேளை நன்கு தெரிந்திருப்பவராக இருந்தால் என்ன பரீட்சை வரப்போகிறதோ அதன் அடையாளங்கள் அவசியம் இருக்கும் ஆனால் பகுத்தறியும் சக்தி மிகவும் சக்திசாலியானதாக இருக்கின்றது என்றால்
ஒருபோதும் தோல்வி அடைய முடியாது. ஜோதிடர்கள் கூட தன்னுடைய ஜோதிட அறிவு மூலமாக, கிரஹங்களின் ஞானம் மூலமாக வரக்கூடிய ஆபத்துக்களை தெரிந்திருக்கிறார்கள். உங்களுடைய ஞானத்திற்கு எதிரில் அந்த ஞானம் ஒன்றுமே இல்லை. கீழானது என்று கூறலாம். எப்பொழுது கீழான ஞானம் உடையவர்கள் நடக்கக்கூடியதைக்கூட முன் கூட்டியே தெரிந்து கொள்ள முடியும் என்றால், தன்னுடைய ஞானத்தின் சக்தி மூலமாக இவ்வளவு உயர்ந்ததிலும் உயர்ந்த ஞானம் மூலமாக மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் இதைத் தெரிந்து கொள்ள முடியாதா? தெரிந்து கொள்ள முடியவில்லை என்றால் புத்தி என்ற கண் தெளிவாக இல்லைஎன்பதுதான் காரணம். மேலும் தெளிவாக இல்லாமல் இருப்பதற்கான காரணம் என்ன? கவனம் உள்ளவராக இல்லை. கவனம் உள்ளவராக இல்லாததற்கான காரணம் ஞானம் நிறைந்தவராக இல்லை. ஞானம் நிறைந்தவராக இல்லாததற்கான காரணம் சக்தி நிறைந்தவராக இல்லாததுதான். சக்தி நிறைந்தவராக இல்லாத காரணத்தினால் என்ன வெற்றி கிடைக்க வேண்டுமோ அது கிடைப்பதில்லை. தன்னுடைய கண்களைத் தெளிவாக வைத்துக் கொள்வது கடினமான விஷயமா என்ன? இந்த தடவை பட்டியில் வந்திருப்பவர்கள் மதுபனிலிருந்து அதாவது, வரதான பூமியிலிருந்து என்ன வரதானம் எடுத்துச் செல்வீர்கள்? ஒன்றோ தன்னுடைய புத்தி என்ற கண்ணை தெளிவாகவும் கவனமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும், மேலும் ஞானம் நிறைந்தவராகி முன் கூட்டியே தெரிந்து கொள்ளும் வரதானத்தை எடுத்துச் செல்ல வேண்டும். இதன் மூலம் மாயாவிடம் ஒருபோதும் தோல்வி அடைய மாட்டார்கள். யாருக்கு மாயாவிடம் தோல்வி ஏற்படுவது இல்லையோ அவரிடமிருந்து கேட்பவர்கள், அவரைப் பார்ப்பவர்கள் அவர் மேல் பலியாகி விடுகிறார்கள். அப்படி இல்லறத்தில் இருந்து கொண்டே உங்கள் மேல் உங்களின் நெருக்கத்தில் இருப்பவர்கள், தூரத்தில் இருப்பவர்கள் உங்கள் மேல் பலி யாவதற்கான யுக்தி அடிக்கடி தோல்வி

அடையக் கூடாது என்பதுதான். அடிக்கடி தோல்வி அடைகிறீர்கள் என்றால், தோல்வி அடைபவர்கள் மேல் எப்படி பலியாவார்கள்? எனவே அனைவரும் தன் மேல் அதாவது தந்தை மேல் பலி ஆகுபவர்களாக ஆக்குவதற்கு ஒருபோதும் தோல்வி அடையக் கூடாது. மாலை அணிவதற்கு தகுதியானவர் ஆக வேண்டுமேயன்றி தோல்வி அடைபவர் ஆகக் கூடாது. இதுதான் இல்லறத்தில் இருக்கும் பாண்டவர்களுக்காக விசேஷமான அறிவுரை, எப்பொழுது உங்களுடைய குடும்பத்திற்குச் செல்கிறீர்களோ குடும்பத்தை, குடும்பம் என்று நினைப்பீர்களா அல்லது வேறு ஏதாவது என்று நினைப்பீர்களா? குடும்பத்தில் இருப்பவர் என்ற இந்தப் பெயர் மாறிவிட்டது இல்லையா? இப்பொழுது தன்னுடைய குடும்பத்தினருக்குதான் அதர் குமார் என்று கூறுவீர்களா? தனது குடும்பத்தின் எண்ணம் கொஞ்சம் கூட வரவேண்டாம். (அந்த மாதிரி எண்ணம் எழுவதற்காக கேள்வியே எழ முடியாது). கேள்வியோ எழுகிறது ஆனால் சிந்தனை உருவாக வேண்டாம் என்று அப்படி கூறுங்கள். நாம் இல்லற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற இந்த ரிஜிஸ்டரை இன்றோடு முடித்து விட்டு, சேவாதாரி என்ற புதிய ரிஜிஸ்டர் வைத்திருக்கிறோம் என்று அப்படியே புரிந்து கொள்ளுங்கள். தீபாவளி அன்று பழைய கணக்கை முடித்து விட்டு புதிய கணக்கைத் துவங்குகிறார்கள் இல்லையா. அப்படி நீங்கள் கூட உண்மையான தீபாவளியைக் கொண்டாடினீர் களா? தீபத்தையும் அழியாததாக ஏற்றினீர்களா? பழைய குடும்பத்தின் நினைவு மற்றும் பழைய சம்ஸ்காரத்தின் கணக்கையும் முடித்து விட்டீர்களா? எப்படி நினைவோ அப்படி சம்ஸ்காரம் உருவாகிறது. அப்படியானால் இந்தக் கணக்கை முழுமையாக எரித்து விட்டீர்களா அல்லது ஒரமாகக் கொஞ்சம் வைத்திருக்கிறீர்களா? ஒருவேளை ஓரமாக வைத்திருந்தீர்கள் என்றால் எப்பொழுது வேண்டுமானாலும் புத்தி அதில் செல்லும். எரித்து அழித்து விட்டீர்களாக அல்லது அவ்வப்போது பார்க்க வேண்டும் என்று மனம் விரும்புகிறதா? சில பொருட்கள் இருக்கின்றன, அந்தப் பொருட்களினால் பயம் ஏற்படுகிறது என்றால் அதை ஒரமாக வைப்பதற்குப் பதிலாக எரிக்கப்படுகிறது. பொய்க் கணக்கு எழுதுபவர்கள் அரசாங்கத்திடம் பயப்படும் காரணத்தினால் அவற்றை எரித்து சாம்பலாக்கி விடுகிறார்கள். யாருக்கும் எந்த அடையாளமும் கிடைக்க வேண்டாம் என்று அப்படி செய்கிறார்கள். இந்த மாதிரி பழைய நினைவின் கணக்கு மற்றும் கணக்கு புத்தகத்தை முற்றிலும் எரித்து சாம்பலாக்கி விட்டுச் செல்ல வேண்டும். ஒரமாக வைப்பது ஒன்று,

இன்னொன்று முற்றிலும் எரித்து விடுவது. இராவணனை கொல்வது மட்டுமல்ல, எரித்தும் விடுவார்கள். அப்படி இதையும் ஒரமாக வைத்தீர்கள் என்றால் அந்த அடையாளமும் இருந்து விடும். பழைய கணக்கு புத்தகத்தின் சிறிய துண்டு மூலம் கூட பிடிபட்டு விடுவார்கள். மாயா மிகவும் புத்திசாலியானது. அதனுடைய கேட்சிங் பவர் (பிடித்துக் கொள்ளும் சக்தி) குறைந்தது அல்ல. எப்படி அரசாங்கஅதிகாரிகளுக்கு ஏதாவது கிடைத்து விட்டால் அதை வைத்தே அவர்கள் பிடித்து விடுவார்கள்.அடையாளங்களை கொஞ்சமாவது (மீதமாக) ஒரமாக வைத்து விட்டால் மாயா ஏதாவது ஒரு விதத்தில் பிடித்து விடும். எனவே எரித்து விட்டுத்தான் செல்ல வேண்டும். குமாரர்களிடம் கைச் செலவிற்கு பாக்கெட் மணி வைத்துக் கொள்ளும் பழக்கம் இருக்கிறது என்று கூறியிருந்தோம், அதே போல் குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்களிடமும் கடைசி நேரத்திற்காக ஏதாவது ஒரமாக வைத்துக் கொள்ளும் சம்ஸ்காரம் இருக்கிறது. எவ்வளவதான் இலட்சாதிபதியாக இருந்தாலும், எவ்வளவுதான் அன்பானவர்களாக இருந்தாலும் இந்த சம்ஸ்காரம் இருக்கும். இந்த சம்ஸ்காரம் இங்கேயும் முயற்சி செய்வதில் தடை ரூபமாக ஆகிறது. ஒருவேளை கொஞ்சம் அதிகாரத் தன்மையை வைக்காவிட்டால் குடும்பம் எப்படி நடக்கும் என்று சிலர் நினைக்கிறார்கள். கொஞ்சம் பேராசையின் சம்ஸ்காரமும் விதவிதமான ரூபத்தில் இல்லையென்றால் சம்பாத்தியம் எப்படி செய்ய முடியும்? மேலும் அஹங்காரத்தின் சம்ஸ்காரம் இல்லையென்றால் மக்களின் எதிரில் பெர்சனாலிட்டி (தனித்தன்மை) எப்படி தென்படும் என்று நினைக்கிறார்கள். அந்த மாதிரி காரியங்களுக்காக அதாவது கடைசி நேரத் தேவைக்காக பழைய சம்ஸ்காரங்களுக்காக அதாவது கடைசி நேரத் தேவைக்காக பழைய சம்ஸ்காரங்களின் பொக்கிஷங்களை மறைந்து வைத்துக் கொள்கிறார்கள். இந்த சம்ஸ்காரம்தான் ஏமாற்றி விடுகிறது. இது எந்த பெர்சனாலிட்டியும் இல்லை. மேலும் இந்த பழைய சம்ஸ்காரங்களின் ரூபம் குடும்பத்தை பாலனை செய்வதற்கான சாதனமும் இல்லை. பழைய சம்ஸ்காரத்தின் பேராசை ராயல் ரூபத்தில் இருக்கும் ஆனால் அது பேராசையின் அம்சம்தான்.

உதாரணமாக குடும்பத்தில் இருப்பவர்கள் வருமானம் செய்ய வேண்டும் என்று செல்லும் பொழுது எங்காவது அதிகமாக பிராப்தி (வருமானம்) இருக்கிறது என்றால், அதன் பின்னாலேயே சென்று ஈஸ்வரிய

சம்பாத்தியத்தைக் குறைத்துக் கொண்டு அந்த பிராப்தியின் பின்னால் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வார்கள். இந்தப் பக்கம் கவனத்தைக் குறைத்துக் கொண்டு, அந்தப் பக்கத்து பிராப்தியின் பக்கம் கவனம் அதிகமாகச் சென்றால், இது பேராசையின் அம்சம் இல்லையா என்ன? இந்த மாதிரி தேவையான நேரம் உபயோகத்திற்காக கொஞ்சம் பழைய சம்ஸ்காரங்களின் பொக்கிஷங்களை ஒருபக்கமாக வைக்கும் சம்ஸ்காரத்தையும் அழிக்க வேண்டும். எங்காவது ஏதாவது ஒரு மூலையில் ஏதாவது பழைய சம்ஸ்காரம் இருந்து விட வில்லையே என்று அந்த மாதிரி சோதனை செய்ய வேண்டும். பற்றுதலும் இருக்கிறது குடும்பத்தின் பக்கம் அதிக கவனம் சென்றால் இதுவும் ராயல் ரூபத்தில் மோகத்தின் அம்சமாகும். இந்த எல்லைக்கப்பாற்பட்ட இல்லறமோ 21-ஜென்மங்கள் உடன் வரும் மேலும் அந்த இல்லறம் கர்ம பந்தனத்தை முடிக்கும் இல்லறமாகும். அப்படியானால் முடிக்கும் இல்லறத்தின் பக்கம் அதிக கவனம் கொடுத்து மேலும் இந்தப் பக்கம் குறைவாகக் கவனம் கொடுத்தார்கள் என்றால் இது பாசம், பற்றுதலின் ராயல் ரூபம் இல்லையா என்ன? இந்த அம்சம் வளர்ந்து பெருகி தடை ரூபமாகி வெற்றி அடைவதில் தோல்வியைத் தழுவச் செய்கிறது எனவே குடும்பத்தில் இருப்பவர்கள் மஹாதானியாகவும், மஹா ஞானியாகவும் ஆகியிருக்கிறார்கள் ஆனால் இந்த ஒரமாக வைக்கப்பட்ட விகாரங்களின் வம்சத்தின் அம்சத்தையும் அழிக்க வேண்டும், இந்த கவனமும் வைக்க வேண்டும். 7-நாள் பாடம் எடுத்தாகி விட்டது மற்றும் தேர்ச்சி பெற்று விட்டோம் என்று அப்படி இல்லை. இப்பொழுது இதிலேயும் தேர்ச்சி பெற வேண்டும். முற்றிலும் கொஞ்சம் கூட எந்த ஒரு மூலையிலும் பழைய பொக்கிஷங்களின் அடையாளம் இருக்க வேண்டாம். இதைத்தான் உடலில் இருந்து கொண்டே இறந்தவர், அனைத்தையும் தியாகம் செய்தவர், சர்வ சமர்ப்பணம், டிரஸ்டி மற்றும் யக்ஞத்தின் பால் அன்பானவர் மற்றும் சகயோகி என்று கூறுவது. இதுதான் பாடம். பாடத்தை ஆசிரியைகள் கற்றுக் கொடுத்திருப்பார்கள் ஆனால் கோர்ஸ்க்கு (பாடம்) பின்னால் ஃபோர்ஸ் (மூலம்) வேண்டும். பாடத்தை மட்டும் எடுத்துச் சென்றீர்கள் என்றால் பாடம் இங்கு மட்டும் சரியாக இருக்கிறது என்றால் பரீட்சை எழுதும் சமயம் மறந்து விடுகிறது. பாடத்தின் கூடவே பலத்தையும் நிரப்பிச் சென்றீர்கள் என்றால் பலம் பாடத்தில் வெற்றியைக் கொடுக்கும். ஒரு பொழுதும் தோல்வி அடைய மாட்டீர்கள். அப்படி இந்த பலத்தை நிரப்பிச் செல்லுங்கள்.

அப்பொழுதுதான் எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆக முடியும். கொஞ்சம்கூட அடையாளமே இருக்க வேண்டாம். அடையாளம் இருந்து விடும் காரணத்தினால்தான் புத்தி எங்கு சென்றடைய வேண்டுமோ அங்கு சென்றடைய முடிவதில்லை. அந்த மாதிரி பெரிய பரீட்சை எழுத வேண்டும். சின்ன சின்ன பரீட்சை எழுதுவது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் சூட்சுமமான நுணுக்கமான பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டும் இதுதான் கௌரவத்துடன் தேர்ச்சி பெறுவதாகும். என்ன செய்ய வேண்டும் என்று இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? தன்னுடைய பழைய கணக்கை முழுமையாக எரித்து விட்டுச் செல்ல வேண்டும். இவ்வளவு பலத்தை நிரப்பினாலேபோதும். எப்படி துணிகள் துவைத்த பிறகு தேய்க்கப்படாவிட்டால் பளபளப்பு வருவதில்லையோ, அப்படி இதுவும் பாடத்திற்குப் பின்பு பலம் நிரம்பவில்லை என்றால் அதிசயமானவராகி அதிசயத்தைக் காண்பிக்க முடியாது. அப்படி ஈஸ்வரிய பளபளப்பு தூரத்திலிருந்தே கவரும் மாதிரி அதிசயம் செய்பவராகிச் செல்ல வேண்டும். அனைத்தையும் விட அதிகமாக விரும்பாவிட்டாலும் தன் பக்கம் கவரக்கூடிய பொருள் எது? ஜொலிப்பு எதன் மூலம் வருகிறது. உங்களுடைய கண்காட்சியில் அனைத்தையும் விட அதிகமாக எது கவருகிறது? ஒன்று லைட் (ஒளி) தன் பக்கம் கவருகிறது. இன்னொன்று மைட் (சக்தி) தன் பக்கம் கவருகிறது. அதில் எந்த சக்தி இருந்தாலும் கூட தன்னுள் ஈஸ்வரிய லைட் மற்றும் தனக்குள் மாற்றம் செய்வதற்கான மைட் (சக்தி) இருந்தால் கூட கவருவீர்கள். அப்படி மாற்றம் செய்வதற்கான லைட் மற்றும் மைட் தாரணை செய்வதினால் ஒவ்வொரு ஆத்மாவையு தன் பக்கம் கவர்ந்து இழுக்க முடியும். நல்லது.

**வரதானம்: அனைத்து பொக்கிஷங்களை உருவாக்குபவராகி மாயாவை வென்று வெற்றி அடைபவராகக் கூடிய மற்றவர்களுக்கு உபகாரம் செய்பவர்கள் ஆகுக!**

இப்பொழுது வரை சுய நன்மைக்காக மிகுந்த நேரம் சென்று கொண்டிருக்கிறது. இப்பொழுது மற்றவர்களுக்கு உபகாரம் செய்பவர்களாக ஆகுங்கள். மாயாவை வென்று வெற்றி அடைபவர் ஆவதின் கூடவே உருவாக்குபவர் ஆகுங்கள். அதாவது ஒவ்வொரு பொக்கிஷத்தையும் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். குஷி, அமைதி, சக்திகள், ஞானம், குணங்கள், உதவி செய்வது ஆகிய பொக்கிஷங்களை அனைவருக்கும் கொடுங்கள் மற்றும் அதிகரியுங்கள். எப்பொழுது இந்த

உருவாக்குபவரின் நிலையை அனுபவம் செய்வீர்கள் அதாவது மற்றவர்களுக்கு உபகாரம் செய்பவர்களாக எப்போது ஆவீர்களோ அப்பொழுது அநேக ஜென்மங்கள் உலக ராஜ்ய அதிகாரி ஆவீர்கள்.

**சுலோகன்: உலக நன்மை செய்பவர் ஆக வேண்டும் என்றால் தன்னுடைய அனைத்து பலஹீனங்களுக்கும் நிரந்தரமாக விடை கொடுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 28.07.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஆகாரத்தில் (உடலில்) நிராகாரத்தை (ஆத்மாவை) பார்ப்பதற்கான பயிற்சி!

ஆகாரத்தைப் (உடலை) பார்த்துக் கொண்டே நிராகாரத்தை (ஆத்மாவை) பார்ப்பதற்கான பயிற்சி ஆகி விட்டதா? எப்படி தந்தை ஆதாரத்தில் நிராகார ஆத்மாக்களைத்தான் பார்க்கிறார், அதே போல் தந்தைக்கு சமமானவர்களாக ஆகி இருக்கிறீர்களா? எப்பொழுதும் உயர்ந்த விதையாக எது இருக்கிறதோ அதன் பக்கம்தான் பார்வையும், உள் உணர்வும் செல்லும். அப்படி இந்த உடலின் (ஆகாரத்தின்) நடுவே உயர்ந்த பொருளாக எது இருக்கிறது? நிராகார ஆத்மாதான். அப்படி உருவத்தைப் பார்க்கிறீர்களா அல்லது ஆத்மாவைப் பார்க்கிறீர்களா? ஏனென்றால் இப்பொழுது வித்தியாசத்தையும் தெரிந்து கொண்டீர்கள் மற்றும் மஹா மந்திரத்தையும் தெரிந்து கொண்டீர்கள். தெரிந்து கொண்டீர்கள் மற்றும் பார்த்தும் விட்டீர்கள் வேறு இன்னும் என்ன இருக்கிறது? மற்றபடி நிலைத்து இருக்கும் விஷயத்தில் பயிற்சி உள்ளவராக ஆகியிருக்கிறீர்களா? (ஒவ்வொருவரும் அவரவர்களின் அனுபவத்தைக் கூறினார்கள்) கடைசி வரை முதல் பாடத்தின் பயிற்சி செய்பவராகவே இருப்பீர்கள் என்று அப்படி புரிந்து கொள்ளலாமா? கடைசி வரை பயிற்சி செய்பவராகவே இருப்பீர்களா அல்லது சொரூபமாக ஆகி விடுவீர்களா? முடிவிற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பு இந்தப் பயிற்சி முடிவடையும் மற்றும் சொரூபம் ஆகி விடுவீர்கள்? உடலை விடும் வரை பயிற்சி செய்பவர்களாகவே இருப்பீர்களா? முதல் பாடத்தின் முடிவு எப்பொழுது ஏற்படும்? கடைசி வரை பயிற்சி செய்பவர்களாக இருப்போம் என்று கூறுபவர்கள் கையை உயர்த்துங்கள். உடலில் ஆத்மாவைப் பார்க்கும் முதல் பாடத்தைப் பற்றி கேட்கிறோம். இப்பொழுது உடலைப் பார்த்தும் ஆத்மாவைப் பார்க்கிறீர்களா? பேசுகிறீர்கள் என்றால் எதனோடு பேசுகிறீர்கள்? (ஆத்மாவோடு) உடலில் ஆத்மா தென்பட வேண்டும் -இதில் ஒருவேளை கடைசி வரை பயிற்சி செய்பவராகவே இருந்து விட்டால் ஆத்ம அபிமானியின் மற்றும் தன்னுடைய உண்மையான சொரூபத்தின்

ஆனந்தம் மற்றும் சுகம் என்ன இருக்கிறதோ அதை சங்கமயுகத்தில் அனுபவம் செய்ய மாட்டீர்களா? சங்கமயுகத்தின் ஆஸ்தி எப்பொழுது பிராப்தி ஆகிறது? சங்கம யுகத்தின் ஆஸ்தி எது? (அதீந்திரிய சுகம்) இது எப்பொழுது வீட்டிற்குச் செல்பவர்களாக இருப்பீர்களோ அப்பொழுது கிடைக்குமா என்ன? ஆத்மீக சொரூபமாகி நடந்து கொள்ள வேண்டும் மற்றும் ஆத்மாவாகி நடந்து கொள்ள வேண்டும் என்ற இந்தப்பயிற்சி இல்லையா? இப்பொழுது உடலை மற்றும் ஆத்மாவைப் பார்க்கும்போது கவர்ச்சி உடலின் பக்கம் இருக்கிறதா அல்லது ஆத்மாவின் பக்கம் இருக்கிறதா? ஆத்மாவைப் பார்க்கிறீர்கள்தான் இல்லையா? உடலில் ஆத்மாவைப் பார்ப்பது என்பது நடைமுறையில் மற்றும் இயற்கையான சொரூபமாக ஆகியே விட வேண்டும் இன்னும் உடலைப் பார்ப்பீர்களா என்ன? சேவையோ ஆத்மாவிற்கு செய்கிறீர்கள் இல்லையா? எந்த நேரம் உணவு அருந்துகிறீர்களோ அப்பொழுது ஆத்மாவிற்கு உணவு அளிக்கிறீர்களா அல்லது உடலின் உணர்விலிருந்து சாப்பிடுகிறீர்களா? ஏணிப்படியில் இறங்கி மற்றும் ஏறுகிறீர்களா? ஏணிப்படி விளையாட்டு பிடித்திருக்கிறதா? இறங்குவது மற்றும் ஏறுவது யாருக்கு பிடித்திருக் கிறது? சிறு சிறு குழந்தைகள் ஏணிப்படியை எங்கு பார்த்தாலும் அவசியம் ஏறுவார்கள் மற்றும் இறங்கு வார்கள். அப்படியானால் கடைசி வரை குழந்தைத் தனமே இருக்குமா என்ன? பெரியவர்களாக ஆக மாட்டீர்களா? எப்படி உடலும் வயோதிக நிலையை அடைகிறது என்றால் மெது மெதுவாக குழந்தைப் பருவத்தின் சம்ஸ்காரங்கள் அகன்று கொண்டே செல்லும் இல்லையா? இந்த இறங்குவது ஏறுவது என்ற குழந்தைப் பருவ விளையாட்டு எது வரை இருக்கும்? உடலில் இருந்தும் எப்பொழுது ஆத்ம நிலையில் இருப்பீர்களோ அப்பொழுதுதான் சாட்சாத்கார மூர்த்தியாக (காட்சிகள் கொடுப்பவராக) ஆக முடியும். ஒருவேளை கடைசிவரை பயிற்சி செய்பவராக இருக்க வேண்டும் என்று நினைத்தீர்கள் என்றால் முதல் பாடத்தை பரிபக்குவம் ஆக்குவதில் தொய்வு வந்து விடும். பின்பு நிரந்தரமாக சுலபமான நினைவு மற்றும் சொரூபத்தின் நிலையில் வெற்றியைப் பார்க்க மாட்டீர்களா? உடலை விடும் பொழுதுதான் வெற்றி அடைவீர்களா? ஆனால் அப்படி இல்லை, இந்த ஆன்மீக சொரூபத்தின் அனுபவத்தை முடிவிற்கு முன்பே செய்ய வேண்டும். எப்படி அநேக ஜென்மங்கள் தன்னுடைய உடலின் சொரூபத்தின் நினைவு இயற்கையாக இருந்தது அதே போல் தன்னுடைய உண்மையான சொரூபத்தின் நினைவின் அனுபவத்தை குறைந்த காலம் கூட செய்ய

மாட்டீர்களா என்ன? இது இருக்க வேண்டுமா? இந்த முதல் பாடம் முடிவடைந்தே விடும். இந்த ஆத்ம அபிமானியின் நிலையில்தான் அனைத்து ஆத்மாக்களுக்கும் காட்சிகள் காண்பிப்பதற்கு பொறுப்பாளர் ஆவீர்கள். எனவே இந்த கவனம் வைக்க வேண்டியது இருக்கும். ஆத்மா என்று புரிந்து கொள்வது தன்னுடைய சொரூபத்தின் நிலையில் நிலைத்திருப்பதுதான் இல்லையா. எப்படி பிரம்மா குமார் மற்றும் பிரம்மா குமாரி என்று கூறுவதினால் பிரம்மாபாபா மற்றும் பிரம்மா குமார் என்ற நிலையின் சொரூபம் மறக்கிறதா என்ன? முழு நாள் நடவடிக்கைகளுக்கிடையே நான் பிரம்மா குமார் என்பது மறக்கிறதா என்ன? எப்பொழுது இது மறப்பது இல்லையோ சிவவம்சி ஆன காரணத்தினால் தன்னுடைய ஆத்மீக சொரூபத்தை ஏன் மறக்கிறீர்கள்? பாப்தாதா என்று கூறுகிறீர்கள் இல்லையா? எப்பொழுது சிவபாபா என்ற வார்த்தையைக் கூறுகிறீர்கள் என்றால் நிராகார சொரூபம் எதிரில் வருகிறது இல்லையா. எப்படி பிரம்மா குமார் என்ற சொரூபம் நிரந்தரமாக உறுதியாகி விட்டதோ அதே போல் தன்னுடைய சிவவம்சியின் சொரூபம் கடைசியில் ஆவீர்களா? பாப்தாதா என்று சேர்த்தே கூறுகிறீர்களா அல்லது தனித்தனியாகக் கூறுகிறீர்களா? எப்பொழுது பாப்தாதா என்ற வார்த்தையை சேர்த்தே கூறுகிறீர்கள் என்றால் தன்னுடைய இரண்டு சொரூபமும் ஆத்மீக சொரூபம் மற்றும் பிரம்மா குமாரியின் சொரூபம் இரண்டின் நினைவும் இருப்பதில்லையா? இந்தப் பயிற்சியை முதலிலேயே முடிக்க வேண்டியது இருக்கும். கடைசி நேரத்திற்காக இன்னும் அதிகமான விஷயங்கள் இருக்கும்.

கடைசி நேரத்தில் புது புது பரீட்சைகள் வரும், அந்தப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று பட்டம் வாங்குவோம் என்று கூறினீர்கள் இல்லையா. ஒருவேளை இந்த முதல் பாடமே நினைவில் இல்லை என்றால் சம்பூரண நிலையின் பட்டமும் வாங்க முடியாது. பட்டம் கிடைக்காவிட்டால் என்னவாகும்? தர்மராஜின் கோர்ட் நோட்டீஸ் வரும். எனவே இந்தப் பயிற்சியை உறுதியாகச் செய்யுங்கள். எப்படி விகாரத்தை முற்றிலும் எண்ண ரூபத்திலிருந்து கூட அகற்றுவோம் என்று நிச்சயம் செய்திருந்தீர்கள், அதில் பெரும்பான்மையோர் வெற்றியடைந்தீர்கள் இல்லையா. தன்னுடைய உறுதிமொழியின் ஆதாரத்தின் மேல் இருக்கிறது. எந்த விஷயத்தில் மிகவும் சக்திசாலியான உறுதி மொழி எடுக்கிறீர்கள் என்றால் அந்த உறுதிமொழி நடைமுறை ரூபம் எடுத்து விடுகிறது.

ஒருவேளை இது கடைசிப் பாடம் என்று நினைத்தீர்கள் என்றால் முடிவு என்ன ஆகி விடுகிறது? நடைமுறையில் ஏற்படுவது இல்லை. பயிற்சியாகவே இருந்து விடுகிறது. இந்த விஷயங்களை முதலில் கடக்க வேண்டும். ஒருவேளை கடைசி வரை கடப்பீர்கள் என்றால் முழுமையான அதீந்திரிய சுகத்தின் ஆஸ்தியை எப்பொழுது அடைவீர்கள்? நிறைய விஷயங்கள் அப்படி இருக்கின்றன அதில் ஒவ்வொருவரும் அவரவர்களின் சக்திக்கேற்றபடி கடந்து பயிற்சிக்குப் பதிலாக நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறார்கள். சிலர் சில விஷயங்களில் கொண்டு வந்திருக்கிறார்கள். எப்படி லௌகீக உடல் சம்பந்தப்பட்ட விஷயத்தில் சிலர் பயிற்சியிலும் சிலர் நடைமுறையிலும் இருக்கிறார்கள். ஒரே அலௌகீக பரலௌகீக சம்பந்தத்தின் அனுபவத்தில் இருக்கிறார்கள். கனவிலும் கூட ஒருபோதும் எண்ணத்தில் உடலின் உணர்வுகளின் பக்கம் உள் உணர்வு மற்றும் பார்வை செல்ல வேண்டாம். இதில் பாண்டவர்களையும் கடந்து செல்ல வேண்டும். லௌகீகத்தை அலௌகீகத்தில் மாற்றம் செய்யும் நினைவு வருகிறது என்றால் அது நன்மைக்கானதாக ஆனது. நீங்களோ மதுபன் பட்டியில் இருப்பவர்கள் இல்லையா. அப்படியானால் முதல் படியை கடந்து செல்ல வேண்டும் இல்லையா. எது ஒரு நொடியில் முன்பு இல்லாமல் இருந்ததோ அது இப்போதைய ஒரு நொடியில் ஆக முடியாதா என்ன? மதுபன்னின் பாண்டவர்கள். பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் ஏதோ சிறிய கீதாபாடசாலையின் மாணவன் இல்லை. அப்படியானால் இவர்களுக்கு எவ்வளவு போதை இருக்க வேண்டும். இவர்களுடைய படிப்பு எவ்வளவு உயர்ந்தது. ஒரு நொடி முன்பு உங்கள் மேல் நம்பிக்கை வைக்காமல் இருந்த நிலை அதிசயப்படும்படி மாறி அனைவரும் நம்பிக்கைக்குரியவர்களாக மாறிவிடட்டும். மஹாவீர் சேனை என்ன செய்தது? முழு இலங்கையையும் எப்பொழுது எரித்து விட்டீர்களோ இந்தப் படியை கடக்க முடியாதா? முதல் படியைப் பற்றிக் கூறினோம். இரண்டாவது படி கர்ம இந்திரியங்கள் மேல் வெற்றி மூன்றாவது வீணான எண்ணங்கள் மற்றும் தீய எண்ணங்கள் மேல் வெற்றி இதுதான் கடைசி ஆனால் இரண்டாவதையும் கடந்து விட வேண்டும். நாங்கள் முழுமையாகத் தேர்ச்சி பெற்றவர்கள் என்று ஊக்கம் உற்சாகத்தோடு சொல்ல முடிய வேண்டும். இரண்டாவது படியோ மிகவும் சுலபம். எப்பொழுது உடலில் இருந்து கொண்டே இறந்து விட்டீர்களோ (மர்ஜீவா) பின்பு பழைய கர்ம இந்திரியங்கள் மேல் கவர்ச்சி ஏன் இருக்கிறது?

மர்ஜீவா ஆகி விட்டீர்கள் என்றால் முடிந்து விட்டதுதான் இல்லையா. எப்படி ஜாதகத்தைப் பார்த்து இவர் இந்த வயசு வரை இருப்பார்; பின்பு இறந்து விடுவார் என்று கூறுகிறார்கள் இல்லையா ஆனால் யாராவது தான புண்ணிய காரியங்கள் செய்தார்கள் என்றால் புது ஜென்மம் மாதிரி புதிய ஆயுள் தொடங்கி விடும். அப்படி மாஜீவா ஆகியிருக்கிறீர்கள் அதாவது எல்லாவற்றிலிருந்தும் இறந்து விட்டீர்கள் இல்லையா. பழைய ஆயுள் முடிந்து விட்டது. இப்போதோ புதிய ஜென்மம் ஏற்பட்டிருக்கிறது அதில் பிரம்மா குமார் பிரம்மா குமாரிகளாக ஆகியிருக்கிறீர்கள் என்றால் பிரம்மாகுமார் பிரம்மாகுமாரிகளுக்கு கர்ம இந்திரியங்கள் மேல் வெற்றி இல்லை என்பது இருக்க முடியுமா என்ன? பழைய கணக்கு இருக்கிறது என்றால் முடிந்து விட்டது. எப்பொழுது மர்ஜீவா ஆனீர்களோ, பிரம்மா குமார் ஆகி விட்டீர்களோ பின்பு கர்ம இந்திரியங்களுக்கு எப்படி வசம் ஆக முடியும்? பிரம்மா குமாரின் புது வாழ்வில் கர்ம இந்திரியங்களுக்கு வசமாவது என்றால் என்ன என்ற இந்த ஞானத்திலிருந்தும் விலகி விடுகிறார்கள். இப்பொழுது சூத்ர நிலையிலிருந்தும் மர்ஜீவா ஆகவில்லையா என்ன அல்லது இப்பொழுதுதான் ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? சூத்ர தன்மையின் சிறிய சம்ஸ்காரம் கூட எங்காவது மாட்டிக் கொண்டிருக்கவில்லையே? சிலருடைய மூச்சு மறைந்திருந்து சிறிது நேரத்திற்குப் பிறகு வெளியே வரும். இங்கேயும் அந்த மாதிரியா என்ன? பழைய சம்ஸ்காரம் மாட்டிக் கொண்டிருக்கிறது என்றால் மர்ஜீவா ஆகி விட்டீர்கள் என்று சொல்ல முடியுமா? மாஜீவா ஆகவில்லை என்றால் பிரம்மா குமார் என்று எப்படிக் கூற முடியும்? மர்ஜீவாவாகவோ ஆகியிருக்கிறீர்கள் இல்லையா. மற்றபடி பிரம்மாகுமார் ஆன பிறகுதான் மாயா வருகிறது என்ற எண்ணம் வருகிறது. சூத்ர குமாரிடம் மாயா வருகிறதா என்ன? நீங்கள் ஏன் குழப்பம் அடைகிறீர்கள். மர்ஜீவா ஆகி விட்டோம் என்று கூறுங்கள். மர்ஜீவா ஆன பிறகு மாயாவிற்கு சவால் விட்டீர்கள், எனவே மாயா வருகிறது. அதோடு சண்டையிட்டு நாங்கள் வெற்றியாளர்கள் ஆகுகிறோம் என்று அப்படி ஏன் கூறுவதில்லை. நீங்கள் மஹாவீர் என்றால் உங்களுடைய போதையை (நஷா) எப்பொழுதும் நிலையாக வைத்திருங்களேன். எப்பொழுது தன்னை பிரம்மாகுமார் என்று நினைப்பீர்களோ அப்பொழுது இந்த கர்ம இந்திரியங்களின் கவர்ச்சி என்ற இரண்டாவது படி இருக்கிறது இல்லையா அதையும் கடந்து சென்று விடுவீர்கள். பிரம்மா குமார் மற்றும் சிவகுமார் என்ற இரண்டு நினைவும் வைப்பதினால் ஒருபொழுதும்

தோல்வி அடைய முடியாது. ஏனென்றால் பிரம்மா குமார் என்று நினைப்பதினால் பிரம்மாகுமாரின் காரியம், பிரம்மாகுமாரின் குணம் என்ன என்பதும் நினைவில் இருக்கிறது இல்லையா. அப்படி இப்பொழுது இரண்டாவது மற்றும் மூன்றாவது படியைக் கடந்து சென்று கௌரவமாகத் தேர்ச்சி பெறுவதின் அருகில் வருவதற்காக இந்த பட்டி செய்திருக்கிறீர்கள். அப்படி இந்த பட்டியின் முடிவோ இதையும் முடித்து விட வண்டும். அப்படியே பார்த்தாலும் இடத்தின் ஆதாரத்தில் நிலை உருவாகிறது. இந்த மதுபன்னின் இடம் அப்படிப்பட்டது அது ஸ்திதியையே (மனநிலையையே) மாற்றி விடுகிறது. மன நிலையின் மேல் இடத்தின் பாதிப்பு இருக்கிறது. மேலும் ஒவ்வொருவருக்கும் தன்னுடைய இடத்தின் போதை எவ்வளவு இருக்கிறது. தன்னுடைய நாட்டின், தன்னுடைய வீட்டின் போதை இருப்பது இல்லையா? எப்படி மிகப் பெரிய வீட்டில், மாளிகையில் இருக்கிறார் என்றால் இடத்தின் பாதிப்பு நிலையின் மேல் ஏற்படுகிறது. அப்படி நீங்கள் அனைவரும் இந்த உயர்ந்த இடத்தில் இருக்கிறீர்கள் இதன் பாதிப்பு கூட மனநிலையின் மேல் ஏற்பட வேண்டும். உயர்ந்த வரதான பூமியின் நிவாசியாக இருக்கிறீர்கள் என்றால் தன்னுடைய நிலையையும் எப்பொழுதும் அனைவருக்கும் கொடுக்கக் கூடியதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

யார் சாட்சாத்கார மூர்த்தியாக இருப்பாரோ அவர்தான் வரதானம் கொடுக்க முடியும். ஏதாவது பக்தருக்கும் வரதானம் கிடைக்கிறது என்றால் சாட்சாத்கார மூர்த்தி மூலம்தான் கிடைக்கிறது இல்லையா, எனவே சாட்சாத் (தபால் மற்றும் சாட்சாத்கார மூர்த்தி ஆவதினால்தான் வரமளிப்பவராக ஆக முடியும் வள்ளல் தந்தையின் குழந்தைகள் வள்ளலாக வேண்டும். வங்குபவராக இல்லாமல் கொடுப்பவராக ஆக வேண்டும். ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு எண்ணத்திலும் கொடுக்க வேண்டம். எப்பொழுது வள்ளல் ஆகி விடுகிறீகள் என்றால் வள்ளலின் முக்கிய குணமாக எது இருக்கிறது? நன்மை செய்யும் சிந்தனை உடையவர். யார் மற்றவர்களின் நன்மைக்கு பொறுப்பாளராகுகிறாரோ அவர் தனக்கு நன்மை செய்ய முடியாதா? நான் வள்ளலின் குழந்தை ஒரு நொடி கூட கொடுக்காமல் இருக்க முடியாது என்று அப்படி நினையுங்கள். அவரைத்தான் மஹாதானி என்று கூறப்படுகிறது. எப்பொழுதும் கொடுக்கும் கதவுகள் திறந்தே இருக்கட்டும். எப்படி கோயிலின் வாசல் எப்பொழுதும் திறந்திருக்கிறது. அதையும் இன்றைய நாட்களில்

மூடுகிறார்கள். அதே போல் வள்ளலின் குழந்தைகளின் கொடுக்கும் கதவுகள் ஒருபொழுதும் மூடப்படுவதில்லை. ஏதாவது கொடுத்தோமா என்று ஒவ்வொரு எண்ணத்தையும் ஒவ்வொரு விநாடியிலும் சோதனை செய்யுங்கள். எடுக்கவில்லையே? கொடுத்துக் கொண்டே இருங்கள். பெற வேண்டும், எடுக்க வேண்டும் என்றால் அது தந்தையிடமிருந்து, அதையோ எடுத்தே ஆகி விட்டது, இப்பொழுது கொடுக்க வேண்டும். எடுப்பதற்கு ஏதாவது மிச்சம் இருக்கிறதா என்ன? என்னென்ன எடுக்க வேண்டுமோ அவை அனைத்தையும் எடுத்தாகி விட்டது ; மற்றபடி கொடுக்க வேண்டும் என்பதுதான் இருக்கிறது. எவ்வளவிற்கு எவ்வளவு கொடுப்பதில் பிஸியாகி இருப்பீர்களோ அந்த அளவு எந்த விஷயங்கள் கடந்து செல்வது கடினமாக அனுபவம் ஆகிறதோ அவை சுலபமாகி விடும் ஏனென்றால் மஹாதானி ஆவதினால் மஹான் சக்தியின் பிராப்தி தானாக ஏற்படுகிறது. அப்படியானால் இந்தக் காரியம் நல்லது தானே. கொடுப்பதற்காக உங்களுடைய பெட்டகம் நிரம்பி இருக்கிறது இல்லையா. இதில் முழுமையாக தேர்ச்சி பெற்றிருக்கிறீர்களா? எதில் முழுமையாக தேர்ச்சி பெற்றிருக்கிறீர்களோ அதில் ரைட் (அடையாளக்குறி) போட்டுக் கொண்டே செல்லுங்கள். எதில் முழுமையாகத் தேர்ச்சி பெற வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அதை இந்த பட்டியில் தேர்ச்சி அடைந்து வெளியாக வேண்டும். எவ்வளவு வள்ளலாவீர்களோ அவ்வளவு நிரம்பவும் செய்கிறது. பெட்டகம் நிரம்பி இருக்கிறது என்றால் ஏன் வள்ளலாகக் கூடாது. இதைத்தான் நிரந்தர ஆன்மீக சேவாதாரி என்று கூறுவது. அப்படி இந்த பட்டியில் நிரந்தர சேவாதாரியாகி வெளிவர வேண்டும்.

எதுவரை தியாகம் இல்லையோ அது வரை சேவாதாரி ஆக முடியாது. சேவாதாரி ஆவதினால் தியாகம் சுலபமாகவும் தானாகவும் ஆகி விடும். தன்னை எப்பொழுதும் பிஸியாக வைப்பதற்கு இதுதான் வழி எண்ணத்தில், புத்தியால், ஸ்தூல உடல் சேவைகளிலிருந்து எவ்வளவு ஃபிரியாக இருக்கிறீர்களோ அவ்வளவு மாயா வாய்ப்பை எடுத்துக் கொள்கிறது. ஒருவேளை ஸ்தூலம் மற்றும் சூட்சுமம் இரண்டு ரூபங்களிலும் தன்னை எப்பொழுதும் பிஸியாக வைத்தீர்கள் என்றால் மாயாவிற்கு வாய்ப்பு கிடைக்காது. எந்த நாளில் ஸ்தூல சேவையையும் மிகவும் ஆர்வத்தோடு ஒருவேளை தேவதையாகச் செய்திருக்கிறீர்கள் என்றால் அந்த நாளை சோதித்துப் பார்த்தால் மாயா வந்திருக்காது.

ஒருவேளை மனிதனாகிச் செய்திருந்தீர்கள் என்றால் வாய்ப்பு கொடுத்து விடுகிறீர்கள்; ஆனால் சேவாதாரி ஆகி மேலும் தேவதை ஆகி தன்னுடைய ஆர்வம் மற்றும் ஊக்கத்தோடு தன்னை பிஸியாக வைத்திருந்து பார்த்தீர்கள் என்றால் ஒருபோதும் மாயா வராது. குஷி இருக்கும். குஷியின் காரணமாக எதிர்ப்பதற்கு மாயா துணிச்சல் வைக்காது. எனவே பிஸியாக வைத்துக் கொள்வதற்கான பயிற்சி செய்யுங்கள். இன்று புத்தி ஃப்ரியாக இருக்கிறது என்று பார்த்தீர்களேயானால் நீங்களே டீச்சராகி புத்தியால் காரியம் செய்யுங்கள். எப்படி ஸ்தூல காரியங்களுக்காக இன்று இந்தெந்த காரியங்களை செய்ய வேண்டும் என்று நிகழ்ச்சி நிரல் தயாரிக்கிறீர்கள் பின்பு சோதிக்கிறீர்கள். இதே போல் தன்னுடைய புத்தியை பிஸியாக வைப்பதற்கு கூட தினந்தோறும் நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும். நிகழ்ச்சிகள் மூலமாக முன்னேற்றம் செய்ய முடியும். ஒருவேளை நிகழ்ச்சி இல்லையென்றால் எந்த ஒரு காரியமும் சரியான நேரத்தில் நிறைவேறுவதில்லை. தினசரி நிகழ்ச்சிக்கான குறிப்பேடு இருக்க வேண்டும். ஏனென்றால் அனைவரும் மிகப் பெரியவர்கள் இல்லையா. பெரிய மனிதர்கள் நிகழ்ச்சிகளை முடிவு செய்துதான் அதன் பிறகு எங்காவது செல்வார்கள். எனவே தன்னையும் மிகப் பெரிய தந்தையின் குழந்தை என்று நினைத்து ஒவ்வொரு வினாடிக்கான நிகழ்ச்சியினை நிர்ணயம் செய்யுங்கள். எந்த விஷயத்திற்கு உறுதி மொழி செய்யப்படுகிறதோ அந்த விஷயத்தில் மனோபலம் இருக்கும். அப்படியே சாதாரணமாக மட்டும் சிந்தித்தீர்கள் என்றால் அதில் மனோபலம் இருக்காது. எனவே இதை செய்தேதான் ஆக வேண்டும் என்று உறுதி மொழி எடுங்கள். பார்க்கலாம்! செய்யலாம் என்று அப்படி இருக்க வேண்டாம். செய்யத்தான் வேண்டும். எப்படி ஸ்தூல காரியம் எவ்வளவுதான் அதிகமாக இருந்தாலும், உறுதி மொழி எடுப்பதினால் செய்து விடுகிறீர்கள் இல்லையா. ஒருவேளை பலவீனமான சிந்தனை இருந்தால், செய்ய வேண்டாம் என்ற எண்ணம் இருந்தால் ஒருபோதும் முடிக்க மாட்டீர்கள். பின்பு சாக்குப்போக்குகளும் அதிகம் உருவாகி விடும். உறுதிமொழி எடுப்பதினால் அதற்கான நேரமும் கிடைக்கும் சாக்குப் போக்குகளும் அகன்று விடும். இன்று புத்தியை இந்த காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்று உறுதிமொழி எடுக்க வேண்டும். வித விதமான பிரச்சனைகள், முயற்சி செய்யாமல் ஆக்கும் வீணான எண்ணங்கள், சோம்பேறித்தனம் ஆகியவை வரும் ஆனால் மனோபலம் இருக்கும் காரணத்தினால் அவற்றையெல்லாம் எதிர்த்து

வெற்றியடைபவராகி விடுவார். இந்த தினசரி குறிப்பேட்டை உருவாக்குங்கள். பின்பு பாருங்கள் எப்படி ஆன்மீக நிவாரணம் கொடுக்கக் கூடியவர்களாக அனைத்து ஆத்மாக்களும் தென்படுவீர்கள். ரூஹ் என்றால் ஆத்மாவையும் குறிக்கும். மற்றும் சாரத்தையும் குறிக்கும். அப்படி இரண்டுமாக ஆகி விடுவீர்கள். தெய்வீக குணங்களின் கவர்ச்சி அதாவது சாரமாக அந்த ரூஹ் என்பதும் இருக்கும். மேலும் ஆத்மீக சொரூபமும் தென்படும் அந்த மாதிரியான லட்சியம் வைக்க வேண்டும். அப்படி உருவத்தின் மறந்த நிலை ஆத்ம நினைவு அந்த மாதிரி இந்த பட்டியினால் ஆகி செல்ல வேண்டும். இந்த உடல் பெட்டி மாதிரி முற்றிலும் அனுபவம் ஆகட்டும். இதனுள் இருக்கும் வைரம் அவருடன்தான் சம்பந்தம் அன்பு இருக்க வேண்டும். அந்த மாதிரி அனுபவம் செய்ய வேண்டும். அப்படி இருக்கும் இடத்தின் ஆதாரம் எடுத்து ஸ்தியை (மனநிலையை) உருவாக்குங்கள்.

**வரதானம்: நடைமுறை வாழ்க்கை மூலமாக பரமாத்ம ஞானத்தின் நிரூபணம் கொடுக்கக் கூடிய தர்ம யுத்தத்தில் வெற்றியடைபவர் ஆகுக!**

இப்பொழுது தர்ம யுத்த மேடைக்கு வர வேண்டும். அந்த தர்ம யுத்தத்தில் வெற்றி அடைவதற்கான சாதனம் உங்களுடைய நடைமுறை வாழ்க்கை. ஏனென்றால் பரமாத்ம ஞானத்தின் நிரூபணமே நடைமுறை வாழ்க்கை ஆகும். உங்கள் மூலம் ஞானம் மற்றும் குணம் நடைமுறையில் தென்படட்டும் ஏனென்றால் தற்சமயம் கலந்துரையாடுவதினால் தன்னை நிரூபிக்க முடியாது ஆனால் தன்னுடைய நடைமுறை தாரணை சொரூபத்தினால் ஒரு நொடியில் யாரையும் அமைதியாக்க முடியும்.

**சுலோகன்: ஆத்மாவை பிரகாசமானதாக ஆக்குவதற்காக பரமாத்ம நினைவினால் மனதின் குழப்பங்களை முடிவு கட்டுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.08.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தன்னுடைய ஸ்திதியை நிலைப்படுத்துவதற்கான விதி!

இன்று முடிவிற்கான நாளா அல்லது சமர்ப்பணம் ஆகும் நாளா? சமர்ப்பணம் என்றாலே என்ன வெல்லாம் ஈஸ்வரிய மரியாதைகளுக்கு விபரீதமான சம்ஸ்காரம் அல்லது சுபாவம் அல்லது கர்மம் உள்ளதோ இன்னும் அதனை சமர்ப்பணம் செய்து விடவேண்டும். ஏதாவது இயந்திரத்தை பொருத்தும்போது ஒரு முறை பொருத்தி விட்டால் பின்பு தானாகவே இயங்கிக் கொண்டிருக்கிறது இல்லையா? இந்த முறையில் பட்டியில் கூட தன்னுடைய சமர்ப்பண நிலை (அ) தந்தைக்கு சமமான நிலை (அ) கர்மாதீத் நிலையினை அவ்வாறாக பொருத்த வேண்டும். அதாவது, ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் கர்மம் ஆகியவற்றை அதற்கு ஏற்றவாறு பொருத்தி விட வேண்டும். அது தானாகவே இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அதிகாரத்தின் நினைவின் நிலையின் செட்டிங் உள்ளதா என்ன? சர்வ சக்திவான் பாபா அல்லவா? நீங்கள் அனைவரும் கூட மாஸ்டர் சர்வ சக்திவான் என தன்னை புரிந்து கொண்டு உள்ளீர்களா? யார் சர்வ சக்திவான் என்ற நிலையை ஒரு முறை பொருத்தி விடுகிறார்களோ அவர்கள் ஒரு பொழுதும் இவ்வாறாக யோசிக்க மாட்டார்கள் அல்லது கூற மாட்டார்கள். செய்ய மாட்டார்கள், அதாவது பலவீனத்தின் லட்சணம் இருப்பினும் கூட மாஸ்டர் சர்வ சக்திவானாய் இருக்கிறார்கள். உலகத்தினை இவ்வளவு குறுகிய நேரத்தில் மாற்றம் செய்யக் கூடிய அதிகாரம் இருக்கும் பொழுது ஏன் மாஸ்டர் சர்வ சக்திவானிடம் இப்பொழுது ஒரு வினாடியில் தன்னை மாற்றம் செய்யும் சக்தி இல்லையா என்ன? நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற ஸ்திதியின் நிலையை செட் செய்யுங்கள். தானாகவே இயங்கும் எந்த ஒரு பொருளையும் அடிக்கடி செட் செய்யப்படுவதில்லை. ஒரு முறை பொருத்திவிட்டால் பின்பு தானாகவே நடந்துக் கொண்டிருக்கும். நீங்களும் கூட இப்பொழுது சகஜமாக மேலும் சதா கர்மயோகி அதாவது நிரந்தர நிர்விகல்ப சமாதியில் இருக்கக் கூடிய சகஜயோகியாக ஆகி

விட்டீர்களா? யோகியாக ஆகியுள்ளீர்களா? யார் சதா யோகியாக இருக்கிறார்களோ அவர்கள் சதா செய்ப வராய் இருப்பார்கள். சதா காலமும் செய்பவராய் யாரால் ஆக முடியும். யார் சதா யோகி ஸ்திதியில் நிலைத்திருக்கிறார்களோ அவர்களே சதா காலமும் செய்பவராய் இருக்கிறார்கள். ஆகவே நாம் சதா செய்பவர்கள், எனவே ஒருபொழுதும் எப்படிப்பட்ட நிலையிலும் தடுமாற முடியாது. சதா காலமும் ஆடாத-அசையாத நிலையாக இருப்பது போன்று உங்களுடைய பட்டியில் உறுதிமொழி என்ற ஸ்வீட்சை அமைத்தீர்களா? ஒருவேளை உறுதிமொழி என்ற பட்டனை அமைத்து விட்டீர்கள் எனில் நடைமுறையில் உறுதிமொழி படி நடக்க வேண்டும் அல்லவா? ஆகவே சதா காலமும் செய்பவராய் அல்லது நிரந்தர யோகி மேலும் சகஜயோகி ஆகி விடமாட்டீர்களா? பாண்டவர்கள் மலை மீது சென்று மறைந்து போய் விட்டனர் என்ற புகழ் உள்ளது அல்லவா? மலை என்றால் அதன் அர்த்தம் என்ன? நிலத்தை விட மலை உயர்ந்ததாக இருக்கும் அல்லவா? ஆகவே பாண்டவர்கள், பூமி என்கிற தாழ்ந்த நிலையை விட்டுவிட்டு எப்பொழுது உயர்ந்த நிலைக்கு செல்கின்றனரோ அப்பொழுது தன்னுடைய பழைய அல்லது ஈஸ்வரிய மரியாதைகளுக்கு விபரீதமான சம்ஸ்காரம், சுபாவம், சங்கல்பம், கர்மம் அல்லது சப்தம் இவ்வாறு என்னவெல்லாம் உள்ளதோ அதில் அனைத்திலும் தன்னை மறு ஜென்மம் எடுத்தவராக்கி விட்டீர்களா அதாவது மறைந்து விட்டீர்களா? ஆகவே நீங்கள் கூட நிலத்தை விட உயந்து சென்று விட்டீர்கள் அல்லவா? முழுமையாக மறைத்து விடவும் வந்திருக்கிறீர்களா அல்லது சிறிதளவு வைத்து வீட்டு வந்திருக்கிறீர்களா? தன்னிடம் 100 சதவீதமான நிச்சய புத்தி இருக்குமெனில் அவர்களுக்கு ஒரு பொழுதும் தோல்வி ஏற்பட முடியாது. ஒன்று தைரியம் வேண்டும். மற்றொன்று தைரியத்துடன் சேர்ந்து உற்சாகம் இருக்க வேண்டும். ஒருவேளை தைரியம் மேலும் உற்சாகமும் இல்லையேல் நடைமுறையில் நிரூபணம் ஆக முடியாது ஆகவே இரண்டும் சேர்த்து சேர்த்து இருக்க வேண்டும். ஒன்று உள்நோக்கு முகம் மற்றொன்று வெளிப்படையான பகட்டை காட்டும் வெளிமுகம், அந்த மாதிரியான நிலை உள்ளதா? இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். இந்த விதத்தில் தைரியத்துடன் உற்சாகம் கூட இருக்க வேண்டும், இதன் வாயிலாக தூரத்திலிருந்தே தெரிந்து விடும் இவரிடம் ஏதோ ஒரு விசேஷமான பலன் உள்ளது, யார் பலனை பெற்றவர்களோ அவர்களுடைய ஒவ்வொரு நடத்தைகள் முகத் தோற்றம் அனைத்திலும்

அந்த ஊக்கம், உற்சாகம் தென்படுகின்றது. பக்தி மார்க்கத்தில் வெறும் உற்சாகத்தை ஏற்படுத்துவதற்காகவே உற்சவம் கொண்டாடுதல் என்ற சாதனத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

மகிழ்ச்சியில் நடனமாடுகிறார்கள் அல்லவா. யாருக்கேனும் சோர்வு அல்லது குழப்பம் இருக்கும் என்றால், அது மகிழ்ச்சியில் மறைந்து போய் விடுகிறது அல்லவா? ஆகவே தைரியத்துடன் உற்சாகமும் அவசியமாக இருக்க வேண்டும் மேலும் அழியாத முத்திரையிட்டிருக்கிறீர்களா? ஒருவேளை அழியாத முத்திரையிடவில்லை எனில் என்னவாகும்? அபராதம் செலுத்த வேண்டி வரும் ஆகவே இந்த முத்திரையை அவசியம் பதிக்க வேண்டும். ஆகவே இது சதாகாலத்திற்காக சமர்ப்பண விழா கொண்டாடு கிறீர்கள் அல்லவா? பின்பு அடிக்கடி இந்த விழாவை கொண்டாட வேண்டியது இல்லை? ஆம், நினைவின் அடையாளத்தை கொண்டாடுதல் என்பது வேறு விசயமாகும். எவ்வாறு பிறந்த நாள் நினைவார்த்தத்திற்காக கொண்டாடப்படுகிறது அல்லவா. ஆகவே இதுதான் சமர்ப்பண உறுதி மொழி நாளாகும். வெற்றியை நாளை கொண்டாடுகிறார்கள். ஆகையால் இது கூட உங்கள் அனைவரின் விஜய அஷ்டமி நாளாகி விட்டது அல்லவா? விஜயி (வெற்றி) ஆகும் நாளை எப்பொழுதும் நினைவில் வைத்திருங்கள் இறுதி அர்ப்பணம் என்பது அவ்வாறாக இருக்க வேண்டும் அதாவது அனைவருடைய வாயிலிருந்தும் உங்களைப் பார்த்து ஆஹா - ஆஹா என்பது வெளிப்பட வேண்டும் மேலும் உங்களைப் பின்பற்ற வேண்டும். ஏதாவது நல்ல விஷயம் இருக்குமெனில் விரும்பாவிட்டாலும் கூட அனைவரும் அதனை பின்பற்ற வேண்டும் என்ற விருப்பம் ஏற்படுகின்றது. எவ்வாறு பாபாவை பின்பற்றுகிறீர்களோ அவ்வாறு உங்களுடைய ஒவ்வொரு கர்மத்தையும் பின்பற்றுவார்கள். எவ்வளவு சிரேஸ்டமான காரியமோ அவ்வளவு உன்னத ஆத்மாக்களையும் நினைவு செய்வார்கள். பெயரை நினைவு செய்கிறார்கள் அல்லவா? யாரேனும் மிக உன்னத ஆத்மாக்களாக இருக்கிறார்கள் என்றால் விரும்பவில்லை என்றாலும் கூட அவருடைய குணம் மேலும் கர்மத்தை எடுத்துக்காட்டாக்குவதற்காக பெயரை நினைவு படுத்திக் கொள்கிறார்கள். அவ்வாறு நீங்கள் அனைவரும் கூட சிரேஸ்ட ஆத்மா என்ற நினைவு படுத்துதலில் தகுதி வாய்ந்தவர் ஆகி விடுவீர்கள். இப்பொழுது ஆக வேண்டும் என்ற உறுதிமொழியை எடுத்திருக்கிறீர்கள் அல்லவா? யோக யுக்த் என்றால் யுக்தி யுக்த், ஒருவேளை எந்த ஒரு யுக்தி

யுக்த் சங்கல்பம் அல்லது சப்தம் அல்லது கர்மம் இல்லையேல் யுக்தி யுக்ததாக இல்லை என புரிந்து கொள்ள வேண்டும் யுக்தி யுக்த்தாக இல்லை ஏனெனில் யோக யுக்தின் அடையாளம் யுக்தி யுக்தாகும். யோகயுக்தாக இருப்பவர்களிடம் ஒருபொழுதும் தவறான கர்மம் அல்லது எண்ணம் ஏற்பட முடியாது. இந்த தொடர்பு உள்ளது. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.08.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்தையும் விட சூட்சும பந்தனம் -புத்தியின் அபிமானம்!

யோகயுக்த் (யோக சொரூபம்) மற்றும் பந்தனமுக்த் (பந்தனங்களிலிருந்து விடுபட்ட நிலை) ஆக ஆகியிருக்கிறீர்களா? எவ்வளவிற்கு எவ்வளவு யோகயுக்த்தாக இருப்பீர்களோ அந்த அளவே அனைத்து பந்தனமுக்தாக ஆகிக் கொண்டே இருப்பீர்கள். அப்படி யோகயுக்தின் அடையாளமே பந்தனமுக்த் ஆவது ஆகும். தன்னுடைய அனைத்து பந்தனங்களையும் எந்தெந்த விதமான பந்தனங்கள் யோகயுக்த் ஆவதில் தடையை ஏற்படுத்துகின்றன என்று அவைகளை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? எப்படி அனைத்து துக்கங்களின் பட்டியலை எடுத்தீர்களோ அதே போல் விதவிதமான பந்தனங்களின் பட்டியலை எடுங்கள். அந்த பட்டியலை எதிரில் வைத்து எத்தனை பந்தனங்களிலிருந்து விடுபட்டிருக்கிறோம் மற்றும் எத்தனை பந்தனங்கள் இன்னும் இருக்கின்றன என்று சோதனை செய்யுங்கள். இதன் மூலமாக தன்னுடைய சம்பூர்ண யோக யுக்த் அதாவது சம்பூர்ண நிலையின் எவ்வளவு அருகில் வந்துள்ளேன் என்று தெரிந்து கொள்ளலாம். பந்தனங்களின் பட்டியலை எதிரில் கொண்டு வாருங்கள், எத்தனை விதமான பந்தனங்கள் இருக்கும்? இதனுடைய பட்டியல் தயாரானது என்றால் வலை மாதிரி தென்படும். எவ்வளவு மெல்லிய கம்பிகளினாலான வலையைத் தயாரிக்கிறார்கள் அப்படி எத்தனை பந்தனங்கள் இன்னும் இருக்கின்றன? மேலும் எவை எவை இன்னும் இருக்கின்றன என்று தீர்மானம் செய்யுங்கள். சிலசில பெரிய பந்தனங்கள் இருக்கின்றன மற்றும் சில சிறிய பந்தனங்களும் இருக்கின்றன. அதிகமான உழைப்பு எந்த பந்தனங்களை முடிப்பதில் தேவையாக இருக்கிறது. அனைத்தையும் விட கடுமையிலும் கடுமையான பந்தனம் எது? (தேக அபிமானம்) இதுவோ அனைத்து பந்தனங்களின் அஸ்திவாரம் ஆகும் ஆனால் வெளிப்படை ரூபத்தில் அனைத்தையும் விட கடுமையான பந்தனம் எது? சமுதாய கோட்பாடுகளோ மிகச் சிறிய விஷயம், இதுவோ முதல் அடியாகும்.

அனைத்தையும் விட கடுமையிலும் கடுமையான கடைசி பந்தனம் ஸ்ரீமத்துடன் தன்னுடைய ஞான புத்தியை கலப்பது அதாவது தன்னை புத்திசாலி என்று நினைத்துக் கொண்டு ஸ்ரீமத்தை தன்னுடைய புத்தியின் திறமை என்று எண்ணி காரியத்தில் கொண்டு வருவது. இதை ஞான அபிமானம் அதாவது புத்தியின் அபிமானம் என்று கூறலாம். இது அனைத்தையும் விட சூட்சுமமான மற்றும் பெரிய பந்தனம் ஆகும். இந்த பந்தனத்தையும் கடந்தாகி விட்டது என்றால் மிகப் பெரிய தாண்டுதல் செய்திருக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். ஏதாவது ஒரு விஷயத்தில் ஒருவேளை யாராவது இனிமையான வார்த்தைகளினாலும் உங்கள் பலஹீனங்களை சைகை மூலம் நினைவூட்டுகிறார். அதே நேரம் ஏதாவது சம்ஸ்காரம், சுபாவத்தின் மூலமோ அல்லது சேவையில் தீய காரியத்தை செய்கிறார் என்றால் இரண்டு விஷயங்களையும் எதிரில் வைத்து கொஞ்சமாவது உள் உணர்விலோ, திருஷ்டியிலோ அல்லது முகத்திலோ மாற்றம் வருகிறதா என்று யோசித்துப் பாருங்கள். கொஞ்சம் கூட மாற்றம் வரவில்லை, கொஞ்சம் கூட தைரியம் உற்சாகத்தில் பாதிப்பு ஏற்படவில்லை என்றால் இதுதான் பந்தனத்தை கடந்து செல்வது என்று கூறப்படுவது. ஒருவேளை வாய் மூலம் வெளிப்படுத்தவில்லை, ஆனால் கேள்விப்பட்ட விஷயத்தின் வீணான எண்ணம் ஓடியது என்றால் இதைத்தான் மிகப் பெரிய பந்தனம் என்று கூறலாம்.

இகழ்ச்சி புகழ்ச்சி, வெற்றி தோல்வி, புகழ்ச்சி மற்றும் இகழ்ச்சியில் சமநிலை என்ற மகிமை இருக்கிறது. இதனுடைய அர்த்தம் புத்தியில் இது வெற்றி இது தோல்வி, இது மகிமை, இது நிந்தனை என்ற ஞானம் இருக்கும் ஆனால் ஒரே சீரான நிலை, மேலே கீழே செல்லக் கூடாது. இதைத்தான் சமநிலை என்று கூறுவது. ஞானம் இருந்தபோதிலும் மேலே கீழே போவதில்லை இதைத்தான் வெற்றி என்று கூறுவது. அப்படி இந்த கடுமையான பந்தனத்தை கடந்து விட்டீர்கள் என்றால் சம்பூர்ண பரிஷ்தா ஆகி விட்டீர்கள். இதற்காக முக்கியமான முயற்சி என்ன செய்ய வேண்டும். இந்த பந்தனத்தையும் கடந்து செல்லும் அளவிற்கு எந்த நிலையை வைத்துக் கொள்ள வேண்டும்? ஞான அபிமானத்தை எப்படிக் கடந்து செல்வது? இதற்காக முயற்சி என்ன? நீங்கள் அனைவரும் என்னென்ன விஷயங்கள் கூறினீர்களோ அவற்றையும் கவனத்தில் வைக்க வேண்டும் ஆனால் கூடவே இந்த கடுமையான பந்தனத்தை கடந்து செல்வதற்காக நான் நன்மையே செய்யும் தந்தையின் குழந்தை

என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். என்னென்ன பார்க்கிறீர்கள் மற்றும் கேட்கிறீர்கள் அவற்றில் நன்மையற்ற ரூபம் இருந்தபோதிலும் தனக்கு நன்மை பயக்கும் விஷயத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ரூடம் நன்மையற்றதாக, தோல்வி மற்றும் நிந்தனைக்கானதாக இருந்தாலும் ஏனென்றால் நிலையை மேலே கீழே ஆக்குவதற்கான காரணமாக இந்த மூன்றும்தான் இருக்கின்றன. அப்படி ரூபமாக இதுவே தென்பட்டாலும் அந்த நன்மையற்ற ரூபத்தை நன்மை பயக்கும் ரூபத்தில் மாற்றம் செய்வதற்கான சக்தி மற்றும் நிந்தனையையும் முன்னேற்றத்திற்கான ரூபம் என்று புரிந்து தாரணை செய்வதற்கான சக்தி மற்றும் தோல்வியிலிருந்தும் வரும் காலத்தில் ஆயிரம் மடங்கு வெற்றி அடைபவராக ஆவதின் தைரியம் உற்சாகம் மற்றும் யுக்தியைக் கண்டுபிடிப்பதற்கான சக்தி ஒருவேளை உங்களிடம் இருக்கிறது என்றால், ஒருபொழுதும் முகம் மற்றும் நடத்தையில் அதனுடைய பாதிப்பு ஏற்படாது. அப்படியானால் இரகசியமாக என்ன ஆனது? எந்தவொரு விஷயத்தையும், பிரச்சனையையும் டிரான்ஸ்பர் (மாற்றம்) செய்து டிரான்ஸ்பெரன்ட் (உள்ளே இருப்பது தெளிவாக வெளியில் தெரிவது) ஆக வேண்டும் மற்றும் அபகாரி மேலேயும் உபகாரி ஆக வேண்டும். எப்படி சம்ஸ்காரங்களின் சமநிலை காரணமாக சிலர் நண்பராகி விடுகிறார்கள், அதே போல் நிந்தனை செய்பவர்களையும் அந்த அன்பு மற்றும் சகயோகத்தின் பார்வையோடு பார்க்க வேண்டும். சம்ஸ்காரங்களின் சமநிலை உள்ள நண்பன் மற்றும் நிந்தனை செய்பவர் இருவரிடத்தில் காண்பிக்கும் அன்பு மற்றும் சகயோகத்தில் வித்தியாசம் இருக்க வேண்டாம். இதைத்தான் அபகாரி மேலேயும் உபகாரம் செய்யும் பார்வை மற்றும் உலக நன்மை செய்பவராக ஆவது என்று கூறப்படுவது. அந்த மாதிரியான நிலை இப்பொழுது உருவாகி விட்டது என்றால் சம்பூர்ண நிலையின் அருகில் இருக்கிறோம் என்று புரிந்து கொள்ளுங்கள். யாருடைய சம்ஸ்காரம் ஒத்துப்போகிறதோ அவரை மட்டும் கூடவே இருப்பவராக ஆக்குவோம், மற்றவர்களை ஒதுக்கி வைத்து விடுவோம் என்று அப்படி இருக்க வேண்டாம். கடுமையான சம்ஸ்காரம் உடையவராக இருந்தாலும் அவருக்கும் தன்னுடைய நற்சிந்தனையாளர் நிலையின் ஆதாரத்தில் மாற்றம் செய்து அருகில் கொண்டு வாருங்கள். யாராவது நம்பிக்கை இழந்த கேஸை சரி செய்கிறாரோ, அப்பொழுதுதான் புகழடைகிறார் இல்லையா? சரியானதை சரிசெய்வது மற்றும் சரியானவருடன் சரியாக இருந்து நடந்து கொள்வது, இது ஒன்றும்

பெரிய விஷயம் இல்லை. பெரிய விஷயம் என்னவென்றால் தன்னுடைய உயர்ந்த நினைவு மற்றும் உள்ளுணர்வினால் அந்த மாதிரியானவர்களையும் (சரியற்றவர்களையும்) மாற்றிக் காண்பிக்க வேண்டும். பாருங்கள் ஹோமியோபதி மருந்து, இவ்வளவு சிறு சிறு உருண்டைகள் எவ்வளவு பெரிய நோய்களையும் தீர்த்து விடுகின்றன என்றால் மாஸ்டர் சர்வ சக்திவான் தன்னுடைய உள் உணர்வு மற்றும் பார்வையினால் பிறரது கடுமையான சம்ஸ்காரம் என்ற நோயை அழிக்க முடியாதா என்ன? ஒருவேளை அவ்வாறு சம்ஸ்காரத்தில் மாற்றம் செய்ய முடியவில்லை அல்லது அழிக்க முடிய வில்லை என்றால் மாஸ்டர் படைப்பவராகிய என்னை விட படைப்பின் சக்தி அதிகமாக காரியம் செய்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். உதாரணமாகக் கூறிய சிறு சிறு மருந்து உருண்டைகளால் நோயை அழிக்க முடிகிறது. அந்த மருந்துகள் நோயை எப்படி அகற்றுவது என்று கூறுவதில்லை. அப்படியானால் உங்களுடைய படைப்பில் சக்தி இருக்கிறது, ஆனால் மாஸ்டர் படைப்பவராகிய உங்களிடம் இல்லையா?

மாற வேண்டும் மற்றும் மாற்றம் செய்ய வேண்டும் என்ற இந்த லட்சியத்தை எப்பொழுதும் வைத்துக் கொள்ளுங்கள். இவர் மாறினால் நான் மாறி விடுவேன் என்று அப்படிக் கூறாதீர்கள். நான் ஆக வேண்டும் மற்றும் நான்தான் செய்ய வேண்டும். யார் அந்த மாதிரி தைரியம் வைப்பவர்களாக ஆகுகிறார்களோ அவர்கள்தான் உலக மகாராஜன் ஆக முடியும். அப்படி உலக மகாராஜன் ஆக வேண்டும் என்றால் எதிர்கால உலகத்தில் வரக்கூடிய இந்த ஈஸ்வரிய குடும்பத்து ஆத்மாக்கள் அதாவது இந்த சிறிய குடும்பத்தில் யார் உலக இராஜ்யத்தின் அதிகாரியாக ஆகக்கூடியவர்களோ இந்த அனைத்து ஆத்மாக்களின் மேல் இப்பொழுதிலிருந்தே அன்பின் இராஜ்யத்தை செலுத்த வேண்டும். அதிகாரத்தை செலுத்தக் கூடாது. இப்பொழுதே உலக மகாராஜன் ஆகி விட வேண்டாம். இப்பொழுது உலக சேவாதாரி ஆக மட்டுமே வேண்டும். அன்பு செலுத்துவதுதான் எதிர்காலத்திற்காக சேமிப்பு செய்வதாகும். தன்னுடைய எதிர்காலக் கணக்கில் இந்த அன்பை எவ்வளவு சேமித்திருக்கிறேன் என்பதையும் பார்க்க வேண்டும். ஞானம் கொடுப்பது சுலபம், ஆனால் உலக மகாராஜன் ஆவதற்காக ஞானம் கொடுப்பவராக மட்டும் ஆக வேண்டாம். இதற்காக அன்பு கொடுப்பது அதாவது சகயோகம் கொடுக்க வேண்டும். எங்கு அன்பு இருக்குமோ அங்கு சகயோகம்

அவசியம் இருக்கும். ஒருவேளை இந்த உயரம் தாண்டுதலை செய்து விட்டீர்கள் என்றால் அனைத்து விஷயங்களிலும் உயர்ந்தவராக சுலபமாகவே ஆகி விடுவீர்கள். நல்லது.

பட்டியில் இருப்பவர்கள் இப்பொழுது தன்னை டிரான்ஸ்பர் செய்து விட்டீர்களா? எவ்வளவு டிரான்ஸ்பர் செய்திருப்பீர்களோ அவ்வளவே ஒவ்வொருவரின் முகம் டிரான்ஸ்லைட் படத்திற்கு சமமாகத் தென்படும். டிரான்ஸ்லைட் படம் தூரத்திலிருந்தே தெளிவாகத் தென்படும். அந்த மாதிரி அனைத்து விஷயங்களிலும் தெளிவானவராகவும் உயர்ந்தவராகவும் ஆகியிருக்கிறீர்களா? (ஆவோம்). எப்போது ஆவீர்கள்? ஐந்து வருடங்களில் ஆவீர்களா? எதுவரைக்குமான உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்கள். எப்படிப்பட்ட பிரச்சனை வந்தாலும் எப்படிப்பட்ட விஷயங்கள் வரக்கூடாதது வந்து விட்டாலும் ஆடாத அசையாத ஒரே சீரான நிலையில் இருப்பதற்கான சக்தியை தன்னுள் நிரப்பியிருக்கிறீர்களா? அந்த மாதிரி தன்னுள் சக்தி நிரப்பியிருக்கிறீர்களா? இவை அனைத்தும் எங்களுக்கு தெரியவே தெரியாது என்று அப்படி கூறாதீர்கள். இந்த மாதிரியும் நடக்குமா? புதிய விஷயம் அல்லவா? அதனால் தோல்வி அடைந்து விட்டோம் என்றும் கூறாதீர்கள். பட்டி செய்து விட்டு செல்கிறீர்கள் என்றால் தன்னுள் புதுமையைக் கொண்டு வருகிறீர்கள். எனவே மாயாவும் சோதிப்பதற்காக புதுப்புது விஷயங்களை எதிரில் கொண்டு வரும், எனவே நல்ல முறையில் மாஸ்டர் ஞானம் நிறைந்தவராக, மாஸ்டர் திரிகாலதரிசியாக ஆகி செல்கிறீர்கள் என்றால் தூரத்திலிருந்தே மாயாவை தெரிந்து அழித்து விடுங்கள். அந்த மாதிரி மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆகியிருக்கிறீர்களா? என்ன, ஏன் என்ற மொழியை அழித்தாகி விட்டதா? என்ன செய்வது எப்படி செய்வது இவை முடிந்து விட்டதா? மூன்று மாதங்களுக்கான பரீட்சை மட்டுமல்ல இப்பொழுதோ கடைசி வரைக்குமான உறுதிமொழி கொடுக்க வேண்டும். இதுவோ உத்திரவாதம் அளிக்கப்பட்ட பொருளாகி விட்டது இல்லையா? ஒவ்வொருவரும் தனது சக்திக்கேற்ப என்னென்ன முயற்சி செய்வீர்களோ அவை அனைத்தையும் நன்றாகவே செய்திருக்கிஉறீர்கள். இப்பொழுது நல்லதிலும் நல்லதாகிக் காண்பிக்க வேண்டும். எப்படி இந்த போதை இருக்கிறதோ அப்படியே குடும்பத்திலிருந்து கொண்டே இந்த போதையை நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் இந்த குரூப்பின் மேல் இடப்பட்ட முத்திரை என்னவாக

இருக்கிறது. உங்களை யாரும் மாற்றி விடக் கூடாது ஆனால் நீங்கள் அனைவரையும் மாற்றிக் காண்பிக்க வேண்டும். எந்த சூழ்நிலையும் நம்மை மாற்றக் கூடாது ஆனால் நாம் சூழ்நிலைகளை, உள்உணர்வுகளை, சம்ஸ்காரங்களை மாற்றிக் காண்பிக்க வேண்டும் என்ற இந்த முத்திரையை உறுதியாக இட வேண்டும். பட்டியின் இந்த டிரேட் மார்க்கை அழியாததாக இட்டுச் செல்ல வேண்டும். தன்னுடைய டிரேட் மார்க்கை மறக்காதீர்கள். ஒருவேளை பட்டியின் தாரணைகளின் நினைவு கூடவே இருக்கிறது என்றால், வெற்றியும் எப்பொழுதும் கூடவே இருக்கும். நல்லது.

**வரதானம்: உயர்ந்த பாலனையின் விதி மூலமாக வளர்ச்சி அடையக்கூடிய அனைவரது வாழ்த்துக்களுக்கும் உரியவர் ஆகுக!**

சங்கமயுகம் வாழ்த்துகளினாலேயே வளரக்கூடிய யுகம் ஆகும். தந்தையின், குடும்பத்தின் வாழ்த்துக்களினால்தான் குழந்தைகள் நீங்கள் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். வாழ்த்துக்களினால்தான் நடனம் ஆடி, பாடி, வளர்ந்து, பறந்து சென்று கொண்டேயிருக்கிறீர்கள். இந்த வளர்ப்பும் அதிசயமானது. எனவே நீங்கள் குழந்தைகள் கூட பெரிய மனதோடு, இரக்க பாவனையோடு வள்ளலாகி ஒவ்வொரு விநாடியும் ஒருவர் இன்னொருவரை மிக நல்லது, மிக நல்லது என்று கூறி வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டே இருங்கள். இதுதான் பாலனைக்கான உயர்ந்த விதி ஆகும். இந்த விதியின் மூலம் அனைவரையும் பாலனை செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் வாழ்த்துக்களுக்கு உரியவர் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: தன்னுடைய சரள சுபாவத்தை ஏற்படுத்திக் கொள்வதுதான் சமாதான சொரூபம் ஆவதற்கான சுலபமான விதி ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.08.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மிக உயர்ந்த ஆசனம் மற்றும் கிரீடம்!

இன்று பட்டியின் இந்த குரூப் டபுள் (இரண்டு) பட்டி செய்வதற்காக வந்திருக்கிறார்கள். டபுள் பட்டி என்பது எது? டபுள் பட்டியின் இரகசியத்தைப் புரிந்திருக்கிறீர்களா? மதுபன்னே பட்டிதான், ஆனால் மதுபன் பட்டியின் உள்ளேயும் விசேஷமாக பட்டியில் இன்னும் மீதம் இருக்கும் தன்னுடைய எந்த சம்ஸ்காரங்களை பஸ்பம் செய்வதற்காக வந்திருக்கிறீர்கள்? அப்படி டபுள் பட்டியின் ஃபோர்ஸ் (Force) கூட (சக்தி) அதிகரிக்கிறது இல்லையா?, ஏனென்றால் கோர்ஸ் (Cource) (பாடம்) கிடைக்கிறது. ஒன்று பொதுவானது, இன்னொன்று தனிப்பட்டது. இரண்டு கோர்ஸ் இருக்கும் காரணத்தினால் இரட்டை ஃபோர்ஸ் அதிகரிக்கிறது. எனவே எப்படி இரட்டை ஃபோர்ஸ் அதிகரிக்கிறதோ அப்படியே எப்பொழுதும் தன்னை இரட்டை கிரீடம் அணிந்தவராகப் புரிந்து நடந்து கொண்டீர்கள் என்றால் இந்த இரட்டை கோர்ஸ் எப்பொழுதும் ஃபோர்சில் இருக்கும். இரட்டை கிரீடம் எவை? இப்பொழுது இரட்டை கிரீடம் அணிந்தவர்களாக இருக்கிறீர்களா அல்லது எதிர்காலத்தில் ஆவீர்களா? இப்பொழுது இருக்கும் இரட்டை கிரீடம் எவை? ஒன்று லைட் (ஒளி) அதாவது தூய்மையின் அடையாளத்தினுடையது மற்றும் இன்னொன்று சங்கமயுகத்தில் கிடைக்கும் அனைத்து பிராப்திகளினால் ஏற்படும் அந்த சக்தி மூலமாகத்தான் பொறுப்புக்களைத் தாரணை செய்ய முடியும். அப்படி ஒளியின் கிரீடமும் இருக்கிறது மற்றும் சக்தி யினுடையதும் இருக்கிறது. தூய்மையினுடையது மற்றும் சக்தியினுடையது இதுவே இரட்டை கிரீடத்தை நிரந்தரமாக அணிந்திருப்பவர்கள். கூறுங்கள் இந்த இரட்டை ஃபோர்ஸ் எப்பொழுதுமே நிலைத்திருக்க முடியாதா? இரண்டுமே அவசியமாகும். மேலும் இரண்டும் எப்பொழுதும் நிலைத்திருப்பதினால் எப்பொழுதும் சக்திசாலியான சொரூபம் தென்படும். சேவையில் வெற்றியை அடைவதற்காகவும் இந்த இரண்டு கிரீடம் அவசியமாக இருக்கிறது. பின்பு எவ்வளவிற்கு எவ்வளவு வரிசைக்கிரமமாக ஒவ்வொருவரும் தாரணை செய்திருக்கிறார்களோ அதன் பிரகாரம்

சொரூபத்தில் வெற்றி மற்றும் தன்னுடைய முயற்சியில் வெற்றியை அடைந்து கொண்டே இருக்கிறார்கள். அதனால் இரட்டை கிரீடமும் தேவையாக இருக்கிறது, மேலும் இரட்டை ஆசனமும் தேவையாக இருக்கிறது. இரட்டை ஆசனம் எவை? (ஒவ்வொருவரும் அவரவர்களின் பதிலைக் கூறினார்கள்) ஒன்றோ பாப்தாதாவின் இதயம் என்ற சிம்மானத்தில் அமர்ந்திருப்பவராக ஆவது, அனைத்தையும் விட உயர்ந்த ஆசனமோ பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரி ஆவதுதான். கூடவே இந்த ஆசனத்தில் அமர்வதற்காக ஆடாத அசையாத ஒரே சீரான நிலையின் (ஸ்திதி) ஆசனமும் தேவையாக இருக்கிறது. ஒருவேளை இந்த ஸ்திதியின் ஆசனத்தில் நிலைத்திருக்க முடியவில்லை என்றால் பாப்தாதாவின் இதயம் என்ற சிம்மாசனத்தில் நிலைத்திருக்க முடியாது. எனவே இந்த ஆடாத, அசையாத ஒரே சீரான நிலையின் ஆசனம் மிக அவசியமாக இருக்கிறது. இந்த ஆசனத்தை விட்டு அடிக்கடி மேலே கீழே சென்று விடுகிறார்கள். அழியாத ஆசனதாரியாக ஆகாததின் காரணமாக இந்த ஒரே சீரான நிலையின் ஆசனத்திலும் நிலைத்திருக்க முடிவதில்லை. எனவே தன்னுடைய இந்த இரு புருவ மத்தியின் ஆசனத்தில் அகால மூர்த்தி ஆகி நிலைத்திருந்தீர்கள் என்றால் ஒரே சீரான நிலை எனும் ஆசனத்திலும் மற்றும் பாப்தாதாவின் இதய சிம்மாசனத்திலும் அமர முடியும். ஆகவே இரட்டை கிரீடம் அணிந்தவராகவும் இருக்கிறீர்கள், இரட்டை ஆசனத்தில் அமர்ந்திருப்பவராகவும் இருக்கிறீர்கள். மேலும் என்ன ஞானம் கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அந்த ஞானத்தில் முக்கியமாக இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு விஷயங்கள் யாவை?

முக்கியமாக இரண்டு விஷயங்களின் ஞானமும் கிடைக்கிறது இல்லையா? தந்தை மற்றும் ஆஸ்தி என்றும் சொல்லலாம், மேலும் படைப்பவர் மற்றும் படைப்பு என்றும் கூறலாம். படைப்பில் முழு ஞானமும் வந்து விடுகிறது. எனவே இந்த இரண்டு முக்கியமான விஷயங்களில் ஞானம் நிறைந்தவராக இருக்கிறார் என்றால் பவர்ஃபுல் (சக்தி நிறைந்தவராக) ஆக முடியும். ஒருவேளை யாராவது படைப்பின் ஞானத்தில் முழுமையான ஞானம் நிறைந்தவராக இல்லை, பலஹீனமாக இருக்கிறார் என்றால் நிலை மேலே கீழே தடுமாறும். படைப்பின் முழு ஞானத்தையும் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்து கொள்வது என்பது கேட்பதை மட்டும் குறிப்பிடுவது அல்ல. தெரிந்து கொள்வது என்றால்

ஏற்றுக் கொள்வது மற்றும் அதன்படி நடப்பது. யார் தெரிந்திருக்கிறார், ஏற்றுக் கொண்டிருக்கிறார் மேலும் நடந்து கொண்டும் இருக்கிறார் இவரைத்தான் ஞானம் நிறைந்தவர் என்று கூறுவது. ஒருவேளை ஏற்றுக் கொள்கிறார் ஆனால் நடப்பது இல்லை என்றால் ஞானம் நிறைந்தவர் மற்றும் ஞான சொரூபமானவர் என்று கூறமுடியாது. நடப்பது - ஏற்றுக் கொள்வது என்றால் சொரூபம் ஆவது. படைப்பவர் மற்றும் படைப்பின் ஞானத்தில் ஏதாவது குறை இருந்து விடும் காரணத்தினால் முயற்சி செய்வதில் குறை ஏற்பட்டு விடுகிறது. எனவே முழு ஞானத்தின் இந்த இரண்டு விஷயங்களை கவனத்தில் வைத்து நடந்து கொள்ளுங்கள். நல்லது. இதுவோ ஞானத்திற்கானது. அதே போல் இரட்டைக் காரியத்திலும் இருக்க வேண்டும். இந்த இரட்டை காரியம் எது? இன்று இரண்டின் எண்ணிக்கையிலேயே கூறிக் கொண்டிருக்கிறோம். இரண்டு காரியங்களைக் கூறுங்கள். முழு நாளிலும் உங்களுடைய இரண்டு காரியம் நடந்து கொண்டிருக்கிறது. முக்கிய காரியமே வினாசம் மற்றும் ஸ்தாபனையினுடையது. கொஞ்சம் வினாசம் செய்ய வேண்டும் மற்றும் கொஞ்சம் படைப்டைப் படைக்க வேண்டும். படைப்பை அனைத்து விதத்திலும் படைக்கிறீர்கள். ஒன்றோ சேவை மூலமாக தன்னுடைய இராஜ்யத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் இரண்டாவது புத்தியில் சுத்தமான எண்ணங்களின் படைப்பை செய்ய வேண்டும் மற்றும் வீணான எண்ணங்கள் மற்றும் தீய எண்ணங்களை அழிப்பதின் விதியையும் நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். படைப்பை மனம் மூலமாகவும் மேலும் வார்த்தைகள் மூலமாகவும் இரண்டு விதமான படைப்பைப் படைக்கிறீர்கள். இந்த மாதிரி இரட்டை காரியம் செய்கிறீர்கள். இதே காரியத்தில் முழு நாளும் மும்முரமாக இருந்தீர்கள் என்றால், ஒரே சீரான நிலை இருக்க முடியாதா? ஒரே சீரான நிலை இருப்பதில்லை, அதற்கான காரணம் படைப்பைப் படைக்கத் தெரிவது இல்லை மற்றும் வினாசம் செய்யத் தெரிவதில்லை. இரண்டு காரியத்திலும் குறை இருக்கும் காரணத்தினால் ஒரே சீரான நிலை நிலைத்திருக்க முடிவதில்லை. எனவே இரட்டை காரியத்தில் இருக்க வேண்டும். இந்த இரட்டை காரியமும் எப்பொழுது பொசிஷனில் (பதவியில்) இருப்பீர்களோ அப்பொழுதுதான் செய்ய முடியும். இரட்டை பொசிஷன் எவை? இந்த சமயத்திற்கானதை கேட்டுக் கொண்டிருக்கிறோம். தேவதை என்ற பொசிஷனை விட இந்த சமயத்தின் இறை பொசிஷன் உயர்ந்ததாகும். அப்படி ஒன்று இறைவனின்

குழந்தைகள் என்ற பொசிஷன், பிரம்மா குமார் குமாரிகள் என்பது. இது சாகார பொசிஷன் மற்றும் இரண்டாவது நிராகார பொசிஷன். நாம் அனைத்து ஆத்மாக்களை விட ஹீரோ பாகத்தைச் செய்யும் ஆத்மாக்கள் மற்றும் சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆவோம் மற்றும் இன்னொமொரு பொசிஷன் ஈஸ்வரிய குழந்தை பிரம்மா குமார் - குமாரி என்பது. இந்த இரண்டு பொசிஷனும் நினைவில் இருக்கிறது என்றால் காரியம் மற்றும் எண்ணம் இரண்டுமே உயர்ந்ததாகி விடும். உயர்ந்த ஆத்மா மற்றும் ஹீரோ என்று புரிந்து கொள்வதினால் ஈஸ்வரிய மரியாதைகள் மற்றும் பிராமண குலத்தின் மரியாதைகளுக்கு விரோதமான எந்தவொரு காரியமும் செய்ய மாட்டீர்கள். எனவே இந்த இரண்டு பொசிஷனும் நினைவில் இருக்கிறது என்றால் மாயாவின் (எதிர்ப்பு) முடிவடைந்து விடும். எனவே இரட்டை பொசிஷனையும் எப்பொழுதும் நினைவில் வையுங்கள்.

நல்லது. இரட்டை குறிக்கோள் எவை? யார் இரட்டை போதையுடையவராக இருப்பாரோ அவர்தான் இரட்டை குறிக்கோள் உடையவராக இருப்பார். ஒன்று நிராகாரி நிலை. எப்பொழுதும் தன்னை நிராகார தேசத்தில் வசிப்பவர் என்று புரிந்து கொள்வது மற்றும் நிராகார நிலையில் நிலைத்திருப்பது. சாகாரத்தில் இருந்து கொண்டே தன்னை நிராகாரி என்று புரிந்து கொண்டு நடந்து செல்வது. ஒன்று சோல் கான்சியஸ் அதாவது ஆத்ம அபிமானியாவதற்கான குறிக்கோள் மற்றும் இன்னொன்று நிர்விகாரி நிலை, அதில் மனதளவில் கூட விகாரமற்ற நிலையை உருவாக்க வேண்டி இருக்கிறது. அப்படி ஒன்று நிராகார நிலை, இன்னொன்று சாகார நிலை. அப்படி நிராகாரி மற்றும் நிர்விகாரி இவை இரண்டு குறிக்கோள்கள். முழு நாளும் யோகி மற்றும் தூய்மை ஆவதற்கான முயற்சி செய்கிறீர்கள் இல்லையா? எதுவரை முழுமையாக ஆத்ம அபிமானியாக ஆகவில்லையோ அது வரை விகாரமற்றவராகவும் ஆக முடியாது. இப்படி நிர்விகார நிலையின் குறிக்கோள் மற்றும் நிராகார நிலையின் குறிக்கோள் இவற்றையே பரிஷ்தா என்றும் சொல்லலாம், கர்மாதீத் நிலை என்றும் சொல்லலாம் ஆனால் எப்பொழுது எந்தவொரு தூய்மையின்மை அதாவது ஐந்து தத்துவங்களின் கவர்ச்சியும் கவராமல் இருக்கிறதோ அப்பொழுதுதான் பரிஷ்தாவாக ஆக முடியும். சிறிதும் மனதின் எண்ணத்தில் கூட தூய்மையின்மை என்பது இல்லாமல் இருக்கிறதோ அப்பொழுதுதான் பரிஷ்தா நிலையில் நிலைத்திருக்க

முடியும். அப்படி இந்த இரண்டு குறிக்கோளையும் நினைவில் வைக்க வேண்டும். மேலும் டபுள் பிராப்தி எது? அதீந்திரிய சுகத்தின் பிராப்தி, அதில் அமைதி மற்றும் குஷி அடங்கி இருக்கிறது. இது சங்கமயுகத்தின் ஆஸ்தியாகும். இப்பொழுது என்ன பிராப்தி இருக்கிறதோ அது ஒருபொழுதும் பிராப்தியாக கிடைக்காது. இதுவோ தந்தை மற்றும் ஆஸ்தி எனும் இரட்டை பிராப்தி ஆகும். தந்தையின் பிராப்தியையும் முழு கல்பத்திலும் செய்ய முடியாது. மேலும் தந்தை மூலமாக இப்பொழுது என்ன ஆஸ்தி கிடைக்கிறதோ அதுவும் முழு கல்பத்தில் இப்பொழுதுதான் கிடைக்கிறது. பின்பு ஒருபொழுதும் கிடைக்காது. இந்த நேரத்து பிராப்தியான அதீந்திரிய சுகம் மற்றும் முழு ஞானம் பின்னால் ஒருபொழுதும் கிடைக்க முடியாது. ஆகவே இரட்டை பிராப்தியை இரண்டு வார்த்தையில் கூறுவதானால் தந்தை மற்றும் ஆஸ்தி. இதில் ஞானமும் வந்து விடுகிறது, அதீந்திரிய சுகமும் வந்து விடுகிறது, ஆன்மீக குஷியும் வந்து விடுகிறது, மேலும் ஆன்மீக சக்தியும் வந்து விடுகிறது. ஆகவே இதுதான் இரட்டை பிராப்தி, புரிந்ததா?. இந்த அனைத்து இரண்டு, இரண்டு விஷயங்களை எப்பொழுது தாரணை செய்கிறீர்களோ அப்பொழுதுதான் தன்னை இணைந்திருப்பவராக (Combined) உணர முடியும்.

ஒரு தந்தை மற்றும் நான் என்று இணைந்த ரூபமாக நினைப்பதினால் இந்த அனைத்து இரண்டு விஷயங்களை சுலபமாக தாரணை செய்ய முடியும். பட்டியில் வந்திருக்கிறீர்கள் அல்லவா? எனவே இந்த அனைத்து என்னென்ன இரண்டு இரண்டு விஷயங்கள் கூறினோமோ அவற்றை பட்டியில் நல்ல முறையில் நினைவு சொரூபமாக ஆகிச் செல்ல வேண்டும். வெறும் கேட்டு விட்டு மட்டும் செல்ல வேண்டாம். அதிகமாகக் கேட்டிருக்கிறோம். கேட்பது என்றால் ஏற்றுக் கொள்வது மற்றும் அப்படி நடப்பது என்றால் சொரூபம் ஆவது. ஞானியாக இருக்கிறீர்கள் ஆனால் ஞான சொரூபமாகிச் செல்ல வேண்டும். யோகியாக இருக்கிறீர்கள் ஆனால் யோகயுக்த், யுக்தியுக்த் ஆகிச் செல்ல வேண்டும். தபஸ்வி குமாராக இருக்கிறீர்கள், ஆனால் தியாக மூர்த்தியாகவும் ஆகி விட வேண்டும். தியாக மூர்த்தியாக இல்லாமல் தபஸ்வி மூர்த்தி ஆக முடியாது. எனவே தபஸ்வியாக இருக்கிறீர்கள் ஆனால் கூடவே தியாகமூர்த்தியாகவும் ஆக வேண்டும். பிரம்மா குமாராக இருக்கிறீர்கள் ஆனால் பிரம்மா குமார் மற்றும் பிராமணர்களின் குல மரியாதைகளைத்

தெரிந்து மரியாதா புருஷோத்தம் ஆகிச் செல்ல வேண்டும். அதே அளவு மரியாதா புருஷோத்தமனாக வேண்டும். உங்களுடைய ஒவ்வொரு எண்ணமும் வாயுமண்டலத்தில் பிரபாவத்தை ஏற்படுத்த கூடிய அளவிற்கு பவர்புல் (சக்தி நிறைந்தவர்) ஆகிச் செல்ல வேண்டும். பவர் (Power) (சக்தி) இருக்கிறது ஆனால் பவர்ஃபுல் (Powerful) ஆகிச் செல்ல வேண்டும். யார் ஃபுல்லாக (Full)இருப்பாரோ அவர் ஒருபொழுதும் ஃபெயில் (Fail) ஆவதில்லை. ஃபுல்லின் அடையாளம் ஒன்றோ ஃபீல் (Feel) செய்ய மாட்டார்கள் (உணர்வுகளின் வசமாக மாட்டார்கள்) இன்னொன்று ஃபெயில் (Fail) ஆக மாட்டார்கள் மேலும் ஃப்லா (Flaw) (குறை) இருக்காது. ஆகவே ஃபுல் ஆகிச் செல்ல வேண்டும் அதற்காகத்தான் பட்டியில் வந்திருக்கிறீர்கள். என்ன கற்றுக் கொள்ள வேண்டும்? நிறைய பாடங்கள் படித்திருக்கிறீர்கள். இத்தனை பாடங்களையும் நடைமுறையில் படித்துச் செல்ல வேண்டும். நடைமுறை நடவடிக்கைகள் பாடமாகி விடும் அளவு உறுதியாகி செல்ல வேண்டும். ஒரு பாடம் வாயினால் படிப்பது இன்னொன்று கற்றுக் கொடுப்பது. வாயினால் படிப்பிக்கப்படுகிறது செயல் மூலம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அப்படி ஒவ்வொரு நடத்தையும் ஒவ்வொரு பாடமாகி விடட்டும். அந்த மாதிரி பாடம் படிப்பதினால் முன்னேற்றத்தை அடைகிறீர்கள் இல்லையா?. இவ்வாறாக நீங்கள் அனைவரும் ஒவ்வொரு செயல் மூலம் அந்த மாதிரி பாடத்தை அனைவருக்கும் படிப்பிக்கவும் கற்றுக் கொடுக்கவும் வேண்டும், அவர்கள் அதனால் முன்னேற்றத்தை அடைந்து கொண்டே இருக்கட்டும். படிக்கவும் வேண்டும் மேலும் படிப்பிக்கவும் வேண்டும். ஏழு நாள் பாடத்தை அனைவரும் படித்தாகி விட்டது அல்லவா?. ஒரு வார கோர்ஸ் என்ன செய்திருந்தீர்களோ அதை ஃபோர்ஸ் ஃபுல்லாக செய்தீர்களா அல்லது கோர்ஸ் மட்டும் செய்தீர்களா? கோர்ஸின் அர்த்தமே தன்னுள் ஃபோர்சை நிரப்புவது. ஒருவேளை ஃபோர்சை நிரப்பவில்லை என்றால் கோர்ஸ் என்று என்ன செய்தீர்கள்? பலமற்ற ஆத்மாவிலிருந்து சக்திசாலியான ஆத்மா ஆவதற்காக கோர்ஸ் செய்விக்கப்படுகிறது என்றால் ஒருவேளை கோர்ஸின் ஃபோர்ஸ் இல்லை என்றால் அது கோர்ஸாக ஆகுமா? எனவே இப்பொழுது ஃபோர்ஸ்ஃபுல் கோர்ஸ் செய்வதற்காக வந்திருக்கிறீர்கள் அல்லவா?

இரட்டை திலகம் அணிந்தவராகவும் ஆக வேண்டும். இரட்டை திலகம் என்பது எது? தினந்தோறும் தன்னுடைய திலகத்தைப் பார்க்கிறீர்களா?

அமிர்தவேளையில் எப்பொழுது ஞான குளியல் செய்கிறீர்களோ அப்பொழுது திலகமும் இடுகிறீர்களா? ஆத்ம நினைவு அல்லது சொரூபத்தின் திலகமோ ஏற்கனவே இருக்கிறது. மற்றொன்று நிச்சயத்தின் திலகம். ஒன்றோ ஆத்மீக நிலையின் திலகம் மற்றும் இன்னொன்று நாம் வெற்றியடையும் இரத்தினங்கள் என்பதாகும். ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு அடியில் வெற்றி நிரம்பியிருக்கட்டும். இந்த வெற்றியின் திலகம் விக்டரி (வெற்றி அடைவதின் அடையாளம்) ஆகும். எனவே உங்களுடைய திலகம் வெற்றிக்கான மற்றும் வெற்றி ரூபத்தினுடையது ஆகும். இந்த இரட்டைத் திலகம் எப்பொழுதும் நினைவில் இருக்கட்டும். நினைவு என்றால் திலகமிட்டவராக ஆவது. அப்படி இரட்டை திலகத்தையும் ஒருபொழுதும் மறக்கக்கூடாது. நான் வெற்றி அடைந்தவன் என்ற நினைவில் இருப்பதினால் ஒருபொழுதும் விதவிதமான சூழ்நிலைகள் உங்களை அசைக்க முடியாது. வெற்றி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது. தற்சமயம் தன்னுடைய நிலை மேலே கீழே ஆடிக் கொண்டிருக்கும் காரணத்தினால் அடையபோகும் வெற்றியும் ஆடிக் கொண்டிருப்பதாக தென்படுகிறது ஆனால் வெற்றி ஒவ்வொரு காரியத்திலும் கண்டிப்பாக அடங்கியிருக்கிறது. எப்படி ஏதாவது சீதோஷன நிலை மோசமாக இருக்கிறது என்றால் அதன் காரணமாக தொலைக்காட்சியில் காட்சி தெளிவாகத் தெரிவதில்லை. இதே போல் தன்னுடைய நிலையில் ஆட்டம் இருக்கும் காரணத்தினால் வெற்றியைத் தெளிவாக அனுபவம் செய்ய முடிவதில்லை. இதற்கான காரணம் என்ன? தன்னுடைய நிலையில் ஆட்டம் இருப்பதினால் தெளிவானதும் கூட தெளிவற்றதாக ஆகி விடுகிறது. குழப்பத்தின் காரணமாக தெளிவானவராக ஆக முடிவதில்லை. எனவே தன்னுடைய நிலையில் ஆட்டம் இல்லாமல் இருந்தால் நினைவு தெளிவாக இருக்கும். அது சீதோஷணத்தின் தெளிவு, மற்றும் இது நினைவின் தெளிவு ஒருவேளை நினைவு தெளிவாக இருக்கிறது என்றால் வெற்றியும் தெளிவான ரூபத்தில் தென்படும். ஒருவேளை நினைவு தெளிவாக இல்லை மற்றும் தன் மேல் முழுமையான கவனம் இல்லையெனில், கவனக்குறைவு இருக்கும் காரணத்தினால் ரிசல்ட்டும் (முடிவும்) முழுமையாகத் தென்படுவதில்லை. எவ்வளவு தன்மேல் கவனம் வைப்பீர்களோ அவ்வளவு தெளிவாக இருப்பீர்கள். மேலும் அந்த அளவே தன்னுடைய முயற்சியில் மற்றும் சேவையில் வெற்றி தெளிவானதாக மற்றும் அருகாமையில் தென்படும். இல்லையென்றால் தெளிவாகவும்

தென்படுவதில்லை, அருகாமையிலும் தென்படுவதில்லை. தொலைக்காட்சியில் தூரத்து காட்சிகள் அருகிலும் மற்றும் தெளிவானதாகவும் தெரிகிறது இல்லையா? இதே போல் ஒரே சீரான மனநிலை இருக்கும் காரணத்தினால் கவனம் மற்றும் தெளிவு இருக்கும் காரணத்தினால் வெற்றி அருகில் மற்றும் தெளிவாகத் தென்படும். புரிந்ததா?. ஒருவேளை இரண்டிலும் ஏதாவது ஒன்றின் குறை இருந்தால் கூட வெற்றியை அனுபவம் செய்ய மாட்டீர்கள். பின்பு குழப்பம் அடைவீர்கள். பிறகு பலஹீனமான வார்த்தையாகிய என்ன செய்வது? இது எப்படி நடக்கும்? போன்ற வார்த்தைகள் வெளியாகிறது. எனவே இரண்டு விஷயங்களையும் தாரணை செய்து சென்றீர்கள் என்றால் வெற்றி மூர்த்தி ஆகி விடுவீர்கள், கழுத்தின் மாலை எவ்வளவு அருகில் இருக்கிறதோ அதே போல் வெற்றியும் மிக அருகில் வந்து விடும். இதனால் வெற்றியும் கழுத்தின் மாலை ஆகி விடும். நல்லது.

**வரதானம்: விசேஷம் என்ற வார்த்தையின் நினைவு மூலமாக சம்பூர்ண நிலையின் இலக்கை அடையக்கூடிய சுயமாற்றம் செய்பவர் ஆகுக!**

நான் விசேஷ ஆத்மா ஆவேன், விசேஷ காரியம் செய்யும் பொறுப்பிலிருக்கிறேன் மேலும் விசேஷத்தைக் காண்பிக்கக் கூடியவன் என்ற நினைவு எப்பொழுதும் இருக்கட்டும். இந்த விசேஷம் என்ற வார்த்தையை விசேஷமாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் -பேசுவதும் விசேஷம், பார்ப்பதும் விசேஷம், செய்வதும் விசேஷம், யோசிப்பதும் விசேஷம் ஒவ்வொரு விஷயத்தில் இந்த விசேஷ கொண்டு வருவதினால் சுலடமாக சுய மாற்றத்தினால் உலக மாற்றம் செய்பவராக ஆகி விடுவீர்கள். மேலும் சம்பூர்ண நிலையை அடைய வேண்டும் என்ற லட்சியம் இருக்கிறதோ அந்த லட்சியத்தையும் சுலபமாக அடைந்து விடுவீர்கள்.

**சுலோகன்: தடைகளைக் கண்டு பயப்படுவதற்கு பதிலாக அதை சோதனைதான் என்று புரிந்து கடந்து செல்லுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 25.08.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## முக்கியமான 7-பலஹீனங்கள் மற்றும் அவற்றை அகற்றுவதற்காக 7-நாள் பாடம்!

ஒரு நொடியில் சப்தத்திலிருந்து விலகிய நிலையில் நிலைத்திருக்க முடியுமா? எப்படி மற்ற கர்மேந்திரியங்களை எப்பொழுது விரும்புகிறீர்களோ எப்படி விரும்புகிறீர்களோ அப்படியே அசைக்க முடியும். அதே போல் புத்தியின் தொடர்பை எங்கு விரும்புகிறீர்களோ, எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்படியே அங்கு நிலைத்திருக்கச் செய்ய முடியுமா? அந்த மாதிரி சக்தி நிறைந்தவராக ஆகியிருக்கிறீர்களா? இந்த விதி வளர்ச்சியை அடைந்து கொண்டே இருக்கிறதா? ஒருவேளை விதி சரியானதாக இருக்கிறது என்றால் விதி மூலமாக ஸித்திஅதாவது வெற்றி மற்றும் உயர்ந்த நிலை நிச்சயமாகவே ஒவ்வொரு நாளும் வளர்ச்சி அடைந்து கொண்டே இருப்பதாக அனுபவம் செய்வீர்கள். இந்த விளைவினால் தன்னுடைய முயற்சியின் சரியான நிலையை சரியாகத் தெரிந்து கொள்ள முடியும். இந்த வெற்றி விதியைத் தெரிந்து கொள்வதற்கான முக்கியமான அடையாளம் ஆகும். எந்தவொரு விஷயத்தையும் பகுத்தறிவதற்காக அடையாளங்கள் இருக்கின்றன. அப்படி இந்த அடையாளத்தின் மூலம் தன்னுடைய சம்பூர்ண புத்தியின் அடையாளத்தை பகுத்தறிய முடியுமா? தற்சமயம் முயற்சி செய்பவர்களின் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது அதில் முக்கியமான பலஹீனங்களாக எவை தென்படுகின்றன? 1) ஒன்று நினைவில் சக்தியில்லை. 2) பார்வையில் தெய்வீகத்தன்மை மற்றும் ஆன்மீகத்தன்மை சக்திக்கேற்றபடி வரிசைக்கிரமமாக வந்திருக்கிறது, 3) உள் உணர்வில் மனோபலம் இல்லாத காரணத்தினால் உள் உணர்வு ஒரே சீரான நிலையில் இல்லாமல் சஞ்சலம் ஆகிறது. 4) நிராகார நிலையின் கவனம் குறைவாக இருக்கும் காரணத்தினால் முக்கிய விகாரமான தேக அபிமானம், காமம் மற்றும் கோபம் இந்த மூன்றின் போர் அவ்வப்பொழுது

நடந்து கொண்டிருக்கிறது, 5) குழுவில் இருந்து கொண்டே மற்றும் நெருக்கத்தில் வந்து கொண்டே இருக்கும் பொழுது சூழ்நிலை மற்றும் வைப்ரேஷன் (எண்ண அதிர்வலைகள்) தன்னுடைய பாதிப்பை ஏற்படுத்துகிறது, 6) அவ்யக்த பரிஷ்தா நிலையின் நிலை குறைவாக இருக்கும் காரணத்தினால் நல்லது மற்றும் தீய விஷயங்களின் ஃபீலிங் (உணர்வு) வரும் காரணத்தினால் ஃபெயில் ஆகி விடுகிறார்கள், 7) தன்னுடைய நினைவு யாத்திரை மேல் திருப்தி குறைவாக இருக்கிறது. இதுதான் முயற்சி செய்பவர்களின் முயற்சியின் வரிசைக்கிரமமான ரிசல்ட் ஆகும்.

இப்பொழுது இந்த ஏழு விஷயங்களை அகற்றுவதற்காக மீண்டும் ஏழு நாள் பாடம் செய்விக்க வேண்டியதாக இருக்கும். இந்த ஏழு விஷயங்களையும் எதிரில் வைத்து ஏழு நாள் பாடம் மற்றவர்களுக்குச் செய்விக்கிறீர்கள் இல்லையா. அதை தனக்குத் தானே மீண்டும் ரிவைஸ் செய்ய வேண்டும். எப்படி முரளிகளை ரிவைஸ் செய்கிறீர்கள் அப்படி ரிவைஸ் செய்வதினால் புதுமை மற்றும் சக்தி அதிகரிப்பதின் அனுபவம் செய்கிறீர்கள். அதே போல் அமிர்தவேளையில் தனிமையில் அமர்ந்து என்னென்ன 7-விஷயங்கள் கூறியிருக்கிறோமோ அந்த ஒவ்வொரு விஷயங்களின் நிவாரணம் ஒவ்வொரு நாளின் பாடத்தில் எப்படி நிரம்பியிருக்கிறது என்பதை சிந்தனை செய்து வெண்ணெய் அதாவது சாரத்தை எடுக்க வேண்டும் மற்றும் உங்களுக்குள் பகிர்ந்து கொள்ள வேண்டும். பாடமோ எடுத்திருக்கிறீர்கள் ஆனால் எப்படி புதிதாக வந்திருப்பவர்களுக்கு ஏழு நாள் பாடம் எடுத்த பிறகு ஒவ்வொரு பாடத்தின் யுக்தியை கூறுகிறீர்கள் மற்றும் கவனத்தை ஈர்க்கிறீர்கள் அதே போல் நீங்கள் ஒவ்வொரு ரெகுலர் இறை மாணவர்கள் மீண்டும் ஒரு வாரம் ஒரு பாடத்தை பயிற்சியிலும் நடைமுறையிலும் கொண்டு வாருங்கள். எப்படி ஒரு வார பாடம் செய்கிறீர்கள். நீங்கள் கூட சேவையில் தூய்மையின் வாரம் மற்றும் அமைதியின் வாரம் என்ற நிகழ்ச்சிகள் வைக்கிறீர்கள் இல்லையா? அதே போல் தன்னுடைய முன்னேற்றத் திற்காக ஒரு பாடத்தின் ஒரு வார பாடத்தை நடைமுறை மற்றும் பயிற்சியில் கொண்டு வாருங்கள். அப்படி ரிவைஸ் செய்வதினால் என்ன ஆகும்? வெற்றி அருகில், சுலபமாக மற்றும் தெளிவாக தென்படுகிறது என்றால் உயர்ந்தவராக ஆகியே விடுவீர்கள். தனக்குத் தானே ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தை மகானாக ஆக்குவதற்காக அனைத்தையும்

விட சுலபமான யுக்திக்கான மூன்று விஷயங்களைக் கூறுங்கள். மனம், சொல், செயலில் மகான் நிலைக்காகத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மகான் ஆவதற்காக ஒன்று தன்னை பழைய உலகத்தில் விருந்தினர் என்று புரிந்து கொள்ளுங்கள். இரண்டாவது விஷயம், எந்த எண்ணத்தை உருவாக்குகிறீர்களோ மற்றும் காரியம் செய்கிறீர்களோ அதன் மிகப் பெரிய வித்தியாசத்தைப் புத்தியில் வைத்து எண்ணத்தை உருவாக்குங்கள் மற்றும் காரியம் செய்யுங்கள். மூன்றாவது விஷயம் தந்தையின் மற்றும் தன்னுடைய தெய்வீக குடும்பத்தின் ஒவ்வொரு ஆத்மாவின் குணம் மற்றும் உயர்ந்த காரியத்தின் மகிமையை செய்து கொண்டே இருங்கள். 1) மெஹ்மான் (விருந்தினர்), 2) மகான் அந்தர் (பெரிய வித்தியாசம்) மற்றும் 3) மஹிமை. இந்த மூன்று விஷயங்களும் இருந்து கொண்டே இருக்கிறது என்றால் ஏழு பலஹீனங்கள் என்ன இருக்கின்றனவோ அவை முடிவடைந்து விடும். விருந்தினர் என்று புரிந்து கொள்ளாத காரணத்தினால் எந்தவொரு உருவம் மற்றும் லட்சணத்தில் கவர்ச்சி மற்றும் கவனம் செல்கிறது. பெரிய வித்தியாசத்தை எதிரில் வைப்பதினால் ஒருபொழுதும் தேக அகங்காரம், மேலும் கோபத்தின் அம்சம் மற்றும் வம்சம் இருக்க முடியாது. மூன்றாவது விஷயம் தந்தையின் மற்றும் ஒவ்வொரு ஆத்மாவின் குணங்களின் மகிமை மற்றும் காரியத்தின் மகிமை செய்து கொண்டே இருப்பதினால் யார் மூலமாகவும் எந்த விஷயத்தின் ஃபீலிங் வர முடியாது. மேலும் எப்பொழுது குணங்கள் மற்றும் காரியங்களின் மகிமை செய்வதினால் திருப்தியில்லாமல் இருக்கும் நினைவு யாத்திரை கூட நிரந்தர மற்றும் சுலபமான நினைவாக மாறி விடும். இந்த மூன்று வார்த்தைகளை எப்பொழுதும் நினைவில் வைத்தீர்கள் என்றால் சக்தி நிறைந்தவராக ஆகி விடுவீர்கள். பார்வை, உள்உணர்வு, சூழ்நிலை அனைத்தும் மாறி விடும்.

துவாபர யுகத்திலிருந்து இன்று வரை தன்னுடைய மற்றும் தன்னுடைய தெய்வீகக் குடும்பத்தின் ஆத்மாக்களின் மகிமை செய்து வந்திருக்கிறீர்கள், கீர்த்தனை பாடி வந்திருக்கிறீர்கள். இப்பொழுது சைத்தன்யமாக அறிமுகமாகி இருக்கும் ஆத்மாக்களின் அவகுணங்களை மற்றும் குறைகளை ஏன் பார்க்கிறீர்கள் மற்றும் புத்தியில் ஏன் தாரணை செய்கிறீர்கள்? இப்பொழுதும் முழு உலகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உயர்ந்த ஆத்மாக்களின் குணங்களை மகிமை

செய்யுங்கள். பத்தி மூலமாக கிரகியுங்கள் மற்றும் வாய் மூலமாக ஒருவர் இன்னொருவரின் குணங்களின் மகிமை செய்யுங்கள் பின்பு பார்வை மற்றும் உள்உணர்வு சஞ்சலப்படுமா? யாருடைய குறையின் ஃபீலிங் ஏற்படுமா? இப்பொழுது அனுபவம் செய்திருக்கிறீர்கள் எந்தவொரு கோயிலின் மூர்த்தி எவ்வளவுதான் கவர்ச்சிகரமாக மற்றும் அழகாக அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது என்றால் ஒருபொழுதும் பார்வை அவருடைய அழகில் மற்றும் அலங்காரத்தின் பக்கம் எண்ண அளவில் கூட சஞ்சலப்படாது. மேலும் அங்கேயே ஒருவேளை ஏதாவது சினிமா மற்றும் அந்த மாதிரி ஏதாவது புத்தகங்கள் இருந்து ஏதாவது கவர்ச்சிகரமான மற்றும் அலங்காரத்தை பார்க்கிறீர்கள் அல்லது ஏதாவது ஒரு விளம்பரப் பலகையை பார்க்கிறீர்கள் என்றால் உள்உணர்வு மற்றும் பார்வை சஞ்சலப்படுகிறது ஏன்? கவர்ச்சியோ மூர்த்திகளிலும் இருக்கிறது, அலங்காரம், லட்சணம் மற்றும் இயல்புகளின் அழகு மூர்த்திகளிலும் இருக்கிறது இருந்தாலும் உள்உணர்வு மற்றும் பார்வை ஏன் சஞ்சலப்படுவதில்லை? இரண்டு படங்களையும் எதிரில் வையுங்கள் மேலும் ஒரே அறையில் வைக்கிறீர்கள் என்றால் ஒரு நொடியில் அந்த பக்கம் செல்வதினால் உள் உணர்வு சஞ்சலப் படுகிறது, மேலும் இந்த பக்கம் செல்வதினால் உள் உணர்வு தூய்மை ஆகி விடுகிறது. இந்த தூய்மை மற்றும் தூய்மையின்மைக்கான காரணம் என்னவாக இருக்கிறது? நினைவு இது தேவி என்பதின் நினைவிருக்கிறது என்றால் நினைவு, பார்வை மற்றும் உள்உணர்வை தூய்மை ஆக்குகிறது. மேலும் இவர் பெண் என்ற நினைவிருக்கிறது என்றால் அந்த நினைவு, உள் உணர்வு மற்றும் பார்வை தூய்மையின்மையின் பக்கம் இழுக்கிறது. அங்கு உருவத்தை பார்ப்பீர்கள் மற்றும் இங்கு ஆன்மீகத்தைப் பார்ப்பீர்கள். அப்படி கடந்த காலத்தின் அனுபவம் இருக்கும் இல்லையா? தற்சமயம் கூட சதவிகிதத்தில் இருக்கிறது ஆனால் இதை அகற்றுவதற்காக எப்பொழுதாவது எங்காவது பார்க்கிறீர்கள் என்றால், யாருடனாவது பேசுகிறீர்கள் என்றால் நினைவில் என்ன வைத்து கொள்ள வேண்டும்? ஆத்மா என்று புரிந்து கொள்ள வேண்டும், இதுவோ முதல் நிலையானது ஆனால் காரியத்தில் வந்து கொண்டே நெருக்கத்தில் வந்து கொண்டே, உறவில் வந்து கொண்டே இவர்கள் அனைவரும் ஜடச்சிலைகளின் சைத்தன்ய தேவி தேவதைகளின் ரூபம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படி தேவியின் உருவம் நினைவில் வருவதினால் எப்படி ஜடச்சிலைகளின் மேல் ஒருபொழுதும்

எண்ண அளவில் கூட தூய்மையின்மை மற்றும் உடலின் கவர்ச்சி இருப்பதில்லை அதே போல் சைத்தன்ய ரூபத்திலும் இந்த நினைவை வைப்பதினால் எண்ணத்தினால் கூட இந்த கம்ப்ளைன்ட் (புகார்) இருக்காது மேலும் கம்ப்ளீட் (முழுமையாக ஆகி விடுவீர்கள். புரிந்ததா? இதுதான் தற்சமயம் முயற்சி செய்பவர்களின் கம்ப்ளைன்ட்டின் மேல் கம்ப்ளீட் ஆவதற்கான வழிகள். நல்லது. பட்டியில் இருப்பவர்கள் தன்னுடைய முன்னேற்றத்தை செய்து கொண்டிருக்கிறார்கள். வேகமும் அதிகமாக இருக்கிறதா? முடிவு அடைந்த பிறகு கீழே இறங்கியவுடன் வேகம் குறைந்து விட்டது என்று அப்படி இருக்க வேண்டாம். அந்த மாதிரியே முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா. நல்லது.

**வரதானம்: அன்பு மற்றும் சகயோகத்தின் விதி மூலம் பெரிய மனம் உடைய தந்தையின் பிரியமானவராகக் கூடிய சகஜயோகி ஆகுக!**

பாப்தாதாவிற்கு குழந்தைகளின் அன்புதான் பிடித்திருக்கிறது. யார் யக்ஞத்தின் மேல் அன்புடையவராகவும் சகயோகியாகவும் ஆகிறார்களோ அவர்கள் சகஜயோகியாகவும் தானாகவே ஆகி விடுகிறார்கள் . சகயோகம் சகஜயோகம் ஆகும். பெரிய மனமுடைய தந்தைக்கு உள்ளப்பூர்வமான அன்பு மற்றும் உள்ளப்பூர்வமான சகயோகம்தான் பிரியமானதாகும். சிறிய மனமுடையவர்கள் சிறிய ஒப்பந்தத்திலேயே குஷி அடைந்து விடுகிறார்கள், மேலும் பெரிய மனமுடையவர்கள் எல்லைக்கப்பாற்பட்ட ஒப்பந்தம் செய்கிறார்கள். அன்பிற்குத்தான் மதிப்பேயன்றி பொருளுக்கு அல்ல. எனவேதான் சுதாமாவின் (குசேலரின்) அவல் மகிமையாகப் பாடப்பட்டிருக்கிறது. அப்படி ஒருவர் எவ்வளவுதான் கொடுத்தாலும் ஆனால் அன்பு இல்லை என்றால் சேமிப்பாகாது. அன்புடன் கொஞ்சம் கொடுத்தாலும் அது பல மடங்காக சேமிப்பாகிறது.

**சுலோகன்: நேரம் மற்றும் சக்தி வீணாகாமலிருப்பதற்காக முதலில் யோசியுங்கள், பின்பு செய்யுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 11.09.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## டபுள் ரிபைன்ட் ஸ்டேஜ் (இரட்டை சுத்திகரிக்கப்பட்ட நிலை)!

இன்று பேச வேண்டுமா என்ன? அல்லது பார்க்க வேண்டுமா? பார்ப்பதே பேசுவது இல்லையா என்ன? என்ன பேச வேண்டுமோ அதை வாய் மூலம் சொல்லாமல் கண்களால் சொல்லலாமா? அந்த மாதிரி அனுபவம் இருக்கிறதா? அந்த மாதிரி நடக்க முடியுமா? அந்த மாதிரி இருக்கவும் செய்கிறதா? இன்று இது மாஸ்டர் ஞானம் நிறைந்த, சக்தி நிறைந்த, வெற்றி நிறைந்த சேவைக்குத் தகுதியானவர்களின் சபை ஆகும். அப்படியானால் கண்களால் தெரிந்து கொள்ள முடியாதா என்ன? தன்னுடைய மனதின் பாவனை மற்றும் புத்தியின் எண்ணங்களை கண்களால் வெளிப்படுத்த முடியாதா? இதுவும் கூட படிப்பின் ஒரு பாடம் ஆகும். அப்படியானால் இன்று பாப்தாதா என்ன சொல்ல விரும்புகிறார் என்று கூறுங்கள் பார்ப்போம். தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா. மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்களாக இருக்கவே இருக்கிறீர்கள். அப்படி இந்த பாடத்தை எப்பொழுது படித்து முடித்து விட்டீர்கள் என்றால் இந்த பாடத்தின் பரீட்சை எழுதுவதற்காக தயார் ஆகி விட்டீர்களா? மகாவீர் ஆக இருக்கவே இருக்கிறீர்கள். இது மகாவீரர்களின் குரூப்தான் இல்லையா. மற்றவர்களின் பேட்டரியை சார்ஜ் செய்யக்கூடிய இன்சார்ஜ் (பொறுப்பில்) ஆக இருப்பவர்கள், பாப்தாதாவோ இவர்கள் அனைவரும் வரிசைக்கிரமமாக தேர்ச்சி பெற்றிருக்கும் குரூப் என்று பார்க்கிறார். அனேக விஷயங்களை, அனேக அனுபவங்களைப் பார்த்து கடந்து வந்து, வந்து பாஸ் ஆகி விடவில்லையா. (தேர்ச்சி பெற்றுவிடவில்லையா). மூன்று விதமான பாஸ் ஆவது இருக்கிறது. அப்படி இந்த மூன்று விதமான பாஸ் என்ற வார்த்தையில் பாஸ் ஆக வேண்டும். ஒன்று ஏதாவது ஒரு விஷயம் மற்றும் பாதையை பாஸ் செய்வது (கடந்து செல்வது). இன்னொன்று படிப்பில் பாஸ் ஆவது மற்றும் அருகாமையில் இருப்பதையும் (இந்தியில்) பாஸ் என்று கூறுகிறார்கள். அருகாமை என்றால் நெருக்கத்தில் இருக்கும் இரத்தினம். அப்படி மூன்று விதமான

பாஸ் என்ற வார்த்தையில் பாஸ் ஆகியிருக்கிறீர்களா? திரிசூலத்தின் திலகம் என்றால் மூன்று விதமான பாஸ் வார்த்தையில் பாஸ் ஆவது. இந்த திலகம் கண்களுக்குத் தென்படவில்லையா? இந்த குரூப்பின் நெற்றியில் இந்த திரிசூலத்தின் திலகம் உங்களுக்குத் தென்படுகிறதா? இன்றைய சபை பாப்தாதாவிற்கு என்னவாகத் தென்படுகிறது என்பதை தெரிந்திருக்கிறீர்களா? தன்னுடைய சாட்சாத்காரமோ ஏற்படவே செய்கிறது இல்லையா? இப்பொழுதே உங்களுடைய சாட்சாத்காரம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதா? (தாதியைப் பார்த்து) இவர்கள் சாட்சாத்கார மூர்த்திகள் மற்றும் நீங்களோ சாட்சி அப்படியானால் இவர்களின் குரூப்பிற்கு எந்தவொரு சாட்சாத்காரம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறுங்கள். இவர் (தாதி) மைக் ஆவார், நீங்கள் (தீதி) மைட் ஆவீர்கள் (சக்தி நிறைந்தவர்). அப்படித்தானே?இவர் மைட் கொடுக்கிறார் அந்த மைக் பேசுகிறது. பாப்தாதாவிற்கு என்ன சாட்சாத்காரம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது இரண்டு கிரீடம் இல்லையா என்ன? ஒருவேளை இரண்டு கிரீடத்தை தாரணை செய்யவில்லை என்றால் எதிர்காலத்திலும் இரண்டு கிரீடம் கிடைக்கவே முடியாது. அப்படி இன்று இரண்டு கிரீடம் அணிந்த, திலகம் இட்டுக் கொண்ட, சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும். ராஜரிஷி சபையை பார்த்துக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தின் சபையோ இந்த சபைக்கு எதிரில் முற்றிலும் ரசனையற்றதாக இருக்கிறது. ஒருவேளை இப்பொழுதே தன்னுடைய சங்கமயுகத்தின் கிரீடம், திலகம் மற்றும் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் புருஷோத்தம மரியாதை நிரம்பிய சொரூபத்தைப் பாருங்கள் மற்றும் கூடவே தன்னுடைய எதிர்கால சொரூபத்தையும் பார்த்தீர்கள் என்றால் இரண்டிலுமே எந்த ரூடம் தெளிவானதாக, கவரக்கூடியதாக, ஆன்மீகமானதாக மற்றும் தெய்வீகமானதாக பார்க்கத் தென்படும்? இப்பொழுதைய அல்லது எதிர்காலத் தினுடையதா? அப்படி தன்னுடைய சொரூபத்தின் சாட்சாத்காரத்தை எப்பொழுதும் செய்து கொண்டும் மற்றும் செய்வித்துக் கொண்டும் இருக்கிறீர்களா அல்லது திரைச்சீலைக்கு பின்னால் தயாராகிக் கொண்டிருக்கிறீர்களா? மேடையில் இன்னும் வரவில்லையா? தற்சமயம் மேடையில் எந்த ரூபத்தில் இருக்கிறீர்கள். இப்பொழுதைய தன்னுடைய ஸ்டேஜை (நிலையை) எவ்வளவு தூரம் புரிந்திருக்கிறீர்கள்?

ஒன்று பைனல் ஸ்டேஜ் (கடைசி நிலை). அப்படி பைனலாக இருக்கிறதா? பைன் ஆக இருக்கிறதா? ரிபைன் ஆக இருக்கிறதா? இன்றைய நாட்களில் ரிபைன் கூட டபுள் ரிபைன் ஆகிறது என்று தெரியுமா? அப்படியானால் இப்பொழுது ரிபைன் ஆக இருக்கிறீர்களா? டபுள் ரிபைன் ஆக வேண்டுமா அல்லது ரிபைன் ஆக வேண்டுமா? ஒரு தடவையோ முழுமையாக ரிபைன் ஆகி விட்டீர்கள் இல்லையா? இப்பொழுது டபுள் ரிபைன் ஆவதற்காக வந்திருக்கிறீர்கள். பைனலின் தேதி எது? ஒருவேளை முன்பாகவே ஏற்படவில்லை என்றால் உங்களுடைய பக்தர்கள் மற்றும் பிரஜைகள் உங்களுடைய சம்பூர்ண சொரூபத்தின் சாட்சாத்காரத்தை எப்படி செய்வார்கள். பிறகோ உங்களுடைய சிலைகளையும் படங்களையும் நொண்டி முடமானதாக ஆக்கி விடுவார்கள். ஒருவேளை உங்களுடைய சம்பூர்ண நிலையின் பைனல் ஸ்டேஜின் சாட்சாத்காரத்தை பார்க்கவில்லை என்றால் படங்களையும் சிலைகளையும் என்னவாக உருவாக்குவார்கள்? படங்களையும் ரிபைன் ஆனதாக உருவாக்க மாட்டார்கள். எனவே முன்பாகவே தன்னுடைய சம்பூர்ண சாட்சாத்காரத்தை செய்விக்க வேண்டும். இப்பொழுது உங்களுடைய பக்தர்களில் குண மகிமை பாடக்கூடிய சம்ஸ்காரத்தை நிரப்பினீர்கள் என்றால் துவாபரயுகத்தில் இறங்கிய உடனேயே உங்களுடைய படங்கள் சிலைகளின் எதிரில் குண மகிமையைப் பாடுவார்கள். அனைத்து ஆத்மாக்களில் அனைத்து பழக்க வழக்கங்களின் சம்ஸ்காரத்தை இப்பொழுதிலிருந்து நிரப்ப வேண்டும். இல்லையா. இது நிரப்புவதற்கான நேரம். பின்பு நடைமுறையில் செய்வதற்கான நேரம். எப்படி எப்படி உங்கள் ஆத்மாவில் முழு கல்பத்தின் பூஜைக்குரிய மற்றும் பூஜாரி நிலையினுடைய இரண்டு சம்ஸ்காரங்களும் இப்பொழுது நிரம்பிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு பூஜைக்குரியவர்களாக ஆவீர்களோ அதன் பிரகாரம் பூஜாரி நிலையின் ஸ்டேஜ் கூட தானாகவே உருவாகிக் கொண்டே இருக்கும். எப்படி உங்கள் ஆத்மாவில் முழு கல்பத்தின் சம்ஸ்காரம் நிரம்புகிறது. அதே போல் உங்களுடைய பக்தர்களிலும் இப்பொழுதே சம்ஸ்காரத்தை நிரப்புவீர்கள். எப்படி உங்களுடைய சொரூபம் இருக்குமோ அதே போல்தான் சம்ஸ்காரத்தை நிரப்புவீர்கள். எனவே இப்பொழுது விரைவாக தன்னுடைய பைனல் ஸ்டேஜிற்கு எடுத்துச் செல்லுங்கள். அந்த மாதிரியான பைனல் ஸ்டேஜை உருவாக்குங்கள். அதனால் இப்பொழுதும் பைன் (தண்டனை) ஏற்பட வேண்டாம். யார் டபுள் ரிபைன் ஆகி

விடுவார்களோ அவர்களுக்கு பைன் ஏற்படாது. பைனலில் இருப்பவர்களுக்கு எந்த ஃபைலும் தங்கியிருந்து விடாது. எனவே என்னென்ன ஃபைல் இன்னும் இருக்கிறதோ அவற்றை முடித்து விடுங்கள். ஒருவேளை மகாவீரர்களுக்கும் பைன் கட்ட வேண்டியதாக இருந்தால் அவர்கள் என்ன மகாவீரர்களாக இருக்கிறார்கள்? எனவே இன்று பேசுவது இல்லை என்று ஏற்கனவே கூறியிருந்தோம். இஷாரா (சைகைகள்) மூலமாகவே புரிந்து கொள்பவர்கள். இவர்கள் கிரீடம் அணிந்தவர்களாகவும் ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்களாகவும் இருக்கும் குரூப் என்றால் அதை கேட்பதினால் எப்படிப் புரிந்து கொள்வார்கள். ஒருவேளை இப்பொழுது கூட சொன்னால் செய்பவர்களாக இருக்கிறீர்கள் என்றால் அப்படி சொல்லி செய்பவர்களே மனிதர்கள் ஆவார்கள் ஆனால் நீங்கள் தேவதைகளையும் விட உயர்ந்தவர்கள். பிராமணன் என்று கூறினாலும் சரி அல்லது பரிஷ்தா என்று கூறினாலும் சரி. பரிஷ்தாக்கள் இஷாரா மூலமாக புரிந்து கொள்பவர்கள். நல்லது. பாப்தாதா இந்த குரூப்பை முழு உலகத்தின் எதிரில் என்னவாக நினைக்கிறார்? என்னவாக இருக்கிறீர்களோ அதை மட்டும் கூறுங்கள். இவர்களோ முழு உலகத்தையும் தன் காலடிகளில் வைப்பவர் களேயன்றி சரண் அடைபவர்கள் அல்ல. பாப்தாதாவின் எதிரில் கூட சரணடையவர்கள் அல்ல. தந்தையை சேவகனாக ஆக்கக்கூடியவர்கள். அப்படியானால் சரணாகதி ஆனதா அல்லது சரணாகதியாக ஆக்ககுபவர்களாக ஆனீர்களா? முழு உலகத்திலும் மகிமை செய்வதற்கான தகுதியான என்னென்ன வார்த்தைகள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் இருக்கட்டும். இன்று பாப்தாதா சம்பூர்ண ரூபத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். யார் ஒரு எண்ணத்தைக் கூட கட்டளையின்றி செய்யவில்லையோ அவரைத்தான் எப்பொழுதும் கட்டளைக்குக் கீழ்படிந்து நடப்பவர் என்று கூற முடியும். இந்த குரூப்போ இந்த விஷயத்தில் பாஸ் ஆகி இருக்கிறீர்கள் இல்லையா? எப்பொழுதும் தன்னை கட்டளைக்குக் கீழ்படிந்து நடக்கும் சொரூபத்தில் நிலைத்திருக்கச் செய்து பின்பு ஏதாவது எண்ணத்தை உருவாக்குங்கள். அந்த மாதிரி யார் சம்பூர்ண கட்டளைப்படி நடப்பவராக இருக்கிறாரோ அவர்தான் சம்பூர்ண நம்பிக்கைக்கு பாத்திரமானவராகவும் இருப்பார். இந்த குரூப்போ சம்பூர்ணத்தின் அருகில் இருக்கிறார்கள் இல்லையா. சம்பூர்ண நம்பிக்கைக்குரியவர் என்று யாரைக் கூறலாம்? நம்பிக்கைக்குரியவரின் முக்கியமான

குணமாக என்ன இருக்கிறது? அவருடைய முக்கியமான குணமாக தன்னுடைய உயிரே சென்று விட்டால் கூட ஒவ்வொரு பொருளையும் பாதுகாப்பாக வைப்பார்கள் என்பதுதான் முக்கிய குணம் ஆகும். அப்படி எந்தவொரு பொருளையும் வீணானதாகவும் நஷ்டத்திற்குரியதாகவும் ஆக்க மாட்டார்கள். ஒருவேளை எண்ணம், நேரம், வார்த்தை மற்றும் காரியம் இந்த நான்கிலிருந்து ஏதாவது ஒன்றையாவது வீணாக இழந்தார்கள் என்றால் நஷ்டக் கணக்கில் செல்கிறது என்றால் அவரை சம்பூர்ண நம்பிக்கைக்குரியவர் என்று சொல்ல முடியுமா? ஏனென்றால் எப்பொழுதிலிருந்து ஜென்மம் எடுத்தீர்களோ அதாவது கட்டளைப்படி நடப்பவராக ஆனீர்களோ அப்பொழுதிலிருந்து நேர்மையானவர்களாக ஆகியிருக்கிறீர்களா? ஒரு சின்ன பைசாவில் கூட நேர்மை இருக்கிறது. அப்படி எப்பொழுதிலிருந்து ஜென்மம் எடுத்திருக்கிறீர்கள் அப்பொழுதிலிருந்து எண்ணம், நேரம், காரியம் என்ன செய்தாலும் அவற்றை தந்தையின் ஈஸ்வரிய சேவைக்காக செய்வோம். இந்த உறுதிமொழி எடுத்திருக்கிறீர்களா? அனைவரும் சம்பூர்ணம் ஆகி விட்டீர்களா? அப்படி இவர்கள் அனைவரும் ஈஸ்வரிய சேவைக்கானவர்களாக ஆகி விட்டார்கள். ஒருவேளை ஈஸ்வரிய சேவைக்கு பதிலாக எங்காவது எண்ணம், நேரம், உடல் மூலமாக வீணான காரியம் நடக்கிறது என்றால் அவரை என்னவென்று கூறுவது? அவரை சம்பூர்ண நம்பிக்கைக்குரியவர் என்று கூற முடியுமா? ஒன்று அல்லது ஒரு விநாடி என்ன பெரிய விஷயமா என்று அப்படி நினைக்காதீர்கள். ஒருவேளை ஒரு நையா பைசாவிற்கு கூட நம்பிக்கைகுரியவராக இல்லை என்றால் அவரை சம்பூர்ண நம்பிக்கைக்குரியவர் என்று கூற மாட்டோம். இந்த குரூப்போ சம்பூர்ணமாக கட்டளைப்படி நடப்பவர்கள். சம்பூர்ண நம்பிக்கைக்குரியவர்கள் இல்லையா. அந்த மாதிரி சம்பூர்ண நம்பிக்கைக்குரிய, கட்டளைப்படி நடக்கக்கூடிய, நேர்மையான கட்டளைப்படி நடக்கும் குரூப்பை என்னவென்று கூறுவீர்கள். நமஸ்தே. நமஸ்தேவிற்கு பிறகு என்ன நடக்கிறது. தந்தையோ சம்பூர்ணமாக கட்டளைப்படி நடப்பவர் இல்லையா. ஒருவர் இன்னொருவரைப் பார்த்து மகிழ்ச்சி நிறைந்தவராக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா, சங்கமயுகத்தின் தர்பாரின் இது அலங்காரமாகும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.09.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாஸ்டர் ஞான சூரிய ஆத்மாக்களின் கடமை!

இந்த சபையை எந்த சபை என்று கூறலாம்? இந்த சபையின் விசேஷம் என்ன? என்ன விசேஷம் இருக்கிறதோ அதன்படி பெயர் கூறுவோம். மற்ற சபைகளில் பார்க்க முடியாத விசேஷம் இந்த சபையில் என்ன இருக்கிறது? தன்னுடைய சபையின் விசேஷத்தை தெரிந்திருக்கிறீர்களா? இந்த சபை முழு பிராமண குடும்பத்தில் விசேஷ ஆத்மாக்களின் சபை ஆகும் ஆனால் இந்த விசேஷ ஆத்மாக்களின் சபையின் விசேஷம் என்னவென்றால் - இது அனைத்து புகழ்பெற்ற நதிகளின் மேளா (சந்திப்பு) ஆகும். நதிகளின் மேல் அனேக விதமான விசேஷ நாட்களில் மேளா நடக்கிறது ஆனால் இந்த மேளா புகழ்பெற்ற நதிகளினுடையது. ஞானக் கடலிலிருந்து உருவான பதீத பாவனி (தூய்மையில்லாதவர்களை தூய்மைப்படுத்தும்) நதிகளின் சந்திப்பாகும். தன்னை பதீத பாவனி என்று நினைக்கிறீர்களா? ஒருவேளை பதீத பாவனியாக இருக்கிறீர்கள் என்றால் பதீத பாவனியாக யார் ஆக முடியும் என்ற முக்கியமான விஷயத்தை தெரிந்திருக்கிறீர்களா? பதீத பாவனியாவதற்காக, எப்படிப்பட்ட தூய்மையில்லாதவர்களும் தூய்மையாகும் அளவிற்கு முக்கியமான எந்த விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எந்தவொரு தூய்மையில்லாத ஆத்மாவின் எண்ணம் கூட உள்ளடங்கிப் போய் விட வேண்டும். இதற்காக எப்பொழுதும் நான் அனைத்து ஆத்மாக்களின் தூய்மையில்லாத எண்ணங்கள், உள் உணர்வுகள் மற்றும் பார்வையை பஸ்பம் ஆக்கும் மாஸ்டர் ஞான சூரியன் என்பதுதான் எப்பொழுதும் புத்தியில் இருக்க வேண்டும். இதுதான் முக்கியமான விஷயம் ஆகும். ஒருவேளை மாஸ்டர் ஞான சூரியன் ஆகி எந்தவொரு தூய்மையில்லாத ஆத்மாக்களை பார்க்கிறீர்கள் என்றால் எப்படி சூரியன் தன்னுடைய கிரணங்களினால் குப்பை, அசுத்தத்தின் கிருமிகளை பஸ்பம் செய்து விடுகிறது. அதே போல் எந்தவொரு தூய்மையில்லாத ஆத்மாவின் தூய்மையற்ற எண்ணம் கூட

பதீத பாவனி ஆத்மாவின் மேல் முற்றுகை செய்ய முடியாது. தூய்மையில்லாத ஆத்மாக்கள் பதீத பாவனிகளாகிய உங்கள் மேல் இன்னும் பலியாகி விடுவார்கள். ஒருவேளை ஏதாவது தூய்மையில்லாத ஆத்மாவிற்கு பதீத பாவனியைப் பற்றியும் தூய்மையில்லாத எண்ணம் கூட உருவாகிறது என்றால் என்ன புரிந்து கொள்ள வேண்டும்? மைக் ஆகியிருக்கிறீர்கள் மைட் ஹவுஸ் (சக்தி நிறைந்தவர்) ஆகவில்லை எனவே எப்படி மைக்கின் சப்தம் மிக இனிமையாகவும் இருக்கிறது. மேலும் மைக் என்றால் சப்தம் அதாவது காதுக்கு இனிய இரசனையை பிராப்தி செய்விக்கிறது ஆனால் மைட் ஹவுஸ் நிலை மனதின் இரசனையை அனுபவம் செய்விக்கிறது. ஒருவேளை ஒரு தடவையாவது இந்திரியங்களின் ரசனையை அனுபவம் செய்கிறார்கள் என்றால் இந்த இந்திரியங்களின் ரசனை அற்பகாலத்தின் அனேக ரசனைகளின் பக்கம் கவர்ந்திழுத்து விடுகிறது. எந்தவொரு தூய்மையில்லாத ஆத்மாவின் இந்திரியங்களின் எந்தவொரு இரசனையும் அதாவது அழியக்கூடிய ரசனைகளின் பக்கம் கவர்ச்சி இருக்க வேண்டாம். வந்தவுடனேயே ஆன்மீக அதீந்திரிய சுகம் மற்றும் மன இரசனையை அனுபவம் செய்யட்டும். இதற்காக முதலில் பதீத பாவனிகளுக்கு மன்மனாபவ என்ற நிலை இருக்க வேண்டும். ஒருவேளை தானே ஏதாவது தேக அபிமானம் மற்றும் தேகத்தின் உலகின் அதாவது பழைய உலகத்தின் ஏதாவது ஒரு பொருளின் ரசனையில் கொஞ்சமாவது மூழ்கியிருக்கிறீர்கள் என்றால் அது மற்றவர்களுக்கு மன ரசனையை எப்படி அனுபவம் செய்விக்க முடியும்? கலியுக ஸ்தூலமான பொருட்களின் மேல் உள்ள இரசனை மற்றும் மனதின் ஈடுபாடு அகன்றும் விட்டது ஆனால் இதற்குப் பிறகு எந்த நிலையைக் கடந்து செல்ல வேண்டும் என்று அதைத் தெரிந்திருக்கிறீர்களா? இரும்புச் சங்கிலிகளை, பெரிய பெரிய சங்கிலிகளையோ உடைத்து விட்டீர்கள் ஆனால் மிக மெல்லிய நூல் அங்கங்கே பந்தனத்திலிருந்து விடுபட்டவராக ஆக விடுவதில்லை. அந்த மெல்லிய நூல் எது? இந்த குரூப்பை பொருத்தவரை இதைத் தெரிந்து கொள்வது பெரிய விஷயம் இல்லை. தெரிந்தும் இருக்கிறீர்கள், விரும்பவும் செய்கிறீர்கள் பின்பு மீதம் என்ன இருந்து விடுகிறது? அனைத்தையும் விட மெல்லியதிலும் மெல்லிய நூல் எது அதன் மூலம் ஞானி ஆன பிறகு புது பந்தனம் தொடங்கி விடுகிறது? ஒவ்வொருவரும் கூறினார்கள்) இந்த அனைத்தையும் குறித்து வையுங்கள். இந்தக் குறிப்பு உபயோகமாக இருக்கும். ஆனாலும் இன்னும் சில இருக்கின்றன. இந்த

குரூப்பில் கங்கை யமுனை ஒன்றாகி விட்டது. இது விசேஷம் இல்லையா?. சரஸ்வதியோ ரகசியமாக இருக்கிறது. கங்கை யார் மற்றும் யமுனை யார் என்ற இதற்குக் கூட ஆழமான ரகசியம் இருக்கிறது. முதலிலோ இதைக் கூறுங்கள் அனைத்தையும் விட மெல்லிய நூல் எது? பின்பு இதன் மூலம் கங்கை யார், யமுனை யார் என்று நீங்களாகவே புரிந்து கொள்வீர்கள். அனைத்தையும் விட மெல்லிய மற்றும் மிக அழகான நூல் எது என்றால் ஒரு வார்த்தையில் கூறுவதானால் நான் என்ற வார்த்தைதான். நான் என்ற வார்த்தை தேக அபிமானத்திலிருந்து விலக்கி எடுத்துச் செல்லக் கூடியது. மேலும் நான் என்ற வார்த்தைதான் ஆத்ம அபிமானி நிலையிலிருந்து தேக அபிமானத்தில் கொண்டு வருவதும் கூடத்தான். நான் உடல் ஆவேன் என்ற இதிலிருந்து விலகிச் செல்வதற்கான பயிற்சியையோ செய்து கொண்டே இருக்கிறீர்கள் ஆனால் இதே நான் என்ற வார்த்தை நான் இன்னார் ஆவேன். நான் அனைத்தையும் தெரிந்திருக்கிறேன். நான் எந்த விஷயத்தில் குறைந்தவன், நான் அனைத்தையும் செய்ய முடியும். நான் இவைகளை செய்கிறேன் மற்றும் செய்ய முடியும், நான் என்னவாக இருக்கிறேன் எப்படி இருக்கிறேன் என்ற இதை நான் தெரிந்திருக்கிறேன். நான் எப்படி சகித்துக் கொள்கிறேன். எப்படி பிரச்சனைகளை எதிர்கொள்கிறேன், எப்படி இறந்து நான் நடந்து கொண்டிருக்கிறேன். எப்படி தியாகம் செய்து நடந்து கொண்டிருக்கிறேன், நான் இதைத் தெரிந்திருக்கிறேன் அப்படி நான் என்பதின் பட்டியல் நேராக இருப்பதற்குப் பதிலாக தலைகீழான ரூபத்தில் மெல்லிய, அழகான நூலாக ஆகி விடுகிறது. இதுதான் அனைத்தையும் விட பெரிய மெல்லிய நூல் ஆகும். விலகியிருப்பவராக ஆவதற்கு பதிலாக, தந்தையின் அன்பிற்குரியவராக ஆவதற்குப் பதிலாக ஏதாவது ஒரு ஆத்மாவின் மற்றும் ஏதாவது பொருளின் அன்பானவராக ஆக்கி விடுகிறது. மனதிற்கு பிரியமானவராகவோ, பேருக்கு பிரியமானவராகவோ, புகழுக்குப் பிரியமானவராகவோ அல்லது ஏதாவது விசேஷ ஆத்மாக்களின் பிரியமானவராகவோ ஆக்கி விடுகிறது. அப்படி இந்த நூலை துண்டிப்பதற்காக மற்றும் இந்த நூலின் பந்தனத்திலிருந்து விடுபடுவதற்காக என்ன செய்ய வேண்டியதாக இருக்கும்? மாற்றம் எப்படி ஏற்படும்? பொறுப்பு என்ற கிரீடம் அணிந்த குரூப்பைத்தான் அழைத்திருக்கிறீர்கள் இல்லையா? பொறுப்பின் இலட்சியத்தை தாரணை செய்யக்கூடிய குரூப்பாகவோ இருக்கவே இருக்கிறீர்கள். வேறு என்ன வேண்டும்? நிர்அகங்காரியாக (அகங்காரம் அற்றவர்களாக)

இருக்கிறீர்களா? நிராகார நிலை உள்ளவர்களாக இருக்கிறீர்களா? ஒருவேளை நிராகார நிலையில் நிலைத்திருந்து நிர்அகங்காரி ஆனீர்கள் என்றால் நிர்விகாரியாக (விகாரங்கள் அற்றவராக) தானாகவே ஆகியே விடுவீர்கள், நிர்அகங்காரியாக அவசியம் ஆகிறீர்கள் ஆனால் நிராகாரமாகி நிர்அகங்காரியாக ஆவதில்லை. யுக்திகளோடு தன்னை அற்பகாலத்திற்காக நிர்அகங்காரியாக ஆக்குகிறீர்கள், ஆனால் நிரந்தர நிராகார நிலையில் நிலைத்திருந்து சாகாரத்தில் வந்து இந்த காரியம் செய்து கொண்டிருக்கிறேன் என்ற இந்த நினைவு மற்றும் பயிற்சி இயற்கையானதாக மற்றும் இயல்பானதாக ஆகாததின் காரணத்தினால் நிரந்தர நிர்அகங்காரி நிலையில் நிலைத்திருக்க முடிவதில்லை. எப்படி ஒருவர் ஒரு இடத்திலிருந்து வருகிறார், இன்னொருவர் இன்னொரு இடத்திலிருந்து வருகிறார், அவர்களுக்கு நான் இந்த இடத்திலிருந்து வந்திருக்கிறேன் என்ற நினைவு எப்பொழுதும் இருக்கிறது. அதே போல் நான் நிராகாரத்திலிருந்து சாகாரத்தில் வந்து இந்தக் காரியம் செய்து கொண்டிருக் கிறேன் என்ற நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும். இடையிடையே ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே இந்த நிலையின் பயிற்சியை செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் நிராகாரமாகி சாகாரத்தில் வருவதினால் நிர்அகங்காரி மற்றும் நிர்விகாரியாக அவசியம் ஆகியே விடுவீர்கள். பயிற்சியை குறைந்த காலத்திற்காக செய்யவும் செய்கிறீர்கள் ஆனால் இப்பொழுது இதையே நிரந்தரமாக இந்தப் டிரான்ஸ்பர் செய்யுங்கள். வைராக்கியம் உடையவராகவும் ஆகியிருக்கிறீர்கள், வைராக்கிய உள்உணர்வு இருக்கிறது ஆனால் சதா காலத்திற்காகவும் மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவராகவும் ஆகுங்கள். இல்லையென்றால் ஏதாவது ஒரு எல்லைக்குட்பட்ட பொருள் வைராக்கிய உள்உணர்வை அகற்றுவதற்கு காரணமாகி விடுகிறது. யோக சொரூபமானவராகவும் இருக்கிறீர்கள் ஆனால் யோக சொரூபத்தின் அடையாளத்தை நடைமுறை காரியத்தில் காண்பியுங்கள். உங்களுடைய ஒவ்வொரு காரியம், ஒவ்வொரு வார்த்தை எந்தவொரு ஆத்மாவையும் போகியிலிருந்து (எல்லைக்குட்பட்ட தேகம் மற்றும் தேக சம்மந்தப்பட்ட ரசனையை அனுபவிப்பவர்) யோகியாக ஆக்கி விடட்டும். ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு காரியம் யுக்தியுக்தாக (சூழ்நிலைக் கேற்றபடி சரியாக செய்வது), ராஜ்யுக்த் மற்றும் ரகசியயுக்த் (ரகசியம் தெரிந்து செய்வதாக) இருக்கட்டும். இதைத்தான் நடைமுறை யோக சொரூபம் என்று கூறுவது.

தன்னுடைய எண்ணம் மற்றும் வார்த்தையில், காரியத்தில் ஒருவேளை இந்த மூன்று விஷயங்கள் இல்லை என்றால் அவை வீணானவை ஆகும். ஒருவேளை இராஜயுக்த் இல்லை என்றால் என்னவாகும்? வீணானது. இப்பொழுது நடைமுறையில் யோகியாக இல்லை ஆனால் பயிற்சி செய்யக்கூடிய யோகியாக இருக்கிறேன் என்று புரிந்து கொள்ள வேண்டும் மேலும் இப்பொழுது இந்த விஷயத்தின் மேல் கவனத்தின் தேவை இருக்கிறது. பின்பு எந்தவொரு பிரச்சனை அல்லது தடை மற்றும் சூழ்நிலை உங்கள் மேல் முற்றுகை இட முடியாது. நடைமுறையில் யோக சொரூப், ஞானம் நிறைந்த, அன்பு நிறைந்த, தெய்வீக, ஆன்மீக மூர்த்தி மூலமாக உலகின் எதிரே ஒரு நிரூபணமாக ஆகி விடுவீர்கள். யார் உலகின் எதிரில் ஞானம் மற்றும் யோகத்தின் நிரூபணம் ஆகிறாரோ அவர்தான் மாயாவின் தாக்குதலிலிருந்து பாதிக்கப்படாதவராக ஆகுகிறார். எனவே மாயாவின் ப்ரூஃப் ஆவதற்காக தன்னை நான் ஞானம் மற்றும் யோகாவின் ப்ரூஃப் (நிரூபணம் ஆவேன் என்று அப்படியே புரிந்து கொள்ள வேண்டும். இந்த எடுத்துக்காட்டு ரூடம் ஆக வேண்டும் மற்றும் ஆத்மாக்களின் ஆசைகளை அழிக்கக்கூடியவர்களாக ஆக வேண்டும். எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணம் மற்றும் ஒவ்வொரு அடியிலும் தந்தையின் ஆணைப்படி நடக்கக்கூடியவர்கள் அன்னிய ஆத்மாக்களின் ஆசைகளை முடிவு செய்ய முடியும். தனக்குள்ளும் கூட முயற்சி செய்வதின், வெற்றியின் ஆசைகளும் தங்கியிருந்து விடுகின்றன. இதற்கும் காரணம் என்னவென்றால் அங்கங்கே ஏதோ ஒரு கட்டளை பாலனை (நடக்கவில்லை) செய்யப்படவில்லை. எனவே எந்த நேரமும் தன்னுடைய முயற்சியின் மேல் மற்றும் சேவையின் வெற்றியின் மேல் மற்றும் அனைவரின் அன்பு மேலும் சகயோகத்தின் பிராப்தியின் மேல் கொஞ்சமாவது குறை மற்றும் குழப்பம் வருகிறது என்றால் எந்த கட்டளையின் குறை இருக்கிறது அதனுடைய பிரத்யட்க்ஷ பலனை ஒரு நொடிக்காக கூட அனுபவம் செய்து கொண்டிருக்கிறோம் என்று சோதனை செய்யுங்கள். கட்டளை முக்கியமான விஷயங்களுக்கு மட்டுமல்ல, கட்டளை ஒவ்வொரு நேரத்தின் ஒவ்வொரு காரியத்திற்காகவும் கிடைத்திருக்கிறது. அதிகாலை அமிர்தவேளையிலிருந்து இரவு வரை தன்னுடைய தினசரி நடவடிக்கையில் என்னென்ன கட்டளை கிடைத்திருக்கிறதோ அவற்றை சோதனை செய்யுங்கள். உள்உணர்வை, பார்வையை, எண்ணத்தை, நினைவை, சேவையை, சம்மந்தத்தை அப்படி அனைத்தையும் சோதனை

செய்யுங்கள். எப்படி ஏதாவது ஒரு இயந்திரம் ஓடிக் கொண்டிருக்கும் போதே வேகம் குறைந்து விடுகிறது என்றால் அனைத்து பாகங்களையும் சோதனை செய்கிறார்கள். நாலா புறங்களிலிருந்தும் சோதனை செய்கிறார்கள். அப்படி நாலா புறத்தில் சோதனை செய்வதினால் வேகத்தை அதிகரிக்க முடியும், ஏனென்றால் இப்பொழுது நிற்பதற்கான விஷயம் முடிந்து விட்டது. இப்பொழுது வேகத்தை அதிகரிப்பதற்கான விஷயம் ஆகும். எந்தெந்த நிலையைப் பற்றி கூறியிருக்கி றோமோ அதில் நிலைத்திருக்கவும் செய்கிறீர்கள். மேலும் முயற்சி செய்வதில் விசேஷ ஆத்மாக்களாகவும் இருக்கிறீர்கள்.

நிலையை சோதனை செய்வதில் சரியாக இருக்கிறீர்கள் ஆனால் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? சதவிகிதத்தை அதிகரியுங்கள். சதவிகிதம் குறைவாக இருக்கிறது. சோதனைத் தாள் என்ன கொடுத்திருந்தோமோ அதனுடைய முடிவு இதுவாகும். ஞானத்தின் சக்தி மூலமாக நிலையை உருவாக்கி விடுகிறீர்கள் ஆனால் சதவிகிதத்தில் தானும் திருப்தியாக இல்லை. இப்பொழுது இதை சம்பூர்ணமாக்க வேண்டும். ஞானத்தின் சக்தியின் கூடவே நுண்ணியமானவை என்று எதை கூறியிருக்கின்றோமோ அதன் காரணமாக போலியான. நஷ்டம் தரக்கூடிய சக்தியும் கலந்து விடுகிறது. போலியான சக்தி, நஷ்டம் கொடுக்கக்கூடிய சக்தி வராமல் இருப்பதற்காக எந்த விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்வீர்கள்? ஒருவேளை ஒவ்வொரு ஆத்மாவிற்காக இரக்க பாவனை எப்பொழுதுமே இருக்கிறது என்றால் யாரையும் அவமரியாதை செய்ய மாட்டீர்கள். மேலும் யார் மூலமாகவோ அவமதிக்கப்பட்டதாகவும் நினைக்க மாட்டீர்கள். எங்கு இரக்கம் இருக்குமோ அங்கு கட்டாயப்படுத்துவது ஒருபொழுதும் இருக்க முடியாது. எங்கு இரக்க மனம் உடையவராக ஆக வேண்டுமோ அங்கு இரக்க மனமுடையவராக ஆவதற்கு பதிலாக கட்டளையிடுபவராக ஆகி விடுகிறார் ஆனால் இங்கு உலக மகாராஜனாக நீங்கள் இருக்கவில்லை தன்னை மாநிலத்தின் அதிகாரி என்று நினைக்கிறீர்கள் இல்லையா. இவர்கள் அனைவரும் மாநில மந்திரிகள் வந்திருக்கிறார்கள். அப்படி மாநிலத்தின் அதிபதி என்றுநினைப்பதினால் நிராகாரி மற்றும் நிர்அகங்காரி நிலையை மறந்து விடுகிறீர்கள். மாநிலத்தின் சேவாதாரியாக இருக்கிறீர்களே அன்றி ஏதாவது ஒரு ஆத்மாவிடமிருந்து சேவையை எடுத்துக் கொள்பவராக இல்லை ஒருவேளை யாருக்காவது

நான் இவ்வளவு செய்திருக்கிறேன் எனக்கு இதனால் கொஞ்சம் பெயர், புகழ் மற்றும் மகிமை கிடைக்க வேண்டும் என்று யாருக்காவது எண்ணம் வந்தாலும் இதுவும் கூட எடுப்பதாகி விட்டது, எடுக்க வேண்டும் என்ற பாவனையாக ஆனது. வள்ளலின் குழந்தைகள் ஒருவேளை இதையும் எடுப்பதற்கான எண்ணத்தை செய்தீர்கள் என்றால் நீங்கள் வள்ளலாகவில்லை. இதுவும் எடுப்பதாகும். கொடுப்பவர்களின் எதிரில் அழகாக இல்லை. இதைத்தான் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர் என்று கூறுவது. சேவாதாரிக்கு இந்த எண்ணமும் எழக்கூடாது. அப்பொழுதுதான் மாநிலத்திலிருந்து தன்னுடைய எல்லைக்கப்பாற்பட்ட உலக மகாராஜன் நிலையை அடைய முடியும். நல்லது. யார் எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாதவராக இருப்பாரோ அவர்தான் உலகத்திற்கு நன்மை செய்பவராக ஆவார். இரக்க மனமுடையவராக இருப்பார். செய்யும் காரியத்தின் பிராப்தி தானாக ஏற்படுவது வேறு விஷயம் ஆனால் விரும்பி பிராப்தி செய்வது இது அற்பகாலத்தின் பிராப்தியின் பலமாக ஆகிறது ஆனால் அனேக ஜென்மங்களுக்காக கூட அனேக பிராப்திகளிலிருந்து வஞ்சிக்கப்பட்டவராக ஆக்கி விடுகிறது. பிராப்தி பிராப்தியின்மைக்கான சாதனம் ஆகி விடுகிறது. பலனின் பிராப்தி ஏற்படுவது வேறு விஷயம், இயற்கை தாசியாவது வேறு விஷயம் ஆகும். அப்படி அற்பகாலத்தின் பிராப்தியின் ரூபத்தை தெரிந்து நடந்து கொள்ள வேண்டும். சிலர் சக்தியில்லை என்று நினைக்கிறார்கள், ஏன்? வீணானவை அதிகமாக இருக்கிறது. வீணானவை இருக்கும் காரணத்தினால் நிலை முன்னேற்றம் அடைவதில்லை. நல்லது.

**வரதானம்: ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இந்த விதி மூலமாக மாயா மற்றும் இயற்கையை தாசியாக்கக் கூடிய எப்பொழுதும் அன்பானவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் எப்பொழுதும் அன்பானவர்களாக இருக்கிறார்கள் அவர்கள் அன்பிலேயே ஐக்கியமாக இருக்கும் காரணத்தினால் கடின உழைப்பு மற்றும் கஷ்டத்திலிருந்து எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். அவர்களின் எதிரில் இயற்கை மற்றும் மாயா இரண்டும் இப்பொழுதிலிருந்தே தாசியாகி விடுகிறது. அதாவது எப்பொழுதும் அன்பான ஆத்மா அதிபதியாகி விடுகிறது என்றால் இயற்கை மற்றும் மாயாவிற்கு அன்பானவரின் நேரம் மற்றும் எண்ணத்தை தன் பக்கம் இழுப்பதற்கு ஒருபொழுதும் தைரியம் இருப்பதில்லை. அவருடைய

ஒவ்வொரு நேரம், ஒவ்வொரு எண்ணமும் தந்தையின் நினைவு மற்றும் சேவைக்காக மட்டுமே இருக்கிறது. அன்பான ஆத்மாக்களின் நிலையின் மகிமையாக ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை, தந்தைதான் உலகம் என்று பாடப்படுகிறது. அவர்கள் எண்ணத்தினால் கூட அடிமை ஆக முடியாது.

**சுலோகன்: ஞானம் நிறைந்தவராக ஆனீர்கள் என்றால் பிரச்சனைகளும் கூட பொழுதுபோக்கிற்கான காட்சிகளாக அனுபவம் ஆகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 20.09.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக அன்பானவர் ஆகுங்கள்!

வியக்த நிலையிலிருந்து அவ்யத்த நிலை ஆவதில் எவ்வளவு நேரம் எடுக்கிறது? நீங்கள் யாரையாவது அஞ்ஞானியிலிருந்து ஞானியாக எவ்வளவு காலத்தில் ஆக்க முடியும்? இப்பொழுதுள்ள உங்களின் நிலையின்படி எவ்வளவு காலத்தில் ஆக்க முடியும்? தன்னைப் பொறுத்தவரை என்ன நினைக்கிறீர்கள், எவ்வளவு காலத்தில் ஆக்க முடியும்? ஆகுபவரின் விஷயம் வேறு, அவர்களை உங்களுடைய சக்தியின் அனுசாரம் எவ்வளவு காலத்தில் ஆக்க முடியும்? இப்பொழுது உங்களுடைய வேகம் எவ்வளவு என்று தெரியவும் செய்கிறது இல்லையா, நேரத்திற்குத் தகுந்தாற்போல் இப்பொழுது அஞ்ஞானியை ஞனியாக ஆக்குவதில் கொஞ்சம் காலம் எடுக்கிறது. அதுவும் கூட ஏனென்றால் அப்படி ஆக்குபவர்கள் தன்னில் அவ்யக்த ரூபத்தை கொண்டு வருவதில் இது வரை அதிக நேரம் எடுத்துக் கொள்கிறார்கள், எப்படி எப்படி உருவாக்குபவர்கள் சுயம் அவர்களே ஒரு நொடியில் வியத்தத்திலிருந்து அவ்யக்த ரூபத்தில் நிலைத்திருப்பதற்கான பயிற்சி உள்ளவர்களாக ஆகிக் கொண்டே இருப்பார்களோ அப்படியே ஆக்கப்படுபவர்கள்கூட அவ்வளவு விரைவாக ஆக முடியும். தேவதா தர்மத்தை சேராத ஆத்மாவாக இருந்தாலும் ஒரு நொடியில் யாருக்காவது முக்தி, யாருக்காவது ஜீவன்முக்தியின் வரதானம் கொடுப்பதற்கு பொறுப்பானவர் ஆகி விடுவார். அனைத்து ஆத்மாக்களுக்கும் முக்தியின் வாதானம் பிராமணர்கள் உங்கள் மூலமாகத்தான் கிடைக்க வேண்டும். எப்படி இயந்திரங்களில் ஏதாவது ஒரு பொருள் போடப்படுகிறது என்றால் எந்த பொருள் எந்த பக்கம் போக வேண்டியதாக இருக்கிறதோ அது அந்த ரூபத்தில் மேலும் அதே பக்கம் தானாக ஒரு நொடியில் அப்படி ஆகிக் கொண்டே இருக்கும் மற்றும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும் ஏனென்றால் இயந்திரத்தின் வேகம் அதிகமாக இருக்கும் காரணத்தினால் ஒரு நொடியில் இங்கே இருக்கக்கூடிய பொருள் அங்கே உள்ளதாக ஆகி விடுகிறது. எதற்கு எந்த ரூபம் எடுக்க வேண்டியது

இருக்குமோ அந்த ரூபத்தை எடுத்துக் கொண்டே இருக்கும். இந்த ஆன்மீக இயந்திரமும் குறைவா என்ன? இந்த இயந்திரம் மூலமாக நீங்கள் ஒரு நொடியில் முக்தியில் செல்பவர்களுக்கு முக்தி மற்றும் ஜீவன்முக்தியில் செல்பவர்களுக்கு ஜீவன்முக்தியின் வரதானத்தைக் கொடுக்க முடியாதா? நீங்களோ மகாதானி, மகாஞானி மற்றும் மகாயோகியாக ஏற்கனவே இருக்கவே செய்கிறீர்கள் மேலும் ஒரு நொடியில் உங்களுடைய பிறப்புரிமை அதிகாரத்தை அடைய முடியும் என்று எழுதவும் செய்கிறீர்கள், என்ன அந்த மாதிரியே எழுதுகிறீர்களா! மற்றும் கூறுகிறீர்களா? யதார்த்த விஷயமாக இருக்கிறது அப்பொழுதுதான் எழுதவும் செய்கிறீர்கள் மற்றும் கூறவும் செய்கிறீர்கள் இல்லையா? அப்படி ஒரு நொடியில் ஆத்மாவிற்கு முக்தி, ஜீவன்முக்தியின் மார்க்கத்தை காண்பிக்க முடியுமா மற்றும் வரதானம் கொடுக்க முடியும் இல்லையா? வரதானத்தை பிராப்தி செய்விப்பது. தன்னை வரதானம் மூலமாக நிரம்பியவராக ஆக்குவது என்பது வேறு விஷயம் ஆகும் ஆனால் நீங்களோ வரதானம் கொடுக்க முடியும் இல்லையா. ஒரு நொடியில் வரதானம் கொடுக்கும் மூர்த்தி ஆவீர்கள், தன்னை ஒரு நொடியில் வியக்கத்திலிருந்து அவ்யக்தமாக ஆக்க முடியுமா? எவ்வளவு நேரத்திற்காக அற்ப காலத்திற்காக ஆக்க முடியும், இதே காரனத்தினால்தான் ஆகுபவர்களுக்குக் கூட அற்ப காலத்திற்கான போதை, அற்ப காலத்தின் குஷி இருக்கிறது. அவர்கள் அற்ப காலத்திற்காக பரிவர்த்தனையில் (மாற்றத்தில்) வருகிறார்கள். எப்படி உருவாக்குபவர் மற்றும் மாஸ்டர் படைப்பவரோ, அப்படியே படைப்பும் கூட அதே போல் இது வரை உருவாகி வந்திருக்கிறது. எப்படி, நீங்கள் தந்தையோடு அற்ப காலத்திற்காக ஆன்மீக உரையாடல் செய்கிறீர்கள். சந்திப்பின் மூழ்கிய நிலையின் குணங்களின், சொரூபத்தின் அனுபவம் செய்கிறீர்கள். அதே போல் படைப்பும் கூட அற்ப காலத்திற்காக உங்களுடைய மகிமையைச் செய்கிறது, அற்ப காலத்திற்காக சத்திப்பது மற்றும் சம்மந்தம் ஏற்படுத்துவதை வைத்துக் கொள்கிறார்கள். அற்ப காலத்திற்காக அவர்களும் அனுபவம் செய்கிறார்கள். குணமகிமை செய்கிறார்கள் மற்றும் எப்பொழுதாவது பெற்ற இந்த அனுபவத்தை வர்ணனை செய்கிறார்கள் என்றால் இதற்கான காரணம் என்ன? மீட்டிங்கில் அனேக காரணங்களை அகற்றுவதற்கான புரோகிராம் (நிகழ்ச்சிகளை) உருவாக்கியிருக்கிறீர்களா? ஒருவேளை இந்த காரணத்திற்கு நிவாரணம் செய்து விட்டீர்கள் என்றால் மற்ற அனைத்து

காரணங்களும் இருக்கவே இல்லை என்பது போல் அகன்று விடும். அப்படி மூல காரணம் இதுதான். எப்பொழுதும் தந்தையின் அன்பு மற்றும் சகயோகத்தில் இருப்பதினால் அனைத்து ஆத்மாக்களும் உங்களுடைய அன்பில் சகயோகியாக தானாகவே ஆகி விடுவார்கள். இன்று ஆத்மாக்களுக்கு அற்ப காலத்து சுகம், சாந்திக்கான சாதனம் இருக்கிறது ஆனால் உண்மையான அன்பு இல்லை என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அன்பின் பசியில் உள்ள ஆத்மாக்கள் இவர்கள், உணவும், பணமும் உடலின் திருப்திக்கான சாதனம் ஆகும் ஆனால் ஆத்மாவின் திருப்தி ஆன்மீக அன்பினால் ஏற்பட முடியும். அதுவும் அழியாததாக இருக்கட்டும். எனவே அன்பானவர்கள்தான் அன்பின் தானம் கொடுக்க முடியும். ஒருவேளை தானே எப்பொழுதும் அன்பானவராக இல்லை என்றால் மற்ற ஆத்மாக்களுக்கும் சதா காலத்திற்காக அன்பு கொடுக்க முடியாது. எனவே எப்பொழுதும் அன்பானவர் ஆவதினால், அன்பானவர் அன்பில் வந்து, அன்பானவருக்காக அனைத்தையும் தியாகம் மற்றும் அர்ப்பணம் செய்தே விடுவார்கள். அன்பானவர்களுக்கு, எதையும் சமர்ப்பணம் செய்வதற்காக யோசிப்பதும் கடினமாவதும் இருப்பதில்லை. அப்படி என்னென்ன இவ்வளவு அதிகமான விஷயங்களை கேட்கிறீர்கள், அதிக மரியாதைகள் மற்றும் நியமங்களைக் கேட்டு கேட்டு இவைகள் அனைத்தையும் செய்ய வேண்டியதாக இருக்கும் என்று இதையும் யோசிக்க ஆரம்பித்து விடுகிறீர்கள் ஆனால் இவை அனைத்தையும் செய்வதற்காக அனைத்தையும் விட சுலபமான வழி மற்றும் அனைத்து பலஹீனங்களிலிருந்து விடுபடுவதற்கான வழி இதுதான் -எப்பொழுதும் அன்பானவர் ஆகுக! யாருடைய அன்பானவராக இருக்கிறீர்களோ அந்த அன்புடையவரின் நிரந்தர தொடர்பினால் ஆன்மீகத்தின் வண்ணம் சுலபமாகவே பூசப்பட்டு விடுகிறது.

ஒருவேளை ஒவ்வொரு மரியாதையையும் வாழ்க்கையில் கொண்டு வர முயற்சி செய்தீர்கள் என்றால் சில நேரம் கடினமாகவும் சில நேரம் சுலபமாகவும் அனுபவம் ஆகும். மேலும் இதே பயிற்சியில் மற்றும் இதே பலஹீனத்தை அகற்றுவதிலேயே நேரம் கடந்து விடும். எனவே இப்பொழுது ஒரு நொடியில் மரியாதா புருஷோத்தமன் ஆகுங்கள். எப்படி ஆவீர்கள்? எப்பொழுதும் அன்பானவர்களாக மட்டும் ஆவதினால் ஆவீர்கள். தந்தையின் அன்பானவராக எப்பொழுதும் ஆவதினால், தந்தை

மூலமாக எப்பொழுதும் சகயோகம் பிராப்தி ஆவதினால் கடினமான விஷயம் சுலபமாகி விடுகிறது. யார் எப்பொழுதும் அன்பானவராக இருப்பாரோ அவருடைய நினைவிலும் எப்பொழுதும் அன்புதான் இருக்கிறது, அவருடைய முகம் மூலமாக எப்பொழுதும் அன்பானவரின் உருவம் வெளிப்படையாகத் தென்படும். எப்படி லௌகீக முறையிலும் கூட ஒருவேளை ஏதாவது ஒரு ஆத்மா இன்னொரு ஆத்மாவின் அன்பில் இருக்கிறது என்றால் பார்க்கக்கூடியவர்கள் இந்த ஆத்மா யாருடைய அன்பிலோ மூழ்கிப் போயிருக்கிறது என்று உடனே அனுபவம் செய்வார்கள். அப்படியானால் ஆன்மீக அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களின் முகம் அன்பான ரூபத்தை பிரத்யக்ஷம் செய்யாதா என்ன? அவருடைய உள்ளத்தின் ஈடுபாடு எப்பொழுதும் அந்த அன்பிற்குரியவருடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு பக்கம் மட்டும் ஈடுபாடு இருப்பதினால் அனேக பக்கங்களின் ஈடுபாடு சுலபமாக முடிவடைந்து விடுகிறது. மேலும் என்னவென்றால் தன் மேல் தனக்குள்ள ஈர்ப்பு அதாவது தேக அபிமானம், அவர் தன்னுடைய நினைவிலேயும் எப்பொழுதும் அன்பிற்குரியவராகி மூழ்கியிருப்பவராக இருக்கிறார். எனவே சுலபமான வழி மற்றும் விதி எப்பொழுது இருக்கிறது என்றால் சகஜ வழி மற்றும் விதி மூலமாக தன்னுடைய நிலையின் முன்னேற்றத்தில் வேகத்தைக் கொண்டு வருகின்றீர்களா? எப்பொழுதும் அன்பானவராக, ஒரு சர்வ சக்திவானின் அன்பானவராக இருக்கும் காரணத்தினால் அனைத்து ஆத்மாக்களுக்கும் அன்பானவராக தானாகவே ஆகி விடுகிறார். இந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்வதினால் ராஜ்யக்த் (இரகசியம் அறிந்து நடந்து கொள்வது), யோகயுக்த் (யோக சொரூபம்) மற்றும் தெய்வீக குணங்களினால் யுக்தியுக்த் (எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி சரியாக நடந்து கொள்வது) ஆவதின் காரணத்தினால் ராஜ்யுக்த் ஆத்மா அனைத்து ஆத்மாக்களையும் சுலபமாக அவர்களாகவே திருப்தி அடைபவராக ஆக்க முடியும். எப்பொழுது நீங்கள் ராஜ்யுக்தாக இருப்பதில்லையோ அப்பொழுது யாரையும் ராஜி (திருப்தி) செய்ய முடியாது. ஒருவேளை அவருடைய முகம் மற்றும் சாஜ் (இனிமையான வார்த்தை) மூலமாக அவருடைய மனதின் ராஜை (ரகசியத்தை) தெரிந்து கொண்டீர்கள் என்றால் தலபமாகவே அவரை ராஜி (திருப்தி) செய்ய முடியும் ஆனால் சில நேரம் முகத்தைப் பார்த்து இனிமையான வார்த்தைகளைக் கேட்டு மனதின் ராஜை தெரிந்த காரணத்தினால் மற்றவர்கள் யாரையாவது

நாராஜ் (கோபமடைய செய்கிறீர்கள் மற்றும் தானும் நாராஜ் அடைகிறீர்கள். (கோபம்) எப்பொழுதும் அன்பானவரின் ராஜை தெரிந்து ராஜயுக்த் ஆகுங்கள். நல்லது. எதிர்காலத்தில் உலகத்தின் அதிபதி ஆக வேண்டும் என்கிற இதுவோ தெரியும் இல்லையா? ஆனால் இப்பொழுது என்னவாக இருக்கிறீர்கள்? இப்பொழுது உலகத்தின் அதிபதியாக இருக்கிறீர்களா? அல்லது சேவாதாரியாக இருக்கிறீகளா? நல்லது.

**வரதானம்: மனதின் சுதந்திரம் மூலமாக அனைத்து ஆத்மாக்களுக்கும் அமைதியின் தானம் கொடுக்கக் கூடிய மனம் மூலமாக மகாதானி ஆகுங்கள்!**

பந்தனத்தில் இருக்கும் பெண்கள் உடலால் சுதந்திரம் இல்லாதவர்களாக இருக்கலாம் ஆனால் ஒருவேளை மனதால் சுதந்திரமாக இருக்கிறார்கள் என்றால் தன்னுடைய உள்உணர்வு மூலமாக சுத்த எண்ணம் மூலமாக உலகின் வாயுமண்டலத்தை மாற்றக் கூடிய சேவை செய்ய முடியும். தற்சமயம் உலகத்திற்கு மனதின் அமைதி தேவையாக இருக்கிறது, அப்படி மனதால் சுதந்திரமாக இருக்கும் ஆத்மா மனம் மூலமாக அமைதியின் வைப்ரேஷனை (எண்ண அதிர்வலைகளை) பரப்ப முடியும். அமைதியின் கடலான தந்தையின் நினைவில் இருப்பதினால் இயல்பாகவே அமைதியின் கிரணங்கள் பரவுகிறது. அப்படி அமைதியின் தானம் கொடுப்பவர்தான் மனதால் மகாதானி ஆகிறார்.

**சுலோகன்: அன்பு ரூபத்தின் அனுபவத்தையோ கூறுகிறீர்கள், இப்பொழுது சக்தி ரூபத்தின் அனுபவத்தைக் கூறுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 27.09.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பின் சக்தி மூலமாக சத்யதாவின் பிரத்யக்ஷதா!

இந்த நேரம் அனைவரின் நினைவு மற்றும் கண்களில் என்ன இருக்கிறது? இருக்கிறதா அல்லது இரண்டு இருக்கிறதா அல்லது ஒன்றில் இரண்டு இருக்கிறதா? அது என்ன? ஒரு விஷயம் (ஒரே ஒரு தந்தை) இன்று அனைவரும் ஒருமித்து மற்றும் ஒரே விஷயத்தின் மேல்தான் இருக்கிறார்கள். நல்லது, இந்த நேரமோ ஒரு விஷயம் இருக்கிறது ஆனால் தற்சமயம் நினைவு மற்றும் கண்களில் எப்பொழுதும் என்ன இருக்கிறது? வீடு திரும்ப வேண்டும் என்ற இந்த நினைவு மட்டும் இருக்கிறதா? சேவை செய்யாமல் எப்படி செல்வீர்கள்? ஆஸ்தி கூட தனக்காகத்தான் நினைவில் இருந்தது, ஆனால் மற்றவர்களுக்கும் ஆஸ்தியைப் பெற வைக்க வேண்டும், இந்த நினைவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு அடியிலும் நினைவிலும் தந்தையின் நினைவு மற்றும் கூடவே சேவை மற்றும் நினைவு மட்டும் இருக்கிறதா அல்லது வேறு ஏதாவது இருக்க வேண்டுமா? போகும்பொழுதும் வரும்பொழுதும் காரியம் செய்து கொண்டே ஒவ்வொரு நேரமும் நான் ஈஸ்வரிய சேவைக்காக பொறுப்பில்/கருவியாக இருக்கிறேன். ஸ்தூல காரியம் செய்து கொண்டும் ஈஸ்வரிய சேவைக்கான பொறுப்பில் / கருவியாக இருக்கிறேன் என்ற இந்த நினைவு ஒருவேளை இருக்கும் என்றால் எப்பொழுதும் தன்னை பொறுப்பில் இருப்பவர் என்று உணருவதால் சேவைக்கு நஷ்டம் ஏற்படுத்தும் எந்த காரியமும் நடக்காது. எப்பொழுது இந்த நினைவு மறந்து விடுகிறதோ அப்பொழுது சாதாரண காரியத்தில் மற்றும் சாதாரண முறையில் நேரம் கழிந்து கொண்டே இருக்கிறது. எப்படி பாருங்கள் ஏதாவது விசேஷமான சேவைக்காக பொறுப்பாளர் ஆகுகிறீர்கள் என்றால் எவ்வளவு நேரம் விசேஷ சேவையின் ரூபம் எதிரில் இருக்கிறதோ அவ்வளவு நேரம் ஸ்திதி (மனநிலை) நன்றாக இருக்கிறது இல்லையா? ஏனென்றால் நான் இந்த நேரம் அனைவரின் எதிரில் சேவைக்காக பொறுப்பில் இருக்கிறேன் என்று நினைக்கிறீர்கள்.

அதே போலவே ஸ்தூல காரியம் செய்து கொண்டும் இந்த நேரம் மனம் மூலமாக உலகத்தை மாற்றம் செய்யும் சேவையில் இருக்கிறேன் என்ற நினைவு இருக்கிறது என்றால் ஸ்திதி என்னவாக இருக்கும்? கவனம் இருக்கிறது மற்றும் சோதனையும் இருக்கிறது. இதே மாதிரி ஒருவேளை தன்னை எப்பொழுதும் உலக மேடையில் உலக நன்மைக்கான சேவைக்காக இருக்கிறேன் என்று நினைப்பீர்கள் என்றால், பின்பு சாதாரண ஸ்திதி, சாதாரண நடத்தை மற்றும் அலட்சியம் இருக்குமா? மேலும் எவ்வளவு நேரம் வீணாக செல்வதிலிருந்து பயனுள்ளதாக ஆகி விடும், சேமிப்பு கணக்கு எவ்வளவு அதிகரித்து விடும்? அப்படி யார் மேலேயாவது மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது என்றால் அவர் தன்னுடைய ஒவ்வொரு நொடியையும் மதிப்புள்ளதாக நினைப்பார் இல்லையா? ஒருவேளை ஓரிரண்டு நிமிடங்கள் கூட வீணாக சென்று விட்டது என்றால் அவரைப் பொறுத்தவரை அந்த இரண்டு நிமிடங்கள் கூட மிகப் பெரிய நேரமாகத் தென்படும். அனைவரையும் விட மிகப் பெரிய பொறுப்பு உங்கள் மேல் இருக்கிறது. வேறு யாருக்காவது இந்த நேரம் உங்களுக்கு இருக்கும் மாதிரி இவ்வளவு பெரிய பொறுப்பு இருக்கிறதா? முழு உலகத்திற்கும் நன்மை செய்ய வேண்டும். ஜடமாக இருப்பவை மற்றும் சைத்தன்யமானவை இரண்டையும் மாற்றம் செய்ய வேண்டும். இவ்வளவு பெரிய பொறுப்பாக இருக்கிறது என்றால், ஒவ்வொரு நேரமும் தந்தை இந்த நேரம் எனக்கு என்ன வேலை கொடுத்திருக்கிறார் என்ற இந்த நினைவு இருக்கட்டும். ஒரு கண்ணில் தந்தையின் அன்பு, இன்னொரு கண்ணில் தந்தை மூலமாக கிடைத்த காரியம் அதாவது சேவை. அப்படி அன்பு மற்றும் சேவை இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். அன்பானவர்கள் கூட பிரியமானவர்கள்தான், ஆனால் சேவைக்குத் தகுதியான ஞான சொரூப் ஆத்மாக்கள் மிகப் பிரியமானவர்கள். அப்படி இரண்டுமே சேர்ந்தே தேவையாக இருக்கிறது. எப்பொழுது இரண்டுமே சேர்ந்தே நினைவிருக்கிறது என்றால் அப்பொழுதுதான் சேவை செய்யும் நேரத்தில் அன்பு மூர்த்தியாகவும் இருப்பார் ஆனால் அன்பு மட்டும் இருந்தால் போதாது, அன்பின் கூடவே வேறு என்ன வேண்டும்? (சக்தி ரூபம்). சக்தி ரூபமாகவோ இருக்கத்தான் செய்வீர்கள் ஆனால் சக்தி ரூபத்தின் வெளிப்படை ரூபமாக என்ன தென்படும்? சேவையின் ரிசல்ட்டில் வரிசைஎண் எந்த ஆதாரத்தில் கிடைக்கிறது. ஏனென்றால் வார்த்தைகளில் கூர்மை நிரப்பப்பட்டிருக்கிறது. அதாவது அன்பின் கூடவே வார்த்தைகளில் அந்த

மாதிரி கூர்மை இருக்க வேண்டும் அவர்களுடைய இதயம் கிழிந்து விட வேண்டும். இது வரைக்கும் என்ன ரிசல்ட்டாக இருக்கிறது. ஒன்றோ மிகவும் கூர்மையைக் காண்பிக்கிறீர்கள் அல்லது மிகுந்த அன்பை காண்பிக்கிறீர்கள் அல்லது மிகவும் லேசான ரூபத்தில் பேசுவீர்கள் அல்லது மிகவும் ஆவேசத்தில் பேசுவீர்கள் ஆனால் என்ன இருக்க வேண்டும்? ஒவ்வொரு வார்த்தையிலும் அன்பின் அலைகள் இருக்க வேண்டும். பின்பு எப்பேற்ப்பட்ட கசப்பான வார்த்தைகள் கூறினீர்கள் என்றால் இதயத்தை அவசியம் பாதிக்கும் ஆனால் அந்த வார்த்தை கசப்பாக அனுபவம் ஆகாது, யதார்த்தமாக அனுபவம் ஆகும். ஒருவேளை இப்பொழுது மிகவும் கடுமையான வார்த்தைகள் சொல்கிறீர்கள் என்றால் ரூபத்திலும் கடுமையின் உணர்வு தென்படும். இதனால் சிலர் உங்களில் அபிமானம் இருக்கிறது மற்றும் அவமானம் செய்கிறீர்கள் என்று இதைத்தான் கூறுகிறார்கள் ஆனால் ஒரு பக்கம் தாக்கிக் கொண்டே செல்லுங்கள், இன்னொரு பக்கம் கூடவே அன்பையும் கொடுத்துக் கொண்டே சென்றீர்கள் என்றால் உங்களுடைய அன்பின் ரூபத்தினால் தன்னுடைய அவமதிப்பை உணர மாட்டார்கள் ஆனால் நம் ஆத்மாக்களின் மேல் இரக்கம் இருக்கிறது என்று அனுபவம் செய்வார்கள். அவமதிப்பின் பாவனை மாறி இரக்கத்தை உணருவார்கள். அப்படியானால் இரண்டும் சேர்ந்தே தேவையாக இருக்கிறது இல்லையா. வெல்வெட்டின் செருப்பு போட வேண்டும் என்று கூறுகிறார்கள் இல்லையா?. அப்படி சேவையின் கூடவே மிகுந்த இரக்கமும் இருக்கட்டும் பின்பு கூடவே யதார்த்தமற்ற விஷயங்கள் என்ன இருக்கிறதோ அவற்றை யதார்த்தம் ஆக்குவதின் குஷியும் இருக்க வேண்டும். விஷயங்கள் அனைத்தையும் தெளிவாகச் சொல்ல வேண்டும் ஆனால் அன்பையும் கலந்து சொல்ல வேண்டும். அன்பு மூர்த்தியாக ஆகும் காரணத்தினால் அவர்களுக்கு ஜகத்மாதாவின் ரூபம் அனுபவம் ஆகும். எப்படி தாய் குழந்தைகளுக்கு எப்பேற்பட்ட வார்த்தைகளினால் அறிவுரை கூறினாலும் தாயின் அன்பின் காரணத்தினால் அந்த வார்த்தைகள் கடுமையானதாக மற்றும் கசப்பானதாக உணரப்படுவதில்லை. தாய் நமது அன்பிற்குரியவர், நன்மை செய்பவர் என்று நினைக்கிறார்கள். அதே போல் நீங்கள் எவ்வளவு தெளிவான வார்த்தைகளில் கூறினாலும் அவர்கள் அதை அப்படி உணர மாட்டார்கள். அப்படி இரண்டு சொரூபத்தின் சமநிலையில் சேவை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் சேவையின் வெற்றியை அருகில் பார்க்க முடியும். எங்கு சென்றாலும் பயமின்றி செல்ல வேண்டும்.

சத்தியத்தின் சக்தி சொரூபமாகி சர்வ சக்திவானின் அரசாங்கத்தின் சி.ஐ.டி அதிகாரியாகி ஆபிசராகி அதே போதையில் செல்லுங்கள். இந்த போதையிலேயே பேசுங்கள், இந்த போதையோடு பாருங்கள். நாம் இணைந்திருக்கிறோம் இதே நினைவிலேயே யதார்த்தமற்றதை யதார்த்தத்தில் கொண்டு வாருங்கள். சத்தியத்தை பிரஸித்திசெய்ய வேண்டுமேயன்றி மறைக்க கூடாது ஆனால் இரண்டு ரூபங்களின் சமநிலை வேண்டும். யாரையாவது பார்க்கிறீர்கள் மற்றும் ஏதாவது கேட்கிறீர்கள் என்றால் இரக்க பாவனையோடு பார்க்கிறீர்கள் மற்றும் கேட்கிறீர்களா அல்லது கற்றுக் கொள்ள வேண்டும் மற்றும் அதே போல் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்தோடு கேட்கிறீர்களா? பார்க்கிறீர்களா? இன்றைய நாட்களின் அற்ப சுகத்தை அனுபவிக்கும் ஆத்மாக்கள் யார் யார் இருக்கிறார்களோ, இயற்கையின் அடிமையாகத் தென்படுகிறார்களோ அவர்களுடைய புகழ், பெருமை அடையும் காட்சிகளைப் பார்த்து உங்களுடைய மனநிலை என்னவாக இருக்கிறது? இந்த ஆத்மாக்கள் இந்த மாதிரி மற்றும் இந்த பழக்கம் முறையால் இயற்கையின் தாசியின் ரூபத்தில் மேடையில் வெளிப்பட்டு இருக்கிறார்கள், எனவே நாமும் அந்த மாதிரி செய்ய வேண்டும், நாமும் இவர்களைப் போல் நம்முள் மாற வேண்டும் என்ற எண்ணமும் ஒருவேளை வந்தது என்றால் அவர்களை என்னவென்று கூறலாம்? வள்ளலின் குழந்தைகள் பிச்சைக்காரர்களை காப்பி செய்வார்களா என்ன? உங்கள் எதிரில் எவ்வளவுதான் பகட்டை வெளிப்படுத்தக் கூடிய ஆத்மாக்களாக இருந்தாலும் பிரத்யக்ஷ ரூபத்தில் முன்பு இருந்தது போலேவே பிச்சைக்காரர்கள்தான். இந்த அனைத்து ஆத்மாக்களும் பாப்தாதாவின் குழந்தைகளிடமிருந்து கொஞ்சம் சக்திகளின் துளிகளை தாரணை செய்திருக்கிறார்கள். உங்களிடமிருந்து சக்தியின் அஞ்சலி பெறுவதினால் தற்சமயம் இந்த அஞ்சலியின் பலனாக இயற்கையின் தாசியின் பலன் ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் அஞ்சலி பெறுபவர்களைப் பார்த்து கடலின் குழந்தைகள் என்ன ஆகி விடுகிறார்கள். பிரபாவத்தில் வந்து விடுகிறார்கள். இவர்கள் அனைவரும் கொஞ்ச காலத்திற்குள்ளேயே உங்கள் கால் அடிகளில் வந்து விழுவதற்காகத் துடிப்பார்கள். எனவே அன்பின் கூடவே சேவையின் ஆர்வமும் தேவையாக இருக்கிறது. எப்படி ஆரம்பத்தில் அன்பும் இருந்தது. ஆர்வமும் இருந்தது. பயமற்றவர்களாகவும் இருந்தீர்கள். சூழ்நிலை மற்றும் வாயுமண்டலத்தின் ஆதாரத்திலிருந்து

விலகியிருந்தீர்கள். எனவே சேவையின் ஒரே சீரான ஊக்கம் உற்சாகம் இருந்தது. இப்பொழுது வாயுமண்டலம் மற்றும் சூழ்நிலைகளைப் பார்த்து அங்கங்கே தன்னுடைய நிலையை மாற்றிக் கொள்கிறீர்கள். எனவே வெற்றி சில நேரம் இப்படியும், சில நேரம் அப்படியும் தென்படுகிறது. கலியுகக் கடைசியின் ஆத்மாக்கள் தன்னுடைய சத்தியத்தை நிரூபிப்பதற்காக பயமின்றி எப்பொழுது மேடையில் வருகிறார்கள் என்றால் புருஷோத்தம சங்கமயுகத்தைச் சேர்ந்த அனைத்து உயர்ந்த ஆத்மாக்கள் தன்னை சத்தியமானவர் என்று நிரூபிப்பதற்காக வாயுமண்டலத்திற்கேற்றபடி ஏன் அந்த மாதிரியான நிலையை உருவாக்குகிறீர்கள்? நீங்கள் மாஸ்டர் படைப்பவர்கள்தான் இல்லையா? அவர்கள் அனைவரும் படைப்புக்கள் இல்லையா? படைப்பை மாஸ்டர் படைப்பவர் எப்படி பார்ப்பார். எப்பொழுது மாஸ்டர் படைப்பவரின் ரூபத்தில் நிலைத்திருந்து பார்த்தீர்கள் என்றால் பின்பு இவை அனைத்தும் எந்த மாதிரியான காட்சிகளாகத் தென்படும்? எந்த மாதிரியான காட்சிகளைப் பார்ப்பீர்கள்? எப்பொழுது மழை பெய்கிறது என்றால் மழைக்குப் பிறகு என்ன காட்சி பார்க்கிறீர்கள்? தவளை கொஞ்சத் தண்ணீரிலேயேதான் கடலிலிருப்பதாக அனுபவம் செய்யும். ட்ராண், ட்ராண் என்று கத்திக் கொண்டு ஆடிக் கொண்டே இருக்கும் ஆனால் அது அற்பகால சுகத்தின் தண்ணீர். அப்படி இப்படி தவளைகளின் ப்ராண், ட்ராண் என்று கத்தும் மற்றும் ஆடுவதின், குதிப்பதின் காட்சி தென்படும். இவர் இப்பொழுது அற்ப கால சுகத்தில் அப்படியே பலூன் மாதிரி விரிந்து ஒரேடியாக சென்று விட்டார் என்று அனுபவம் செய்வீர்கள். அப்படி மாஸ்டர் படைப்பவரின் நிலையில் நிலைத்திருப்பதினால் அந்த மாதிரியான காட்சி தென்படும். எந்த சாரமும் தென்படாது. அர்த்தமற்ற வார்த்தைகள் தென்படும். அப்படியானால் சத்தியத்தை நிரூபிப்பதற்கான தைரியம் மற்றும் உற்சாகம் தென்படுகிறதா? சத்தியத்தை நிரூபிப்பதற்கான ஊக்கம் வருகிறதா அல்லது இன்னும் நேரம் இருக்கிறதா? இப்பொழுது சத்தியத்தை நிரூபிப்பதற்கு இன்னும் நேரம் இருக்கிறதா என்ன? நடக்கவும் வேண்டும் மற்றும் ஜொலிப்பும் வேண்டும். அந்த மாதிரி உடனடி நிரூபணம் இருக்கட்டும், உடனே சத்தியத்தின் எதிரில் நம் அனைவரின் இந்த அற்பகால ஆடம்பரம் செல்லுபடியாகாது என்று உணரட்டும். எப்படி மேடையில் நாடகத்தில் காண்பிக்கிறீர்கள் இல்லையா? எப்படி விகாரம் கையெடுத்து கும்பிட்டு விடைபெற்றுச் செல்கிறது. தலைகுனிந்து கொண்டு செல்கின்றன. இந்த நாடகத்தை

நடைமுறையில் உலக நாடகமேடையில் காண்பிக்க வேண்டும். இப்பொழுது இந்த நாடகத்தை எல்லைக்குட்பட்ட மேடையிலிருந்து எல்லைக்கப்பாற்பட்ட மேடையில் கொண்டு வாருங்கள். இதைத்தான் சேவை என்று சொல்வது, அந்த மாதிரி சேவை செய்பவர்கள் வெற்றி மாலையின் விசேஷ மணியாக ஆகுகிறார்கள். எனவே அப்படி சேவைக்குத் தகுதியானவர்களாக ஆக வேண்டும். இப்பொழுதோ இந்த பயிற்சியை செய்து கொண்டிருக்கிறீர்கள். முதலில் பயிற்சி செய்யப்படுகிறது, சிறுசிறு விலங்குகள் வேட்டையாடப்படுகின்றன, பின்பு சிங்கத்தின் வேட்டை நடக்கிறது. கடைசி நேரத்தின் நடைமுறை செயல்பாட்டின் பாகத்தை ஒரு சிறிய நாடகம் நடந்து கொண்டிருப்பது போல் அப்படியே பார்ப்பார்கள். அப்பொழுது ஒரு பக்கம் வெற்றி முழக்கம் மற்றும் இன்னொரு பக்கம் ஐயோ! ஐயோ என்ற அலறல் ஒலி கேட்டுக் கொண்டிருக்கும். இரண்டுமே ஒரே மேடையில் நடக்கும். நல்லது.

**வரதானம்: முயற்சி செய்வதில் இருக்கும் சூட்சும அலட்சியத்தையும் தியாகம் செய்யக்கூடிய ஆல்ரவுண்டர் (அனைத்துக் காரியங்களையும் செய்பவர்) மற்றும் அலர்ட்டாக (மிக கவனமாக) இருப்பவர் ஆகுக!**

முயற்சி செய்வதில் வரும் களைப்பு அலட்சியத்தின் அடையாளமாகும். அலட்சியம் உள்ளவர்கள் விரைவில் களைப்படைவார்கள். ஊக்கம் உள்ளவர்கள் களைப்பற்றவர்களாக இருப்பார்கள். யார் முயற்சி செய்வதில் மனமுடைந்து போகக்கூடியவர்களாக இருப்பார்களோ அவர்களுக்குத்தான் அலட்சியம் வருகிறது, என்ன செய்வது, இவ்வளவுதான் முடியும், இதை விட அதிகம் முடியாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். தைரியம் இருப்பதில்லை, சென்று கொண்டுதான் இருக்கிறோம், செய்து கொண்டுதான் இருக்கிறோம், இந்த மாதிரியான சூட்சும அலட்சியத்தின் பெயர், அடையாளம் கூட இருக்க வேண்டாம். இதற்காக எப்பொழுதும் அலர்ட்டாக, எவரெடியாக மற்றும் ஆல்ரவுண்டராக ஆகுங்கள்.

**சுலோகன்: நேரத்தின் மகத்துவத்தை முன் வைத்து அனைத்து பிராப்திகளின் கணக்கை முழுமையாக சேமியுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 03.10.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பணிவு என்ற குணத்தினால் உலகைப் படைப்பவர் ஆவது!

இன்று பாப்தாதா யாரைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் யார்? இன்று பாப்தாதா உங்களை எந்த ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிந்திருக்கிறீர்களா? குழந்தைகளாகவோ இருக்கவே இருக்கிறீர்கள், ஆனால் எந்த ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்? இவர்கள் அனைவரும் உலகைப் படைப்பவர்கள் என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார்; நீங்கள் உலகைப் படைப்பவர்களா? தந்தையின் கூடவே தந்தையின் காரியத்தில் உதவியாளர்களாக இருக்கிறீகளா? புது உலகைப் படைக்க வேண்டும் இதுதான் நாம் செய்ய வேண்டிய காரியம் இல்லையா? அதே காரியத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களா அல்லது இனி மேல்தான் ஈடுபட வேண்டுமா? அப்படியானால் உலகைப் படைப்பவராக ஆகவில்லையா? நாம் அனைவரும் மாஸ்டர் உலகைப் படைப்டவர்கள் என்ற இந்த நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும். இதே நினைவு எப்பொழுதும் இருப்பதினால் எந்த விசேஷ குணம் தானாகவே வந்து விடும்? பணிவு என்ற குணம், புரிந்ததா? மேலும் எங்கு பணிவு அதாவது சரளத்தன்மை இயற்கையான ரூபத்தில் இருக்குமோ அங்கு மற்ற குணங்களும் தானாகவே வந்தே விடுகின்றன. எனவே எப்பொழுதும் இந்த நினைவு சொரூபத்தில் நிலைத்திருந்து பின்பு ஒவ்வொரு எண்ணத்தையும் உருவாக்குங்கள் மற்றும் காரியத்தைச் செய்யுங்கள். பிறகு எதிர்நோக்குவதற்காக ஏதாவது சிறு சிறு விஷயங்கள் வருகிறது இல்லையா? அந்த விஷயங்கள் அனைத்தும் எப்படி வயதானவர்களின் எதிரில் சிறு சிறு குழந்தைகள் தன்னுடைய குழந்தைத்தனத்தின் அலட்சியத்தின் காரணமாக ஏதாவது சொல்லி விட்டாலும் மற்றும் ஏதாவது அந்த மாதிரி காரியம் செய்து விட்டாலும் வயதானவர்கள் இவர்களை ஒன்றும் குறை சொல்ல முடியாது. வெகுளியான சிறு குழந்தைகள் என்று நினைக்கிறார்கள். இந்த மாதிரிதான் அவர்களுக்கு அனுபவம் ஆகும். எந்த பாதிப்பும்

ஏற்படுவதில்லை. அதே போல் எப்பொழுது தன்னை மாஸ்டர் உலகைப் படைப்பவர் என்று நினைப்பீர்கள் என்றால் இந்த மாயாவின் சிறு சிறு தடைகள் குழந்தைகளின் சிறு சிறு விளையாட்டிற்குச் சமமாக அனுபவம் ஆகும். எப்படி சிறு குழந்தை ஒருவேளை குழந்தைத்தனத்தின் விவரம் தெரியாத நிலையில் உங்களது மூக்கையோ காதையோ பிடிக்கிறது என்றால் ஆவேசம் வருமா? ஏனென்றால் குழந்தைகளை குறை கூற முடியாது. ஒன்றும் அறியாதவர்கள் என்று நினைக்கிறீர்கள். அவர்கள் மேல் எந்தவொரு குறையும் தென்படுவதில்லை. அதே போல் மாயாவும் ஒருவேளை எந்த ஆத்மா மூலமாக பிரச்சனை, தடை மற்றும் சோதனை ரூபத்தில் வருகிறது என்றால் அந்த ஆத்மாக்களை பழியற்றவர்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். மாயாதான் அந்த ஆத்மா மூலமாக தன்னுடைய விளையாட்டைக் காண்பித்துக் கொண்டிருக்கிறது. அப்படியானால் பழி பாவம் இல்லாதவர் மேல் என்ன ஏற்படுகிறது? இரக்கம், கருணை வருகிறது இல்லையா. இந்த முறையில் எந்தவொரு ஆத்மாவும் அதற்குக் காரணமாகி விடுகிறது ஆனால் அவர்கள் எந்த பழியும் அற்றவர்கள். ஒருவேளை அந்தப் பார்வையில் ஒவ்வொரு ஆத்மாவையும் பார்த்தீர்கள் என்றால் பின்பு முயற்சி செய்வதின் வேகம் எப்பொழுதாவது தொய்வாக முடியுமா? ஒவ்வொரு நொடியிலும் முன்னேறும் கலையின் அனுபவம் செய்வீர்கள். முன்னேறும் கலையில் செல்வதற்காக இந்த புரிந்து கொள்வதின் கலை மட்டும் வர வேண்டும்.

16-கலைகள் நிறைந்தவர்களாக ஆக வேண்டும் இல்லையா? அப்படி இதுவும் ஒரு கலைதான். ஒருவேளை இந்தக் கலையைத் தெரிந்து விட்டீர்கள் என்றால் பின்பு முன்னேறும் கலையேதான். அது ஒருபொழுதும் நிற்காது. அதனுடைய வேகம் ஒருபொழுதும் தொய்வாக முடியாது. ஒவ்வொரு நொடியிலும் தீவிரத்தன்மை இருக்கும். மேலும் இப்பொழுது நிற்பதற்கான சமயம் எங்கிருக்கிறது? நின்று அந்த ஆத்மாக்களின் காரணம் மற்றும் நிவாரணத்தை தீர்வு செய்வதற்கான நேரம் இப்பொழுது இருக்கிறதா? இப்பொழுதோ பெரிய வயதானவராக ஆகி விட்டீர்கள். இப்பொழுதோ வானபிரஸ்த் (கடமைகளை முடித்து விட்டு விலகிய) நிலையில் செல்வதற்கான நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. தன்னுடைய வீடு எதிரில் தென்படவில்லையா? கடைசியில் யாத்திரையை முடித்து விட்டு வீடு செல்ல வேண்டும். எந்தவொரு விஷயமும் விதவிதமான ரூபங்களில், விதவிதமான

விஷயங்களாக எதிரில் எப்பொழுது வருகிறது என்றால் முதலில் இந்தப் பிரச்சனைகளை மற்றும் விதவிதமான ரூபங்களின் விஷயங்களை எத்தனை தடவை தீர்வு கண்டு மேலும் செய்து செய்து அனுபவியாக ஆகியிருக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும். எத்தனை தடவை அனுபவிகளாக ஆகியிருக்கிறீர்கள் என்ற நினைவு இருக்கிறதா? அனேக தடவை செய்திருந்தோம் என்ற அந்த நினைவு வருகிறதா? சென்ற கல்பத்தில் பாஸ் (தேர்ச்சி) செய்தோம், கிராஸ் (கடந்து) செய்திருப்போம். கடந்து சென்றீர்களா அல்லது சென்றிருந்து இருப்பீர்களா? ஒருவேளை அனேக தடவை இந்த அனுபவம் செய்யவில்லை என்றால் இன்று இவ்வளவு நெருக்கத்தில் எப்படி வந்தீர்கள் என்ற இதையும் புரிந்து கொள்வதில்லை. இந்தக் கணக்கைப் போட தெரியாதா? பாண்டவர்களோ கணக்கில் திறமைசாலிகளாக இருக்க வேண்டும் ஆனால் சக்திகள் நம்பர்-1 ஆகி விட்டார்கள். இந்த நினைவு தெளிவான மற்றும் சரள ரூபத்தில் இருக்க வேண்டும். இழுக்க வேண்டியதாக இருக்க வேண்டாம். ஒருவேளை கல்பத்திற்கு முன்பு நடந்த விஷயத்தை இப்பொழுது வரை புத்தியில் பிடித்து இழுத்துக் கொண்டே இருக்கிறீர்கள் என்றால் என்னவென்று கூறுவது? அவசியம் ஏதோ மாயாவின் இழுத்தல் இது வரை இருக்கிறது. எனவே புத்தியில் கல்பத்திற்கு முன்பு நடந்த விஷயம் தெளிவாக மற்றும் சரள ரூபத்தில் வருவதில்லை. எனவேதான் தடைகளைக் கடந்து செல்வதில் கடினமான அனுபவம் ஆகிறது. கடினம் என்பது ஒன்றும் இல்லை.

எவ்வளவு முயற்சி செய்வதின் காலம் முடிந்திருக்கிறது, எவ்வளவு ஞானத்தின் லைட் (ஒளி) மற்றும் மைட் (சக்தி) கிடைத்திருக்கிறது. அதன் பிரகாரம் தற்சமயம் சரளமானதாகவும், தெளிவானதாகவும் இருக்க வேண்டும். எப்படி ஒரு நிமிடத்திற்கு முன்பு ஒருவேளை ஏதாவது காரியம் செய்திருந்தீர்கள் என்றால் அது நினைவிருக்கிறதா அல்லது மறந்து விட்டதா? என்று அந்த மாதிரி தெளிவாக இருக்க வேண்டும். எப்படி ஒரு நிமிடத்திற்கு முன்பு செய்த காரியம் தெளிவாக அனுபவம் ஆகிறதோ அதே போல் 5000-வருடங்களுக்கு முந்தைய விஷயம் தெளிவாக அனுபவம் ஆகட்டும். எப்படி சக்திசாலியான கேமரா (புகைப்படக்கருவி) இருக்கிறது என்றால் ஒரு நொடியில் எவ்வளவு தெளிவான படத்தைப் பிடித்து விடுகிறது. எவ்வளவுதான் தூரத்தில் இருக்கும் காட்சியாக இருந்தாலும் அதுவும் தெளிவாக நேரெதிரில் வந்து விடுகிறது.

அப்படியானால் பவர்ஃபுல் கேமராமேன் ஆக நீங்கள் ஆகவில்லையா? கேமரா இருக்கிறதா அல்லது மற்றவர்களுடையதை கடனாகப் பெற்று பின்பு உபயோகிக்கிறீர்களா? சக்திசாலியானதாக இருக்கிறதா? சென்ற கல்பத்திற்கு முந்தைய படங்கள் அதில் தெளிவாக வந்து விடுகின்றனவா? இந்த மனம் இருக்கிறது இல்லையா அது ஒரு பெரிய கேமராவாகும். இதில் ஒவ்வொரு நொடியின் படத்தைப் பிடிக்க முடியாதா? கேமராவோ அனைவரிடத்திலும் இருக்கிறது ஆனால் சில கேமராக்கள் அருகில் இருக்கும் படங்களை பிடிக்கிறது மேலும் சில கேமராக்கள் சந்திரன் வரையிலும் புகைப்படத்தைப் பிடித்து விடுகின்றன. அதுவும் கேமராதான் இதுவும் கேமராதான் மேலும் இங்கே உள்ள சிறியவைகள் கூட கேமராதான் இல்லையா. அப்படி ஒவ்வொருவரிடமும் எவ்வளவு சக்திசாலியான கேமரா இருக்கிறது? அவர்கள் சந்திரனிலிருந்து இங்கே உள்ளதை, இங்கிருந்து அங்கே உள்ளதை பிடிக்க முடியும் என்றால் நீங்கள் சாகார உலகத்தில் இருந்து கொண்டே நிராகார உலகத்தை, ஆகாரி உலகத்தை மற்றும் இந்த முழு உலகத்தின் கடந்த காலம் மற்றும் எதிர்காலத்தின் படங்களை பிடிக்க முடியாதா? கேமராவை சக்திசாலியானதாக மாற்றுங்கள். அதில் எந்த விஷயம், எந்த காட்சி எப்படி இருக்கிறதோ அப்படியே தென்படட்டும். விதவிதமான ரூபத்தில் தென்பட வேண்டாம். என்னவாக இருக்கிறதோ எப்படி இருக்கிறதோ அப்படி தெளிவாகத் தென்படட்டும் இதைத்தான் சக்திசாலியானது என்று கூறுவது. பின்பு கூறுங்கள் ஏதாவது பிரச்சனை, பிரச்சனையின் ரூபத்தில் இருக்குமா அல்லது விளையாட்டாக அனுபவம் ஆகுமா? அப்படி இப்பொழுதைய ஸ்டேஜின் (நிலையின்) படி அந்த மாதிரி ஸ்டேஜை உருவாக்குங்கள். அப்பொழுதுதான் தீவிரமாக முயற்சி செய்பவர் என்று கூறப்படும். ஒருவேளை அந்த மாதிரி கேமரா மூலமாக முதலில் படங்கள் பிடிக்கப்படுகின்றன. அதன் பிறகு கழுவிய பிறகு இந்த படத்தை எப்படி பிடித்தோம் என்று தெரிய வருகிறது. இதே போல் முழு நாளில் அவரவர்களின் தானியங்கி கேமரா மூலமாக அனேக படங்களைப் பிடித்துக் கொண்டே இருக்கிறீர்கள். பிறகு இரவில் அமர்ந்து எந்த விதமான படங்களை இன்று இந்த கேமராக்கள் மூலமாக பிடித்திருக்கிறோம் என்று தெளிவாகப் பார்க்க வேண்டும். மேலும் எது எப்படி இருக்கிறதோ அப்படியே படம் பிடிக்கப்பட்டிருக்கிறதா அல்லது மேலே கீழே போய்விட்டதா? சில நேரங்களில் கேமரா சரியாக இல்லாத காரணத்தினால் வெள்ளைப் பொருட்கள் கூட கருப்பாகி விடுகிறது. ரூபம்

மாறி விடுகிறது, லட்சணங்களும் சில நேரம் மாறி விடுகிறது. அப்படி இங்கேயும் சில நேரம் கேமரா சரியாக தெளிவாக இல்லாத காரணத்தினால் விஷயம் பிரச்சனையாகி விடுகிறது. அதனுடைய வடிவம் மாறி விடுகிறது. அதனுடைய வர்ணம் ரூபமும் மாறி விடுகிறது. யதார்த்தமானதை யதார்த்தமற்ற ரூபத்திலும் சில நேரம் பிடிக்கப்பட்டு விடுகிறது. எனவே எப்பொழுதும் தன்னுடைய கேமராவை தெளிவானதாகவும் சக்திசாலியானதாகவும் ஆக்குங்கள். தன்னை சேவாதாரி என்று புரிந்து கொள்வதினால் தியாகம், தபஸ்யா அனைத்தும் வந்து விடுகிறது சேவாதாரியாக இருக்கிறேன். மேலும் சேவைக்காகத்தான் இந்த வாழ்க்கை இருக்கிறது என்று இப்படி புரிந்து கொள்வதினால் ஒரு நொடி கூட சேவையில்லாமல் கழியாது. எனவே எப்பொழுதும் தன்னை சேவாதாரி என்று புரிந்து நடந்து கொள்ளுங்கள். மேலும் தன்னை வயதானவர் என்றும் புரிந்து கொள்ள வேண்டும். பின்பு சிறு சிறு விஷயங்கள் விளையாட்டு பொம்மைகளாகத் தென்படும். இரக்க மனம் உடையவர்களாகி விடுவீர்கள். அவமரியாதைக்கு பதிலாக இரக்கம் வந்து விடும். நல்லது.

# 05.10.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ணத்தின் அடையாளம் 16-கலைகள்!

அனைவருடைய முயற்சி செய்வதின் இலட்சியம் என்னவாக இருக்கிறது? சம்பூர்ணமாக வேண்டும். சம்பூர்ணத்தின் நிலை என்று எதைக் கூறலாம்? எந்த தோற்றம் எதிரில் இருக்கிறது அதை சம்பூர்ண நிலை என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? தந்தை கூட சம்பூர்ண நிலையை தாரணை செய்திருக்கிறார். அதில் என்ன விஷயங்கள் இருந்தன? மற்றவர்களுக்குச் சொல்லும் பொழுது சம்பூர்ண நிலைக்கான எதை எதை வர்ணனை செய்கிறீர்கள்? இந்த ஞானம் மூலமாக சர்வ குண சம்பன்னம், 16-கலைகள் சம்பூர்ணமாக, சம்பூர்ண நிர்விகாரியாக ஆகுகிறார்கள் என்று மற்றவர்களுக்குப் புரிய வைக்கிறீர்கள் இல்லையா? இந்த சம்பூர்ண நிலையை வர்ணனை செய்கிறீர்கள் இல்லையா? எதிர்காலத்தில்தான் பிராப்தியாகும், ஆனால் சம்பூர்ண நிலை என்று இதைத்தான் கூறுவோம் இல்லையா? ஆத்மாவின் பலமோ இப்பொழுதுதான் நிரம்பும் இல்லையா? 16-கலை சம்பூர்ணமானவர் என்று கூறப்படுகிறது. என்றால் கலைகள் இப்பொழுது நிரம்பும் இல்லையா? சர்வ குண சம்பன்ன, சம்பூர்ண நிர்விகாரி, 16-கலைகள் சம்பூரணமானவர் என்று இந்த வார்த்தைகளைக் கூறுகிறீர்கள் இல்லையா? இது சம்பூர்ண நிலையாகும். சம்பூர்ணம் என்றால் என்ன அதைத் தெரிந்திருக்கிறீர்கள். குணங்களின் பட்டியல் இருக்கிறது; ஆனால் இந்த 16-கலை என்று கூறப்படுகிறது அதனுடைய சம்பூர்ண நிலையின் அடையாளம் என்ற கருத்து அடங்கிய அர்த்தம் என்ன? எப்படிப் பாருங்கள் யாரிடமாவது ஏதாவது விசேஷம் இருக்கிறது என்றால் இவரிடம் இந்த கலை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது இல்லையா? சிலரிடம் அழுது கொண்டிருப்பவர்களை சிரிக்க வைக்கும் கலை அதாவது விசேஷம் இருக்கிறது. சிலரிடம் கைகள் மூலமாக மாயாஜாலம் செய்யும் கலை இருக்கிறது. சிலரிடம் புத்தி மூலமாக அதிசயங்களைச் செய்யும் கலை இருக்கிறது. அப்படி இந்த 16-கலைகள் சம்பூரணம் என்றால் அவருடைய

எந்த காரியம் நடந்தாலும் அந்த ஒவ்வொரு காரியமும் கலைக்குச் சமமாகத் தென்படும். அவருடைய ஒவ்வொரு நடத்தை, பார்ப்பது பேசுவது, செல்வது அனைத்தும் கலை போன்று தென்படும். எப்படி சிலருடைய கலையைப் பார்ப்பதற்காக எவ்வளவு ஆர்வத்தோடு செல்கிறார்கள். இதே முறையில் யார் சம்பூர்ண நிலையை பிராப்தி அடைந்திருக்கும் ஆத்மாக்களாக இருப்பார்களோ அவர்களுடைய ஒவ்வொரு நடத்தையும் கலை ரூபத்தில் இருக்கிறது. மேலும் சரித்திரத்தின் ரூபத்திலும் இருக்கிறது. அப்படி விசேஷமாக ஆனது இல்லையா? எப்படி சாகார பாபாவின் பேசுவது நடப்பது அனைத்திலும் விசேஷத்தைப் பார்த்தீர்கள் இல்லையா? அப்படி இது கலை ஆனது இல்லையா எழுவது அமர்வதற்கான கலை, பார்ப்பதின் கலை, நடப்பதின் கலை இருந்தது. அனைத்திலும் விலகிய நிலை மற்றும் விசேஷம் இருந்தது. ஒவ்வொரு காரியத்தையும் கலை ரூபத்தில் நடைமுறையில் பார்த்தீர்கள், அப்படி 16-கலை என்றால் ஒவ்வொரு நடத்தை சம்பூர்ண கலையின் ரூபத்தில் தென்படட்டும். இதைத்தான் 16-கலை சம்பூர்ணமானவர் (முழுமையானவர்) என்று கூறுவது. அப்படி சம்பூர்ண நிலையின் அடையாளமாக அவருடைய ஒவ்வொரு காரியமும் கலைக்குச் சமமாகத் தென்படும் அதாவது அதில் விசேஷம் இருக்கும். இதைத்தான் சம்பூர்ண நிலை என்று கூறுவது. அப்படி 16-கலை சம்பூர்ணம் ஆக வேண்டும் என்ற இலட்சியம் வைத்திருக்கிறீர்கள். அதற்கான தெளிவான விளக்கம் இதுதான். நான் பார்ப்பதில் கலை இருக்கிறதா? என்று சோதிக்க வேண்டும். நான் பேசுவதில் கலை நிரம்பி இருக்கிறதா? கலா காயா (கலைத் தோற்றமே) கலை இழந்து விட்டது என்று கூறுகிறார்கள் இல்லையா? அப்படியானால் கலை ஒரு நல்லதாக இருக்கிறது. கலா காயா அழிந்து விட்டது என்றால் காரியத்தில் இருந்து ஆகர்ஷனம் செய்யக்கூடிய சக்தி அதாவது விசேஷம் அழிந்து விட்டது என்பதாகும். எனவே என்னுடைய ஒவ்வொரு காரியமும் கலைக்குச் சமமாக இருக்கிறதா அல்லது இல்லையா என்று இதை சோதனை செய்ய வேண்டும். எப்படி யாராவது மாயாஜாலக்காரர் இருக்கிறார் என்றால் அவர் எவ்வளவு நேரம் மாயாஜாலம் காண்பிக்கிறாரோ அவ்வளவு நேரம் கலை ரூபத்தில் தென்படும். எப்படி நடக்கிறார். பொருளை எப்படி எடுக்கிறார் அவை அனைத்தையும் கலை ரூபத்தில் குறித்துக் கொள்வார்கள். அப்படி இந்த சங்கம யுகம் விசேஷ காரியம் என்ற கலை காண்பிப்பதற்கானது, எப்பொழுதும் நான் மேடையில் இருக்கிறேன்

என்று அப்படி உணர்வு இருக்கட்டும். அந்த மாதிரி 16-கலை சம்பூர்ணமானவர் ஆக வேண்டும். யாருடைய ஒவ்வொரு காரியமும் கலை ரூபத்தில் இருக்கிறதோ அவருடைய ஒவ்வொரு காரியமும் அதாவது குணங்களின் மகிமை செய்யப்படுகிறது. இதை வேறு வார்த்தைகளில் கூறுவதானால் ஒவ்வொரு காரியமும் சரித்திரத்திற்குச் சமமாக இருக்கிறது என்று கூறலாம். அந்த கலை ரூபத்தைப் பார்த்து மற்றவர்களிலும் பிரேரணை நிரம்புகிறது. அவருடைய காரியமும் சேவைக்குத் தகுதியானதாக இருக்கிறது. எப்படி யாராவது கலையை வெளிப்படுத்துகிறார்கள் என்றால் கலை வருமானத்திற்கான சாதனம் ஆகி விடுகிறது. மேலும் மற்றவர்களைக் கவருகிறது. ஒவ்வொரு காரியமும் கலையின் ரூபத்தில் இருந்தால் அது ஒரு காந்தம் ஆகி விடும். இன்றைய உலகத்தில் யாராவது சின்ன சின்ன கலைகளைக் காண்பிப்பவர் கூட வழியில் சென்று கொண்டிருக்கும் போதே கலையைக் காண்பித்தார் என்றால் அனைவரும் ஒன்றாகக் கூடி விடுகிறார்கள். இதுவே உயர்ந்த கலையாகும். நல்லது.

**வரதானம்: எப்பொழுதும் வளைந்து கொடுப்பதின் விசேஷம் மூலமாக நெருக்கத்தில் மற்றும் சேவையில் வெற்றி அடையக்கூடிய வெற்றி மூர்த்தி ஆகுக!**

எந்தக் குழந்தைகளிடம் தன்னை வளைத்துக் கொள்வதின் விசேஷம் இருக்கிறதோ அவர் சுலபமாகவே பொற்காலத்தின் நிலை வரை சென்றடைந்து விடுகிறார். எப்படி நேரமோ எப்படி சூழ்நிலையோ அதன்படி தன்னுடைய தாரணைகளை வெளிப்படுத்துவதற்காக வளைந்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. வளைந்து கொடுப்பவர்தான் உண்மையான தங்கம் ஆவார், எப்படி சாகார பாபாவின் விசேஷத்தைப் பார்த்தீர்களோ எப்படி நேரமோ, எப்படி நபரோ அப்படி ரூபத்தை தாரணை செய்தார். அதே போல் தந்தையைப் பின்பற்றி நடந்தீர்கள் என்றால் சேவை மற்றும் நெருக்கம் அனைத்திலும் சுலபமாகவே வெற்றி மூர்த்தி ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: எங்கு அனைத்து சக்திகளும் இருக்கிறதோ அங்கு தடையற்ற வெற்றி உடன் இருக்கிறது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 08.10.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## தீபமாலை (தீபாவளி) -சைதன்ய தீபங்களுடைய மாலையின் நினைவுச்சின்னம்!

இன்று பாப்தாதா என்ன பார்த்துக் கொண்டிருக்கிறார்? எந்த தீபமாலையின் நினைவு நாளை மக்கள் கொண்டாடுகின்றனரோ அந்த சைதன்ய தீபங்களின் மாலையைப் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். தீபங்களின் மாலையான உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார். தீபமாலையின் நினைவு நாளை மக்கள் கொண்டாடுகின்றனர் ஆனால் பாப்தாதா சைதன்ய தீபங்களின் மாலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அனைவரும் கூட எப்போது தீபமாலையின் தினத்தில் எரிந்து கொண்டிருக்கும் தீபங்களைப் பார்க்கின்றீர்கள் எனில் பார்க்கும்போதே இது நமது நினைவுச்சின்னத்தைத்தான் கொண்டாடுகிறார்கள் என்ற குஷி இருக்கிறதா? எப்படி எரிந்து கொண்டிருக்கும் தீபம் மனதிற்குப் பிடித்தமாக உள்ளதோ, அதே போல தனது நினைவுச்சின்னத்தைப் பார்க்கும்போது உங்கள் அனைவருக்கும் கூட, உலகத்தின் தந்தை மற்றும் முழு உலகின் ஆத்மாக்களையும் பிடித்திருக்கிறது எனில் இன்று நினைவுச்சின்னத்தின் ரூபத்தை பிரத்யக்ஷமாகப் பார்க்க வந்துள்ளீர்கள். மாலையில் ஒரு மணி மட்டும் இருப்பதில்லை ஆனால் பல மணிகள் சேர்ந்து மாலை உருவாகிறது. ஒருவேளை ஒரு தீபம் மட்டும் எரிந்து கொண்டிருந்தது எனில் அதை தீபங்களின் மாலை எனக் கூற மாட்டோம். அது போல எரிந்து கொண்டிருக்கும் பல தீபங்கள்தான் மாலையின் ரூபத்தில் தென்படும். எனவே ஒவ்வொருவரும் தன்னை இந்த தீபமாலையின் நடுவில் கோர்க்கப்பட்ட, எரிந்து கொண்டிருக்கும் தீபம் என நினைக்கிறீர்களா? அல்லது நீங்களும் எரிந்து கொண்டிருக்கும் அநேக தீபங்களின் மாலையைப் பார்த்து மகிழ்ச்சி அடைபவர்களா? இன்று தீபமாலையின் தினம், நீங்கள் அனைவரும் தீபாவளி

கொண்டாடினீர்களா? இன்று விசேஷ ரூபத்தில் தீபாவளி கொண்டாடினீர்களா? அந்த மாதிரி சதா எரிந்து கொண்டிருக்கும் தீபங்களா? ஆனால் எப்போது விசேஷமாக நினைவு நாள் வருகிறது எனில் விசேஷ ஆத்மாக்கள் என்ன செய்ய வேண்டும்? விசேஷ ஆத்மாக்கள் யார் விசேஷ ரூபத்தில் நிமித்தமாகி இருக்கிறார்களோ அவர்கள் விசேஷமாக என்ன சேவை செய்ய வேண்டும்? விசேஷ ஆத்மாக்கள் என்றால் மற்றவர்களை விட விசேஷமான காரியம் செய்ய வேண்டும் தானே. ஏனென்றால் எதை மற்ற ஆத்மாக்களாலும் செய்ய முடியுமோ, செய்து கொண்டும் இருக்கிறார்களோ, அதையேச் செய்வதால் அப்படி என்ன வித்தியாசம் ஏற்பட்டு விடும்? விசேஷ ஆத்மாக்கள் என்றால் விசேஷமான காரியம் செய்ய வேண்டும்! பாப்தாதா விசேஷ தினத்தில் விசேஷ ரூபத்தில் குழந்தைகளுக்கும் மற்றும் பக்தர்களுக்கும் மூன்று விதமான ரூபத்திலும் சேவை செய்கின்றார். விசேஷ ஆத்மாக்களும் குறிப்பாக தனது நினைவுச்சின்ன தினத்தன்று சாட்சாத்கார மூர்த்தியாகி, அப்படியே பாப்தாதாவிற்குச் சமமாக ஆத்மாக்கள் மீது தனது நன்மைக்கான பாவனை மூலம், தனது ஆன்மீக சிநேகத்தின் ரூபத்தில், தனது சூட்சும சக்திகள் மூலம் ஆத்மாக்களில் பலத்தை நிரப்ப வேண்டும். எப்படி அவ்யக்த ரூபத்தில் நாலா புறமும் உள்ள குழந்தைகளுக்கு சேவை செய்கின்றார். அவர்கள் புரிந்து கொள்கின்றனர், பாப்தாதா என்னிடம் தொடர்பு கொண்டார், என்னுடைய நினைவுக்கான பதில் அளித்தார், என்னுடைய நினைவிற்கான பிரத்யக்ஷ பலனை நான் அனுபவம் செய்தேன் அல்லது பக்தர்களும் அனுபவம் செய்கின்றனர் நமது அன்பு மற்றும் பாவனைக்கான பலனை பகவான் பூர்த்தி செய்தார் என்ற இந்த அனுபவம் நடைமுறை ரூபத்தில் நடந்து கொண்டேதான் இருக்கிறது. அத்தகைய விசேஷ ஆத்மாக்களை தனது அவ்யக்த ஸ்திதியில், தனது ஆன்மீக லைட்-மைட்'ன் உடைய ஸ்திதி மூலம் லைட்-ஹவுஸ், மைட்-ஹவுஸ் ஆகி, ஓரிடத்தில் இருந்தவாறே நாலா புறமும் அலௌகீக ஆன்மீக சேவையின் பாவனை மற்றும் உள்ளுணர்வு மூலம் சேவை செய்ய வேண்டும். எல்லைக்கப்பாற்பட்ட சேவை என்று இதற்குத்தான் கூறப்படுகிறது! என்னுடைய பிரஜை அல்லது பக்தர் இன்று விசேஷ ரூபத்தில் நினைவுச்சின்ன நாளில் விசேஷ ஆத்மா என்னை நினைவு செய்து கொண்டிருக்கிறார்கள் என அப்படி அனுபவம் அல்லது உணர்வு ஏற்பட வேண்டும். அல்ப காலத்து ரித்தி-ஸித்திக்காரர்கள் ஓரிடத்தில் இருந்தபடியே தனது பக்தர்களுக்கு தனது ரூபத்தை பிரத்யக்ஷமாக

சாட்சாத்காரம் செய்விக்க முடியும் எனில் விசேஷ ஆத்மாக்கள் உங்களால் தனது லைட்-மைட் மூலம் பக்தர்களுக்கு அல்லது பிரஜைகளுக்கு தனது சேவை மூலம் அனுபவம் செய்விக்க முடியாதா, என்ன? எனில் எப்போது இத்தகைய விசேஷ நினைவுச்சின்ன நாள் வருகிறது என்றால் விசேஷ ஆத்மாக்கள் அப்படி விசேஷ சேவையினால் அனுபவம் செய்விக்க வேண்டும். அந்த மாதிரி சேவை செய்கிறீர்களா? நல்லது. இந்த சேவை உள்ளது. மேலும் தீபாவளி அன்று தன்னைப் பற்றிய விசேஷ கவனம் இருந்ததா? இன்றைய நாளில் தனது ஆத்மாவினுடைய சம்ஸ்காரங்களில் சதா காலத்திற்குமான மாற்றம் கொண்டு வருவதற்கான விசேஷ கவனம் கொடுத்தீர்களா? எப்போது நினைவுச்சின்ன ரூபத்தில் இன்றைய தினம் பழைய கணக்கை முடிக்கும் முறையின் ரூபத்தில் நடந்து கொண்டே வந்துள்ளது, அது அவசியம் நடைமுறை ரூபத்தில் ஆத்மாக்கள் நீங்கள் செய்துள்ளதால்தான் நினைவுச்சின்னமாக நடந்து கொண்டுள்ளது. முடிப்பதற்கு முன் தனது கணக்கு சோதனை செய்யப்பட்டு, முடிவு வெளி வருகிறது. அது போல நீங்கள் அனைவரும் தனது கணக்கை சோதனை செய்தீர்களா? என்ன சோதனை செய்ய வேண்டும்? இன்றைய நாள் வரை என்ன புருஷார்த்தம் நடந்ததோ, அதன் முடிவு இது வரை எந்த விஷயங்களில் மற்றும் எத்தனை சதவிகிதம் வெற்றி மூர்த்தி ஆகியுள்ளேன்? முதலில் தனது மனதின் சங்கல்பங்களின் கணக்கை சோதனை செய்யுங்கள் -இது வரை சம்பூர்ண சிரேஷ்ட சங்கல்பங்களுடைய முயற்சியில் எது வரை வெற்றி கிடைத்துள்ளது? வீண் சங்கல்பங்கள் அல்லது தீய சங்கல்பங்களின் மீது எது வரை வெற்றி அடைந்துள்ளேன் மற்றும் வார்த்தை மூலம் எது வரை ஆத்மாக்களுக்குத் தந்தையின் அறிமுகம் கொடுக்க முடிந்தது, எத்தனை ஆத்மாக்களைத் தந்தையின் சிநேகி அல்லது சகயோகி ஆக்க முடிந்தது? வார்த்தையில் எது வரை ஆன்மீகத்தன்மை அல்லது அலௌகீகத்தன்மை அல்லது ஆகர்ஷணம் வந்துள்ளது? அது போல செயல் மூலம் சதா நியாரா-பியாரா, அலௌகீகம், அசாதாரண கர்மம் எது வரை செய்ய முடிந்தது? செயலிலும் எது வரை கர்மயோகியினுடைய யோகயுக்த், யுக்தியுக்த், ஸ்நேகயுக்த் ரூபத்தைக் கொண்டு வந்துள்ளேன்? தனது சம்ஸ்காரம் மற்றும் சொரூபத்திலும் அதாவது முகம் எது வரை தந்தைக்குச் சமமாக ஆகர்ஷண ரூபம், சிநேகி ரூபம், சகயோகி ரூபம் ஆகியுள்ளது? இப்படி தனது கணக்கை சோதனை செய்வது மூலம் இது வரை என்ன குறைகள்,

பலவீனங்கள் இருந்து விட்டனவோ அவற்றை முடித்து விட்டு புதிய கணக்கை ஆரம்பிக்க முடியும். இப்படி தனது கணக்கை சோதியுங்கள்.

தீபாவளி கொண்டாடுவது அல்லது தன்னை சம்பூர்ணம் ஆக்குவதற்கான திட சங்கல்பம் செய்வதுதான் கொண்டாடுவது என இதைத்தான் சொல்லப்படுகிறது. எனில் அந்த மாதிரி தீபாவளி கொண்டாடினீர்களா அல்லது மிலன் மட்டுமே செய்தீர்களா? மிலனின் நினைவுச்சின்னம் மாலையின் ரூபத்தில் உள்ளது ஆனால் திட சங்கல்பத்தின் நினைவுச்சின்னம் தீபத்தின் ஜோதி ரூபத்தில் உள்ளது. என்றால் இரண்டு ரூபத்திலும் கொண்டாடினீர்களா? புத்தாடை அணிந்து கொண்டீர்களா? ஆத்மாவிற்கு புதிய ஆடை எந்த ஆதாரத்தில் கிடைக்கிறது? சம்ஸ்காரங்களின் ஆதாரத்தில் தானே கிடைக்கிறது. ஆத்மாவின் சம்ஸ்காரத்திற்கு ஏற்றபடி சரீரம் தயாராகிறது. எனில் எந்த புதிய சரீரம் அல்லது புதிய ஆடை அணிவீர்கள்? ஆத்மாவில் புது யுகத்தினுடைய சம்ஸ்காரம் அல்லது புது யுகத்தின் ஸ்தாபகர் தந்தை போல சம்பூர்ண சம்ஸ்காரங்களை தாரணை செய்வது -இதுதான் புதிய ஆடை அணிவதாகும். சரீரத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் புத்தாடை அணியுங்கள் ஆனால் இன்றைய பழைய உலகின் புதிய பொருள் கூட புது உலகிற்கு முன் பழையதாகும் ஏனெனில் இற்றுப்போன நிலையை அடைந்து விட்டது. ஆதலால் புத்தாடை அணிந்தால் கூட புதியது எனக் கூற மாட்டோம். சதோபிரதான உலகில் எல்லாமே புதியதுதான்! தமோபிரதான உலகின் பொருட்கள் அனைத்துமே பழையது, சாரமற்றது எனில் அதை புதியது எனக் கூறுவோமா என்ன? ஆதலால் புத்தாடை என்றால் தனது ஆத்மாவுடைய புதிய சம்ஸ்காரம், சிரேஷ்ட சம்ஸ்காரத்தைத் தாரணை செய்வது. இன்னும் என்ன செய்வோம்? எப்போது புதிய சம்ஸ்காரத்தைத் தாரணை செய்து விட்டீர்களோ கணக்கு வைப்பதால் தூய்மையாகி விடுவீர்களா; ஆகவே கணக்கு வைப்பது -இதுதான் தூய்மையாவது -அதாவது சுத்தமாவது, தூய்மையாவது. எப்படி தூய்மை செய்யும்போது அசுத்தம் மற்றும் புழு பூச்சிகளும் தானாகவே அழிந்து விடுகின்றன. அது போல எப்போது அந்த மாதிரி கணக்கை சோதனை செய்வீர்களோ அப்போது இருக்கின்ற குறைகள் எல்லாம் தானாகவே முடிந்து விடும். ஒருவர் மற்றவரிடம் தனது இனிமையான வார்த்தை மூலம் என்ன கொடுக்கல்-வாங்கல் செய்வீர்கள்? எப்படி தீபாவளி அன்று ஒருவர் மற்றவருக்கு பரிசு அளிக்கிறார்கள் எனில்

நீங்கள் ஒருவர் மற்றவருக்கு என்ன பரிசு தருவீர்கள்? பிறருக்குக் கொடுப்பதற்காக உங்களிடம் என்ன பொருள் உள்ளது? (சிநேகம்). சிநேகமோ ஒருவர் மற்றவரிடம் சதா இருக்கட்டும் ஆனால் இன்றைய நாள் விசேஷ சிநேகியாக ஆவீர்களா? சிநேகியாகவோ இருக்கிறீர்கள் மற்றும் இந்த சிநேகத்தின் அடையாளம் -ஒருவர் மற்றவரது அருகில் இருப்பதன் அடையாளம்தான் தீபமாலை என கூறப்படுகிறது. விசேஷ நாட்களில் விசேஷமாக என்ன கொடுக்க வேண்டும்? இது வரை தனது முயற்சி மூலம் சகஜமாக கிடைத்துள்ள வெற்றி அல்லது பெற்ற அனுபவம், அப்படி தனது அனுபவத்தின் ஞானரத்தினம் எதன் மூலமாக நடைமுறையில் அனுபவி ஆகி, அனுபவி ஆக்க முடியுமோ அந்த மாதிரியான ரத்தினங்களை ஒருவர் மற்றவருக்கு பரிசு அளிப்பதன் ரூபத்தில் விசேஷ ரூபத்தின் மூலம் அளிக்க வேண்டும், புரிந்ததா! தந்தையின் கஜானாவை தனது அனுபவம் மூலம் எதை நம்முடையதாக்கினோமோ, அப்படி நம்முடையதாக்கிய ஞானரத்தினங்களை ஒருவர் மற்றவருக்குத் தர வேண்டும்; இதனால் அந்த ஆத்மாவும் கூட சகஜ அனுபவியாக வேண்டும். இதுதான் பரிசளிப்பது; எனில் ஒருவர் மற்றவருக்கு அது சதா நினைவு ரூபம் ஆகி விடுமாறு அந்த மாதிரி தர வேண்டும். எப்போது இப்படிப்பட்ட ரத்தினங்களை யாருக்காவது தருகிறீர்கள் என்றால் எப்போதுமே அந்த ஆத்மாவிற்குத் தந்தையுடன் கூடவே நீங்கள் கொடுத்த ரத்தினங்களின் நினைவும் நிச்சயமாக இருக்கும். எனில் யாருக்குக் கொடுத்தாலும் எப்போதுமே சம்பன்னம் ஆக்கக்கூடிய பரிசுதான் தர வேண்டும். இந்த மாதிரி தீபாவளியைக் கொண்டாடுங்கள் மற்றும் அது போல் சிரேஷ்ட ஆத்மாவாகி மற்ற ஆத்மாக்களுக்கும் சிரேஷ்ட சேவை செய்யுங்கள்.

இன்றைய நாட்களில் எல்லா ஆத்மாக்களும் பணத்தின் வேட்கையில் உள்ளனர். எனில் இத்தகைய ஆத்மாக்களுக்கு அவர்கள் ஒருபோதும் செல்வத்தை யாசிக்க வேண்டிய அவசியமே இல்லாத அளவு அந்த மாதிரி ஆன்மீக செல்வத்தை அளியுங்கள். யார் காசு பணம் கேட்பார்கள்? பிச்சைக்காரர்கள்! இன்றைய நாட்களில் ஆத்மா பிச்சைக்காரனாகி விடுகிறது. ராயல் பிச்சைக்காரன் எனலாம்! எவ்வளவுதான் கோடீஸ்வரனாகட்டும் ஆனால் இன்றைய நாட்களில் பிச்சைக்காரன் ஆகி விடுகிறார்கள். அப்படிப்பட்ட பிச்சைக்கார ஆத்மாக்களை பிச்சைக்காரத்தனத்திலிருந்து விடுவியுங்கள், இதுதான் எல்லைக்கப்பாற்பட்ட சேவை. வள்ளலின் குழந்தைகள் அல்லவா! எனில்

வள்ளலின் குழந்தைகள், வரமளிப்பவரின் குழந்தைகள், தனது வரதானத்தின் சக்தி மூலம், ஞானதானத்தின் சக்தி மூலம் பிச்சைக்காரர்களை பணக்காரர்களாக ஆக்குங்கள். இன்று இந்த பிச்சைக்கார ஆத்மாக்கள் மீது விதாதா மற்றும் வரதாதாவின் குழந்தைகளுக்கு இரக்கம் வர வேண்டும். எந்த ஆத்மாக்களுக்கு இப்படி இரக்கம் வருகிறதோ, அவர்களைத்தான் மாயா மற்றும் உலகிலுள்ள இப்படிப்பட்ட ஆத்மாக்கள் வணங்குகின்றனர், ஆதலால் இன்று வரையிலும் தீபமும் ஏற்றுகின்றனர். எப்போது தீபம் ஏற்றுகின்றனரோ அப்போது நிச்சயமாக நமஸ்காரம் செய்கின்றனர். எனில் இந்த மாதிரி விழிப்படைந்த ஜோதி உடைய ஆத்மாக்களின் நினைவுச்சின்னத்திற்கு இன்றும் கூட மகிமை உள்ளது. அணைந்து போன தீபத்தை யாரும் நமஸ்கரிப்பதில்லை. எனில் சதா எரிந்து கொண்டிருக்கும் தீபம் ஆகுங்கள்! அத்தகைய ஆத்மாக்களை பாப்தாதாவும் நமஸ்கரிக்கின்றார். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.10.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சக்திசாலியான உள்உணர்வு மூலமாக சேவையில் வளர்ச்சி!

இன்று இந்த சங்கடன் (கூட்டுச்சபை) எந்த லட்சியத்தோடு ஒன்றாகக் கூடியிருக்கிறது? கூட்டு ஒற்றுமையில் பிராப்தி ஏற்படத்தான் செய்கிறது ஆனால் உங்களுக்குள் சந்திப்பதற்கான லட்சியமும் என்ன வைத்திருக்கிறீர்கள்? ஏதாவது புதிய திட்டத்தை யோசித்தீர்களா? ஏனென்றால் இந்த கூட்டு அனைவரையும் விட உயர்ந்த ஆத்மாக்களின் மற்றும் நெருக்கமான ஆத்மாக்களினுடையது. அனைவரின் பார்வை நெருக்கமான மற்றும் உயர்ந்த ஆத்மாக்களின் மேல் உள்ளது. உயர்ந்த ஆத்மாக்களுக்கு சேவையில் மற்றும் தன்னுடைய கூட்டுத்தன்மையில் உயர்ந்த நிலை மற்றும் புதுமையை எப்படிக் கொண்டு வரலாம் என்று இதை யோசிக்க வேண்டும். புதுமை என்று எதைக் கூறுவது? புதுமை என்றால் அந்த மாதிரி ஏதாவது சுலபமான, ஆனால் சக்திசாலியான திட்டத்தை உருவாக்குவது அந்த சக்திசாலியான திட்டம் சக்தி மூலமாக ஆத்மாக்களைக் கவர்ந்திழுக்கட்டும். தூரத்திலிருந்தே ஆத்மாக்களைக் கவரும் திட்டத்தை உருவாக்குவது எப்படி விட்டில் பூச்சிகள் இருக்கின்றன. விளக்கொளியின் கவர்ச்சி விட்டில் பூச்சிகள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் இழுத்து விடுகிறது. அல்லது ஏதாவது நெருப்பு கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது என்றால் தூரத்திலிருந்தே அதனுடைய வெப்பம் அனுபவம் ஆகும். இங்கோ நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்வார்கள். அதே போல் ஏதாவது முற்றிலும் குளுமையான பொருள் எங்காவது இருக்கிறது என்றால் தூரத்திலிருந்தே அதனுடைய குளுமை அனுபவம் ஆகும். மேலும் கவர்ந்திழுக்கும். இதே முறையில் தூரத்திலிருந்தே கவரப்பட்டு ஆத்மாக்கள் அருகில் வந்து கொண்டே இருக்குமளவு தன்னுடைய ரூபத்தை மற்றும் சேவையின் வடிவத்தை உருவாக்குங்கள். எப்படி வாயுமண்டலத்தில் ஏதாவது ஒரு பொருள் பரவி விடுகிறது என்றால் முழு வாயுமண்டலத்திலும் வெகு தூரம் வரை அதனுடைய பிரபாவத்தின் நிழல்

இருக்கும். இதே போல் இந்த அனைத்து யோகிகள் மற்றும் உயர்ந்த ஆத்மாக்கள் தன்னுடைய வாயுமண்டலத்தை அந்த மாதிரி ஆன்மீகமாக மாற்றட்டும் அதன் மூலம் அருகாமையில் இருக்கும் வாயுமண்டலத்தின் ஆன்மீகத்தின் காரணமாக ஆத்மாக்களை தன் பக்கம் இழுத்து விடட்டும்.

வாயுமண்டலத்தை உருவாக்குவதற்காக முக்கியமாக எந்த யுக்தி (முறை) தேவையாக இருக்கிறது? வாயுமண்டலம் எப்படி உருவாக முடியும்? உள் உணர்வு மூலமாக வாயுமண்டலத்தை உருவாக்க வேண்டும். எப்படியென்றால் யாருடைய உள்மனதில் யாரைப் பற்றியாவது ஏதாவது விஷயம் வந்து விடுகிறது என்றால் நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? வாயுமண்டலத்தில் என்னைப் பற்றி இந்த விஷயம் இருக்கிறது இப்படியெல்லாம் பேசிக் கொள்கிறார்கள் என்று கூறுகிறீர்கள். வாயுமண்டலத்தின் அஸ்திவாரம் உள் உணர்வு ஆகும். அப்படி உள்உணர்வை எதுவரை சக்திசாலியாக ஆக்கவில்லையோ அதுவரை வாயுமண்டலத்தில் ஆன்மீகம் மற்றும் சேவையில் என்ன வளர்ச்சியை விரும்புகிறீர்களோ அது ஏற்பட முடியாது. ஒருவேளை விதை சக்திசாலியாக இருக்கிறது என்றால் மரமும் சக்திசாலியாக இருக்கும். அப்படி விதைதான் உள்உணர்வு ஆகும். அதன் மூலம்தான் தன்னுடைய மற்றும் சேவையின் வளர்ச்சி செய்ய முடியும். வளர்ச்சியின் ஆதாரம் உள்உணர்வு ஆகும். மேலும் உள்உணர்வு சக்திசாலி ஆகி விடும் அளவிற்கு உள்உணர்வில் என்ன நிரப்ப வேண்டும்? அது ஒரே ஒரு விஷயம்தான். ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் இரக்கம் மற்றும் நன்மையின் உள்உணர்வு இருக்கட்டும். பின்பு ஆத்மாக்களுக்காக இந்த உள்உணர்வு இயல்பாகவே இருக்கும் காரணத்தினால் அந்த ஆத்மாக்களுக்கு உங்களுடைய இரக்கம் மற்றும் நன்மை செய்யும் வைப்ரேஷன் (எண்ண அதிர்வலைகள்) சென்றடையும். வானொலி பெட்டியிலிருந்து சப்தம் எப்படி வருகிறது? வாயுமண்டலத்தில் இருக்கும் வைப்ரேஷனை கேட்ச் (பிடித்தல்) செய்கிறார்கள். வையர்லஸ் (மின் கம்பியற்ற உபகரணம்) மூலமாக வைப்ரேஷனை (ரேடியோ அலைகள்) கேட்ச் செய்கிறார்கள். அப்படி இந்த அனைத்தும் விஞ்ஞானம் மூலமாக ஒருவர் இன்னொருவரின் சப்தத்தை கேட்ச் செய்ய முடியும் மற்றும் கேட்க முடியும். அப்படி அது வயர்லஸ் மூலமாக நடக்கிறது மற்றும் இது ஆன்மீக சக்தி மூலமாக நடக்கிறது. ஒருவேளை உள்உணர்வு சக்திசாலியாக இருக்கிறது என்றால் உள்உணர்வு மூலமாக ஏற்படும் வைப்ரேஷன் அந்த

ஆத்மாவிற்கு எப்படி ரேடியோவின் சுவிட்சை திறந்தவுடன் தெளிவாக சப்தம் கேட்க முடிகிறது. அதே போல் தெளிவாக அனுபவம் ஏற்படும். இன்றைய நாட்களில் டெலிவிஷன் மூலமாகவும் நடிப்பு மற்றும் சப்தத்தை தெளிவாக தெரிந்து கொள்ள முடியும். அதே போல் இப்பொழுது உள்உணர்வு மூலமாக மிகுந்த சேவை செய்ய முடியும். எப்படி டெலிவிஷன் மற்றும் ரேடியோ நிலையம் ஒரே இடத்தில் இருந்தபோதிலும் எங்கெங்கோ அது சென்றடைகிறது. அதே போல் உள்உணர்வில் அந்த அளவிற்கு சக்தி இருக்க வேண்டும் யார் எங்கே எவ்வளவு தூரம் அமர்ந்திருந்தாலும் ஆனால் எவ்வளவு சக்திசாலியான நிலையோ அவ்வளவு தூரம் வரை சென்றடைந்து விடுகிறது. இதே முறையில் எந்த ஆத்மாவின் உள்உணர்வு எவ்வளவு சக்திசாலியாக இருக்கிறதோ அந்த அளவு ஒரே இடத்தில் நாலா புறமும் உள்உணர்வு மூலமாக ஆத்மாக்களை கவருவார்கள். இப்பொழுது இந்த சேவை தேவையாக இருக்கிறது. வார்த்தைகள் மற்றும் உள்உணர்வு இரண்டும் சேர்ந்தே தேவையாக இருக்கிறது ஆனால் என்ன நடக்கிறது, எப்பொழுது உள்உணர்வு மூலமாக சேவை செய்கிறீர்களோ அப்போது வார்த்தைகள் வருவதில்லை, மேலும் வார்த்தைகள் மூலமாக சேவை செய்கிறீர்கள் என்றால் உள்உணர்வின் சக்தி குறைந்து விடுகிறது ஆனால் என்ன இருக்க வேண்டும். எப்படி இன்றைய நாட்களில் சினிமா மற்றும் டி.வியில் நடிப்பு மற்றும் ஒலி இரண்டும் சேர்ந்தே இருக்கிறது. இரண்டு காரியமும் சேர்ந்தே நடக்கிறது இல்லையா? இதில் கூட பயிற்சி இருக்கிறது என்றால் உள்உணர்வு மற்றும் வார்த்தை இரண்டும் சேர்ந்தே சேவை இருக்கட்டும். அதிகமாக வார்த்தையில் வரும் காரணத்தினால் உள்உணர்வு மூலமாக வாயுமண்டலத்தை சக்திசாலியாக எவ்வளவு ஆக்க வேண்டுமோ அதை செய்ய முடியவில்லை. வார்த்தைகள் மட்டும் இருக்கும் காரணத்தினால் அதனுடைய சக்தி எவ்வளவு நேரம் எதிரில் மற்றும் அருகில் இருக்கிறார்களோ அவ்வளவு நேரம் அதன் சக்தி இருக்கிறது. உள்உணர்வு வார்த்தைகளை விட சூட்சுமமானது இல்லையா? அப்படி சூட்சுமத்தின் பிரபாவம் அதிகம் ஏற்படும். பெரிய ரூபத்தின் பிரபாவம் குறைவாக இருக்கும். அப்படி சூட்சும சக்தியும் இருக்கட்டும், மேலும் ஸ்தூலமும் இருக்கட்டும். இரண்டு சக்திகளினால் அந்த மாதிரி ஏதாவது புதுமையாக காண்பிக்கும் அளவிற்கு உள்உணர்வு இருக்கட்டும்.

இப்பொழுது மிகப் பெரிய வித்தியாசம் தென்படுவதில்லை. ஒரே மேடையில் இரண்டுவிதமான ஆத்மாக்களும் ஒன்றாக அமர்ந்திருக்கிறார்கள் என்றால் ஜனங்களுக்கு மிகப் பெரிய வித்தியாசம் தென்படும். சாட்சியாகிப் பார்த்தீர்கள் என்றால் மிகப்பெரிய வித்தியாசம் தென்படுமா? எப்படி ஏதாவது மிகவும் சக்திசாலியான பொருள் இருக்கிறது என்றால் மற்ற பொருட்களின் பாதிப்பு அதன் மேல் ஏற்படுவதில்லை. இங்கேயும் ஒருவேளை ஸ்தூலமான ஸ்டேஜின் (மேடை) மேல் தன்னுடைய சூட்சும சக்திகாலியான ஸ்டேஜ் (நிலை) இருக்கிறது என்றால் மற்றவர் எவ்வளவுதான் சக்திசாலியானவராக இருந்தாலும் கூட வாயுமண்டலத்தில் அவருடைய பிரபாவம் ஏற்பட முடியாது. எப்படி ஸ்தூல யுத்தத்தின் ரூபத்தை நினைவு ரூபமாகக் காண்பிக்கிறார்கள் -ஒரு பக்கத்தில் இருந்து அம்பு வருகிறது, மேலும் வழியிலேயே அதை அழித்து விடுகிறார்கள். அம்பு வெளிப்பட்டது, மேலும் அங்கேயே அழிக்கப்பட்டு விட்டது. இந்த உள்உணர்வின் மூலமாகத்தான் வாயுமண்டலத்தை சக்திசாலியானதாக ஆக்க முடியும். இப்பொழுது அங்கங்கே தன்னுடைய ஸ்டேஜின் குறை இருக்கும் காரணத்தினால் தன்னுடைய ஸ்டேஜின் மேல் மற்ற ஆத்மாக்களின் பிரபாவம் வாயுமண்டலத்தில் ஏற்படுகிறது. ஏன்? காரணம் என்ன? உள்உணர்வு மூலமாக ஆத்மாக்கள் மேல் ஆன்மீகத்தின் முற்றுகையை இட முடியாது. எப்படி ஏதாவது ஆத்மாவைப் பிடிக்க வேண்டியிருக்கிறது என்றால் அவர் வெளியே செல்ல முடியாத அளவிற்கு முற்றுகை இடுவார்கள். உள்உணர்வு மூலமாக ஆன்மீகத்தின் முற்றுகையை வாயுமண்டலத்தில் இடுவதினால் எந்த ஆத்மாவும் ஆன்மீகக் கவர்ச்சியிலிருந்து வெளியே செல்ல முடியாது. இப்பொழுது அந்த மாதிரியான சேவை தேவையாக இருக்கிறது. ஏனென்றால் அந்த அதிசயத்தை பார்க்க வேண்டும் என்பதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஏதாவது அதிசயத்தைக் காண்பிக்கட்டும் என்று அனைவரும் நினைக்கிறார்கள் ஆனால் இங்கு அதிசயத்திற்குப் பதிலாக தலைசிறந்ததைக் காண்பிக்க வேண்டும். அவர்களுடையது ரித்தி ஸித்திமூலமாக அதிசயம் மற்றும் உங்களுடையது உள்உணர்வு மூலமாக தலைசிறந்ததைக் காண்பிக்க வேண்டும். இப்பொழுது யாராவது தலைசிறந்ததைக் காண்பிக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு விசேஷத்தாவின் அனுபவம் ஏற்பட வேண்டும் ஆனால் என்ன நடக்கிறது; என்றால் ஆத்மாக்களுக்கு அற்ப கால பிரபாவம் அங்கங்கே ஏற்பட்டு விடுகிறது. அவர்கள் எப்படிச் செய்கிறார்கள், எப்படிப் பேசுகிறார்கள்

என்று அவர்களைக் கவனிக்கிறீர்கள். இதே காரணத்தினால் தன்னுடைய அதிகாரத்தின் சக்தி என்ன இருக்க வேண்டுமோ அது மற்ற பக்கம் பார்வை செல்வதினால் பலஹீனம் ஆகி விடுகிறது. ஏனென்றால் இது கூட பெரிய சூட்சும நியமம் ஆகும் ஆனால் விருத்தியில், (உள்உணர்வு) கேட்பதில், பார்ப்பதில், யோசிப்பதில் ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற உறுதிமொழி இருக்கிறது. ஆத்மாக்களின் பிரபாவத்தை புத்தியில் வைத்துக் கொண்டே மற்றும் ஆத்மாக்களின் பிரபாவத்தை பார்த்துக் கொண்டே செய்வது இதுவும் சூட்சுமத்தின் இணைப்பு அறுந்து விடுவது ஆகும். எப்படி ஆரம்ப காலத்தில் மஸ்த் ஃபகீர் (எதைப் பற்றியும் கவலையில்லாது இறை போதையிலேயே திரிபவர்), ரம்தா (அலைந்து, திரிந்து கொண்டும்) யோகியாக இருந்தீர்கள். தன்னுடைய ஞானத்தின் சக்தியை வெளிப்படுத்துவதில் சக்திசாலியானவராக இருந்தீர்கள். அந்த சக்திசாலியான நிலை இருந்த காரணத்தினால் முதல் படைப்பு கூட சக்திசாலியாக இருந்தது, மேலும் இப்பொழுதைய படைப்பு முதல் படைப்பு போல சக்திசாலியாக இருக்கிறதா? எவ்வளவுதான் ஊக்கம் வந்தாலும், முதல் படைப்பில் என்ன சக்தி இருந்ததோ அது இப்பொழுது இல்லை. ஞானத்தின் அனுபவியாகவோ நீங்கள் ஒவ்வொரு நாளும் ஆகிக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் முதலிலிருந்த சக்திசாலியான ஸ்டேஜ் இப்பொழுது இருக்கிறதா? அந்த பயமற்ற நிலை இருக்கிறதா? அந்த அதிகாரம் நிறைந்த வார்த்தை முன்பிருந்தது போல் இருக்கிறதா? எப்படி சில நேரம் ஏதாவது பொருளை அதிகமாக சுத்திகரிக்கிறார்கள் என்றால் சுத்திகரிப்பு ஆகி விடுகிறது ஆனால் சக்தியற்றுமாகி விடுகிறது. தற்காலப் பொருட்களில் சுத்திகரிக்கப்பட்டபோதிலும் சக்தி இருக்கிறதா? அப்படி இதுவும் ஞானத்தின் ரூபம் சுத்திகரிக்கப்பட்டு விட்டது. சாமர்த்தியம் சுத்திகரிக்கப்பட்டு விட்டது ஆனால் ஃபோர்ஸ் (சக்தி) குறைவாக உள்ளது. தொடக்கத்தின் விஷயங்களை ஒருவேளை நினைவில் கொண்டு வந்தீர்கள் என்றால் அந்த குஷி எவ்வளவு இருந்தது. ஞானத்தின் கவர்ச்சி இருக்கவில்லை ஆனால் நெற்றி மற்றும் கண்களில் கவர்ச்சி இருந்தது. கண்கள் மூலமாக ஏதோ கடவுளின் குழந்தைகள் வந்திருக்கிறார்கள் என்று அனைவரும் அனுபவம் செய்தார்கள். இப்பொழுது கலப்படம் ஆன காரணத்தினால் கலப்படமாகத் தென்படுகிறது. அதிகமாகக் கலப்படம் ஆகும் பொருள் இருக்கிறது அது அற்பகாலத்திற்காக மிகுந்த சுவையைத் தருகிறது ஆனால் அதில் சக்தி இருப்பதில்லை. எப்படி சட்னி காரசாரமாக இருக்கிறது, ஆனால் அதில்

சக்தி இருக்கிறதா? அற்ப காலத்திற்காக மட்டும் நாக்கின் சுவையைக் கவருகிறது. அப்படி இதுவும் மிகுந்த கலப்படம் செய்யும் காரணத்தினால் அற்ப காலத்திற்காக கேட்பதற்கு மிகவும் நன்றாக இருக்கிறது ஆனால் சக்தியில்லை. எப்படி சக்திசாலியான பொருள் எனர்ஜியை (சக்தியை) அதிகரிக்கிறது. மேலும் எனர்ஜி நிரந்தரமான துணையாக ஆகி விடுகிறது. இதே போல் எந்த அதிகாரம் மற்றும் இயல்பான வார்த்தைகள் நிரந்தரமாக சக்தி ரூபம் ஆக்கி விடுகிறது. மேலும் எது ரமணீகரமான ரூபம் மற்றும் கலப்படமான ரூபமாக இருக்கிறது என்றால் அது அற்ப காலத்திற்கான ருசியில் மட்டும் கொண்டு வருகிறது. ஆத்மாக்களை ருசியில் கொண்டு வர வேண்டுமா அல்லது சக்தி நிரப்ப வேண்டுமா? என்ன செய்ய வேண்டும்? சக்தி அவர்களை நிரந்தரமாக கவர்ந்து கொண்டே இருக்கும். மேலும் இப்பொழுது ஆர்வம் இருக்கிறது. பின்பு வேறு ஏதாவது விஷயம் கேட்டார்கள் என்றால் அந்தப் பக்கம் ஆர்வம் ஏற்படுவதின் காரணமாக அங்கேயே அழிந்து விடும். எனவே இப்பொழுது அப்படிப்பட்ட ரம்தா யோகி ஆகுங்கள். ஏதாவது பெரிய பெரிய மகாத்மாக்கள் இருக்கிறார்கள் என்றால் வெகுகாலம் குகையில் இருந்த பிறகு சேவைக்காக உலகத்திற்கு வருகிறார்கள் அந்த மாதிரி அனுபவம் ஆக வேண்டும். எப்பொழுது அந்த மாதிரி மேடையில் வருகிறீர்களோ அப்பொழுது இந்த ஆத்மாக்கள் வெகு காலம் அந்தர்முக்தா, ஆன்மீகத்தின் குகையில் இருந்து சேவைக்காக வெளிவந்திருக்கிறார்கள் என்ற அனுபவம் ஏற்பட வேண்டும். தபஸ்வி ரூபம் தென்பட வேண்டும். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய ரேகைகள் மூகத்தில் தென்பட வேண்டும். யாராவது கொஞ்சமாவது வைராக்கியம் உடையவராக இருக்கிறார் என்றால் அவருடைய நடவடிக்கைகள் இவர் வைராக்கியம் உடையவர் என்று நிரூபணம் செய்கிறது. அப்படி எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு தென்பட வேண்டும். மேடையில் எப்பொழுது சேவைக்காக வருகிறீர்கள் என்றால் உங்களுடைய முகம் எப்படி புரஜெக்டரில் இருந்து ஸ்லைடுகள் மாறிக் கொண்டே இருக்கிறது அது போல் அனுபவம் ஏற்பட வேண்டும். எவ்வளவு கவனமாகப் பார்க்கிறார்கள். அந்தக் காட்சி மிகத் தெளிவாகத் தென்படுகிறது. அதே போல் எப்பொழுது சேவையின் மேடையில் வருகிறீர்களோ அப்பொழுது ஒவ்வொருவரின் முகம் புரஜெக்டர் காட்சியைக் காண்பிக்கும் இயந்திரம் மாதிரி தென்பட வேண்டும். இரக்க மனத்தின் குணம் முகத்தில் தென்பட வேண்டும். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர்களாக

இருந்தீர்கள் என்றால் எல்லைக்கப் பாற்பட்ட வைராக்கியத்தின் ரேகைகள் முகத்தில் இருந்து தென்பட வேண்டும். சர்வ சக்திவான் மூலமாக நிமித்தம் (பொறுப்பில் இருப்பவர்/கருவி) ஆகியிருக்கிறீர்கள் என்றால் அதிகாரத்தின் ரூபம் தென்பட வேண்டும். எப்படி அந்த இயந்திரத்தில் கூட ஸ்லைடு'களை (slide) நிரப்பி விடுகிறார்கள். பின்பு ஒவ்வொன்றும் தெளிவாகத் தென்படுகிறது. இதே போல் ஆத்மாவில் என்னென்ன அனைத்து குணங்களின், அனைத்து சக்திகளின் சம்ஸ்காரம் நிரம்பி இருக்கிறதோ அந்த ஒவ்வொரு சம்ஸ்காரம் முகத்தில் தெளிவாகத் தென்பட வேண்டும். இதைத்தான் சேவை என்று கூறுவோம். எப்படி சாகார ரூபத்தில் உதாரணத்தைப் பார்த்தீர்கள், முகம் மூலமாக ஒவ்வொரு குணத்தின் வெளிப்படையான சாட்சாத்காரத்தைப் பார்த்தீர்கள். அப்படி தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும். எப்படிப்பட்ட அதிகாரம் உள்ளவர் வந்தாலும் மேலும் எப்படிப்பட்ட மனநிலை உள்ளவர் வந்தாலும் அவர்கள் குணங்களின், ஆன்மீகத்தின், அனைத்து சக்திகளின் தனித்தன்மை உடையவரின் எதிரில் என்ன செய்வார்? தலைவணங்குவார். தன்னுடைய பிரபாவத்தை ஏற்படுத்த முடியாது. இது உள்உணர்வு மூலமாக வாயுமண்டலம் சக்திசாலியானதாக ஆன காரணத்தினால் அவருடைய உள்உணர்வு மற்றும் அவருடைய உள்மனதின் வைப்ரேஷனை (எண்ண அதிர்வலைகளை) மாற்றி விடுகிறது. அனைவரின் வாயிலிருந்து உள்உணர்வின் சக்தியின் வர்ணனை இருந்ததுதான் இல்லையா?? அப்படி உள்உணர்வு மற்றும் வார்த்தைகளின் அதிகாரத்தின் நடைமுறை நிரூபணத்தை பார்த்தார்கள், அப்படியானால் பின்பற்ற வேண்டும் இல்லையா?. இப்பொழுது அன்பு ரூபத்திலேயோ தேர்ச்சி பெற்று விட்டீர்கள். இப்பொழுது எதில் தேர்ச்சி அடைய வேண்டும். ஏனென்றால் கடைசி ரூபமே சக்திக்கு உடையதுதான். எந்தவொரு ஆத்மாவும் உங்களிடம் வருகிறது என்றால் முதலில் உலகத்தாயின் அன்பு ரூபத்தை தாரணை செய்கிறீர்கள். பிறகு எப்பொழுது அவர் இதில் வர ஆரம்பிக்கிறாரோ மாயாவை எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. மாயாவை எதிர்கொள்வதில் உதவி செய்பவராக ஆவதற்காக நீங்களும் சக்தி ரூபத்தை தாரணை செய்ய வேண்டியதாக இருக்கிறது.

நிமித்தமாகியிருக்கும் ஆத்மாக்கள் அன்பு மூர்த்தியாக மட்டும் இருக்கிறார்கள் என்றால் அவருடைய படைப்பிலும் கூட பிரச்சனைகளை

எதிர்கொள்வதற்கான சக்தி குறைவாக இருக்கும். யக்ஞம் மற்றும் தெய்வீகக் குடும்பத்தின் அன்பானவராக, சகயோகியாக இருப்பார் ஆனால் எதிர்கொள்ள முடியாது. காரணமென்ன? படைப்பவரின் பிரபாவம் படைப்பின் மேல் ஏற்படுகிறது. இப்பொழுது எந்தெந்த ஆத்மாக்கள் முன்னேறி வந்து வந்தே இப்பொழுது இதுவரை வந்தடைந்து விட்டார்கள் அவர்களை இன்னும் முன்னேற்றுவதற்காக விசேஷ ஆத்மாக்களுக்கு விசேஷமாக என்ன செய்ய வேண்டும். எந்த ஆத்மாக்களின் நிமித்தமாக ஆகியிருக்கிறீர்களோ அந்த ஆத்மாக்களிலும் சக்தி ரூபத்தில் சக்தியை நிரப்புவதற்கான தேவை இருக்கிறது. தற்சமயம் பெரும்பான்மை யான ஆத்மாக்களின் ரிசல்ட்டாக என்ன தென்படுகிறது? பின்னோக்கி செல்லவும் மாட்டார்கள் மேலும் முன்னேறிச் செல்லவும் மாட்டார்கள். மாட்டிக் கொண்டிருப்பவர்களாகவும் இல்லை. தொங்கிக் கொண்டிருப்பவர் களாகவும் இல்லை ஆனால் அகலத் தாண்டிச்செல்வதற்கான சக்தி இல்லை. அதிகப்படியான சக்தி தேவையாக இருக்கிறது. எப்படி. ராக்கெட்டில் சக்தி நிரப்பி மிக உயரத்திற்கு அனுப்புகிறார்கள் இல்லையா, எனவே இப்பொழுது ஆத்மாக்களுக்கு பராமரிப்பு தேவையாக இருக்கிறது. அவர்கள் சக்திக்கேற்றபடி ஜம்ப் (தாண்டுதல்) செய்ய முடியாது. விசேஷ ஆத்மாக்களுக்கு அவர்களில் விசேஷ சக்தி நிரப்பி ஹை ஜம்ப் (உயரே தாண்டுதல்) செய்விக்க வேண்டும் விரும்புகிறார்கள், முயற்சியும் செய்கிறர்கள், ஆனால் இப்பொழுது சக்தி தேவையாக இருக்கிறது. அந்த சக்தியை எப்படிக் கொடுப்பீர்கள்? முதலில் தன்னிடம் இவ்வளவு சக்தி இருந்தால்தான் தன்னையே முன்னேறிச் செய்விக்க முடியும். மேலும் சக்தியை தானமாகவும் செய்ய மூடியும். எப்படி ஞானத்தை தானம் செய்கிறீர்களோ அதே போல் இப்பொழுது சக்தியின் பலம் தேவையாக இருக்கிறது. இப்பொழுது வரம் கொடுக்கும் வள்ளலின் காரியம் செய்ய வேண்டும். ஞான வள்ளலாகி அதிகமாக செய்திருக்கிறீர்கள், இப்பொழுது சக்திகளின் வரம் கொடுப்பவராக ஆக வேண்டும். எனவே சக்திகளின் எதிரில் எப்பொழுதும் வரம் கேட்கிறார்கள். சக்திகள் மூலமாக ஸித்தி(நினைத்தது கைகூடுவது). எப்படி கிடைக்கிறது? இப்பொழுது எந்த சேவை செய்ய வேண்டும். வரம் அளிப்பவராகி அனைத்து சக்திகளையும் தன்னுடைய நிமித்தமாக இருக்கும் படைப்பிற்கு வரதானமாகக் கொடுக்க வேண்டும். விசேஷ ஆத்மாக்கள் யார் நிமித்தமாக இருக்கிறார்களோ அவர்கள்தான் இந்த சேவையை அதிகம் செய்ய முடியும். இந்த குரூப்

விசேஷ ஆத்மாக்களினுடையது இல்லையா? எப்படி மைக் ஆவது மிக சுலபம் என்று ஏற்கனவே கூறியிருந்தோம் ஆனால் உங்களுடைய சேவை மூலமாக மைக்கோ அதிகமாக உருவாகி விடும் ஆனால் சக்தியை நிரப்பக்கூடியவர் நீங்கள். இப்பொழுது அது தேவையாக இருக்கிறது. இப்பொழுது தன்னுடைய முயற்சிலேயே இருப்பதற்கான நேரம் இல்லை, இப்பொழுது தன்னுடைய முயற்சி மூலமாக பிரத்யமாகி பிரபாவத்தை ஏற்படுத்துவதற்கான நேரம் ஆகும். மேலும் அந்த பிரபாவம்தான் ஆத்மாக்களை தானாகக் கவர்ச்சி செய்யும். நல்லது.

**வரதானம்: எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருக்கக் கூடிய பந்தனமுக்த், ஜீவன்முக்த் ஆகுக!**

தேக அபிமானம் எல்லைக்குட்பட்ட நிலை ஆகும் மேலும் ஆத்ம அபிமானி ஆவது எல்லைக்கப் பாற்பட்ட நிலை ஆகும். உடலில் வருவதினால் அனேக காரியங்களின் எல்லைக்குட்பட்டதில் வர வேண்டியதாக இருக்கிறது ஆனால் எப்பொழுது உடல் அற்றவராக பந்தனங்களில், ஆகி விடுகிறீர்களோ அப்போது இந்த அனைத்து பந்தனங்களும் முடிவடைந்து விடுகின்றன. எப்படி பந்தனமுக்த்தான் ஜீவன் முக்த் என்று கூறப்படுகிறது அப்படி யார் எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருக்கிறார்கள் அவர் உலகின் வாயுமண்டலம், வைப்ரேஷன், தமோகுணி (கீழான நிலையில் உள்ள) உள்உணர்வுகள், மாயாவின் போர் இவை அனைத்திலிருந்தும் விடுபட்டு விடுகிறார். இதைத்தான் ஜீவன்முக்த் நிலை என்று கூறப்படுவது. இதன் அனுபவத்தை சங்கமயுகத்தில்தான் செய்ய வேண்டும்.

**சுலோகன்: நிச்சயபுத்தியின் அடையாளம் நிச்சயமான வெற்றி மற்றும் கவலையற்ற நிலை, அவரிடம் விணானவை வர முடியாது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 24.10.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பார்வையினாலேயே மகிழ்ச்சி அடையச் செய்வதற்கான விதி!

தன்னுடைய சுய ரூபம், சுய தேசம், சுய தர்மம், சிரேஷ்ட காமம், சிரேஷ்ட ஸ்திதியில் (நிலையில்) இருந்து கொண்டே நடந்து கொள்கிறீர்களா? ஏனென்றால் தற்சமயம் இதே சுய ஸ்திதியின் (நிலையின்) ஸ்திதி மூலமாகத்தான் அனைத்து பரஸ்திதிகளை (சூழ்நிலைகளை) கடந்து செல்ல முடியும் அதாவது கௌரவமாகத் தேர்ச்சி அடைய முடியும். ஒரு சுய என்ற வார்த்தை மட்டும் நினைவு இருக்கிறது என்றால் சுய சொரூபம், சுய தர்மம், சுய தேசம் தானாகவே நினைவு இருக்கும். அப்படியானால் ஒரு சுய வார்த்தையை நினைவு செய்ய முடியாதா என்ன? அனைத்து ஆத்மாக்களையும் சுய சொரூபம் மற்றும் சுய தர்மத்தில் நிலைத்திருக்கச் செய்வித்து சுயதேசி ஆக்குவதற்கான அவசியம் இருக்கிறது. அப்படி எந்த காரியத்திற்காக நிமித்தமாக (பொறுப்பில்) இருக்கிறீர்களோ மற்றும் எந்த காரியத்திற்காக அவதரித்து இருக்கிறீர்கள் என்றால் யாராவது செய்ய வேண்டிய கடமையை, தன்னைத் தானே தெரிந்திருந்து ஏற்றுக் கொண்ட பிறகு மறக்க முடியுமா என்ன? யாராவது லௌகீக காரியத்தை செய்து கொண்டே தன்னுடைய கடமையை மறக்கிறார்களா? டாக்டர் தன்னுடைய டாக்டரின் காரியத்தை போகும்போதும், வரும்போதும், சாப்பிடும்போதும், அனேக காரியங்கள் செய்து கொண்டே என்னுடைய சதா டாக்டரினுடையது என்பதை மறந்து விடுகிறாரா என்ன? பிராமண ஆத்மாக்கள் உங்களுடைய ஜென்மம் மற்றும் செய்யும் காரியமுமே அனைத்து ஆத்மாக்களை சுய சொரூபம், சுய தர்மத்தின் நிலையில் நிலைத்திருக்கச் செய்வது என்றால் பிராமணர்களுக்கு மற்றும் பிரம்மா குமார், குமாரிகளுக்கு இந்த தன்னுடைய காரியத்தை மறக்க முடியுமா? இன்னொரு விஷயம் ஏதாவது ஒரு பொருள் எப்பொழுதுமே சதா கூடவே இருக்கிறது என்றால் எப்பொழுதாவது அதை மறக்க முடியுமா? மிக அருகிலும், சதா உடனும் இருக்கக் கூடிய பொருள் எது? எப்பொழுதும் ஆத்மாவின் நெருக்கத்தில் மேலும் எப்பொழுதும் உடன் கூடவே

இருக்கக்கூடிய பொருள் எது? உடல் அல்லது தேகம், இது எப்பொழுதும் உடன் இருக்கக்கூடிய காரணத்தினால் நிரந்தர நினைவு இருக்கிறதா இல்லையா?. மறக்கச் செய்தாலும் கூட மறப்பதில்லை. அதே போல் இப்பொழுது உயர்ந்த ஆத்மாக்கள் உங்களுடைய நெருக்கத்தில் மற்றும் உடன் எப்பொழுதும் இருக்கக்கூடியவர் யார்? பாப்தாதா எப்பொழுதும் உடன் இருக்கிறார், எப்பொழுதும் எதிரில் இருக்கிறார். எப்பொழுது உடன் இருக்கும் இந்த உடல் ஒருபொழுதும் மறப்பதில்லை என்றால் தந்தை இவ்வளவு நெருக்கத்தில் இருந்தும் கூட ஏன் மறக்கிறது? தற்போது புகாராக என்ன சொல்கிறீர்கள்? தந்தையின் நினைவு மறந்து விடுகிறது. பல ஜென்மங்களாக உடன் இருக்கக்கூடிய உடல் மற்றும் உடலின் உறவினர்கள் மறப்பதில்லை என்றால் யார் மூலம் அனைத்து பொக்கிஷங்களின் பிராப்தி ஏற்படுகிறதோ மேலும் யார் எப்பொழுதும் உங்களுடன் கூடவே இருக்கிறாரோ அவரை ஏன் மறக்க வேண்டும்? முன்னேற்றுபவர் நினைவு வர வேண்டுமா அல்லது கீழே தள்ளுபவர் நினைவு வர வேண்டுமா? ஒருவேனை தள்ளிவிடுபவரின் நினைவு தவறுதலாகக் கூட வருகிறது என்றால் அதை அகற்றி விடுவீர்கள் இல்லையா?. பிறகு முன்னேற்றுபவரை ஏன் மறக்கிறீர்கள்? எப்பொழுதும் பிராமணர் தன்னுடைய சுய ஸ்திதியில், சுய நினைவில் மற்றும் உயர்ந்த நினைவில் நிலைத்திருக்கிறார் என்றால் மற்ற ஆத்மாக்களையும் நிலைத்திருக்கச் செய்ய முடியும். நீங்கள் அனைவரும் இந்த நேரம் இந்தக் காரியத்திற்காக தந்தையின் கூடவே பொறுப்பாளராக ஆகியிருக்கிறீர்கள்.

ஒவ்வொரு ஆத்மாவிற்கும் வெகு காலத்து இச்சை மற்றும் ஆசையாக என்ன இருக்கிறது? நிர்வாணதாம் மற்றும் முக்திதாமம் செல்வதற்கான இச்சை அனேக ஆத்மாக்களுக்கு வெகு காலமாக இருந்தே வந்திருக்கிறது. அப்படி அந்த அனைத்து ஆத்மாக்களின் வெகு காலமாக இருந்து வந்த ஆசையை நிறைவேற்றுவதற்கான காரியத்திற்கு பொறுப்பாளர் பிராமணர்கள் நீங்கள். நீங்கள் அந்த மாதிரி நிலையை உருவாக்கவில்லை என்றால் இந்தக் காரியத்தை எப்படி செய்வீர்கள்? ஒருவேளை முக்தி மற்றும் ஜீவன்முக்தி அடைவதற்கான தன்னுடைய ஆசையையே இப்பொழுது நிறைவேற்றவில்லை என்றால் மற்றவர்களுடையதை எப்படி செய்வீர்கள்? முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் உண்மையான அனுபவமாக என்ன இருக்கிறது

என்பதை முக்தி மற்றும் ஜீவன்முக்தி தாமத்தில் அனுபவம் செய்வீர்களா என்ன? முக்தியிலோ அனுபவம் செய்வதிலிருந்து விலகியிருக்கிறீர்கள். மேலும் ஜீவன்முக்தியின் ஜீவன் பந்தனம் என்றால் என்ன என்று தெரியாத நிலையில் இருக்கும் காரணத்தினால் ஜீவன் முக்தியிலும் இதையும் என்ன அனுபவம் செய்வீர்கள்? ஆனால் தந்தை மூலமாக என்ன முக்தி, ஜீவன்முக்தியின் ஆஸ்தி பிராப்தி ஆகுகிறதோ அதன் அனுபவத்தை இப்பொழுதுதான் செய்ய முடியும் இல்லையா? நிர்வாண நிலை மற்றும் முக்தியின் நிலையை இப்பொழுது தெரிந்து கொள்ள முடியும். எனவே முக்தி, ஜீவன்முக்தியின் அனுபவத்தை இப்பொழுது செய்ய வேண்டும். எப்பொழுது தானே முக்தி, ஜீவன்முக்தியின் அனுபவியாக இருப்பீர்களோ அப்பொழுதுதான் மற்ற ஆத்மாக்களுக்கும் முக்தி அதாவது தன்னுடைய வீடு மற்றும் தன்னுடைய இராஜ்ஜியம் அதாவது சொர்க்கத்தின் வாசலில் செல்வதற்கான டாஸ்) (அனுமதிச் சீட்டு) கொடுக்க முடியும் பிராமணர்கள் நீங்கள் எந்தவொரு ஆத்மாவிற்கும். கேட் பாஸ் கொடுக்கவில்லை என்றால் அவர் பாஸ் செய்ய (கடந்து செல்ல) முடியாது. அப்படி முக்தி, ஜீவன்முக்திதாமத்தின் கேட் பாஸ் பெறுபவர்களின் மிகப்பெரிய க்யூ (வரிசை) உங்களிடம் ஏற்படப் போகிறது. ஒருவேளை கேட் பாஸ் கொடுப்பதில் காலதாமதம் ஆக்கினீர்கள் என்றால் நேரம் டூ லேட் (மிக காலதாமதம் ) ஆகி விடும். எனவே தன்னை எப்பொழுதும் சுயசொரூபம், சுயதர்மம், சுயதேசி என்று புரிந்து கொள்வதினால், எப்பொழுதும் இந்த நிலையில் நிலைத்திருப்பதினால்தான் ஒரு நொடியில் எந்தவொரு ஆத்மாவையும் பார்வையினாலேயே மகிழ்ச்சி அடையச் செய்ய முடியும். தன்னுடைய நன்மை செய்யும் உள் உணர்வினால் அவர்களுக்கு நினைவூட்டி ஒவ்வொரு ஆத்மாவிற்கும் கேட் பாஸ் கொடுக்க முடியும். பாவம் துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் உயர்ந்த ஆத்மாக்கள் உங்களிட மிருந்து ஒரு நொடியில் தன்னுடைய பல ஜென்மங்களின் ஆசையை நிறைவேற்றுவதற்கான தானம் கேட்பதற்காக வருவார்கள். மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி ஒருநொடியின் விதியின் மூலமாக அந்த ஆத்மாக்களுக்கு ஸித்திநினைப்பது கைகூடுவது) பிராப்தி செய்விக்கும் அளவிற்கு அவ்வளவு சக்திகளை (உங்களுக்குள்) நிரப்பியிருக்கிறீர்களா? எப்பொழுது அறிவியல் படைப்பின் சக்தி ஒவ்வொரு நாளும் காலத்தின் மேல் வெற்றி அடைந்து கொண்டே சென்று கொண்டிருக்கிறது, ஒவ்வொரு காரியத்தையும் மிகக்குறைந்த நேரத்தின் விதி மூலமாக

காரியத்தின் ஸித்திதி பிராப்தி (வெற்றி) அடைந்து கொண்டே சென்று கொண்டிருக்கிறார்கள். சுவிட்சை ஆன் செய்தார்கள் மற்றும் காரியம் நிறைவேறியது. இதுதான் விதி இல்லையா? அப்படியானால் மாஸ்டர் படைப்பவர் தன்னுடைய அமைதி சக்தியின் மூலமாக மற்றும் அனைத்து சக்திகளின் மூலமாக ஒரு நொடியின் விதி மூலம் யாருக்காவது ஸித்தி(செய்யும் காரியங்களில் வெற்றி) கொடுக்க முடியாதா? அப்படி இப்பொழுது இந்த உயர்ந்த சேவையின் அவசியம் இருக்கிறது. அந்த மாதிரி சேவாதாரியாக மற்றும் இறைவனின் உதவியாளராக ஆகுங்கள்.

கண்களின் ஈஸ்வரிய போதை உதவி செய்யட்டும். ஏனென்றால் ஆத்மாக்கள் அனேக ஜென்மங்களாக, அனேக விதமான வழிமுறைகளை செய்து செய்து களைப்படைந்து இருக்கிறார்கள். இப்பொழுது ஸித்திதி விரும்புகிறார்கள் இல்லையா அல்லது சாதனாவா? (பயிற்சியா) அப்படி ஸித்திஎன்றால் சத்கதியை அடைவது. அந்த மாதிரி துடித்துக் கொண்டிருக்கும் களைப்படைந்திருக்கும் ஆத்மாக்கள் மற்றும் தாகமுள்ள ஆத்மாக்களின் தாகத்தை உயர்ந்த ஆத்மாக்கள் உங்களைத் தவிர வேறு யார் தணிப்பார்கள் மற்றும் ஸித்திதி பிராப்தி செய்விப்பார்கள்? உங்களைத் தவிர வேறு ஏதாவது ஆத்மா செய்ய முடியுமா? அனேக தடவைகள் செய்திருக்கிற தன்னுடைய உயர்ந்த காரியம் நினைவு வருகிறதா? எவ்வளவிற்கு எவ்வளவு உயர்ந்த நிலையை உருவாக்கிக் கொண்டே செல்விகளோ அந்த அளவு ஆத்மாக்களின் கூக்குரலின் வார்த்தைகள், ஆத்மாக்கள் உங்களுடைய சக்திகளை ஆவாஹனம் (அழைப்பு) செய்யும் வார்த்தைகள், அலைந்து திரிந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களின் அனாதை முகம், களைப்படைந்திருக்கும் ஆத்மாக்களின் முகங்கள் தென்படும். எப்படி ஸ்தாபனை காரியத்தின் ஆரம்ப காலத்தில் சாகார தந்தையின் அனுபவத்தின் உதாரணத்தைப் பார்த்தீர்கள். ஆத்மாக்களின் சேவையை செய்யாமல் நிற்க முடிந்ததா? சேவையைத் தவிர வேறு ஏதாவது தென்பட்டதா? அதே போல் ஆத்மாக்களுக்கு ஸித்திபிராப்தி செய்விப்பதின் முழுமையான ஈடுபாட்டில் மூழ்கியிருப்பவராக ஆகுங்கள். பின்பு இந்த சிறு சிறு விஷயங்களில் தன்னுடைய நேரம் மற்றும் சேமிப்பு ஆகியிருக்கும் சக்திகளை இழக்கிறீர்கள் இல்லையா அது பாதுகாக்கப்பட்டு விடும். மேலும் சேமிப்பு ஆகிக் கொண்டே இருக்கும். எப்பொழுது ஒரு விநாடியில் தன்னுடைய சக்திசாலியான உள்உணர்வு மூலம் எல்லைக்கப்பாற்பட்ட ஆத்மாக்களின்

சேவை செய்ய முடியும் என்றால் தன்னுடைய எல்லைக்குட்பட்ட சிறு சிறு விஷயங்களில் ஏன் நேரத்தை இழக்கிறீர்கள்? எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் இருந்தீர்கள் என்றால் எல்லைக்குட்பட்ட விஷடங்கள் தானாகவே அழிந்து விடும். நீங்கள் எல்லைக்குட்பட்ட விஷயங்களில் நேரத்தை வீணாக்கி பின்பு எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருக்க விரும்புகிறீர்கள் ஆனால் இப்பொழுது அந்த நேரம் கடந்து விட்டது. இப்பொழுதோ எல்லையில்லா சேவையில் எப்பொழுதுமே ஈடுபட்டிருந்தீர்கள் என்றால் எல்லைக்குட்பட்ட விஷயங்கள் தானாகவே விலகி விடும். எப்படி மற்ற ஆத்மாக்களுக்கு இப்பொழுது பக்தியில் நேரத்தை வீணாக்குவது என்றால் பொம்மைகளின் விளையாட்டில் நேரத்தை வீணாக்குவது என்று கூறுகிறீர்கள். ஏனென்றால் இப்பொழுது பக்தியின் காலம் முடிவடைந்து கொண்டிருக் கிறது, அப்படி கூறுகிறீர்கள்தான் இல்லையா? அப்படியானால் பின்பு நீங்கள் இந்த எல்லைக்குட்பட்ட விஷயங்கள் என்ற பொம்மை விளையாட்டில் ஏன் நேரத்தை வீணாக்குகிறீர்கள்? இதுவும் கூட பொம்மைகளின் விளையாட்டுதான் இல்லையா? அதன் மூலம் எந்த பிராப்தியும் இல்லை, நேரமும் வீணானது, சக்தியும் வீணானது. எனவே தந்தையும் இப்பொழுது இந்த பொம்மைகளின் விளையாட்டின் காலமும் முடிவடைந்து கொண்டிருக்கிறது என்று கூறுகிறார். எப்படி தற்சமயம் ஏதாவது ஒரு புது ஃபேஷன் வெளியாகிறது இந்த ஃபேஷன் நேரத்தில் யாராவது பழைய ஃபேஷனையே செய்கிறார் என்றால் அவரை என்னவென்று கூறுவது? அப்படி இந்த சின்ன சின்ன விஷயங்களில் நேரத்தை இழப்பது இது முந்தைய பழைய ஃபேஷனாகும். இப்பொழுது அதைச் செய்யாதீர்கள். எப்படி நீங்களும் சிலருக்கு இப்பொழுது நேரத்திற்குத் தகுந்தாற்போல் கையாள வேண்டும். பழைய கையாளுதலை செய்யாதீர்கள் என்று கூறுகிறீர்கள் இல்லையா? இன்னாருக்கு பழைய கையாளுதல், அவருக்கு புதிய கையாளுதல் அப்படி கூறுகிறீர்கள்தான் இல்லையா? அப்படி தன்னைத் தானே கையாளுதல் இதுவும் பழைய கையாளுதலாக இருக்கக் கூடாது. எப்படி மற்றவர்களுக்கு பழைய கையாளுதல் கொடுப்பது ஏற்றதாக இல்லையென்றால் தன்னை எப்படி பழைய கையாளுதலால் நடத்து விக்கிறீர்கள்? இப்பொழுது மாறும் நாளைக் கொண்டாடுங்கள். திட்டமிடும் புத்தியுள்ள பார்ட்டி வந்திருக்கிறார்கள் இல்லையா? எனவே பிளானிங் பார்ட்டிக்கு புதிய பிளான் கொடுக்கிறோம். எப்படி அந்த அரசாங்கமும் சில நேரம் சில

விசேஷங்களையும் சில வேறு சில நேரம் வேறு விசேஷ நாட்களையும் கொண்டாடுகிறார்கள் இல்லையா?. நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள் என்றால் தன்னைத் தானே பழைய பழக்க வழக்கத்தில் இறுந்துக் கொண்டே முயற்சி செய்வதில் மாற்றம் செய்யும் நாளைக் கொண்டாடுங்கள், ஆனால் அது எல்லைக்குட்பட்டது இல்லாமல் எல்லைக்கப்பாற்பட்டதாக இருக்கட்டும். மதுபன் யக்ஞ பூமியில் வந்திருக்கிறீர்கள் இல்லையா? யக்ஞத்தில் அக்னி இருக்கும். அக்னியில் ஏதாவதொரு பொருள் போடப்பட்டால் மிக விரைவில் மோல்ட் ஆகி விடும். எப்படி சொரூபம் உருவாக்க விரும்புகிறீர்களோ அப்படி ஆக்க முடியும். அதே போல் இங்கே யக்ஞத்தில் வந்திருக்கிறீர்கள் என்றால் தன்னைத் தானே எப்படி ஆக்க விரும்புகிறீர்களோ அப்படி சுலபமாகவே ஆக்க முடியும். நல்லது.

**வரதானம்: எந்தவொரு பயங்கரமான பிரச்சனையைக் கூட சீதளமாக்கக்கூடிய (குளிர்ந்த) சம்பூர்ண நிச்சயபுத்தி உடையவர் ஆகுக!**

எப்படி தந்தை மேல் நிச்சயம் இருக்கிறது அதே போல் தன் மேல் மற்றும் டிராமா (வாழ்க்கை) நாடகம், மேலும் முழுமையான நிச்சயம் இருக்கட்டும். தன் மேல் ஒருவேளை பலஹீனமான எண்ணம் உருவாகிறது என்றால் அது பலஹீனத்தின் சம்ஸ்காரம் ஆகி விடுகிறது. எனவே வீணான எண்ணம் என்ற பலஹீனத்தின் கிருமிகளை தனக்குள் நுழைய விடாதீர்கள். கூடவே என்னென்ன நாடகத்தின் காட்சிகளை பார்க்கிறீர்களோ குழப்பமான காட்சிகளிலும் கூட நன்மையின் அனுபவம் ஏற்படட்டும். சூழ்நிலை அசைக்கக்கூடியதாக இருந்தாலும், பிரச்சனை பயங்கரமான ரூபமாக இருந்தாலும் எப்பொழுதும் நிச்சயபுத்தி உடையவராகி வெற்றி அடைபவர் ஆனீர்கள் என்றால் பயங்கரமான பிரச்சனையும் கூட சீதளமாகி (மென்மை) விடும்.

**சுலோகன்: யாருக்கு தந்தை மற்றும் சேவை மேல் அன்பு இருக்கிறதோ அவருக்கு பரிவாரத்தின் அன்பு தானாகக் கிடைக்கிறது!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 26.10.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கர்மத்தின் (செய்யும் காரியத்தின்) ஆதாரம் உள்உணர்வு!

இன்று இல்லறத்தில் இருக்கும் பாண்டவ சேனையின் பட்டியின் ஆரம்பம் ஆகும். தன்னை பாண்டவன் என்று நினைக்கிறீர்களா? தன்னுடைய பாண்டவ சொரூபம் நிரந்தரமாக நினைவில் இருக்கிறதா? அல்லது சில நேரம் தன்னை பாண்டவன் என்று நினைக்கிறீர்கள் மற்றும் சில நேரம் குடும்பத்தில் இருப்பவன் என்று நினைக்கிறீர்களா? நிரந்தரமாக தன்னை பாண்டவன் அதாவது பாண்டா (வழிகாட்டி) என்று புரிந்து கொள்வதினால் எப்பொழுதும் யாத்திரை மற்றும் சென்றடையும் இலக்கைத் தவிர வேறு ஏதாவது நினைவில் இருக்க முடியுமா? ஒருவேளை வேறு ஏதாவது நினைவு இருக்கிறது என்றால் அதற்கான காரணம் தன்னுடைய பாண்டவ சொரூபத்தை மறந்து விடுகிறீர்கள். நினைவு அதாவது உள்உணர்வு மாறுவதினால் காரியமும் மாறி விடுகிறது. செய்யும் காரியத்தின் (கர்மத்தின்) ஆதாரம் உள்உணர்வு ஆகும். பிரவிருத்தி (இல்லறம்), விருத்தி (உள்உணர்வு) மூலமாகத் தன் தூய்மையானதாக மற்றும் தூய்மையில்லாததாக ஆகுகிறது. எனவே பாண்டவ சேனை உள்உணர்வை எப்பொழுதும் ஒரு தந்தையுடன் ஈடுபடுத்திக் கொண்டே இருந்தீர்கள் என்றால் விருத்தி மூலம் தன்னுடைய முன்னேற்றத்தில் விருத்தி (வளர்ச்சி) செய்ய மூடியும் வளர்ச்சிக்கு காரணம் உள்உணர்வு ஆகும். உள்உணர்வில் என்ன செய்ய வேண்டும்? ஒருவேளை உள்உணர்வு உயர்ந்ததாக இருக்கிறது என்றால் இல்லறம் உயர்ந்ததாக இருக்கும். அப்படியானால் சுலபமாக வளர்ச்சி ஏற்படும் அளவிற்கு உள்உணர்வில் எந்த விஷயத்தை வைக்க வேண்டும்? உள்உணர்வில் எப்பொழுதுமே ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற இதுவேதான் நினைவில் இருக்கட்டும் ஒரே தந்தை மூலமாக அனைத்து உறவுகள், அனைத்து பிராப்திகள் ஏற்படுகின்றன. இது எப்பொழுதும் உள்உணர்வில் இருப்பதினால் பார்வையில் ஆத்மீக சொரூபம் அதாவது சகோதர சகோதரனின் பார்வை எப்பொழுதும் இருக்கும். எப்பொழுது ஒரு

தந்தையிடமிருந்து பெற்ற அனைத்து உறவுகளின் பிராபதியின் நினைவிழந்த நிலை ஏற்படுகிறதோ அப்பொழுதுதான் உள்உணர்வு சஞ்சலமடைகிறது எப்பொழுது ஒரு தந்தையைத் தவிர வேறு எந்த உறவுமே இல்லை என்றால் உள்உணர்வு ஏன் சஞ்சலப்பட வேண்டும். உயர்ந்த உள்உணர்வு இருப்பதினால் சஞ்சலமான உள்உணர்வு இருக்க முடியாது. உள் உணர்வை உயர்ந்ததாக ஆக்கி விட்டீர்கள் என்றால் இல்வறம் தானாகவே உயர்ந்ததாக ஆகி விடும். எனவே உங்களுடைய உள்உணர்வை உயர்ந்ததாக ஆக்கினீர்கள் என்றால் இதுவே குடும்ப முன்னேற்றத்திற்குக் காரணமாகி விடும். மேலும் முன்னேற்றத்தின் மூலமாக கதி, சக்கதியை சுலபமாகவே அடைய முடியும் பிறகு இந்த குடும்பம் கீழே விழுவதற்கான காரணம் இருக்காது அப்படி இல்லற மார்க்கத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்றத்திற்காக உள்உணர்வை சரி செய்ய வேண்டும். பின்பு உள்உணர்வு சஞ்சலப்படுகிறது என்ற இந்த புகார் முடிவடைந்து விடும். நினைவு மற்றும் உள்உணர்வில் எப்பொழுதும் தன்னுடைய நிர்வாணதாமம் மற்றும் நிர்வாணநிலை இருக்க வேண்டும் மற்றும் சரித்திரத்தில் (காரியங்களில்) பணிவு இருக்க வேண்டும்.

அப்படி நிர்மாணம் (படைப்பு) நிர்மான் (பணிவு) மற்றும் நிர்வாண் (உடலைக் கடந்த நிலை) இந்த மூன்றுமே நினைவில் இருப்பதினால் சரித்திரம் (நடத்தை), கர்த்தவ்யம் (கடமை) மற்றும் ஸ்திதி (மனநிலை) மூன்றுமே இந்த (நினைவின் ஆதாரத்தில்) நினைவினால் சக்தி நிறைந்ததாக ஆகி விடும் அதாவது நினைவில் சக்தி வந்து விடுகிறது. எங்கு சக்தி இருக்கிறதோ அங்கு மூன்றிலும் நினைவிழந்த நிலை வர முடியாது. எனவே நினைவிழந்த நிலையை அகற்றுவதற்காக இந்த சக்தி நிறைந்த நினைவை வையுங்கள். இதுவோ மிகவும் சுலபம் இல்லையா. ஒருவேளை சரித்திரத்தில் நிர்மாண நிலை (உருவாக்கும்) இருக்கிறது என்றால், உலகப் படைப்பிற்கான கர்த்தவ்யமும் (காரியமும்) தானாகவே நடக்கும். நிர்மான நிலை என்றால் நிர்.அகங்காரி நிலை. அப்படி நிர்மான நிலையில் தேகத்தின் அகங்காரம் தானாக முடிவடைந்து விடுகிறது. அந்த மாதிரி நிர்மான நிலையில் இருக்கக்கூடியவர் எப்பொழுதும் நிர்வாண நிலையில் நிலைத்திருந்து கொண்டே பேச்சில் வருவார்கள் என்றால் பேச்சும் கூட யதார்த்தமானதாக மற்றும் சக்தி நிறைந்ததாக இருக்கும். எந்தவொரு பொருளும் எவ்வளவு அதிகம் சக்திசாலியாக இருக்கிறதோ அந்த அளவு குவான்ட்டிடி (கொள் அளவு) குறைவாக இருக்கும் ஆனால்

குவாலிட்டி (தரம்) அதிகமாக இருக்கும். அதே போல் எப்பொழுதும் நிர்வாண நிலையில் நிலைத்திருந்து பேச்சில் வந்தார்கள் என்றால் பேச்சில் கூட வார்த்தைகள் குறைவாக இருக்கும் ஆனால் சக்திசாலி அதிகமாக இருக்கும். இப்பொழுது விஸ்தாரம் அதிகமாகச் செய்ய வேண்டியதாக இருக்கிறது ஆனால் எப்படி எப்படி சக்திசாலியான நிலையை உருவாக்கிக் கொண்டே செல்கிறீர்கள் என்றால் உங்களுடைய ஒரு வார்த்தையில் ஆயிரம் வார்த்தையின் இரகசியம் அடங்கி இருக்கும். அதன் மூலம் வீணான பேச்சு தானாகவே முடிவடைந்து விடும். முழு ஞானத்தின் சாரம் சிறிய பேட்ஜ்'ல் அடங்கியிருக்கிறது, முழு கடலும் இந்த சிறிய படத்தில் சார ரூபத்தில் அடங்கியிருக்கிறது. அந்த மாதிரி உங்களுடைய ஒரு வார்த்தை கூட அனைத்து ஞானத்தின் இரகசியங்கள் நிரம்பியதாக வெளியாகும். அப்படி பேச்சில் கூட சக்தி நிரப்ப வேண்டும். உள்உணர்வு மற்றும் பேச்சில் சக்திசாலியாக ஆகி விடுகிறீர்கள் என்றால் காரியமும் எப்பொழுதும் யதார்த்தமானதாக மற்றும் சக்திசாலியானதாக ஆகி விடும்.

இங்கு பேட்டரியை (ஆத்மாவை) சார்ஜ் செய்வதற்காக வந்திருக்கிறீர்கள், எனவே பேட்டரியை சார்ஜ் செய்வதற்காக எப்பொழுதும் தன்னை உலகப் படைப்பு செய்வதற்கான இன்சார்ஜ் (பொறுப்பில் இருப்பவர்) என்று புரிந்து கொள்ளுங்கள். ஒருவேளை எப்பொழுதும் தன்னை இந்த உலகக் காரியத்தின் இன்சார்ஜ் (பொறுப்பாளி) என்று புரிந்து கொண்டீர்கள் என்றால், எப்பொழுதும் பேட்டரி சார்ஜ் ஆகி இருக்கும். இந்த சார்ஜிலிருந்து தன்னை மறந்தவராக எப்பொழுது ஆகிறீர்களோ அப்பொழுது பேட்டரி டிஸ்சார்ஜ் (சக்தியிழந்து) ஆகி விடுகிறது. எனவே எப்பொழுதும் தன்னை இந்தக் காரியத்தில் இன்சார்ஜ ன்று புரிந்து கொள்ளுங்கள். மேலும் தன்னுடைய பேட்டரி சார்ஜ் ஆவதற்கான சார்ட்டை அடிக்கடி சோதனை செய்தீர்கள் என்றால் ஒருபொழுதும் எண்ணம் மற்றும் காரியத்தில் மற்றும் ஆத்ம நிலையில் டிஸ்சார்ஜ் ஆகாது பிறகு இந்த புகார் (பலஹீன நிலை) முடிவடைந்து விடும். இதுவும் புகார்தான் இல்லையா? அனைவரிடமும் இந்த புகார்தான் அதிகமாக உள்ளது. இதற்கான காரணம் என்னவென்றால், தன்னை எப்பொழுதும் அந்த மாதிரி உயர்ந்த காரியத்தின் பொறுப்பாளர் என்று புரிந்து கொள்வதில்லை. என்ன காரியம் நான் செய்வேனோ என்னைப் பார்த்து மற்றவர்கள் செய்வார்கள், இதுவோ இருக்கவே இருக்கிறது ஆனால்

இந்த சுலோகனை இன்னும் ஆழமான ரூபத்தில் எப்படி தாரணை செய்வது என்பதைப் புரிந்திருக்கிறீர்களா? இந்த பாண்டவர்களின் பட்டிக்காக ஒரு ஆழமான சுலோகன் அவசியமாகும். அது எது? எப்படி என்ன காரியத்தை நான் செய்வேனோ என்னைப் பார்த்து மற்றவர்கள் செய்வார்கள் என்ற இந்த சுலோகனை கூறினோம் இல்லையா! அதே போல் பொறுப்பில் இருக்கும் ஆத்மா என்னுடைய உள்உணர்வு எப்படி இருக்குமோ அதே போல் வாயுமண்டலம் உருவாகும். எப்படி என்னுடைய உள்உணர்வோ அப்படி வாயுமண்டலம். அப்படி வாயுமண்டலத்தை மாற்றத்தில் கொண்டு வருவது உள்உணர்வு ஆகும். காரியத்தை விட உள்உணர்வு சூட்சுமமானதாகும். இப்பொழுது காரியத்தின் மேல் மட்டும் கவனம் கொடுக்கக் கூடாது ஆனால் உள்உணர்வினால் வாயுமண்டலத்தை உருவாக்கக்கூடிய பொறுப்பாளி கூட நான்தான். வாயுமண்டலத்தை சதோபிரதானமாக யார் ஆக்குவார்? நீங்கள் அனைவரும் பொறுப்பில் இருப்பவர்கள் இல்லையா? ஒருவேளை இந்த சுலோகன் எப்பொழுதும் நினைவில் இருக்குமேயானால் பின்பு உள்உணாவில் சஞ்சலம் ஏற்படுமா? குழந்தை கூட எப்பொழுது சஞ்சலம் செய்கிறது? எப்பொழுது ஃப்ரீயாக இருக்குமோ அப்பொழுதுதான். அப்படி எப்பொழுது உள்உணர்வில் இவ்வளவு பெரிய காரியத்தின் நினைவு குறைவாக இருக்கிறதோ அப்பொழுது உள்உணர்வும் சஞ்சலப்படுகிறது. ஒருவேளை மிகவும் சஞ்சலம் செய்யும் குழந்தை பிஸியாக இருந்தும் கூட சஞ்சலத்தை விடுவதில்லை என்றால் அதற்கு வேறு என்ன வழி இருக்கிறது? இதே புகார் இன்று வரை கூட இருக்கிறது. உள்உணர்வை நினைவில் மற்றும் ஞானத்தில் பிஸியாக வைப்பதற்கு முயற்சியும் செய்கிறோம் இருந்தாலும் சஞ்சலம் ஆகி விடுகிறது என்றால் அந்த மாதிரி யானவருக்கு என்ன செய்ய வேண்டும்? அதற்காக எப்படி சஞ்சலம் செய்யும் குழந்தைக்கு ஏதாவது ஒரு வகையில் ஏதாவது பந்தனத்தில் கட்டிப் போடுவதற்கான முயற்சி செய்யப்படுகிறது. அது ஸ்தூலமாக கட்டிப் போடுவதானாலும் அல்லது வார்த்தை மூலமாக ஏதாவது ஒரு பிராப்தியின் ஆதாரத்தைக் கொடுத்து அவரை தன்னுடைய அன்பில் கட்டிப் போடுகிறார்கள். அதே போல் புத்தியை மற்றும் எண்ணத்தையும் ஏதாவது ஒரு பந்தனத்தில் கட்டிப் போட வேண்டும். அந்த பந்தனம் எது? எங்காவது புத்தி செல்கிறது என்றால் முதலில் அதை சோதனை செய்யுங்கள். சோதனை செய்த பிறகு எங்கு எண்ணம் மற்றும் உள்உணர்வு செல்கிறதோ அந்த தேகதாரி மற்றும் லௌகீக பொருளை

மாற்றம் செய்து கொண்டே இந்த தேகதாரி மற்றும் லௌகீக பொருளை அலௌகீக அழியாத பொருளோடு ஒப்பிடும் நினைவைக் கொண்டு வாருங்கள். ஏதாவது ஒரு தேகதாரியின் உள்உணர்வு சஞ்சலப்படுத்துகிறதோ எந்த உறவில் சஞ்சலமாகிறதோ அதே உறவின் நடைமுறை அனுபவத்தை அழியாத தந்தை மூலமாகச் செய்யுங்கள். உதாரணமாக குடும்பத்தில் உள்ள யாரோ ஒருவரின் உள்உணாவு சஞ்சலப்படுத்துகிறது என்றால் இதே உறவின் அலௌகீக அனுபவத்தை அனைத்து உறவுகளுக்குரிய தந்தை மூலமாக பிராப்தி செய்யுங்கள். அப்படி முழுமையான பிராப்தி எப்பொழுது ஏற்பட்டு விடுகிறதோ பின்பு சஞ்சலப்படுவது முடிவடைந்து விடும். புரிந்ததா? ஒருவேளை அனைத்து உறவுகள் மற்றும் அனைத்து பிராப்தியும் ஒரு தந்தை மூலமாக ஏற்பட்டு விடுகிறது என்றால் மற்ற பக்கங்களில் புத்தி சஞ்சலப்படுமா? அப்படி ஒரே ஒரு மிகப் பெரிய பந்தனம் இதுதான். தன்னுடைய சஞ்சல உள்உணர்வை அனைத்து உறவுகளின் பந்தனத்தில் ஒரு தந்தையுடன் கட்டிப் போட்டீர்கள் என்றால் அனைத்து சஞ்சலமும் சுலபமாகவே முடிவடைந்து விடும். மேலும் வேறு ஏதாவது உறவு மற்றும் பிராப்தியின் வாய்ப்பே தென்படவில்லை என்றால் உள்உணர்வு எங்கே செல்ல முடியும்? அப்படி தன்னைத் தானே அந்த மாதிரி கட்டிப் போடுங்கள். புராணங்களில் சீதாவை கோட்டிற்குள்ளேயே இருப்பதற்கான கட்டளை இருந்தது என்ற காட்சி மிகவும் பிரஸித்திபெற்றது. அப்படி ஒவ்வொரு அடி எடுத்து வைத்தும், ஒவ்வொரு எண்ணத்தை உருவாக்கிக் கொண்டே தன்னை தந்தையின் கட்டளை (ஸ்ரீமத்) என்ற கோட்டிற்கு உள்ளேயே இருப்பதாக புரிந்து கொள்ளுங்கள். எப்போழுது எண்ணத்தில் கூட கட்டளைக் கோட்டிற்கு வெளியே வருகிறீர்களோ, அப்பொழுது வீணான விஷயங்கள் முற்றுகை இடுகின்றன. எனவே எப்பொழுதும் கட்டளையின் கோட்டிற்கு உள்ளேயே இருந்தீர்கள் என்றால் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பீர்கள். எந்த விதமான இராவணனின் சமஸ்காரமும் முற்றுகை இடாது மேலும் அவ்வப்பொழுது தன்னுடைய நேரத்தை இதே விஷயங்களை அகற்றுவதற்காக வீணாக இழக்க மாட்டீர்கள். முற்றுகையும் வேண்டாம், அடிக்கடி நேரமும் வீணாகாது. எனவே இப்பொழுது கட்டளையை எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். அந்த மாதிரி கட்டளைப்படி நடப்பவராக ஆவதற்காகத்தான் பட்டியில் வந்திருக்கிறீர்கள் இல்லையா. எனவே ஒரு எண்ணம் கூட கட்டளைக்கு புறம்பானதாக இருக்க வேண்டாம் என்று அந்த மாதிரி பயிற்சி செய்து செல்லுங்கள்.

அந்த மாதிரி கட்டளைப்படி நடப்பவர் என்ற திலகம் நினைவில் இடப்பட்டதாகவே இருக்கட்டும். இந்த திலகத்தை இடுங்கள் பின்பு முதல் நம்பரில் யார் வருகிறார் என்று பார்க்கலாம். இந்த திலகத்தை தாரணை செய்வதில் முதல் பரிசு பெறுபவர் யாராக இருப்பார்? நல்லது.

**வரதானம்: இல்லறத்தில் இருந்து கொண்டே என்னுடையது என்பதை தியாகம் செய்யக்கூடிய உண்மையான டிரஸ்டி, மாயாவை வென்றவர் ஆகுக!**

எப்படி அசுத்தத்தில் கிருமிகள் உற்பத்தியாகிறது, அதே போல் எப்பொழுது என்னுடையது என்பது வருகிறது என்றால் மாயாவின் பிறப்பு ஏற்படுகிறது. மாயாவை வென்றவராக ஆவதற்கான சுலபமான வழி தன்னை எப்பொழுதும் டிரஸ்டி என்று பரிந்து கொள்ளுங்கள். பிரம்மா குமார் என்றால் டிரஸ்டி, டிரஸ்டிக்கு எதன் மேலும் பற்றுதல் இருப்பதில்லை. ஏனென்றால் அவரிடம் என்னுடையது என்பது இருப்பதில்லை. குடும்பஸ்தன் என்று நினைத்தீர்கள் என்றால் மாயா வரும், மேலும் டிரஸ்டி என்று புரிந்து கொண்டீர்கள் என்றால் மாயா ஓடி விடும். எனவே விலகியவராக இருந்து பின்பு இல்லறத்தில் காரியத்தில் வந்தீர்கள் என்றால் மாயா ஃப்ரூப் (maya-proof மாயாவால் தாக்க முடியாதவர்) ஆக இருப்பீர்கள்.

**சுலோகன்: எங்கு அபிமானம் இருக்கிறதோ அங்கு அவமானத்தின் ஃபீலிங் (feeling) அவசியம் வரும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 31.11.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனுபவத்தின் வில் பவர் (மனோபலம்) மூலமாக மாயாவின் பவரை (சக்தியை) எதிர்கொள்வது!

ஆன்மீக டிரில்லை (பயிற்சியை) தெரிந்திருக்கிறீர்களா? எப்படி உடல் டிரில்லின் பயிற்சி உடையவர் ஒரு நொடியில் எங்கு மற்றும் எப்படி தன்னுடைய உடலை வளைக்க விரும்புகிறாரோ அப்படி அங்கு வளைக்க முடியும். அந்த மாதிரி ஆன்மீக டிரில் செய்யும் பயிற்சி உடையவர்கள் ஒரு நொடியில் புத்தியை எங்கு விரும்புகிறீர்களோ மற்றும் எப்பொழுது விரும்புகிறீர்களோ அதே நிலையில் அதே சதவிகிதத்தில் நிலைத்திருக்கச் செய்ய முடியுமா? அந்த மாதிரி எவரெடியான ஆன்மீக இராணுவமாக ஆகியிருக்கிறீர்களா? தன்னுடைய சம்பூர்ண நிராகார, நிரகங்கார மற்றும் நிர்விகார நிலையில் நிலைத்து விடுங்கள் என்று இப்பொழுது கட்டளை கிடைத்தது என்றால் நிலைத்திருக்க முடியுமா என்ன? அல்லது சாகார உடல், சாகார உலகம் மற்றும் விகார எண்ணம் விரும்பாவிட்டாலும் கூட தன் பக்கம் கவர்ந்திழுக்குமா? இந்த உடலின் கவர்ச்சியிலிருந்து ஒரு நொடியில் விலக முடியுமா? வெற்றி மற்றும் தோல்விக்கான ஆதாரம் ஒரு நொடியாக இருக்கிறது. அப்படியானால் ஒரு நொடியின் பந்தயத்தில் வெற்றி அடைய முடியுமா? அந்த மாதிரி வெற்றி அடைபவர் என்று தன்னைத் தானே நினைக்கிறீர்களா? அந்த மாதிரி சர்வ சக்திகளின் செல்வம் நிறைந்தவர் என்று தன்னை நினைக்கிறீர்களா? அல்லது இனி மேல்தான் சம்பூர்ண சர்வ சக்திவான் ஆக வேண்டுமா? வள்ளலின் குழந்தைகள் எப்பொழுதும் அனைத்து செல்வங்களில் நிறைந்தவராக இருப்பார்கள், அப்படி தன்னை நினைக்கிறீர்களா? அல்லது இது வரை 63-ஜென்மங்களின் பக்தி நிலையின் மற்றும் பிச்சைக் கேட்கும் தன்மையின் சம்ஸ்காரம் எப்பொழுதாவது வெளிப்படுகிறதா? தந்தையின் உதவி வேண்டும், ஆசீர்வாதம் வேண்டும், சகயோகம் வேண்டும். சக்தி வேண்டும், அப்படி வேண்டும், வேண்டும் என்பது

இன்னுமா? வேண்டும் என்ற வார்த்தை வள்ளல், படைப்பவர், வரமளிக்கும் வள்ளலின் குழந்தைகளின் எதிரில் அழகாக இருக்கிறதா? இப்பொழுதோ படைப்பவர் மற்றும் வரமளிப்பவராகி உலகத்தின் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஏதாவது தானம் மற்றும் வரதானம் கொடுக்க வேண்டுமேயன்றி இது வேண்டும், இது வேண்டும்... என்ற எண்ணத்தை இன்னும் வைத்துக் கொள்ள வேண்டுமா? வள்ளலின் குழந்தைகள் அனைத்து சக்திகளினால் நிரம்பியவராக இருப்பார்கள். இந்த நிரம்பிய நிலைதான் சம்பூர்ண நிலையை அருகில் கொண்டு வருகிறது. தன்னை உலகில் அனைத்து ஆத்மாக்களிலிருந்து விலகியிருக்கும் மற்றும் தந்தைக்குப் பிரியமான விசேஷ ஆத்மாக்கள் என்று நினைக்கிறீர்களா? அப்படியானால் சாதாரண ஆத்மாக்கள் மற்றும் விசேஷ ஆத்மாக்களில் என்ன வித்தியாசம் இருக்கிறது என்ற இந்த வித்தியாசத்தை தெரிந்திருக்கிறீர்களா? விசேஷ ஆத்மாக்களின் விசேஷங்கள் தன்னை மற்றவர்கள் எப்பொழுதும் சர்வ சக்திகள் நிரம்பியவராக அனுபவம் செய்கிற மாதிரி பிரத்யக்ஷ ரூபத்தில் தென்பட வேண்டும். இல்லை என்ற ஒன்றுமே இல்லை என்கிற மஹிமை இருக்கிறது அது இந்த நேரத்தில் எப்பொழுது அனைத்து சக்திகளினால் தன்னை நிரம்பியவராக ஆக்குவீர்களோ அப்பொழுதுதான் எதிர்காலத்தில் கூட எப்பொழுதும் அனைத்து குணங்களினால் நிரம்பிய, அனைத்து பொருள்களினால் நிரம்பிய மற்றும் சம்பூர்ண நிலையை அடைய முடியும். எனவே தன்னை அந்த மாதிரி ஆக்குவதற்காகத்தான் விசேஷமாக பட்டியில் வந்திருக்கிறீர்கள். என்னென்ன தன்னுள் பிராப்தி இல்லை என்று அனுபவம் செய்திருந்தீர்களோ அது பிராப்தியின் ரூபத்தில் மாறிவிட்டதா அல்லது இன்று வரை ஏதாவது பிராப்தியின்மையை அனுபவம் செய்கிறீர்களா? இந்த பிராப்தி அழியாததாக இருக்கும் இல்லையா? பிராப்தி என்றாலே பிராப்திதான்.

எப்பொழுது அனுபவ சொரூபம் ஆகி விட்டீர்களோ அப்போது அனுபவத்தின் விஷயங்கள் அழியாததாக இருக்கும். கேட்ட விஷயங்கள். வாயுமண்டலத்தின் பிரபாவத்தின் ஆதாரத்தில் கிடைக்கப்பெற்ற விஷயங்கள் மற்றும் ஏதாவது உயர்ந்த ஆத்மாக்களிடமிருந்து கேட்டதின் ஆதாரத்தில், அந்த பிரபாவத்தினுள் பிராப்தியாகியிருக்கும் விஷயங்கள் அற்பகாலத்திற்கானதாக இருக்க முடியும் ஆனால் தன்னுடைய அனுபவத்தின் விஷயங்கள் சதாகாலத்திற்குமானதாக, அழியாததாக

இருக்கும். அப்படியானால் கேட்பவராக ஆகியிருக்கிறீர்களா அல்லது அனுபவிமூர்த்தியாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது மீண்டும் கேட்ட விஷயங்களை சிந்தனை செய்ததற்குப் பிறகு இப்பொழுது அனுபவியாக சேவைக்குத் தகுதியானவர் ஒரு விநாடி கூட சேவையின்றி கடந்து செல்ல வேண்டாம். அந்த மாதிரி கே க்குத் தியான ஆக வேண்டும். இதுதான் விசேஷ ஆத்மாக்களின் விசேஷம் அப்படி அனைத்து விஷயங்களிலும் ஃபுல் ஆக (நிரம்பியவராக) வேண்டும். தந்தையின் மஹிமையின் அனைத்து வார்த்தைகளில் ஃபுல் வருகிறது இல்லையா? யார் அனைத்து விஷயங்களில் ஃபுல் ஆக இருக்கிறாரோ அவர் ஃபெயில் ஆவதில்லை. ஃபுல்லில் ஃப்லா (குறை) இருப்பதில்லை எனவே ஃபெயில் ஆவதில்லை. ஃபெயில் ஆவதுமில்லை, வீணான ஏதாவது விஷயங்களில் ஃபீல் (உணர்ச்சி வசப்படுவது) ஆவதும் இல்லை. சிறு சிறு விஷயங்களில் ஃபீல் பண்ணுகிறீர்கள் இல்லையா? யார் ஃபுல் ஆக இருப்பாரோ அவர் வீணான விஷயங்களில் ஃபீல் பண்ண மாட்டார், ஃபெயில் ஆகவும் மாட்டார். அப்படியானால் அந்த மாதிரி திலகம் இடப்பட்டவராக ஆகியிருக்கிறீர்களா? அனைத்து சக்திகளின் நிரம்பியதின் திலகத்தை தனது நெற்றியில் இட்டிருக்கிறீர்களா? ஒருவேளை மேலே சொன்ன திலகத்தை எப்பொழுதும் நெற்றியில் இடவில்லை என்றால் நினைவில் கூட நினைவு செய்வதற்குப் பதிலாக என்ன செய்கிறீர்கள்? நினைவு செய்வதற்குப் பதிலாக புகார் செய்கிறீர்கள் ஆனால் இப்பொழுது செய்ய மாட்டீர்களா? புகார்களின் கோப்பு உருவாகி விட்டது. ஒவ்வொருவரின் புகார்களின் கோப்பு எத்தனை இருக்கிறது என்று தெரியுமா? எனவே நிரந்தரமாக நினைவில் இருப்பதினால், நிரந்தரமாக வெற்றி அடைபவர் ஆவதினால், நிரந்தரமாக சேவைக்குத் தகுதியானவர் ஆவதினால் புகார் செய்வதின் அவசியமே இருக்காது. முழுமையான பலஹீனங்களின் ஆகுதி (இறை அர்ப்பணம்) போடுவதற்காக பட்டியில் வந்திருக்கிறீர்கள் என்றால் அனைத்து பலஹீனங்களின் ஆகுதியை யக்ஞத்தில் போட்டாகி விட்டதா அல்லது இன்னும் மிச்சம் இருக்கிறதா? எப்பொழுது ஆகுதி போட்டு விடுகிறார்கள் என்றால் கடைசியில் என்ன சொல்கிறார்கள்? ஸ்வாஹா, நீங்கள் அனைவரும் ஸ்வாஹா ஆகியிருக்கிறீர்களா? யார் ஸ்வாஹா ஆகி விட்டாரோ அவர் கடந்து சென்ற விஷயத்தை கனவில் கூட பார்க்க முடியாது. அந்த மாதிரி ஸ்வாஹா ஆகியிருக்கிறீர்களா? தைரியம் மற்றும் உற்சாகம் இந்த இரண்டுமே பெரும்பான்மையோரின் ரிசல்ட்டில் இப்பொழுது தென்படுகிறது. இதே தைரியம் மற்றும் உற்சாகத்தை

நிரந்தரமாக தன்னுடைய உள்உணர்வாக ஆக்க வேண்டும். நிலம் சீராகவும் இருக்கிறது, மேலும் நன்கு விளைச்சல் கொடுப்பதாகவும் இருக்கிறது ஆனால் தன்னுடைய வினை நிலத்தில் கடந்த கால வாழ்க்கையின் பாவம் மற்றும் பாவத்தின் முட்களை விதைக்க விடாதீர்கள். முட்களை தந்தையின் எதிரில் சமர்ப்பணம் செய்து விட்டீர்களா? அனைத்து முட்களும் இதுவரை உள்ளே இருக்கும் காரணத்தினால் நஷ்டம் ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன. அவை இப்பொழுது தந்தையின் எதிரில் ஸ்வாஹா ஆகி விட்டது. சாம்பலையும் ஸ்வாஹா என்று கூறுவார்கள். சாம்பலான பொருளை மீண்டும் ஒருபொழுதும் தன்னுடைய நிலத்தில் விதைக்கக் கூடாது. அதாவது நினைவில் கொண்டு வர வேண்டாம். ஸ்வாஹா என்றால் பெயர் அடையாளம் இல்லாத நிலை. இன்றிலிருந்து சதோகுண ஆத்மா தன்னுடைய சம்ஸ்காரங்கள் இவை அல்ல என்று அந்த மாதிரியே புரிந்து கொள்ள வேண்டும். எப்படி மற்றவர்களின் சம்ஸ்காரங்களை சாட்சியாகிப் பார்க்கிறீர்கள் அதே போல் தன்னுடைய கீழான நிலையின் சம்ஸ்காரங்களையும் அந்த மாதிரி சாட்சியாகிப் பார்க்க வேண்டும். அந்த மாதிரி அவற்றை அழித்து விட வேண்டும். ஸ்வாஹா ஆகி விட்டது என்று நினைப்பதினால்தான் எப்பொழுதும் வெற்றியை அடைந்து கொண்டே இருப்பீர்கள். நல்லது.

**வரதானம்: நிமித்த உணர்வு (கருவி மற்றும் பொறுப்பிலிருப்பவர்) என்பதின் நினைவு மூலமாக மாயாவின் வாசலை மூடக்கூடிய டபுள் லைட் ஆகுக!**

யார் தன்னை எப்பொழுதும் நிமித்தம் என்று புரிந்து நடந்து கொள்கிறாரோ அவருக்கு டபுள் லைட் நிலையின் அனுபவம் தானாக ஏற்படுகிறது. செய்பவர், செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார் நான் நிமித்தமாக இருக்கிறேன் இதே நினைவின் மூலமாக வெற்றி ஏற்படுகிறது. நான் என்ற உணர்வு வந்தது என்றால் மாயாவின் வாசல் திறந்தது, நிமித்தம் என்று புரிந்தீர்கள் என்றால் மாயாவின் வாசல் மூடப்பட்டது. அப்படி நிமித்தம் என்று புரிந்து கொள்வதினால் மாயாவை வென்றவராகவும் ஆகி விடுகிறார் மற்றும் டபுள் லைட் ஆகவும் ஆகி விடுகிறார். கூடவே வெற்றியும் அவசியம் கிடைக்கிறது. இதே நினைவு நம்பர்-1 பெறுவதற்கான ஆதாரம் ஆகி விடுகிறது.

**சுலோகன்: திரிகாலதரிசியாகி ஒவ்வொரு காரியத்தையும் செய்தீர்கள் என்றால் வெற்றி சுலபமாக கிடைத்துக் கொண்டே இருக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.12.1971 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அனைத்து சக்திகளின் செல்வந்தனாக ஆகுங்கள்!

விதேகி (உடலற்ற), விதேசி (வேறு தேசத்தைச் சேர்ந்த) பாப்தாதாவிற்கு குழந்தைகளுக்குச் சமமாக தேகத்தின் ஆதாரம் எடுத்து, எப்படி தேசமோ அப்படி வேசத்தை தாரணை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அன்பான உயர்ந்த ஆத்மாக்கள் தங்களுடைய அன்பினால் விதேகிக்குக் கூட தன்னைப் போலவே ஆக்குவதற்கான அழைப்பு கொடுக்கிறார்கள். மேலும் தந்தை குழந்தைகளின் அழைப்பை ஏற்றுக் கொண்டு சந்திப்பதற்காக வருகிறார். இன்று தந்தையும் அனைத்து குழந்தைகளுக்கு அழைப்பு கொடுப்பதற்காக வந்திருக்கிறார். என்ன அழைப்பு என்று தெரிந்திருக்கிறீர்களா? இப்பொழுது வீடு திரும்புவதற்காக முழு ஏற்பாடும் செய்தாகி விட்டதா? அல்லது இன்னும் செய்ய வேண்டியது இருக்கிறதா? இப்பொழுது ஏற்பாடு செய்வீர்களா? ஏற்பாடு செய்வதில் எவ்வளவு காலம் எடுக்கும்? இந்த புது மலர்த்தோட்டத்திற்கு விசேஷமான புதுமையைக் காண்பிக்க வேண்டும். நாம் புதியவர்கள் என்ன செய்ய முடியும் என்று அப்படி நினைக்கவில்லையே ஆனால் இந்த புருஷோத்தம உயர்ந்த சங்கமயுகத்தின் நேரம் குறைந்து கொண்டே இருக்கிறது என்பதை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும். எந்தவொரு ஆத்மாவும் தன்னுடைய தீவிர முயற்சியினால் வரம் அளிக்கும் வள்ளலிடமிருந்து எவ்வளவு வரதானம் பெற விரும்புகிறதோ அவ்வளவு பெற முடியும் என்ற வரம் இந்த குறைந்த சங்கமயுக நேரத்திற்கு வரமளிக்கும் வள்ளல் மூலமாக கிடைத்திருக்கிறது. எனவே எதிரில் அமர்ந்திருக்கும் புதுப்புது மலர் தோட்டத்திற்கு நேரெதிரில் வந்திருக்கும் மலர்களுக்கு என்ன விரும்புகிறார்களோ, எப்படி விரும்புகிறார்களோ, எவ்வளவு நேரத்தில் விரும்பினாலும் வரமளிக்கும் தந்தையிடமிருந்து வரதானத்தின் ரூபத்தில் ஆஸ்தி பிராப்தியாக முடியும். எனவே விசேஷமாக பாப்தாதாவிற்கு இந்த புதிய மலர்த்தோட்டத்தின் மேல், அன்பிற்குரிய

ஆத்மாக்களின் மேல் விசேஷ அன்பு மற்றும் சகயோகம் இருக்கிறது. தந்தையின் இந்த சகயோகத்தையே சகஜயோகத்தின் ரூபத்தில் தாரணை செய்து கொண்டே செல்லுங்கள். இதே வரதானம் கொஞ்ச காலத்தில் ஹை ஜம்ப் (உயரம் தாண்டுதல்) செய்விக்க முடியும். ஆத்மா எனக்கு இந்த டிராமாவில் (வாழ்க்கை நாடகத்தில்) விசேஷ பாத்திரம் இருக்கிறது என்பதை மட்டும் எப்பொழுதும் நினைவில் வையுங்கள். என்ன பாத்திரம்? சர்வ சக்திவான் தந்தை சகயோகியாக இருக்கிறார். யாருடைய சகயோகியாக சர்வ சக்திவான் இருக்கிறாரோ அவர் உயரே தாண்டுதல் செய்ய முடியாதா என்ன சகயோகத்தை சகஜயோகமாக ஆக்குங்கள். தந்தைக்குத் தகுதியான சகயோகி ஆவதுதான் யோகயுக்த நிலை இல்லையா? யார் நிரந்தர யோகியாக இருப்பாரோ அவருடைய ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் செயல் தந்தையின் மற்றும் தன்னுடைய ராஜ்யத்தின் ஸ்தாபனை காரியத்தில் எப்பொழுதும் சகயோகியாக இருப்பதுதான் தென்படும். இதைத்தான் ஞான சொரூப ஆத்மா, யோகா நிறைந்த ஆத்மா மற்றும் உண்மையான சேவாதாரி என்று கூறப்படுவது. அப்படி எப்பொழுதும் சகயோகி ஆவதுதான் சகஜயோகம் ஆகும். ஒருவேளை பத்தி மூலமாக எப்பொழுதும் சகயோகி ஆவது ஏதோ ஒரு காரணத்தினால் கடினமாக அனுபவம் ஆகிறது என்றால், வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலமாகவும் தன்னை சகயோகியாக ஆக்கினீர்கள் என்றாலும் யோகி ஆவீர்கள். அந்த மாதிரி நிரந்தர யோகியாக ஆக முடியும் இல்லையா அல்லது இதுவும் கடினமா? மனதால் இல்லை என்றால் உடலால், உடலால் இல்லை என்றால் செல்வத்தால், செல்வத்தினால் இல்லை என்றால் எதில் சகயோகி ஆக முடியுமோ அதில் அவர் சகயோகி ஆவது கூட ஒரு யோகாவாகும்.

ஒன்று தன்னிடமுள்ள தைரியம், தைரியத்தின் மூலமாக சகயோகியாக ஆக்குவது. ஒருவேளை தைரியம் இல்லை என்றால், உடலிலும் தைரியம் இல்லை, மனதிலும் தைரியம் இல்லை, செல்வத்திலும் இல்லை என்றால் என்ன செய்வார்கள்? இந்த மாதிரியானவரும் கூட எப்பொழுதும் யோகி ஆக முடியும். சிலர் அப்படியும் இருக்கிறார்கள், தன்னுடைய தைரியம் இருப்பதில்லை ஆனால் உற்சாகம் இருக்கிறது. உள்ளப்பூர்வமான ஆர்வம் இருக்கிறது. செல்வத்தின் சக்தி இல்லாமல் இருந்தாலும், மனதில் கட்டுப்படுத்தும் சக்தி இல்லை, வீணான எண்ணம் அதிகமாக இருக்கிறது ஆனால் எந்த விஷயம் வாழ்க்கையின் அனுபவத்தில் உற்சாகம் மற்றும்

உள்ளப்பூர்வமான ஆர்வத்தை கொண்டு வரக்கூடியதாக இருந்தால் அதன் மூலமாக மற்றவர்களுக்கு ஆர்வத்தை கொடுத்தீர்கள் என்றால் மற்றவர்களுக்கு தைரியம் வருவதினால் உங்களுக்கும் பங்கு கிடைத்து விடும். எந்தெந்த ஆத்மாக்கள் தொடக்கத்திலிருந்தும் மற்றும் இப்பொழுதும் வந்து கொண்டிருக்கிறார்களோ அந்த ஒவ்வொரு ஆத்மாவிற்கும் தன்னுடைய வாழ்க்கையில் ஏதாவது பிராப்தியின் அனுபவம் அவசியம் இருக்கும். அதனால்தான் வந்திருக்கிறார்கள். இதே விசேஷ அனுபவத்தை அனேக ஆத்மாக்களுக்கு உற்சாகம் மற்றும் உள்ளப்பூர்வமான ஆர்வத்தை அதிகரிக்கும் காரியத்தில் ஈடுபடுத்த முடியும். இந்த செல்வத்தினால் உ யாரும் வஞ்சிக்கப்படக் கூடாது. எது தன்னிடம் இருக்கிறதோ எவ்வளவு இருக்கிறதோ அதன் மூலமாக மற்றவர்களை தைரியம் நிறைந்தவராக ஆக்குவது மற்றும் சகயோகி ஆக்குவது இதுவும் உங்களுடைய சகயோக பாடத்தில் மதிப்பெண் சேமிப்பாகிறது. யோகா சுலபமா அல்லது கடினமா என்று இப்பொழுது கூறுங்கள். நிரந்தர யோகியாவது கடினமா? யார் தந்தையின் குழந்தையாக ஆகியிருக்கிறார்கள் என்றால் இதில் சதவிகிதம் இல்லைதான் இல்லையா? இதிலோ முழுமையாக தேர்ச்சி அடைந்திருக்கிறீர்கள் இல்லையா. எப்பொழுது தந்தையினுடையவர் என்ற பிறகு ஒரு தந்தையைத் தவிர மற்றொன்று என்ன இருக்கிறது? தந்தை மற்றும் நீங்கள் அவ்வளவுதான். மூன்றாவதோ யாரும் இல்லை. தந்தையிடம் ஆஸ்தியோ இருக்கவே இருக்கிறது. வேறு மூன்றாவதாக ஏதாவது இருக்கிறதா என்ன? தந்தை மற்றும் நீங்கள்; அதாவது ஆத்மா என்றால் நீங்கள் மற்றும் தந்தை மட்டுமே என்றாகி விட்டீர்கள் என்றால் இருவரும் சந்திப்பதில் மூன்றாவதாக தடை ஏதும் இல்லை என்றால் நிரந்தர யோகி ஆகி விட்டீர்கள் இல்லையா? மூன்றாவதாக வேறு எதுவும் அல்லது எவரும் இல்லை என்றால் வேறு ஏதாவது எங்கிருந்து வர முடியும். பின்பு வந்து விட்டது, என்ன செய்வது என்று ஒருபொழுதும் கூறமாட்டீர்கள் இல்லையா? இப்பொழுது இந்த மொழியை முடிவு கட்ட வேண்டும். நான் இருப்பதே எப்பொழுதும் தந்தையின் சகயோகி அதாவது சகஜயோகி என்று எப்பொழுதும் நினையுங்கள். மற்ற நினைவுகள் என்ன என்பதே தெரியாத நிலை இருக்கட்டும். எப்படி எதிர்காலத்தில் மாயா என்று ஒன்று இருக்கிறது என்று தெரியாமல் இருக்குமோ அதே போல் இப்பொழுதைய நிலை இருக்கட்டும். இந்த குழந்தைப் பருவத்தின் விஷயங்கள் கடந்து சென்று விட்டது; இப்பொழுதோ வாசலின் எதிரில்

வந்து விட்டீர்கள். யார் எப்படி தந்தையின் குழந்தைகளாக இருக்கிறார்களோ அதில் எந்தவொரு சதவிகிதமும் இருப்பதில்லை. அதே போல் நிரந்தர சகஜயோகி மற்றும் யோகியாவதின் நிலையில் கூட இப்பொழுது சதவிகிதம் முடிவடைந்து விட வேண்டும். இயற்கையான மற்றும் இயல்பானதாக ஆகி விட வேண்டும். எப்படி சிலருக்கு விசேஷ நேச்சர் (இயல்பு) இருக்கிறது என்றால், விரும்பாவிட்டாலும் அந்த இயல்பின் வசமாகி நடந்து கொண்டே இருப்பார்கள். என்னுடைய இயற்கையான இயல்பு என்று சொல்கிறார்கள் இல்லையா. விரும்புவது இல்லை ஆனால் அது என்னுடைய இயற்கையான இயல்பு அப்படி சகஜயோகி மற்றும் சகயோகியின் நேச்சர் நிரந்தரமாக ஆகி விடட்டும். இயல்பானதாக ஆகி விடட்டும். என்ன செய்வது, எப்படி யோகா செய்வது என்ற இந்த விஷயங்கள் முடிவடைந்து விடட்டும். இருப்பதே எப்பொழுதும் சகயோகியாக என்றால் யோகியாவார். இந்த ஒரு வி யத்தை இயற்கையான மற்றும் இயல்பானதாக ஆக்குவதினால் கூட அனைத்து பாடங்களும் பெர்ஃபக்ட் (முற்றுப்பெற்றதாக) ஆகி விடும். பெர்ஃபக்ட் என்றால் எஃபக்ட்டிலிருந்து (பாதிப்பிலிருந்து) விலகிய நிலை, டிஃபக்ட்டிலிருந்தும் (குறையிலிருந்தும்) விலகியவராக ஆகி விடுவார். அப்படி இன்றிலிருந்து அனைவரும் நிரந்தர சகஜயோகி ஆகி விட்டீர்களா? அல்லது இனி மேல்தான் ஆவீர்களா? எப்பொழுது வரம் அளிக்கும் வள்ளல் தந்தை ஆஸ்தியுடன் கூடவே வரதானமும் கொடுக்கிறார் என்றால் யாருக்கு ஆஸ்தியின் அதிகாரமும் இருக்கிறது, வரதானமும் பிராப்தி ஆகிறது என்றால் அவருக்காக கடினமாக இருக்குமா? யாராவது வந்து கடினம் என்று கூறினார்கள் என்றால் ஆஸ்தி மற்றும் வரதானத்தை நினைவூட்டுங்கள். மற்றபடி வீடு செல்வதற்கான ஒரு அடி இன்னும் பாக்கி இருக்கிறது. இப்பொழுதோ ஒவ்வொரு அடியில் பல மடங்கு அதிபதியாக ஆகியிருக்கிறீர்கள். அவ்வளவு வரதானம், வரமளிக்கும் வள்ளல் மூலமாக பிராப்தியாகியிருக்கிறது. எப்பொழுது ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு அதிபதியாக ஆனீர்கள் என்றால் ஏதாவது ஒரு அடி வீணாகச் செல்லுமா என்ன? ஒவ்வொரு அடியிலும் சக்திசாலியான நிலை இருக்கிறது வீணானது இல்லை. நினைவில் சக்தியைக் கொண்டு வாருங்கள். சாதாரண நிலையை முடிவு கட்டுங்கள் மற்றும் நினைவில் சக்தியை கொண்டு வந்து ஒவ்வொரு அடியிலும் பல மடங்கை கொண்டு வந்தே சென்றீர்கள் என்றால் அப்பொழுது உலகின் அதிபதி ஆவீர்கள்.

நல்லது. இன்று விசேஷமாக மலர்த்தோட்டத்திற்காக அன்பினால் இழுக்கப்பட்டே வந்திருக்கிறோம். சிறியவர்கள் மேல் எப்பொழுதும் அதிக அன்பு இருக்கிறது. அப்படி தன்னை காணாமல் போய் கண்டெடுக்கப்பட்டவர்களாக புரிந்து கொள்ளுங்கள். மிகச் செல்லமானவர்கள், எனவே தந்தைக்குச் சமமானவராகிச் காண்பிக்க வேண்டும். சகோதர சகோதரிகளின் சமமாக வேண்டாம், தந்தைக்குச் சமமாக வேண்டும். எந்த அன்போடு அழைத்தீர்களோ அதே அன்பினாலேயே தந்தை சந்திக்கவும் செய்கிறார் மற்றும் நமஸ்காரமும் செய்கிறார்.

சப்தமின்றி ரகசியத்தைப் புரிந்து கொள்ள முடியுமா? தன்னுடைய மனதில் இருக்கும் இரகசியத்தை மற்றவர்களுக்கு சப்தமில்லாமல் அந்த இரகசியத்தைப் புரிய வைக்க முடியுமா? அந்த மாதிரி பயிற்சி உடையவர் ஆகியிருக்கிறீர்களா? பிற்காலத்து சேவையிலோ சப்தம் அடங்கிப் போய்விடும், ரகசியத்தைத்தான் புரிய வைக்க வேண்டியதிருக்கும் என்றால் அந்த மாதிரி பயிற்சி செய்ய வேண்டும். எப்பொழுது சயன்ஸ் (அறிவியல்) மிக அதிகமானவற்றை செய்து காண்பிக்கிறது என்றால் சைலன்ஸில் (அமைதியில்) அந்த சக்தி இல்லையா? எவ்வளவிற்கு எவ்வளவுதான் ராஜயுக்த் (ரகசியம் தெரிந்து நடந்து கொள்வது), யோகயுக்த் (யோக நிலையில் இருப்பது) ஆகிக் கொண்டே செல்வீர்களோ அந்த அளவிற்கு மற்றவர்களையும் சப்தமில்லாமல் ராஜயுக்த்தாக ஆக்க முடியும். இவ்வளவு முழு பிரஜைகளையும் எப்படி உருவாக்குவீர்கள்? இதே வேகத்தில் இத்தனை பிரஜைகளை உருவாக்க முடியுமா? பிற்காலத்து பிரஜைகள் மேலும் இவ்வளவு கடும் உழைப்பு செய்வீர்களா? எப்படி முத்திரை (சீல்) தயாராக இருக்கிறது என்றால், ஒரு நொடியில் (முத்திரையை) போட்டுக் கொண்டே செல்வார்கள். அதே போல் ஒரு வினாடியின் சக்தி வாய்ந்த நிலையானது (ஸ்டேஜ்) பேசாமல் உழைப்பு செய்யாமல் ஒரு நொடியில் தெய்வீக குடும்பத்தின் ஆத்மா என்ற முத்திரையிட முடியும். இதுதான் சர்வ சக்திவானின் மகிமை ஆகும். வரமளிப்பவராகி ஒரு நொடியில் பக்தர்களுக்கு வரதானம் கொடுக்க வேண்டும். வரதானம் கொடுப்பதில் கடினம் இருப்பதில்லை, ஆஸ்தி அடைவதில் கடின உழைப்பு இருக்கிறது. ஆஸ்தியை அடைபவர்கள் கடினமாக உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். கடின உழைப்பை

செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் எப்பொழுது வரமளிப்பவராக ஆகி விடுவார்களோ கொடுப்பவர்களும் எடுப்பவர்களும் கடின உழைப்பை செய்ய மாட்டார்கள். அப்படி உங்களுடைய கடைசி நிலை வரதானிமூர்த்தி ஆகும். எப்படி லட்சுமியின் கைகளில் ஸ்தூல செல்வத்தைக் கொடுப்பவராக காண்பிக்கிறார்கள். இது உங்களுடைய கடைசி சக்தி ரூபத்தினுடையதேயன்றி லட்சுமி ரூபத்தினுடையது அல்ல. சக்தி ரூபத்தினால் சர்வ சக்திவானின் வரதானம் கொடுத்துக் கொண்டே இருப்பதின் படமாகும் இது. அதை ஸ்தூல செல்வத்தின் ரூபமாக காண்பிக்கிறார்கள் என்றால் அந்த மாதிரி தன்னுடைய சொரூபம் எப்பொழுதும் வரதானி என்பதின் சாட்சாத்காரம் உங்களுக்கே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதா? இதன் மூலமாகவே எவ்வளவு காலம் இன்னும் இருக்கிறது என்பதை அனுமானம் செய்ய முடியும். பின்பு வரதானமூர்த்தி சக்திகளின் எதிரில் அனைவரும் வருவார்கள். அப்பொழுது வரதானத்தின் விதை போடப்படும். எனவே தன்னுள் அனைத்து சக்திகளையும் சேமிக்க வேண்டும். அந்த மாதிரி வரதானிமூர்த்தி ஆகிக் கொண்டே மற்றும் ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். சப்தத்திலிருந்து விலகிச் செல்ல வேண்டும். நல்லது.

**வரதானம்: தந்தை மூலமாக வெற்றித் திலகத்தை பெறக்கூடிய எப்பொழுதும் கட்டளைப்படி நடப்பவர் மற்றும் இதய சிம்மாசனதாரி ஆகுக!**

பாக்கியத்தை உருவாக்கும் தந்தை தினந்தோறும் அமிர்தவேளையில் தன்னுடைய கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளுக்கு வெற்றித் திலகம் இடுகிறார். கட்டளைப்படி நடக்கும் பிராமண குழந்தைகள் ஒருபொழுதும் கடினம் என்ற வார்த்தையை வாயிலிருந்து மட்டும் என்ன, எண்ணத்தில் கூட கொண்டு வர முடியாது. அவர் சகஜயோகி ஆகி விடுகிறார். எனவே ஒருபொழுதும் மனமுடைந்தவர் ஆகாதீர்கள் ஆனால் எப்பொழுதும் இதய சிம்மாசனதாரி ஆகுங்கள். இரக்க மனம் உடையவர் ஆகுங்கள். அகம்பாவம் மற்றும் வஹம்பாவத்தை (வெறுப்புணர்வை) முடிவு கட்டுங்கள்.

**சுலோகன்: உலக மாற்றத்தின் தேதியை யோசிக்காதீர்கள், தன்னை மாற்றும் நேரத்தை நிச்சயம் செய்யுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 1971 தனிப்பட்ட சந்திப்புகள் -பார்ட்டிகள் etc

**1) குழந்தையாவது நல்லதா? அல்லது எஜமானன் ஆவது நல்லதா?**

எவ்வளவு முடியுமோ சேவையின் சம்மந்தத்தில் குழந்தைத்தன்மை மற்றும் தன்னுடைய முயற்சி செய்யும் நிலையில் எஜமானத்தன்மை, நெருக்கம் மற்றும் சேவையில் குழந்தைத்தன்மை, நினைவு யாத்திரை மற்றும் ஞான சிந்தனை செய்வதில் எஜமானத்தன்மை. உடன் இருப்பவர்கள் மற்றும் சபையில் குழந்தைத் தன்மை மற்றும் தனிப்பட்ட நிலையில் எஜமானத்தன்மை. இதுதான் யுக்தி யுக்தாக நடந்து கொள்வது, எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் ஒரே சீரான நிலையில் இருப்பதற்காக எந்த விஷயம் நினைவில் இருக்க வேண்டும்? அதற்காக யார் எப்பொழுதும் சம்மந்தத்தில் வருகிறார்களோ அவர் மாணவனாலும் சரி, அல்லது உடன் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, அனைவரையும் திருப்தி படுத்துவதற்கான உத்வேகம் இருக்க வேண்டும். உத்வேகம் இருப்பதினால் ஈஸ்வரிய ஊக்கம் உற்சாகம் இருக்கிறது இல்லையா அது எப்பொழுதும் ஒரே சீராக இருக்கிறது. யாரைப் பார்த்தாலும் அவரிடமிருந்து அனைத்து நேரத்திலும் குணத்தை எடுத்துக் கொண்டே இருங்கள். அனைவரின் குணங்களின் பலம் கிடைப்பதினால் நிரந்தரமாக உற்சாகம் இருக்கும். உற்சாகம் குறைவதற்கான காரணம் மற்றவர்களின் விதவிதமான சொரூபம், விதவிதமான விஷயங்களை பார்ப்பது மற்றும் கேட்பதினால் ஆகும். குணத்தைப் பார்ப்பதற்கான ஆர்வம் இருக்கிறது என்றால் ஒரே சீரான உற்சாகம் இருக்கும். குண திருடன் ஆவதினால் மற்ற திருடர்கள் ஓடி விடுவார்கள். அனைவர் மேல் வெற்றி அடைவதற்கான வழி என்ன? வெற்றி அடைபவராக ஆவதற்காக ஒவ்வொருவரின் இதயத்தின் இரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். எப்பொழுது ஒவ்வொருவரின் வாயிலிருந்து வரும் ஓசையை பார்க்கிறீர்கள் என்றால் ஓசையை பார்ப்பதினால் அவர்களுடைய இதயத்தின் இரகசியத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. இதயத்தின் இரகசியத்தைத் தெரிந்து கொள்வதினால் அனைவரின் இதயத்தின் மேல் வெற்றி அடைபவர் ஆக முடியும். இதயத்தின் இரகசியத்தை தெரிந்து கொள்வதற்காக உள்நோக்கு முகமுடையவராக ஆக வேண்டும். எவ்வளவு இரகசியத்தைத் தெரிந்து கொள்வீர்களோ அந்தளவு அனைவரையும்

திருப்தி படுத்த முடியும். எவ்வளவு திருப்தி படுத்துவீர்களோ அந்த அளவு இரகசியத்தைத் தெரிந்து கொள்வீர்கள், பிறகு வெற்றி அடைபவர்கள் ஆக முடியும். சரளமான சிந்தனையாளரின் அடையாளம் என்ன? யார் தானே சரள சிந்தனையாளராக இருக்கிறாரோ அவர் மற்றவர்களையும் சரள சிந்தனையாளராக ஆக்க முடியும். சரள சிந்தனை என்றால் எந்த விஷயத்தைக் கேட்டீர்கள், பார்த்தீர்கள் மற்றும் செய்தீர்கள் அது சாரம் நிறைந்ததாக இருக்கட்டும் மற்றும் சாரத்தை மட்டுமே எடுக்க வேண்டும். மேலும் எந்த விஷயம் மற்றும் காரியத்தை தானே செய்வாரோ அதிலும் சாரம் நிரம்பியதாக இருக்கட்டும். முயற்சி செய்வதும் சரளமாக இருக்கும் மேலும் யார் சரளமாக முயற்சி செய்பவராக இருப்பாரோ அவர் மற்றவர்களையும் சரளமாக முயற்சி செய்பவராக ஆக்கிவிடுகிறார். சரளமாக முயற்சி செய்பவர் அனைத்து விஷயங்களில் ஆல்-ரவுண்டர் (பலதுறைகளில் தேர்ந்திருப்பது) ஆக இருப்பார். எந்தவொரு விஷயத்தின் குறையும் தென்படாது. எந்தவொரு விஷயத்திலும் தைரியம் குறைவாக இருக்காது. இதை இப்பொழுது செய்ய முடியாது என்ற வார்த்தை அவரது வாயிலிருந்து வராது, இந்த ஒரு முக்கியமான பயிற்சியை நடைமுறையில் கொண்டு வருவதினால் அனைத்து விஷயங்களில் உதாரணமாக ஆக முடியும். அனைத்து விஷயங்களில் உதாரணமாக ஆவதினால் கௌரவமாகத் தேர்ச்சி பெறுபவராக ஆக முடியும். அந்த மாதிரி எப்போதாவது ஏதாவது விஷயத்தில் பயிற்சி இல்லை என்று கூறுகிறீர்கள். ஆல்-ரவுண்டர் ஆவது வேறு விஷயம், இது வருமானம் செய்வதாகும். ஆல்-ரவுண்ட் உதாரணமாக ஆவது வேறு விஷயம். ஒவ்வொரு விஷயத்திலும் மற்றவர்களின் எதிரில் உதாரணமாகிக் காண்பிக்க வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் முன்னேறிச் செல்வது, தன் மூலமாக அனைவருக்கும் வருமானம் செய்வதின் உற்சாகத்தை ஏற்படுத்துவது -இதுதான் ஆல்-ரவுண்ட் உதாரணம் ஆவதாகும். சென்ஸில் (ஞானம்/அறிவு) அதிகமாக இருக்கிறீர்களா? அல்லது எஸென்சிலா (சாரத்திலா). சென்ஸிபுலாக இருப்பவர் அவ்வளவு வெற்றி மூர்த்தியாக ஆக முடியாது, எஸென்சில் இருப்பவர்களின் நறுமணம் அதிக நேரம் நிலைத்திருக்கும். அவர்களுடைய பிரபாவம் எப்பொழுதும் இருக்கும். யார் சென்ஸில் மட்டும் இருக்கிறார்களோ அவர்களுடைய பிரபாவமும் இருக்கிறது ஆனால் அனைத்து நேரமும் இருப்பதில்லை. அனைவரின் கழுத்தில் வெற்றி மாலை இருக்கிறது ஆனால் வரிசைக்கிரமமாக இருக்கிறது. சிலரின்

கழுத்தில் பெரியது. ஒரு சிலரின் கழுத்தில் சிறியதாக இருக்கிறது. இதன் காரணம் என்ன? எவ்வளவிற்கு எவ்வளவு ஆரம்பத்திலிருந்து மனதில், வார்த்தைகளில், காரியங்களில் வந்திருந்த பிரச்சனைகள் மற்றும் தடைகளின் மேல் வெற்றி அடைந்தவராக ஆகியிருக்கிறார் அதன்படி ஒவ்வொருவருக்கும் வெற்றி மாலை உருவாகிறது. ஆரம்பத்திலிருந்து பார்த்தீர்கள் என்றால் என்னுடைய வெற்றி மாலை எவ்வளவு பெரியது என்று தெரிந்து கொள்ள முடியும். இன்றைய நாட்களில் சின்ன மாலையும் உருவாக்குகிறார்கள் என்றால் பெரியதையும் உருவாக்குகிறார்கள். யார் எவ்வளவிற்கு வெற்றியாளராக ஆகிறாரோ அந்தளவே பெரிய மாலையை அணிந்து கொள்கிறார். நான்கு புஜங்கள் உள்ள விஷ்ணுவின் வெற்றி மாலையின் அடையாளம் ஒருவருடையது மட்டும் இல்லை, இது வெற்றி இரத்தினங்களின் அடையாளம் ஆகும். அப்படி ஒவ்வொருவரும் அவரவர்களுடைய வெற்றி மாலையின் சாட்சாத்காரத்தை செய்ய முடியும். எவ்வளவிற்கு வெற்றி மாலையை அணிவதற்காக அதிகாரி ஆவீர்களோ அந்தளவே கிரீடம் மற்றும் ஆசனம் அதற்கேற்றபடி பிராப்தி ஆகும். எனவே இந்த நேரத்து வெற்றி மாலையின் படி தன்னுடைய எதிர்காலத்து ஆசனத்தையும் புரிந்து கொள்ள முடியும். இங்கேயே இப்பொழுது அனைவரின் சாட்சாத்காரம் ஏற்படும். சாட்சாத்காரம் திவ்ய திருஷ்டியினால் மட்டுமின்றி பிரத்யக்ஷமாக சாட்சாத்காரமும் (வெளிப்படுதல்) ஏற்படும். நடைமுறை நிரூபணம் கூட சாட்சாத்காரம் ஆகும். எனவே வெற்றி மாலை எவ்வளவு பெரியது என்று கேட்டோம். ஒன்று சேவையின் பலம், இன்னொன்று அன்பின் பலம். எனவே அதிகப்படியான பலம் கிடைத்த காரணத்தினால் விசேஷ சேவை நடந்து கொண்டிருக்கிறது. யார் உடல் ரீதியாக தன்னை சக்தியற்றவர் என்று நினைக்கிறாரோ அவருக்கு இந்த பலம் இருக்கும் காரணத்தினால் வேறு யாரோ நடத்திக் கொண்டிருக்கிறார் என்று அனுபவம் செய்கிறார். பொறுப்பிலிருப்பவராக ஆவதினால் மிக அதிகப்படியான பலம் கிடைக்கிறது. எப்படி சாகார பிரம்மாபாபா பொறுப்பிலிருப்பவர் ஆனதினால் அதிகப்படியான பலம் இருந்தது. இதிலேயும் அதே போல்தான். அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஏற்படுவதினால் என்ன ஆகிறது? அதீந்திரிய சுகம் கிடைப்பதினால் இந்திரியங்களின் சுகத்தின் கவர்ச்சி இருக்கிறது இல்லையா அவை முடிவடைந்து விடும். துக்கம் கொடுக்கக்கூடியவை எவை? இந்திரியங்களின் கவர்ச்சி, சம்மந்தத்தின் கவர்ச்சி மற்றும் ஏதாவது கர்ம

இந்திரியத்தின் வசம் ஆவதினால் விதவிதமான கவர்ச்சி ஏற்படுகிறது அது அதீந்திரிய சுகம் மற்றும் மகிழ்ச்சி அளிப்பதில் தடையை ஏற்படுத்துகிறது. ஒரே நிலையில் புத்தி நிலைத்து விடுவதினால் ஒரே சீரான நிலை இருக்கிறது. எனவே எப்பொழுதும் புத்தியை ஒரே நிலையில் நிலைத்திருக்கச் செய்வதற்கான என்ன வழி கிடைத்திருக்கிறதோ அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஆட விடாதீர்கள். ஆடுவது என்றால் குழப்பத்தை உருவாக்குவது. பிறகு நேரமும் அதிகமாக வீணாகும். யுத்தத்தில் நேரம் அதிகம் செலவாகும். சக்திகளின் படங்களில் சக்திகளின் அடையாளமாக என்ன காண்பித்திருக்கிறார்கள்? ஒன்றோ அந்த அலங்காரங்கள், இன்னொன்றோ சம்ஹாரியாகவும் (வதை செய்பவர்) காண்பித்திருக்கிறார்கள். அலங்காரம் எதற்காக? சம்ஹாரம் (வதை) செய்வதற்காக, அதே மாதிரி தன்னை அலங்காரி மற்றும் சம்ஹாரகாரி என்று புரிந்து நடந்து கொண்டே இருங்கள். எப்பொழுது நான் சம்ஹாரமூர்த்தியாவேன் என்ற இந்த நினைவு இருக்கிறது என்றால் ஒருபொழுதும் மாயாவின் வசம் ஆக மாட்டீர்கள். அலங்காரம் அனைத்தும் சரியான முறையில் தாரணை செய்யப்பட்டிருக்கிறதா என்று எப்பொழுதும் சோதிக்க வேண்டும். ஏதாவது அலங்காரம் ஒருவேளை தாரணை செய்யப்படவில்லை என்றால் வெற்றி அடைபவராக ஆக முடியாது. எப்படி சுமங்கலி இருக்கிறார், அவர் எப்பொழுதும் தன்னுடைய சுமங்கல்யத்தின் அடையாளத்தை அழியாமல் வைத்துக் கொள்வார். எனவே எப்பொழுது நீங்கள் சக்திகள் என்றால் சக்தியின் அலங்காரத்தின் அடையாளம் எப்பொழுதும் நிலைத்திருக்கிறதா? எப்படி தன்னுடைய ஸ்தூலமான அலங்காரம் குறைந்து விடுகிறது. மேலே கீழே ஆகி விட்டது என்றால் அதை அடிக்கடி சரி செய்கிறீர்கள். எனவே ஏதாவது அலங்காரம் குலைந்து விட்டது என்றால் அதை சரி செய்ய வேண்டும். யார் மிகப் பழையவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் முழுமையான அதிகாரம் எடுத்துச் செல்ல வேண்டும். அதிகாரம் எடுப்பதற்காக தன் மேல் முத்திரை இட்டுக் கொள்வதற்காக மதுபன்னில் வருகிறீர்கள். இந்த மதுபன் கடைசி முத்திரை இடப்படும் ஸ்தானம் ஆகும். எப்படி தபால் அலுவலகங்களில் கடைசி முத்திரை இட்ட பிறகுதான் கடிதம் செல்கிறது. இதுவும் சொர்க்கத்தின் அதிகாரி ஆவதற்கான முத்திரை மதுபன் ஆகும். மதுபன்னில் வருவது என்றால் கோடி மடங்கு வருமானம் செய்வது. தடைகளை அழிப்பவர்கள்தான் இல்லையா? யார் தடைகளை

அழிப்பவர்களாக இருக்கிறார்களோ அவர் தடைகளில் தோல்வி அடைபவராக ஆக முடியாது. இணைந்திருப்பதாகத் தன்னை புரிந்து கொள்ளுங்கள். பாப்தாதாவோ ஒவ்வொரு விநாடிக்கான துணை ஆவார். எப்பொழுதிலிருந்து ஜென்மம் எடுத்தீர்களோ அப்பொழுதிலிருந்து துணையாக இருக்கிறார். இங்கு ஜென்மமும் இந்த நேரம் ஏற்படுகிறது, துணையும் இந்த நேரம் கிடைக்கிறது. லௌகீகத்தில் முதலில் ஜென்மம் ஏற்படுகிறது, பிறகுதான் துணைவன் கிடைக்கிறார் ஆனால் இங்கு இந்த நேரமே ஜென்மம், இந்த நேரமே துணைவன்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**2) இன்று பாப்தாதா குழந்தைகளுக்கு என்ன பரிசு தருதற்காக வந்துள்ளார்?**

நிராகார தந்தையின் பரிசு எது? மற்றும் சாகார தந்தையின் பரிசு எது? இரண்டு பரிசுகளும் கிடைத்திருக்கின்றனவா? இருவரின் பரிசுகளும் ஒன்றே தானா அல்லது வேறு வேறா? பரிசோ அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. தந்தை மற்றும் தாதா (மூத்த சகோதரர்) மூலமாக பரிசு கிடைக்கிறது. அனைத்து ஆத்மாக்களுக்காக பரிசாக சொர்க்கமோ அனைவருக்கும் கிடைக்கவே செய்கிறது ஆனால் யார் நெருக்கமான அன்பான குழந்தைகளோ மற்றும் அனைத்து காரியங்களில் சகயோகி ஆகிறார்களோ அவர்களுக்காக இருவரிடமிருந்தும் தனியான பரிசு கிடைக்கிறது. சாகாரத்தில் பாப்தாதா மூலமாக விசேஷமாக ஒரே ஒரு கிஃப்ட் என்ன கிடைக்கிறது? இது யார் அன்பான மற்றும் சகயோகி இரத்தினங்களோ அவர்களுக்குத்தான் கிடைக்கிறது. அந்த சொர்க்கத்தின் பரிசு வரதானத்தில் கிடைக்கிறது. சாகார மற்றும் நிராகார தந்தைகள் மூலமாக ஒவ்வொருவருக்கும் விசேஷமான வரதானமும் கிடைத்திருக்கிறது மற்றும் பரிசும் கிடைத்திருக்கிறது. சில அந்த மாதிரி வரதானமும் ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கென்று கிடைக்கிறது அதன் மூலம் உழைப்பில்லாமல் வரதானம் மூலமாக வெற்றியை அடைந்து கொண்டே இருக்கிறார்கள். வரதானத்தையோ அவரவர்களுடையதை தெரிந்திருக்கிறீர்கள். சிலருக்கு சில விசேஷ சக்தியின் வரதானம் கிடைத்திருக்கிறது. சிலருக்கு சில விசேஷ சக்தியின் வரதானம் கிடைத்திருக்கிறது. அந்த வரதானங்களின் அனுபவத்தையும் ஒவ்வொருவரும் செய்கிறார்கள். சிலருக்கு அனைவருக்கும் சகயோகி ஆவதற்கான வரதானம் கிடைக்கிறது.

சிலருக்கு அனைவரின் அன்பிற்குரியவராக ஆவதற்கான வரதானம் கிடைக்கிறது, சிலருக்கு அனைவரின் சம்மந்தத்தில் வருவதற்கான வரதானம் கிடைக்கிறது, சிலருக்கு எந்தவிதமான பிரச்சனை வந்தாலும் அதை எதிர்கொள்வதற்கான சக்தியின் வரதானம் கிடைக்கிறது. அப்படி ஒவ்வொரு வருக்கும் அவரவர்களுக்கு என்று வரதானமும் கிடைத்திருக்கிறது ஆனால் கூடவே பரிசும் கிடைத்திருக் கிறது. ஒவ்வொருவரிடமும் பார்த்தீர்கள் என்றால் சர்வ சக்திகளிலிருந்து ஒரு உயர்ந்த சக்தி வரதான ரூபத்தில் கிடைத்திருக்கிறது, அதற்காக உழைக்க வேண்டியது இருக்காது. இயற்கையாக பிராப்தி ஆகி இருக்கிறது. ஒருவர் இன்னொருவரின் நெருக்கத்தில் வருவதினால் அனுபவம் ஆகிறது எப்படி ஒவ்வொரு வரின் குணங்களின் வர்ணனை செய்கிறீர்கள் அதே போல் ஒவ்வொருவரின் வரதானமும் தெரிய வந்து விடுகிறது ஆனால் தனிப்பட்ட பரிசு எதுவாக இருந்தாலும் அதன் மேல் விசேஷ அன்பு இருக்கிறது. அது என்ன பரிசு? இதை யோசியுங்கள் மேலும் தனிப்பட்ட பரிசை எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்வதற்காக முக்கியமாக எந்த விஷயத்தில் கவனம் வைப்பதின் அவசியம் இருக்கிறது என்று இதையும் யோசியுங்கள். அமிர்தவேளையில் இதன் மேல் ஆழமாக சிந்தியுங்கள். நினைவு யாத்திரையினால் ஆத்மாவில் மனோபலம் வருகிறது. எவ்வளவிற்கு எவ்வளவு மனோபலத்தை தாரணை செய்வீர்களோ அவ்வளவு புத்தியை எங்கு விரும்புகிறீர்களோ, எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு ஈடுபடுத்த முடியும். மனோபலம் (வில் பவர்) எப்படி வருகிறது? (வில் செய்வதினால்). வில் செய்வதின் (உயில் எழுதுவதின்) அடையாளத்தை தன்னுடைய வில் பவரின் (மனோபலத்தின்) மூலம் தெரிந்து கொள்ள முடியுமா? அனைத்து சக்திகளையும் உபயோகித்தீர்கள் என்றால் தந்தை அனைத்து சக்திகளையும் கொடுத்து விடுகிறார். சர்வ சக்திவான் துணைவனாகி விட்டார் மேலும் சர்வ சக்திகள் துணை ஆகி விட்டன என்றால் பின்போ வெற்றியே வெற்றிதான். பக்தி மார்க்கத்தில் கூட ஏதாவது காரியம் செய்கிறார்கள் என்றால் நிறைவேறியதா அல்லது இல்லையா தெரியவில்லை என்று நினைக்கிறார்கள். எனவே பகவான் மேல் விட்டு விடுகிறார்கள், ஹே பகவானே உங்களுடைய காரியத்தை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். அப்படி பக்தி மார்க்கத்தில் நிரப்பட்ட இந்த சம்ஸ்காரத்தை நடைமுறையில் நீங்கள் இப்பொழுது செய்தீர்கள். பக்தி மார்க்கத்தில் வெறும் வார்த்தைகளால் சொல்லட்டட்டன. இங்கு ஞான

மார்க்கத்தில் செய்தீர்கள். ஞான மார்க்கத்தில் செய்வதற்கான சக்தி இருக்கிறது, பக்தி மார்க்கத்தில் சொல்வதற்கான சக்தி இருக்கிறது. இரவு பகலுக்கான வித்தியாசம் இருக்கிறது. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**3) மதுபன் நிவாசிகளுடன்:** மதுபன் வாசி என்றால் மதுரதா (இனிமையானவர்) மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவர். யார் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவராக இருப்பாரோ அவர் ஆத்மாவைத்தான் பார்ப்பார். அப்படி நடத்தையில் இனிமையும் மற்றும் மனநிலையில் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வுடையவராகவும் இருக்கட்டும். இரண்டு நினைவும் இருக்கிறது என்றால் கௌரவமாக தேர்ச்சி பெறுபவர் ஆக முடியாதா என்ன? இந்த இரண்டு தகுதிகளையும் தன்னுள் தாரணை செய்து செல்ல வேண்டும். இந்த சங்கமயுகத்தின் மங்களகரமான நேரம் எவ்வளவு அதிகம் இருக்கிறதோ அவ்வளவு நல்லது. ஏனென்றால் முழுக் கல்பத்திலும் தந்தை மற்றும் குழந்தைகளின் இந்த சந்திப்பு பின்பு ஒருபொழுதும் இருக்காது என்று தெரிந்திருக்கிறீர்கள். எனவே இந்த சங்கமயுகத்தின் நேரம் இன்னும் அதிகமாகி விட்டால் நல்லது என்று நினைக்கிறீர்கள். மற்றபடி தன்னுடைய பலஹீனத்தின் காரணமாக அல்ல. தயார் நிலையில் இருக்க வேண்டும் என்ற லட்சியத்தை எப்பொழுதும் வைத்துக் கொள்ளுங்கள். மற்றபடி இந்த அதீந்திரிய சுகத்தின் ஆஸ்தியை நிரந்தரமாக அனுபவம் செய்வதற்காக இருக்கிறோமே அன்றி நம்முடைய பலஹீனங்களுக்காக அல்ல. உங்களைப் பொருத்தவரை இந்த பழைய உலகம் ஒரு வெளிநாடு மாதிரிதான். சிலர் வெளிநாட்டுப் பொருட்களைத் தொடுவது கூட இல்லை, தன்னுடைய நாட்டின் பொருட்களை உபயோகிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்படி இந்த பழைய உலகம் அதாவது வெளிநாட்டு பொருட்களை தொடக்கூட கூடாது. நீங்கள் சுவதேசியா அல்லது வெளிநாட்டுப் பொருட்களினால் கவரப்படுபவரா? நான் சுவதேசியாக இருக்கிறேன் என்று எப்பொழுதும் நினைக்கிறீர்கள், இந்த வெளிநாட்டுப் பொருட்களைத் தொடக்கூட கூடாது. அப்படி தன்னுடைய உயர்ந்த தேசத்தின், ஆத்ம ரூபத்தில் பரந்தாமம் உங்களுடைய தேசம் ஆகும் மற்றும் இந்த ஈஸ்வரிய குடும்பத்தின் கணக்குபடி மதுபன்தான் தன்னுடைய தேசம் ஆகும். இரண்டு தேசங்களின் போதையை

வையுங்கள். நான் சுவதேசி ஆவேன், வெளிநாட்டுப் பொருட்களைத் தொடக்கூட முடியாது. இப்பொழுது சக்திசாலியான படைப்பவர் ஆகுங்கள். படைப்பவரே பலஹீனமானவராக இருக்கிறார் என்றால், படைப்பாக எதைப் படைப்பார். அலங்கரிக்கப்பட்டவராகி வெளிப்பட வேண்டும். நிரந்தரமாக ஒரே சீரான நிலையில் நிலைத்திருந்து காண்பிப்பதில் அனைவருக்கும் சாட்சாத்காரம் கிடைக்கும் அளவிற்கு ஒரு உதாரணமாக ஆக வேண்டும். துவாபரயுகத்திலோ பக்தர்கள் சாட்சாத்காரம் செய்வார்கள், ஆனால் இங்கு முழு தெய்வீக குடும்பமும் சாட்சாத் மூர்த்தியாக இருக்கும் உங்களிடமிருந்து சாட்சாத்காரம் செய்யட்டும். சேமிப்பு செய்ய வேண்டும். சம்பாதித்தோம் மற்றும் சாப்பிட்டோம் என்ற இதையோ 63-ஜென்மங்களாக செய்தே வந்திருக்கிறோம் இப்பொழுது சேமிப்பதற்கான நேரம் ஆகும்; இழப்பதற்கானது அல்ல. நல்லது. என்ன காரியம் செய்தாலும் மற்றும் எண்ணத்தை உருவாக்கினாலும் தன்னுள் லேசான தன்மை இருந்தால், அந்தக் காரியம் சரியானதாக இருக்கும். அந்த மாதிரி லைட் ரூபமாக மற்றும் டிரான்ஸ்பரன்ட் ஆக (உள்ளே இருப்பது தெரிவதாக) ஆகுங்கள். இந்த பட்டி பாண்டவ பவனை டிரான்ஸ்பரன்ட்டான சைத்தன்ய கண்காட்சியாக ஆக்கும். மேலும் அனைவருக்கும் இங்கு வந்து பார்க்கலாம் என்று காட்சி காண்பதற்கான கவர்ச்சி இருக்கட்டும். அனைத்து விஷயங்களிலும் வெற்றி அடைந்தே ஆக வேண்டும். முதல் நம்பரில் வர வேண்டும். பழைய எண்ணம், சம்ஸ்காரத்தை அழிக்க வேண்டும் அதாவது மீண்டும் வெளிப்படாத அளவிற்கு உள்ளடக்க வேண்டும். என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும், ஆனால் விருப்பத்தில் மனோபலம் இருக்கட்டும். எவ்வளவு உள்உணர்வு சக்திசாலியாக இருக்குமோ அவ்வளவு சூழ்நிலையும் சக்தி நிறைந்ததாக ஆகிறது. எப்போதாவது, யாரிடமாவது பலஹீனம் வருகிறது என்றால், சக்திசாலியான உள்ளுணர்வின் சகயோகம் கிடைப்பதினால் அவர் முன்னேறிச் செல்ல முடியும். தந்தை ஒரே சீரான நிலையில் இருக்கிறார் என்றால் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும். என்ன நடந்து விட்டாலும் அதை ஒரு காட்சி என்று புரிந்து முடித்து விட வேண்டும். நாடகக் காட்சி என்று புரிந்து கொள்வதால் குஷி ஏற்படுகிறது. இப்பொழுதைய திலகம் பல பிறவிகளுக்காக திலகம் அணிந்தவராகவும் மற்றும் கிரீடம் அணிந்தவராகவும் ஆக்குகிறது. எனவே எப்பொழுதும் ஒரே சீரான நிலை உள்ளவராக இருக்க வேண்டும். தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

யார் மகிழ்ச்சி நிறைந்தவராக இருக்கிறாரோ, அவரே எப்படிப்பட்ட மனம் உள்ளவரையும் மகிழ்ச்சி உடையவராக ஆக்குவார். மகிழ்ச்சி நிறைந்தவராக இருப்பது என்பதோ ஞானத்தின் குணம் ஆகும். இதில் ஆன்மீகத்தை மட்டும் சேர்த்துக் கொள்ள வேண்டும். முகமலர்ச்சியோடு இருப்பதின் சம்ஸ்காரம் கூட ஒரு வரதானம் ஆகும். அது தேவையான நேரத்தில் மிகுந்த சகயோகம் கொடுக்கிறது. தன்னுடைய பலஹீனமான எண்ணம் கீழே தள்ளுவதற்கான காரணம் ஆகிவிடுகிறது. எனவே ஒரு எண்ணம் கூட வீணானதாக இருக்க வேண்டாம். ஏனென்றால் எண்ணங்களின் மதிப்பு கூட இப்பொழுது தெரிய வந்திருக்கிறது. ஒருவேளை எண்ணம், சொல், செயல் மூன்றுமே அலௌகீகமாக இருக்கிறது என்றால் பின்பு அவர் தன்னை இந்த லோகத்துவாசி என்று நினைக்க மாட்டார். இந்த பூமியின் மேல் தன்னுடைய கால் இல்லை என்று நினைப்பார் அதாவது புத்தியின் ஈடுபாடு இந்த உலகத்தின் மேல் இல்லை என்பதாகும். புத்தி என்ற கால் உடல் என்ற பூமியிலிருந்து உயர்வான நிலையில் இருக்கிறது. இது குஷியின் அடையாளமாகும். எவ்வளவுக்கெவ்வளவு தேகத்தின் உணர்வின் பக்கத்திலிருந்து புத்தி மேலே இருக்குமோ அந்த அளவு அவர் தன்னை பரிஷ்தா என்று உணர்வார். ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே தந்தையின் நினைவில் பறந்து கொண்டே இருந்தீர்கள் என்றால் அந்த பயிற்சியின் அனுபவம் ஏற்படும். நாம் பறந்து கொண்டிருக்கிறோம் என்ற மாதிரி நிலை இருக்கட்டும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂